“கடவுள்வெறி சமயவெறி
கண்ணல்நிகர் தமிழுக்கு
நோய் நோய் நோயே!
இடைவந்த சாதிஎனும்
இடம்ஒழிந்தால் ஆள்பவள்நம்
தாய்தாய் தாயே!
கடல்போலும் எழுக! கடல்
முழக்கம்போல் கழறிடுக!
தமிழ்வாழ் கென்று!
கெடல்எங்கே தமிழின்நலம்!
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

- பாவேந்தர்


2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017

31

இளங்குமரனார் தமிழ்வளம்

இளங்குமரனார்

# தமிழ்வளம்




மதுரைக் கோயில் வரலாறு
மதுரைத் திருக்கோயில்
திருவிளையாடல் கதைகள்
மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம்

இளங்குமரனார்

# தமிழ்வளம்

## 31

1. மதுரைக் கோயில் வரலாறு
2. மதுரைத் திருக்கோயில்
3. திருவிளையாடல் கதைகள்
4. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம்


*ஆசிரியர் :*

*முது முனைவர்* **இரா.இளங்குமரன்**



**வளவன் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **இளங்குமரனார் - தமிழ்வளம் 31** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| பதிப்பு | : 2014 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 16 + 336 = 352 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **330/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : செவன்த்சென்ஸ் கம்யூனிகேசன்ஸ் |
| அட்டை ஓவியம் | : ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

# பதிப்புரை

இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர் ***அய்யா இளங்குமரனார்*** அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.

இப்பெருந்தமிழ் அறிஞர் எழுதிய படைப்புகளை 20 தொகுதிகளாக (1 முதல் 20 வரை) அவரின் 81-ஆம் ஆண்டு நிறைவையொட்டி கடந்த 2009 ஆம் ஆண்டில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தோம். பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர் தம் அறிவு விளைச்சலை **21 முதல் 40 வரை** 20 தொகுதிகளை 83-ஆம் ஆண்டு (2012) நிறைவையொட்டி தமிழுலகம் பயன்கொண்டு செழிக்கும் வகையில் வெளியிடுகிறோம். அவர் தம் அருந்தமிழ்ப் பணியை வணங்கி மகிழ்கிறோம்.

இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.

இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர். தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ

அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.

தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப்பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற் குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழிநூல் கதிரவன் பாவாணரையும், தமிழ் மொழிக்காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ்நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்ச் சான்றோராக விளங்கும் **ஐயா இளங்குமரனார்** வாழும் காலத்திலேயே அவர் எழுதிய நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத்தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.

**“ சலுகை போனால் போகட்டும் - என்**
**அலுவல் போனால் போகட்டும்**
**தலைமுறை ஒருகோடி கண்ட - என்**
**தமிழ் விடுதலை ஆகட்டும்.”**

பாவேந்தர் வரிகளை நினைவில் கொள்வோம்.

***- பதிப்பாளர்.***

# பெறும் பேறு

***வளம்*** *எங்கே இருக்கிறது?*

*வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!*

*வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?*

*வளத்தைத் தேடும்* ***உளம்*** *இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?*

*வளத்தின் அளவு என்ன?*

***வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!***

*உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!*

*வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!*

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

*தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?*

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம். **(உரி.7)** உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்; "**வளம் பட** வாழ" வேண்டாதார் எவர்? **வளம் பெற** வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு, "**அளந்து கடை அறியாவளம்**" என்பது **(25:33-34)***

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்! **எளிமை, இனிமை, இறைமை, நிறைமை** என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

***வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.** ஆனால்,*

*வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!*

*பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன!* ***பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தர்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!***

*புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,*

**"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

*என்னும்* ***நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!***

*என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.*

*பிறந்தநாள் :* ***30.01.1930***

*ஆசிரியப் பணி ஏற்ற நாள்:* ***08.04.1946***

*கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால்* ***1949, 1950, 1951*** *ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர் இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ* ***43***

ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!

புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன். பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச் செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ,சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ,சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

“அன்பும் அறிவும்” என்னும் நூல் தொடங்கிச் ‘செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம்’ எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப் பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்** (ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது.

அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம் அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பதே, **"இளங்குமரனார் தமிழ்வளம்"** என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பலபல; தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். "நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா" என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

*இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!*

*"நெல்லுக்கு உமியுண்டு"*

*"நீருக்கு நுரையுண்டு"*

*"புல்லிதழ் பூவுக்கும் உண்டு"*

*"குறைகளைந்து நிறை பெய்து"*

*"கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை"*

*இன்ப அன்புடன்,*

**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்


பதிப்புரை ........ iii

பெறும் பேறு ........ vi


## நூல்

### பெரும்புலவர் அரசஞ் சண்முகனார்


1. சண்முகனாரின் முன்னோர் ........ 1
2. மாணவர் சண்முகனார் ........ 5
3. கவிஞர் சண்முகனார் ........ 8
4. ஆசிரியர் சண்முகனார் ........ 13
5. பேராசிரியர் சண்முகனார் ........ 23
6. புலவர்மணி சண்முகனார் ........ 37
7. வாழ்க்கைக் குறிப்புகள் ........ 47
8. சண்முகனார் நூல்கள் ........ 52


### மாயூரம் வேதநாயகம் பிள்ளை


1. இளமையும் கல்வியும் ........ 67
2. மொழி பெயர்ப்பாளர் பணி ........ 69
3. முன்சீப் வேலை ........ 71
4. நீதிபதிகள் நிலைமை ........ 73
5. வழக்கறிஞர் கடமை ........ 75

**யு. சுப்பிரமணியன்,** *ஐ.ஏ.எஸ்.*
*ஆணையர்,*
*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை*

*சென்னை - 600 034*
*12-12-1979*

# அணிந்துரை

*தமிழ்நாடு கோயில்களால் மிகவும் புகழ்பெற்றது, விண்ணளாவி ஓங்கும் வியன்பெரும் கோபுரங்களை உடைய எண்ணற்ற கோயில்கள், நம் தமிழ் நாட்டிற்குப் பெரும் சிறப்பை விளைவிக்கின்றன. இக் கோயில்கள் பற்பலவற்றிலும், மிக்க சிறப்புடையனவாகத் திகழ்பவை ஒரு சிலவற்றுள் மதுரை அருள்மிகு மீனாட்சியம்மை கோயில் ஒன்றாகும். சமயம், வரலாறு, புகழ் பெற்றது.*

*திரு.* ***புலவர் இரா. இளங்குமரன்*** *அவர்களால் எழுதப் பெற்ற* ***"மதுரைக் கோயில் வரலாறு"*** *என்னும் இந்நூல் சிறப்பும் சுவையும் உடையதாக விளங்குகின்றது.*

*நண்பர்கள் இருவர் தம்முள் உரையாடிக் கொள்ளுதல் போல, இந் நூல் எழுதப்பெற்றுள்ளது. ஆதலால் இந் நூல் எளிமையாகவும், தெளிவாகவும், சுவையாகவும் அமைந்து திகழ்கின்றது. மதுரைக் கோயிலின்கண் உள்ள மண்டபங்களின் பெயர்கள் என்னென்ன? அம் மண்டபங்கள் கோயிலினுள் எங்கெங்கே இருக்கின்றன? அம் மண்டபங்களில் என்னென்ன காணத்தக்கனவாக உள்ளன? அம் மண்டபங்கள் யாரால், எந்தக் காலத்தில் கட்டப்பெற்றவை? அவற்றின் நீளம் அகலம் சிறப்பு முதலியவை எவை, எவை? என்பனவற்றை இந் நூல் தொகுத்து விளக்குகின்றது.*

*கோயிலின்கண் உள்ள சிற்பத் திருவுருவங்கள், இசைத் தூண்கள், தெய்வத் திருவுருவங்களின் தத்துவ நுட்பங்கள் முதலியனவும், இதன்கண் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறப் பெற்றுள்ளன. இடையிடையே வரும் பாடல்கள் இந் நூலுக்கு இலக்கியச்சுவை ஊட்டுகின்றன.*

*இத்தகைய நல்ல இனிய பயன்மிக்க நூலை, எழுதிய புலவர் இரா. இளங்குமரன் அவர்களையும், இதனை வெளியிடுகின்ற சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரையும் பாராட்டுகின்றேன். நம்முடைய ஆலயங்களின் விபரங்களடங்கிய இது போன்ற சிறந்த நூல்களை, அன்பர்கள் அனைவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக.*

**யு. சுப்பிரமணியன்**
*ஆணையர்*

# நூலாசிரியர் முன்னுரை

*தமிழ் வளர்த்த மதுரைக்குச் சமய வளர்ச்சியிலும் பெரும் பங்குண்டு. **'கோயில் மாநகர்'** என்னும் அதன் பெயர் சமயத்திற்கும் அதற்கும் உரிய தொடர்பைப் பெயரானே விளக்கவல்லது. மதுரை என்றாலே 'கோயில்' என்பதைக் காட்டிப், பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்ப் பொலிவோடு திகழ்வது. **'ஆலவாய் ஆவதும் இதுவே'** என அதன் திருக்கோபுரத்தைக் கண்டு, தொலைவிலேயிருந்து வழிபட்ட **ஆளுடைய பிள்ளையார்** அருகணைந்து பதிகம் பாடி வழிபட்டார். அவர் காலத்திலேயே மதிலும் கோபுரமும் குறிக்கப் பெற்றிருத்தல், அதன் பழமைச் சான்று. அது பின்னே காலந்தோறும் கவினுற வளர்ந்து விரிந்தது. கோயில் வளர்ந்தது போலவே குடியிருப்பும் வளர்ந்தது. எனினும் அதன் பழைமையைப் பொலிவுறுத்துவது போலவே புதுமை வளர்ந்தமை வியப்புறத்தக்கதாம். இதற்குக் காரணம் பண்டே திட்டமிட்டு அமைத்த பான்மையாம்.*

*மதுரைக் கோயில் வரலாறு முன்னரும் பலரால் வரையப் பெற்றதே; கட்டுரையளவிலும் வெளிப்பட்டதே எனினும் இவ்வரலாற்றின் நோக்கும் போக்கும் புதுமையானவை என்பதைக் கற்பார் அறிவர். மதுரைத் திருக்கோயிலை அறிந்தான் ஒருவன், புதிதாகக் காண வந்தான் ஒருவனுக்கு வழிகாட்டுவதாக அமைந்து உரையாடலாகவே செல்கின்றது. உரையாடல்முறை மேற்கொள்ளப் பெற்றமையால் தடைவிடைகளாகவும், ஐய விளக்கங்களாகவும், நயம் பாராட்டலாகவும், ஒப்பீட்டு ஆய்வாகவும், சுவை பயப்பதாகவும் செல்கின்றது.*

*திருக்கோயில் அமைந்துள்ள மன்பதை ஒழுங்குகள், மாக்கலைச் செல்வங்கள், மெய்ப்பொருள் நிலைகள் ஆகியன ஆங்காங்கே சுட்டப் பெறுகின்றன. வெறும் வரலாற்றுச் செய்தி களாக மட்டும் அமையாமல் தனித்தனிச் சிற்பச் சீர்மைகளும், மெய்ப்பாட்டுணர்வுகளும் கட்டுமான அமைப்புகளும் உளங்கொள கூறப்பெற்றுள. கோயிலார் கொள்ளவேண்டிய சீர்திருத்தங்களும் தக்கவாறு குறிக்கப்பெற்றுள.*

**பொன்னப்பன், கண்ணப்பன்** என்பார் முறையே சமயச் செல்வரும், இலக்கியச் செல்வருமாக அமைக்கப் பெற்றுளர்; அவர்கள் உரையாடலில் இருவகை நலங்களும் **'கொள்ளிடம் காவிரி'** யென இணைந்து பெருகுகின்றமை இனிமை தரக் கூடிய தாம்.

**அம்மை திருக்கோயில்** திருவாயிலில் நுழையும் அவர்கள் **அப்பர் திருக்கோயிலைக்** கண்டு, **புது மண்டபத்தைப்** பார்த்த அளவில் நூல் நிறைவு பெறுகின்றது.

வரலாற்று நூல்களாலும், இலக்கிய நூல்களாலும் அறியப் பெறும் செய்திகளினும் நேரில் கண்டு கண்டு, உணர்ந்து உணர்ந்து, நினைந்து நினைந்து கூறப்பெற்ற செய்திகளே இந் நூலின்கண் மிகுதியாம். மதுரைத் திருக்கோயில் வழிபாட்டுக்கு வருவார்க்கு இந்நூல் நல்லதொரு வழிகாட்டியாம் என்றும், வழிபட்டுச் செல்வார்க்கும் நினைவகலா இன்பம் தருவதாம் என்றும் யான் உறுதியாக நம்புகிறேன்.

இவ் வினிய நூலை எழுதுதற்கு என்னுள் எழுந்த உணர்வை ஊக்குவித்து, வழக்கம் போல வேண்டும் கருவி நூல்களை யெல்லாம் வழங்கி உதவியவர்கள் கழக ஆட்சியாளர் **தாமரைச் செல்வர் உயர்திரு வ. சுப்பையாபிள்ளை** அவர்களாவர். அவர்களுக்கும் இந்நூலை எழிலுற வெளியிட்டு உதவும் **சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும்,** திருக்கோயில் கோபுரத்தின் மேல் அழைத்துச் சென்று காண்பித்து அருங்குறிப்புகள் சில தந்த அன்பர் **திரு. கோவிந்தசாமி** அவர்களுக்கும் நன்றியுடையேன். முன்னே வரலாறு எழுதிய பெருமக்கள் என் நினைவுக்குரியர். அவர்கள் நூலில் உரிய இடங்களில் சுட்டப்பெற்றுள்ளனர் என்பது அறியத்தக்கது.

மதுரை
3.11.79

தமிழ்த் தொண்டன்,
**இரா. இளங்குமரன்**

# 1. முன்னுரை

**மைத்**துனர் இருவர்; அவருள் பொன்னப்பன் ஒருவன்; கண்ணப்பன் மற்றொருவன். இருவரும் நெடுநாள் கழித்துச் சந்தித்துக் கொண்டனர்.

பொன்னப்பன் மதுரைக்குப் போய்த் திரும்பியவன். கண்ணப்பன் மதுரைக்குப் போகவில்லை. ஆதலால் மதுரைச் சிறப்புகளை அறிந்த பொன்னப்பன் கண்ணப்பனிடம் "மதுரை பாராதவன் மாபாவி" என்றான். இவ்வுரை கண்ணப்பனைத் திகைக்க வைத்தது. தலைகுனிந்த கண்ணப்பன் நொடிப் பொழுதுக்குள் நிலைமையைச் சரிப்படுத்திக்கொண்டு நிமிர்ந்தான். "திரும்பிப் பாராதவன் தீம்பாவி"என்றான். இந்த அடி விழுமென அறியாத பொன்னப்பன் கண்ணப்பனைக் கட்டித் தழுவிக் கொண்டு மகிழ்ந்தான்.

"நான் மதுரையைப் பார்த்து, மாபாவத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும். நீ திரும்பிப் பார்த்துத் தீம்பாவத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும். எப்பொழுது போகலாம்?"

"களவுக்கு ஒருவன்; கல்விக்கு இருவர்" என்பது பழமொழி. நாம் ஒரு புதுமொழி உண்டாக்கிக் கொள்வோம் : 'திருட்டுக்கு ஒருவன்; திருக்கோயிலுக்கு இருவர்' என்பது அது. கண்டறிந்தவன் ஒருவன் வழிகாட்டினால், காணாதவன் பயன்பெறுவான். காணாத இருவர் ஓரிடத்தைக் காணப்போவது 'குருடும் குருடும் கூடிக் குருட்டாட்டம் ஆடிக் குழிவிழுமாறே' என்பது போலத் தானே இருக்கும்? நாம் இருவருமே மதுரைக்குப் போகலாம்" என்று முடித்தான் கண்ணப்பன்.

"கோயிலுக்குப் போகும்போது சுமையோடு போகக் கூடாது" என்றான் மதுரைக்குப் போய்வந்த பொன்னப்பன். "ஆம்! காலம் மாறிவிட்டது. கட்டுச்சோறு பெட்டி படுக்கை இவையெல்லாம் வேண்டியவை இல்லை. சட்டைப்பை மட்டும் கனமாக இருந்தால் போதும்; மற்றவையெல்லாம் நகரத்தில் தேடிவருமே" என்றான் கண்ணப்பன்.

"நான் அந்தச் சுமையைச் சொல்லவில்லை. நம் சுமையை, இறக்கி வைப்பதற்காகப் போகுமிடம் கோயில்; அங்கே, பலர் வீட்டுச் சுமை, வேலைச்சுமை, வரவு செலவு கணக்குச் சுமை, இன்னும் என்னென்னவோ சுமைகளை மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டு போகின்றனர். இறைவன் முன்னிலையிலும் என்னென்னவோ எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அதனால், கோயிலுக்கு வந்த பயனை இழக்கின்றனர். அந்த மனச் சுமையைக் கொண்டு போகவேண்டா என்று தான் கூறினேன். இன்னொன்று; நமக்கோ, வேலை நெருக்கடி இருக்கக் கூடாது. கோயிலிலோ, கூட்ட நெருக்கடி இருக்கக் கூடாது. ஆரஅமரப் பார்த்து ஆண்டவனை வழிபடுவதற்கு அத்தகைய பொழுது தான் வாய்ப்பாக இருக்கும்" என்றான் பொன்னப்பன்.

இருவரும் திட்டப்படுத்திக்கொண்டு மாநகர் மதுரைக்குக் கிளம்பினர். வரும்போதே அவர்களுக்குப் பழைய பழமொழிகள் நினைவுக்கு வந்தன. ஆமாம், "மதுரை பாராதவன் மாபாவி; திரும்பிப் பாராதவன் தீம்பாவி" என்று பழமொழிகள் வழங்குகின்றனவே. இவற்றின் விளக்கம் என்ன? நகரப் பரப்பைப் பாராதவனா? தேரோடும் திருவீதி பாராதவனா? கவின்மிக்க கடைத்தெருவுகளைப் பாராதவனா? மாட மாளிகைகளையும், மன்றங்களையும், மண்டபங்களையும், சோலைகளையும், சாலைகளையும், ஆலைகளையும், அரங்குகளையும் இவற்றைப் போன்றவற்றையும் பாராதவனா? இவையெல்லாம் ஊருக்கு உள்ளவைதாமே! இவற்றைப் பாராமையா பாவம்?" என்றான் பொன்னப்பன்.

"அழுக்கைப் போக்கிக்கொள்ள யாரும் சேற்றில் குளிப்பார்களா? அழுக்கைப் போக்குதற்கு நல்ல நீரே உதவும். அது போல் பாவத்தைப் போக்கிக் கொள்ளுதற்குப் பாவமில்லாத இடத்தை - பாவத்தைப் போக்குமிடத்தைத் - தேடித்தானே போக வேண்டும்! ஆதலால் 'மதுரை பாராதவன்' என்பது 'மதுரைக் கோயிலைப் பாராதவன்' என்றே பொருள் தரும்! ஆதலால் மதுரைப் பெருமையே கோயில் பெருமைதான்! அதனால்தானே **கோயில் மாநகர்** என்று மதுரையைக் கூறுகின்றனர்" என்று கண்ணப்பன் கூறினான்; பொன்னப்பன் பூரிப்படைந்தான். "நாம் நல்லதுணை" என்று பாராட்டினான்.

"மலையேறிப் போனாலும் மைத்துனன் துணை வேண்டும் என்னும்போது, மதுரைக்குப் போக மைத்துனன் துணை கிடைப்பது நல்லதுதானே" என்று கண்ணப்பன் பாராட்டி

*னான். இருவரும் மதுரைத் திருக்கோயில் முன்னிலையை அடைந்தனர். அஃதாவது, கிழக்குச் சித்திரை வீதியை!*

*“நாம் மேற்குக்கோபுர வாயிலுக்கு நேரே வந்தோம். அவ்வழியாகக் கோயிலுக்குள் நீ நுழையவில்லை. பிறகு தெற்குச் சித்திரை வீதியில் வந்தோம். அங்குள்ள தெற்குக் கோபுர வாயில் வழியாயும் கோயிலுக்குள் புகவில்லை. இப்பொழுது கீழச் சித்திரை வீதிக்கு வந்துள்ளோம். அவ் வழிகளில் போயிருக்க லாமே” என்றான் கண்ணப்பன்.*

*“நீ சொல்கிறபடி கோயிலுக்குள் போயிருக்கலாம். நம்மவர் உண்ணுதற்குப் போடும் இலையையும் இப்படிப்போட வேண்டுமென ஓர் ஒழுங்கு வைத்துள்ளனர். இத்தகையவர்கள் கோயிலுக்குள் போய்வழிபட ஓர் ஒழுங்குமுறை வகுத்திருப்பதில் வியப்பில்லையன்றோ! நான்கு பக்கங்களிலும் அமைந்துள்ள எந்த வழியில் சென்றாலும் கோயிலுக்குள் செல்லலாம். ஆனால், ‘நேரே நின்று கும்பிட நினைத்த’ நந்தனாரைப்போல, நாமும் நேரே சென்று கும்பிட நினைப்பதுதான் முறையாகும். ஆதலால் அன்னை அங்கயற் கண்ணி திருக்கோயிலின் திருவாயில் வழியே செல்வோம்” என்று முன்னே நடந்தான் பொன்னப்பன்.*

*“நூலுக்கு* ***முன்னுரை*** *உண்டு; முகவுரை, நூன்முகம் முதலிய பெயர்களும் முன்னுரையையே குறிக்கும். கோயிலுக் கும் முன்னுரை உண்டு என்பதை இதோ பார்! இந்த நுழைவாயிலே காட்டவில்லையா? மூத்த பிள்ளையாரும் இளையபிள்ளையாரும் முகங்கொடுத்திருக்க, அம்மையும் அப்பனும் திருமணக் கோலம் கொண்டிருக்க அவர்கள் திருக்கைகளை இணைத்து அழகர் நீர் வார்த்துத் தர அமைந்துள்ள இந்தச் சுதைவேலைப்பாடு இத்திருக்கோயிலுக்கு முன்னுரைதானே?” என்றான் பொன்னப்பன். “நீயே முன்னுரை என்னும்போது ‘என்னுரை’ வேறாக இருக்குமா?” என்று புன்முறுவல் பூத்தான் கண்ணப்பன்.*

*போக்குவரவு மிக்க நெருக்கடியான தெருவாக இருந்தாலும் கண்ணப்பன் விரைவாகக் கோயிலுக்குள் நுழைந்துவிடவில்லை. வீதியிலே நின்று உயரந் தாழ்ந்த அந்த விமானத்தின் சுதை வேலையையும் வண்ண வனப்பையும் கூர்ந்து கூர்ந்து பார்த்தான். ‘ஓர் ஐயம்’ என்றான்! “உனக்கு ஐயப்பாடு வரும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்! இன்னும் அன்னையின் திருமணக் காட்சிகள் பல, கோயிலுக்குள் உள்ளன. உனக்கு இப்பொழுது வரும் ஐயம், எனக்கு முன்னர் வந்தபோதே ஏற்பட்டது. பின்னே எனக்குத்*

தெளிவு ஏற்பட்டது. அதை நாமும் பின்னே பேசிக் கொள்ளலாம்! அம்மை கோயிலின் முகப்பு மண்டபம் இது. இதனை **'அட்ட சத்தி மண்டபம்'** என்று கூறுவர். **'அட்ட லக்குமி மண்டபம்'** என்பதும் உண்டு!'' என்றான் பொன்னப்பன்.

பசித்தவனுக்கு பாலமுது கிடைத்தால்போல விழித்தகண் மூடாமல் விரும்பிப் பார்த்தான் கண்ணப்பன். கண் பெற்ற பயனைக் கண்டடைந்ததாகக் களித்தான். ஆர்வத்தோடு பார்ப்பவனைத் திசை திருப்பக்கூடாது என அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் பொன்னப்பன்! ஒரு பெரு மூச்சுவிட்டு, அந்த மண்டப அழகையெல்லாம் பருகியவன் போல அமைந்த பின்னரே, பொன்னப்பன் பேசத் தொடங்கினான்.

## 2. அட்டசத்தி மண்டபம்

**பொன்னப்பன் :** *கண்ணப்பா! இதற்கு 'அட்டசத்தி மண்டபம்' என்பது பெயர் என்று சொன்னேனா! பக்கத்திற்கு நான்காக இரண்டு பக்கங்களில் எட்டுத் தூண்கள் இருப்பதையும். ஒவ்வொரு தூணிலும் ஒரு சத்தியின் சிற்பம் இருப்பதையும் பார்! இவைதாம் சத்தியின் எட்டுத் திருவுருவங்கள். அவ்வப்போது செய்யும் செயலுக்கும், இருக்கும் இயலுக்கும் ஏற்றபடி அம்மையை இவ்வெட்டு வடிவங்களில் படைத்திருக்கிறான் சிற்பி!*

**கண்ணப்பன் :** *இறைவனுக்குக் கூட எட்டு மூர்த்தங்கள் உண்டு என்பார்களே! அப்பனுக்கு ஏற்ற அம்மைதான்.*

**பொன் :** *ஆம். இடப்புறம் இருப்பவர் கௌமாரி, ரௌத்திரி, வைணவி , மகாலக்குமி; வலப்புறம் இருப்பவர் எக்ஞரூபிணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணி! "எம்மைத் தேடி வருபவரை இனிது காப்போம்; பெருகிய அளவில் திருவருள் பாலிப்போம்" என்பவரைப் போலக்* **கௌமாரியும் எக்ஞ ரூபிணியும்** *இருப்பதைப் பார். இவர்கள் அபயவரதம் (அடைக்கலம் தருதலும், திருவருள் பாலித்தலும்) விளங்கும் கையராக இருப் பதைப் பார்!*

**கண் :** *"கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ" என்று* **நாவுக்கரசர்** *மனித இனத்தை அழைத்து அழைத்து அருளியது போலக் கோயிலுள் நுழைந்ததும் இருபாலும் இவர்கள் காட்சி வழங்கக் கருதிப் படைத்தானே, அந்தச் சிற்பியின் திறம் பெரிதுதான்!*

**பொன் :** கௌமாரியை அடுத்துச் சூலமும் தமருகமும் கபாலமும் (மண்டையோடும்) அரவமும் தாங்கிய வளாய்ப் பொங்கிய சினமே தங்கியவளாகிக் காட்சி வழங்குகிறாளே இவள் **'ரௌத்திரி'** ரௌத்திரம் என்பதன் பொருள் கோபம். இவள் திருமுகத்தில் கோபம் பொங்கி வழிந்தாலும், கோபம் கொண்டவர் முகத்தில்

*தோன்றும் கடுகடுப்பைக் காட்டிய சிற்பி, இவள் முகத்தில் அருவருப்பைக் காட்டவில்லையே! இப்படி யமைப்பது அருமையன்றோ!*

**கண்** *: முரண்கள், வாழ்வில் அழகும் இன்பமும் ஊட்டாத வையாக இருக்கலாம். ஆனால், கலையில் முரண்களே தனிச் சிறப்புடையவை. நீ சொல்லியதையும் இந்தச் சிற்பத்தையும் பார்க்கும்பொழுது எனக்குக்* **கம்பன்** *திருமொழி ஒன்று நினைவுக்கு வருகிறது. "செயிர்ப்பினும் அழகு செய்யும் திருமுகத்து அணங்கு"*

**பொான்** *: ஆமாம்! ஆமாம்! கம்பன் இத்தகைய சிற்பத்தைக் கண்டு இப்படிப் பாடியிருக்கவேண்டும். அல்லது கம்பன் படைப்பில் தன்னை மறந்து ஒன்றிப்போன சிற்பி இப்படிப் படைத்திருக்க வேண்டும்.*

**கண்** *: கலை வல்லாரின் திறம், காவியம் ஆனால் என்ன, ஓவியம் ஆனால் என்ன, சிற்பம் ஆனால் என்ன, எல்லாம் ஒன்று பட்டு இருக்கும்போலும்!*

**பொான்** *: ரௌத்திரிக்கு எதிரே வலப்பால் நிற்பவள்* ***சாமளை!*** *அப் பெயருக்கு ஏற்றவாறு அழகிய வடிவம் தான். 'நீலமேக சாமள ரூபன்' என்று கண்ணனைப் பாராட்டுவர்; இவளை 'நீலமேக சாமள ரூபி' என்று பாராட்டலாம்.*

**கண்** *: இந்த அழகை நினைந்து நினைந்து போற்றிப் பிறரும் போற்ற வைக்கின்றது கலைநெஞ்சம்! கொலை நெஞ்சக் கொடுமையைப் பார்! அழகிய மூக்கை உடைத்து விட்டது! இந்த மூக்கை வடிக்க எப்பாடுபட்டிருப்பான் அந்தக் கலைஞன்! இந்தக் கொலைஞன் எவ்வளவு எளிமையாகச் செய்து விட்டான். இதனை வடித்த சிற்பி மட்டும் இதனை இந்நிலையில் கண்டால், எப்படித் துடித்துப் போவான்! தன் குழந்தையைத் தடியன் ஒருவன் காலையும், கையையும் ஒடித்து, மூக்கை உடைத்து, கண்ணைத் தோண்டிக் கொடுமை செய்ததைக் காணும் தாய் என்ன பாடுபடுவாளோ அப்பாடு படுவான்! அவனல்லனோ இதன் அருமையை உணர்வான்!*

**பொான்** *: கலைச் செல்வர்கள் மலிந்த இந்த மண்ணிலேதான் இத்தகைய கொலைப் பிறவிகளும் நடமாடி இருக்கின்றன.*

*இக் கொடியவர்களின் வெறிச்செயல்களை இங்கென்ன, கோயில்தோறும் காணலாம்! பெரும்பாலும் சிற்பங்கள் தோறும் காணலாம். இதனை நினைக்க நெஞ்சம் உருகும்! கண்ணீர் பெருகும்!*

*சங்கு சக்கரம் ஏந்திய இவளைப் பார்! இவள் பெயர்* **“வைணவி”**. *விட்டுணு ஆகிய திருமாலே சத்தி என்பது சிவக் கொள்கை. அச் சத்தி, தன் பெயருக்கு ஏற்ப இக்கோலம் கொண்டிருத்தல் மிகப் பொருத்தம் தான். வைணவிக்கு எதிரே தண்டும் செண்டும் (ஒரு கருவி) கொண்டு இருப்பவன்* **மகேசுவரி;** *அடுத்து இருப்பவர்* **மகாலக்குமியும் மனோன்மணியும்** *ஆவர்.*

**கண்** : *பொன்னப்பா மனத்துளே மணியாக இருப்பவள் தானே மனோன்மணி! எவர் மனத்துள் மணியாக இருப்பாள் என்றார், ‘நினைப்பவர் மனத்துள்’ என்பது தானே விடை. நினைப்பவர் மனமே கோயிலாக் கொள்ளும் இறைவி இப்படி மணியாகி, ஒலியும், ஒளியும் செய்கிறாள்.*

**பொன்** : *கண்ணப்பா, அரிய ஆராய்ச்சிதான்! ஆனால், இவளைப் பார்! இவள்தன் மனத்துளே மணியைத் தேடி, அகநோக்கு நோக்கிக் கொண்டிருக்கின்றாள். சிவமணியை உருட்டிக் கொண்டு ஓக (யோக) நிலையிலே ஊன்றியிருக்கிறாள்! உள்ளமே இறையறை கோயில் என்பாள் போலத் தளிர்க்கையிலே தாமரை மலரைக் கொண்டிருக்கின்றாள்! உலகோர்க்கு உய்வு காட்ட இறைவனே தவக்கோலம் தாங்கியமைபோல, இவ் இறைவியும் தவக்கோலம் தாங்கியுள்ளாள்! எண்ண எண்ண எத்தனை இனிமை!*

**கண்** : *அப்படியானால் “தவம்செய்த தவமாம் தையல்” என்கின்றாய் இவளை!*

**பொன்** : **கம்பன்** *வாக்கு,* **‘களிநடம்’** *புரிகின்றது உன்னிடம்!*

**கண்** : *என்ன அப்படிச் சொல்கிறாய்? ‘சார்ந்ததன் வண்ண மாதல்’ இயற்கைதானே!*

**பொன்** : *சரி; செய்திக்கு வருவோம். அம்மையின் அழகுமனை வாயில் (முகப்பு) மண்டபத்தைச் சத்தி மண்டபம் ஆக்கிய அருமையை வியக்கவேண்டும் அன்றோ!*

**கண்** : *ஆமாம்!*

**பொன்** : *அதனினும் வியக்க வேண்டியதும் உண்டு. இம்மண்டப முகப்பில் காவல்வீரர்களை நிறுத்தி வைக்காமல்,* **காவல் பெண்டுகளை** *நிறுத்தி வைத்தானே கலைஞன். அவன் செயலை வியந்து பாராட்டத்தானே வேண்டும்! இன்னும் ஒரு வியப்பான செய்தியும் உண்டு. இந்த அழகிய மண்டபத்தை அமைத்த சத்தியர் இருவர் என்பதை நீ அறிந்தால் மேலும் வியப்பு அடைவாய்!*

**கண்** : *அந்தச் சத்தியர் இருவர் எவர்?*

**பொன்** : *திருப்பணிக்கே தம்மை ஆளாக்கிக் கொண்ட வேந்தர் திருமலை நாயக்கர் பட்டத்துத் தேவியர்* **உருத்திரபதி யம்மையும், தோளியம்மையுமே** *அவர்கள்.*

**கண்** : *அந்த இருவருக்கும் அம்மைமேல் அள்ளூறிநின்ற அன்பே, இந்த அட்டசத்தி மண்டபம் என்றால், அவர்களை நினைந்த சிற்பி, அவர்கள் திருவுருவை உள்ளத்தில் ஓவியமாகத் தாங்கி, இச் சிற்பங்களை வார்த்தான் என்றால்தான் என்ன? புனைந்துரை யாகுமா?*

**பொன்** : *புனைந்துரையே ஆனாலும், பொருத்தமானதுதான்! இதோபார்! சத்தி மண்டபத்தின் மேல்பால்* **மூத்த பிள்ளையாரும் இளைய பிள்ளையாரும்** *அருள் சுரந்து காட்சி வழங்குகின்றனர். தன் செல்வச் சிறுவர் களைத் தன் முன்னே நிறுத்தித் தளிர்ப்படைய எந்தத் தாய்தான் விரும்பமாட்டாள்? இந்தப் பிள்ளைகள் இருப்பிடத்திலும் அமைந்துள்ள ஓர் ஒழுங்கைப் பார்த்தாயா?*

**கண்** : *நீ இப்படிக் கேட்பாய் என எண்ணினேன். முன்னரே பார்த்த நீ ஒரு முடிவுக்கு வந்திருப்பாய். இருந்தாலும் என்னிடம் கேட்டதால் நான் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். நம்மவர்க்குள் பண்டுதொட்டு ஒரு பண்பாடு உண்டு. மனை ஆகட்டும்; நிலம் ஆகட்டும்; மூத்தவனுக்கு மேற்குப் பக்கமோ, தெற்குப் பக்கமோ தரப்படும். இளையவனுக்குக் கிழக்குப் பக்கமோ வடக்குப் பக்கமோ தரப்படும். இந்த ஒழுங்குமுறையை உணர்ந்த கட்டடக் கலைஞன் மூத்தபிள்ளையாரைத் தென்பால் வைத்தான். இளைய பிள்ளையாரை வடபால்*

வைத்தான். மேலே நாம் பார்க்க இருக்கும் **'இருட்டு மண்டபத்'**திலும் பிற இடங்களிலும் இந்த ஒழுங்கே இருப்பதைக் காணலாம்.

**பொான் :** சமுதாய நலம் கருதிய எத்தனையோ திட்டங்களும் அமைப்புகளும் கோயிலில் உண்டு. அவற்றை ஊன்றி உணர்ந்து, உண்மைப் பொருள் கண்டு போற்றாமையால், கேடுகள் பல சூழ்ந்தன என்பதை நினைக்கவே வருத்தமாக உள்ளது. சிற்பக்கூடமாகிய இந்த மண்டபம் சுதை வேலையும் வண்ண வேலையும் பளிச்சிடும் ஓவியக் கூடமாகவும் விளங்குவதைக் கண்டு மகிழ்கிறாய்! கேள்; நில்லாமல் ஓடும் உலகம் இது. இந்த ஓட்டத்துக்குத் தக்கவாறு விரிவான அரிய பெரிய செய்திகளையும் சுருக்கமாக ஓரிரு காட்சிகளாகத் தீட்டிக் காட்டியுள்ளனர். அரும்பாடு என்பது உண்மைதான்! ஆனால், பெரும்பயன் என்பதை மறக்க இயலாது.

**கண் :** ஓவியந் தீட்ட வல்லவர்களைச் **சங்கத்தார்,"கண்ணுள் வினைஞர்"** என்று கூறினர். அவர்கள், 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் திறத்தை நிறுத்தவல்லவர்' ஆதலின் அப் பெயர் பெற்றனர், என்பர். ஆதலால் நீ கூறிய விளக்கம் ஓவியக்கலைக்குரிய விளக்கமேயாம். மேலே சொல்;

**பொான் :** பாண்டியன் மலயத்துவசன்; அவன் மனைவி காஞ்சன மாலை; அவளுக்கு மகப்பேறு இல்லை. அவளுக்கு மீனாட்சி 'நான் உன் மகளாகப் பிறப்பேன்' என்று வரம் தருவது இந்த ஓவியம்; அம்மை திருப்பிறப்பு அடைவது இந்த ஓவியம்; அவள் திருமுடி சூட்டிக் கொள்வது இந்த ஓவியம்; அவள் அரசு செய்தல் இவ்வோவியம்; அம்மை வீரவுலா (திக்குவிசயம்) வின்போது இறைவனைக் கண்டு நிற்றல் இவ்வோவியம்; இறைவனும் இறைவியும் இணைந்திருத்தல் இவ்வோவியம்; சோமசுந்தரர் ஆட்சி, உக்கிர பாண்டியர் பிறப்பு, உக்கிரபாண்டியர் முடிசூட்டு, உக்கிர பாண்டியர் அரசாட்சி என்பவை இவ்வோவியங்கள்.

**கண் :** அம்மையைப் 'பசுங்கொடி, 'பசுந்தொகை,' 'பசுங்குதலை' 'மழலைக் கிளி' என்று சொல்லிச் சொல்லி இன்புறுவார் **குமரகுருபரர்.** இவ்வோவியர் தூரிகை அம்மையைப் பசுமை வண்ணத்தில் விளையாடிக் கொஞ்சி மகிழ்ந்

*திருக்கிறது! அத்தனையும் பச்சைப் பசுங்கொடி வடிவங்களே!*

**பொான் :** *அரைவட்ட வடிவத்தில் வளைவான முகடமைந்த இம்மண்டபத்தின் நீளம் 13.8 மீட்டர்; அகலம் 7.2 மீ. இது முன்னாளில், வெளியூர்களில் இருந்து திருக்கோயில் வழிபாட்டுக்கு வருவார்க்கு உணவு படைக்கும் இடமாக இருந்தது. இப்பொழுது இறைவனுக்கும் இறைவிக்கும் படைப்பதற்குரிய தேங்காய் பழம் முதலியன விற்கும் கடைகளை இருபாலும் கொண்டுள்ளது.*

**கண் :** *சோற்றுக் கடைகள் இல்லாத காலத்தில் அறச் சோற்று நிலையமாக இவ்விடம் இருந்தது சரிதான். இந்தக் காலத்திற்கு இந்நிலை சரிதான். காலத்திற்குத் தக்க சூழல் அமைவது இயற்கைதானே!*

**பொன் :** *நான்குபேர் போனவழி நல்லவழி என்பார்களே அந்த நாலுபேரும்* **'மேல்நிலை'** *யிலே நிற்பதைப் பார்த்தாயா? அவர்கள் நிலை மேல்நிலைதான்! ஊனுருகி நின்று தேனொழுகத்* **தேவார, திருவாசகம்** *பாடிய திருவாளர் நால்வரும் எந்நாளும் இங்கே இருந்து இசைத்துக் கொண்டிருக்கச் செய்த இந்த ஏற்பாடு மிக நல்லதுதான். இந்த மண்டபத்திலேயே நெடும்பொழுது ஆகிவிட்டது. மேலே போகலாம்.*

# 3. இணைப்பு மண்டபம்

**பொன் :** *அட்ட சத்தி மண்டபத்திற்கும் அடுத்துள்ள மீனாட்சி நாயக்கர் மண்டபத்திற்கும் இணைப்பாக அமைந்தது இம்மண்டபம். இம் மண்டபம் தீமைக்கும் - நன்மைக்கும், மறத்திற்கும் - அறத்திற்கும், மருளுக்கும் - அருளுக்கும் இணைப்பு மண்டபமாக உள்ளது.*

**கண் :** *இங்கே எதிரெதிராக இரண்டு சிலைகளே உள்ளன. எனினும் இவை காண்பவர் உள்ளத்தைக் கவ்விப் பிடிப்பனவாக அமைந்துள்ளன.*

**பொன் :** *வடபால் நிற்கும் இவ்வேடனைப் பார்!...........விம்மி எழுந்து வீறிக் கிடக்கும் அழகிய இவன் மார்பைப் பார்! அதே பொழுதில் அருளே அருவியாக வழியும் திருவிழிகளையும் பார்! தோற்றத்தின் வீறுக்குத் தக்க வெம்மையை வரப்பண்ணாமல் தண்ணருள் பெருகச் செய்துள்ளானே கலைஞன்! அவன் கைத்திறனைப் பார்! விரிந்த மார்புக்கு ஒடுங்கிய இடை அழகா? ஒடுங்கிய இடைக்கு விரிந்த மார்பு அழகா? ஒன்றற்கு ஒன்று அழகாக அமையும்போது ஒன்றைக் குறித்துக் கூறமுடியுமா?*

*திருக்கி விட்டு முறுக்கேறித் திரண்டு தொங்கும் மீசையைப் பார்! ஓட்டம் பிடித்தற்கு ஏற்றவாறு உடலைக் குறுக்கி அடியெடுத்து வைக்கும் ஒய்யார நடை அழகைப் பார்; சரியாக நேரே பாராமல் ஒருபால் சாய்த்த பார்வையைப் பார்! இவன் அருகில் பறவையும், குரங்கும் வலையும் இல்லையெனின், வேடன் என்று சொல்லவும் முடியுமோ? களை சொட்டும் இக்கலைப் படைப்பைக் கண்டதும் காட்டுவேடன் நம் கருத்தை விட்டு மறைந்து போகிறானே!*

*இந்த வேடனுக்கு எதிரே நிற்கிறாளே தென்பக்கம், இவளென்ன வேட்டுவச்சியா! தன் காதலன் அழகிலே*

*ஈடுபட்டோ, அவன் செய்யும் செயற்கரும் செயலில் ஈடுபட்டோ உள்ளுருகி உவகை பெருகி நிற்கிறாள்! இந்த உவகையால் தன்னை ஒப்பனை செய்து கொள் கிறாளோ?*

*இவளை இந்த மேல்பக்கம் வந்து நின்று பார். என்ன அழகாக புன்னகை! இதழ்க்கடையில் இதமான நகைப்பை எப்படிப் படைத்தான் இந்தப் படைப்பாளி? இப்படிக் கீழ்ப்பக்கம் வந்து பார்! இவள் உள்ளுக்குள் அமைந்த கிளுகிளுப்பை வெளிக்காட்டும் ஆழ்ந்த மலர்ச்சியல்லவோ வெளிப்படுகிறது! ஏறிய கைப்பக்கம் தலையைத் தூக்கி, இறங்கிய கைப்பக்கம் தலையைத் தாழ்த்திக் கண்ணைச் சாய்த்து கருத்தாக எதையோ இவள் பார்க்கிறாளே!................... கண்ணப்பா! என்ன எதுவும் சொல்லாமல் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கின்றாய்?*

**கண்** : *சொல்லத்தான் நினைக்கின்றேன். ஆனால் சொல்ல முடியாமல் திகைக்கின்றேன். இதுதான் வியப்பு நிலை! கேள்; இவள் வேட்டுவச்சிதான்; இவன் வேடன்தான்; இவள் தலைமேல் ஐந்தலைப் பாம்பு ஆடுவதைப் பார்! இவள் உண்மை வேட்டுவச்சிதானா? வேட்டுவச்சி வடிவில் வந்த வேறொருத்தியா?*

**பொன்** : *நல்ல வினாவைத் தொடுத்தாய் கண்ணப்பா! இப் பொழுது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகின்றது*

**கண்** : *கதை ஒன்றும் வேண்டா. ஊருக்குப் போய்ப் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது இந்தச் சிற்பங்களைப் பற்றிச் சொல்லு; திசை திருப்பாதே.*

**பொன்** : *அப்பா, கண்ணப்பா, நான் திசை திருப்பவில்லை. இச்சிலைகளைப் பற்றிய கதையைத்தான் சொல்லப் போகிறேன். அது திருவிளையாடற் புராணத்தில் உள்ளது.*

**கண்** : *திருவிளையாடற் புராணத்திலா?*

**பொன்** : *ஆம்; அதில்* ***மாபாதகம் தீர்த்த படலத்தில்.***

**கண்** : *சரி சரி! நான் ஐயப்பட்டது சரியாகப் போயிற்று. இறைவன் வேடனாகவும், இறைவி வேட்டு வச்சி யாகவும் வந்து மாபாவிக்கு அருள் செய்தது தானே! அது சரியாக எனக்கு நினைவுக்கு வரவில்லை. நீ சொல்.*

**பொன் :** *அவந்தி நகரில் ஒருவன் இருந்தான். அவன் தந்தை பெருஞானி. எனினும் அவனுக்கு இப் பொல்லான் மகனாகப் பிறந்தான். தன் தாய்க்குப் பேரிழிவு செய்தான்! தன் தந்தையையும் கொன்று தீர்த்தான். இறந்த தந்தையின் ஆவி, பாவிமகனைப் பற்றி அலைத்தது; அவன் பேயாய்த் திரிந்தான்; ஊர் ஊராய் அலைந்தான். மதுரைத் திருநகர்க்கு வந்த அக்கடையனையும் கடைத் தேற்றக் கருதினான் கண்ணுதல் பெருமான். அதனால் அம்மையொடு தானும் வேட்டுவக் கோலத்தில் மாபாவி முன்னே வந்து தோன்றினான்.*

*பாவ விலங்கை வேட்டையாடி அழிக்கவல்ல பெருமான் திருப்பார்வை பட்ட அளவில், மாபாவி உள்ளம் கலங்கியது; கசிந்து உருகியது; கண்ணீர் வழிந் தோடியது; அக்கண்ணீருடன் அவன் செய்த பாவமும் கரைந் தோடியது. இறைவன் இறைவியுடன் மாபாவி முன் தோன்றிய தோற்றத்தைத்தான் சிற்பி, இவ் வழகுச் சிலைகளாக வடித்துள்ளான்.*

**கண் :** *சரி, எனக்கு இப்பொழுது இரண்டு ஐயங்கள் ஏற்படுகின்றன. ஒன்று, இத்தகைய மாபாவியின் பாவத்தையும் போக்குதல் வேண்டுமா? என்பது, மற்றொன்று, இத்தகைய காட்சியை நினைவுபடுத்தும் சிலைகளை இத் திருக்கோயிலிலே நிறுத்திவைக்க வேண்டுமா? என்பது.*

**பொன் :** *கேட்கத் தக்க வினாக்கள் இவை. இவற்றுள் ஒரு வினாவைப்* **பரஞ்சோதி முனிவரே** *எழுப்பி விடை தந்தார். இறைவி, இறைவனிடம்,*

**"உய்வகை இலாத பாவி**
**இவனுக்கென் னுய்யும் தேற்றம்**
**செய்வகை என்று"**

***கேட்டாள். இறைவன்,***

**"விடுவகை யின்றி, வேறு**
**களைகணும் இன்றி, வீயக்**
**கடவுளைக் காப்ப தன்றோ**
**காப்பென்றான்."**

ஆதலால், 'எவர் துணையும் இல்லானுக்கு இறைவனே துணையாகி நின்று பாவம் தீர்த்தான்' என்பது முதல் வினாவின் விடை. இனி அடுத்த வினாவுக்கு விடை சொல்வேன்.

"கோயிலுக்கு வருபவர் எத்தகைய பாவியர் எனினும், உண்மையன்பால் உருகித், தாம் செய்த பாவத்தை உணர்ந்து, திருந்தி, நல்வழிப்படுவார்களானால், அவர்களுக்கு இறைவன் திருவருள் பாலிப்பது உறுதி" என்பதை உலகோர்க்கு வெளிப்படக் காட்டுதற்கே இச் சிலைகளைத் திட்டமிட்டு வைத்தனர் என்பதாம்.

**கண்** : நோயுள்ளவனுக்கு மருத்துவன் உதவி வேண்டுவது போலப் பாவியைக் கடைத்தேற்றவே இறைவன் அருள் புரிந்தான் என்பதால் மாந்தர்க்கு ஓர் அரிய படிப்பினை கிடைத்துள்ளது. குற்றம் குறை இல்லாத மனிதப் பிறப்பு இல்லை. ஆனால், ஒருசிறு குற்றத்தையும் பெரிதுபடுத்திப் பேரழிவு செய்பவர்கள் மிகப்பலர். தாங்கள் எக்குற்றமுமே செய்தறியாதவர் போலத் தகுதியற்ற செயல்களைச் செய்து வருத்தவாரும் பலர். இவர்கள் இறைவன் செய்த இத்திருவிளையாடலை எண்ணிப் பார்க்க வேண்டும். குற்றத்தை வெறுக்க வேண்டுமேயல்லாமல், குற்றவாளியை வெறுத்தல் கூடாது என்பதையும் உணர வேண்டும். உணர்ந்தால் உலகில் எத்தனையே தீமைகள் அகலும்; நன்மைகள் பெருகும்.

**பொன்** : நல்லது; அப்படியே ஆகட்டும். இனி நாம் அடுத்துள்ள மீனாட்சி நாயக்கர் மண்டபத்திற்குச் செல்வோம்.

# 4. மீனாட்சி நாயக்கர் மண்டபம்

**பொன் :** இம் மண்டபம் **மீனாட்சி நாயக்கர்** என்பவரால் கட்டப்பெற்றது. இவர் **விசயரெங்க சொக்கநாத நாயக்கர்** தலைமை அலுவலர்களுள் (பிரதானி களுள்) ஒருவர். இவர் பெயர் 'அம்மை' பெயரென்பது வெளிப்படை. இப்பெயரை ஆண் பெயராக்க விரும்புவார் 'மீனாட்சி சுந்தரர்' என்பாரே அன்றி 'மீனாட்சி' என்றே இடார். இவர் பெற்றோர் இவ்வம்மை பால் கொண்டிருந்த பேரன்பால் 'பால்' நிலையும் கருதாமல் பெயர் சூட்டியுள்ளனர். இத்தகைய பெயராளர் அம்மை திருமுன்னர்ப் பெருமண்டபம் எடுப்பித்தது இயல்பேயாம்.

கி.பி. 1707 இல் எடுக்கப் பெற்றது இம் மண்டபம். இதன் நீளம் 48 மீட்டர்; அகலம் 33 மீட்டர். மேலே யாளி உருவமும் கீழே சிறுசிறு சிற்ப வேலைப் பாடுகளும் அமைந்த 110 தூண்கள் இம் மண்டபத்தில் உள்ளன. தூண்களின் உயரம் 6.6 மீட்டர். மிக விரிவான இம் மண்டபத்தில் மிகுதியான சிற்ப வேலைப்பாடுகள் இல்லை. எனினும் திரளான மக்களைத் தன்னிடத்துக் கொண்டு பெருவிழாக் கோலம் கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது. முன்னாளில் கோயில் யானைகளும் காளை களும் ஒட்டகங்களும் கட்டப்பெற்றிருந்த இவ்விடத்தின் வடபக்கம் இப்பொழுது பூக்கடைகளும், தென்பக்கம் வளையல், பொம்மை முதலியவை விற்கும் கடைகளும் உள்ளன.

**கண் :** விரிவான இம் மண்டபத்திற்கு இதன் விரிவே தனிப் பேரழகாக அமைந்துள்ளது. விரிந்த இடத்தில் இருக்கும் போது தான் மாந்தருக்கும் விரிந்த பார்வை ஏற்படும் போலும்! உயரத்தில் உயரமான மலையில் ஏறிச் செல்லும் போது உள்ளமும் எவ்வளவு உயர்ந்து செல்கின்றது!

**பொான் :** *உனக்கு இப்பொழுது என்ன விரிவு தோன்றிவிட்டது?*

**கண் :** *விரிவா? அட்டசத்தி மண்டபத்தைக் கட்டியவர், திருமலை மன்னர் பட்டத்துத் தேவியர். இதனைக் கட்டியவர், ஓர் அரச அலுவலர் பார்த்தாயா? அரசர் களே செய்யட்டும்; அமைச்சர்களே செய்யட்டும்; அவரே செய்யட்டும் இவரே செய்யட்டும் என்று தட்டிக்கழிக்காமல் திருப்பணிகளை எவரும் போட்டி போட்டுக்கொண்டு செய்துள்ளார்கள். 'நல்ல பணியில் நமக்கும் பங்கு வேண்டும்' என்ற உந்துதல்தானே இப்படிச் செய்ய ஏவி இருக்கிறது! இந்த உணர்வு சமுதாய நலச் செயல்களுக்கு இக் காலத்தில் ஏற்படு மானால் இவ்வுலகம் இன்ப உலகமாக ஒரு நொடிப் பொழுதளவில் மாறிவிடாதா?*

**பொான் :** *ஆமாம்! ஆமாம்! இப்படி எண்ணவேண்டும். எண்ணி யதைச் செயலுக்குக் கொண்டுவரவேண்டும். இப்படி எண்ணுபவர்களெல்லாம் செயலில் இறங்கியிருந் தால் எவ்வளவோ நலங்கள் ஏற்பட்டிருக்கும். 'நாம் செய்து காட்டுவோம்' என்று நான்குபேர் துணிந்து இறங்கினால் நாற்பதுபேர் கைகொடுக்க வந்திருப்பர்! ஆனால் அந்த நான்கு பேர்க்குத் துணிவு வர வேண்டுமே!*

*நல்லது; அடுத்துள்ள மண்டபத்திற்குச் செல்லுமுன் இத் திருவாயிலைப் பார். இத் திருவாயிலுக்கு அழகு செய்யும் எடுப்பான* ***திருவாச்சியைப்*** *பார். இதன் உயரம் 7.5 மீட்டர். இதிலுள்ள விளக்குகள் 1008. இந்திய நாட்டு விடுதலைக்குத் தம் வாழ்வைச் சுடராக்கி எரித்தனரே அந்த* ***மருதுபாண்டியர்.*** *இத்திரு வாச்சியைத் திருவாயிலில் அமைத்துச் "சோதியே சுடரே" என்று அம்மையப்பரைப் பாடிப்பரவி யுள்ளனர். பித்தளையால் அமைந்த இத்திருவாச்சி இப் பொழுதும் சிவகங்கை அரசின் அற நிலையத்தார் கண்காணிப்பில் ஒளி செய்து வருகின்றது! நான் சொல்வது புரிகிறதா? என்ன சிந்திக்கிறாய்?*

**கண் :** *1008 திருவிளக்குகளை எண்ணினேன். சிவத் திருக் கோயில்கள் 1008 என்பர். அவ்வாயிரத்து எட்டுத் திருக்கோயிலுக்கும் ஒருங்கே விளக்கேற்றிய பேற்றை இங்கேயே அடைவதற்கு அச்***சிவகங்கைச் செம்மல்கள்**

*வழிகண்ட பெருமையை நினைத்தேன்! என்னை மறந்து 'சோதியே சுடரே' என வாழ்த்தினேன். உனக்கு நினைவுக்கு வருகிறதா? நீ சொல்லும் திருப்பணிகளை நினைக்கும்போது அந்த* ***நாவுக்கரசர்*** *திருவாக்கே முந்தி நிற்கிறது:*

**"விளக்கினார் பெற்ற இன்பம்**
**மெழுக்கினால் பதிற்றி யாகும்;**
**துளக்கில்நன் மலர்தொடுத்தால்**
**தூயவிண் ஏற லாகும்;**
**விளக்கிட்டார் பேறு சொல்லின்**
**மெய்ந்நெறி ஞான மாகும்;**
**அளப்பில கீதம் சொன்னார்க்(கு)**
**அடிகள்தாம் அருளுமாறே"**

***பொன் :*** *நன்றாக இருக்கிறது. அடுத்துள்ள மண்டபத்திற்குச் செல்வோம்.*

## 5. முதலிப்பிள்ளை மண்டபம்

**பொன் :** *இது முதலிப்பிள்ளை மண்டபம், முதலிமண்டபம், இருட்டு மண்டபம் என்னும் பெயர்களையுடையது. இதனைக்* ***கடந்தை முதலியார்*** *என்பவர் கி.பி. 1613 இல் கட்டினார்.*

*கடந்தை முதலியார் சிலை இதோ நிற்கிறது பார். ஒருவர் தம் உடலைக் கல்லைப் போல் வைத்துக் கொண்டு காலமெல்லாம் கடவுளைக் கைகூப்பி வணங்கிக் கொண்டிருக்க முடியாது. 'முடியாது' என்று மனம் அமைதி அடைவது இல்லை. அதற்கொரு வழி கண்டு பிடித்தது ஆற்றல்மிக்க அறிவுள்ளம். அதன் வெளிப்பாடே கற்சிலையாகிக் காலமெல்லாம் கடவுள் முன்னிலையில் கைகூப்பிக் கொண்டிருக்கும் சிற்பவடிவங்கள். கடந்தை முதலியார் சாவா உடம்பினராய் நம் முன் காட்சி வழங்கிக் கொண்டிருப்பது கலையின் கொடைதானே!*

*இம் மண்டபத்தின் நீளம் 18 மீட்டர்; அகலம் 7.5 மீட்டர். வழிநடைக்கு இருபாலும் அமைந்த எழிற் சிற்பங்களைப் பார்.*

*சடை முடியுடன் விளங்கும் இவர் ஒரு* ***முனிவர்****. மற்றை மற்றைவர்களெல்லாம் எத்தனை அணிகலங் களைப் பூண்டுள்ளனர்! இவரோ எவ்வணிகலனும் பூணவில்லை. 'பற்றற்றான் பற்றினைப் பற்றியவர்க்கு' மற்றைப் பற்று ஆகுமா? ஆகாது என்பதைக் காட்டுகிறது இவர் உடல் தோற்றம். ஆனால், இவர் பார்வையில் பற்றற்றவராகத் தோற்றம் தருகிறாரா! எதிரே காட்சி வழங்கும்* ***மோகினியை*** *முகம் சாய்த்து நோக்கிக் கவ்விக்கொள்ள அல்லவோ துடிக்கிறார்! அந்த மோகினிதான் இந்த முனிவர்மேல் எப்படிக் கண்வலையை வீசுகிறாள்! "அன்ன நடையும் அன்னமிலா ஐயர் நடையும் தளர்வெய்த" மோகினி*

*பார்க்கும் பார்வை, அம்மவோ! முற்றும் துறந்த முனிவரையும் முழு மயக்கத்தில் வைக்காமல் விடுமா? ஒற்றை விரலைக் காட்டி ஒரு பால் கோணிப் பார்க்கும் பார்வை,*

"ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியர் அன்றோ பெற்றியில் நின்றிடின்"

*என்னும் **'மணிமேகலை'**க்கு ஒப்பாக அல்லவோ உள்ளது? அவள் அடிக்கீழ் நிற்கும் முனிவர் இருவரும் என்ன தவி தவிக்கின்றனர்! இம் மோகினியை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால், இந்தப் **பிச்சைப் பெருமானை** (பிட்சாடனரை)ப் பார். பிச்சைக்குப் போகின்றவராகவா தோன்று கிறார்? பிச்சைக்குச் செல்பவர்க்கு இந்தப் பெருமித நடை வருமா? இரக்கச் செல்பவர்க்கு இந்த எழுச்சி நடை இருந்தால், எவரேனும் மதிப்பாரா? ஆனால், இப்பிச்சைப் பெருமான் பெருமைக்கு இவர் பெரு மிதம் அல்லவோ பேருதவி செய்கின்றது!*

*வலக் கைகளில் தமருகமும் மானும் தாங்கி, இடக்கை ககளில் திரிசூலமும் திருவோடும் தாங்கிக் காலில் திருவடி பூண்டு விரைந்து அடி எடுத்து வைத்து எங்கே புறப்பட்டு விட்டார்? இவர்தம் விரைவை, எடுத்து வைக்கும் அடிதானா காட்டுகின்றது? ஊன்றி நிற்கும் அடியும் அன்றோ காட்டுகின்றது. இடையில் கோவணமும் இல்லா இப் பெருமான் பாம்பைச் சுற்றிக்கொள்ள மட்டும் மறக்க மாட்டார் போலும்!*

***கண்*** : *பேரருள் உருவாக விளங்கிய காரைக்கால் அம்மையார் அன்றொரு நாள் கேட்டாரே, 'ஐயா, நீ பாம்பைப் பூணாதே; அச்சுறுத்தும் அதனை ஏன் அணிந்து கொண்டு திரிகின்றாய்! மற்றைப் பொழுதுகளில் அணிந்தாலும் அணிந்து கொண்டு போ! ஆனால், பிச்சைக்குப் போகும் போதாவது அதனை அணியாமல் போ' என்று எவ்வளவு மன்றாடிக் கேட்டார். இந்த மன்றாடிப் பாம்பலங்காரர் விட்டாரா?*

***பொன்*** : *பிச்சைப் பெருமான் பேரழகைக் கண்டு நிற்கும் இந்த நங்கையைப் பார். இவள் தாருகவனத்து முனிவர் மனைவியாம். இவள் கூந்தலின் ஒய்யாரம், ஆலிலை*

போன்ற வயிற்றின் அழகு, முழுநிறை மையலை முகத்தில் கூட்டி ஏக்கத்தால் நோக்கும் நோக்கு, உடை நெகிழ்ந்து சரிவதும் உணராமல் தன்னை மறந்து நிற்கும் நிலை! முனிவர்க்கு வாய்த்த பேதை மனைவிக்கா இப்போதை ஏறிவிட்டது?

**கண்** : அங்கே பார்த்தால், முனிவர் மோகினி முன்னே பித்தராய்க் காணுகிறார். இங்கே பார்த்தால், முனிவர் மனையாட்டி பிச்சைப் பெருமானுக்குப் பிச்சியாகி நிற்கிறாள். அழகு தான்! முன்னே கூறிய கலை முரண்கள் கழிபேரின்பம் சேர்க்கின்றன.

**பொன்** : கடந்தை முதலியார் இக் கலை மாளிகையைக் கருதிக் கருதிப் படைத்திருக்க வேண்டும். எத்தனை நாள்கள் உறக்கத்தை இழந்து ஊன்றி நின்று ஒரு முடிவுக்கு வந்தாரோ? அவர் கருத்தில் வடித்து முடித்த முடிவு, சிற்பியின் கையில் விளையாடிக் காட்சி வழங்கிக் கொண்டிருக்கிறது. இச் சிற்பங்களில் பொதிந்துள்ள கதை உனக்குப் புரிகின்றதா?

**கண்** : ஆம்! எனக்கு ஓரளவு புரிகின்றது. தாருகவனத்து முனிவர்களின் மனைவியர் செருக்கை அடக்குவதற்கு இறைவன் பிச்சைப் பெருமான் கோலத்தில் வந்தான். அவர்கள் தங்கள் நிலையை மறந்து பெருமான் திருவழகில் மையலுற்றுச் சிலைபோல நின்றனர். ஆங்கு வந்த திருமாலாம் மோகினியைக் கண்டு முனிவர்கள் மயங்கித் திக்குமுக்காடினர். இந்தக் கதை தானே?

**பொன்** : ஆம், இக் கதை தான் இதில் பொதிந்துள்ள கருத்துப் புலப்படுகின்றதா?

**கண்** : ஏதோ காரணம் இருக்கவேண்டும் என நினைக் கின்றேன். ஆனால் எனக்குப் புலப்படவில்லை. நீ சொல்.

**பொன்** : சொல்கின்றேன். வாழ்க்கையில் செருக்குக் கூடாது. அறிவிலே ஆகட்டும்; ஒழுக்க நெறியிலே ஆகட்டும்; செருக்குக் கூடாது. செருக்கு ஆகிய ஆணவம் பெருகிய இடத்தில், தன்னெடுப்புத் தோன்றும்; பிறரை யெல்லாம் தாழ்வாகப் பார்க்க வைக்கும்; அப்பார்வை ஆணவப் பார்வை ஆகுமே அன்றி அருட்பார்வை

*ஆகாது. குறைவிலா நிறைவுடையோம் என்று தம்மைக் கருதிக்கொள்பவர் பிறரிடத்துக் குறைகண்டு எள்ளி இகழ்ந்து நகைப்பரே அன்றி, இளகி இரங்கிக் கைதூக்கி விடத் துணியார். ஆதலால் நல்வழிகளிலே ஆயினும் செருக்கு உண்டாதல் சிறுமையானதே. அறிவால் செருக்கிய முனிவர்களுக்கும், ஒழுக்கத்தால் செருக்கிய முனிவர்களின் மனைவியர்க்கும் ஒரே பொழுதில் நன்னெறி காட்ட வந்த கோலமே பெருமானின் பிச்சைக் கோலமும், பெருமானின் மோகினிக் கோலமுமாம்! 'கலையுரைத்த கற்பனையே நிலையென்று' போகிவிட்டமையால் இஃது எள்ளி நகைக்கும் கதையாகவும் ஆயிற்று. இதன் உண்மையை உணர்ந்தால் வாழ்வின் மேலானதோர் அடிப்படை உள்ளே பொதிந்திருக்கக் கண்டு மகிழலாம்.*

**கண்** : *இந்த உணர்வு இல்லாமல் சிற்பத்தின் அழகை மட்டும் பார்த்துப் பரவசப்படுவதால் ஆவதென்ன? சிற்ப அழகு புற அழகுதானே! அதன் அக அழகையும் ஊடுருவிப் பார்க்கும் போது தான் உண்மைப் பொருள் புரிகின்றது. மிக அரிய செய்தி இது. சிவப்பிரகாச அடிகள் பாடிய பிட்சாடன நவமணி மாலையில்,*

**"நங்குற்றம் தீர்க்கும் பழமலை நாதர்க்கு நற்பலிகொண்டு**
**அங்குற்று மென்துகில் போக்கினள் வெற்றரை யாகியந்தோ**
**இங்குற் றனையென எம்பெரு மானிவ் விருநிலத்தில்**
**தங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே"**

*என்று பாடியுள்ளதை நினைத்துக்கொண்டு, இக் காட்சிக் கூடத்தைப் பார்த்தால் பேரின்பமாம்.*

**பொன்** : *ஆம்! அருமையாகக் கூறினாய். நான்* ***'நடக்குமோர் சுவடிச் சாலையுடன்'*** *வந்துள்ளேன் என்பதை நினைத்தால் அதுவும் பேரின்பமாகத்தான் உள்ளது.*

**கண்** : *பாராட்டு இருக்கட்டும். தென்பால் இருந்து அருள் சுரக்கும் வேழமுகத்து வேந்தரையும் வடபால் இருந்து அருள் பெருக்கும் மயிலேறும் மாணிக்கத்தையும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு அடுத்த பகுதிக்குப் போகலாம்.*

**பொன்** : *என்ன? இப்பொழுது நீயே வழிகாட்டத் தொடங்கி விட்டாயா? எனக்கு இனிக் கவலை இல்லை.*

**கண்** : *ஒன்றைக் கேட்கவேண்டும். இதற்கு 'இருட்டு மண்டபம்' என்பது ஒருபெயர் என்றாயே, இது நல்ல வெளிச்சமாகத்தானே உள்ளது?*

**பொன்** : *முன்னே இம் மண்டபம் இருட்டாக இருந்தமையால் தான் அவ்வாறு அழைத்தனர். ஆனால், 1960 இல் திரு. பொன்னம்பலம் தியாகராசன் (பி.டி. இராசன்) அவர்களால் இக் கோயிலில் திருப்பணி செய்யப் பட்டது. அப்பொழுது இதன் வடபக்கச் சுவரை இடித்து ஒளியும் காற்றும் புகும் வகையில் சாளரங்கள் வைக்கப்பட்டன. ஆதலால் இப் பொழுது அப் பெயர்க் காரணம் மறைந்து போயிற்று. "புன்மை இருள் போயது; பொற்சுடர் புகுந்தது" என்றால் நலந்தானே! இனிப், பொற்றாமரைக் குளத்தைப் பார்க்கலாம்.*

## 6. பொற்றாமரைக் குளம்

**கண்** : பொற்றாமரைக்குளமா! அப்பா! எத்தனை அழகான காட்சி என்ன அழகு! என்ன அழகு! இப்பொழுது தான் புரிகின்றது. எத்தனை படங்களில் இதனைப் பார்த்திருக்கின்றேன். இதனைப் பார்க்காமலே இது மதுரைப் பொற்றாமரைக் குளம் என்பதைப் பள்ளிப் பிள்ளைகளும் அறிந்துகொள்கிறார்கள். நான் இப் பொழுது தான் நேரில் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கின்றேன், பொன்னப்பா.

**பொன்** : என்னப்பா!

**கண்** : கொஞ்சம் உட்கார். என்ன அழகான தோற்றம்! என்ன இனிமையான காற்று! "மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே, மென்காற்றில் விளைசுகமே, சுகத்தில் உறும் பயனே" - வள்ளலார் எப்படி அனுப வித்துப் பாடியிருக்கிறார். உட்காரேன்! ஏன் நிற்கின்றாய்?

**பொன்** : உன் திருவுளப்பாங்கின்படியே உட்கார்கின்றேன். இனி என்ன செய்ய வேண்டும்?

**கண்** : ஒன்றும் செய்ய வேண்டா, நான் ஆசைதீரப் பார்த்துக் கொள்கின்றேன். பிறகு பேசலாம்.........சரி; நம் ஊரிலும் குளம் உண்டு; படிக்கட்டு உண்டு; அலை மோதித் தாவும் அளவு நீருமுண்டு; ஆனால் இந்த அழகுக் காட்சியைக் காணமுடியவில்லையே!

**பொன்** : ஏன் அழகு இல்லை? அதுவும் அழகுதான். உனக்கு அது பழகிப் போய்விட்டது. இன்று இதனைப் புதிதாகப் பார்க்கின்றாய். அதனால் வியப்பாக உள்ளது.

**கண்** : இன்று புதிதாகப் பார்ப்பது உண்மைதான். வியப்பாக இருப்பதும் உண்மைதான்; என்னையும், உன்னையும் போலவே இங்கே உள்ளவர்கள் எல்லாரும்

*புதியவர்கள் என்றா நினைக்கின்றாய்! உள்ளூர்க் காரர் எவரும் இல்லை என்றா நினைக்கின்றாய்! நம்மைப் போலத்தானே அவர்களும் வியப்பாகப் பார்க்கின்றனர்.*

**பொன் :** *நீ சரியாகவே மதிப்பிடுகிறாய். கேள்; இந்தத் தெப்பக் குளத்தின் நீளம், அகலம், படிக்கட்டு அமைப்பு, அதனைச் சுற்றி நாற்புறமும் அமைந்துள்ள நடைபாதை மண்டபங்கள், அவற்றில் அழகொழுகத் தீட்டப் பெற்றுள்ள வண்ணமலர்கள், வானளாவ ஓங்கித் திகழும் திருக்கோபுரப் பின்னணித் தோற்றங்கள். நீராடி எழுந்து வழிபாடு செய்வார் நேர்த்தி, திருக்கூட்டப் பெருமை இவ்வளவும் ஒன்றற்கு ஒன்று அழகு செய்வதைத் தள்ளிவிட முடியுமா? எல்லா இடங்களுக்கும் இத்தனை பொருத்தங்களும் இணைந்து பெருமை சேர்க்குமா?*

**கண் :** *நீ சொல்வது சரிதான். மீனாட்சி நாயக்கர் மண்டபத்தின் விரிவு இன்பமானது என்றால், இத் திருக்குளத் தோற்றம் இன்னும் இன்பமானதுதான்.*

**பொன் :** *இது பொற்றாமரைக் குளம் அல்லவா! அதோ பார்! தங்கத் தாமரை! இதன் பெயரை நிலைநாட்ட விரும்பிய திருப்பனந்தாள் மடத்துத் தலைவர் இப்பொற்றா மரைப் பூவை இத் திருக்குளத்தில் மலரச் செய்துள்ளார்.*

**கண் :** *அப்படியா!*

**பொன் :** *இந்த வடக்குச் சுவரில் எல்லாம் திருவிளையாடல் ஓவியங்கள்; கிழக்குப் பகுதியும் அப்படித்தான்; மதுரைத் திருவிளையாடல்களையெல்லாம் இனிய காற்றை வாங்கிக் கொண்டே எளிதில் அறிந்து கொள்ளச் செய்துள்ள ஏற்பாடு கண்ணைமட்டும் அல்லாமல் கருத்துக்கும் விருந்தாவதாம். மேலே பார்! எல்லாம் வண்ண வண்ணத் தாமரைப் பூக்கள். எண்ணத்தில் மலர்ந்த பொற்றாமரைக் குளத்தின் நறுமணக் கலவைதான்!*

**கண் :** *'தாமரைக்குளம்' என்னும் ஊரை நாம் அறிவோம். 'குளத்துக்கு அணியென்ப தாமரை' என்பதையும் அறிவோம். ஆனால், பொற்றாமரைக்கும் இக்குளத் திற்கும் என்ன தொடர்பு?*

**பொன் :** *சொல்கிறேன்; இந்திரன் ஒரு கொலைப்பாவத்திற்கு ஆளானான். அதனைப் போக்கிக்கொள்ள எங்கெங்கோ அலைந்தான். இறுதியில் இங்கு வந்தான். அப்பொழுது இவ்வூர் கடம்ப வனமாக இருந்தது. கடம்பவனத்திடையே இந்திரன் இலிங்கப் பெருமானைக் கண்டான். அவ்வளவில் அவன் பாவம் அகன்றது. இறைவனை வழிபட எண்ணித் தேவருலகில் இருந்து வேண்டும் பொருள்களைக் கொண்டு வந்தான். ஆனால், நறுமண மலர்கள் அந் நல்லுலகில் இல்லையே! அதனால் இந்திரன் கவலை பெரிதாயிற்று. அதனை உணர்ந்த பெருமான் அருகில் இருந்த பொய்கையில் அழகும் மணமும் கூடிய பொற்றாமரை மலரை மலரச் செய்தான். இந்திரன் அதனைப் பறித்து வழிபாடு செய்து இன்புற்றான். அது முதல் பொற்றாமரைக்குளம் எனப் பெயர் கொண்டது. இத் திருவிளையாடல் கதைக்குச் சான்றாகச் செய்தது இக் குளமாகும்.*

**கண் :** *தெப்பக் குளத்தில் இறங்கிக் கால் கைகளைக் கழுவிக் கொள்ளலாம் வா.*

**பொன் :** *சரி; போவோம். தெப்பக்குளத்துள் இறங்கும் இந்த வடக்கு மைய வழியில் எடுப்பாக அமைந்துள்ள இச்சிலைகளைப் பார்த்தாயா?*

**கண் :** *கிழக்கு நோக்கி நிற்கும் இவன் ஒரு வேந்தன் எனத் தெரிகின்றது. எதிரே மேற்கு நோக்கி நிற்பவன் எவன்? அவன் தலையிலும் திருமுடி இருக்கின்றது. ஆனால், அரசன் முடிபோல் இல்லை. இதில் ஏதாவது வரலாறு உண்டா?*

**பொன் :** *ஆம்; உண்டு. இவன் பாண்டி வேந்தன்; குலசேகர பாண்டியன் என்பது இவன் பெயர். இவன் மணவூரைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான். அந்நாளில் மதுரைமாநகர் இல்லை. இது கடம்பவனமாக இருந்தது. எதிரே நிற்கின்றானே அவன் ஒரு வாணிகன். தனஞ்செயன் என்பது அவன் பெயர். அவன் வாணிகம் செய்வதற்காக வந்து இவ்வழியே திரும்பினான். திரும்பிய போது இருட்டாகி விட்டது. ஆதலால் இக் கடம்ப வனத்திலேயே தங்கினான். இரவுப் பொழுதில்*

*ஒளிமிக்க விமானம் ஒன்று விண்ணுலகில் இருந்து இறங்குவதைக் கண்டு வியந்தான். அதில் இருந்தவர் ஓர் இலிங்கப் பெருமானைக் கொண்டு வந்து இரவெல்லாம் வழிபாடு செய்தனர். விடிந்த போது இலிங்கத்தை மட்டும் விட்டுவிட்டு அவர்கள் விண்ணுலகு சேர்ந்தனர். இக்காட்சியைக் கண்ட தனஞ்செயன் பேரன்போடு வழிபாடு செய்தது மட்டுமல்லாமல் தன்னாட்டு வேந்தனுக்கும் தான் கண்ட காட்சியைக் கூறினான். அன்று இரவில் இறைவனும் வேந்தன் கனவில் காட்சி வழங்கினான். பாண்டியன் குலசேகரன் வியப்புற்றுக் கடம்ப வனத்தை அழித்து சிவலிங்கப் பெருமானைக் கண்ட இடத்தில் கோயில் எழுப்பினான். அவ் வினிய இடத்திற்கு மதுரை எனப் பெயர் சூட்டினான். இக் கதை திருவிளையாடல் திருநகரங் கண்ட படலத்தில் கண்டது! என்னைப் பாரேன்; உனக்குத் தெரியாது என்பது போல உளறிக் கொண்டிருந்தேனே! இந்தக் கதை என்று சொல்லியிருந்தால் போதுமே!*

**கண்** : *அதனால் என்ன? தெரிந்ததைக் கூறினால் மேலும் தெளிவுதானே! குற்றமில்லையே! அந்தக் குலசேகர பாண்டியனும், வணிகன் தனஞ்செயனும்தாம் இவரா? "வேந்தர் பெருமானே, வாணிகச் செல்வனே, உங்கள் இருவர் நற்பணியால்தான் நாங்கள் இங்கே வந்து அம்மையப்பரைக் கண்டு வணங்கிப் பிறவிப் பயனை அடையப் போகின்றோம்' என்று வழிபட வருவார் ஒவ்வொருவரும் நினைவு கூர்ந்து போற்றும் வகையில் இவ்விடத்தே இவர்கள் சிலைகளை நிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது அல்லவா!*

**பொன்** : *இத் தூண்களைப் பார். இவ் வழிநடைக்கு மேற்கே பன்னிரண்டு தூண்கள்; கிழக்கே பன்னிரண்டு தூண்கள். இந்த இருபத்து நான்கு தூண்களிலும் ஏடும் எழுத்தாணியும் பிடித்துள்ள திருவுருவங் களைக் காண்கின்றாயே, இவர்கள் சங்கப் புலவர்கள்.*

**கண்** : *பொற்றாமரைக் குளத்தில் மிதந்த சங்கப் பலகையில் இருந்து, இவர்கள் தமிழாராய்ந்தார்கள் என்ற கதை உள்ளமையால், இக் குளக் கரையிலேயே அவர்கள் சிலைகளை எழுப்பியுள்ளார்கள் போலும். ஆனால், அவர்கள் 49 பேர்கள் அல்லரோ!*

**பொன் :** *ஆம்! சங்கப் புலவர்கள் 49 பேர்களே! அவர்களுக் கென்றே இக் கோயிலுக்குள் ஒரு கோயில் உள்ளது. அதில் 49 பேர்களின் சிலைகளும் உண்டு. அதனைப் பிறகு பார்க்கலாம். இப்பொழுது கீழ்ப்பக்க மண்டபத்து வழியே செல்வோம். கண்ணப்பா, இந்த மைய இடத்தில் நின்று பார்! எத்தனை கோபுரங்கள் தெரி கின்றன?*

**கண் :** *எட்டுக் கோபுரங்கள் தெரிகின்றன; இரண்டு தங்க விமானங்கள் பளிச்சிடுகின்றன. என்ன அழகான காட்சி!*

**பொன் :** *கோபுரங்களைப் பற்றிப் பிறகு பேசிக்கொள்வோம். விமானங்களில், தெற்கே தோன்றுவது அம்மையின் திருக்கோயில் கருவறை விமானம். வடக்கே தோன்றுவது சொக்கர் கோயில் கருவறை விமானம். இறையன்பு மிக்க அடியார்கள் தங்கள் மனைவி மக்களுக்குத் தங்கத்தைப் பூட்டி அழகு பார்ப்பதைப் பார்க்கிலும், இறைவனுக்குச் செய்யும் திருப்பணிக்குச் செலவிட்டு அழகு பார்ப்பதையே விரும்பியுள்ளனர். தங்களுக்குத் 'தங்கக் குடிசை' இல்லாவிட்டாலும் இறைவனுக்குத் 'தங்கக் கோபுரம்' எழுப்புவதிலேயே ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வளர்ந்த வகை அது.*

**கண் :** ''பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே''

*என்ற மாணிக்கவாசகர் வாக்கைச் சொல்லி உன்னைப் பாராட்ட வேண்டியுள்ளது. ''அறிவால் சிவனே'' என்ற பெருமைக்குரிய அப் பெருமகனாரோடும் ஒப்பிட்டுக் கூற நாணுதல் ஏற்படுவது உண்மைதான். இருந்தாலும் இவ்விடத்தில் என்னை நிறுத்தி, 'எட்டும் இரண்டும்' காட்டிய இன்பக் காட்சி இப்படிக் கூறவைக்கின்றது.*

**பொன் :** *கண்ணப்பா, 'எட்டு' 'இரண்டு', என்பன இக் கோபுர எண்ணிக்கையைக் கொண்டு கூறவில்லை என்பது விளங்குகின்றது. அதன் உட்பொருளைக் கூறுகின்றாயா?*

**கண் :** *எட்டு என்பது தமிழில் 'அ', இரண்டு என்பது 'உ' இவற்றுடன் 'ம்' சேரின் 'ஓம்' என்பதாம் 'ஓம்' என்னும் மந்திரப் பொருள் அறியாதவன் என்பது ஒரு பொருள். எட்டும் இரண்டும் ஆகிய பத்து என்பது*

*தமிழில் 'ய' எனக் குறிக்கப்படும். இது 'சிவயநம' என்பதில் இடைநின்ற எழுத்து. 'ய' என்பது 'ஆன்மா' வைக் குறிக்கும். அஃதாவது தன்னைத் தான் அறியாமை! இனி இறைவன் மூர்த்தங்கள் எட்டு எனக் கண்டோமே; மண் விண் தீ நீர் காற்று மனம் அறிவு ஆணவம் என்பன; இவ்வெட்டு வடிவுடன் அம்மை யப்பனாம் இருவடிவம் அறியாதவன்!*

**பொன் :** *இப்பொழுது என்னை நீ அறிய வைத்தாயா? நான் உன்னை அறிய வைத்தேனா?*

**கண் :** *இருவரும் அவன் அருளாலே அவன் அறிவிப்பை அறிந்தோம்.*

**பொன் :** *மகிழ்ச்சி; என்ன மேலே பார்க்கிறாய்?*

**கண் :** *இதோ நால்வர் உருவம்; எட்டும் இரண்டும் அறிந்தவர்கள் இவர்கள்! பிறர்க்கு அறிவித்தவர்களும் இவர்கள். இவர்களை இவ்விடத்தில் இருந்து நினைக்க வைத்த வண்ணம் எவ்வளவு சிறந்தது! 'இம் மையத்தில் நின்றுபார்' என்று பார்க்க ஏவி, அதற்குரிய அடையாளத்தைப் பாவு கல்லில் பொறித்துள்ளார் கற்றச்சர். இவ்விடத்தில் இருந்து முன்னேறி மேற்கே எட்டு வைக்க எட்டு வைக்க 'எட்டும் இரண்டும்' ஒன்றொன்றாய்த் தெரிய வைத்த தேர்ச்சி, ஆன்மா கடைத்தேறும் அருமையை வெளிப்படுத்தியது அல்லவா!*

**பொன் :** *நல்லது கண்ணப்பா,* ***கைசெய் வண்ணத்தால்*** *காட்சியளிக்கும் இந் நால்வர்களைப் பார்க்கும் இதே வேளையில் செய்கை வண்ணத்தால் சிறப்படைந்த நால்வர்கள் என் நினைவில் தோன்றுகின்றனர்.*

**கண் :** *அந்த நால்வர் எவர்?*

**பொன் :** *49.5 மீட்டர் நீளமும் 36 மீட்டர் அகலமும் உடைய இப் பொற்றாமரைக் குளத்தைச் சுற்றிலும் நடைவழி மண்டபங்கள் உள்ளனவே! இவற்றைக் கட்டுவித்த கொடையாளர்கள்தாம் அவர்கள்! * இதன் வடக்குப் புற மண்டபமும் படிக்கட்டுகளும் கி.பி. 1562 இல்*

* *கோயில் மாநகர் பக். 156 - 7.*

*பெருமாள் என்பவரால் கட்டப்பெற்றன; கிழக்குப்புற மண்டபமும் படிக்கட்டுகளும் கி.பி. 1573இல் குப்பையாண்டி என்பவரால் கட்டப்பெற்றன. தெற்குப் புற மண்டபமும் படிக்கட்டுகளும் கி.பி. 1578 இல் அப்பன்பிள்ளை என்பவரால் கட்டப்பெற்றன. மேற்குப்புற ஊஞ்சல் மண்டபம் முதலியவற்றை கி.பி. 1563 இல் செட்டியப்ப நாயக்கர் என்பவர் கட்டியதாகத் தெரிகின்றது.*

**கண்** : *மகிழ்ச்சி; இத் திருப்பணியாளர் புகழ் வாழ்வதாக! தென் பக்கம் போகலாம்.*

**பொன்** : *ஏட்டிலே இருந்த திருக்குறளை இங்கே அழகான வெண்சலவைக் கல்லில் கண்டு களிக்கின்றோம். இந்தத் திருப்பணி பற்றிய குறிப்பைப் பார்!*

*"திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ரூ 15,000 செலவில் 45 சலவைக் கற்களில் 1330 குறட்பாக்களும் எழுதப்பெற்றுத் திருக்குறள் அரங்கேறிய மதுரையில் பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் அமைக்கப்பெற்றன. துன்முக சித்திரை ஞாயிறு 11 வ 22-4-56".*

*இதனை அடுத்து மதுரைத் தேவாரம், சிவஞான போதம், அபிராமி அந்தாதி ஆகியவற்றைச் சலவைக் கல்லில் பொறித்ததும் இவ்வாதீனப் பணியேயாம்.*

**கண்** : *எத்தனையோ பேர்கள் 'பொழுது போகவில்லை' 'பொழுது போகவில்லை' என்று பொழுதைப் போக்குகிறார்கள். அவர்கள் பொழுது இருக்கும் போது இங்கே வந்து பொழுதைச் செலவிட்டால் எவ்வளவு அரிய பயனைப் பெறலாம். கைம்மேல் வைத்த கனியை உண்பதற்குமா கருதக் கூடாது?*

**பொன்** : *கண்ணப்பா, கொஞ்சம் பொறு. இந்த வெள்ளைக் காரனுக்கு இக் கல்வெட்டைப் பற்றி ஒருவன் சொல்லிக் கொண்டு போவதைக் கேட்டாயா?*

**கண்** : *என்ன?*

**பொன்** : *"இது திருக்குறள்; குமரகுருபரர் என்பவர் எழுதியது."*

**கண்** : *என்னப்பா வேடிக்கை! ஆலமரம் எப்படி இருக்கும் என்றானாம் ஒருவன். அவன், "ஆலமரம் தெரியாதா? வேலியிலே புளியமரம் மாதிரி முள்ளுமுள்ளாகப் படர்ந்திருக்கும்" என்றானாம். அவனுக்கு ஆலமரம் தெரியாது; வேலி தெரியாது; புளிய மரம் தெரியாது; முள்ளும் தெரியாது; படர்தலும் தெரியாது. இது போல் இவன் குமரகுருபரரைத் தெரிந்தானா? திருவள்ளுவரைத் தெரிந்தானா? திருக்குறளைத் தெரிந்தானா? நல்லவேளை அந்த வெள்ளைக் காரனிடம் "திருக்குறள் சேக்சுபியர் எழுதியது" என்று சொல்லாமல் விட்டானே!*

**பொன்** : *இங்கே பார்! இது திருநீற்றுப் பிள்ளையார்.*

**கண்** : *பார்த்தாலே புரிகின்றதே! இதற்கு வழிபாடே திருநீறுதானா?*

**பொன்** : *நீரிலே குளிக்க விரும்பும் யானை இங்கே திருநீற்றிலே குளிக்கின்றது.*

**கண்** : *என்ன அருமையான படைப்பு!*

**பொன்** : *எதைச் சொல்கிறாய்?*

**கண்** : *குமரகுருபரர் இங்குத்தானே மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடினார்?*

**பொன்** : *ஆம். ஆனால் அதனை அரங்கேற்றிய இடம் கோயிலின் உள்ளே இருக்கின்றது.*

**கண்** : *இருக்கட்டும். அதன் கடவுள் வாழ்த்தில் இந்தப் பிள்ளையாரைத்தான் குறிப்பிட்டிருக்கின்றார் என்பது எனக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது.*

**பொன்** : *ஏன்?*

**கண்** : *அவர், பிள்ளையாரை அயிராவணம் என்னும் வெள்ளை யானைக்கு ஒப்பிட்டு, வெண் பொடியில் புழுதி விளையாட்டு விளையாடுவதைக் கூறுகின்றார். திருநீற்றில் முழுகிக் கிடக்கும் இப் பிள்ளையார் அயிராவணத்திற்கு மிகப் பொருத்தமான உவமை தானே!*

"போர்கொண்ட எண்தோள் பொலன்குவடு பொதியும்
வெண்பொடி துடியடித் துவைத்துப்
புழுதியாட்டு அயராவோர் அயிராவணத் துலவும்
போர்க்களிற்றைத் துதிப்பாம்"

*இந்த அடியை இப் பிள்ளையார் முன் நின்று பாடினார் என்றால் தவறா?*

**பொன் :** *நீ சொல்வது மிகச்சரியாகவே இருக்கின்றது. கூர்மை யான உன் நினைவாற்றல் எப்படியெல்லாம் ஓடிவந்து உதவுகின்றது. எத்தனைமுறை இந்தப் பாட்டைப் படித்திருக்கின்றேன். இந்த இணைப்புத் தோன்ற வில்லை. நீ மிக எளிமையாகச் சொல்லிவிட்டாய்! ஆனால், இப் பிள்ளையார்க்குத் திருநீறு சார்த்துவது பிற்பட்ட வழக்கம் என்பர்.*

**கண் :** *சரி, எப்படியோ என் மனத்திரையில் பட்டது! அதைச் சொன்னேன். அடுத்த பகுதியைப் பார்ப்போமா?*

## 7. சிவந்தீசுவரர் கோயில்

**பொன் :** பொற்றாமரைக் குளத்தின் தென்மேற்கு மூலைக்கு வந்துள்ளோம். இது தெற்குக் கோபுர வாயில்வழி. இவ்விடத்தில் 'அப்பனை' நினைத்து ஒரு கும்பிடு போட வேண்டும்' என்று ஓர் உள்ளம் எண்ணியிருக் கின்றது. அதனால் இலிங்கப் பெருமானை இங்கே எழுந்தருளச் செய்துள்ளனர். இவ் வாயிலிலே இறைவன் திருக்கூத்தாடும் சிலைகளை நிறுத்தி அறிமுகம் செய்துள்ளார்கள்.

**கண் :** நாம் அம்மைக்கு முதன்மை கொடுத்தாலும், அம்மை, அப்பனுக்கு முதன்மை கொடுக்கத் தவறுவாளா? உலக நடை இதுவென உலகுக்குக் காட்டாமல் காட்டுபவள் அவளாயிற்றே!

**பொன் :** இதோ பார்! ஒரு நல்ல ஏற்பாடு; வில்வக் கன்றுகள் வளர்க்குமிடம்; திருக்கோயில்களுக்கு இலவசமாக வழங்குவதற்காகக் கன்றுகள் இங்கே வளர்க்கின்றனர்.

**கண் :** வளமான காடுகளின் இடையே திருக்கோயில்கள் பழங்காலத்தில் இருந்தன. பின்னர்க் காடுகளை அழித்துக் கோயிலும் கோட்டையும் குடியிருப்பும் பெருக்கினர். இதற்குக் கடம்பவனமாகிய இம் மதுரையே சான்று. மீண்டும் மரங்களைப் பெருக்கி நலம் செய்ய வேண்டும் என்பதற்கு இவ் விளம்பரம் தூண்டுதல். இவ் வில்வம் போலவே பலவகைப் பூச் செடிகளுக்கும், உயர்ந்தவகைப் பழமரங்களுக்கும் திருக்கோயில் வளாகமே நாற்றங்கால் என்னும் நிலைமை ஒவ்வொரு கோயிலிலும் உண்டானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இன்ன கோயிலிலே வாங்கியது என்னும் தெய்வ உணர்வுடன் போற்றிக் காத்துப் பயன் கொள்ளும் பேறும் கிடைக்குமே! தண்ணீர் ஊற்றும் போதும், உரம் போடும் போதும்,

*களைபறிக்கும் போதும், பயன் கொள்ளும் போதும் தெய்வவுணர்வு அல்லவா முந்தி நிற்கும்?*

**பொன் :** *ஆம் அருமையான எண்ணம்தான். இவ் வில்வக்கன்று வளர்க்குமிடம் சிவந்தீசுவரர் கோயில் எனப்படும். சிவந்தீசர், செவ்வந்திவண்ணர், செந்தீவண்ணர் என்பவரெல்லாம், செம்மேனி அம்மானாம் சிவ பெருமானே ஆவார். அவருக்குச் செவ்வந்திப் பூவின் மேல் பற்று மிகுதி என்று இங்கே வளர்த்தனர். இப் பொழுது செவ்வந்திச் செடிகள் இல்லை. எனினும் வழிபாட்டுக்குப் பயன்படும் சில பூ வகைகள் உள்ளன. தேவாரப் பாடசாலையும் இங்கே நடைபெறுகின்றது*

*இக் கோயில் முன்மண்டப முகப்பிலே வீரபத்திரர் எழில் தோற்றத்தைப் பார்த்தாயா? இத்தனை சிதைவு களுக்கும் இடையே வில்லேந்திய இந்த வீரன் மல்லேந்திய தோளாற்றல் வெளிப்பட எப்படி நிற்கின்றான்?*

**கண் :** *பூட்டிய கதவைத் திறந்து பொதுமக்கள் பார்வைக்கும் வழிபாட்டுக்கும் வகை செய்திருந்தால் இவ்விடத் திற்குப் பொலிவு உண்டாகி இருக்கும்! என்றைக் காவது ஒருநாள் இதற்கு நல்ல காலம் பிறக்கலாம்! நாம் வந்த வழியே திரும்புவோம்.*

## 8. ஊஞ்சல் மண்டபம்

**பொன் :** *இதற்கு ஊஞ்சல் மண்டபம் என்பது பெயர். ஆறு தூண்களைக் கொண்ட இந்த அழகான கருங்கல் மண்டபம் தனிக்கோயில் போல விமானத்துடன் அமைந்துள்ளது. இதனுள் ஊஞ்சல் தொங்குகின்றது அல்லவா! வெள்ளிக்கிழமை தோறும் இவ்வூஞ்சலில் இறைவன் இறைவியர் திருவுருவங்களை வைத்து ஊஞ்சலாட்டுவர். இதற்கு எதிரே தெப்பக் குளத்தின் உள்ளே நீண்டு செல்லும் மண்டபம் இருக்கின்றதே, இதில், இங்கே ஊஞ்சலாட்டம் நிகழும் போது ஆடல் மகளிர் ஆடல் நிகழ்த்துவர். ஆதலால் 'ஆடல் மண்டபம்' என்பது இதற்குப் பெயர். ஆனால், இப்பொழுது ஆடல் நிகழ்வது இல்லை.*

**கண் :** *ஆட்ட ஓட்டம் ஓய்ந்தாலும் சரி; அதன் பழைய வரலாற்றை அதன் பெயர் எப்படிக் காப்பாற்றுகிறது பார்த்தாயா? ஆதலால், பழம்பெயரை மாற்றாமல், மறையாமல் போற்றுவது வரலாற்றுக்குச் செய்யும் உதவியாகும்.*

**பொன் :** *இந்த நிலைமாடத்தின் முகட்டில் உள்ள ஓவியங்கள் மங்கம்மாள் காலத்தில் வரைந்தவை. இராணி மங்கம்மாள், அவர் பேரர் விசயரங்க சொக்கநாத நாயக்கர், அமைச்சர் இராமப்பையன் ஆகியோர் ஓவிய வடிவங்கள் இவை. இதனைக் கட்டி முடித்தவர் செட்டியப்ப நாயக்கர் என்பதை முன்னமே சொன்னேனே! அவர், இச்சிலைவடிவில் நிற்பவரா கலாம்! அவருக்கு அன்னையை எந்நாளும் அண்மை யில் நின்று வழிபட்டுக் கொண்டிருக்கும் ஆர்வம் மீதூர்ந்துள்ளது. அதற்குத் தக அன்னை திருவுருவை எழுந்தருளச் செய்து தாம் வணங்கிக் கொண்டே*

இருக்க வாய்ப்புச் செய்து கொண்டதுடன், வழிவழி வருவாரும் வணங்கும் பேறு பெறவும் வாய்ப்புச் செய்துள்ளார்! இத்தகையர் பெயர்களையாவது எழுதிவைத்தால் எவ்வளவு நலமாக இருக்கும்!

**கண்** : நல்லதை நினைக்கும் போது நல்லவரையும் நினைக்க வாய்ப்புக் கிடைத்திருக்குமே எழுதி வைத்திருந்தால்! இப்படி ஓரிடம் தானா? எத்தனை இடங்களில் என்னென்னவோ எழுதி வைத்திருக்க வேண்டும்!

**பொன் :** இந்த நிலைமாடத்தின் கீழே இறங்கலாம். இங்கே இலிங்கப்பெருமான் நடுநாயகராக இருக்கின்றார். அவருக்கு வலப்பால் மூத்த பிள்ளையாரும் இடப் பால் இளைய பிள்ளையாரும் இருக்கின்றனரா? தெப்பக் குளத்தில் நீராடித் திருநீறு துலங்க வருவார்க்கு முந்திக்கொண்டு அருள் வழங்க இம் மூவர் உருவையும் படிக்கரையிலேயே படைத்துள்ளனர். இவர்களுக்கு நிழல்செய்யும் நிலைமாடமும் எழுப்பியுள்ளனர். நாம் இவர்களை வணங்கி விடைபெற்றுக் கொண்டு மேலே போகலாம்.

**கண்** : ஊஞ்சல் மண்டபத் தூண்களில் பெரிய சிற்பங்கள் எதுவும் இல்லை. சிறிய சிறிய வேலைப்பாடுகள், ஆனால் சிந்தனையைத் தூண்டுபவையாக உள்ளன. அவ்வளவும் வழிபாட்டு முறையை வெளியிடுபவை.

**பொன் :** ஆண்டவனை எப்படியெல்லாம் வழிபடவேண்டும் என்பதைக் கல்லிலே கருதிக் கருதிப் படைத்துக் காட்டியுள்ளனர்; உச்சித் தலைமேல் கை வைத்துக் கும்பிடுபவர்; நெஞ்சுக்கு நேரே கைதூக்கி வணங்குபவர்; வலக்காலைத் தூக்கி மடித்து நின்று வணங்குபவர்; இடக்காலைத் தூக்கி மடித்து நின்று வணங்குபவர்; சடைத் தலையராய் வணங்குபவர்; மொட்டைத் தலையராய் வணங்குபவர்; பாகைத் தலையுடன் வணங்குபவர்; திருமுடி திகழ வணங்குபவர்; வில்லேந்திய தோளராய் வணங்குபவர்; விம்மித உருவாய் வணங்குபவர்; விழுந்து வணங்குபவர்; மண்டியிட்ட கோலத்தில் வணங்குபவர். ஆடும் அழகியாய்ப்

*பாடும் பாவையாய் வணங்குபவர்; குரங்கராய், காளை யராய் வணங்குபவர்; இப்படி எத்தனை எத்தனை தோற்றங்கள், எப்படி வழிபட்டால் என்ன! உருக்கம் தானே உண்மை வழிபாடு. அவ்வுருக்கத்தை உளியில் விளையாட விட்டு உருகி நின்றிருக்கிறான் சிற்பி. அவன் உள்ளம் இத்தனை வகைகளிலும் வழிபட்டு பேரா இன்பம் பெற்றிருக்கின்றது.*

**கண் :** "பொன் செய்த மாடமலி கூடல் பெருஞ்செல்வி
பொன்னூசல் ஆடியருளே!
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக்கு ஒத்தகொடி
பொன்னூசல் ஆடியருளே!"

*என்று நாமும் அம்மைக்கு ஊஞ்சலாட்டுப் பாடி அடுத்த மண்டபத்திற்குச் செல்லலாம்.*

## 9. கிளிக் கூட்டு மண்டபம்

**பொன் :** இது கிளிக் கூட்டு மண்டபம்; அம்மையைப் பசுங் கிளியாக வருணிப்பர். பறவைகளில் 'பிள்ளை' என்று பெருமையாக அழைக்கப்படுவது இக் கிள்ளையே. இதன் மழலை மொழிகேட்டு மகிழார் உளரோ? கண்ணுக்கு இன்பமும் காதுக்கு இன்பமும் தரும் இதன் அருமையிலே விளைந்தது தானே 'கிள்ளை விடு தூது'!

**கண் :** கிளியைக் கையில் ஏந்திய கிளி அங்கயற் கண்ணி, அவள் அருள் பொழியும் திருவடிவிலேயே கிளிக்குத் தனியிடம் உள்ளதை நினைத்துக் கோயிலிலும் இடந் தந்துள்ளனர். அம்மை அருமைக் கிளிக்குச் சிறையோ தந்தாள்? பறக்கச் சிறை (சிறகு) அல்லவா தந்தாள்? அப் பைங்கிளிக்கு. இவ்வாறு பச்சைக் கிளிகளைக் கூட்டுள் அடைத்து வைத்தல் உவப்பாகாது என்றாலும், பேரன்பர் ஒருவர் உள்ளத்தே இப்படி ஓர் ஆர்வம் எழும்பியிருக்கின்றது! அன்பு வெள்ளமாய்ப் பெருக் கெடுத்தால் சிலவேளைகளில் அருள் கொஞ்சம் ஒதுங்கிக்கொள்ளும் போலும்!

**பொன் :** மேலே பார்! எத்தனை வண்ண ஓவியங்கள்! பிள்ளையார் முருகன் அம்மை திருவடிவங்கள் எத்தனை எத்தனை! "ஓர் உருவம் ஒரு நாமம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம், திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பதை நினை வூட்டும் உயிரோவியங்கள், இவற்றையும் மண்டப முகப்புத் தட்டுகளில் உள்ள திருவிளையாடல் சிற்பங்களையும் தனித் தனியே பேசினால் திருவிளை யாடல் புராணம், பெரிய புராணம் முதலிய நூல்களை யெல்லாம் முழுமையாகப் பேச நேரும். நமக்குப் பொழுது இல்லை. நாம் ஒரு பார்வை தானே பார்க்கின்றோம்! நுணுக்கமாக என்றால் அட்டசத்தி மண்பத்தை இன்று கடந்திருப்போமா?

**கண்** : *ஆமாம்! ஆனால் சிற்பம், ஓவியம், சைவம், கட்டிடப் பொறி, இசை, வரலாறு, கல்வெட்டு, இலக்கியம் முதலியவற்றிலெல்லாம் தேர்ச்சிமிக்க ஒருவர் அல்லது ஒரு குழுவினர் நுணுக்கமாக முழுதுற ஆய்ந்து ஒவ்வொரு பகுதியையும் நிழற்படமெடுத்து அதனுடன் நூலாக வெளியிட்டால் பெரும்பயன் மிக்க செய லாகும். அப்படி வெளிவரும் நாளில் நாம் இன்னும் தெளிவு பெறலாம்.*

**பொன்** : *கண்ணப்பா, இந்த மண்டபத்தில் உள்ள தூண் களைப் பார். அவ்வளவும் சிற்பத்திறன் மிக்கவை. நடைவழிக்கு இருபாலும் சிற்பக் காட்சி நிலையமாக அமைந்துள்ளன. இங்கே, கிழக்குப் பார்த்து அருச்சுனன் நிற்கின்றான். அவனுக்கு நேரே மேற்குப் பார்த்துத் தருமன் நிற்கின்றான். இருவரும் வில்லாளிகளாகவே நிற்கின்றனர்.*

**கண்** : *தருமன் அமைதிக்கு இருப்பிடமானவன் என்ற எண்ணம் அவன் பெயரைக் கேட்ட அளவிலும் நமக்கு உண்டாகின்றது. இந்த அருச்சுனனும் அத்தகையவன் தானா?*

**பொன்** : *அண்ணன்முன் நிற்கும் அருச்சுனன் எப்படி நிற்பான்? அவனுக்கு ஏற்ற தம்பியாக விளங்குகின்றான்.*

**கண்** : *தருமனுக்குத் தாடி உண்டு என்பது இச்சிலையைப் பார்த்தால் தெளிவாகின்றது. மேலும் வடிந்துவீழ் காதும் உண்டு என்பதையும் காட்டியிருக்கின்றான் கலைஞன்.*

**பொன்** : *வண்ண வண்ணப் பூஞ்செடிகளை மாறி மாறி நட்டு வைக்கும் தோட்டக் கலைஞன் போல, இச் சிற்பக் கலைஞனும் இடை இடையே யாளிகளைத் தூணில் செதுக்கியுள்ளான்.*

*அடுத்துள்ள இரண்டு தூண்களில் நகுலன் கிழக்குப் பார்த்து நிற்கின்றான்; அவனுக்கு எதிரே சகாதேவன் மேற்குப் பார்த்து நிற்கின்றான். நகுலன் கீழ்நோக்கிச் சிந்தனை தேக்கி நிற்கின்றான். சகாதேவன் மேல் நோக்கிச் சிந்தனை தேக்கி நிற்கின்றான்.*

**கண்** : *முன்னவன் உலகியலைச் சிந்திக்கின்றான் போலும்! பின்னவன் மெய்ப் பொருளைச் சிந்திக்கின்றான் போலும். பாண்டவருள் தருமனுக்கு இளையவன் வீமன் அல்லனோ!! அவனைக் காணவில்லையே! அவன் மட்டும் விடுபெற்றது ஏன்?*

**பொன்** : *அவன் விடுபெறவில்லை. அவனைப் பார். அம்மை திருவாயில் முன்னே உள்ள பலி பீடத்தின் அருகில் நிற்கின்றான். தண்டேந்திய தனிவீரனாகத் தோற்ற மளிக்கின்றான் அல்லவா!*

**கண்** : *பலி பீடத்திற்குத் தெற்கே வீமன் நிற்கின்றான். அதற்கு வடக்கே மனிதவிலங்கு (புருஷா மிருகம்) நிற்கிறது. அதுவும் தண்டேந்திக் கொண்டு வீமனுக்கு இணையாக நிற்கின்றது.*

**பொன்** : *இதுதான் 'தரும சங்கடம்'*

**கண்** : *'தரும சங்கடமா?'*

**பொன்** : *இதையும் செய்ய முடியாமல் எதையும் செய்ய முடியாமல் இடர்ப்படும்போது 'தருமசங்கடமாக இருக்கின்றது' என்பார்களே! அந்தத் தருமசங்கடம் தான் இது.*

**கண்** : *துரியோதனன் வேண்டுதல் படி வீமன் மனித விலங்கின் பால் கொண்டு வருவதற்காகக் காட்டுக்குப் போய், மனித விலங்கின் குட்டியைத் தாக்கிக் கொல்ல வந்த கரடியிடமிருந்து குட்டியைக் காத்து, மனித விலங்கின் பாலைக் கொண்டு வந்தானே அந்தக் கதைதானே?*

**பொன்** : *ஆம். மனித விலங்கு; 'என் காட்டுள் மனிதன் வருதல் கூடாது. நீ வந்துவிட்டாய். ஆனால் நீ செய்த உதவிக்கு உன்னை மன்னித்துப் பாலும் தந்தேன்; நீ பொழுது விழுவதற்குள் இக் காட்டின் எல்லையைத் தாண்டிவிடுதல் வேண்டும், அப்படித் தாண்டத் தவறினால் உன்னைக் கொன்று விடுவேன்' என்னும் உறுதிமொழியுடன் வீமனை விடுத்தது. பொழுது விழும்போது வீமனின் ஒரு கால் காட்டைத் தாண்டி விட்டது; மற்றொரு கால் காட்டுள் இருந்தது. மனித விலங்கு உன்னை விடமாட்டேன் என்று காட்டுள்*

*இருந்த காலைப் பற்றிக்கொண்டது. ஒரு கால் கடந்ததை வீமன் காட்டி வழக்கிட்டான். ஒரு கால் காட்டுள் இருந்ததைக் காட்டி மனித விலங்கு வழக் கிட்டது. முடிவாகவில்லை. "நாம் பேசித்தீர்க்க முடியாது. வா: உன் அண்ணன் தருமனிடம் நீதி கேட்போம்" என்று மனிதவிலங்கு அழைத்துச் சென்றது. தருமன் வழக்கைக் கேட்டான். தம்பியின் பாசம் ஒருபக்கம், அறம் ஒருபக்கம்; அறத்திற்காகத் தம்பியைப் பலியிடுவதா? தம்பிக்காக அறத்தைப் பலியிடுவதா? "மனிதவிலங்கே உன்வாக்குப்படி இவன் காட்டைக் கடந்துவிடவில்லை; பாதி கடந்தாலும் கடவாமையேயாம். ஆதலால் இவனைக் கொல்லலாம்" என்றான். மனித விலங்கு வியந்தது. "தருமா! நீயே அறிவோன்; நீதியின் காவலன்" என்று பாராட்டி 'உன் நேர்மைக்கு பரிசாக இவனைக் கொல்லாமல் விடுகின்றேன்" என்று விடைபெற்றுப் போனது. இதற்குத்தான் 'தருமசங்கடம்' என்னும் பழமொழி நாட்டில் எழுந்தது.*

**கண்** : *சரி, இந்தச் சிலைகளை இங்கே நிறுத்தி வைத்ததன் நோக்கம் என்ன? பலிபீடத்தின் இப்பாலும் அப்பாலும் இவற்றை நிறுத்தி வைத்தது வருவார் கருத்தைக் கவர்ந்து ஓர் உறுதிப் பொருளைக் கற்பிப்பதாக இருக்கவேண்டும்.*

**பொன்** : *தீமையைப் பலியிட்டு நன்மையைப் பெருக்கப் போகின்றாயா? நன்மையைப் பலியிட்டு தீமையைப் பெருக்கப் போகின்றாயா? மறத்தைப் பலியிட்டு அறத்தை வளர்க்கப் போகின்றாயா? அறத்தைப் பலியிட்டு மறத்தை வளர்க்கப் போகின்றாயா? அடங்காமையைப் பலியிட்டு அடக்கத்தைப் போற்றப் போகின்றாயா? அடக்கத்தைப் பலியிட்டு அடங் காமையைப் போற்றப் போகின்றாயா? நடுவு நிலை மையைக் காப்பதற்காக நயத்தக்க தம்பியையும் பலி கொடுக்கத் துணிந்தானே தருமன்! இவனைக் கருத்தில் வைத்துக் காலடியை இங்கே எடுத்து வை! இதனை வலியுறுத்துவதற்கே இவற்றை இங்கே நிறுத்தினார்கள் போலும்!*

**கண்** : *பலிபீடம் என்பதை ஆடு கோழி பலியிடும் இடம் என்று சிலர் கருதுகின்றார்களே! நீ என்ன நினைக் கின்றாய்?*

**பொன் :** [1] "பற்றாய நற்குரு பூசைக்கும் நன்மலர்

மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்"

*என்று மந்திரமொழி முழங்கும் இடத்தை உயிர் கொலைக்கு இடமுண்டா?*

**கண் :** [2] "பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்"

*என்பதில் 'பூப்பலி' என்னும் விளக்கம் உள்ளபோது தெளிவு ஏற்படத்தானே வேண்டும்? பூப்பலியிட்ட இடத்தைப் புலைப் பலியிடமாக ஏன் கருத வேண்டும்?*

**பொன் :** *இந்த வீமன் திருமுகத்தைப் பார்த்தாயா? திருவளர் தாமரை என்பார்களே எந்த முகத்தை? களங்கமிலா நகை முகத்தைத் தானே! இந்த வீமன் முகத்தில் சிற்பியால் எப்படித்தான். இப்படி முழுநகையைக் காட்ட முடிந்ததோ? கல்லும் சிரிக்குமா? கால மெல்லாம் சிரித்துக்கொண்டிருக்கச் செய்துள் ளானே சீரிய சிற்பி!*

*வீமனுக்குள்ள இயற்கைத் தோற்றமா இது? போரொன்று கிடைத்தது என்னும் பூரிப்பா? வீறு மிக்க உள்ளத்தின் வெற்றிக் களிப்பா? நடுவு நிலை பிறழா நல்லோனுடன் பிறக்கக் கொடுத்து வைத்தவன் நான் என்னும் பெருமிதமா?*

**கண்** : *எதுவானால் என்ன? இவன் நகைமுகம் பகை முகத்தையும் பண்பால் ஈர்த்துக்கொள்ளும் என்பது உறுதி. நம்மைப் பதிலுக்கு நகைக்காமல் இருந்தால் நாகரிகம் இல்லை என்று நயமாகக் கூறுகின்றதே இந்த உயிர்ச்சிற்பம்! வீமா, உன்னை எவன் கண்டான்? இந்தச் சிற்பியைப் போல!*

**பொன் :** *கண்ணப்பா, போதும்; நடப்போமா? தெற்கே திரும்பு. இது சித்தி விநாயகர் கோயில். அடியார் நினைத்த வற்றை நிறைவேற்றி வைக்கும் விநாயகர் சித்தி*

---

*1. திருமந்திரம். 97.*

*2. சிலப்பதிகாரம். 24 : 1 ; 19*

*விநாயகர். இந்த விநாயகருக்கு இருபாலும் அமைந்த தூண்களில் இருக்கும் வீரர்களைப் பார்த்தாயா?*

**கண்** : *ஆம். எவ்வளவு நுணுக்கமாக எண்ணி இக் காவல் வீரர்களைப் படைத்துள்ளார்கள்! வியப்புக் கொள்ளை யாகத் தான் உள்ளது. அம்மை திரு வாயிலுக்குக் காவல் நங்கையர்; அப்பர் திரு வாயிலுக்குக் காவல் வீரர். இந்த யானைமுகப் பெருமான் கோயில் வாயிலுக்குயாளிகள்! யானைக் கடவுளுக்கு 'யாளி வீரரே' காவலாளர் என்று படைத்ததை எண்ணி மகிழலாம்.*

**பொன் :** "சித்தம தாம்ஒரு தறியில் துவக்குறு
சித்திவி நாயகன் இசையைப் பழிச்சுதும்"

*எனப் பாடி ஒரு வணக்கம் போட்டுவிட்டு வடக்கே நட. இங்கே 'குமரர்' எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு முன்னே கிழக்கு நோக்கிச் சுக்கிரீவன் தூக்கிய வலக்கையொடு நிற்கின்றான். இடக்கையைத் தொடையில் வைத்து நிலம் நோக்கியுள்ளான். அவனுக்கு எதிரில் மேற்கு நோக்கி அவன் அண்ணன் வாலியும் எடுத்த வலக்கையுடன் நிற்கின்றான். ஆனால், இடக்கையால் தன் மார்பைச் சுட்டிக் காட்டுகின்றான் அவன் பார்வை விண்ணை நோக்கியுள்ளது.*

**கண்** : *இருவர் முகத்திலும் வேற்றுமையுள்ளது; வாலியின் முகம் கனத்தது; குட்டையானது. சுக்கிரீவன் முகம் ஒல்லியானது; நீண்டது. கால்கழல், காதுத் தொங்கல், வால்மணி எல்லாம் ஒப்பானவை! வாலி என் நெஞ்சைக் கவர்கின்றான்.*

**பொன்** : *ஏன்? அவன் தன் நெஞ்சில் கை வைத்து இருக்கின் றானே அதனாலா? சுக்கிரீவா நீ செய்தது சரியா? நான் செய்தது சரியா? நமக்குள் புகுந்து இராமன் செய்தது சரியா? அவரவர் நெஞ்சில் கைவைத்துப் பார்த்தால்தான் உண்மை புலப்படும் என்கின்றானா?*

**கண்** : *ஏன்? இப்படியும் இருக்கலாமே! இங்கே வழிபட வரும் மக்களே இக் கோயிலுள் இருக்கும் இறைவன் நெஞ்சக் கோயிலுள்ளும் குடியிருக்கின்றான். இந்த நெஞ்சிலே வஞ்சமில்லாமல் இருங்கள் என்று நெஞ்சைச் சுட்டிக்காட்டுகின்றான் என்று கூறலாமே!*

*ஆனால், இவையெல்லாம் நாம் காணும் வாலி இயல்புகள்; கம்பன் கண்ட வாலி இயல்புகள் இல்லை.*

**பொன் :** *கம்பன் கண்ட காவிய வாலிக்கும் இவ் வாலிக்கும் தொடர்புள்ளதா? அது தெரியாதே?*

**கண் :** *கதலிப்பழத்தை ஊடுருவிச் செல்லும் ஊசிபோல வாலியின் மார்பை இராமபாணம் துளைத்தது. அதனைப் புறம் போகவிடின் உயிரும் போமென வாலி கையால் பற்றி நிறுத்திக் கொண்டான். இராமபாணத்தைத் தடுத்து நிறுத்திய வாலியின் ஆற்றலை நினைத்து அமரரும் திகைத்தனர்! மார்பில் பாய்ந்த கணையைப் பற்றிப் பிடித்துக் கொண்டே வாலி பலப்பல நினைத்தான்; பின்னர்ப் பறித்து வைத்துக் கொண்டு "நல்லறந் துறந்தாய்" என்று நகைத்துப் பேசினான். சுக்கிரீவன் "நேசத்தாரைகள் சொரிய" நின்றான்! இக் கம்பன் காட்சியை நினைத்துக் கொண்டே வாலி மார்பில் கை வைத்திருத்தலைக் கருதினால் எவ்வளவோ பொருள் அடங்கியிருத்தல் புலப்படும்.*

**பொன் :** *அடுத்து இருப்பவள் பாஞ்சாலி. இவள் தோற்றம் அருச்சுனனை மயக்கியதில் வியப்பில்லை; ஐவரையும் சேர்த்து மயக்கியதிலும் வியப்பில்லை; இங்கே வருவார் அனைவர் உள்ளத்தையும் கவருமாறு சிற்பம் வடித் திருக்கின்றான் சிற்பி.*

**கண் :** *ஐந்து தட்டு அரவத் திருமுடி இவளுக்கு ஐவரும் தனித் தனி சூட்டினரோ?*

**பொன் :** *இவளுக்கு எதிரே கூனிக்கொண்டு கோணற் பார்வை பார்க்கின்றானே! இவன் முக்கால் அடிக்குக் குறை யாமல் தொங்கும் மீசையைத் தடவிக்கொண்டு இருக்கின்றானே! ஒருகண் சற்றே ஏற, ஒருகண் சற்றே இறங்க உட்சிரிப்பை உதட்டில் வெளிப்படுத்திக் கொண்டு என்ன நினைக்கின்றான்? தன் மீசையைத் தடவும் வேலையே இவனுக்குச் சரியாக இருக்கும்.*

**கண் :** *இப்படி எத்தனைபேர் உலகில் இருக்கின்றார்கள்! அவர்களுக்கு ஒரு முன்னோடி வேண்டாவா?*

**பொன் :** *இந்த மூலையில் கிடக்கும் பெரும்பாறைக் கல் சந்தனம் தேய்க்கும் கல். இப்பொழுது கோயிலுக்குத் தேய்ப்பதற்கு இல்லை. 64 நாயன்மார்களுள் ஒருவரான மூர்த்திநாயனார் பயன்படுத்தியது. மூர்த்தி நாயனார் செய்தி உனக்குத் தெரியுமே! அவர் இறைவனுக்கு நாள்தோறும் சந்தனக் காப்புச் சாத்துதலைக் கடமையாகக் கொண்டார். வேற்று மொழி வேந்தன் ஒருவன் மதுரையைப் பற்றிக் கொண்டு ஆட்சி புரிந்தான். மூர்த்தியார் திருப்பணிக்கு முட்டுப்பாடு வருமாறு சந்தனக் கட்டை கிடையாமல் செய்தான். சந்தனக் கட்டை கிடைக்க முட்டுப்பாடு ஆயினும், முட்டுக்கையைத் தேய்த்துத் தர முட்டுப்பாடு இல்லையே என்று தேய்த்து இறைவன் அருளுக்கு உரியவரானார். அரசும் ஏற்றுத் தொடர்ந்து திருப்பணியும் புரிந்தார்.*

**கண் :** *நாம் இப்படித் தொண்டு செய்ய முடியுமா?*

**பொன் :** *நாம் இப்படித் தொண்டு செய்ய மூர்த்தியார் இல்லையே!*

**கண் :** *மூர்த்தி என்பது மூர்க்கத்தை (இறைவன் திருவுருவை) யுடையது; இறைவன் திருவுருவைத் தம்முள் கொண்டவர் மூர்த்தியார். அவர் திருத்தொண்டை நினைத்தால் என்ன புலப்படுகின்றது? “இறைவன் தந்த உடல் இது. இறைவன் பணிக்கே இஃது உரிமை பூண்டது” என்பது மூர்த்தியார் கொள்கை. இக் கொள்கையைக் கடைப்பிடித்தால் போதுமே!*

**பொன் :** *குமரரை வழிபட்டு விட்டுத் திருவாயிலுக்குச் செல்வோம்.*

**கண் :** **“மறங்குலவு வேலெடுத்த குமரவேள்**
**சேவடிகள் வணக்கம் செய்வோம்.”**

**பொன் :** *இது பரஞ்சோதியார் வாக்குத் தானே!*

**கண் :** *ஆம் திருவிளையாடலில் ‘கறங்குதிரை’ எனத் தொடங்குகின்றதே! அதன் கடைசி அடி இஃதாகும்.*

**கண் :** *பொன்னப்பா நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். வாலி, சுக்கிரீவன், பாண்டவர், பாஞ்சாலி இவர்க ளெல்லாம் இராமாயண, பாரதப் படைப்புக்கள்.*

'பெருமாள்' கோயிலில் தான் இவர்கள் உருவங்களைப் படைத்துப் போற்றுவர். இங்கே 'பெருமான்' கோயிலில் இடம் பெற்றது ஏன்?

**பொன் :** நல்ல வினா எழுப்பினை! நான் சொல்லியிருக்க வேண்டும். மறந்து விட்டேன். நாம் இக் கோயிலுக்கு வரும் வழியில் ஒரு கோபுரத்தைச் சுட்டிக்காட்டிக் கூடலழகப் பெருமாள் கோயில் என்றேன். முன்னாளில் இச் சொக்கர் கோயிலுக்கு வடபால் கரிய மாணிக்கப் பெருமாள் கோயில் என்னும் ஒரு கோயிலும் இருந்தது. அக் கோயில் அழிந்துவிடவே அங்கிருந்த அருமையான இக் கலைச் செல்வங்களும் அழிந்து போகா வண்ணம் தூண்களைப் பெயர்த்து வந்து, இம் மண்டபத்தை எழுப்பிக் கலைமாளிகை யாக்கிவிட்டனர். ஆதலால்தான், இக் கோயிலில் இவற்றைக் காணும் பேற்றை நாம் பெற்றுள்ளோம். இத் திருப்பணி செய்தவர் அபிடேக பண்டாரம், திம்மப்ப நாயக்கர், செட்டியப்ப நாயக்கர் என்போர் ஆவர்.

**கண் :** 'அரியும் சிவனும் ஒண்ணு' என்பது நாட்டுப்புற மொழி. சிதைந்த கோயில் சிலைகளைக் கொண்டு அச் சீரிய கொள்கையை நிலைநாட்டிய நல்லவர்கள் நம் நினைவுக்கு உரியவர்.

## 10. அம்மை திருமுன்

**பொன் :** *இத் திருவாயில் காவலர் இருவருள் வடக்கே இருப்பவர் வடக்கே பார்க்கின்றார். தெற்கே இருப்பவர் தெற்கே பார்க்கின்றார். ஒருவர் வருபவர் எப்படி அடிமைத்திறம் பூண்டு வருகின்றார் என்பதைப் பார்க்கின்றார்; மற்றொருவர் போகின்றவர் எப்படி அம்மையை வணங்கிய பூரிப்புடன் போகின்றார் என்பதைப் பார்க்கின்றார்.*

**கண்** *: இன்னும் சொன்னால் முன்னழகை ஒருவர் பார்க்கின்றார். பின்னழகை ஒருவர் பார்க்கின்றார். இரண்டு பேருமே புற அழகைப் பற்றிக் கருதாமல் அக அழகையே நோக்குகின்றனர்!*

**பொன் :** *அன்னை அங்கயற் கண்ணியின் முன்னர் நின்று ஆடியும் பாடியும் வீழ்ந்தும் விம்மியும் உருகியும் கண்ணீர் பெருகியும் எத்தனை எத்தனை கோடிப் பேர் அருள் பெற்றார்களோ! இன்னும் பெற இருக்கிறார் களோ! இந்த உணர்வுடன் நாம் உள்ளே காலடி எடுத்து வைக்கும் போதே, காணாத இன்பம் கண்டடைந்த பேற்றால் களிப்படைகின்றோம். இந்தச் சிலையில் நிற்கும் அடியார், அடியார்க்கு அடியாராய் வருவார்க்கு வணக்கம் தருகின்றார். இந்த நங்கை சாமரம் வீசி வரவேற்கின்றாள்,*

**கண்** *: இவ் வரவேற்பு 'கரும்பு தின்னக் கூலி தருவது' போன்றது என்னலாம்.*

**பொன் :** *தங்கக் கொடி மரத்தைப் பார். கொடிமரத்தைக் கம்பம் என்போமே. இதுவும் கொடிக்கம்பம்தான். திருவிழாத் தொடங்கினால் நிற்கும் இத்தகைய மண்டபம்* **'கம்பத்தடி மண்டபம்'** *என்பர். இதனைச் சொக்கர் முன்னும் காணலாம்.*

*படம்*

*அம்மன் கோயில் இரண்டாம் திருச்சுற்று இது. இதில் தென் கிழக்கு மூலையில் திருப்பணியால் அழியா வாழ்வு கொண்ட திருமலைமன்னர் நின்று கும்பிட்ட கையுடன் கோலம் கொண்டுள்ளார். இவரை அடுத்து இவர் தம் அறக்கட்டளை அறை உள்ளது. அம்மையின் திருவருளை நாடி ஆர்வத்துடன் நிற்பது மட்டு மல்லாமல் அம்மைக்குச் செய்யும் அறங்கள் முட்டுப்பாடு இன்றி முறையாக நடைபெறுகின்றன வா என்பதையும் கண்காணிக்கிறார்! சலவைக் கல்லால் கட்டப்பெற்ற இது கொலுமண்டபம். ஒன்பான் இரவு (நவராத்திரி) விழாவின் போது இங்கே கொலு வைக்கப் பெறும்.*

*இத் திருச்சுற்றின் இத் தென்மேற்கு மூலையிலே பார். மூத்த பிள்ளையார் உள்ளார். இரட்டைப் பிள்ளை யார்கள் இவர்கள்: தெற்கே இருப்பவர் உச்சிட்ட பிள்ளையார். வடக்கே இருப்பவர் கூத்தப் பிள்ளையார்.*

**கண்** : *இஃது என்ன? உச்சிட்ட பிள்ளையார்;*

**பொன்** : *இதனைத்தான் சிற்பியே காட்டியுள்ளாரே! பிள்ளை யார் ஒரு மங்கையை அணைத்துக்கொண்டு இருக்க வில்லையா? அவளை முத்தமிட்டிருக்கிறார். முத்த மிட்டால் 'உச்' என்னும் ஒலி உண்டாகுமே! அதனால் உச்சிட்ட பிள்ளையார் ஆகிவிட்டார். அடுத்தவரோ கூத்தாடும் கோமானாக விளங்குகிறார்.*

**கண்** : *சித்தி என்பது எடுத்த செயலில் வெற்றி; அதனை அருள்பவர் சித்தி விநாயகர்; புத்தி என்பது அறிவு அல்லது ஞானம். அதனை அருள்பவர், 'புத்தி விநாயகர்;' இச் சித்தி புத்திகளைப் பெண்களாக்கி அவர்களுக்குப் பிள்ளையாரை மணவாளராக்கிய பின் உச்சிட்ட பிள்ளையார் ஆவதில் வியப்பில்லையே!*

**பொன்** : *இந்த வடமேற்கு மூலையில் கோயில் கொண்டவர் முத்துக்குமரர். வள்ளி தேவசேனை உடனாகிய ஒருவராய் விளங்குகிறார். "பொருப்பது பொடிபட விடுத்திடு கைவேலா இருப்பிடம் உனக்கு எது?" என வினாவித் "திருப்புகழ் படிப்பவர் மனத்தினில் இருப்பாம்" என அவன் விடை அருள்வதாகக் கூறிய அருணகிரியார் பாடிய இன்னிசைப் பாடல்கள் இங்கே சலவைக் கல்லில் வெட்டி வைக்கப்பட்டுள்ளன.*

*அம்மை திருக்கோயில் வாயில் முன்னுள்ள இந்த* ***ஆறுகால் மண்டபம்*** *மிகப் புகழ் வாய்ந்தது. அப் புகழைச் சுட்டும் கல்வெட்டையும் ஓவியங்களையும் பார்த்தாயா? இந்த இடத்திலேதான்* ***குமரகுருபரர்*** *பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருமலை மன்னர் முன்னிலையில் அரங்கேறியது.*

**கண்** : *ஆம்! அன்னை ஒரு செல்வியாக வந்து திருமலை மன்னர் கழுத்தில் இருந்த முத்து மாலையை எடுத்துக் குமரகுருபரருக்குச் சூட்டிய செய்திதானே! அது நிகழ்ந்த இடம் இதுதானா?*

**பொன்** : *குமரகுருபரர்க்கு அருளிய கொழுந்தமிழ் அன்னை அங்கயற் கண்ணியை உள்ளார்ந்த அன்போடு அள்ளூறி வழிபடலாம். "வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" என்பது காதலுக்கு மட்டுமா உரியது? பத்திக்கும் உரிமை பூண்டதுதானே!*

*இங்கே தெற்கு மூலையில் மூத்தபிள்ளையாரும் வடக்கு மூலையில் இளையபிள்ளையாரும் அமர்ந் துள்ளனர். அவர்கள் ஒரு கும்பிடு போட்டுவிட்டு அம்மை முன்னே வருவோம்.*

*உலகெலாம் திருவிழியால் படைத்துக் காக்கும் அன்னையின் முன்னே நின்று, இவ்வன்னை என்ன வேண்டுகிறார் கேட்டாயா?*

"கொண்டவர்கள் கொடுத்தவர்கள்
அண்டியவர்கள் அடுத்தவர்கள்
எல்லா மக்களும்
நல்லா இருக்கணும்"

**கண்** : *தமிழ்த் தாய்க் குலத்திற்கு இந்த நெஞ்சவிரிவு கற்று வந்ததா? கற்பித்து வந்ததா? வழிவழியாக வந்து ஆட்சி கொள்ளும் வரப்பேறு இது. உலக நோக்கு, ஒருமைப்பாடு என மேடையில் கூச்சல் போடுகிறோம். கீழே இறங்கியதும் நிலைமையிலும் கீழே இறங்கி விடுகிறோம். இந்த அன்னை எவ்வளவு எளிமையாக இயல்பாகக் கூறிவிட்டார். இவர் வாழ்க! இவர் வேண்டுதல் வாழ்க!*

**பொன்** : *பசுங்கிளியைத் தாங்கி பைங்கிளியே, அன்னையே, எங்கள் வாக்கு உனக்கு இனிக்குமோ? இனிக்காதோ?*

*உன் அருட்பார்வைக்கு ஆளாகி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினாரே நின்னருட் செல்வம் குமரகுருபரர், அவர் திருவாக்கால் உன்னை வழிபடுகிறோம்.*

**இருவரும் :** "தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறும்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம் வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக! வருகவே!"

**பொன் :** *கண்ணப்பா, அம்மை கோயில் கொண்ட இம் மண்டபத்திலேயுள்ள தூண்களைப் பார்த்தாயா? ஒன்றிலாவது எவர் சிலையாவது உள்ளதா? முகடும் தூணும் கலையால் அழகு செய்யப்பட்டுள்ளன! சிலையால் அழகு செய்யப்படாமை ஏன்? கல்லிலே மணி செய்து இங்குக் காட்டும் கலைவல்லான், என்ன எண்ணத்தால் இம் மண்டபத்தில் சிலைகளை நிறுத்தவில்லை? மணமேடையை அழகு செய்யாமல் மற்றை இடங்களை அழகு செய்வார் உண்டா?*

**கண் :** *இவள் அழகைப் பார்க்கவே ஈராயிரம் கண்கள் வேண்டியிருக்க இங்கே வேறு எவரழகைப் பார்க்க முடியும்?*

**பொன் :** "முடிகண்டார் முடியே கண்டார்
முழுநலம் அருளிச் செய்யும்
அடிகண்டார் அடியே கண்டார்"

*என்று கூறுவதை அல்லாமல், முழுதுறக் காண முடியா எழில் வடிவின் முன்னர் எதனை வைத்தாலும் எடுப்பாக இருக்க முடியுமா? 'வெயிலிடை வைத்த விளக்குப் போல' ஒளி இழக்க வேண்டாவென்று கருதியே எச் சிலையையும் எழுப்பாது விட்ட திறமை நினைதோறும் இன்பம் பெருக்கும்.*

**கண்** : *இரண்டு செய்திகளைக் கேட்கப் போகிறேன். அன்னை திருக்கையில் கிளியை வைத்தது ஏன்? அவள் அடைக்கலமும் அருளலும் ஆகிய அபய வரதங்களைக் காட்டாமல் இருப்பது ஏன்?*

**பொன்** : *கிளி, பறவையுள் வனப்பானது; மழலை பொழிவது; பிள்ளை என்று பெருமையது; அஃது அனைத்துயிர்க்கும் ஓர் அடையாளம். உயிர்களெல்லாம் தாய் அருளாலேதான் இறைவனோடு இரண்டறக் கலத்தல் வேண்டும். தாய், கிளியைத் தோளில் தாங்கிக் கொள்ளுவதன் வழியே அதனை வெளிப்படுத்துகிறாள். 'அபயவரதம் இல்லை என்றாயே, அவை கிளியிலேயே அடங்கிவிட்டன.*

*இன்னொன்று; அன்னை **அங்கயற்கண்ணி;** அவள் அபய வரதத்தைத் திருவிழியாலே வழங்குபவள். ஆதலால் அவள் அருள் நோக்கிலேயே அடங்கி விட்டன அபயவரதங்கள்.*

*முழு முதல்வி அவள்; ஆதலால் அவள் மற்றை மூர்த்தங்கள் போல அபயவரதங்களைக் காட்டுவாள் அல்லள். அவள் திருவடிப் பேறு ஒன்றே அடியார்க்கு அபயவரதமாகலின் அவற்றைக் கைகளால் காட்டினாள் அல்லள்.*

**கண்** : *இனிய செய்திகள் இவை. நாம் அம்மையின் கண் கொள்ளா அழகை நெஞ்சில் தேக்கி வழிபட்டுச் செல்வோம்.*

**பொன்** : *இஃது, "அருள்சூல் கொண்ட அங்கயற்கண் அமுதே தாலோ தாலேலோ" எனத் தாலாட்டுப் பாடும் பள்ளியறை. சொக்கர் கோயிலை நண்பகல் உணவுக்குப் பின்னே வந்து பார்த்துக் கொள்ளலாம். கோயிலுக்கும் நடைசார்த்தும் பொழுது, நமக்கும் ஓர் இடைவேளை!*

## 11. முக்குறுணிப் பிள்ளையார்

**பொான் :** *நாம் கிளிக்கூட்டு மண்டபத்தில் இருந்து இக் கோபுர வாயிலின் வழியே சொக்கர் கோயிலுக்குப் போக வேண்டும். இது முத்துவெளி; இது முத்துலிங்கம்; இது சின்னீசர் கோயில்; இக் கோபுரத்திற்கு நடுக்கட்டுக் கோபுரம் என்பது பெயர். வா! அன்னையை வழிபட்டு அப்பனிடம் வருவார்க்கு அருள் பாலிப்பவர் போல எடுப்பாக அமர்ந் திருக்கிறார் மூத்த பிள்ளையார். இவரை முக்குறுணிப் பிள்ளையார் என்பர்.*

**கண் :** *"மத்தள வயிறன்" "மற்பொரு திரள்புய மதயானை" என்று அருணகிரியார் பாடியதை மெய்ப்பிக்கும் திருவுரு! இதற்கு முக்குறுணிப் பிள்ளையார் என்பதா பெயர்?*

**பொான் :** *ஆம்! எங்கள் ஊரில் 'பதக்கன்' என்று பட்டப் பெயர் ஒருவருக்கு இருப்பதை நீ அறிவாயே, அதுபோல்.*

**கண் :** *அவன் என்றோ ஒருநாள் பதக்குக் கம்புத் தவசத்தை (எட்டுப்படியை) இடித்துச் சோறாக்கிச் சாப்பிட்டு விட்டானாம். அதுமுதல் அவனுக்குப் 'பதக்கன்' என்று பெயர் ஏற்பட்டு விட்டதாம்! இவருக்கு அப்படி என்ன வந்தது?*

**பொான் :** *பிள்ளையார் சதுர்த்தி யன்று இவர்க்கு முக்குறுணி (12 படி) அரிசிமாவைப் பிசைந்து ஒரு கொழுக் கட்டையாக்கிப் படைப்பது வழக்கமாம். அதனால் முக்குறுணிப் பிள்ளையார் எனப் பெயர் உண்டா யிற்றாம். இத் திருவுருவம் திருமலை மன்னர், மாரியம்மன் தெப்பக்குளம் வெட்டும் போது கண்டெடுக்கப் பெற்றதாம். அதனை எடுத்துக் கொண்டுவந்து இங்கே வைத்தனராம்.*

***கண் :*** "கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் - அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை - கடிதேகும்"

***பொன் :*** *நல்வினையிலே நாம் ஊன்றிவிட்டால் தீவினை தானே கழன்று ஓடிவிடும்! வா, மேலே போகலாம்.*

## 12. சொக்கர் திருமுன்

**பொன் :** இது சொக்கர் கோயில் இரண்டாம் திருச்சுற்றாகும். இதன் வெளிப்புறச் சுற்றுச் சுவர் '**சுந்தரபாண்டியன் மதில்**' என்று வழங்கப்படுகின்றது. இதனைக் கட்டியவன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216 - 1238) இதன் உட்சுற்றுச் சுவர் '**கபாலி மதில்**' எனப்படும்.

**கண் :** ஓ! ஓ! "கபாலிநீள் கடிம்மதில் கூடல் ஆலவாயிலாய்" என்று ஞானசம்பந்தர் பாடுகின்றாரே!

**பொன் :** ஆம். அந்த மதில்தான்! இது ஞானசம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட பழைமையுடையது என்பது புலப்படும்! இந்த மண்டபத்தைப் பார்; இதற்குக் '**கம்பத்தடி மண்டபம்**' என்பது பெயர். '**நந்திமண்டபம்**' என்றும் கூறுவர்.

**கண் :** சரிதான். மண்டபத்தின் நடுவே தங்கக் கொடிமரம் பளிச்சிடுகின்றது. நந்தியும் பலி பீடமும் அழகுக் காட்சி வழங்குகின்றன. பெயர் சரிதான்; ஆனால் இவ்விடத்தை விட்டுப் பெயர்வதற்கு மனமில்லை! உட்கார்!

**பொன் :** தேன் அருந்த மாட்டாமல் தெய்வமலர் சிதைந்து மீனருந்தித் திரியும் நாரை! அப்படியே நம் வாழ்வும் கழிகின்றது. இத் தெய்வக்கலையைக் கண்டு களிப் புறாக் கண்ணும் கண்ணோ! எத்தகைய வியப்பான படைப்பு! வேலைப்பாடு!

**கண் :** அப்பா, பொன்னப்பா! ஒதுங்கி ஓரமாக அமர்ந்து ஒவ்வொரு தூணையும் பார்த்துப் பேசுவோம்!

**பொன் :** நல்லது. சொக்கர் திருவாயில் முன்னே தென்பால் நான்கு தூண்கள்; வடபால் நான்கு தூண்கள்; ஆக எட்டுத் தூண்களால் ஆகிய எழில் மண்டபம் இது!

**கண்** : *எட்டமுடியாக் கலைச் செல்வத்தை எட்டிப்பிடித்த அந்தப் படைப்பாளி 'எட்டு' என்று ஏவுவது போல் படைத்தானே! அதனைப் பாராட்டவேண்டும்.*

**பொன்** : *ஆம்! எண்குணத்தானை எண்ணி எண்ணித் திளைத்து அவள் திருவாடலில் தோய்ந்த உள்ளம் 'எண்' தூணைப் படைத்து எண்ணரும் பொருளை 'எண்ணு' என்று ஏவிற்றே அதையும் எண்ணிப் பாராட்டலாம்.*

**கண்** : *அம்மைக்கு எண்சத்தி (அட்டசத்தி) மண்டபம் கண்டது, இந்த அப்பனுக்கு எண்கால் மண்டபம் கண்ட படைப்பின் பயனே என்பதையும் எண்ணி மகிழ வேண்டும்!*

**பொன்** : *தென் பக்கத்தின் முதல் தூணின் கிழக்குப் பக்கத்தில் அழகு விளங்க அமைந்த காட்சியைக் காண்! இஃது என்ன கோலம்!*

**கண்** : *அம்மையின் திருமணக் கோலம்தானே! கோனாட்சி செய்தவள் இம் மீனாட்சி! இங்கே தேனாட்சி செய்கிறாள்! என்ன தெவிட்டாத இன்பக் காட்சி!*

**பொன்** : *தெய்வப் பெண்ணரசியாகியவர்; திக்கெல்லாம் வென்ற திறமிக்க வீரத் திருவினர்; ஐயோ! மணக்கோலம் கொண்டவுடன் என்ன நாணம்! என்ன நாணம்! நாணப் புன்னகை எப்படி நளினமாக விளையாடுகிறது!*

**கண்** : *படக்கருவியால் படம் பிடித்துக் காட்டினால் கூட இப்படி அமையுமோ என்னவோ! அப்படி இயற்கையாய் அமைந்துள்ளது!*

**பொன்** : *முழுமுதல் இறைவன் திருக்கையைப் பிடித்த பெருக்கு வகை இப்படி இதழ்க் கடையில் விளையாடுவதைக் காணக் காணப் பேருவகைதான்! நமக்கே இவ்வளவு உவகையானால் அந்த அம்மை உடன்பிறந்து தம் கடனை இனிது முடிக்கக் காத்திருக்கும் பெருமாளுக்குப் பேருவகை வாராமல் இருக்குமா? பெருமாள் உவகையை அருமையாக வெளிப்படுத்திய சிற்பக்கோமான் சிவபெருமானை எதுவுமே நடவாதவர் போலச் 'சிவனே' என்று இருக்கப் படைத்திருக் கிறானே!*

**கண்** : *தளிர்க்கையைப் பற்றும்போதும் தவவுருவாகி இருக்கத் தவத்தால் தானே முடியும்! அதனை அழகாகக் காட்டியிருக்கிறான் சிற்பி! இருந்ததை இருந்தபடி காட்டவல்ல இச்சிற்பி 'பெரிய ஆள்' தான்!*

**பொன்** : *நாணிக்கோணி நிற்கும் நங்கையாம் தங்கையின் திருக்கையைக் கூத்த நம்பியின் திருக்கையோடு இணைத்து நீர்வார்க்கிறார் நெடுமால்! அவர் கையில் வைத்துள்ள நீர்க்கெண்டி பெரிதாகி அழகினைக் குறைத்து விடாவண்ணம் கருத்துடன் மிகச் சிறிதாக்கிப் படைத்தது பெருங்கலை நுட்பமாம்.*

**கண்** : *மணக்கோலத்தில் நிற்கும் அம்மைக்குப் பூட்டாத அணி என்ன? எங்கெங்கும் அணிகலங்கள்! மணவாளப் பிள்ளையின் அணிகலங்கள்தாம் எத்தனை! மணம் கொடுத்து மகிழும் அழகர்க்குப் பூட்டியுள்ள அணிகலங்கள் தாம் குறைவா?*

**பொன்** : *முடிமுதல் அடிவரை மூவருமே அழகுக்கு அழகு செய்யும் அணியாளராகவே விளங்குகின்றனர்.*

**கண்** : *இந்நாள் திருமண நிகழ்ச்சிக்குப் போகும் கிழவன் கிழவியர் செய்யும் ஒப்பனையும், உடுத்தும் உடையும், பூட்டும் அணியும் பார்த்தால் போதுமே! சிற்பியும் இச் சமுதாய வாழ்வில் ஈடுபட்டிருந்தவர் தாமே!*

**பொன்** : *சிற்பி தாமறிந்த எந்தவோர் அணிகலத்தையும் இவர்க்குப் பூட்டி அழகு பார்க்கத் தவறேன் எனத் திடப்படுத்திக்கொண்டு வடித்தது போலவே விளங்கும் சிற்பங்கள் இவை. சொற்சிலையாகத் திகழும் இக் கற்சிலையளவு பொன்னைக் குவித் தாலும் இப்படி உயிரோவியமாகக் கிடைக்குமா!*

**கண்** : *இத்தகைய உயிர்க்கலைக்கு விலைபேசுவது என்பது எண்ணத்தின் உயர்வின்மையைக் காட்டும் ஒன்றாக இருக்குமேயன்றி உண்மையாக மதிப்பிடும் மதிப்பு ஆகாது. அம்மன் கோயில் முகப்பிலே ஏற்பட்டது ஓர் ஐயம்! அதனைப் பின்னே கூறலாம் என்றாய்! இந்த இடத்தில் கூறலாம் அல்லவா!*

**பொன்** : *மறவாமல் கேட்டாய்.*

**கண்** : *அறிந்துகொண்ட ஒருவனுக்கு மறதி வரலாம்; அது குற்றமில்லை; அறிந்துகொள்ள வேண்டியவனுக்கு மறதி வரலாமா?*

**பொன்** : *தங்கை மீனாட்சி திருமணத்தைக் காண அண்ணன் அழகர் வருகிறார். அவர் வருமுன்னரே திருமணம் முடிந்து விடுகிறது; அழகருக்குக் கோபம் வந்து விடுகிறது. வந்த வழியே திரும்புகிறார். சித்திரைத் திருவிழாக் காட்சி இது. ஆனால் இச் சிற்பக் காட்சி அப்படி யில்லையே! அழகர் நீர் வார்த்துத் தந்து, தங்கை திருமணத்தை முடித்து வைக்கிறாரே!*

**பொன்** : *மீனாட்சி திருமண ஓவியம், சுதை, சிற்பம், வரலாறு எல்லாமும் இப்படித்தான் காட்டுகின்றன. ஆனால், திருவிழாவில் மட்டும் திருப்பமாகிவிட்டது!*

**கண்** : *திருவிளையாடல் திருமணப் படலம் "மாயோன் கரகநீர் மாரி பெய்தான்' என்று கூறுகிறதே!*

**பொன்** : *ஆமாம்! இம் மண்டபம் கி.பி. 1564 இல் கிருட்டிண வீரப்ப நாயக்கரால் கட்டப்பெற்றது. ஆதலால் இக் காலத்திற்குப் பின்னர்த் தான் புதுக் காட்சி தொடங்கி யிருக்கலாம். திருமலைநாயக்கர் காலத்தில் மாசியில் நடந்த இப் பெருவிழா பயிர்த்தொழிலாளர் பருவ நிலை கருதிச் சித்திரைக்கு மாற்றி வைக்கப்பெற்றது. இது போலவே நிகழ்ச்சிகளும் மாறியிருக்க வாய்ப்பு உண்டு.*

**கண்** : *திருமணக் காட்சி சொக்கர் திருமுன்னிலையில் உள்ளதே? இதற்குக் காரணம் என்ன?*

**பொன்** : *அம்மை போர்க் கோலம் கொண்டு சென்றார். அப்போர்க் கோலமே மணக்கோலம் கொள்ளுதற்குக் காரணமாயிற்று. அஃது இறைவன் திருமுன்னிலையில் தானே நடந்தது. அன்றியும் இறைவியை இறைவன் வெற்றி கொண்டதால் தானே திருமணம் நிகழ்ந்தது. ஆதலால் இறைவன் வீரச் செயல்களை யெல்லாம் ஒருங்கே விளக்கிக் காட்டும் இவ்விடத்தில் இச் சிற்பமும் வைக்கப் பெற்றது.*

**கண்** : *"குன்ற விலாளியை வென்ற தடாதகை" என்கிறாரே குமரகுருபரர்?*

**பொன் :** *ஆம்! அப்படிச் சொல்லவும் வேண்டுவதே. ஏனெனில் தவக்கோலம் கொண்டவரை மணக்கோலம் கொள்ள வைத்தவர் அன்னை மீனாட்சி ஆதலால்.*

**கண் :** *சரி; மணக்கோலம் இங்கே இருக்கப் பள்ளியறை அம்மை திருமுன்னே இருக்கிறதே!*

**பொன் :** *அரசன், அரசியைத் தேடி அந்தப்புரத்திற்குச் செல் வானே அன்றி, அரசி அரசனை நாடி அரண்மனைக்கு வரமாட்டாளே! ஒரு சிற்றரசுக்குரிய இந்த முறை இப்பேரரசுக்கு மட்டும் இல்லாமல் போகுமா?*

**கண் :** *நிறையப் பேச வேண்டும். ஆனால், இன்னும் நிறையப் பேசவேண்டிய காட்சிகள் கொள்ளை கொள்ளை யாய் இருத்தலால் குறைத்துக் கொள்ள வேண்டியதே.*

**பொன் :** *மணமக்களைக் கிழக்குப் பார்த்து அமர வைத்துத் திருமணம் நடத்துவதே நாட்டு நடைமுறை. ஆதலால் இத் திருமணக் காட்சியும் தூணில் கிழக்குப் பார்த்திருக்க அமைக்கப்பட்டுள்ளது.*

**கண் :** *'போர்' என்பது 'பொரு' - ஒப்பு - என்னும் சொல்லடி யாகப் பிறந்த சொல் ஆகும். மணமும், பிறப்பு குடிமை முதலிய பத்துவகை ஒப்புகளை நோக்கி நிகழ வேண்டும் என்பார் தொல்காப்பியர். இச் சிற்பியின் நோக்கும் அதுவாகவே இருந்துள்ளது. சொக்கரும் அழகரும் இடப்பாலும் வடப்பாலும் இருக்க, இடையே அம்மை இருக்கிறார். இருவர் உயரத்திற் கும் அவர் இணையாக இல்லை. கழுத்து மட்டமே உள்ளார். சிற்பி கைவண்ணத்தால் அவர்கள் மட்டத் திற்கு அம்மையையும் ஆக்கிவிட்டார் பார்த்தாயா!*

**பொன் :** *இறைவன் அம்மையப்பனாக நிற்கும் போது அம்மை ஒத்த உயரத்தில் தானே நிற்கிறார். அம்மை அப்பனாகும் நிகழ்ச்சித் தொடக்கம் தானே திருமணம். அதனைச் சிற்பி மனம் கொண்டிருக்கலாம்! இத் தூணின் வடக்குப் பக்கம் பார். இங்கே வீற்றிருப்பவர் நிலாவழகர் - சோமசுந்தரர். இவர் முகத் தழகைச் சொல்ல வேண்டியது இல்லை. கால் முட்டின் அழகையும் மொழியின் அழகையும் பார்!*

**கண் :** *'கால் முட்டுக்குக் காணுவானா?' என்னும் பழ மொழியை நினைவூட்டும் அழகு வடிவம்.*

**பொன் :** *அங்கயற் கண்ணியை மணங்கொண்ட அண்ணல் சோமசுந்தரர்! ஆதலால், மணக்காட்சி அமைந்த தூணிலேயே அவர் அரசு வீற்றிருக்கும் காட்சியையும் அமைத்தார்.*

**கண் :** *சரி! சரி! நன்றாகப் புரிகிறது. பரஞ்சோதியார்,*

"அதிர்விடைக் கொடிஅங் கயற்கொடி யாக
அராக்கலன் பொற்கல னாகப்
பொதியவிழ் கடுக்கை வேம்பல ராகப்
புலியதள் பொலந்துகி லாக
மதிமுடி வைர மணிமுடி யாக
மறைகிடந் தலம்புமா மதுரைப்
பதியுறை **சோம சுந்தரக்** கடவுள்
பாண்டிய னாகிவீற் றிருந்தான்"

*என்பதை விளக்கும் சிற்பம் இது.*

**பொன் :** *இதே தூணின் தென்பாகம் இருப்பவர் முப்புரம் எரித்தவர் (திரிபுராந்தகர்). தேரின்மேல் ஏறிக் கடு விரைவுடன் செல்கிறார்; கடுகடுப்பும் பளிச்சிடுகிறது.*

**கண் :** *முப்புர அரக்கராகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்பார் செருக்கை அழிக்க முனைந்தார் இறைவர்; ஆனால் தேவர்கள் தங்களால்தான் முப்புற அழிவு நிறைவேறுவதாக எண்ணிச் செருக்கினார்; செருக்கை அழிக்க வந்தவர்க்குச் செருக்கு வேண்டுமா? சிரிப்பால் இருவகைச் செருக்கையும் அழிக்க நினைத்தார்; சிரித்தார்; நெற்றிக் கண்ணால் முப்புரத் தாரை எரித்தார்; தேவர்கள் செருக்கை ஒடுக்கினார்; இந்தக் காட்சியில் முப்புரத்தாரைக் காணவில்லையே!*

**பொன் :** *போருக்குப் புறப்படும் காட்சி இது! இங்கேயே முப்புர அரக்கரைக் காட்டல் தகுமா? எதிர்த்தூணில் பார்; முப்புர அரக்கரும் உள்ளனர்; எட்ட இருந்து எரித்ததை இப்படிக் காட்டத் திட்டமிட்டது சரிதானே!*

**கண் :** *மிகச் சரி!*

"வெள்ளி இரும்பு பொன்னெனப் பெற்ற
மூன்றுபுரம் வேவத் திருநகை விளையாட்டு
ஒருநாள் கண்ட பெருமான் இறைவன்"

என்னும் கல்லாடர் வாக்கால் கண்ணுதல் பெருமானை நினைவோம்.

**பொன் :** இந்த இரண்டாம் தூண் இறைவன், காலனை அழித்த காட்சியை விளக்குகிறது. காலன் கழுத்தில் இறைவன் கால்விரல் என்ன அழுத்து அழுத்துகிறது! சரியாகச் சங்கைத் தேர்ந்தெடுத்து மிதிக்கிறான். காலன் கால்களில் ஒன்று கீழே கிடக்கிறது. மற்றொன்று மடிந்து மேலே கிடக்கிறது.

இங்கே பார்; தூணின் கிழக்குப் பக்கத்தில் உள்ள சிவலிங்கத்தின்மேல் கயிறு கிடக்கிறது. காலன் மார்க்கண்டனுக்கு வீசிய கயிறு இது. மார்க்கண்டன் இலிங்கப் பெருமானைக் கட்டிப் பிடித்து இறுக்கிக் கிடக்கிறான். காலனைக் காலால் மிதித்துக் காலகாலனாகக் காட்சி வழங்குகிறான் இறைவன்.

**கண் :** இக் காட்சியை சேக்கிழார்,

"வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேல் சீறி
வருங்காலன் பெருங்கால வலயம் போலும்
செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரிய கோலம்
சிதைந்துருள உதைத்தருளும் செய்யதாளா"

என்று பாடுகிறார்.

**பொன் :** இவரைப் பார்! இவர் சுகாசனர்! இத் தூணின் உட்புறத்தில் அமர்ந்துள்ளார்.

**கண் :** இவரைப் பார்த்தாலே சுகாசனர் என்பது புரிகின்றது. "சும்மா இருக்கும் சுகம் அரிது" என்றார் தாயுமானவர். இப்பொழுது பார்த்தால் 'சும்மா' பெருகிவிட்டது! பத்திரத்திலும் "சுகசீவனம்" என்று எழுதி உறுதிப் படுத்திக் கொள்கிறார்கள்! தாயுமானவர் சொன்ன 'சும்மா'வும் 'சுகமும்' நாணித்தலை குனியத்தான் வேண்டும்!

**பொன் :** படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்யாமல் செய்து, தூங்காமல் தூங்கி - ஆடல்புரியும் அம்பலவன் இப்படிச் சுகா சனராக விளங்குவதும் இயற்கைதான்!

**கண்** : *ஆம்! விரைவாகச் சுழலும் காற்றாடி, சுழல்வதாகத் தெரியவில்லை! ஓயாது விரைந்தோடும் நிலம் ஓடாதது போல் தானே இருக்கின்றது! இவற்றைப் படைத் தவர்க்கு, இவ்வாறிருக்க இயலாதா என்ன! சுகாசனரை எவரும் எளிதாகத் தொல்லை தரக்கூடாது என்று உட்புறம் வைத்தமை நல்ல பொருத்தம் அன்றோ!*

**பொன்** : உண்மைதான். இம் மூன்றாம் தூணில் கூத்தப் பெருமான் எடுப்புமிக்க ஆடல் அரசராக விளங்கு கிறார். இவர் ஆட்டத்திற்குத் தக்கவாறு 'நந்தி' குடமுழாத் தட்டுகிறார்.

**கண்** : *ஆடுவார் ஆடினால், பாடாரும் பாடுவார்; தாளம் போடாரும் போடுவார்; குடமுழா நந்தீசன்' என்னும் புகழ்பெற்ற இவர் குடமுழாத் தட்டக் கேட்க வேண்டுமா? "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே!"*

**பொன்** : இத் தூணின் வடக்குப் பக்கத்தில் இருப்பவர் காமனை எரித்தவர் (காமதகனார்). பெருமான் தவத்தைக் கெடுக்கத் துணிந்தான் காமன். தன் மலரம்புகளை ஏவினான். அவன் அடாச் செயலை அறிந்து நெற்றிக் கண் நெருப்பால் எரித்தார். இதனை விளக்கும் காட்சி இது.

**கண்** : *இதனைத்தானே ஒரு புலவர், "கல்லால் எறிந்தான் ஒருவன்; வில்லால் அடித்தான் ஒருவன்; பிரம்பால் அறைந்தான் ஒருவன்; செருப்பால் உதைத்தான் ஒருவன்; இவர்களையெல்லாம் நல்லவர்கள் என்று விட்டுவிட்டு மலரால் எறிந்தவனை எரித்தது ஏன்?" என்று வினாவினார்.*

**பொன்** : பெருமான் நெற்றிக்கண் வெப்பத்தை வெளிப்படுத்தத் தக்க வகையில் வெளிறிப்போன - சாம்பல் பூத்த கல்லைத் தேர்ந்து வடித்த தேர்ச்சி எவ்வளவு அருமை யானது!

**கண்** : *கல்லிலே வேலை செய்யும் திறமை மட்டும் போதாது. எந்தக் கல்லை எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்னும் தேர்ச்சியும் சிற்பிக்கு வேண்டும் என்பதை விளக்கும் சிலைகளுள் இஃதொன்றாகும். இத் தேர்ச்சியாளன் பாராட்டுக்குரியவன்.*

**பொன் :** *இந் நான்காம் தூணின் தென்பால் நிலவணிந்தார் (சந்திரசேகரர்) உள்ளார். தக்கன் வேள்வியில் பங்கு கொண்ட நிலவைத் தேய்த்துத் தலையில் முடித்துக் கொண்ட கதையை விளக்குவது இது.*

**கண் :** *புன்முறுவலுடன் விளங்கும் அப்பன் அருகே பூத்த மலராக விளங்கும் அம்மை இணைக்கு இணையான படைப்பு!*

**பொன் :** *இத் தூணின் மேல்பக்கம் இருப்பவர் காளைக் கருளியோர் (ரிஷபாந்திகர்).*

**கண் :** *காளையின் கழுத்து எங்கே இருக்கிறது! அதன் தலை தனியே எங்கே இருக்கிறது! அவ்வளவு வளைத்து அருமையாகப் பெருமான் அன்புக்கு உரியதாகித் திகழ்கிறது! இப்பெயர் இவர்க்கு ஏன் வந்தது?*

**பொன் :** *ஊழிமுடிவில் தானும் அழிந்துபட நேருமே என அறம் நினைத்தது. தான் அழியாதிருக்க விரும்பியது. அதற்கு வழியென்ன? அழியாப் பொருளை அடுப்பதே வழியென்று இறைவனிடம் சென்று தன்னைக் காளையூர் தியாக்கிக் கொண்டு அருள்புரிய வேண்டியது. பெருமான் அதனை ஏற்றுக்கொண்டு அருளினார்.*

**கண் :** *நல்லது! அரிதில் அரிதெனப் பெரியாரைப் பேணிக் கொண்டது.*

**பொன் :** *இவர் அரி அயன் அறியா அரனார் (இலிங்கோத் பவர்).*

**கண் :** *அண்ணாமலையாரா?*

**பொன் :** *ஆம்! அரி அடிதேட, அயன் முடிதேட, இருவருக்கும் பிடிபடாமல் இருந்த பெருமான் இவர். இலிங்கத்தில் இருந்து வெளிப்பட்டுவரும் தோற்றம் இது. மேலே பார்; அன்ன ஊர்தியில் நான்முகன் உள்ளான்; கீழே பன்றியின் படலம் காட்சியளிக்கிறது. திருமால் கூப்பிய கையராய் நிற்பதைப் பார்.*

**கண் :** *பன்றி வீழ்ந்து கிடக்கும் நிலை கவிஞனின் எள்ளல் நகைச்சுவையைக் காட்டுகிறது.*

**பொான் :** *இவர் கயிலாயப் பெருமான் (கயிலாய ஆரூடர்). மலையிலேயிருந்து கொண்டுவந்த கல்லிலே மலையைத் தீட்டி மலையப்பரை மலையான் மகளோடு காட்டியுள்ளான் சிற்பி. நிலை எடுத்த நெடுநிலத்தில் மலையெடுக்க வல்லாளனாய்த் தலையெடுத்த இராவணனை மறவாமல் சிற்பி வடித்துள்ளான்!*

**கண் :** *ஞானசம்பந்தப் பிள்ளையாரின் எட்டாம் பாடலை யெல்லாம் தட்டிக் கொண்ட இராவணனாரை நினைந்து தட்டியிருக்கிறான் சிற்பி.*

**பொான் :** *தெற்கு வரிசை நான்கு தூண்களையும் ஒருவாறு பார்த்துவிட்டோம். இதற்கும் வடக்கு வரிசைத் தூண்களுக்கும் ஊடே - எட்டுக்கால் மண்டபத்துக்கு ஊடே - உள்ள இந் நாலுகால் மண்டபத்தைப் பார். தங்கக்கொடி மரமும் நந்தியும் பீடமும் உள்ளன. இம் மண்டபத்தின் எப்பக்கமும் வேலைப்பாடே. பீடம், தூண், குழைவு, வளைவு ஆகியவற்றில் எல்லாம் அருமையான வேலைப்பாடு. முகடு, விட்டம், சட்டம், தகடு, சங்கிலி, ஆணி இவை எல்லாம் அழகு வேலை. இந் நாலுகால் மண்டபத்தின் பாவுகல் ஒரே கல் என்பது குறிப்பிடத்தக்கது.*

**கண் :** *இஃது அல்லாவுதீன் விளக்கு வேலையா? உளி வேலையா?*

**பொான் :** *இக் கலைத் தேர்ச்சியாளரை வழிவழியாகப் போற்றி யிருந்தால், அவர்கள் இத் தெய்வக்கலையை விடுத்து உடைகல், சல்லிக்கல் வேலையை வாழ்வாகக் கொண்டிருப்பரோ? வயிற்றை நானென்று காக்கும் ஆள் நாட்டில் இல்லை! "அவர்கள் நான் காக்காமல் தீராதே" எனக் கல்வேலையை நல்வேலையெனத் தேடி விட்டனர். அவர்களுள் எத்தனை எத்தனை அரிய சிற்பிகள் அடங்கிவிட்டனரோ? எவர் அறிவார்?*

**கண் :** *தெரியாமல் மறைந்து விட்டவர்களை என்ன செய்யலாம்? இப்பொழுதும் அவ்வழியினர் அங்கும் இங்குமாக இருக்கவே செய்கின்றனர். அவர்களை போற்றிக் காத்தால் இப் புகழ்க் கலையைக் காத்த பேறாவது தமிழகத்துக்கு நிலைக்கும்! அரசரும் வள்ளலும் இருந்த இடத்தில் இப்பொழுது அரசு*

*இருப்பதால் அரசே இதில் கருத்துச் செலுத்துதல் வேண்டும்.*

**பொன் :** *நல்ல கருத்துத்தான். நாம் வடக்கு வரிசையைப் பார்க்கலாம். இந்த மேல் பக்கத் தூணின் மேல் பக்கத்தில் ஓரடிப்பெருமான் (ஏகபாதமூர்த்தி) உள்ளார்.*

**கண் :** *'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பர்; இவர் பெரியவர் தாம். ஒரு காலால் நிற்கவோ நடக்கவோ நம்மால் இயல்வது இல்லை. இவருக்கு எளிமையாக முடியும்! ஒற்றைக் காலிலே நிற்கிறான் என்னும் உலகவழக்கை நிலைநிறுத்திக் காட்டுகிறார் இவர்.*

**பொன் :** *பேருந்து வண்டியில் நின்றுகொண்டு வந்து ஒருவர் தள்ளாடும்போது, பேருந்து நடத்துநர் "காலை அகற்றி வைத்து நில்லையா!" என்று சொல்ல வில்லையா! இரண்டு காலிருந்துமே தள்ளாடுகிறது!*

**கண் :** *"வழுக்கி வீழும்போதும் இவர் பெயரையே சொல்ல வேண்டும்" என்பது பெரியவர்கள் வேட்கை. இவ் வாறாக இவர் வழுக்கி விழுவாரா? தூணாக நிற்கிறார்! விழமாட்டார்!*

**பொன் :** *அடுத்து இருப்பவர் 'விடைஏறியார்' (ரிஷபாரூடர்)*

**கண் :** *விடை என்பது காளைதானே! காளையே எடுப்பாக நிற்கிறது.*

**பொன் :** *முப்புரங்களை அழிக்க இறைவன் போகும் போது தேவர்கள் செருக்குக் கொண்டனர். இதனை உணர்ந்த இறைவன் தேரை அழுத்தினான். தேர் ஒடிந்தது. தேவர்கள் திகைத்தனர்; "இனி இறைவர் எதன் மேல் போய் முப்புரத்தை அழிப்பார்" என்று நினைத்தனர். திருமால் காளையாகி வந்து இறைவனைத் தாங்கினார்.*

**கண் :** *சரி சரி! புரிகிறது.*

"தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ"

*என மாணிக்கவாசகர் பாடுகிறாரே அக்காட்சியா?*

**பொன் :** *இத்தூணின் தென்பக்கம் ஆழியங்கையர் உள்ளார். (சக்கரதரர்) ஆழியங்கையர் (சக்கரதாரர், சக்கரதாரி) என்றதும் திருமாலே நினைவுக்கு வருவார். இவர் எப்படி ஆழியங்கையரானார், தெரிகிறதா?*

**கண் :** *இவர் சிவபெருமான்தான். இவர் கையில் ஒளி செய்யும் ஆழி (சக்கரம்) உள்ளது. இதை ஒருவருக்கு அருள்கிறார்! ஆழியை வைத்திருப்பதால் இப்பெயர் இவர்க்குப் பொருந்தும் ஆனால் கதை புரியவில்லை.*

**பொன் :** *சலந்திரன் என்பான் ஓர் அசுரன். அவன் இறைவன் அருளால் பெருவீரம் பெற்றான். அச் செருக்கால் இறைவனையே அழிக்க முற்பட்டான். போருக்கும் எழுந்தான். இறைவன் ஓர் அறுகம் புல்லை எடுத்து வளையமாகச் செய்து நிலத்தில் போட்டான். இதனை எடுக்கும் ஆற்றல் உண்டாயின் எடுக்க, என்று சலந்திரனிடம் இறைவன் கூறினான். செருக்குடைய சலந்திரன் புல்லென எண்ணி எடுத்து மேலே கழுத்தளவு தூக்கினான். அப்புல் ஆழிப்படையாகி அவன் கழுத்தை அறுத்துப் பின்னை இறைவன் கையைச் சேர்ந்தது. அப்படையைத் திருமால் * முப்புரம் எரிக்க உதவிய நன்றியை நினைத்தும், தன் கண்ணை மலராகக் கொண்டு வழிபட்டதை நினைத்தும் பரிசாக வழங்கினார் என்பர். இதனைப் புல்லுக்கு மாறாக நிலத்தில் வட்டமாக இறைவன் கீறினார் என்றும் கதை கூறுவர்.*

**கண் :** *இப்பொழுது தெளிவாகிறது. இது திருவாசகத்தில்*

“சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடி!
நலமுடைய நாரணன்தன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ”

*எனக் குறிக்கப்படுகிறது! இதில் கொடுப்பார்க்கும் பெறுவார்க்கும் உள்ள இன்பம் நன்றாக வெளிப் படுகிறது. இஃது ஈத்துவக்கும் இன்பமாகும்!*

**பொன் :** *இதே தூணின் வடக்குப் பக்கத்தில் மேற்கே உமை யொருபாகரும், கிழக்கே சங்கர நாராயணரும் உளர்.*

* காளமேகப் புலவர் “எருதாய்ச் சுமந்து” என்னும் தனிப்பாடல்.

**கண்** : *இவ்விணைப்பு மிகப் பொருத்தமானது. 'உமையொரு பாகன்' இறைவன் என்பது மிகப் பழமையான செய்தி. "பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று" என்பது பெருந் தேவனார் வாக்கு.*

**பொன்** : *உமையொரு பாகனாம் இச் சிற்பத்தில் இடப்பாதி உமைக்கும் வலப்பாதி இறைவனுக்கும் உள்ளது. அவ்வப் பகுதிக்குத் தக்க உடலமைப்பு, உடை, அணிகலம், தன்மை ஆகியன இடம் பெற்றுள்ளன. திருவிழிகளை உற்றுப்பார். ஒன்றுபோல் ஒன்று உள்ளதா?*

**கண்** : *வலக் கண்ணில் தோன்றுவது வெம்மை; இடக் கண்ணில் தோன்றுவது தண்மை. ஆண்மையின் வெம்மையும், பெண்மையின் தண்மையும் ஒப்ப விளங்கி உய்விக்கும் தோற்றம் இது. வாழ்க்கைத் துணையின் இலக்கணத்தை வகுத்துக் காட்டும் தனிப்பெரு கலைப்படைப்பு இஃது என்று களிப் புறலாம்.*

**பொன்** : ***சங்கர நாராயணர்** தோற்றத்தைச், "சடைமுடி பிறைநிலா இவற்றை அணிந்த தலையின் ஒரு பகுதியர்; முக்கண்ணர்; புலித்தோலும் பொன்னா டையும் உடுத்தவர்; நெருப்பும் ஆழியும் ஓடும் சங்கும் கொண்டவர்; வெண்மையும் கருமையுமாம் இரு நிறத்தார்; சிவனுக்கும் திருமாலுக்கும் உரிய அணிகள் அணிந்தவர்; இவர் சங்கர நாராயணர்" என்று* **சிற்ப ரத்தினம்** *என்னும் நூல் கூறுகிறது.*

**கண்** : *சங்கரனும் நாராயணனும் இணைந்த இவ் வருமையைப் பெருமையாகக் காட்டும் திருக்கோயில் சங்கர நாராயணர் கோயில் என்பது நாம் அறிந்தது தானே! உமை இருக்கும் இடத்திலே நாராயணர் உள்ளார். "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாற னார்க்கே" என்ற அப்பரடிகளே, "மையரிக் கண்ணி யாளும் மாலுமோர் பாகமாகி" என்றும் விளக்கினார். இறைவன் உமையொரு பாகனாகவும் சங்கர நாராயணன் ஆகவும் ஆனது ஏன் என்று சொல்ல வேண்டாவா?*

**பொன்** : *சொல்கிறேன். பிருங்கி என்பார் ஒருமுனிவர். அவர் இறைவனையே வணங்குவார். இறைவி, இம் முனிவர் தன்னை இகழ்வதாகக் கூறினாள். ஆதலால் பெருமானுடன் ஓர் இருக்கையில் ஒன்றி இருந்தாள். முனிவரோ வண்டின் உருவம் எடுத்துக் கழுத்தின் இடைவெளி வழியே இறைவனை மட்டும் வண்ங்கி வலஞ் சுற்றிச் சென்றார். இதனால் அம்மை அருத்தவம் செய்து இறைவனின் ஒருகூறாக இணைந் தாள்.* **திருச்செங்கோட்டில்** *இறைவன் மங்கையோர் பங்கனாக விளங்குகிறான். இஃது உமையொரு* ***பாகமாகிய கதை.***

**கண்** : *சங்கன் பதுமன் என்பார் இருவர். இவர்கள் சிவனே மெய்ப்பொருள் என்றும் திருமாலே மெய்ப்பொருள் என்றும் தங்களுள் மாறுபட்டுச் சொற்போரிட்டனர். இவர்கள் மாறுபாட்டை ஒழிக்க விரும்பிய வியாழ முனிவர் புன்னை வனத்துக்குப் போகுமாறு ஏவினார். அவர்களுக்கு இறைவன் தானும் நெடுமாலும் ஒருருவாகக் காட்சி வழங்கினான் என்பது* ***சங்கர நாராயணர் கதை.*** *இதுதானே!*

**பொன்** : *ஆம்! இந்த ஆறாவது தூணில் வடக்குப் பார்த்து இருப்பவர் சலந்திரனுக்கு அருளியோர் (சலந்திர அனுக்கிரகர்). அவன் செருக்கை அடக்கியதையும், ஆழியைத் திருமாலுக்கு வழங்கியதையும் ஆழி யங்கையரைப் பார்த்தபோதே பேசிவிட்டோமே!*

**கண்** : *ஆம்! இத்தூணின் தென்பால் இருப்பவர்?*

**பொன்** : *தென்பால் இருப்பவர் தென்முகக் கடவுளாம் தக்கணா மூர்த்திதாம். 'தென்பால் உகந்தவன்' 'தென்னாடுடைய சிவன்' 'தென்னவர் கோன்' 'தென்முகக் கடவுளாய் அன்று ஆலின் கீழ் நால்வர்க்கு அருளினோன்' என்னும் நினைவு உந்தத், தூணின் தென்பாலே படைத்துத் தென்பாலே நோக்கவும் வைத்துள்ளான்.*

**கண்** : *வைத்த திறம் மட்டுமன்று. அவன் கைவைத்த திறமும் நன்றாகவே உள்ளது. கல்லிலே தன் வேலைத் திறமையைக் காட்டியுள்ளான். கண்ணிலும் மூக்கு நெற்றி இதழ் - இவற்றிலும் தவத்தை விளையாட விட்டிருந்தான்.*

**பொன் :** *தென்முகக் கடவுளை அறமுரைக்கும் பெருமான், வீணைப் பெருமான், ஞானப் பெருமான், யோகப் பெருமான் என நான்காகச்* ***சிற்ப ரத்தினம், காசியப சிற்ப சாத்திரம்*** *முதலிய நூல்கள் கூறும். இவர் யோகப் பெருமான் ஆவர்.*

**கண் :** *மூக்கின் நுனியை இவர் நோக்கிக் கொண்டிருப்பதை உணர்வோடு பார்த்துக் கொண்டிருந்தால் தவநெறி தானே கைகூடும்போல் உள்ளது.*

**பொன் :** *சிற்பி இதனை விட்டாரா! யோகப் பெருமான் காலடியிலே உட்கார்ந்து விட்டானே ஒருவன். தொட்டுக் காட்டிய வித்தை துலங்கினால் தானே பயன்! இந்த ஏழாம் தூணின் வடபக்கம் பார். இவர்* **கரியுரி போர்த்தவர்** *(கச சம்மாரர்). இவர் எண்கை ஏந்தலாக விளங்குகிறார்.*

**கண் :**

"விரித்தபல் கதிர்கொள் சூலம்
வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோல பயிரவ
னாகி வேழம் உரித்து"

*என்னும் தேவாரப்பாட்டை நேரே காட்டுகிறது இது. ஆனைத்தோல் அடிதொட்டு முடிவரை உயர்ந்து, கைப் பக்கமெல்லாம் விரிந்து, நீள்வட்ட மாணிக்கத் தட்டில் நிறுத்தி வைத்த பெருமானாகக் காட்டுகிறது இச் சிற்பம்.*

**பொன் :** *பெருமான் ஊன்றிய இடக்காலின் கீழே யானையின் தலை; தூக்கிய கைகளின் மேலே யானையின் வால்; திருச்சடையே சீரிய காட்சி; காதணியோ மிக அருமை. தூக்கிய வலக்கால் கூத்தரசர் இவர் என்பதைக் காட்டும். இடையின் ஒருபக்க நெளியும் ஒருபக்க இழுப்பான வளைவும் இயற்கைப் படைப்பே!*

**கண் :** *புலித்தோல் உடுத்தவர்க்கு யானைத் தோல் போர்த்தற்கு ஏன் ஆவல் உண்டாயிற்று?*

**பொன் :** ***கயாசுரன்*** *என்பவன் மண்ணவர் விண்ணவர் ஆகிய அனைவரையும் வருத்தினான். அவன் யானை முகத்தையுடைவன். அவனைச் சிவன் உதைத்துத் தள்ளினார். தோலை உரித்துக் குருதி சொட்டச்*

*சொட்டப் போர்த்துக் கொண்டார். இதுவே இறைவன் கரியுரி போர்த்த கதையாகும்.*

**கண்** : *'தோலை உரித்துத் தொங்கப் போடுவேன்' என்பது எளிதாக இருக்கலாம். ஆட்டுத் தோலையும் மான் தோலையும் இன்னபிறவற்றையும் எளிதாக உரிக்க லாம் என்பர். ஆனால் யானைத் தோலை உரித்தல் மிக அருமையாம். இவர் அதனை உரித்தெடுத்து விரித்துப் பிடித்து அரங்கப் பின்னணியாக ஆக்கிக் கொண்டு ஆட்டமே ஆடுகிறார்! இதற்கு ஏற்றவாறு கல்லைத் தேர்ந்தெடுத்துக் கலைத்திறம் காட்டியிருக் கிறான் சிற்பச் செல்வன்.*

**பொன்** : *இத் தூணின் தெற்குப்பக்கத்தில்* **சண்டேசுவரருக்கு அருளினோர்** *(சண்டேஸ்வர அனுக்கிரகர்) உள்ளார். சோழ நாட்டுச் சேய்ஞலூரைச் சேர்ந்தவர் சண்டீசர். அவர் இயற்பெயர் விசார சருமர். அவர் கலைத்திறம் செறிந்தவர். அவ்வூர் ஆயன், ஆக்களை, மேய்க்கச் சென்றவன், அவற்றை அடித்ததைக் கண்டு, தாமே ஆக்களை மேய்த்த அருளாளர். அவர் மேய்ப் பால் ஆக்கள் பால் மிகுதியாகச் சொரிந்தன. அப்பாலை மணலால் சிவலிங்கம் ஒன்று செய்து அதற்குப் பொழிந்து பூசை செய்தார். 'பாலைப் பாழாக்குகிறார்' என ஊர்ப் பேச்சு எழுந்தது. சண்டீசரின் தந்தையார் ஒருநாள் மறைந்திருந்து பார்த்தார். வெகுண்டார்; பூசையை அழித்தார். சண்டீசர் ஒரு கோலைக்கொண்டு தந்தையின் காலை ஒடித்து வீழ்த்தினார். இறைவன் காட்சி வழங்கிச் சண்டீச பதவி வழங்கினார். அதனை விளக்கும் காட்சி இது.*

**கண்** : *பெரிய புராணத்தில் வரும் சண்டேசுர நாயனார் கதை தானே!*

**பொன்** : *ஆம்! இறைவனின் நின்ற திருவடி போலவே சண்டீசரை அமைத்து அவன் திருவடியைத் தொட்டு வணங்கவும், இறைவன், சண்டீசரின் தலையில் மாலைசூட்டி அருள்பாலிக்கவும் விளங்கும் இவ் வமைப்பு முறை மிக அழகியதாம்.*

**கண்** : ''மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த

அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்(கு)
அடியேன்''

**பொன் :** *இந்தக் கடைசித் தூணைப் பார். மேற்கே, வடக்குப் பார்த்துப் பிச்சைப் பெருமான் உள்ளார். முன்னர் இவர்க்குத் தனி மண்டபமே இருந்ததைக் கண்டோம். இங்கும் இவர் பொலிவாகவே விளங்குகிறார். உச்சி மேல் கலம் கொண்ட 'குண்டைப்பூதம்' அழகாக விளங்குகிறது. இறைவனின் எடுத்து வைக்கும் திருவடி அருமையாக அமைந்துள்ளது. கையில் பிடித்த சூலம் பிடர்க்குப் பின்னே சென்று வெளிப்பட்டு விளங்குவது பேரழகு! இன்னும் பிச்சைப் பெருமான் பலரைக் காண்போம். அவர்களும் நம்மைக் களிப்புறச் செய்வர்.*


**கண் :** *கூத்தப் பெருமான் கையில் ஏறிவிளையாடும் மான், பிச்சைப் பெருமானின் திருவடிக்கீழே நின்று எழுப்பி அறுகுண்ணும் காட்சியும் கண்டு களிக்கத்தக்கதே.*



**காமனை எரித்தவர் (காமாந்தகர்)**



கரியுரிப் போர்த்தவர் (கசசம்கார மூர்த்தி)



உருத்திரர் - பிச்சாடணர்



**அகோர வீரபத்திரர்**

**பொன் :** *இவர்க்குக் கிழக்கே வடக்குப் பார்த்து உருத்திரர் உள்ளார். இவர் கையில் உள்ள நெடுஞ் சூலமே இவ் உருத்திரர் உக்கிரத்தைக் காட்டப் போதும்.*

**கண் :** *பிச்சைப் பெருமான் கையிலுள்ள சூலம் அழகுப் பொருளாக விளங்குகிறது. உருத்திரர் கையில் உள்ள சூலம் உக்கிரப் பொருளாகவே விளங்குகிறது. அவர்க்கில்லாத மீசை, எண்கை, உயரம் இவை யெல்லாம் வெகுளியை வெளிப்படுத்தும்.*

**பொன் :** *இத்தூணின் கிழக்குப் பக்கம் இருப்பவர் வேடர் பெருமானும் அருச்சுனனும் ஆவர் (கிராத அருச்சுனர்); இருவரும் வில்லாளிகள். அருச்சுனன் மீசையோடு இருக்கிறான். அப் பக்கத்து உருத்திரரும். இப் பக்கத்து வேடரும் வெகுளியில் ஒப்பானவர் என்பதைக் கலைவல்லான் குறிப்பாக உணர்த்தி யுள்ளான். ஒரே தூணின் இப்பாலும் அப்பாலும்*

*வடித்ததால் மட்டுமன்று; அவர்கள் கையை இணைத்துக் காட்டியுள்ளானே, அதனால்.*

**கண்** : *அருச்சுனன் பாசுபதம் பெறச் சென்றபோது ஏற்பட்ட நிகழ்ச்சி தானே.*

**பொன்** : *ஆம்.*

**கண்** : *அருச்சுனனின் வில்லால் அடிபட்டது என்ன இறைவனுக்குப் பெருமையா?*

**பொன்** : *பாசுபதக்கணை வேண்டிப் பரமனை நோக்கித் தானே, தவம் புரிந்தான் அருச்சுனன்; அத் தவத்தின் அருமை பெருமையைக் கருதி அதைச் செய்ய ஒட்டாமல் தடுக்கத் தானே துரியோதனன் ஏவலால் மூகாசுரன் பன்றிவடிவில் ஓடிவந்தான். அவன் செய்த அழிபாட்டை அடக்கி அருள் புரியத் தானே இறைவன் வேடனாக வந்தான். வேடனாக வந்தவன் இறைவனே என்பதை அறியாமல் தானே, அருச்சுனன் அம்பு ஏவிப் பன்றியை அழித்த வெற்றியைத் தனக்கு உரிய வெற்றியாகக் கருதிச் சொற்போரும், மற்போரும் விற்போரும் நடத்தினான்! இறைவனென உணர்ந்ததும் அருச்சுனன் எப்படி உருகி நின்று போற்றினான்! இறைவன் ஆட்கொண்டு அருளும் பான்மைக்குச் சான்று தானே இது! அறியாமல் எதிரிட்டுப் பார்த்து அருள்புரிவதே இறைவன் தன்மை என்பதை விளக்கிக் காட்டும் செய்தி அன்றோ இது. இவர் 'சோமாசுகந்தர்! இறைவனும் இறைவியும் இருபாலும் இருக்க இடையே திருமுருகன் இருக்க அமைந்த இக் காட்சி அருமையானது.*

**கண்** : *"துறந்தாரும் துறப்பரோ மக்கள்மேல் காதல்"*

**பொன்** : *வாழ்வியல் நோக்கில் எழுந்தவை தாமே வழிபாட்டு நெறிகள்!*

**கண்** : *நல்லது. ஒருகல்லில் ஒரு பக்கம் சிலைவடிப்பதே திறமையாகும். ஆனால் இருபக்கம், முப்பக்கம் ஏன் நான்கு பக்கமும் கூட நுண்ணிய வேலைப்பாடு செய்ய வேண்டுமானால் அச்சிற்பி எப்பாடு பட்டிருக்க வேண்டும்! ஒரு பக்கத்தில் தட்டும் தட்டு ஒரு சிறிது அதிர்ந்தால் கூட அரும்பாடுபட்ட அத்தூணை நிறுத்துதற்கு ஆகாதே.*

**பொன்** : *சிற்பி காலக் கணக்குப் போட்டிருக்கமாட்டான்; காசுக் கணக்கும் போட்டிருக்க மாட்டான். 'கடவுள் பணிக்கு இக்* **கைத்தொண்டு** *படையல் என்ற கருத்தொன்றி லேயே கடமையாற்றியிருப்பான். தன் பிறவிப்பயன் இதுவே என்னும் உணர்வுடையவனாக இருந்தால் அல்லாமல் இத்தகைய உயிர்க்கலைச் செல்வங்களை அவன் உருவாக்கியிருக்க இயலாது. இத் திருப் பணியில் ஈடுபட்டவர்களும் இத்தகையவர்களாக இருந்திருந்தால் அன்றி ஈடுபட்டிருக்கமாட்டார்கள்.*

**கண்** : *இக்கம்பத்தடி மண்டபத்திருப்பணி செய்தவர் எவர்?*

**பொன்** : *இதனையும், இவ்விரண்டாம் திருச்சுற்றுமண்டபம் முதலிய சிலவற்றையும் கிருட்டிண வீரப்ப நாயக்கர் என்பார் எழுப்பினார் எனக் கூறினேன். இக் கொடிக் கம்பத்துக்கு முன்னருள்ள மண்டபத்திற்கு* **'வீரப்ப மண்டபம்'** *என்பது பெயர். இப் பெயர் அவரை நினைவு படுத்துவதாகும். பின்னர்.* **ஏழுகோயில் நகரத்தார்களால் இம் மண்டபத் திருப்பணி புதுப்பித்து மேலும் அழகூட்டப் பெற்றது.**

**கண்** : *அடிக்கடி புதுப்பிப்பவர்களும், பழுது பார்ப்பவர் களும் வழி வழியாக வந்தமையால்தான் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகியும் மேலும் மேலும் பொலிவுடையதாக விளங்குகிறது இத் திருக்கோயில்! எத்தனை அரண்மனைகளும், கோயில்களும், மண் டபங்களும் போற்றுவார் இல்லாமல் இருந்த இடமும் தெரியாமல் அழிந்து போய்விட்டனவே என்பதை அறியும் போதுதான், இத்திருப்பணி செய்த பெருமக்கள் நம் நெஞ்சில் நீங்கா இடம்பெறு கின்றனர்.*

**பொன்** : *இம் மண்டபத்திற்குக் கிழக்கே - நடைவழிக்கும் கிழக்கே - மேற்கு நோக்கி நிற்கும் இவ் வீரத் திருவுருவங்களைப் பார். இவர்கள்* **அக்கினி வீரபத்திரர், அகோர வீரபத்திரர்** *என்பவர். வடக்கே இருப்பவர் அக்கினி வீரபத்திரர்; தெற்கே இருப்பவர் அகோர வீரபத்திரர்.*

**கண்** : *இவர்கள் இருவருமே அச்சுறுத்த வல்ல தோற்றத் தினராக வெளிப்பட்டுள்ளனர்.*

**பொான் :** *சிற்பியின் கையில் இருந்து இவ்வாறு தோற்றம் எடுத்துள்ளனர் என்றால், இதற்கு அடிப்படையாக இவ் வீரபத்திரர் பிறப்பே அச்சுறுத்த வந்தது தானே.*

**கண் :** *சிவனையும் சத்தியையும் மதியாமல் வேள்வி செய்த தக்கனையும் அவனுக்குத் துணையாக நின்றவர் களையும் தண்டிக்கத்தானே வீரபத்திரர் பிறந்தார்! அப்பன் நெற்றிக் கண்ணில் இருந்து வீரபத்திரர் பிறந்தார்! அம்மை சீற்றத்தில் இருந்து பத்திரகாளி பிறந்தாள்! இங்கே வீரபத்திரர் இருக்கிறார்! பத்திரகாளி?*

**பொான் :** *பத்திரகாளி வாயிலுக்குத் தென்பால் ஊர்த்துவ தாண்டவர் முன்னே மயங்கிப் போய் நிற்கிறாள்.*

**கண் :** *ஒரு வீரன் உடல் எப்படி இருக்க வேண்டும்? என்று கேட்டால் அவனைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்து, இவர்கள் முன்னே நிறுத்தி 'இப்படி இருக்க வேண்டும்' என்று காட்டலாம்.*

**பொான் :** *உண்மைதான்! வீரர் உடல் ஊதையாக இருத்தல் கூடாது; தொந்தி சரியக் கூடாது! தசை கல்லாக இருக்க வேண்டும்!*

**கண் :** *ஆம்! இவர்கள் கல்லாக இருக்கிறார்கள்; கால மெல்லாம் இக் காட்சி வழங்குகிறார்கள்; நாவுக்கு அடிமைப்பட்ட மனிதன் இப்படி இருக்கிறானா? கண்டதையெல்லாம் தின்று கனத்துப் போகிறான்; காணாக்குறைக்கு வேலை எதுவும் செய்வது இல்லை; வெட்டியாக உட்கார்ந்தும் படுத்தும் பொழுதைப் பாழாக்குகிறான்! முறுக்கேற உழைக்கும் உடல் முன்னும் பின்னும் தள்ளுமா?*

**பொான் :** *மார்பின் அகலத்தைப் பார்! இடுப்பின் சுருக்கம் பார்! எலும்புத் தாக்கையும், நரம்பு எழுச்சியையும் பார்! முகத்தின் மிடுக்கும், காலின் எடுப்பும், உணர்ச்சித் துடிப்பும் ஒவ்வொன்றும் அருமைதான்!*

**கண் :** *இவர் கால் மிதி போதாதா? இதில் இருந்து கீழே கிடக்கும் இவன் தப்பிப் பிழைப்பானா? இவர் சூலத்தின் இருகவடுகளும் இவன் கழுத்தின் இரு பக்கமும் அசையவிடாதபடி குத்திக் கிடப்பதைப்பார்!*

**பொான் :** *இங்கே கிடப்பவன் இப்படி என்றால், அங்கே கிடப் பவன் கழுத்தின் ஊடே வாள் பாய்ந்து கிடப்பதைப் பார்; வீழ்ந்து கிடப்பவனும் வீரப்போர் செய்யவே வந்தான் என்பதை அவன் விடாமல் பிடித்திருக்கும் கேடயம் காட்டவில்லையா?*

**கண் :** "அந்தி வான்பெரு மேனியன் கறைமிட றணிந்த
எந்தை தன்வடி வாயவன் நுதல்விழி யிடையே
வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ
முந்து வீரபத் திரனெனும் திறலுடை முதல்வன்"

*என்று* ***கச்சியப்பர்*** *கூறியது சரிதான்!*

**பொான் :** *கச்சியப்பர் கூறியது போல வீரபத்திரர் சொக்கருக்கு முன்னே தான் நிற்கின்றனர். நாம் தென்பால் செல்வோம். இவர் தூக்கிய திருவடியார் (ஊர்த்துவ தாண்டவர்).*

**கண் :** *தூக்கிய திருவடி நெற்றிக்கு நேராகவே நிற்கிறது! அதுவும் எவ்வளவு விரைப்பாக, எடுப்பாக உள்ளது.*

**பொான் :** *ஊன்றிய திருவடி அழகாகத்தான் உள்ளது. அதனினும் அழகாக உள்ளது தூக்கிய திருவடி!*

**கண் :** *வீரபத்திரரை அச்சத்தோடு பார்த்த நாம், அடுத்த நொடியிலே இவ்வளவு வியப்போடு பார்க்கிறோம்! இந்தப் பத்திர காளியம்மை வியப்போடு மட்டுமின்றி நாணத்தோடும் பார்க்கிறார்.*

**பொான் :** *இறைவனோடானால் என்ன, தோல்வி தோல்வி தானே! 'இப்படித் திருவடி தூக்கி ஆடுகிறாரே இவருக்கு இணையாக நான் எப்படித் திருவடி தூக்கி ஆடி வெற்றி கொள்வேன்! இவர் ஆடல் வல்லார் மட்டுமல்லர்! சூழ்ச்சியும் வல்லார்!' என்று திகைக்கிறார்.*

**கண் :** *தூக்கிய திருவடியார் திருவடிக்கீழே இடப்பால் நிற்கும் இக் காரைக்கால் அம்மையார் நகைப்பைப் பாரேன்! எலும்பு தோல் போர்த்த இவருடம்பில் பல் ஒன்று தானே மெலியாமல் இருக்கிறது!*

**பொான் :** *தென்பக்கம் ஒரு குரங்குமுகன் வணங்கி நிற்பதைப் பார். இவன் வாலியாகலாம்! ஏனெனில் அவன் சிவநேயனாக இருந்தவன்.*

**கண்** : *இறைவன் பதின்கையனாக விளங்குகிறான். இக் காளி எண்கையளாக விளங்குகிறாள். இறைவன் நான்முகத் துடன் அதோமுகம் என்பதும் கூட்டி ஐந்துதலையன் ஆகலின் பதின்கையனாகக் காணப்பெறுகிறான்!*

**பொான்** : *பத்திரகாளி தன் வெகுளிச் சுடர் வெளிப்பட நிற்கிறாள். இவள் கண்களில் அமைந்துள்ள கனலொளியைப் பார்! தலையைப் பார்! இவள் கையிலுள்ள சூலம் எப்படி இருக்கிறது; தலைகீழாக இருக்கிறது அன்றோ! தோல்விக்கு அடையாளம் தானே! ஆனால் இத் தோல்வி தானே இவளுக்கு வெற்றி! கணவன் மனைவியிடம் தோற்பதும், மனைவி கணவனிடம் தோற்பதும் தோல்வியா? இன்பப் பெருக்கு அன்றோ!*

**கண்** : *நீ இவள் வெகுளியைப் பற்றிக் கூறியதும் எனக்கு ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை என்பதொரு நூல். அதில் 'மதுரைத்தல வரலாறு' என்னும் ஏட்டுச் சுவடியும் ஆய்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு முகமதியன் இராஜ கோபுரத்தின் நிலைக்காலில் கூடாரம் போட்டுக் கொடியும் நாட்டியிருந்தானாம். எவர் தடுத்தும் கேட்கவில்லையாம். அப்பொழுது "யுவஹூ தைமீ 3 வ சுவாமி கோயில் ஆஸ்தான மண்டபம் பொற்கம்பத்தடிக்குத் தென்கீழ் மூலையில் இருக்கிற வாதாடும் பத்திர காளியம்மன் இடது கண் தை மீ 3 வ விடிந்து இரண்டு நாழிகை அளவில் விழித்தகண் 5 வ உதய காலத்தில் மறைந்தது. இந்த அதிசயம் நான்கு முகத்திலேயும் அறியப்பட்டு வெகுஜனங்களெல்லாம் திருநாள் போல வந்து பார்த்து அதிசயப்பட்டார்கள்" என்று கூறி, அதன் பின்னர் அந்த முகமதியன் வெளி யேறியதை அந்நூல் கூறுகிறது.*

**பொான்** : *இதைக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் சொல்ல மறந்து விட்டேன்.*

**கண்** : *அது சரி; இவளுக்கு வெண்ணெய் அப்பியிருக் கிறார்களே ஏன்?*

**பொான்** : *அப்பியிருக்கிறார்களா? கண்டவாறு எறிந்து இருக் கிறார்கள்! உச்சி முதல் உள்ளங்கால் வரை எறிந்திருக் கிறார்கள். வெண்ணைய்க் காணிக்கை இந்த அழகில் செலுத்துகிறார்கள்! இவளோடு போனதா, தூக்கிய*

*திருவடியார்க்கும் அவ்வப்போது வெண்ணெய் எறி விழுவது உண்டு! அறிவிலா அன்பு என்னென்னவோ செய்யும்! தன் செயலை நினைந்து மகிழும்; பூரிக்கும்; அமைதியும் அடையும். அப்படிப்பட்டதொரு காணிக்கை இவ்வெண்ணை எறி காணிக்கை.*

**கண்** : *எழுதிப் போட்டிருக்கிறார்களே! வெண்ணெயை எறிய வேண்டா! பீடத்தில் வையுங்கள் என்று; அதை யாவது அறிந்து செய்ய வேண்டாவா!*

**பொன்** : *நன்றாகச் சொன்னாய்! பலருக்குப் படிக்கத் தெரியாது. படிக்கத் தெரிந்தவர்களில் பலருக்கும் எண்ணிச் செய்யத் தெரியாது! "அவன் செய்தான் இவன் செய்தான்! அப்படியே நானும் செய்தேன்!" இது தான் நிலை! இந்த இரண்டாம் திருச்சுற்றைச் சுற்றலாம். இந்தத் தூணைப் பார். இதில்* **பிட்டுக்கு மண்சுமந்த பெருமான்** *கூடையைத் தலையில் தாங்கி நிற்கிறார். பாண்டியன் கையில் பிரம்பொடு நிற்கிறான். வந்தியம்மை ஆயிரம் பிறை கண்ட அந்த மூதாட்டி இறைவன் காலடியில் நிற்கிறாள்.*

**கண்** : *அவளுக்குத் தன்னடியைத் தருவதற்காகத் தானே இறைவன் பாண்டியன் பிரம்படிக்கு ஆட்பட்டான். அதனை நினைத்து அடித்திருக்கிறான் சிற்பி! கூனிக் குறுகிய வந்தியம்மை இறைவன் காலடிக்கே நிற்கிறாளே, அரிய நோக்கு அன்றோ இது?*

**பொன்** : *ஆம்! உன் நுண்ணிய நோக்கும் அருமைதான். இத் தெற்குச் சுற்றின் கீழ்பால் இருப்பது திருஞான சம்பந்தர் மண்டபம். இருபாலும் கல்யானையமைந்த வாயிற்படியையுடைய இம் மண்டபத்துள்ளே மாணிக்கவாசகர், சுந்தரர், நாவுக்கரசர், ஞான சம்பந்தர், நெடுமாறர், மங்கையர்க்கரசியார், குலச் சிறையார், மூர்த்தியார் ஆகியோர் சிலைகள் உள்ளன.*

**கண்** : *இக் கோயில் தொடர்பான அடியார் திருக் கூட்டத்திற்கு அமைக்கப்பட்ட திருக்கோயில் இது!*

**பொன்** : *ஆம்! சைவத்தை நிலைநாட்டிய அரசி மங்கையர்க் கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் தம் செயலால் ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) அருட்பாடல் பெற்றவர்கள் அல்லரோ! அவர்களை*

*இங்குச் சிலையாக்கிச் சிறப்புக்கொண்ட செல்வர் முன்னே கூறிய கிருட்டிண வீரப்ப நாயக்கர்தாம். இனி இச் சுற்றின் வடமேற்கு மூலைக்குச் செல்வோம்!.... இது சங்கத்தார் கோயில்!*

**கண்** : *சங்கத்தார் கோயிலா?*

**பொன்** : *ஆம்! சங்கம் இருந்த மதுரையாயிற்றே! சங்கப்புலவர் களுக்காகவும் இறைவன் திருவிளையாடல் புரிந்த இடம் ஆயிற்றே! அதனால் அவர்களுக்குக் கோயில் எழுப்பியுள்ளார்கள்.*

**கண்** : *மகிழ்ச்சி! சங்கப்புலவர்கள் எவ்வளவு பழமையான வர்கள். இக்கோயில் புதிதாக உண்டாக்கப்பட்டதா? பொற்றாமரைக் குளத்து வடகரையின் நடைவழி மண்டபத்தின் தூண்களில் உள்ள இவர்கள், இங்கே கோயில் கொண்டும் இருப்பது மகிழ்ச்சிதான்.*

**பொன்** : *கண்ணப்பா, இக் கல்வெட்டைக் கருதிப் புதிதாக உண்டாக்கினார்களா என்று கேட்கிறாய் என நினைக்கிறேன்.*

**கண்** : *"மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமிகு டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திறந்துவைக்கப் பெற்றது.*

*தி.பி. 2005ரு, ஆவணி 26. 14.9.1974*

*மதுரை"*

*என்று இருக்கிறதே!*

**பொன்** : *இது பழைய கோயில்தான். ஆனால் கோயில் வாயி லையே மண்சுவர் வைத்து மறைத்து விட்டார்கள்.*

**கண்** : *என்ன சொல்கிறாய்?*

**பொன்** : *ஆம்! உனக்குத் திகைப்பாகத்தான் இருக்கும். மாலிக் காபூர் படையெடுப்பின் போது (கி.பி.1310) கருவறையில் இருந்த மூர்த்திகளை மறைத்து வைத்துப், பொற்படிவங் களையும், அணிகலங்களையும் எடுத்துக் கொண்டு நாஞ்சில் நாட்டுக் கிலுகிலுப்பைக் காட்டுக்கு ஓடிய செய்தி உண்டு. பின்னொருகால் மானவீரன் மதுரைக்கு மூர்த்திகளை எடுத்துச் சென்று சேதுபதிகள்*

*துணையால் காத்து மீண்டது உண்டு. மதில் வாயில் களைச் சுவர் எழுப்பி மறைத்துப் போற்றியதுண்டு. ஆனால், சங்கத்தார் கோயில் அயலார் படையெடுப் பாலோ, அரும் பொருள் உடைமையாலோ அடைக் கப்பட்டது இல்லை! கோயிலாளர்களாலேயே புறக்கணிக்கபட்டு மண்சுவர் வைத்து மறைக்கப் பட்டது.*

**கண்** : *தமிழுக்கும் சைவத்துக்கும் உள்ள தொடர்பென்ன? தமிழ் வளர்ச்சியில் சைவத்திற்கு உள்ள பங்கென்ன? இவ்வாறாகவும் சங்கப் புலவர்களை மறைக்க வேண்டியது என்ன?*

**பொன்** : *வடமொழியே தெய்வமொழி என்றும், அஃ தொன்றே கோயில் வழிபாட்டுக்கும் மந்திரத்திற்கும் உரியமொழி என்றும், தமிழால் வழிபடுதல் ஆகம நெறிக்கு அப்பாற்பட்டதென்றும் சில நூற்றாண்டு களின் முன் ஒரு பேரலை வீசியது! அது பெருங் காற்றாகவும் மோதியது. இறைவன் இறைவியர் பெயரும், திருக்கோயில் பெயரும் மொழி பெயர்த்து வடமொழிக்கு மாற்றப் பெற்றன! வடமொழியைக் கட்டிக் காக்கும் இடம் திருக்கோயில் என்னும் நிலைமை ஆகிய பின்னே தமிழ் வளர்த்த சங்கத்தார் கோயிலை மறைக்காமல் விடலாமா? இது திருவிளை யாடல் கண்ட மதுரையில் நடந்த திருவிளையாடல்!*

**கண்** : *சங்கத்தார் கோயில் பிறகு எப்படி வெளிப்பட்டது?*

**பொன்** : *1950 ஆம் ஆண்டுபோல், வரலாறு அறிந்த ஒருவர் 'இங்கே சங்கத்தார் கோயில் உண்டே' என்று திருக்கோயில் அலுவலர்களை வினவ, அவர்களிடம் பல்கால் எழுதித் தூண்ட, அவர்கள் விழிப்படைந்து தேடி, அடைபட்டுக் கிடந்த இந்த இடத்தைச் சங்கத்தார் கோயில் எனக் கண்டுபிடித்தனர்.*

**கண்** : *இராசராசன் தேவாரப் பதிகங்களைக் கண்டுபிடித்த கண்டு பிடிப்புத்தான் இதுவும்.*

**பொன்** : *"1960 - 1963" ஆம் ஆண்டுகளில் திரு. பி. டி. இராசன் அவர்கள் முன்னின்று ஒரு பெரும் திருப்பணி கோயிலில் நிகழ்த்தினார். அப்போதுதான் இச் சங்கத்தார் கோயில் மற்றவற்றைப் போலவே திருப்பணி*

*செய்யப்பட்டது. அதன் பின்னர் வெளிப்பட்டுக் கும்பிடு போடும் நிலைக்கு வந்தது. திறப்பு விழாவும் அதன் கல்வெட்டும் பழைய கோயிலுக்கு உண்டாக்கிய புதுப் பொலிவுதான்! இப்படியே உள்ளே பார்.*

**கண்** : *இங்கும் ஒரு 'திருமறைக் காடு' தானா?*

**பொன்** : *ஆம்! திறக்கப் பாடவும் ஒருவர் பிறக்க வேண்டும் போலும்! இவர் இறைவர்; இவர் குமரவேள்; இவர் கலைமகள்; இவர் உக்கிரப் பெருவழுதியார், கபிலர், பரணர், மாமூலர், பொன்முடியார்................*

**கண்** : "வள்ளுவன் தனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

*முதலாம் புலவர்களை வணங்கிச் செல்வோம்.*

**பொன்** : *இச் சுற்றின் வட கீழ்க்கோடியில் இருப்பது* **'மண்டப நாயகம்'** *என்னும் நூற்றுக் கால் மண்டபம். இப் பெயரே இதன் சிறப்பை உணர்த்தும். இங்குள்ள சிற்பங்கள் நுண்ணியவை; நுண்ணிய வேலைப்பாடு களும் உடையவை. இங்கே கூத்தபிரான் எழுந்தருளி யுள்ளார். இதனைக் கட்டி இங்கே இவரை எழுந்தருளச் செய்த பெரியவர்* **சின்னப்ப நாயக்கர்** *(கி.பி. 1526) என்பார்.*

**கண்** : *இடம் பொருத்தமாகத் தேர்ந்துள்ளார்.*

**பொன்** : *ஆனால், ஞானசம்பந்தர் மண்டபம் இம் மண்டபம் கட்டியதற்குப் பின்னே கட்டப் பெற்றதால் அதனைக் கட்டியவரே இதற்குக் தக்கவாறு பொருத்தமாக அதனை அமைத்துள்ளார். கூத்தப் பிரானை அவர்கள் நேரே கண்டுகளித்துக் கொண்டிருக்க வைத்தவர் அவர்தாமே.*

**கண்** : *சரிதான்.*

**பொன்** : *இனி முதற் சுற்றுக்குப் போகலாம். இவ் வாயிலின் வடபுறம் பழனியாண்டவர் உள்ளார். தென்புறம் திருவருள் பிள்ளையார் (அனுக்கிய விநாயகர்) உள்ளார். இவ் வாயில் காவலர் (துவாரபாலகர்) இருவரையும் பார். கோபுரத்தைப் பார்ப்பது போல் பார்க்க வைக்கின்றனர் இல்லையா! பீடம் நீங்கிய*

*இவர்கள் உயரமே 3.6 மீட்டர்! மேற்கைகளில் சூலமும் செண்டும் கொண்டுள்ளனர். கீழ்கைகளில் இடப்பால் அடைக்கலம் அருள்கின்றனர். வலப்பால் கையில் ஒற்றை விரல் தூக்கியுள்ளனர். இவர்கள் ஆட் கொண்டார், உய்யக் கொண்டார் எனப் பெறுவர்.*

**கண்** : *இடக்காலை ஊன்றிய அழகும், வலக்காலைத் தூக்கிய அழகும், பாம்பு சுழன்று கிடக்கும் அழகும், தண்டம் நிற்கும் நிலையும் தனித் தனிச் சிறப்புக் குரியவையே! கல்லின் தேர்ச்சியும், அதில் ஏற்றிய மெருகும் வேலைப்பாடும் மிக விஞ்சுகின்றன. காவல் வீரர்களே! நீங்கள் உலகோரை ஆட்கொள்ளுங்கள்; உய்யவுங் கொள்ளுங்கள்!*

**பொன்** : *இவர்களுக்கு அருகே உள்ள இருபக்கத் தூண் களையும் பார்!*

**கண்** : *ஐயனுக்கு ஐந்து தலையுண்டு என்று அறிவோம். அம்மைக்கும் ஐந்து தலையா? சரியான வாழ்க்கைத் துணைதான்.*

**பொன்** : *இவ்வாயிலைக் கடந்து வலமாகச் செல்வோம். சொக்கர் கோயில் பெருமண்டபத்தைச் சுற்றியுள்ள இச் சுற்றுச் சுவர் முழுமையும் திருவிளையாடல் ஓவியங்கள் சுதையால் எழுப்பி வண்ணந்தீட்டப் பெற்றுள்ளதைப் பார். எல்லாத் திருவிளையாடல் களுமே இங்கே காட்டப் பெற்றுள்ளன.*

**கண்** : *ஒரு திருவிளையாடலுக்கே கதை விளக்கத்திற்குத் தக்கவாறு பல காட்சிகளும் காட்டப் பெற்றுள்ள னவே.*

**பொன்** : *ஆமாம். இங்கே வந்தியம்மையைப் பார். இங்கே சூரியனும் உசையும் உளர்; பிரதிஉசையும் உள்ளார். இதன் தென்சுற்றில் சேக்கிழார்பெருமான் முதல் நாயன்மார் திருவுருவங்கள் உள்ளன. அவற்றை அடுத்து இலிங்கப் பெருமான், கலைமகள், மங்கையர் எழுவர் (சத்தமாதர்) இறைவர், பிள்ளையார் இவர்களைப் பார்.*

**கண்** :
“சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்”

*என்று ஆபுத்திரன் வணங்குவதாக மணிமேகலை கூறுகின்றது. இங்கே நாமகளுக்குச் சிலையெழுப்பி வழிபாடும் நிகழ்கிறது. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெண்கமலத்து வீற்றிருப் பாளுக்கு வெண்டாமரையே விருப்பென்று அதனைச் சூட்டியுள்ளார்கள்!*

**பொன் :** *இத் தென்மேற்கு மூலையில் உள்ளது விழாமூர்த்தி (உற்சவமூர்த்தி) திருக்கோயில். இவ் வடமேற்கு மூலையில் காசிவிசுவநாதர் கோயில்! விசுவநாதர், விசாலாட்சி, பிள்ளையார், காளை, முருகர் எல்லாமே வெண்பளிங்கு.*

**கண் :** *மதுரையை வந்து பார்க்கவே நமக்கு இவ்வளவு காலமாகி விட்டது. நாம் காசிக்கு எப்பொழுது போகப் போகிறோம்! நம்மைப் போல் போவதற்கு முடியாதவர்கள் இங்கிருந்து கொண்டே ஆங்கிருக்கும் இறைவரைக் கண்டு கொள்வதற்குச் செய்த நல்ல ஏற்பாடு இது.*

**பொன் :** *ஆம்! இப்படியே ஐந்து மன்றங்களையும், ஐந்து இலிங்கங்களையும் புகழ்பெற்ற கோயில் மூர்த்திகளை யும் இத் திருக்கோயிலிலேயே காணலாம். மற்ற கோயில்களிலும் இத்தகைய ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. அடுத்துப் '**பிச்சைப் பெருமான்**' கோயில் உள்ளது. அவருக்கு இப்பால் இருவரும் அப்பால் இருவருமாக முனிவர் மனைவியர் நால்வர் உளர். இறைவர் புன்னகையுடன் உள்ளார். மகளிர் நால்வரும் நால்வகைப் பார்வையராய் நல்ல ஏக்கத்துடன் உள்ளனர்.*

**கண் :** *ஐம்பொன்னால் செய்யப் பெற்ற இப் பிச்சைப் பெருமானையும் இங்கே நிறுத்தியுள்ளனர். இவர் நடையழகும் பாம்பலங்காரமும் குண்டைப்பூத நிலையும் மானின் நிமிர்ந்து வளைந்து இருகால் நிறுத்தி இருகால் தூக்கி அறுகுண்ணும் அழகும் அருமையாக அமைந்துள்ளன. இவர் திருவடிக் குமிழையும் கூட அழகாக வார்த்தவர்கள் திருமுகப் பொலிவை விடுவரா?*

**பொன் :** *வடக்குத் திருச் சுற்றில் இம் மேற்குக் கடைசியில் 'மேதா தக்கணா மூர்த்தி' யுள்ளார். இவ்வுட்சுவர்*

அருகில் கிழக்குப்பார்த்த இத் தனிக்கோயிலில் இருப்பவர் சித்தர் பெருமான்.

**கண்** : உருட்டிய இவர் பார்வையே, பார்த்தவர்கள் அறிவை உருட்டிவிட்டு மயங்க வைக்கும்போல் உள்ளது. நாற்கை எண்கைகளுடன் இருந்தால் தம்மை இன்னார் என்று எவரும் எளிதில் அடையாளம் கண்டுகொள்வர் என்றுதான் இருகையராக உள்ளார் போலும்.

**பொன்** : வலுவமைந்த உடல்; அழகுமிக்க தோற்றம். தண்டின் மேல் ஒருகை! ஒருகையில் மந்திரக்கோல். வலக் காலைக் கீழேமடித்து இடக்காலை அதன்மேல் மடித்துப் போட்டுப் பீடத்தின்மேல் ஒய்யாரமாக அமர்ந்துள்ளார். மணக்கோலத்தில் இவர்க்கு இருந்த அணிகலன்கள் எல்லாம் பறிபோய் விட்டன போலும்! நடிக்கும் பாத்திரத்திற்குத் தக்க உடையும் அணியும் ஒப்பனையும் வேண்டும் என்பது என்ன, கூத்தப் பிரானுக்குத் தெரியாதா? அவரை வடித்துக் காட்டுவதே வாழ்வாகக் கொண்ட கலை வல்லானுக்குத் தெரியாதா?

**கண்** : திருவிளையாடல் கூறும் 'கல்லானைக்குக் கரும் பருத்திய சித்தர்' இவர்தாமே!

**பொன்** : ஆம்! இவர்தாம். தெற்கெ இருப்பவர்போல வடக்கே போயிருப்பார்; வடக்கே இருப்பவர்போலத் தெற்கே போயிருப்பார்; தொலைவில் உள்ள மலையை அருகில் காட்டுவார்; அருகில் உள்ள மலையைத் தொலைவில் காட்டுவார்; ஆணைப் பெண்ணாக்குவார்; பெண்ணை ஆணாக்குவார்; இளையரை முதியர் ஆக்குவார்; முதியரை இளையர் ஆக்குவார்; பிணியும் நோயும் தீர்ப்பார்; இரும்பு செம்பு முதலியவற்றைப் பொன்னாக்குவார்; ஆற்றில் வெள்ளம் வருவிப்பார்; வானில் பறப்பார்; இச் செயல்களைக் கேள்விப்பட்ட பாண்டியன் அவரை அழைத்துவரக் காவலாளி களையும் அமைச்சரையும் அனுப்பினான். அவர்கள் சித்தர் செயலைப்பார்த்து நின்றனரே அல்லாமல் தாம் வந்த செயலை மறந்தனர். பாண்டியனே வந்தான்; வியந்தான்! ஒருவன் கொண்டுவந்த கரும்பைக் காட்டி, 'இக் கல்லானையை உண்ணச் செய்யும்' என்றான். சித்தரிடம் பிளிறி எழுந்து பீடு

*நடை கொண்டு வந்தது கல்லானை! காவலன் கையில் இருந்த கரும்பை 'கடகடார்! என ஒடித்துத் தின்று சாறு வாயொழுக நின்றது! பாண்டியன் வியந்தான்; சித்தர் மறைந்தார்! நான் சொன்ன செய்தி சரிதானே!*

**கண்** : *நீ சொல்வதில் சரியில்லாமல் என்ன இருக்கும்? சரிதானே!*

**பொன்** : *பிற்காலத்தில் இப்படி ஒரு செய்தி நடந்ததாகவும் கேள்விப் பட்டுள்ளேன்*

**கண்** : *அது என்ன செய்தி?*

**பொன்** : *இத் திருக்கோயிலில் சீதாலப் புத்தகம் என ஒன்று ள்ளது. அதில் அச் செய்தி உள்ளது. அதனைக் கோயில் மாநகர் என்னும் நூல் எழுதிய திரு. கி. பழநியப்பன் அவர்கள் கூறியுள்ளபடி கூறுகிறேன்.*

**கண்** : *நல்லது.*

**பொன்** : *"கி.பி. 1310 ஆம் ஆண்டு சூன் மாதம் 20 ஆம் நாள், மாலிக்காபூர் மதுரையை முற்றுகையிட்டுப் பாண்டியன் கோட்டையைக் கைப்பற்றினான். கோட்டையையும் ஊரில் இருந்த பல கோயில்களையும் இடித்தான். மீனாட்சி சுந்தரர் கோயிலின் பெரும்பகுதி இடிபட்டது. அப்பொழுது மாலிக்காபூர் படையைச் சேர்ந்த திருவேகம்பராயர் என்பவர் கோயிலைப் பார்க்க வந்திருந்தார். சுவாமி கோயில் முதற் பிரகாரத்தைச் சுற்றி வரும் பொழுது கருவறையைச் சுற்றி யானைகளின் உருவங்கள் எட்டு இருப்பதைக் கண்டு அதன் விபரம் என்னவென்று கேட்டார். அச்சமயம் எல்லாம் வல்ல சித்தர் சன்னிதியில் தியானம் செய்து கொண்டிருந்த சொக்கநாதர் என்ற ஒரு துறவி அவ் யானைகளைப் பற்றி விளக்கியதுடன் கல்யானைக் கரும்பு கொடுத்த திருவிளையாடலையும் விவரமாகக் கூறினார். அதைக் கேட்ட இராயர் அஃது உண்மை யாயின், இந்த யானை இப்பொழுது கரும்பைத் தின்னுமோ? என்று வினாவினார். 'அவ்வாறே தின்னும்' என்று துறவி கூற, இராயர், மாலிக்காபூரையும் அவ் வதிசயத்தைக் காண அழைத்து வந்தார். துறவி மாலிக்காபூரிடமே கரும்பைக் கொடுத்து யானைக்குத் தரச்சொன்னார். அவன் கைநீட்டித் தந்தான்.*

*விமானத்தில் இருந்த கல்யானை தன் துதிக்கையை நீட்டிக் கரும்பை வாங்கித் தின்றது. அவ் வற்புதத்தைக் கண்ட மாலிக்காபூர், 'ஆகா; இங்கு அல்லா இருக் கிறார்!' என்று கூறி 'மேற் கொண்டு கோயிலை இடிக்க வேண்டா' என்று கட்டளையிட்டான். ஆனால் அதற்குள் கபாலியுடையவர் திருமதிலுக்கு வெளி யிலுள்ள பெரும் பகுதிகள் இடிக்கப்பட்டு விட்டன. அத் திருமதிலுக்கு உட்பட்ட சுவாமி கோயில் கருவறை முதல் ஆறுகால் பீடம் வரை உள்ள பகுதிகள்மட்டும் மாலிக்காபூரின் ஆணையின்படி இடிபடாமல் தப்பின. துறவியைத் தேடும்பொழுது அவர் அங்குக் காணப்படவில்லை. இது சோமசுந்தரப் பெருமான் திருவிளையாடலே என்று கருதப்பெற்றது.*

***கண் :*** *நல்லது. இது புதிய செய்தி! புதிய திருவிளையாடல்!*

"பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினும் சிறியதுமாய்
அரியதினும் அரியதுமாய் எளியதினும் எளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானும் காட்சியுமாய் அவைகடந்த
துரியமுமாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்பே"

*என்னும் பரஞ்சோதியார் வாக்கால் வணங்கிச் சித்தரிடமிருந்து விடைபெற்றுக் கொள்வோம்.*

***பொான் :*** *எல்லாம் வல்ல இச் சித்தர் கோயிலை விக்கிரம பாண்டியன் (கி.பி. 1315-1347) என்பான் அமைத்தான் என்பதை நாம் நினைவு கொள்வோம். இச் சித்தர் கோயிலுக்குத் தென்பக்கம் சொக்கர் கருவறைச் சுற்றுச்சுவரில் சங்கு சக்கரக் கையினளாகத் துர்க்கை எழுந்தருளியுள்ளாள். துர்க்கைக்கு எதிரே வடக்குப் பக்கம் இது கடம்பவனம் என்பதற்குச் சான்றான பட்டுப்போன பழைய கடம்பமரம் உள்ளது. இதற்குத் திருப்பனந்தாள் மடத்தார் வெள்ளித் தகட்டுறை பொதிந்துள்ளனர். இதற்குக் கிழக்கே கனகசபை உள்ளது. இந்த அச்சரலிங்க மண்டபத்தில், மும்மூன்றாகப் பதினேழு வரிசையில் 51 இலிங்கங்கள் உள்ளன.*

***கண் :*** *அட்சர இலிங்கங்களா?*

**பொன் :** *ஆம்.*

**கண் :** *அப்படியானால் தொல்காப்பியர் கணக்குப்படி, "எழுத்தெனப்படுவ, அகர முதல னகர இறுவாய் முப்பஃ தென்ப சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே" என்றவாறு முப்பத்து மூன்று தாமே இருக்க வேண்டும். அட்சரம்-எழுத்து; எழுத்துக்கு ஓர் இலிங்கம், அட்சர இலிங்கம்!*

**பொன் :** *நான் தான் முன்னமே சொன்னேனே; இது வடமொழி எழுத்துக் கணக்கு! அதில் உயிரும் மெய்யும் 51 தாமே!*

**கண் :** *சரிதான்; போகலாம்!*

**பொன் :** *இங்கே திருமகள் அருள் வழங்கிக் கொண்டிருக் கிறாள்!*

**கண் :** *இதற்கு நேரே தென்பக்கச் சுற்றில் கலைமகள் இருக்கக் கண்டோமே! வாழ்வு சிறக்கக் கல்வியும் வேண்டும்; செல்வமும் வேண்டும்; இஃது ஒருகண் என்றால் அஃதொரு கண் என்பது போல் அல்லவா இறைவனுக்கு இப்பாலும் அப்பாலும் இவர்களைப் படைத்துள்ளனர். 'கல்வியா? செல்வமா?' என்ற வெற்றுப் பேச்சு என்ன வேண்டியிருக்கிறது! இரண்டுமே வேண்டும் என்பது தானே மெய்யாகிறது!*

**பொன் :** *ஆமாம். இரத்தினசபை இது. அம்மை சிவகாமியுடன் அப்பன் உள்ளார். இது வன்னியும் கிணறும் அழைத்த திருவிளையாடல் காட்சி, இந்த வடகிழக்கில் கல்லால மரமும் இலிங்கப் பெருமானும் காண்கிறோம்! இனி* **ஆறுகால் மண்டபத்தின்** *வழியே சொக்கர் திருமுன் செல்வோம்.*

**கண் :** *அம்மை திருமுன்னும் ஓர் ஆறுகால் பீடம் இருந்ததே.*

**பொன் :** *ஆம், அதனைப் போலவே இதுவும் வரலாற்றுச் சிறப்பு உடையதாகும். இங்கே* **பரஞ்சோதி முனிவர்** *இயற்றிய* **திருவிளையாடற் புராணம்** *அரங்கேற்ற மாகியது. திருமலை நாயக்கருக்கு ஆண்டுதோறும் இப்பீடத்தில் தான் பரிவட்டம் கட்டப் பெற்றது. செம்பாலான இக் காவல் வீரர்களைச் செய்தளித் தவர் அத் திருமலை மன்னரே ஆவர். இப் பீடத்தை*

நோக்கி எதிரே அமைந்துள்ள தூண்களில் இருப்பவர் பதஞ்சலி முனிவரும், புலிக்கால் முனிவரும் ஆவர்!

**கண்** : அம்மைக்கு அவர் பிள்ளை குமரகுருபரர், பிள்ளைத் தமிழ் பாடினார். அப்பருக்கு, அவர் புகழ்பாடும் பரஞ்சோதியார் திருவிளையாடல் பாடினார்! அப்பருக்கென ஒரு பிள்ளைத் தமிழ் எவரும் பாடவில்லையே!

**பொன்** : முழுமுதல் இறைவன் பிறவாப் பெரியவன் அவனுக்குப் பிறரைப் போலப் பிள்ளைத்தமிழ் பாடும் வழக்கம் இல்லை! இல்லையானால், எத்தனையோ நூல் மாலைகளைப் புனைந்து கொண்ட அவன், பிள்ளைத்தமிழ் மாலையை மட்டும் புனையாமல் போவானா?

**கண்** : மிகச் சரிதான். சொக்கர் முன்னுக்குச் செல்வோம்.

**பொன்** : இவர்கள் தில்லைவாழ் அந்தணர் முதலாக அறுபத்து மூவர்! இவர்கள் எழுந்தருளச் செய்யும் மூர்த்திகள்! இவையனைத்தும் செப்புத் திருமேனிகள்! ,இவர்கள் **உற்வச சித்தரும், சந்திரசேகரும்** ஆவர்.

**கண்** : இறைவன் திருமுன்னே நிற்கும் இக் காவல் வீரர்கள், முன்னே கண்ட காவல் வீரர்களுடன் உடன் பிறந்தார் கள் போல் உள்ளார்கள்! காவல் காப்பவரைக் கண்டே கலங்கினால் தானே களவு, பொய் நாட்டில் தலைகாட்ட மாட்டா! அவர்கள் தோற்றமும் துணிவும் தீமை செய்யக் கருதுவாரை அச்சுறுத்த வேண்டுமே! இக் காவல் வீரர்களைக் கண்டு காவல் துறைக்கும் படைத் துறைக்கும் ஆள்களைப் பொறுக்கி எடுக்க வேணடும்போல் எனக்குத் தோன்றுகிறது.

**பொன்** : உனக்கு ஏன் தோன்றாது! உனக்குத் தோன்றுவதால் ஆவது என்ன? அத்துறையில் பொறுக்கி எடுப்பார்க்குத் தோன்ற வேண்டும் என்று இவர்களிடம் வேண்டிக் கொள்ளலாம். நம்மால் முடிந்தது அவ்வளவுதான்.

**கண்** : சரி! அப்பனை வழிபடுவோம்.

**பொன்** : அப்பனே, சொக்கநாதனே, தேனொழுகும் திருவாயால் தேவாரம் பாடிய உன் செல்வப் பிள்ளை, சீர்காழிச் செல்வர் ஞானசம்பந்தர் திருவாக்குக்கு அலந்து

*கிடந்தாயே! அந்த வாக்கால், உன் அடி தொட்டு வணங்கிப் பொடிபூசிக் கொள்கிறோம். கண்ணப்பா "குற்றம் நீ குணங்கள் நீ" பாடுவோம்.*

**இருவரும்:** "குற்றம் நீ குணங்கள் நீ கூடல்ஆல வாயிலாய்!
சுற்றம் நீ பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்றநூல் கருத்தும் நீ அருத்தமின்பம் என்றிவை
முற்றும் நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே"

**பொன் :** *இறைவன் திருமுன்னே இடப்பால் இருக்கும் இது வெள்ளியம்பலம்!*

**கண் :** *முகடுமட்டும் தான் வெள்ளியாக இருக்குமென எண்ணினேன். இறைவனுமே வெள்ளியுருக் கொண்டு விளங்குகின்றான்! திருவருள் பொழியும் முகத்தை மட்டும் வெள்ளியால் மூடி விரும்பாமல் விட்டு ள்ளார்கள்.*

**பொன் :** *கண்ணப்பா! இறைவன் ஊன்றிய திருவடியையும் தூக்கிய திருவடியையும் பார்த்தாயா!*

**கண் :** *ஆமாம்! இப்பொழுதுதான் பார்க்கிறேன். ஊன்றிய திருவடியைத் தூக்கி, தூக்கிய திருவடியை ஊன்றி ஆடுகிறார்! திருவிளையாடலில் வரும் கால்மாறி யாடிய கதை இதுதானே.*

**பொன் :** *ஆம். இறைவனுக்குத் திருமணம் நிகழ்ந்தபோது திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் விருந்து ண்டனர். பதஞ்சலி முனிவரும், புலிக்கால் முனிவரும் பொன்னம்பலக் கூத்தைக் காணாமல் உண்ணாத நோன்பு உடையவர்கள். ஆகலின் அவர்களுக்காக இறைவன் வெள்ளி மன்றம் படைத்து, அவர்கள் கண்டு மகிழ்ந்து உண்ணுமாறு ஆடினான் என்பது வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய செய்தி. பின்னே, இராசசேகர பாண்டியன் என்பவன் கூத்துக்கலை பயின்றானாக, அக் கூத்தால் தனக்கு உண்டாகும் களைப்பை நினைத்து, எப்போதும் இறைவன் இப்படித் திருக்கூத்து ஆடிக் கொண்டே இருக்கிறானே, இவன் கால் நோவாதா? என ஏங்கினான்; இறைஞ் சினான்; கால்மாறியாடி அருள் வேண்டினான்! அருள் புரியவில்லையானால் ஆருயிர் துறக்கவும்*

*துணிந்தான். அவனுக்கு அருள் புரியுமாறே இறைவன் கால் மாறியாடினான்! இத்திருவிளை யாடலை உலகுக்கு விளக்கும் வகையால் இறைவன் காட்சி வழங்கிக் கொண்டிருக்கிறான்!*

**கண்** : *கால்மாறி யாடும் கற்பகத்தைக் கண்டு களிகூர்ந்தான் வேந்தன்! இங்கே பதஞ்சலியாரும் புலிக்காலாரும் நிற்கின்றனர்! இறைவன் கால்மாறியாடும் செப்புத் திருமேனி ஒன்றும் அழகாக உள்ளது. படிகளும் தூண்களும் கூட வெள்ளிமன்றம் என்பதை வெளிப் படுத்துகின்றன! இறைவன் தோற்றமும் துடிப்பான ஆட்டமும் அசைக்கிறது ஆட்டுகிறது; உணர்வைத் தட்டி எழுப்பி உயரத்தில் உயரத்திற்குப் பறக்க வைக்கிறது. இஃது*

> "அடிபேரில் பாதாளம் பேரும் அடிகள்
> முடிபேரின் மாமுகடு பேரும் - கடகம்
> மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
> அறிந்தாடும் ஆற்றா தரங்கு"

*என்று காரைக்கால் அம்மையார் பாடிய 'அற்புதப்' பாடலையே நினைவூட்டுகிறது.*

**பொன்** : *அம்மை திருமுன் சிலைகள் இல்லை என்பதைக் கண்டோமே! இங்கும் இருக்கிறதா?*

**கண்** : *இல்லையே!*

**பொன்** :

> ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
> நன்றே நினைமின்

*என்னும் மந்திரப் பொருள் விளக்கம் இதுதான்.*

**கண்** : *நல்லது. இக் கருவறை, விமானம் - இவையெல்லாம் செய்தவர் யார்? நீ கூறவில்லையே!*

**பொன்** : *இது மிகப் பழமையானது! இந்த விமானம் திசைக்கு இரண்டாக எட்டு யானைகளும், திசைக்கு எட்டாக முப்பத்திரண்டு சிங்கங்களும், திசைக்குப் பதினாறாக அறுபத்து நான்கு பூதங்களும் தாங்கிக் கொண்டிருப்பது போன்ற அமைப்பு உடையது. இது விண்ணவர் கோமானால் சமைக்கப்பட்டது என்பர். இனிச் சுற்று மண்டபங்களை நாம் காணலாம். முதலாம் இரண்டாம்*

*திருச்சுற்றுக்களைக் கடந்து வரும் இக்கோபுரவாயில் மண்டபம்* ***பேச்சக்கால் மண்டபம்;*** *இதனைக் கடந்து கிழக்கே இருப்பது* ***வீரவசந்தராயர் மண்டபம்.*** *இதில் நாற்பத்தாறு தூண்கள் உள்ளன. இதனைக் கட்டியவர் முத்துவீரப்ப நாயக்கர் என்பவர். இவர், திருமலை நாயக்கரின் தமையனார். இதனைக் கி.பி. 1611 இல் கட்டினார். இங்கு இப்பொழுது பல வகைக் கடைகள் உள்ளன.*

**கண்** : *அம்மன் திருவாயிலில் உள்ளபடியே இதன் வாயிலில் உயர்ந்த திருவாச்சி உள்ளதே.*

**பொன்** : *ஆம்! அதனைச் செய்த மருது வீரர்கள்தாம் இதனையும் செய்தனர். இப்பொழுது சிவகங்கைத் திருக்கோயில் ஆட்சியினரே விளக்கேற்றி வருகின்றனர்! அதேபோல் இதுவும் 1008 விளக்குகள் உடையதே!*

**கண்** : *அம்மைக்குச் செய்ததை அப்பனுக்கும் செய்தது தானே சரி.*

**பொன்** : *கண்ணப்பா! இது, புகழ் மிக்க* ***ஆயிரக்கால் மண்டபமாகும்!***

## 13. ஆயிரக்கால் மண்டபம்

**கண்** : *தளவாய்* ***அரியநாதமுதலியார்*** *கட்டியது அன்றோ இது?*

**பொன் :** *ஆம். அவர் உருவம் இவ்வாயிலின் மேல்பால் குதிரையின் மேல் இதோ இருப்பதைப் பார்!*

**கண்** : *குதிரைமேல் அமர்ந்து தாவிச் செல்ல விரையும் தளவாய் உருவம் சிறியதுதான்! ஆனால் அவர் செயல்திறமும் சூழ்ச்சி வன்மையும் அறிவுக் கூர்ப்பும் எவ்வளவு பெரியன!*

**பொன் :** *குதிரை முன்னிரு கால்களையும் தூக்கிப் பாய்ந்து நிற்பதும், அதற்குத் தக்கவாறு இடப் பின்காலை அழுத்தமாக ஊன்றி நிற்பதும் வலப் பின்காலை எடுத்திருப்பதும் ஆடல்மா என்பதை அருமையாகக் காட்டுகின்றன.*

**கண்** : *தொங்கும் மிதிவாரில் (அங்கபடியில்) காலை வைத்துள்ளார் தளவாய்.*

**பொன் :** *அந்தக் காலையும், தூக்கிய குதிரைக் காலையும் இணைத்திருத்தல் இன்னும் பேரழகாம். தாடியுடன் இருக்கும் அரியநாதர் கையிலே கோல் கொண்டுள்ளார்!*

**கண்** : *விசுவநாத நாயக்கரின் தோழராகி அரசுக் கோல் கொண்டிருந்த தளவாய், இங்கே கோல் கொண்டு கொலு வீற்றிருப்பது என்ன வியப்பா?*

**பொன் :** *கல்லிலேயே குதிரைக்குக் கடிவாளம் அமைத்து அக்கடிவாளத்தைப் பற்றி இழுப்பதால் வாயை அகலத் திறந்துள்ளது. குதிரை என்பதைச் சிற்பி நன்றாகவே காட்டியிருக்கிறான்.*

**கண்** : *அரியநாதர் உச்சியில் முடியும், காதில் குண்டலமும் இருந்தமையை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.*

**பொன் :** *இவர் தளவாய் என்பதை எடுப்பான குதிரை, கோல் முதலியவற்றால் உணர்த்திய சிற்பி, அவர் அறிவு அமைதி தொண்டு முதலியவற்றை முகப் பொலிவிலும் கண்ணொளியிலும் நிறுத்தியுள்ளான். அடுத்த மேற்குத் தூணில் இருப்பவர்* ***பிச்சைப் பெருமான்!***

**கண் :** *இதற்குமேல்பால் உள்ள தூணில் உள்ளவன் இடுப்பில் கச்சை கட்டியுள்ளான். இடுப்பிலும் கழுத்திலும் சில மணிமாலைகளை அணிந்துள்ளான். கழல் கட்டி யுள்ளான்; செருப்புப் போட்டுள்ளான். இவன் யார்?*

**பொன் :** *இவனா? நன்றாகப் பார்!* ***கண்ணப்பா!*** *நன்றாகப் பார். வலக்கையில் அம்பும் தோளில் வில்லும் இருப்பதையும், ஒருகால் இலிங்கப்பீடத்தின்மேல் இருப்பதையும் கண்டாயா?*

**கண் :** *ஆம்! ஆம்! தன்னொப்பதோர் அன்பு இல்லாக் கண்ணப்பன்.*

**பொன் :** *ஆம்! கண்ணப்பா! அவனே தான்!*

**கண் :** *பேரொளி மாலையும் மாலைதான்; காரிருள் மாலையும் மாலைதான்! அப்படி ஒப்புமை அந்தக் கண்ணப்பனுக்கும் இந்தக் கண்ணப்பனுக்கும்!*

**பொன் :** *எல்லாரும் கண்ணப்பனாகி விட்டால் அவனுக்கு மதிப்பு இருக்குமா? அப்படித்தான் நானும் பொன் னப்பனாக இருக்கிறேன்.*

**கண் :** *காளத்தி வேடன் கண்ணப்பனின் தலைக் கொண்டை இளஞ் சுரைக்காய் அளவுக்கு உள்ளது; எலும்பு வரிசை எளிதாகப் புலப்பட்டாலும், எழிலாகவே விளங்குகிறது. நெஞ்சின் விரிவும் படலமும் வயிற்றின் சுருக்கமும் உடல்வாகினை எடுத்துக் காட்டுகின்றன.*

**பொன் :** *காலின் மூட்டும், தசைப் புடைப்பும் இவன் முறுக்கேறி உடல் நலத்தைக் காட்டவில்லையா!*

**கண் :** *மலை நிலத்தின் மாண்பு, அதன் தலைவனிடத்தும் விளங்குவது இயற்கை தானே!*

**பொன் :** *இது, முதல் கண்ணைத் தோண்டுதல். ஏனெனில் காலைப் பீடத்தின்மேல் வைத்துள்ளான்! சிவகோ சரியார் மறைந்து நின்று பார்க்கிறார் என்பதைச்*

*சிற்பி, தூணின் மேற்குப் பக்கத்தில் அவர் திகைப்புடன் இருப்பதைக் காட்டுதலால் விளக்குகிறான்.*

**கண்** : *சிவகோசரியார் முகத்தில் வியப்புடன் கூடிய கவலை குடி கொண்டுள்ளது. அவர் முகத்திற்கு இளந்தாடி அழகு செய்கின்றது! இது குறிஞ்சி நிலம் என்பதற்காக யானை காட்டப்பட்டுள்ளது.*

**பொன்** : *சரி, இவரைப் பார். இவரும் முக்கண்மூர்த்தியே ஆவர்.. நாற்கை நம்பியாகத் திகழும் இவரின் காலின் கீழே மிதிபட்டுக் கிடப்பவனைப் பார்!*

**கண்** : *மிதிபடுபவன் கிடக்கும் அலங்கோலத்தையும் மிதியின் அழுத்தத்தையும் மறந்து - ஏன் மிதிப்புக் கொடுமையைக் கூட நினையாமல் - வியப்போடு நம்மைப் பார்க்க வைப்பது கலையின் சிறப்புத்தானே!*

**பொன்** : *ஆணவத்தை அரன் அலற அலற மிதிப்பது இது. நெஞ்சில் வலக்கால் மிதியை வாங்கித் தலை கீழே பட்டும் நிமிர்ந்து மேலே பார்க்கிறான் ஆணவன்; விழி பிதுங்கத் திணறுதலுடன் பார்க்கிறான்; அவன் கால் வளைந்து தலைக்குக் கீழே கிடப்பது தூணின் கீழ் பக்கத்தை வளைத்துக் கொண்டது. கேடயக்கை மேல் பக்கத்தைப் பற்றிக் கொண்டது; இவன் பெருவிரலையும் அதிலுள்ள நகத்தையும் பார்!*

**கண்** : *இந்த நகத்தால் இவன் கிழிக்கத் தொடங்கினால் நரசிங்கம் கிழித்த கிழிப்புத்தான்! ஆணவத்தை எவ்வளவு செம்மையாக மிதித்தாலும் மிதிகொஞ்சம் தளர்ந்தால் தலையெடுத்து மேலே பார்க்கும்! கீறும்; கிழிக்கும்! 'எண்ணிக் கொள்க' எனச் சொல்லில் காட்டாமல் கல்லில் காட்டியுள்ளான் கலைஞன்! நாம், "நான் எனது என்னும் செருக்கு அறுப்போம்! அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுப்போம்" என உறுதி கொள்வோம்.*

**பொன்** : *இந்த ஆணவனை 'முயலகன்' என நினைக்கிறாயா?*

**கண்** : *ஆம். அப்படித்தான் நினைத்தேன். உற்றுப் பார்த்தால் அவனல்லன். இவன் போரிட வந்தவன்போல் அல்லவா இருக்கிறான்!*

**பொன் :** *இவன்* ***சித்தன்*** *என்பான். தன் வாளாசிரியனைப் பகைத்தது மட்டு மல்லாமல், அவன் மனைக்கும் கேடு சூழ்ந்த பாவி! அவன் செருக்கை ஒழிக்க இறைவனே வாளாசிரியனாக வந்து இவன் அங்கத்தை வெட்டினான்.*

**கண் :** *புரிகிறது! புரிகிறது! அங்கம் வெட்டிய திருவிளையாடல் காட்சியோ இது?*

**பொன் :** *ஆம். இந்தக் கடைசித் தூண் இசைத்தூண். அடியும் முடியும் ஒன்றாய் இருக்க, இடையே பலவாய்ப் பிரிந்த அழகுத் தூண். முப்பட்டை, நாற்பட்டை, உருளை முதலாகப் பல வடிவத்தூண்கள்; ஒவ்வொரு பக்கத்திலும் நான்கு தூண்கள்; உள்ளே மூன்று தூண்கள்! எப்பக்கமும் ஏழு வரிசை! ஏழிசை எழுப்பும் எழில் தூண்கள்!*

**கண் :** *"ஏழிசையாய் இசைப்பயனாய்" இறைவனைக் கண்ட இனிய தமிழ் மக்கள், இறைவனில் இசையையும், இசையினில் இறைவனையும் கண்டு, இறைவனை வடித்த கல்லிலேயே இசையையும் வடித்துக் காட்டி யுள்ள அருமை பெரிது! மிகப் பெரிது!*

**பொன் :** *அருமை பெரிதுதான்! நம்மவர் அருமை நம்மவர்க்கு என்று புலப்பட்டது? எங்கிருந்தோ வந்தவர்கள் நம்மவர் அருமையை அறிந்து போற்றிப் புகழும் அளவுக்கு, நம்மவர் எவர் உணர்ந்தார்? எவராவது வெளிநாட்டவர் பாராட்டிய பின்னர்த் தானே நம்மவர்கள் இறுக்கி மூடிய இமைகளை ஏதோ கொஞ்சம் திறந்து பார்க்கின்றனர்! இதோ பார்! நம் கண்ணெதிரே ஒரு கூட்டம் எப்படிக் கும்மியடித்துக் கொண்டு 'நானும் ஆயிரக்கால் மண்டபத்தைப் பார்த்தேன்' என்று பெயர் சொல்லிவிட்டுப் போகின்றது. இந்த வெள்ளைக்காரர் இருவரையும் பார். இவர்கள் இந்தத் தூணை விழித்தகண் மாறாமல் விழுங்குவதுபோல் பார்க்கின்றனர்! ஊடே உருளும் தூண் உண்டு என்பதைப் படித்துவிட்டு வந்து, அதை உருட்டிப் பார்க்கின்றனர். மெல்லென ஒலி எழுப்பக் கேட்டுச் சுவைக்கின்றனர். இத்தகைய தூண் இம் மண்டபத்தில் உண்டு என்பதை எத்தனை பேர் அறிவார்கள்?*

**கண்** : *எனக்கு நினைக்க நாணமாக இருக்கிறது! நானே இப்பொழுதுதானே பார்க்கிறேன்.*

**பொன் :** *இப்பொழுது பார்க்கிறாய் என்பது குற்றமா? பார்ப்பதை எப்படிப் பார்க்கிறாய் என்றுதானே கருத வேண்டும்! கண்ணை மூடிக்கொண்டு காட்சி பார்ப் பவர்களையே நான் கூறுகிறேன். சரி; இதே போல் இம் முகப்பின் கீழைக்கோடியிலும் இசைத் தூண் உண்டு! வடக்கு ஆடி வீதியிலும் உண்டு! இன்னும் வியப்பு என்ன வென்று தெரியுமா? சிற்பங்களிலேயே இசைச் சிற்பங்கள் உண்டு. அவற்றைப் பல்வேறு இடங்களில் மெல்லெனத் தட்டினால் வெவ்வேறு ஒலியெழும், அவற்றை உள்ளே பார்க்கலாம். இம்மண்டப வாயிலின் கீழ்ப்பக்கத் தூணைப் பார்.*

**கண்** : *இவன், குதிரையின் தலையில் இடக்காலையும், முதுகில் வலக்காலையும் வைத்துள்ளான். அருமையான கொண்டையுடனும் தொங்கு காதுடனும் விளங்கு கிறான். கொத்துப் பூக்களும் இடைத் தொங்கலும் அழகாகவே உள்ளன. முண்டாசுக் கட்டும் தலைக் குஞ்சமும் எடுப்பாகவே இருக்கின்றன.*

**பொன் :** *இவனை அரிச்சந்திரன் என்கின்றனர்; இதிலேயுள்ள இச் சிறிய வீரனைப் பார். இவன் கழுத்தில் மான் குட்டியைப் போட்டுக்கொண்டுள்ளான். இதோ தூண் மேலே உடும்பு! இந்த உடும்புப் பிடியைக் காட்டியுள்ள திறம் நன்றாக உள்ளது! கல்லிலேயே ஒரு வளையம் அடித்து அதனை உடும்பைக் கவ்வவிட்டு விட்டான்!*

**கண்** : *எந்த உடும்பு கவ்வுதலை விட்டாலும், இந்த உடும்பு கவ்வுதலை விடாது.*

**பொன் :** *அடுத்த கிழக்குத் தூணில் இருப்பவள் சந்திரமதி.*

**கண்** : *அவள் கையில் வைத்துள்ள இறந்த குழந்தையே நன்றாக அவளை இன்னார் என்று காட்டுகின்றது.*

**பொன் :** *நாடு நகர் இழந்து அடிமைப்பட்ட நிலையிலும், தான் வடிக்கும் வடிவழகி ஆடை அணிகலங்களால் பொலி வாகவே விளங்கவேண்டும் என்று அந்தக் கலை நெஞ்சம் எண்ணியிருக்கிறது. 'முனிவன்' பறித்துக்*

*கொண்டாலும், கலைஞன் பறித்துக்கொள்ள விரும்பாமல், ஆடை அணிகளை வாரி இறைத்துள்ளான்.*

**கண்** : *கழுத்தணி என்ன! இடுப்பணி என்ன! காது வளையங்கள் எத்தனை! தொங்கல்கள், தோடுகள் வளையல்கள், தாம் எத்தனை எத்தனை! திருமுடியில் தான் எத்தனை வேலைப்பாடு!*

**பொன்** : *இவ்வளவு வேலைப்பாடு செய்தவன், தான் உணர்த்த விரும்பும் உணர்வு வேலைப்பாட்டைக் 'கோட்டை விடாமல்' எளிமையாக வெளிப்படுத்தியுள்ளான். மூக்குக்குக் கீழ் உதடுவரையுள்ள பள்ளம், கன்னத்தின் அமைப்பு, மகனைப் பார்க்கவும் முடியாமல், பாராமல் இருக்கவும் முடியாமல் இரண்டுங்கெட்ட நிலையில் நோக்கும் நோக்கு! இவற்றில் சிற்பி கவலைக்கோடுகளை அள்ளித் தெளித்துள்ளான்.*

**கண்** : *குழந்தையைக் கையில் எடுப்பவர் எப்படி நிற்க வேண்டும்? 'இப்படி நிற்க வேண்டும்!' எப்படி எடுக்க வேண்டும்? 'இப்படி எடுக்க வேண்டும்!' என்பதைத் தீட்டிக் காட்டியுள்ள சிற்பி ஒரு தாயாக இருந்து குழந்தையை எத்தனை முறை தூக்கித் தூக்கிப் பார்த்தானோ? எத்தனை தாய்மார்கள் குழந்தை களைத் தூக்கிக் கொண்டு நிற்பதைக், கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றானே?*

**பொன்** : *இவள் ஒரு குறவஞ்சிக் கொடி. இவள் கொண்டை ஒரு பெருஞ் சுரைக்காயளவு உள்ளது. காதில் தோடு இல்லை. கல் பதித்த வட்டம் அணிந்துள்ளாள். பாசி மாலை போட்டுள்ளாள். மார்பிலே பச்சிளங் குழந்தையைப் போட்டுப் பால் குடிக்க விட்டுள்ளாள். பெருங் குடும்பி இவள்! ஓலைப் பெட்டியை இடுக்கிய தோள்மேல் ஒரு பிள்ளை. வலக்கைக் கீழே ஒரு பிள்ளை! இரண்டு பிள்ளைகளுமே உணவில் கருத்தாக உள்ளன.*

**கண்** : *கல்லில் வடித்த நார்ப்பெட்டி நார்ப்பெட்டியாகவே உள்ளது. அழகுப் பின்னல் அப்படியே விளங்குகிறது. வட்டக் குஞ்சத் தொங்கலும் பெட்டிக்கு அழகு செய்கிறது.*

**பொன் :** வலக்காலை முன்னே தூக்கி, இடக்காலைப் பின்னே தள்ளி இரு முழந்தாள்களையும் இடைமிகுத்து நிற்கும் இவள் கோடுபோட்ட பாவாடை உடுத்துள்ளாள். இடுப்பும் வயிறும் இடைக்கச்சும் உழைப்பின் இயற்கை யழகை வெளிப்படுத்துகின்றன.

**கண் :**

"இலகுநீ றணிந்து திலகமும் எழுதிக்
குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து
சலவைசேர் மருங்கில் சாத்திய கூடையும்
வலதுகைப் பிடித்த மாத்திரைக் கோலும்"

உடைய **குற்றாலக் குறவஞ்சியா**கவே இவள் விளங்குகிறாள்.

**பொன் :** இவளுக்கு இணையானவனைப் பார். அடுத்த தூணில் நல்ல உயரமானவன்; ஆனால், இரு பங்கை ஒரு பங்காகக் குறுக்கியதுபோல் குறுகி நிற்கிறான்.

**கண் :** நெற்றிக் கட்டும் உச்சிக் குஞ்சமும் எடுப்பாக உள்ளன. ஐந்தாறு பனம்பழங்களை அடுக்கி வைத்ததுபோல் உள்ள கொண்டை இவற்றுக்கு அழகு செய்கின்றது. காதில் உருத்திராக்கத் தொங்கல்; கழுத்தில் மணி மாலையும், தாயத்தும்.

**பொன் :** திருக்கிவிட்ட மீசை; உருட்டி விழிக்கும் விழியில், ஒரு கோணற் பார்வை; வலக்கையில் ஒரு மான் கொம்பு; ஒரு குரங்கும் அதே கையில்; அதனைக் கட்டிய முப்புரிக் கயிறோ, அப்படியே அழகிய கயிற்றையும் தோற்க வைக்கும்.

**கண் :** குரங்கு, தன் கையால் அடி வயிற்றைப் பற்றி, மூக்கை நீட்டி, முகத்தை ஒரு பக்கம் திருப்பி 'நான் குரங்கு என்பது புரியவில்லையா?' எனக் கேட்கிறது!

**பொன் :** இவன் கால், கை, தசைப்பொலிவு இவற்றை விளக்க வேண்டியது இல்லை. இவன் இளைய வீர பத்திரனாக விளங்குகிறான் தோற்றத்தில்!

**கண் :** இவன் கூனிக் குறுகிய நிலை, வீரபத்திரர் முன்னே ஒட்டுமா? "கண்ணிகுத்தி வேட்டியாடி, ஞாளிபோல் சுவடெடுத்துப் பூனைபோல் ஒளி போட்டு, நரிபோல் பம்மிக் கூளிபோல் தொடர்ந்தடிக்கும்" **குறவஞ்சிச் சிங்கம்** போலவே விளங்குகிறான்.

**பொன் :** *நீ சொல்வது சரிதான்; ஏற்றுக் கொள்கிறேன். கடைசித் தூண் பற்றி முன்னரே பேசினோம்.*

**கண் :** *ஆம். உள்ளே போகலாம்.*

**பொன் :** *இவர்கள் வாயில் காவலர். தெற்குப் பார்த்து நின்று வரவேற்கின்றார், மேல்பால் நிற்பவர்; கீழ்பால் நிற்பவர், நாகத்தின் மேல் கால் வைத்துத் தண்டத்தின் மேல் கை போட்டு நடனக் கோலத்தில் வரவேற்கிறார். நடராசர் உள்ளே இருக்கிறார்;* **'நட ராசா உள்ளே'** *என்று நம்மை ஏவுகிறார். மேற்கே நிற்கும் காவல் வீரருக்கு மேல்பால் தூணில் பிள்ளையார் உள்ளார். அவர் கையில் அமுத கலயம் உள்ளது.*

**கண் :** *கலைவல்ல சிற்பி முன்னோர் மொழி வழியே ஒரு கொம்பை ஒடித்திருப்பான் பிள்ளையாருக்கு. எந்தக் கொலைஞனோ இருக்கும் ஒரு கொம்பையும் ஒடித்துவிட்டான்!*

**பொன் :** *கூத்தாடும் இப் பிள்ளையாருக்குக் கைகள் பத்து! துதிக்கையுடன் சேர்த்தால் பதினொன்று. 'அரசனும் ஐங்கரனும் ஒருவரே!' என்பதைக் குறிக்கொண்டு இப்படிப் படைத்துள்ளனர். அடுத்த தூணில் இருப்பவர் வேட்டைப் பெருமான் (கிராதர்). இவர் கையில் உள்ள வில் நாணைப் பார். அது பாம்பு. இரு விரல்களில் இரு கால்களை ஊன்றி நிற்கும் மான் எடுப்பாக உள்ளது. கையில், அம்பும், அனற் கொழுந்தும் உள்ளன.*

**கண் :** *அடுத்திருப்பவர் பொற்றாமரைக் குளத்தின் படித் துறைத் தூணில் நின்றவன் போலத் தெரிகின்றாரே.*

**பொன் :** *ஆம்! அவர்தாம்! மதுரைக் கோயிலை முதற்கண் கண்ட* **குலசேகர பாண்டியர்.**

**கண் :** *மார்பில் அணிந்த பதக்கமே இலிங்க உருவில் இருப்பது, இவர் இறையன்பை வெளிப்படுத்தும்.*

**பொன் :** *இடையில் செருகிய கத்தி, இவர் வீரர் என்பதை விளக்கும். கிழக்கே நிற்கும் காவல் வீரருக்குக் கீழ்பால்* **ஒருதிரு முருகன்** *உள்ளார்.*

**கண்** : *"ஆடும் பரி, அணிசேவல்" என்றதற்குத் தக்கவாறு அவர் மயிலும், மயில்மேல் அவர் இருக்கும் இருப்பும் உள்ளன.*

**பொன்** : *தோகை விரித்தாடும் மயிலின் முதுகில் வலக்காலை ஊன்றியிருக்கும் முருகன், இடக்காலை மயிற் குதிரையின் அங்கவடியில் வைத்துள்ளார். நாற்கை யராக விளங்கும் இவர், மயிற்கடிவாளம் பற்றி இழுக்கிறார். இணைத்திரிசூலம் போல விளங்கும் ஒரு கருவியைப் பிடித்துள்ளாரே! இஃதென்னவென்று தெரிகின்றதா?*

**கண்** : *இதுதானே வச்சிரப்படை.*

**பொன்** : *ஆம்! இந்திரன் மகன் மணவாளன், கையில் வச்சிரம் வைத்திருத்தல் அருமையா? அடுத்து இருப்பவர்* **நாகராசர்**. *ஐந்தலை நாகத்தின்கீழ் அழகாக விளங்குகிறார்.*

**கண்** : *உச்சிப் பெருங்கொண்டை சரியான உருண்டை. திருநீற்றுக் கீற்றும், ஏற்றிய ஒரு நாமமும், தூக்கிய புருவமும், உயரத்தில் குறுகிப் பருத்த கழுத்தும், உதடும், உதட்டுக்கும் மூக்குக்கும் இடைப்பட்ட பட்டையும் நன்றாக அமைந்துள்ளன.*

**பொன்** : *கைவண்ணம் வெளிப்பட நின்ற இக்கவின் சிலையின் கைகள் இரண்டும் ஒடிந்துள்ள கொடுமை, நெடுமூச்சு விட வைக்கிறது. உருளை போன்ற காதுத் தொங்கல் புதுமையாக உள்ளது. அடுத்து அழகுக்கோலம் கொண்டு விளங்குபவள்* **கலைமகள்.**

**கண்** : *வீணை செய்யும் ஒலியில் இருப்பவள், வீணை ஏந்திய கையளாக விளங்குகிறாள்.*

**பொன்** : *வீணையின் நரம்புகளில் விளையாடும் கைவிரல் களும் பார்! மேலே மூன்று விரல்கள் வருடுகின்றன. கீழே நான்கு விரல்கள் வருடுகின்றன.*

**கண்** : *முழந்தாள்வரை முற்றுடையுடுத்த இவ்வம்மை, வீணைக்கு ஏற்ப நெளிந்து வளைந்து இருப்பது கவின் காட்சியாம். இவள் காதில் சக்கரத் தோடு; நடுவே திருகுப் பூ; உச்சியில் முருகுப் பூ!*

**பொன்** : *இருக்கட்டும்; இவள் தோளில் கிளியைப் பார்த்தாயா?*

**கண்** : *அது, இவ்விடத்துப் பெருமை! மலைமங்கை தோளில் அங்கே கிளி! கலைமங்கை தோளில் இங்கே கிளி! தேனினும் இனிய மழலை மொழி கேட்டு யானும் இவ்வாறு மொழிய இயலவில்லையே என்று கிளி நாணி அகன்று போகுமென* **இளங்கோவடிகள்** *கூறினான். இங்கே இவள் வீணையொலி கேட்கவோ, மழலைமொழி கேட்கவோ கிள்ளை தோளில் அமைதிப் பிள்ளையாக அமர்ந்துள்ளது.*

**பொன்** : *சிலர், தாம் இன்புறுவதற்காகப் பிறர்க்கு எவ்வளவு தொல்லையும் தரத்துணிவர். ஆனால் இக் கிளி வீணை இசைக்க இடையூறு செய்யாமல் இருந்து தானும் இன்பம் தந்து, இன்பம் தானும் பெறுகின்றது இஃது, இருக்குமிடத்தின் பெருமை! அடுத்த உள்கட்டுக்குப் போகலாம். இவர்* **திருமால்.** *இவன் பேடி வடிவ* **அருச்சுனன்.**

**கண்** : *சரிதான்; தாடியும் மார்பும் பார்த்தால் பேடி என்பது விளங்கி விடுகின்றது. இது பாண்டவர் மறைந்து வாழ்ந்த காலத்து அருச்சுனன் நிலை!*

**பொன்** : *ஆம், இவனுக்கு எதிரே இருப்பவள் திரௌபதி. இவளுக்குத் தெற்குப் பக்கம் உள்ள ஒருவனைப் பார்! என்ன சிரிக்கிறாய்!*

**கண்** : *சிரியாமல் யாராவது இருக்க முடியுமா? உனக்குச் சிரிப்பு வரவில்லையா? சிரிக்கத்தக்க ஒருவனை இப்படிச் சித்திரித்துக் காட்டியிருக்கிறான் போலும் சிற்பி.*

**பொன்** : *ஆமாம். கீசகனை இழிவு படுத்துவதற்காக இதனை வடித்திருக்கலாம். இவன் தலைக்கட்டையும் சப்பளிந்த மூக்கையும் ஓட்டைப் பல்லையும் பார்! இவற்றை விஞ்சும் தொந்தியையும் பார்.*

**கண்** : *முண்டாசுக்கட்டும், தண்டாயுதமும் பொருத்தம் தான்! அதற்குமேல் பொருத்தம் கழுத்துப் பட்டியும் தொங்கலும்! இப்படியும் சிற்பிகள் நகைச்சுவையை வெளிப்படுத்தியுள்ளனர்.*

**பொான் :** *இவனைப் பார்! இவன் தோளில் ஒரு பெண்ணை வைத்துள்ளான். அவள் கால் ஒன்று இடக்கையின் மேல் உள்ளது. வலக்கால் இவன் இடுப்பில் உள்ளது விரைந்து ஓடுவதுபோல் உள்ளான்.*

**கண் :** *தன் அன்புக் காதலியை அழைத்துப்போகும் இவனைத் தடுக்க அவள் உற்றார் உறவினர் வந்திருக்கலாம். அவர்களிடமிருந்து தப்பித்து இவளைக் கொண்டு போவதற்காக இந்த ஏற்பாட்டை இவன் செய்திருக் கலாம்.*

**பொான் :** *இது, 'கலிகாலக் காட்சி இத்தகையது' என்பதைக் காட்டுவது என்கிறார்களே!*

**கண் :** *பரமன் பனிச்சடைமேல் பாவையை வைத்த செய்தியைப் பேசிக்கொண்டு, நாம் இப்படிச் சொல்வது சரியாகத் தோன்றவில்லை!*

**பொான் :** *சரி, நேரே போய்க் கூத்தப் பெருமானைக் கும்பிடுவோம்.*

**இருவரும் :** "குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த
மாநிலத்தே."

**பொான் :** *கண்ணப்பா! கூத்தப் பெருமான் திருமுன்னர் உள்ள இந் நடு மண்டபத்தின் இருபால் தூண்களையும் பார். கிழக்கே பிச்சைப் பெருமான், தருமன், வீமன், இரதி, வீரபத்திரர் ஆகியோர் உள்ளனர். மேற்கே மோகினி, அருச்சுனன், மனிதவிலங்கு, மன்மதன், அக்கினி வீரபத்திரர் ஆகியோர் உள்ளனர்.*

**கண் :** *பிச்சைப்பெருமான் வழக்கம்போல் எடுப்பாக நிற்கிறார். முனிவர் மனைவியரைப் பார்! மேலே இருவர்; கிழக்கே ஒருத்தி; தெற்கே ஒருத்தி! ஒருத்தி நிற்கும் நிலை தன்னையே மறந்துவிட்டாள் போல இருக்கிறது!*

**பொன் :** *முனிவர்கள் என்ன இதற்குக் குறைந்தவர்களா? எதிரே நிற்கும் மோகினிக்கு இடப்பால் மூவர்; வலப்பால் நால்வர்; ஒரு வேடிக்கை, ஒரு முனிவர் மேலே இன்னொரு முனிவர்!*

“உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு”

*என்பதை நிலை நாட்டுகிறார் இந்த முனிவர். அடுத்துத் தருமனுக்கு எதிரே அருச்சுனனும், வீமனுக்கு எதிரே விலங்கும், இரதிக்கு எதிரே மன்மதனும், வீரபத்திரர் களும் உள்ளனர். இவர்களைப் பற்றிக் கிளிக்கூட்டு மண்டபத்தில் பார்த்துள்ளோம்.*

**கண் :** *இரதி மிக அழகாக உள்ளாள்.*

**பொன் :** *சொல்ல வேண்டுமா? அழகிய பெண்களை இரதிக்கு ஒப்புமை கூறுவது என்றால், அவள் அழகிக்கு அழகியாகத் தானே இருக்கவேண்டும். ஆதலால் அழகெல்லாம் திரட்டி அவளைப் படைத்துள்ளனர்.*

**கண் :** *நாம் அன்னத்தைக் கண்டது இல்லை. படித்திருக் கிறோம்! எப்படி இருக்கும் என்பதை இங்கே பார்க்கிறோம். அது போல் இரதியைக் கற்பனை செய்து பாடியவன் வாக்கையெல்லாம் திரட்டி வடித் துள்ளான் சிற்பி!*

**பொன் :** *அன்னத்தின் தோகைச் சுருளைப் பார்; வாத்துக்கால் போன்ற அதன் காலையும் பார்; அவர் தோழி ஒருத்தி பன்னீர்க் குடுவை வைத்துள்ளாள்; சாமரம் வீசுகிறாள்!*

**கண் :** *பாவம்! அன்னத்தில் இருக்கவே இவளுக்கு வியர்த்துக் கொட்டி வெப்பமாக இருக்கிறது போலும்.*

**பொன் :** *இவள் சிலையிலும் வீரபத்திரர் சிலையிலும் ஒரு தனிச் சிறப்புண்டு முன்னே சொன்னேனே! இசைச் சிற்பங்கள் இவை. வெவ்வேறு இடத்தில் தட்டினால் வெவ்வேறு இசையுண்டாகும்!*

**கண் :** *நல்லவேளை! இது பலருக்குத் தெரியாது; தெரிந் திருந்தால் இவை உருத்தெரியாமல் கூடப்போயி ருக்கும். சும்மாவே எத்தனை சிற்பங்களை உடைந்த - உடைக்கின்ற - கைகள் இந்நாட்டில் உண்டு!*

**பொன் :** *இக்கோயிலில் உள்ள மண்டபங்களில் மிகப் பெரியது இதுவே. இதன் நீளம் 75 மீட்டர், அகலம் 72 மீட்டர்; தூண்கள் 985; 15 தூண்கள் இருக்க வேண்டிய பரப்பில் உட்கோயில்கள் இரண்டும் உள்ளன.*

**கண் :** *அரியநாதர் இதனைக் கட்டி அழகு பார்த்தது அருமையே. அதற்கு மேலும் ஓர் அருமையாக இப்பொழுது இம் மண்டபத்தைக் காட்சிக் கூடமாக அமைக்கப் பெற்றதைக் குறிப்பிடலாம். சமயம், சிற்பம், ஓவியம் முதலிய துறைகளில் மிக அரிய செய்திகளை அறிந்துகொள்ள இக் காட்சிக்கூடம் உதவுகிறது என்பதை இதனை மேலோட்டமாகப் பார்த்தவர்கள் கூட அறிந்து கொள்வர். இத்தகைய ஏற்பாடு செய்த பெருமக்களும் நம் நெஞ்சில் நிற்கத் தக்கவர் ஆவர்.*

**பொன் :** *இக்கோயில் வரலாறு எழுதிய அறிஞர் திரு. பஞ்சநதம் பிள்ளை "காலாயிரமுடைய இம் மண்டபத்தைக் காணக் கண்ணாயிரம் வேண்டும்" என்று கூறுவதை நாமும் ஏற்றுக் கொண்டு செல்வோம். இப்படியே இவ் வீர வசந்தராயர் மண்டபத்தின் முகப்பைப் பார்க்கலாம். வாயிலுக்கு வடக்கே ஒருவீரன் தன் தோளில் ஒருத்தியை வைத்துள்ளான். தெற்கே வீரபத்திரர் உள்ளார்; எண்கைச் சத்தி, ஐந்தலைப் பாம்பு தலைமேல் குடைபிடிக்க இருக்கிறாள்; இங்கே வளையல் பொம்மை முதலியவை விற்கும் கடைகள் உள்ளன. இனி* ***மங்கையர்க்கரசி மண்டபத்திற்குச் செல்வோம்.***

# 14. பிற மண்டபங்கள்

**கண்** : *இம் மண்டபம் புதிதாகத் தோன்றுகிறதே!*

**பொன்** : *ஆம். கி.பி.1960 ஆம் ஆண்டில் நிகழ்ந்த திருப்பணியின் போது கட்டப் பெற்றது இது. சைவத்துக்குப் புத்துயிரூட்டிய அரசி மங்கையர்க்கரசியார். அவர் வடிவமும், அவர் அமைச்சர் குலச்சிறையார், அரசர் நின்ற சீர் நெடுமாறர், திருஞானசம்பந்தர் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. அடுத்துள்ளது* **சேர்வை காரர் மண்டபம்.** *இதனைக் கட்டிய பெரிய* **மருது***வின் சிலை இதோ உள்ளது. மேற்கே இருப்பது திருமண மண்டபம்!*

**கண்** : *ஊர்தோறும் திருமண மண்டபங்கள் பல இருந்தாலும் இதற்குத் தனிச்சிறப்பு அல்லவா! "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி, ஊனாகி உயிராகி" நிற்கும் இறைவன் இறைவியரை, மணக்கோலம் கொள்வித்து மகிழும் இடம் இது. அறுபதுக்கு அறுபது திருமணம் நடத்தி வைத்துப் பிள்ளையும் பேரரும் மகிழ்வது எவரறிவர்? அத்தகைய மகிழ்ச்சிப் பெருக்கே இறைவனை மணக்கோலத்தில் வைத்து மகிழ்கின்றது.*

**பொன்** : *கண்டு மகிழ்பவர் நம்போன்றவர்; இதனைக் கட்டி மகிழ்ந்தவர், அணிசெய்து மகிழ்ந்தவர் நம் நினைவுக்கு உரியவர். உள்ளே போகலாம்.*

**கண்** : *திருமண விழா நாளில் நாம் இப்படி அமைதியாகப் பார்க்க முடியுமா?*

**பொன்** : *திருமண வீட்டிலேயே ஆரவாரம் வெள்ளமாகப் பெருக்கெடுக்கும்போது, உலக நாயகர் திருமணத்தில் நாடெல்லாம் கூடும் நம்பியின் திருமணத்தில் - ஆரவாரம் இல்லாமல் இருக்குமா?*

**கண்** : *இக் கல்மண்டபத்தில்தான் திருமணக் காட்சி நிகழுமா?*

**பொன் :** *ஆம்! இதனையும் இம் மண்டபத்தையும் கட்டிய* ***விசயரெங்க சொக்கநாத நாயக்கர்*** *இத் தூணில் சிலையாக நிற்கிறார். இதற்கு அழகிய மேற்கட்டு மரச்செதுக்குத் திருப்பணிகளால் செய்த* ***பெருந்தகை வயிநாகரம் வெங்கடாசலம் செட்டியார், நாகப்பச் செட்டியார்*** *படங்கள் இவை. இப் பெருமக்கள் இக்கோயில் திருப்பணிக்குச் செய்துள்ள செயற்கரும் பணி அளவில் அடங்காது, இதிலுள்ள தனிச்சிறப்பு, பிறரிடம் ஒருகாசும் வாங்காமல் தம் பணத்தைக் கொண்டே செய்தது ஆகும்.*

**கண் :** *இம் மேடைக்குத் தென்பாலும் வடபாலும் உள்ள சுவர்களில் எழுதப்பட்டுள்ள உலகத் தோற்றம் உயிர்த் தோற்றம் பற்றிய ஓவியங்கள் புதியனவா?*

**பொன் :** *இல்லை! பழைய ஓவியங்களைப் புதுப்பித்து எழுதப் பெற்றவை ஆகும். இதற்குத் தெற்கே உள்ளது* ***முத்துராமய்யர்*** *மண்டபம்! இதில் அவர் திரு வுருவமும் உள்ளதைப் பார். இப்படியே தெற்கே சென்றால் அம்மை கோயில் திருவாயில்; இதனைக் கடந்தால்* ***யானைகட்டும் மால்*** *கிழக்கேயும்,* ***வன்னியடிப் பிள்ளையார்*** *கோயில் மேற்கேயும் உள்ளன.*

**கண் :** *வன்னி மரத்திற்கும் இத் திருக்கோயிலுக்கும் மிகத் தொடர்பு உண்டே! வன்னியும் கிணறும் இலிங்கமும் வரவழைத்த திருவிளையாடல் சொல்லப்படுகிறதே.*

**பொன் :** *அந்த வன்னிமரம் இதுதான் என்று சொல்கின்றனர். மரம் பழமையானதுதான்! நாம் இப்பொழுது பார்ப்பது கீழ ஆடிவீதி. கோயில் நூல்நிலையம், தேவாரப்பாடசாலை, திருப்புகழ்ச்சபை, சைவ சித்தாந்த சபை, தெய்வநெறிக் கழகம், பன்னிரு திருமுறை மன்றம் ஆகியவற்றைக் காணலாம். இது திருக்கோயில் அலுவலகம்; மேற்கு ஆடி வீதியில் பசுமடமும், சிவகங்கைத் திருக்கோயில் அலுவலகமும் உள்ளன. இந்த வடமேற்கு மூலையில் இருப்பது திருப்புகழ் மண்டபம்; வடக்கே இருப்பது திருவள்ளுவர் மன்றம்; இதனை அடுத்து இவ் வடக்குக் கோபுர வாயிலின் இருபாலும் இருப்பவை இசைத் தூண்கள். "கல்லும் சொல்லாதோ கவி" என்பதை*

*விளக்கிக் காட்டும் இந்த விந்தைத் தூண்கள் ஐந்தையும் பார். இசையெழுப்பியும் பார்.*

***கண்*** : *ஆமாம்! அறிவுடைய மாந்தன் நினைத்தால் நீர் பாடுகின்றது! மண் பாடுகின்றது; மரம் பாடுகின்றது; நரம்பு பாடுகின்றது; தோல் பாடுகின்றது உலோகம் (மாழை) பாடுகின்றது; கல் மட்டும் விதிவிலக்கா? இப்படி இசைக்குமாறு தூணுக்குப் பலவேறு வடிவங்களை அமைத்துள்ள தேர்ச்சியும் அவற்றையும் ஓர் ஒழுங்குபட நிறுத்திய திறமும் நினைவு கூரத்தக் கனவாம்.*

**பொன்** : *இந்த வடக்குக் கோபுரவாயிலுக்கு நேரே இருக்கும் மண்டபம்* **கூட்டு வழிபாட்டு மண்டபம்.** *இப் பகுதிதான் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலாக இருந்தது என்பர். அங்குள்ள அடைப்பை நீக்கிச் செடிகொடிகளை வெட்டி ஆராய்ந்தால் சில அரிய செய்திகள் கிடைக்கலாம். வடக்கு ஆடி வீதியில் இருந்து வலமாகத் திரும்புவோம். இது* **பதினாறு கால் மண்டபம்.** *இதற்குத்* **தட்டுச்சுற்று மண்டபம்** *என்ற பெயரும் உண்டு. இங்கு மாணிக்க வாசகருக்காக இறைவன் நரி பரியாக்கியது, பரி நரியாக்கியது முதலிய திருவிளையாடல் காட்சிகள் ஆவணிமூலத் திருநாளில் நிகழ்த்தப்பெறும்.*

# 15. திருக்கோபுரங்கள்

**கண் :** **"கோ**யில் முழுதும் கண்டேன் உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்"

*என்று திருப்பதிகளைக் காண்பார் கூறுவது உண்டு. நாம் அப்படிக் கூறிக் கொள்ளுமாறு கோபுரத்தை ஏறிப் பார்க்கவில்லையே!*

**பொன் :** *பார்க்க வேண்டும்! பார்க்க வேண்டும். நாம் நேரே தெற்குக் கோபுரத்திற்குப் போகலாம். இக் கோயில் கோபுரங்களில் உயரமானது இதுவே. இதன் உயரம் 48 மீட்டர். அடிமட்டத்தில் இதன் நீளம் 32.4 மீட்டர். அகலம் 20.1 மீட்டர். இதில் பழுது பார்த்துத் திருப்பணி செய்வதற்குச் சாரம் கட்டினர். அச் சாரம் கட்டுவதற்கு மட்டும் நான்கு திங்கள் ஆயினவாம். 40,000 உருபா பெறுமானமுள்ள சவுக்கு மரங்கள் வேண்டியிருந்தனவாம்!*

**கண்** : *இத் திருப்பணி செய்யவே இவ்வளவு காலம் சாரம் போடவும், இவ்வளவு செலவில் மரம் வாங்கவும் நேர்ந்திருந்தால் இதனைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு காலம் வேண்டியிருக்கும்? எவ்வளவு தொகை செலவாகியிருக்கும்? இதனைக் கட்டிய பெருமகன் யார்?*

**பொன் :** இதனைக் கி.பி. *1559* இல் **சிராமலைச் செவ்வந்தி மூர்த்தி செட்டியார்** என்பவர் கட்டுவித்தார். இவர் மக்கள் **செவ்வந்தி வேலப்பச் செட்டியாரும், திருவம்பலச் செட்டியாரும்** பல திருப்பணிகள் இக் கோயிலில் செய்துள்ளனர்.

**கண்** : *அவ்வாறானால் குடும்பமே இக் கோயில் பணியில் ஈடுபட்டுள்ளது. 'சிராமலை' என்பது திருச்சிராமலை எனப்படும் திருச்சி! திருச்சியில் இருந்த அவர், இம் மதுரைத் திருக்கோயில் பணியில் ஈடுபட்டுள்ளார்.*

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்பது இந்த மண்ணின் இயற்கை என்பதைத் தெளிவாக்குகிறது.*

**பொன் :** *கோபுரத்தின் மேலே ஏறலாம்! வா!*

**கண் :** *என்ன அகலப் படிகள்; குழந்தையும் கிழவரும் கூட எளிமையாக ஏறலாம் போல் உள்ளது.*

**பொன் :** *அடி அகலம் இருந்தால் தானே குறுகிக் குறுகி உயரப் போய் விண்ணளாவி எழுப்பி நிற்க வாய்க்கும். 'அடி அகலம் முடி உயரம்' என்பதற்கு அடையாளம். இந்த ஒன்பது நிலைக்கோபுரத்தின் முதல் தளம் இது. ஆயிரம் பேர்க்குப் பந்தி வைக்கலாம் இந்தத் தளத்தில்!*

**கண் :** *தளம் பெரிதுதான்! அதற்காக ஆயிரம் பேர்க்குப் பந்தி வைக்க வேண்டுமா? பந்தி போட்டுப் பந்தி போட்டுச் சோம்பேறிகளைப் பெருக்கிப் பாழான நாடு இது! இங்கேயும் சாப்பாட்டுப் பந்திதானா? "உண்பதுவும் உறங்குவதுவும் அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்று எத்தனை மடையர்கள் வாழ்கிறார்கள்?*

**பொன் :** *மடையர்களா?*

**கண் :** *ஆம்! மடையர் என்றால் சாப்பாடே குறியானவர் என்பது பொருள்! மடைப்பள்ளி, மடைத்தொழில் என்பவை என்ன நீ அறியாதவையா?*

**பொன் :** *சரி; இருக்கட்டும் மேலே செல்லலாம்!*

**கண் :** *அவ்வளவு அகலமான தளம் ஒன்பதாம் இடத்திற்கு வந்ததும் ஓராள் நடக்கும் அளவுக்குக் குறுகி விட்டதே.*

**பொன் :** *இது கட்டடக் கலையின் நுண்மை மட்டுமன்று; அறிவின் இலக்கணமும் ஆண்டவன் இலக்கணமுமாம்.*

**கண் :** *என்ன சொல்கிறாய்?*

**பொன் :** *நீயே சொல்; 'மண்மாண் புனைபாவை' என்று திருவள்ளுவர் கூறுகிறாரே ஓரிடத்தில்; அதில் அறிவின் இலக்கணம் சொல்லவில்லையா?*

**கண் :** *'நுண்மாண் நுழைபுலம்' என்று கூறி அறிவு நுண்ணியது; அகன்றது; ஆழமானது; எனத் தெளிவாக்குகிறார். அதற்கு என்ன?*

**பொன் :** *அதனையே 'ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என* ***மாணிக்கவாசகர்*** *இறைவனுக்குக் கூறுகிறார். இதனால் அறிவின் இலக்கணமும் ஆண்டவன் இலக்கணமும் ஒன்றே என்பது விளங்கும். இதனால் தான் 'அறிவே கடவுள்' என்று நம் முன்னோர் கூறினர். இதற்குச் சான்றே இக்கோபுரம். இஃது ஆழமானது; அகன்றது; நுண்ணியது!*

**கண் :** *'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்' என்பது போல் இஃது அழகுப் பொருள் மட்டுமன்று; மெய்ப்பொருள் விளக்கமும் உடையது என்பதை இப்பொழுதே அறிந்தேன்.*

**பொன் :** *சுருக்கமாகிக் கொண்டே உயர்கிறதா? ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி ஓங்கி நிற்கிறது! எட்டாத் தொலைவில் இருப்பார்க்கு எளிதில் தோன்றி வரவேற்கின்றது.*

**கண் :** *ஆம்! உயர உயர வரும்போதுதான் தடைகள் தாமே அகல்கின்றன; விரிந்த பார்வை உண்டாகின்றது; தலை நிமிர்ந்து பார்த்தவற்றையும் தலை குனிந்து பார்க்க வைக்கின்றது. உயரத்தின் உயர்வுகள் இவை!*

**பொன் :** *கண்ணப்பா! இச் செப்புக் கலசத்தைக் கட்டிப்பிடிக்க முடியுமா? நடுக்கமில்லாதவர்கள் நன்றாக உட்காரலாம்! நமக்கேது நடுக்கம்; உட்கார். ஆனால், 'சொக்கலிங்கம் உண்டே துணை' என்னும் நம்பிக்கையுடன் நம் கைப்பிடியையும் அழுத்தமாகவே வைத்துக் கொள் வோம். நாம் இருக்கும் இத் தெற்குக் கோபுரம் அன்றி எத்தனை கோபுரங்கள் தெரிகின்றன? தொலை நோக்கி பையில் இருப்பதை மறந்து விட்டாயா? எடுத்து வைத்துக் கொண்டு பார்.*

**கண் :** *ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று. இதனுடன் பன்னிரண்டு கோபுரங்கள் தெரிகின்றன. தங்க விமானங்கள் இரண்டும் தெரிகின்றன! எல்லாம் கைக்கு எட்டிய தொலைவில் தெரிகின்றன.*

**பொன் :** *சரி. மேல வாயிலில் ஒரு கோபுரம்; வடக்கு வாயிலில் ஒரு கோபுரம்; சொக்கர் முன்னே கீழவாயிலில் ஒரு கோபுரம். இம் மூன்றுமே ஒன்பது நிலைக் கோபுரங்கள்.*

**கண்** : *அப்படியானால் நான்கு தலைவாயில் கோபுரங் களுமே, ஒன்பது நிலைக் கோபுரங்களே!*

**பொன்** : *ஆமாம். இவற்றில்* **மேலக்கோபுரம்** *46.2 மீட்டர் உயரம்; அது பராக்கிரம பாண்டியனால் கட்டப் பெற்றது.* **வடக்குக் கோபுரம்** *45.6 மீட்டர் உயரம்; அது கிருட்டிணவீரப்ப நாயக்கரால் கட்டப்பெற்றது.* **மொட்டைக் கோபுரம்** *என்பதொரு பெயரும் அதற்கு உண்டு.* **கிழக்குக் கோபுரம்** *பெரிய கோபுரங்களுள் பழைமையானது.* **சுந்தரபாண்டியன் கோபுரம்** *எனப்பெறும். அது மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பெற்றது. அதன் உயரம் 45.9 மீட்டர்.*

**கண்** : *ஏறத்தாழ இந் நான்கு கோபுரங்களும் ஒத்த உயரத் திலேயே கட்டப்பட்டுள்ளன.*

**பொன்** : *பொற்றாமரைக் குளத்தின் வடக்குப்பக்கம் கிழக்கே பார். ஏழு நிலைக்கோபுரம் ஒன்று தெரிகிறதே, அது மீனாட்சி நாயக்கர் மண்டபத்திலிருந்து அம்மன் கோயிலுக்கு வரும் வழியில் உள்ளது. அதன் அழகினைக் கருதி அதனைச்* **சித்திரக் கோபுரம்** *என்பர். அதனைத் தளவாய் அரியநாத முதலியாரின் மைந்தர்* **காளத்தி முதலியார்** *கட்டினார். அதன் உயரம் 35.1 மீட்டர்.*

**கண்** : *அம்மன் கோயிலுக்கு முன்னே ஒரு கோபுரம் தெரிகிதே!*

**பொன்** : *ஆம். அது* **வேம்பத்தூரார் கோபுரம்** *எனப்படும். அதனைக் கட்டியவர்* **வேம்பத்தூர் ஆனந்தத் தாண்டவ நம்பி** *என்பார். அது கிளிக்கூட்டு மண்டபத்தில் இருந்து அம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ளது. மூன்று நிலைகளை யுடைய அக் கோபுரத்தின் உயரம் 12 மீட்டர்.*

**கண்** : *அதற்கும் மேற்கே ஒரு கோபுரம் தெரிகிறது. அது மேற்கு ஆடி வீதியின் கிழக்கே உள்ளதா?*

**பொன்** : *ஆம்; அம்மன் கோயில் இரண்டாம் திருச் சுற்றின் மேற்கே உள்ளது. அந்த ஐந்து நிலைக் கோபுரம் 19.2 மீட்டர் உயரமானது.*

**கண்** : *அதற்கு நேர் வடக்கே ஒரு கோபுரம் தோன்றுகிறது.*

**பொன்** : *அது சொக்கர் கோயிலுக்கு மேற்கே, மேலக்கோபுரத் திற்கு நேர் கிழக்கேயுள்ள கோபுரம். ஐந்து நிலைகளை யுடைய அக் கோபுரம் 21.6 மீட்டர் உயரமானது. அதனை* **மல்லப்பன்** *என்பார் கட்டினார்.*

**கண்** : *ஊடே ஒரு கோபுரம் தெரிகிறதே! அது?*

**பொன்** : **நடுக்கட்டுக்கோபுரம்** *எனப்படும். கிளிக்கூட்டு மண்டபத்தில் இருந்து சொக்கர் கோயில் இரண்டாம் திருச்சுற்றுக்குச் செல்லும் வழியில் உள்ளது. சிராமலைச்* **செவ்வந்திமூர்த்தி செட்டியாரால்** *கட்டப்பெற்றது. 20.7 மீட்டர் உயரமான அஃது ஐந்து நிலைகளையுடையது.*

**கண்** : *வடக்குக் கோபுரத்திற்குத் தெற்கே ஓர் ஐந்து நிலைக்கோபுரம் தோன்றுகின்றது.*

**பொன்** : *அது* **செவ்வந்தி வேலப்பச் செட்டியார்** *கட்டியது.* **'இடபக் குறியிட்ட கோபுரம்'** *எனப்படும் அதன் மேல்நிலைக் கல்லில் இடபக்குறி உள்ளது. அதன் உயரம் 21.3 மீட்டர்.*

**கண்** : *காஞ்சிமா நகரை ஆட்சி செய்த காடு வெட்டிய சோழனுக்கு இறைவன் வடக்கு மதிலின் வாயிலைத் திறந்து தம்மையும் அம்மையையும் வழிபடச் செய்து அனுப்பிவிட்டு, மீன் முத்திரை வைத்திருந்த இடத்தில் இடப முத்திரை வைத்ததாகத் திருவிளையாடல் கூறுகிறதே அதுவா?*

**பொன்** : *ஆம்! விடை இலச்சினை இட்ட திருவிளையாடல் பற்றிய செய்திதான் அது. சொக்கர் கோயிலுக்கு முன்னே இரண்டு கோபுரங்கள் தெரிகின்றனவே, அவற்றுள் மேற்கேயுள்ளது கம்பத்தடி மண்டபத்தில் இருந்து சொக்கர் கோயிலுக்குள் போகும் வாயிலில் உள்ளது. மூன்று நிலைகளையுடைய அக் கோபுரம்* **குலசேகர பாண்டியனால்** *கட்டப்பெற்றது. அதன் உயரம் 12.3 மீட்டர். அதற்குக் கிழக்கே தெரிவது கம்பத்தடி மண்டபத்திற்குச் செல்லும் வழியில் உள்ளது.* **வசுவப்பன்** *என்பவரால் கட்டப்பெற்ற அவ் வைந்து நிலைக் கோபுரம் 19.8 மீட்டர் உயரமானது.*

**கண்** : *வெயிலொளியை வாங்கிப் பன்மடங்கு பொன்னொளியாக வெளிவிடும் இரண்டு விமானங்கள் உள்ளன. அவற்றுள் வடக்கே இருப்பது* ***சொக்கர் விமானம்;*** *தெற்கே இருப்பது* ***அம்மை விமானம்;*** *சரிதானே!*

**பொன்** : *எனக்குமேல் உனக்கு தெளிவாகி விட்டது; இனி நீ யாருக்கும் வழிகாட்டலாம்.*

**கண்** : *போதும்! போதும்! கீழே இறங்குவோமா? இந்தக் கோயிலின் நீள அகலம் எவ்வளவு?*

**பொன்** : *இக் கோயிலின் நீளம் 254.1 மீட்டர். அகலம் 237.6 மீட்டர்.*

**கண்** : *எந்தக் கோபுரமாவது இரட்டைப்பட நிலைகளைக் கொண்டுள்ளதா? இல்லையே!*

**பொன்** : *ஒற்றை இலக்கப் பெருமை! ஒற்றை மேல் நம்பிக்கை! எல்லாம் ஒருவன் செயல்.*

**கண்** : *இன்னொன்று; நாம் கோபுரவாயில் தூண்களிலும், திருமதில் சுவர்களிலும் பல கல்வெட்டுகளைப் பார்த்தோம். அவை பலகாலம் வெள்ளையடித்தும் அழுக்குப் படிந்தும் என்ன என்றே தெரியாமல் போய்விட்டன. சில கல்வெட்டுகள் இனிய பாடல் களாகவும் அமைந்துள்ளன; அரிய வரலாற்றுக் குறிப்புகளுக்கு இடமாக உள்ளன. இவ்வாறாகவும் இவற்றை மறைய விடுவது முறையாகுமா? எல்லாம் விளம்பரம்; எங்கும் விளம்பரம் என்னும் காலம் இது. "கோயில் வழிபாட்டு வேளை; கும்பிட வாருங்கள்" என்று வேளைதோறும் ஓங்கி மணியடிக்கிறோம். ஆனால், வரலாற்று உண்மையை ஒளியவும், ஒழியவும் விடுகிறோம்.*

**பொன்** : *நல்லதையே கேட்டாய். நான் தொடக்கத்திலே சொன்னேன்; இன்னும் செய்ய வேண்டியவை எவ்வளவோ உள்ளன என்று. அவற்றுள் ஒன்று இது. கல்வெட்டு இருக்கும் பகுதியை நன்றாகத் துடைத்து அவ்வெழுத்துகளைப் படிக்குமாறு வாய்ப்புச் செய்ய வேண்டும். அதனை முன்னரே படியெடுத்துள்ளனர். அச்சிட்டும் உள்ளனர். அதனைச் செப்பமாக எழுதி*

*அக் கல்வெட்டு இருக்கும் பகுதியிலேயே போட்டு வைத்தால் வரலாற்றை ஆய்பவர்களுக்கும் அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கும் துணையாம்!*

**கண்** : *ஆம்! நம்மவர் சொத்து பழஞ் சொத்து; பாரறியாப் பழஞ் சொத்து. அதனை நாம் அறியாமையாலும் அயர்வாலும் அழியவிடுவது இழிவேயாம். நேற்று நாகரிக ஏற்றம் பெற்றவர்களும் எப்படி "வாண வேடிக்கை" விடுகின்றனர்! இல்லாப் பெருமையைச் சொல்வது இழிவு! அதனினும் இழிவு உண்மைப் பெருமையை உணர்ந்துகொள்ளாமல் இருப்பது. இனி இக் கோயில் திருப்பணி செய்பவர்களாவது இதனைக் கருதலாம்; தொல்பொருள் ஆய்வுத் துறையாவது கருதலாம்; ஏன் கோயில் நிர்வாகமே கருதலாமே!*

## 16. புதுமண்டபம்

**பொன் :** *சரி! நாம் புதுமண்டபத்திற்குப் போகலாம்!*

**கண் :** *புதுமண்டபமா?*

**பொன் :** *ஆம்! அது கட்டப் பெற்ற நாளில் அது புதுமண்டபம் தான். எத்தனை 'புதூர்' 'புத்தூர்கள்' பழைய ஊர் களாகிவிடவில்லை! அவற்றைப்போல் திருமலை மன்னர் காலத்துப் புதுமண்டபம் இன்றும் புது மண்டபமாகவே விளங்குகிறது.*

**கண் :** *இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் இளங்கோ வடிகள் இப்பொழுதும் இளங்கோவடிகளாகத் தாமே உள்ளார்? அப்படி.*

**பொன் :** *நாம் கீழச் சித்திரை வீதிக்கு வந்துள்ளோம். இதற்கு நுழைவாயில் கீழ ஆவணி வீதியில் உள்ளது. அவ்வழியாக வரலாம்; அடித்தளம் போட்ட அளவில் நின்று போன இது திருமலை மன்னரால் தொடங்கப் பெற்ற வேலையாம். இதன் அடித்தளத்தைப் பார்த்தாலே இங்குள்ள எந்தக் கோபுரத்திற்கும் இது பெரியது என்பது புலப்படுமே! கோபுரங்களில் எல்லாம் பெரியது என்னும் பெயர் விளங்க* **'இராச கோபுரம்'** *எனப் பெயரிட்டுத் தொடங்கினார். அவர் இயற்கை எய்திய அளவில் இப்பணி நின்று போனது!*

**கண் :** *நிற்கும் தூண்களே கோபுரமாக விளங்குகின்றன. அவற்றை நிலைக்காலாக்கி ஒன்பது நிலைக்கோபுரம் எழுப்பியிருந்தால் இணையற்றதாகவே விளங்கி யிருக்கும்.*

**பொன் :** *திருமலை மன்னர் கலைத்திறமெல்லாம் இப் புதுமண்டபத்தில் களிநடம் புரிகின்றது எனலாம். இதன் வாயிலின் இருபக்கத் தூண்களையும் பார்.*

**கண்** : *தூணில் குதிரையுடன் ஒரு வீரன் காட்சி வழங்கு கிறான். குதிரை முன்னங்கால்களை எடுத்துத் தூக்கி, பின்னங்கால்களை அழுத்தி ஊன்றிப் பாய்ச்சலில் நிற்கிறது. முன்னங் கால்களின் கீழே ஒரு வீரன் வாளுடன் நிற்கிறான். அவன் வாள் ஒரு புலியின் வாய்க்குள் செல்கிறது. அவ் வீரனுக்குக் கீழே இரண்டு பேர்கள் நிற்கின்றனர். அவர்களில் ஒருவன் வடபக்கம்; மற்றொருவன் தென்பக்கம்; இருவரும் வளைந்து நிற்கும் அழகு நன்றாக உள்ளது. குதிரையின் மேலே இருப்பவன் வடக்குப் பார்த்து இருக்கிறான். அவனது தூக்கிய வலக்கையில் வேல் உள்ளது!*

**பொன்** : *வாயில் காட்சியிலேயே நாம் வழிமறந்து நின்று விட்டோமில்லையா? நம்மைத் தடுத்தவர் எவர்? கலை வல்லான் நம் உள்ளத்தை நிலைப்படுத்தி விட்டான். ஆனால், தென்பால் கண்ட இவ் வீரனை நிகர்க்கும் வடபால் வீரனும், அத் தூணின் மற்றைக் கலைகளும் அழிவுக்கு ஆட்பட்டுள்ளன! இவ் வாயில் தென்பக்கத் தூணின் பின் பக்கம் பார்! ஒரு கையில் மான்குட்டியையும் மற்றொரு கையில் புலியையும் வைத்துப் பெருமான் பாலுண்ணச் செய்கிறார். ஒரு மானை வேடுவர் கொன்றுவிட்டனர். அதன் இளமறி தாயற்ற துயரால் தவித்தது. புல்வாய்க்கு-மானுக்கு-ப் புலியைக் கொண்டு பாலூட்டித் தாய் நிலை அருளினார். இது* **பழைய திருவிளையாடல்** *கதைச் செய்தி. பெருமான் வலக்கையில் புல்வாய்; இடக்கையில் புலி.*

**கண்** : *புல்வாயை முதற்கண் எடுத்துக்கொண்டு, அதற்குப் புலியைப் பால் தரச்சொன்னமையால் அஃது இடக்கையில்! "ஆடுதுறையில் அடுபுலியும் புல்வாயும் நீரூட்டிய கொற்றவன்" என மூவருலாவில் படிக் கிறோம்! இங்கே புலி, புல்வாய்க்குப் பாலூட்டவே சிற்பத்தில் காண்கிறோம். அழிப்பதும் அழிவதும் இல்லா அருளுலக* **வேட்கை** *இது!* **'வேட்டை'** *யுலகம் இதன்மீது வேட்கை கொள்ளுமா?*

**பொன்** : *வடக்கு வாயில் தூணின் பின்பக்கம் பார். இங்கே இறைவனே பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டுகிறார்.*

**கண்** : *ஆம்! வலக்கைப் பக்கம் மூன்று; இடக்கைப்பக்கம் மூன்று; ஆறு குட்டிகளை எடுத்து மார்பில் பாலருந்த விட்டுள்ளார். இரண்டு கால்களுக்கும் ஊடே இரண்டு குட்டி; காலுக்குத் தெற்கே இரண்டு, வடக்கே இரண்டும் ஆக ஆறு குட்டிகள்! மொத்தம் பன்னிரண்டு.*

**பொன்** : *சுகலன் என்பான் மக்கள் பன்னிருவர்; அவர்கள் தேவகுருவின் வசைமொழிக்கு ஆளாகிப் பன்றிக் குட்டியாகினர். பன்றிக்குட்டிகள் தாயின்றித் தவித்தன; அவற்றுக்குத் தாயும் ஆயினான் இறைவன்! அக் குட்டிகளை ஊட்டி வளர்த்தான். பின்னே அவற்றை அறிவாற் சிறந்தவராக்கிப் பன்றிமுக மானிடராய்ப் பன்றிமலையில் வாழச் செய்தான். கீழே பன்றிமுக மனிதர்கள் கும்பிட்டுக்கொண்டு நிற்பது தெரிகிறதா?*

**கண்** : *இதன் வடக்குப் பக்கம் ஒரு வீரன் அம்புகொடுத்து ஒரு பன்றியைக் கொல்கிறானே! அம்பு பன்றியை ஊடுருவும் சிற்பம் உள்ளதே?*

**பொன்** : *ஆம். அதுதான் தாய்ப்பன்றி; அம்பு ஏவுபவன்* ***இராசராச பாண்டியன்*** *என்பான். இது திருவிளை யாடலில் வரும் 'பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்த படலச்' செய்தி.*

**கண்** : *இறைவன், எவ்வுயிருக்கும் உயிரானவன்! எவ்வுயி ருக்கும் அருள் சுரப்பவன்; அவன் முன்னர், வலியது மெலியது இல்லை! உயர்ந்தது தாழ்ந்தது இல்லை! ஒப்ப நாடி அத்தக அருள்பவன் அவன்; அத் தகையவன், கடையனினும் கடைப்பட்டவன் எனினும் தனக்கும் அருள் புரிவான் என்னும் நம்பிக்கையை ஊட்டுதற்காக வைக்கப்பெற்ற வழிக்காட்சிகள் இவை.*

**பொன்** : *வாயில் தூண்களுக்கு இப்பாலும் அப்பாலும் தெற்கிலும் வடக்கிலும் இருப்பவை ஓர் ஒப்புமை யுடையவை; பொதுவாகக் கலையே ஓர் ஒழுங்கு முறையைத் தனக்கென ஊடகமாகக் கொண்டு உயர்ந்து ஓங்குவதுதானே!*

**கண்** : *ஆம்! இரண்டு தூண்களுமே தேர்த்தட்டின் அமைப்புடையவை; இரண்டிலும் சக்கரங்களும் உள்ளன. பெருமான் மேலே எழுந்தருளியுள்ளார்.*

**பொன்** : *வடகிழக்கு மூலையில் உள்ள யாளித் தூணுக்கு அடுத்த மேற்குத் தூணில் இருப்பவர் யார் என்று தெரிகிறதா? இறைவன் விற்கை வேந்தராகக் காட்சி வழங்குகிறார். இக்கோலம் எதற்கு என்பதை இதே நேரில் தெற்குக் கோடியில் தோன்றும் சிற்பத்தைக் கொண்டு பார்.*

**கண்** : *மும்மார்புடைய அம்மை அவர்! தடாதகையாகப் பிறந்த போது மும்மார்பினராக இருந்ததும், மண வாளனைக் காணுங்கால் ஒரு மார்பு மறையும் எனக் கணியன் கூறியதுமாகிய செய்தி திருவிளையாடலில் உள்ளதுதானே! இப்பொழுது புரிகிறது!*

**பொன்** : *அம்மை கூர்ந்து நோக்குகிறார் பெருமானை; பெருமான் நிலம் நோக்குகிறார்.*

**கண் :** "யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்"

*என்பதுபோல் முதற்கண் பெருமான் நோக்கி யிருப்பார்; அப்பொழுது அம்மை நிலம் நோக்கி யிருப்பார்; பின்னர் அம்மை நோக்கியிருக்கிறார்; பெருமான் கீழே நோக்குகிறார். இயற்கைப் புணர்ச்சியை இலக்கண நூல்கள்* ***'தெய்வத்துக் கூட்டம்'*** *என்று கூறும். இஃது உண்மையாகவே தெய்வத்துக் கூட்டம் ஆயிற்று!*

**பொன்** : *தென்கிழக்கு மூலையில் உள்ள தூணைப் பார்க்கலாம். இதன் கிழக்குப் பக்கம்* **ஓரடிப் பெருமான்** *(ஏகபாத மூர்த்தி) உள்ளார்.*

**கண்** : *கம்பத்தடி மண்டபத்துள்ள ஏகபாதமூர்த்தி, இறைவனே! இங்கே மூவருமே ஒருவராகி ஒரு காலில் நிற்கும் உயர்வுடையது. இடப்பால் நான்முகனும் வலப்பால் திருமாலும் தத்தம் தோற்றப் பொலிவுடன் விளங்குகின்றனர். இடையே பெருமான் விளங்கு கிறார்.*

**பொன் :** *ஒரு மரத்தில் கிளைத்த 'முக்கவடுகள்' இவை என்பதை விளக்கி மும்மையும் ஒருமையாம் பெருமையை விளக்கும் சிற்பம் இது. இதனை இத் தூணில் அடித்து வைப்பதற்கே முரண்பாடுகள் எழுந்தனவாம். வைக்கத்தக்கது, தகாதது எனச் சொற்போர்கள் நிகழ்ந்தனவாம். ஆறுமாத காலம் மறுப்பும், மறுப்புக்கு மறுப்புமாக நடந்து இறுதியில் வைக்கத் தக்கதே என முடிவாயிற்றாம். சிலையில் ஒருமைப்பாடு காட்டவே இப் பாடு என்றால் நிலையில் ஒருமைப்பாடு வர எப்பாடு? இறைவனுக்கே வெளிச்சம்! மும்மூர்த்தியும் ஒன்றாக இம் மூர்த்தி நன்றாகவே காட்சி வழங்குகிறார்; கண் குளிரக் கண்டு மகிழலாம். இப்படியே மேற்கே போகலாம். இம் மேல் கடைசித் தூணை அடுத்த தூணில் 'காளி' காட்சி தருகிறார்.*

**கண் :** *கம்பத்தடி மண்டபத்துக் காளிபோலவே வெகுளி மிக்குத் தோன்றுகிறாள்! கண்விழிகள் கனல் தெறிக்கக் காட்சி தருகின்றன. வில்லும் வேலும் எடுத்தபின் வெகுளி இல்லாமல் போகுமா?*

**பொன் :** *நேர் எதிரே வடப்பக்கம் பார்! தெற்குப்பார்த்து உருத்திர தாண்டவர் உள்ளார். காரைக்கால் அம்மையார் கனிந்துருகிக் கண்டு களிக்கிறார். எலும்புக் கூடாக விளங்கும் அவர் கூந்தல் எவ்வளவு நீளம்; மடித்துச் சுருட்டிக் கட்டியும் மேலே நீண்டு செல்கிறது. நான்முகனும் திருமாலும் இருபாலும் இருந்து கூத்துக் காண்கின்றனர். நந்தியம் பெருமான் குடமுழா இசைக்கிறார். கிழக்கு நடைவழி எதிருக்கு எதிர் சோமசுந்தரரும் தாடகையும் என்றால், மேற்கு நடைவழி எதிருக்கு எதிர் உருத்திரரும் காளியும்! முன்னது இமய மலைக்காட்சி! பின்னது திருவாலங் காட்டுக் காட்சி.*

**கண் :** *தென்மேற்கு மூலைத் தூணின் கீழ்ப்பக்கம் பெரிய தொருயாளி, அதன் கீழ்ச் சிறிய யாளி; அதன் கீழ் யானை; அதன் கீழ் மனித மிருகம்; அதன் கீழ் இலிங்கம்!*

**பொன் :** *வடமேற்கு மூலைத் தூணிலும் இத்தகைய வேலைப் பாடுகள் உள்ளன. மேற்கு வாயிலுக்கு வடக்குள்ள*

*தூணின் கிழக்குப் பக்கம் இறைவன் பிச்சைக் கலத்துடன் உள்ளார். அது நிரம்பி வழிகிறது. அதற்கு அடுத்த வடக்கு நடுத்தூணின் கிழக்குப் பக்கம் உமை யொருபாகர் விளங்குகிறார். இடக்கால் முட்டுமட்டும் முன்தள்ளி இடுப்புச் சற்றே இறங்கியுள்ளது. வலப்பால் இடுப்பு ஏறியுள்ளது. இதனை ஈடு செய்தற்குக் கால் உள்ளே தள்ளி வைக்கப் பெற்றுள்ளது. வாயிலுக்குத் தென்பக்க முதல் தூணின் கிழக்குப்பக்கம் மும்மூர்த்தியர் உளர். இவர் இருதாள் நாற்கையர்; வலப்பால் திருமால்; இடப்பால் நான்முகன்; முன்கை இரண்டிலும் மண்டையோடும், மாலையும் உள்ளன. பின் வலக்கையில் சக்கரமும், பின் இடக்கையில் கமண்டலமும் உள்ளன.*

**கண்** : *இம் மூர்த்திகளில் ஊடே இருக்கும் பெருமான் முகமும் விழியும், வலப்பால் இருக்கும் திருமால் முகமும் விழியும் ஒருயரத்தில் தோற்றம் தருகின்றன. நான்முகன் முகமும் விழியும் உயரத்தில் இறங்கிக் காட்சி தருகின்றன.*

**பொன்** : *அடுத்துள்ள நடுத்தூண் மீனாட்சியின் திருமணக் காட்சியாகும்! புகழ்வாய்ந்த இக் காட்சியைக் கம்பத்தடி மண்டபத்திலும் கண்டுள்ளோமே!*

**கண்** : *ஆனால் ஒரு வேறுபாடு. ஆங்கு அவர்கள் சிற்பியின் படைப்பாக இருந்து சிறந்தோங்குகின்றனர். இங்கே இந்த எழிற் சிற்பத்திலும் 'என் கைவண்ணத்தையும் காட்டுவேன்' என விளையாட்டுப் பிள்ளைத்தனமாக உதட்டிலும், விழிகளிலும் சிவப்பு கறுப்பு வண்ணங் களை அள்ளி எறிந்து அழகைக் கெடுத்துள்ளனர். சிற்பியின் நோக்கத்தைச் சீரழித்தது மட்டுமன்றி, இவர்கள் உள்ளார்ந்த உணர்வு வெளிப்பாடுகளையும் இவ் வேண்டாப் பூச்சால் கெடுத்துள்ளனர். இப்படி யெல்லாம் அறிவறியாச் செயல் செய்ய எவருக்குத் தாம் ஆர்வமோ? எவரின் தூண்டலோ? கொடுமை யாக இருக்கிறது! "நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் தவிர்க" என்னும் சங்கப் புலவர் உரையை இங்கும் சொல்லவே நேர்கின்றது! எங்கு எண்ணெய் முதலியன தடவிப் பளபளப்பாக வேண்டியது இல்லையோ அங்கும் தடவி அருவருப்புச்*

*செய்துள்ள அலங்கோலங்களும் கோயிலில் உள்ளன. மெய்யன்பர்களுக்காவது இதனைத் தடுத்து நிறுத்தும் நல்லெண்ணம் வரக் கூடாதா?*

**பொன்** : *மேற்கே நின்று இம் மண்டபத்தைப் பார். வாயிலுக்கு வடக்கே இரண்டு, தெற்கே இரண்டு தூண்கள்; இவற்றில் துள்ளிப்பாய்தற்குக் காலைத் தூக்கிய குதிரைகள்.*

**கண்** : *இம் மண்டபத்தையே தேராக்கி இக் குதிரையூர்தி களைப் படைத்துள்ளான் இம் மண்டபப் படைப் பாளி! ஒவ்வொரு தூணும் கலைச் செல்வத்தின் நிலைப் பொருளேயாம்.*

**பொன்** : *தெற்குக் கடைசியில் உள்ள தூணில் கயிலையை இராவணன் எடுக்கும் காட்சி உள்ளது. வடக்குக் கடைசியில் இறைவன் வேடர் பெருமானாக விளங்கு கிறான். இது கரிக் குருவிக்கு உபதேசித்தது; இது கல்லானைக்குக் கரும்பு அருத்தியது. இவ் வாயில் முன்னேயும் கிழக்கு வாயில் முன்னேயும் உள்ள தூண்களின் உள்ளும் புறமும் அழகிய சிற்பங்கள் உள்ளன. ஒவ்வொரு தூணையும் பார்! இசை நிகழ்ச்சி; ஆடல் நிகழ்ச்சி; பத்திப் பெருக்கு; திருமால் அவதாரங்கள்; இறைவன் திருவிளையாடல்கள்; இப்படி வேலைப்பாடுகள். கிழக்கு வாயிலுக்குத் தெற்கே இருக்கும் மூத்த பிள்ளையாரையும், வடக்கே இருக்கும் இளைய பிள்ளையாரையும் வணங்கி, வாயில் காவலர் ஒப்புதல் பெற்றுக்கொண்டு உள் மண்டபத்துக்கு வந்துள்ளோம்.*

**கண்** : *எவ்வளவு பெரிய தூண்கள்; எவ்வளவு மிகுந்த உயரம்; உயரத் தூண்களின் மேல் உள் உத்திரக் கற்கள்; பாவு கற்கள்; இவற்றில் உள்ள வேலைப்பாடு; இருபால் தூண் வரிசைகளிலும் மதுரையை ஆட்சி புரிந்த நாயக்க மன்னர் திருவுருவங்கள்!*

**பொன்** : *புது மண்டபமே ஒரு காலப் பகுதியின் வரலாற்றுச் சுவடிதான். மேற்கே உள்ள கருங்கல் மண்டபம் வசந்த விழா மேடையாகும்!*

**கண்** : *இம் மண்டபத்தின் முகடும் அதன் பொலிவும் கம்பத்தடி மண்டபத்தின் உள் மண்டபமுகப்பை நினைவூட்டுகின்றன.*

**பொன் :** *இங்கே வசந்த விழா நடைபெறும் என்றேனா? இதற்கு* **'வசந்தமண்டபம்'** *என்ற பெயரும் உண்டு. இம் மண்டபத்தின் நாற்புறங்களிலும் உள்ள அகழ்களில் தண்ணீர் தேக்கி நிறுத்தி வைப்பர்; சுற்று மேடைகளில் பார்வையாளர் இருந்து விழாவைக் கண்டு மகிழ்வர்; இப்பொழுது உள் மண்டபப் பகுதியைத் தடுத்து அதன் வெளிப்புறம் சுற்றுப் புறமெல்லாம் கடை களாக்கப்பட்டுள்ளன.*

**கண் :** *இம் மண்டபமும் கோயிலின் பகுதியாகி, இராச கோபுரம் அதன் முகப்பாகி இருக்குமானால் இக் கோயில் சுற்றும் கிழக்குப் பகுதிபோலவே மற்றைப் பகுதிகளிலும் வளர்ந்திருக்கும். இந்தப் பெரிய கோயில் அப்பொழுது இருமடங்கு மும்மடங்காகிக் காட்சி தந்திருக்கும். "சிறியன சிந்தியாதான்" என்னும் கம்பன் வாக்கால் திருமலை மன்னரின் திருப்பணியைக் கூறலாம் போலும்!*

**பொன் :** *கூறுவதற்கு என்ன ஐயம்! ஒருநாள் இப் புது மண்டப வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதன் தலைமைச் சிற்பி சுமந்திரமூர்த்தி சிற்ப வேலையில் தம்மை மறந்து ஈடுபட்டிருந்தார். வெற்றிலை போடும் பழக்கமுடையவர் அவர். வேலையின் ஊடே கையை நீட்டும் குறிப்பைப் பார்த்து ஏவல் பையன் வெற்றிலை மடித்துத் தருவான். ஆனால் சுமந்திரமூர்த்தி வெற்றி லைக்குக் கைந்நீட்டிய ஒரு பொழுதில் வெற்றிலை மடித்துத் தரும் பையன் இல்லை. ஆனால், அமைதி யாகத் திருமலை மன்னர் ஆங்கு வந்து சிற்ப வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். நீட்டிய கைக்குறிப்பை அவர் அறிவார். ஆதலால் தாமே வெற்றிலை மடித்துத் தந்தார். சிற்பி மேலும் கைந் நீட்டியபோதும் வெற்றிலை மடித்துத் தந்து கொண் டிருந்தார். வெற்றிலை வாங்கும் போதில் திரும்பிப் பார்த்துவிட்ட சிற்பி நடுநடுங்கிப் போனார். 'என்ன தவறு செய்துவிட்டேன்' என்று துடித்தார். தவறு செய்த தம் வீரர்களைச் சுத்தியலால் தட்டிக் கொள்ளவும் துணிந்தார். திருமலை மன்னர் சிற்ப வேந்தனுக்குச் சீமை வேந்தன் பணிசெய்யப் பேறு பெற்றிருக்க வேண்டுமே என்று தேற்றினார்! சுமந்திரன் விரலை வெட்டிக்கொண்டான் என்றும் மன்னர் வெள்ளியால் விரல் செய்து வைத்தார் என்றும் கதையுண்டு.*

**கண்** : *புதிய பொற்கைப் பாண்டியன் கதை போலிருக்கிறது இது! ஆனால், திருமலை மன்னர் கலையார்வத்தைக் கண்முன் காட்டும் சான்றுகள் பெருகிக் கிடக்கின்றன. அவற்றுடன் இக் கதைச் சான்றும் சேர்ந்து கொள்கிறது. இத் திருப்பணியில் ஈடுபட்ட உழைப்பாளர்கள் அனைவரையும் எச் சிறு கவலையும் இல்லாமல் இக் கலைத்தொழில் ஒன்றிலேயே ஈடுபடுத்தியிருந்தால் அல்லாமல் இத்தகைய அரிய பணிகளைச் செய்திருக்க இயலாது!*

**பொன்** : *திருமலை மன்னரின் அறிவு நுட்பத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஆண்டுதோறும் வசந்த விழாவில் திருமலை மன்னருக்குப் பரிவட்டம் கட்டும் வழக்கம் உண்டு. புது மண்டபம் கட்டிய முதலாண்டில் தாமே பரிவட்டம் கட்டிக் கொண்டார். அடுத்த ஆண்டில் தம் சிலைதான் புது மண்டபத்தில் இருக்கிறதே! அதில் கட்டுமாறு செய்தார். அவ்வழக்கம் இப்பொழுதும் நடைமுறையில் உள்ளது.*

**கண்** : *இப்படி ஏற்பாடு செய்யாமல் இருந்திருந்தால் அவர் தலைமறைந்த பின்னர் பரிவட்டம் கட்டுதலும் தலைமறைவாகியிருக்குமே! தலையே இல்லாத போது எப்படிக் கட்டுவது? ஆதலால் பறிபோகாத தலையைப் பார்த்துப் பரிவட்டம் கட்டச் செய்த அறிவுத் தேர்ச்சி பாராட்டுக்குரியதுதான்!*

**பொன்** : *இம் மண்டபத்தின் நீளம் 100 மீட்டர்; அகலம் 31.5 மீட்டர்; உயரம் 7.5 மீட்டர்; இதிலுள்ள தூண்கள் 124. இதற்குத் தெற்கே அம்மன் கோயில் முன்னே இருப்பது நகரா மண்டபம்! இராசகோபுரத்திற்குத் தெற்கே அம்மன் கோயில் முன்னே இருப்பது விட்டவாசல்! பாண்டியர்களின் பழைய கோட்டைப் பகுதியில் இடியாமல் விட்ட பகுதி இது. ஆதலால் இப்பெயர் பெற்றது..*

**கண்** : *நல்லது; கோயிலுக்குள் இருப்பது ஆடிவீதி; கோயிலுக்கு வெளிச் சுற்றாக இருப்பது சித்திரைவீதி; அடுத்துள்ள வீதி ஆவணிமூல வீதி.*

**பொன் :** *இதனை அடுத்த பெரிய வீதி மாசிவீதி. இவ் வீதிகள் நான்கு பக்கங்களிலும் உண்டு; அவ்வத் திசைப் பெயருடன் வீதிப் பெயரும் சேர்த்து வழங்குகின்றது.*

**கண் :** *இப் பெயர்கள் வந்த காரணம் என்ன?*

**பொன் :** *ஆடி, சித்திரை, ஆவணி, மாசி என்பவை மாதப் பெயர்கள் என்பது தெளிவானதுதானே. இத் திங்களில் அவ்வவ் வீதிகளில் கோயில் திருவிழாக்கள் நடைபெறு வதால் இப் பெயர்களைப் பெற்றன.*

**கண் :** *கோபுரத்தில் ஏறிப்பார்த்தது போல் இம் மண்டபத்தில் ஏறிப்பார்க்க முடியாதா? வழி இல்லையா?*

**பொன் :** *உண்டு! வா, போகலாம். இப்பொழுது இம் மண்டப முகட்டைப் பழுதுபார்க்கும் எண்ணத்தால் போடப் பட்ட மூங்கில் பாலம் தென் கிழக்கு மேடையில் இருந்து உள்ளது. அங்கேபோய் மண்டபத்தின் மேல் கோடிக்குச் சென்றால், சொக்கர் கோயில் முகப்பி லுள்ள சுந்தரபாண்டியன் கோபுரத்தினைக் கைக்கு எட்டிய பக்கத்தில் காணலாம். நாம். தொலைநோக்கி வேறு வைத்துள்ளோமா? ஒவ்வொரு சுதைச் சிற்பத்தையும் உன்னிப்பாகக் கண்டு மகிழலாம்! மெல்ல ஏறு! பார்த்து நட!*

**கண் :** *தண்ணீர் தானே வழிந்தோடும் வண்ணம் நுண்ணிய நோக்கில் மூடுதளம் போட்டுள்ளது பார்க்க வேண்டிய ஒன்று தான். கோபுரத்தைப் பார்ப்போம்.*

**பொன் :** *கண்ணப்பா! நாம் பேசாமல் பார்த்து விட்டு இறங்குவோம். இந்த ஒரு பக்கத்தில் உள்ள சுதை களைப் பற்றி மட்டும் இன்று முழுவதும் பேசி முடியாது. இக் கோபுரத்தில் மட்டும் 1011 சுதைகள் உள்ளனவாம்!*

**கண் :** *சரி சரி! கோபுரங்களைப் பார்க்கவே நாம் தனிச் சுற்றுலா மேற்கொள்ள வேண்டும்! இப்பொழுது பார்த்த மகிழ்ச்சியில் இறங்கலாம்.*

**பொன் :** *நல்லது.*

**கண்** : *இவ்வளவு தொலைவு வந்தோம். நாம் மதுரையையும் சுற்றிப்பார்க்க வேண்டும்; திருப்பரங்குன்றத்தையும் போய்ப் பார்க்க வேண்டும்! நம் சுற்றுலாவை இந்த அளவில் முடித்துக் கொண்டு பின்பு தொடர்வோம்.*

"அண்ணல் ஆலவாய்
நண்ணி னான்தனை
எண்ணி யேதொழத்
திண்ணம் இன்பமே"

**பொன்** : "ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே."

# மதுரைத் திருக்கோயில்

# மதுரைத் திருக்கோயில்

**கோயில் முகப்பு :**

*நூலுக்கு முன்னுரை உண்டு. மீனாட்சி சொக்கர் கோயிலுக்கும் முன்னுரை உண்டு! மீனாட்சியம்மை கோயிலின் முகப்பே அழகிய முன்னுரையாகும்!*

*மூத்த பிள்ளையாரும் இளைய பிள்ளையாரும் முகங் கொடுத்திருக்க - அம்மையும் அப்பனும் திருக்கோலம் கொண் டிருக்க - அவர்கள் திருக்கைகளை இணைத்துத் திருமால் நீர்வார்த்திருக்க அமைந்துள்ள திருமணக்காட்சி மீனாட்சி - சொக்கர் கோயிலுக்கு முன்னுரையேயாம்.*

**அட்டசத்தி மண்டபம் :**

*அம்மை கோயில் வாயிலுள் நுழைந்ததும் இருப்பது ‘அட்டசத்தி மண்டபம்’. ‘அட்டலக்குமி மண்டபம்’ என்பதும் இதுவே. மண்டபத்தின் இருபக்கங்களிலும் நான்கு நான்கு தூண்களாக அமைந்துள்ள எட்டுத் தூண்களிலும் எட்டுச் சத்தியர் உள்ளனர்.*

*இடப்புறம் இருப்பவர் கௌமாரி, இரௌத்திரி, வைணவி, மகாலக்குமி என்பார். வலப்புறம் இருப்பவர் எக்ஞரூபிணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணி என்பார்.*

*அட்டசத்தி மண்டபத்தைக் கட்டியவர் இருவர் அவர் திருப்பணிக்கே தம்மை ஆளாக்கிக் கொண்ட வேந்தர் திருமலை நாயக்கர் பட்டத்துத் தேவியர் ஆகிய உருத்திரபதியம்மை தோளியம்மை என்பவர்.*

*மலயத்துவச பாண்டியன் மகளாக மீனாட்சி பிறப்பதும், அவள் முடிசூட்டிக் கொள்வதும், ஆட்சிநடத்துவதும், வீர உலாச் செல்வதும், இறைவனைக் காண்பதும், சோமசுந்தரர் ஆட்சி நடத்துவதும், உக்கிரபாண்டியர் பிறப்பு, முடிசூட்டு, ஆட்சி ஆகியவும் இம்மண்டபத்தில் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.*

**இணைப்பு மண்டபம் :**

அட்டசத்தி மண்டபத்தை அடுத்த பெரிய மண்டபம் மீனாட்சி நாயக்கர் மண்டபம் என்பது. இவ்விரண்டு மண்டபங்களும் இணைப்பாக இடையே ஒரு மண்டபம் உள்ளது. அதில் இறைவன் வேடனாகவும், இறைவி வேட்டு வச்சியாகவும் வந்து மாபாவி ஒருவனுக்கும் அருள் செய்த அழகிய சிற்பங்கள் உள்ளன. திருவிளையாடற் புராணத்தில் மாபாதகந் தீர்த்த படலம் என்பதில் உள்ள கதையை விளக்கும் சிற்பங்கள் இவை.

**மீனாட்சி நாயக்கர் மண்டபம் :**

மீனாட்சி நாயக்கர் என்பார் கட்டிய மண்டபம் மீனாட்சி நாயக்கர் மண்டபம். இவர் விசயரெங்க சொக்கநாத நாயக்கரின் தலைமையலுவலர்களுள் ஒருவர். இம்மண்டபம் கி. பி. 1707 இல் கட்டப்பட்டது. இதிலுள்ள தூண்கள் 110. பெருவிழாக்கள் எடுப்பதற்கென அமைக்கப்பட்ட இம்மண்டபத்தின் இருபாலும் பூக்கடைகளும் வளையல் பொம்மைக் கடைகளும் உள்ளன.

**முதலிப்பிள்ளை மண்டபம் :**

மீனாட்சி மண்டபத்தில் இருந்து அடுத்துள்ள முதலிப் பிள்ளை மண்டபத்திற்குள் நுழைவதற்கரிய வாயிலின் நெட்டுயரத்திற்கு எடுப்பான திருவாச்சியுள்ளது. இதில் 1008 விளக்குகள் உள்ளன. இதனை அமைத்தவர் இந்திய விடுதலைப் போருக்குத் தம்மை ஈந்தனேர - அந்த மருதுபாண்டியர்.

முதலிப்பிள்ளை மண்டபம் என்பது கடந்தை முதலியார் என்பவரால் கட்டப்பட்டது. இதனைக் கட்டிய ஆண்டு கி.பி.1613.

மோகினியைக் கண்டு முனிவர்கள் மயங்கி நிற்கும் நிலை, பிச்சைப் பெருமானாம் இறைவனைக் கண்டு முனிவர் மனைவியர் மயங்கி நிற்கும் நிலை ஆகியவவை வைத்த கண்ணை எடுக்கவிடா வனப்புடன் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இங்கே கடந்தை முதலியார் சிலையும் வணங்கும் கோலத்தில் அமைந்துள்ளது.

**பொற்றாமரைக்குளம் :**

முதலிப்பிள்ளை மண்டபத்தைத் தாண்டிச் சென்றால் காட்சியளிப்பது பொற்றாமரைக் குளம். இதன் பெயரை விளக்குவது போல் பொற்றாமரைப் பூவைத் திருப்பனந்தாள் திருமடத்தார் மலரச் செய்துள்ளனர்.

நீளம், அகலம், படிக்கட்டு அமைப்பு, நடைபாதை, சுவரோவியம், திருக்கோபுரப் பின்னணி, நீராடி வழிபாடு செய்வார் நேர்த்தி ஆகியவை ஒன்றற்கு ஒன்று அழகு சேர்ப்பதாய்த் திகழ்கின்றது பொற்றாமரைக் குளம்.

தெப்பக்குள நடைமண்டபத்தின் வடக்கு கிழக்குச் சுவர்களில் எல்லாம் திருவிளையாடல் ஓவியங்கள் உள்ளன. தெற்குச் சுவரில் திருக்குறள், சிவஞானபோதம், அபிராமி அந்தாதி, மதுரைத் தேவாரப் பதிகங்கள் ஆகியவை சலவைக் கல்லில் தீட்டிப் பதிக்கப் பட்டுள்ளன. இத்திருப்பணி செய்தவர் திருப்பனந்தாள் திருமடத்துத் தலைவர் அருள்நந்தித் தம்பிரான் ஆவர்.

49.5 மீட்டர் நீளமும் 36 மீட்டர் அகலமும் உள்ள இப் பொற்றாமரைக் குளம் 'சங்கப்பலகை' இருந்த இடம் என்பது புராணம். மண்டபத் தூண்களில் ஏடு எழுத்தாணிகளுடன் இருப்பவர்கள் புலவர்கள்!

**சிவந்தீசுவரர் கோயில் :**

பொற்றாமரைக் குளத்தின் தென்மேற்குப் பகுதிக்கு மேற்கில் சிவந்தீசுவரர் கோயில் இருக்கிறது. அங்கே பூந் தோட்டம் உள்ளது. தேவாரப் பாடசாலையும் நடைபெறுகிறது.

**ஊஞ்சல் மண்டபம் :**

சிவந்தீசுவரர் கோயிலுக்கும் பொற்றாமரைக் குளத்திற்கும் இடையே அமைந்த நடைமண்டபம் தெற்குக் கோபுர வாயிலுக்கு நேரே உள்ளது. இந்நடைமண்டபத்தில் ஆறு தூண்களைக் கொண்ட அழகான கருங்கல் மண்டபம் ஒன்றுள்ளது. அதற்கு ஊஞ்சல் மண்டபம் என்பது பெயர். அதற்கு முன்னே, தெப்பக் குளத்தின் உள்ளே நீண்டு செல்லும் மண்டபம் ஆடல் மண்டபம் - வெள்ளிதோறும் இறைவன் இறைவியர் ஊஞ்சலாட்ட நிகழ்ச்சி அங்கு நிகழ்கின்றது. மன்னராட்சி நாளில் ஊஞ்சல் நிகழ்ச்சியின்போது ஆடல் மண்டபத்தில் ஆடல் நிகழ்ந்ததும் உண்டு.

ஊஞ்சல் மண்டபம் இருக்கும் நடைவழி மண்டபத் தூண்களில் உள்ள சிற்பங்கள் சிறியவை; ஆனால் அரியவை உச்சித் தலை மேல் கை வைத்துக் கும்பிடுபவர்; நெஞ்சுக்கு நேரே கைதூக்கி வணங்குபவர்; வலக் காலைத் தூக்கி மடித்து நின்று வணங்குபவர்; சடைத் தலையராய் வணங்குபவர்; மொட்டைத்

தலையராய் வணங்குபவர்; பாகைத் தலையுடன் வணங்குபவர்; திருமுடி திகழ வணங்குபவர்; வில்லேந்திய தோளராய் வணங்குபவர்; விம்மித உருவாய் வணங்குபவர்; விழுந்து வணங்குபவர்; மண்டியிட்ட கோலத்தில் வணங்குபவர்; ஆடும் அழகியாய்ப், பாடும் பாவையாய் வணங்குபவர்; குரங்கராய், காளையராய் வணங்குபவர் - இப்படி வணக்க வகைகளை யெல்லாம் வடித்துக் காட்டும் சிற்பங்கள் உள்ளன.

**கிளிக்கூட்டு மண்டபம் :**

ஊஞ்சல் மண்டபத்தை அடுத்து வடபால் உள்ளது கிளிக்கூட்டு மண்டபம். கிளிக்கட்டு மண்டபம் என்பதும் இது. கிளியைக் கையில் ஏந்திய கிளி அங்கயற்கண்ணி. அதை நினைவு கூர்ந்து அமைக்கப்பட்ட மண்டபம் ஆகும். அதன் மேற்கூரையில் பிள்ளையார், முருகன், அம்மை ஆகியோரின் எண்ணற்ற வண்ண ஓவியங்கள் பளிச்சிடுகின்றன.

இம் மண்டபத்தின் நடை வழிக்கு இருபாலும் உள்ள தூண்களில் சிற்பங்கள் சிறந்து விளங்குகின்றன. தருமனும் அருச்சுனனும் வில்லாளிகளாக இருதூண்களில் எதிரெதிர் நிற்கின்றனர். அடுத்து நகுலன் சகாதேவன் நிற்கின்றனர். பலி பீடத்தின் முன்னர்த் தண்டேந்திய வீமனும் மனித விலங்கும் (புருசாமிருகம்) நிற்கின்றனர். சித்திவிநாயகர், குமரர் கோயிலுக்கு முன்னே சுக்ரீவன், வாலி, பாஞ்சாலி சிற்பங்கள் உள்ளன. மூர்த்தி நாயனார் தம் கை மூட்டையே சந்தனக் கட்டையாகக் கொண்டு அரைக்கப் பயன்படுத்தியது எனப்படும் கல்லும் உள்ளது. தருமன் முதலியவர்களின் சிற்பத்தூண்கள் கரிய மாணிக்கப் பெருமாள் கோயில் சிதைந்த போது அதிலிருந்து கொண்டு வந்த இம்மண்டபத்திற்குப் பயன்படுத்தப்பட்டது என்பர்.

**அம்மை கோயில் - திருச்சுற்று :**

அம்மை திருக்கோயில் இரண்டு திருச்சுற்றுகளை யுடையது. இரண்டாம் திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் திருமலை மன்னர், வணங்கும் கோலத்தில் சிற்பமாக உள்ளார். தென்மேற்கு மூலையில் இரண்டு பிள்ளையார்கள் உளர். ஒருவர் உச்சிட்டபிள்ளையார் ; மற்றொருவர் கூத்தப் பிள்ளையார். வடமேற்கு மூலையில் முத்துக்குமரர் கோயில் கொண்டுள்ளார்.

**ஆறுகால் மண்டபம் :**

அம்மை திருக்கோயில் வாயிலின் முன்னே ஆறுகால் மண்டபம் ஒன்று உள்ளது. அதில்தான் குமரகுருபரர் அமர்ந்து

*மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றினார். மீனாட்சியம்மையே ஒரு குழந்தை வடிவில் வந்து திருமலை மன்னர் கழுத்தில் கிடந்த முத்துமாலையை எடுத்துக் குமரகுருபரர் கழுத்தில் போட்டு மறைந்தனள் என்பர்.*

**அம்மை அழகும் அருளும் :**

*காண்பார் கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொள்ளும் வகையில் பசுங்கிளி ஒன்றைக் கையில்கொண்டு பச்சைப்பசுங் கிளியாய் மீனாட்சியம்மை நின்ற கோலத்தில் அருள் செய்கிறாள். அந்த அழகிலே சொக்கித்தான் அவளின் அருமைப்பிள்ளை குமரகுருபரர்,*

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்(து)
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ (கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம் வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிளம்
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே!

*என்று பாடினார். அம்மையைப் பிள்ளையாக்கி வரவேற்ற அருமைப் பிள்ளையின் பாடலை நினைந்து அம்மையை வாழ்த்துவோம். பள்ளியறையும் அம்மை பக்கத்திலேயே உள்ளது.*

**முக்குறுணிப் பிள்ளையார் :**

*அம்மையை வணங்கிக் கிளிக்கூட்டு மண்டபத்திற்கு வரும் வழியில் முத்துவெளியும் முத்து லிங்கமும் உள்ளன; சின்னீசுவரர் கோயிலும் உள்ளது. அடுத்துள்ளது நடுக்கட்டுக் கோபுரம்.*

அதன் நேரே தெற்கு நோக்கியிருப்பவர் 'முக்குறுணிப் பிள்ளை யார்' 'மற்பொரு திரள்புயமதயானை' என்பதற்கு ஏற்ற வடிவம் அது. பிள்ளையார் சதுர்த்திக்கு முக்குறுணி (ஏறத்தாழ 18 லிட்டர்) அரிசியை மாவாக்கி ஒன்றாகப் பிடித்த கொழுக் கட்டையைப் படைக்கும் வழக்கத்தால் முக்குறுணிப் பிள்ளையார் எனப் பெயர் வந்தது. இது மாரியம்மன் தெப்பக்குளம் தோண்டும் போது எடுக்கப்பட்டதென்றும், பின்னர் அங்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டதென்றும் கூறுவர்.

**கபாலி மதில் :**

முக்குறுணிப் பிள்ளையார் இருக்கும் இடம் சொக்கர் கோயில் இரண்டாம் திருச்சுற்றாகும். இதன் மதிற்சுவர்க்குச் 'சுந்தரபாண்டியன் மதில்' என்பது பெயர். சுந்தரபாண்டியனால் எடுக்கப்பட்ட மதில் இது (கி.பி. 1216-1238). இதன் உள் மதில் 'கபாலி மதில்' எனப்படும். அது, 'கபாலி நீள்கடிம்மதில் கூடல் ஆலவாயிலாய்' எனத் திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட பெருமையுடையது.

**கம்பத்தடி மண்டபம் :**

சொக்கர் வாயிலுக்கு நேரே இச்சுற்றில் உள்ளது கம்பத்தடி மண்டபம். இதற்கு நந்தி மண்டபம் என்னும் பெயரும் உண்டு.

மண்டபத்தின் நடுவே தங்கக் கொடிமரம் உள்ளது. நந்தி, பலிபீடம் ஆகியவையும் உள்ளன. கம்பம் என்பது கொடிமரம் ஆகும்.

இம்மண்டபத்தில் தெற்கே நான்கு தூண்களும் வடக்கே நான்கு தூண்களும் ஆக எட்டுத் தூண்கள் உள்ளன. எட்ட முடியாக் கலைச் செல்வங்களை இவ்வெட்டுத் தூண்களிலும் காணலாம். கி. பி. 1564 இல் கிருட்டிண வீரப்பநாயக்கரால் கட்டப்பட்ட இம்மண்டபம்.

தென்பக்க முதல் தூணின் கிழக்குப்பக்கத்தில் அம்மை திருமணக்கோலச் சிற்பம் உள்ளது.

இத்தூணின் வடபால் சோமசுந்தரரும் தென்பால் முப்புரம் எரித்தவரும் (திரபுராந்தகர்) உள்ளனர்.

இரண்டாம் தூணின் தென்பால் இறைவன் காலனை அழிக்கும் காட்சியும் கிழக்குப் பக்கத்தில் மார்க்கண்டேயனுக்கு அருள் செய்த காட்சியும் தூணின் வடபால் சுகாசனர் (அமைதிக் கோலர்) காட்சியும் உள்ளன.

*மூன்றாம் தூணில் இறைவன் கூத்தப் பெருமானாக ஆடுகின்றான். நந்தி குடமுழாத் தட்டுகிறார். வடக்குப் பக்கத்தில் காமதகனர் (காமனை எரித்தவர்) உள்ளார்.*

*நான்காம் தூணில் சந்திரசேகரர் (நிலவணிந்தார்) ரிசபாந்திகர் (காளைக் கருளியோர்) இலிங்கோத்பவர் (அரியயன் அறியார்) கயிலாயஆரூடர் (கயிலைப் பெருமான்) ஆகியோர் உள்ளனர்.*

*வடக்கு வரிசை நான்கு தூண்களுள் மேற்குத்தூணில் ஏகபாத மூர்த்தி (ஓரடிப் பெருமான்) ரிசபாரூடர் (விடையேறி) சக்கரதரர் (ஆழியங்கையர்) உமையொருபாகர், சங்கர நாராயணர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன.*

*ஆறாம்தூணில் சலந்திர அனுக்கிரகர், தக்கணாமூர்த்தி (தென்முகக்கடவுள்) ஆகியோரும், ஏழாம் தூணில் கச சம்மாரர் (கரியுரிபோர்த்தவர்) சண்டேசுவர அனுக்கிரகர் ஆகியோரும் உள்ளனர்.*

*கடைசித் தூணில் பிச்சாடனர் (பிச்சைப் பெருமான்) உருத்திரர், கிராத அர்ச்சுனர் (வேடர் பெருமானும் அருச்சுனனும்), சோமாசுகந்தர் (இறைவன் இறைவி முருகர்) ஆகியோர் உள்ளனர்.*

**நாற்கால் மண்டபம் :**

*இவ்வெட்டுத் தூண்களுக்கும் ஊடே இருக்கிறது ஒரு நாற்கால் மண்டபம். அதற்கு வீரப்பமண்டபம் என்பது பெயர். கிருட்டிண வீரப்பநாயக்கர் கட்டியது. இப்பெரு மண்டபம் என்பதை முன்னரே அறிந்தோம்! இது பின்னர்* ***ஏழு கோயில் நகரத்தார்களால்*** *திருப்பணி செய்து அழகூட்டப்பட்டது.*

*இம்மண்டபத்தின் எப்பக்கமும் 'சிற்பவேலைப்பாடே, பீடம், தூண், குழைவு, வளைவு ஆகியவற்றில் எல்லாம் அழகிய வேலைப்பாடு, முகடு, விட்டம், சட்டம், தகடு, சங்கிலி, ஆணி இவையெல்லாம் அழகுவேலை! இதன் மேற் பாவு கல், ஒரே கல்!*

**வீரபத்திரர் :**

*கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழக்கே மேற்கு நோக்கி நிற்பவர் அக்கினி வீரபத்திரரும், அகோர வீரபத்திரரும் ஆவர். அழகுச் சிலையிலே இவ்வளவு அச்சுறுத்த வல்ல தோற்றத்தை அமைப்பது மிக அருமைப்பாடேயாகும்.*

**ஊர்த்துவ தாண்டவர் :**

*வீரபத்திரர், வாயிலுக்கு வடக்குப் பக்கம் என்றால் தெற்குப் பக்கத்தில் ஊர்த்துவதாண்டவரும், பத்திரகாளியும் உள்ளனர். இறைவனுக்குப் பத்துக்கை. பத்திரகாளிக்கு எட்டுக்கை.*

**திருச்சுற்று :**

*கம்பத்தடி மண்டபத்திற்குத் தெற்குச் சுற்றின் கிழக்கில் திருஞான சம்பந்தர் மண்டபம் உள்ளது. வடமேற்கு மூலையில் சங்கத்தார் கோயில் உள்ளது. முன்னதில் மாணிக்கவாசகர், சுந்தரர், நாவுக்கரசர், ஞானசம்பந்தர், நெடுமாறர், மங்கையர்க் கரசியார், குலச்சிறையார், மூர்த்தியார் உள்ளனர். பின்னதில் சங்கப்புலவர்கள் உள்ளனர்.*

**நாயக மண்டபம் :**

*இத்திருச்சுற்றின் வடகிழக்குக் கோடியில் மண்டப நாயகம் எனப்படும் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இதனைக் கட்டிய பெரியவர் சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1526) இங்கே கூத்தப்பிரான் எழுந்தருளியுள்ளார்.*

**முதற்சுற்று :**

*சொக்கர் கோயில் முதற் சுற்றின் வாயிலுக்கு வடப்பக்கம் பழனியாண்டவரும், தென்பக்கம் திருவருள் பிள்ளையாரும் உள்ளனர். ஆட்கொண்டார், உய்யக்கொண்டார் என்னும் வாயில் காவலர் இருவர் வனப்பாக உளளனர். உட்சுவர் முழுமையும் திருவிளையாடல் கதைகள் ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளன. கதிரவன், உசை, நாயன்மார், இலிங்கப் பெருமான், கலைமகள், சத்தமாதர், இறைவர், பிள்ளையார் ஆகியோர் தென்புறத்தில் சிலைகளாக உளர். தென்மேற்கில் உற்சவ மூர்த்தி கோயிலும் வடமேற்கில் காசிவிசுவநாதர் கோயிலும் உள்ளன. வடக்குத் திருச்சுற்றின் மேற்குக் கடைசியில் மேதா தக்கணா மூர்த்தியுள்ளார். இங்கே தனிக்கோயிலில் சித்தர் பெருமான் உள்ளார். வலுவமைந்த உடல்; அழகுமிக்க தோற்றம்; தண்டின்மேல் ஒருகை; மந்திரக்கோல் ஒருகையில் வலக் காலைக் கீழே மடித்து இடக்காலை அதன்மேல் மடித்துப்போட்டுப் பீடத்தின் மேல் பெருமிதமாக அமர்ந்துள்ளார் சித்தர் பெருமான் 'எல்லாம் வல்ல சித்தர்' கோயில் என்பது அது. அதனை விக்கிரம பாண்டியன் என்பான் அமைத்தான் (கி. பி. 1315-1347) இக்கோயிலுக்குக் கிழக்கில் கனகசபை அட்சரலிங்கம்*

ஆகியவை உள்ளன. திருமகளும் உள்ளாள். இரத்தினசபை, வன்னியும் கிணறும் அழைத்த திருவிளையாடல் காட்சி, கல்லாலமரம், இலிங்கம் ஆகியவை அடுத்துள்ளன.

**ஆறுகால் மண்டபம் :**

சொக்கர் திருமுன் நுழைவாயிலில் ஓர் ஆறுகால் மண்டபம் உள்ளது. அங்கேதான் பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம் அரங்கேற்றமாகியது. அம்மை திருமுன் அமைந்த ஆறுகால் மண்டபத்தில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றமாகியதை முன்னரே அறிந்துள்ளோம்.

**சொக்கர்கோயில் :**

சொக்கர் கோயிலுள் அறுபத்து மூவர் செப்புத் திருமேனி களும், உற்சவசித்தர், சந்திரசேகரர் செப்புத் திருமேனிகளும் உள்ளன. இவை விழாக்களில் உலாக் கொள்ளும் திருமேனிகள்.

இறைவர் சொக்கநாதர் சுந்தரரேசுவரர் என்பாரும் அவர். இலிங்க வடிவில் அருமையாக அமைந்துள்ளார். அவரைத் திருவிளையாடல் பாடிய பரஞ்சோதியார் பாடிப் பாடித் திளைக்கிறார் :

'சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்துநறுங் கொன்றையந்தார்
தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச்
சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி
மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை
வணக்கம் செய்வோம்'

என்கிறார். நாமும் வாழ்த்தி வணங்குவோம். சோமசுந்தரருக்கு முன்னர் இடப்பக்கத்தில் வெள்ளியம்பலம் உள்ளது. முகடு மட்டும் வெள்ளியன்று! இறைவர் வடிவமும் வெள்ளியே! இறைவர் கால்மாறியாடும் கவினுருவில் திகழ்கின்றார் இங்கே.

**கருவறையும் விமானமும் :**

இறைவர் கருவறையும் விமானமும் பழமைமிக்கவை. விமானம், திசைக்கு இரண்டாக எட்டு யானைகளும், திசைக்கு எட்டாக முப்பத்திரண்டு சிங்கங்களும், திசைக்குப் பதினாறாக

அறுபத்து நான்கு பூதங்களும் தாங்கிக் கொண்டிருப்பது போன்ற அமைப்புடையது. இது இந்திரனால் செய்யப்பட்டது என்பது புராணக்கதை.

**வசந்தராயர் மண்டபம் :**

சொக்கர்கோயில் இரண்டாம் சுற்றைக் கடந்து வெளியே வரும் வழியில் உள்ளது பேச்சக்காள் மண்டபம். அடுத்து கிழக்கே உள்ளது வீரவசந்தராயர் மண்டபம். இதனைக் கட்டியவர் முத்துவீரப்ப நாயக்கர் என்பவர். இவர் திருமலை நாயக்கரின் தமையனார் (கி.பி.1611) இம்மண்டபத்தில் பலவகைக் கடைகள் உள்ளன.

**ஆயிரக்கால் மண்டபம் :**

இங்கேதான் புகழ்மிக்க ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. இதனைக் கட்டிய தளவாய் அரியநாத முதலியாரின் உருவம் வாயிலுக்கு மேற்கில் குதிரைமேல் அமர்ந்த நிலையில் உள்ளது. அடுத்துப் பிச்சைப்பெருமான், கண்ணப்பன் ஆகியோர் உருவங்களும் அங்கம் வெட்டிய திருவிளையாடற் காட்சியும் அருமையாய் அமைந்துள்ளன. மேல் கடைசியில் உள்ளது இசைத்தூண்.

அடியும்முடியும் ஒன்றாய் இருக்க, இடையே பலவாய்ப் பிரிந்த அழகுத்தூண் அது. முப்பட்டை, நாற்பட்டை, உருளை முதலாகப் பல வடிவத்தூண்கள்; ஒவ்வொருபக்கத்திலும் நான்கு தூண்கள்! உள்ளே மூன்று தூண்கள்! எப்பக்கமும் ஏழுவரிசை! ஏழிசை எழுப்பும் எழில் தூண்கள் அவை. இத்தூணைப் போலவே கீழைக்கடைசியிலும் இசைத்தூண். வடக்கு ஆடி வீதியிலும் இசைத்தூண்கள்.

ஆயிரக்கால் மண்டபத்தின் வாயிலுக்குக் கிழக்கே அரிச்சந்திரன், சந்திரமதி, குறவஞ்சி, குறவன் ஆகியோர் சிற்பங்கள் ஒன்றை ஒன்று வெற்றி கொள்வதாய் அமைந்துள்ளன.

இம்மண்டபத்தின் நீளம் 75 மீட்டர். அகலம் 72 மீட்டர். தூண்கள் 985 உள்ளன. 15 தூண்கள் இருக்க வேண்டிய பரப்பில் உட்கோயில்கள் இரண்டு உள்ளன. இம் மண்டபம் இப்போது அருங்கலைக் காட்சிக் கூடமாகவும் விளங்குகின்றது.

மண்டபத்தின் உள்ளே கூத்தாடும் பிள்ளையார், குலசேகர பாண்டியர், திருமுருகன், நாகராசர், கலைமகள், திருமால், அருச்சுனன், திரௌபதி ஆகியோர் சிற்பங்கள்

*அமைந்துள்ளன. சிற்பத்தில் இசைகொஞ்சுகிறது என்றால் நகைச்சுவை கொஞ்சுவதையும் ஒருசிற்பத்தில் நிலை நாட்டியுள்ளான் ஒரு சிற்பி. திரௌபதிக்குத் தென்பக்கம் நிற்கிறான் அக்'கோணன்'! தோளில் ஒரு பெண்ணை வைத்துக் கொண்டு வீறுடன் ஓடும் ஒருவன் தோற்றம், வைத்தகண் வாங்காமல் பார்க்க வைக்கிறது.*

**நடுமண்டபம் :**

*கூத்தப்பெருமான் திருமுன் உள்ள நடுமண்டபத்து, இரு பால் தூண்களிலும் அழகு அழகுச் சிற்பங்கள் பிச்சைப் பெருமான், தருமன், வீமன், இரதி, வீரபத்திரர், மோகினி, அருச்சுனன், மனிதவிலங்கு, மன்மதன், அக்கினி வீரபத்திரர் ஆகியோர் உள்ளனர். இவற்றுள் இரதிசிலையும், வீரபத்திரர் சிலையும் இசைபாடும் சிலைகள்! தூண்களில் தான் இசை யென்றால், சிலைகளிலும் இசை! வெவ்வேறு இடங்களில் தட்டினால் வெவ்வேறு இசை!*

*ஆயிரக்கால் மண்டபத்தின் முன்னுள்ள வீரவசந்தராயர் மண்டபத்தின் முகப்பின் வடக்கில் ஒருவீரன் தன் தோளில் தன் காதலியை வைத்துள்ளான். தெற்கில் வீரபத்திரர் உள்ளார். ஐந்தலைப் பாம்புக் குடைக்கீழ் எண்கைச் சத்தியும் வீற்றிருக்கிறாள். இப்பகுதியில் வளையல் கடைகள் உள்ளன.*

**பிறமண்டபங்கள் :**

*இம்மண்படத்திற்குத் தெற்கே மங்கையர்க்கரசியார் மண்டபம் உள்ளது. அது 1960 ஆம் ஆண்டுத் திருப்பணியின் போது புதிதாகக் கட்டப்பட்ட மண்டபம். நின்ற சீர் நெடுமாறனாம் பாண்டியன், மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையார், திருஞானசம்பந்தர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.*

*அதனை அடுத்துள்ளது சேர்வைகாரர் மண்டபம். அதனைக் கட்டிய பெரிய மருது சிலை அங்குள்ளது. அம் மண்டபத்திற்கு மேற்கில் இருப்பது திருமண மண்டபம். அதனைக் கட்டிய விசயரெங்க சொக்கநாத நாயக்கர் சிலையாக நிற்கிறார். அழகிய மேற்கட்டு மரச்செதுக்குவேலை செய்த வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியாரும் நாகப்பச் செட்டி யாரும் ஓவியமாக விளங்குகின்றனர்.*

*திருமண மண்டபத்திற்குத் தெற்கில் உள்ளது முத்து ராமய்யர் மண்டபம். அதனைக் கடந்தால் கிழக்கில் யானை*

கட்டுமால், மேற்கில் வன்னியடிப் பிள்ளையார் கோயில் ஆகியவை உள்ளன.

**ஆடி வீதி :**

கிழக்கு ஆடி வீதியில் இருந்து வலமாகத் திரும்பினால் தெற்கு ஆடி வீதி. அதில் திருப்புகழ் சபை, தேவாரப் பாடசாலை, நூல்நிலையம், சைவசித்தாந்த சபை, தேவாரப் பாடசாலை, நூல்நிலையம், சைவசித்தாந்த சபை, தெய்வநெறிக் கழகம், பன்னிரு திருமுறை மன்றம், கோயில் அலுவலகம் ஆகியவை உள்ளன.

மேற்கு ஆடி வீதியில் பசுமடம், சிவகங்கைத் திருக்கோயில் அலுவலகம் ஆகியவை உள்ளன. வடமேற்கு மூலையில் திருப்புகழ் மண்டபமும், வடக்கில் திருவள்ளுவர் கழகமும் உள்ளன. வடக்குக் கோபுரவாயிலின் இருபாலும் இசைத் தூண்கள் ஐந்து உள்ளன.

வடக்கு கோபுர வாயிலுக்கு நேரே தெற்கில் இருப்பது கூட்டு வழிபாட்டு மண்டபம். இப்பகுதியில் தான் முன்பு கரிய மாணிக்கப் பெருமாள் கோயில் இருந்தது என்பர். வடக்கு ஆடிவீதியில் இருந்து வலமாகத் திரும்பினால் பதினாறு கால்மண்டபம் ஒன்றுள்ளது. அதற்குத் தட்டுச்சுற்று மண்டபம் என்ற பெயரும் உண்டு. மாணிக்கவாசகருக்காக இறைவன் மண் சுமந்தது முதலிய திருவிளையாடல்கள் ஆவணி மூலத்திரு நாளில் இம்மண்டபத்தில் நிகழும்.

**கோபுரங்கள் :**

நான்கு வாயில் பக்கங்களிலும் கோபுரங்கள் உள்ளன. அவை எல்லாமும் ஒன்பது நிலைக் கோபுரங்கள்.

தெற்குக் கோபுர உயரம் 48 மீட்டர். அதன் அடிமட்ட நீளம் 32.4 மீட்டர். அகலம் 30.1 மீட்டர். இதனைக் கி.பி. 1559 இல் சிராமலைச் செவ்வந்திமூர்த்தி செட்டியார் என்பவர் கட்டினார்.

மேலக் கோபுரம் 46.2 மீட்டர் உயரம். அது பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டது.

வடக்குக் கோபுரம் 45.6 மீட்டர் உயரம். அது கிருட்டிண வீரப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. மொட்டைக் கோபுரம் என்பது இதற்கொரு பெயர்.

*கிழக்குக் கோபுரம் 45.9 மீட்டர் உயரம். இது மாறவர்மன் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டது. பெரிய கோபுரங்களுள் பழமையானது இதுவே.*

*அம்மன் கோயிலுக்கு வரும் வழியில் உள்ளது சித்திரக்கோபுரம். இதனைக் கட்டியவர் தளவாய் அரியநாத முதலியாரின் மைந்தர் காளத்தி முதலியார். இதன் உயரம் 35.1 மீட்டர்.*

*அம்மன் கோயில் முன்னே உள்ளது வேம்பத்தூரார் கோபுரம். இதனைக் கட்டியவர் வேம்பத்தூர் ஆனந்தத் தாண்டவ நம்பி.*

*இதன் உயரம் 12 மீட்டர்.*

*அம்மன் கோயிலுக்குப் பின்னால் மேற்கு ஆடிவீதியில் உள்ள ஐந்து நிலைக் கோபுரம் 19.2 மீட்டர் உயரமானது.*

*மேலக் கோபுரத்திற்கு நேர் கிழக்கில் உள்ளதும் ஐந்து நிலைக் கோபுரமே. இதன் உயரம் 21.6 மீட்டர். இதனைக் கட்டியவர் மல்லப்பன்.*

*அம்மன் கோயிலுக்கும் சொக்கர் கோயிலுக்கும் ஊடே யுள்ளது நடுக்கட்டுக் கோபுரம். இதன் உயரம் 20.7 மீட்டர் சிராமலைச் செவ்வந்திமூர்த்தி செட்டியார் கட்டியது இது.*

*வடக்குக் கோபுரத்திற்குத் தெற்கே உள்ள ஐந்துநிலைக் கோபுரம் இடபக்குறியிட்ட கோபுரம் எனப்படும். இதனைச் செவ்வந்தி வேலப்பச் செட்டியார் கட்டினார். இதன் உயரம் 21.3 மீட்டர்.*

*கம்பத்தடி மண்டபத்திலிருந்து சொக்கர் கோயிலுக்குப் போகும் வாயிலில் உள்ளது குலசேகரபாண்டியன் கோபுரம். இது மூன்று நிலைகளையுடையது. உயரம் 12.3 மீட்டர்.*

*கம்பத்தடி மண்டபத்திலிருந்து வீரவசந்தராயர் மண்டபத் திற்குச் செல்லும் வழியில் உள்ள ஐந்து நிலைக்கோபுரம் வசுவப்பனால் கட்டப்பட்டது. இதன் உயரம் 19.8 மீட்டர்.*

*வெயிலொளியை வாங்கிப் பொன்னொளியாக வெளிவிடும் விமானங்கள் இரண்டு உள்ளன. ஒன்று அம்மை விமானம். மற்றொன்று அப்பர் விமானம்.*

*மொத்தத்தில் கோபுரங்கள் 11. விமானங்கள் 2. வாயில் வளைவுகளா? அவை வாயில்தோறும் உள்ளவை!*

*மதுரை, கோயில் மாநகர் என்றால், கோயிலோ கோபுரக் கோயிலாக அல்லவா திகழ்கின்றது.*

*மதுரைக் கோயில் நீளம் 254.1 மீட்டர், அகலம் 237.6 மீட்டர்.*

**புதுமண்டபம் :**

*சொக்கர் கோயிலுக்கு முன்னே தனித்து இருக்கும் பெருமண்டபம் புதுமண்டபம் - நாயக்கமன்னர் கலைவண்ணச் சிறப்பைத் தனியே நின்று நிலைவண்ணமாக்கும் நீராழி மண்டபமாகத் திகழ்ந்தது அது. புறச் சூழல் எல்லாம் கடைகளாக மாறினாலும், அகச்சூழல் போற்றப்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியதே.*

*புதுமண்டபத்தின் புகுவாயில் சித்திரை வீதியில் உள்ளது. அதற்கு முன்னே இராசகோபுரம் அரை குறையாக நிற்கிறது. திருமலை மன்னரால் தொடங்கப்பட்ட அப்பணி அவர் மறைவால் நின்று விட்டது. அதன் அடித்தளத்தைப் பார்த்தாலே கோபுரங்களுக்கெல்லாம் இராசகோபுரம் என்பது விளங்குகின்றது.*

*புதுமண்டபத்தின் நுழைவாயிலில் உள்ள குதிரைவீரன் சிற்பமே கொள்ளை கொள்கிறது. உள்ளே திருவிளையாடற் சிற்பங்கள் உயிர்வடிவாக உவகை பெருக்குகின்றன. ஏகபாத மூர்த்தி (ஓரடிப்பெருமான்) காளி, உருத்திர தாண்டவர் காரைக்கால் அம்மையார், பிச்சைப்பெருமான், உமையொரு பாகர், மீனாட்சி திருமணம், கயிலையை இராவணன் எடுக்கும் காட்சி, கருங்கல் மண்டபம் (வசந்த மண்டபம்), நாயக்க மன்னர்கள் திருவுருவம் ஆகியவை காணக் காணக் களிப்பூட்டு கின்றன.*

*மண்டபத்தின் நான்குமூலைத் தூண்களிலும் ஓடத்துடிக்கும் குதிரைச் சிற்பங்கள், இம்மண்டபத்தைத் தேராக்கி ஓட்டக் கற்பனை செய்திருக்கிறான் சிற்பக்கோமான்.*

*இம்மண்டபத்தின் நீளம் 100 மீட்டர். அகலம் 31.5 மீட்டர், உயரம் 7.5 மீட்டர். இதிலுள்ள தூண்கள் 12.4 இம்மண்டபத்திற்குத் தெற்கில் அம்மன் கோயில் முன்னே இருப்பது நகரா மண்டபம். கோயில் வழிபாட்டுக்குப் பேரிசை முழக்கப்பட்ட மண்டபம் நகராமண்டபமாம்.*

# திருஞானசம்பந்தர் தேவாரம்

நீல மாமிடற் றால வாயினான்
பால தாயினார் ஞால மாள்வரே. (1)

ஞால மேழுமாம் ஆல வாயிலார்
சீல மேசொலீர் காலன் வீடவே. (2)

ஆல நீழலார் ஆல வாயிலார்
கால காலனார் பால தாமினே. (3)

அந்த மில்புகழ் எந்தை யாலவாய்
பந்தி யார்கழல் சிந்தை செய்ம்மினே. (4)

ஆட லேற்றினான் கூட லாலவாய்
பாடி யேமனம் நாடி வாழ்மினே. (5)

அண்ண லாலவாய் நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத் திண்ண மின்பமே. (6)

அம்பொ னாலவாய் நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே. (7)

அரக்க னார்வலி நெருக்க னாலவாய்
உரைக்கு முள்ளத்தார்க் கிரக்க முண்மையே. (8)

அருவ னாலவாய் மருவி னான்றனை
இருவ ரேத்தநின் றுருவ மோங்குமே. (9)

ஆர நாகமாம் சீர னாலவாய்த்
தேர மண்செற்ற வீர னென்பரே. (10)

அடிகள் ஆலவாய்ப் படிகொள் சம்பந்தன்
முடிவி லின்றமிழ் செடிகள் நீக்குமே. (11)

# திருவிளையாடல் கதைகள்

# திருவிளையாடல் கதைகள்

**1. இந்திரன் பழி தீர்த்தது**

*இந்திரன் விருத்திராசுரன் என்பவனைக் கொன்றான். அப்பாவம் நீங்குதற்காக மண்ணுலகில் உள்ள பல கோயில் களுக்கும் சென்றான். எங்கும் அப் பாவம் நீங்காத அவன் கடைசி யாக ஒரு கடம்பவனத்திற்கு வந்தான். அவ்வனத்தின் உள்ளே ஒரு மரத்தின் அடியில் தானே தோன்றியிருந்த இலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்தான்.*

*இலிங்கத்தை வழிபடுவதற்காக நறுமண மலர்களை விரும்பினான் இந்திரன். அங்கே பொற்றாமரைக் குளம் ஒன்று தோன்றி மலரொடு விளங்கியது. அம் மலர்களைக் கொண்டு இறைவனை வழிபட்டான். அவன் பாவம் நீங்கியது.*

*அக்கடம்பவனமே மதுரையாகியது. அக்குளமே பொற்றா மரைக் குளமாகியது.*

**2. வெள்ளை யானையின் சாபம் தீர்த்தது**

*துருவாச முனிவரின் இறையன்புக்கு மகிழ்ந்த இறைவன் அவருக்குத் தாமரை மலர் ஒன்று வழங்கினான். அவர் அம்மலரை அசுரரை வென்ற இந்திரனுக்கு வெற்றிப் பரிசாக வழங்கினார். அதனை யானையின் தலையில் வைத்தான் இந்திரன். யானை தன் கையால் எடுத்துக் காலில் போட்டு மிதித்தது. அதனைக் கண்ட துருவாசர் சினந்து, "உன் ஆட்சி பாண்டியன் ஒருவனால் அழியும். உன் யானை தன் பெருமையிழந்து காட்டு யானையாகும்" எனச் சாபமிட்டார்.*

*இந்திரன் தன் பிழையை அறிந்து முனிவரைப் பணிந்து வேண்டினான். "நூறு ஆண்டுகள் யானை காட்டில் திரிந்தபின் சாபம் நீங்கும்" என அருளினார்.*

*வெள்ளையானை கரிய யானையாய்க் காடுகளில் நூறாண்டு திரிந்தது. கடைசியில் கடம்பவனத்திற்கு வந்து பொற்றாமரைக் குளத்தில் நீராடிய பின் வெள்ளை நிறம் பெற்றுச் சாபம் நீங்கியது.*

இறைவனை வணங்கி மீண்டும் தேவ யானையாகி விண்ணுலகம் சென்றது.

### 3. திருநகரங் கண்டது

ஒரு காலத்தில் பாண்டியரின் தலைநகர் 'மணவூர்' என்பதாக இருந்தது. அவ்வூரில் இருந்த 'தனஞ்செயன்' என்னும் வணிகன் வணிகத்திற்காகச் சென்று கடம்பவனத்தின் வழியே வந்தான். இரவாகிவிட்டது.

அப்பொழுது விண்ணில் இருந்து பேரொளியுடன் ஒரு விமானம் இறங்கிக் கடம்பவனத்திற்கு வந்ததைத் தனஞ்செயன் கண்டான். அதிலிருந்த சிவலிங்கத்தை வணங்கினான். அவ்விமானத்தில் வந்த தேவர்கள் அச் சிவலிங்கத்தை நான்கு யாமங்களிலும் வணங்கிச் செல்வதைக் கண்டான். காலையில் விமானத்தையும் சிவலிங்கத்தையும் மட்டுமே அங்குக் கண்ட தனஞ்செயன், அவ் வியப்பான நிகழ்ச்சியைத் தன் அரசன் பாண்டியனுக்குச் சொன்னான். அப் பாண்டியன் பெயர் குலசேகரன் என்பது. அவன் அச்செய்தியைக் கேட்ட அன்று உறங்கும்போது இறைவன் கனவில் தோன்றிப் "பாண்டியா, கடம்பவனத்தை அழித்துத் திருத்தி நகருண்டாக்குக" என்றான். அப்படியே கடம்பவனம் சென்ற பாண்டியன் அதனைத் திருத்தி நகராக்கினான். இறைவன் சடையில் இருந்து அமுதத்தைப் பொழிந்ததைக் கண்டு அதற்கு மதுரை எனப் பெயரிட்டான் பாண்டியன்.

### 4. தடாதகைப் பிராட்டியார் திருப்பிறப்பு

மலயத்துவச பாண்டியன் என்பவன் பாண்டிய நாட்டை ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவி சோழன் மகளாகிய காஞ்சனை என்பவள். அவர்களுக்கு நெடுநாளாக மக்கட்பேறு வாய்க்கவில்லை. அதனால் பாண்டியன் 'குதிரை வேள்விகள்' செய்தான். அவ் வேள்விகள் 99 ஆயின. 100 முடிந்தால் அவன் இந்திரப் பதவி பெற்று விடுவான் என அஞ்சிய இந்திரன் வந்து 'மக்கட்பேற்று வேள்வி' செய்தால் குழந்தை பிறக்கும் என்றான். அப்படியே பாண்டியன் மக்கட்பேற்று வேள்வி செய்தான்.

அவ்வேள்வி நிகழ்ந்தபோது, அவ்வேள்வித் தீயில் இருந்து ஒரு குழந்தை தோன்றிக் காஞ்சன மாலையின் மடியில் அமர்ந்தது. அக்குழந்தைக்கு மூன்று மார்புகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி யடைந்தான் பாண்டியன். ஆண்குழந்தை வேண்டுமென்று வேள்வி செய்யப் பெண்குழந்தை பிறந்தவுடன்

இப்படி மூன்று மார்புடன் பிறந்துள்ளதே என்று இறைவனை வேண்டி வருந்தினான்.

"பெண் என்று பாராமல், ஆண்பிள்ளை எனக் கொண்டு வளர்த்து, அரசியாக்கு! அவளுக்கு ஏற்ற கணவன் வரும்போது. அவள் மார்புகளுள் ஒன்று மறைந்து விடும்" என விண்ணொலி கேட்டது. அரசன் மகிழ்ந்து அக்குழந்தைக்குத் 'தடாதகை' எனப் பெயரிட்டு வளர்த்து, உரிய பருவத்தில் முடிசூட்டு நிகழ்த்தினான். அவள் அரசு செய்ததால் பாண்டி நாடு 'கன்னி நாடு' எனப்பட்டது.

### 5. தடாதகை திருமணம்

முடிசூடிய தடாதகை திசை வெற்றி கொள்வதற்காகப் படையுடன் புறப்பட்டாள். மண்ணுலகனைத்தும் வென்று விண்ணுலகும் சென்றாள். அவள் வருகை கண்ட இந்திரன் ஓடி ஒளிந்தான். பின்னர்க் கயிலை சென்றாள். சிவகணங்களுடன் போரிட்டுத் தோற்றோட வைத்தாள். நந்தி ஓடிப்போய்ச் சிவபெருமானிடம் செய்தியை உரைக்க அவனே போருக்கு வந்தான்.

பெருமானும் தடாதகையும் நேருக்கு நேர் நின்று பார்த்த போது, தடாதகையின் மார்புகளில் ஒன்று மறைந்தது. இதனைக் கண்ட அமைச்சர் சுமதி என்பவள் 'இப்பெருமானே உங்கள் கணவராவான்' என்று பழஞ் செய்தியை நினைவு படுத்தினாள். பெருமானும் அடுத்த திங்கள் கிழமையில் மணந்து கொள்வதாகச் சொல்லி மதுரைக்குச் செல்ல விடுத்தான். அவ்வாறே வந்து திருமணம் செய்து கொண்டு பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான்.

### 6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியது

தடாதகைப் பெருமாட்டியின் திருமணம் முடிந்ததும், வந்திருந்தவர்கள் அனைவரையும் விருந்துக்கு அழைத்தனர். அவர்களுள் பதஞ்சலி முனிவரும் புலிக்கால் முனிவர் எனப்படும் வியாக்கிரபாதரும் "இறைவன் திரு நடனம் கண்டால் அல்லது நாங்கள் உண்ணமாட்டோம்" என்றனர். பெருமான் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதாகக் கூறினான்.

கூடியிருந்த அனைவரும் கோயிலுக்குச் சென்றனர். அங்கே வெள்ளியம்பலம் தோன்றியது. அதில் திருநடனம் ஆடினான் இறைவன். அவ்வாடல் கண்டு மகிழ்ந்த பதஞ்சலி யாரும் புலிக்கால் முனிவரும், "இறைவனே என்றும் நின் திரு நடனம்

இவ்வெள்ளியம்பலத்திலே நிகழ்ந்த வண்ணம் இருத்தல் வேண்டும்" என வேண்டிக் கொண்டனர். இறைவன் அவ்வாறே அருள் செய்தான்.

### 7. குண்டோதரனுக்கு அன்னம் வழங்கியது

திருமண நிகழ்ச்சிக்கு வந்த அனைவரும் விருந்துண்டனர். ஆனாலும் சோறும் கறிவகைகளும் மிக மீதமாகிக் கிடந்தன. இவற்றையெல்லாம் இனி என்ன செய்வோம்? என்ற கவலை தடாதகைக்கு உண்டாயிற்று. அதனால் இறைவனிடம் முறையிட்டாள்.

இறைவன் குண்டோதரன் (தாழிவயிறன்) என்பவனை நினைத்தான். அவனுக்குக் கடும்பசி பற்றிக் கொண்டது. அப்பசியை ஆற்ற முடியாமல் ஓடிவந்து இறைவனிடம் தன் பசிக்கு உணவு வேண்டுமென வேண்டி நின்றான். இறைவன் தடாதகைப் பிராட்டியை நோக்க, அவள் குண்டோதரனை அழைத்துக் கொண்டுபோய் மலை மலைகளாகக் கிடந்த சோறு கறிகளுக்கு முன்னே விட்டாள். அவ்வளவையும் உண்ட பின்னரும் அவன் பசி தீர்ந்த பாடில்லை. "பசி வாட்டுகிறதே; என் செய்வேன்" என இறைவனிடம் வேண்டினான்.

### 8. அன்னக் குழியையும் வையையையும் அழைத்தது

குண்டோதரன் பசித்துயர் கேட்டு இறைவன் உருகினான். அன்னபூரணியை நினைத்தான். சோறு கறிகுழம்பு தயிர் ஆகியவை நிலத்தைக் கிழித்துக் கொண்டு பெருகின. அவற்றையெல்லாம் உண்டு பசி தீர்ந்தான். தீர்ந்ததும் அவனுக்கு நீர்வேட்கை உண்டாயிற்று. அதனால் குளம், கிணறு, ஊற்று ஆகிய நீர் நிலைகள் எல்லாவற்றுக்கும் ஓடி நீர் பருகியும் வேட்கை தணியவில்லை. இறைவன் கங்கையை நோக்கினான். கங்கை, வையையாறாகப் பெருக்கெடுத்தது. அப்பெருக்கை மண்டியிட்டு அமர்ந்து பருகினான் குண்டோதரன். அவன் நீர்வேட்கை தீர்ந்தது.

### 9. ஏழுகடல்களை அழைத்தது

தடாதகையின் அன்னை காஞ்சனமாலை என்பவள். அவளுக்குக் கடலாடவேண்டும் என்னும் விருப்பம் உண்டாயிற்று. அதனைத் தன் மகள் தடாதகையினிடம் உரைத்தாள். தடாதகை இறைவனிடம் தன் தாயின் விருப்பத்தைத் தெரிவித்தாள். இறைவன் அதனை நிறைவேற்றுபவனாய்க் "கடல்கள் ஏழையும்

இங்கே வரச்செய்கிறேன்'' என்று கூறி வருவித்தான். அக்கடற் பெருக்கைக் கண்ட மக்கள் அஞ்சி நடுங்கினர்; அலறினர். உடனே அக்கடல்களின் நீரையெல்லாம் ஒரு குளத்துள் புகுமாறு செய்தான் இறைவன். அக்குளம் ஏழுகடல் தெப்பக்குளம் என்னும் பெயரால் சொல்லப்படுகிறது. அது சொக்கர் கோயிலுக்குக் கிழக்கில் புதுமண்டபத்திற்கு முன் உள்ளது. அத்தெருவுக்கு எழுகடல் தெரு என்பது பெயர்.

### 10. மலயத்துவசனை அழைத்தது

கடல்கள் மதுரைக்கு வந்ததை அறிந்த காஞ்சனமாலை அக்கடலில் நீராடச் சென்றாள். ஆங்கிருந்த முனிவர்களிடம் எவ்வாறு கடலாட வேண்டும்'' என வினாவினாள். அவர்கள் "கணவனுடைய கையையோ, மகனுடைய கையையோ, பசுக்கன்றின் வாலையோ பிடித்துக் கொண்டு கடலாட வேண்டும்'' என்றனர்.

காஞ்சன் மாலைக்கு மகன் இல்லை; தடாதகை ஒருத்தி தான் மகள். கணவன் மலையத்துவசனோ இறந்து விட்டான். அதனால் "கன்றின் வாலைப் பற்றிக் கொண்டா நான் கடலாட வேண்டும்?'' என வருந்தினாள். தடாதகையிடம் தன் நிலைமையைக் கூறி முறையிட்டாள். தடாதகை இறைவனை வேண்டினாள். இறைவன் விண்ணுலகில் இருந்து மலயத்துவசனை வருவித்துக் கடலாட வைத்தான். பின்னர் மலயத்துவசனை விண்ணுலகுக்குக் காஞ்சன மாலையுடன் அனுப்பி வைத்தான்.

### 11. உக்கிரபாண்டியன் திருப்பிறப்பு

பாண்டியர் மரபு அழியாமல் இருக்க வேண்டும் என்று தடாதகை விரும்பினாள். அதனால் இறைவனிடம் "பாண்டிய நாட்டு அரசராகி ஆட்சி செய்யும் தாங்கள் அம்மரபு அழியாமல் இருக்க உதவ வேண்டும்'' என வேண்டினாள் இறைவன் அருள் புரிந்தான்.

தடாதகைப் பிராட்டி கருக் கொண்டாள். உரிய காலத்தில் ஓர் அழகிய மகனைப் பெற்றெடுத்தாள். பகைவர்கள் கண்ட அளவானே அஞ்சத்தக்க ஆற்றல் வாய்ந்த அம்மகனுக்கு உக்கிர பாண்டியன் எனப் பெயரிட்டனர்.

உக்கிர பாண்டியன் தக்க வயது அடைந்ததும் வியாழனே ஆசிரியனாக வந்து, கற்பிக்க வேண்டிய கலைகளை எல்லாம் கற்பித்தான். கலைகளில்தேர்ந்த உக்கிரபாண்டியன் திருமண வயதை அடைந்தான்.

### 12. உக்கிர குமாரனுக்கு வேல் வளை செண்டு வழங்கியது

மணவூரைத் தலைநகராகக் கொண்டு அந்நாளில் ஆட்சி செய்த பாண்டியன் சோம சேகர் என்பவன். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் காந்திமதி என்பவள். அவள் உயர்ந்த பண்பு நலங்களும் அழகும் வாய்ந்தவள்.

சோம சேகர் கனவில் இறைவன் தோன்றினான். மதுரையில் அவன் மகளுக்குத் தக்க மணவாளன் இருப்பதை உணர்த்தினான். அதனை உணர்ந்த சோம சேகர் மதுரைக்கு வந்து உக்கிர குமாரனைக் கண்டு மணவுறுதி செய்தான். குறித்த நாளில் உக்கிர குமாரனுக்கும் காந்திமதிக்கும் சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தது.

பின்னர் ஒரு நாள் இறைவனாகிய சுந்தர பாண்டியன் தன் மகனை அழைத்து, "இந்திரனும் கடலரசனும் உனக்கு என்றும் பகையாக இருப்பவர். மேருமலையோ செருக்குடையது. ஆதலால் அவர்களை வெல்வதற்காகவும், செருக்கை அடக்குவதற்காகவும் வேலை, வளை, செண்டு ஆகிய இவற்றைக் கொள்க" என்று வழங்கினான். அவனுக்கு முடிசூட்டு விழாவும் நடத்தித் தானும் தடாதகையும் கோயிலுள் சென்று திருவுரு மறைந்தனர்.

### 13. கடல் சுவற வேல்விட்டது

உக்கிரகுமார பாண்டியன் குதிரை வேள்விகள் 96 செய்தான். அதனைக் கண்டு அஞ்சிய இந்திரன், வருணனை வேண்டிக் கடல்கள் பெருக்கெடுத்து மதுரையை அழிக்குமாறு கட்டளையிட்டான். நள்ளிரவிற் கடல் பெருக்கெடுத்து மதுரையை அழிக்கும் ஊழிக்கடல் போல் வந்தது. மக்கள் அஞ்சி அலறினர்.

உக்கிர பாண்டியன் கனவில் இறைவன் தோன்றிக் கடற் பெருக்கை உணர்த்தினான். உணர்ந்த பாண்டியன் வெள்ளத்தைக் கண்டு திகைத்தான். அப்பொழுது ஒரு சித்தர் வடிவில் தோன்றிய இறைவன் பாண்டியனிடம் "வேற்படையை எடுத்துக் கடற் பெருக்கின் மேல் ஏறி" எனக் கட்டளையிட்டான். அவ்வாறே பாண்டியன் வேலை ஏவிய அளவில் அப்பெருக்கு வற்றி வறண்டது.

### 14. இந்திரன் முடிமேல் வளை எறிந்தது

உக்கிரகுமார பாண்டியன் ஆட்சி செய்த காலத்தில் சேர சோழ பாண்டிய நாடுகளாகிய தமிழ்நாடு முழுவதும்

மழையின்றித் தவித்தது. மூவேந்தரும் அகத்திய முனிவரை அணுகி முறையிட்டனர். அவர் இந்திரனைக் கண்டு வேண்டுமாறு வழியுரைத்தார். மூவேந்தரும் விண்ணுலகம் சென்று இந்திரனை நெருங்கினர். அவன் மூவேந்தருக்கும் தன் இருக்கையிலும் உயரம் தாழ்ந்த இருக்கைகளைத் தந்தான். சேரனும் சோழனும் அவ்விருக்கைகளில் அமர்ந்தாராகவும் பாண்டியன் மட்டும் அவ்விருக்கையில் அமராமல் இந்திரன் இருக்கையில் அவனுக்கு இணையாக அமர்ந்தான். அதனைக் கண்டு சீற்றங்கொண்ட இந்திரன் சேர சோழ நாடுகளில் மழை பெய்யவும் பாண்டிய நாட்டில் மழை இல்லாதொழியவும் செய்தான்.

ஒருநாள் உக்கிரகுமாரன் பொதியமலைக்கு வேட்டையாடச் சென்றான். இந்திரனின் ஏழு மேகங்களில் நான்கு அங்குக் கூடியிருந்தன. அவற்றைச் சிறையிட்டுப் போகவிடாது செய்தான். இதனால் இந்திரனுக்கும் உக்கிரகுமாரனுக்கும் பெரும் போர் மூண்டது. அப்பொழுது உக்கிரன் ஏவிய வளை, இந்திரன் வச்சிரப்படையை அழித்ததுடன் அவன் முடியையும் வீழ்த்தியது. தோல்வியுற்ற இந்திரன் பாண்டிய நாட்டில் மழைபொழிய இசைந்தான். உக்கிரகுமாரன் மேகங்களைச் சிறை விடுத்தான்.

### 15. மேருவைச் செண்டால் அடித்தது

மீண்டும் ஒருமுறை பாண்டியநாடு மழையின்றி வறண்டது. மக்கள் வறுமையுற்றனர். உக்கிர குமார பாண்டியன் நாட்டு நிலைமையைக் கூறி இறைவனிடம் முறையிட்டான். பாண்டியன் கனவில் தோன்றிய இறைவன், “மேருமலைக் குகையில் மிகுந்த பொருள்கள் உள்ளன; மேருவின் செருக்கை அடக்கி அவற்றைப் பெற்றுக் கொண்டு குகையை அடையாளமிட்டு மூடிவிடு” எனக் கட்டளையிட்டான்.

இறைவன் ஆணைப்படி மேருவுக்குச் சென்ற உக்கிர பாண்டியன் மலையரசனை அழைத்தான். அவன் தன் செருக்கால் வராதிருந்தான். உக்கிரகுமாரன் செண்டால் மேருவை அடித்தான். அவ்வடி தாங்காமல் அதிர்ந்து நடுங்கிய மேரு காவலன், தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டு பொருள் குவிந்து கிடக்கும் குகையைக் காட்டினான். உக்கிர குமாரன் அங்குச் சென்று, தனக்கு வேண்டும் பொருள்களை எடுத்துக் கொண்டு குகையை மூடிவிட்டு நாடு வந்து சேர்ந்தான். பின்னர் நாடு மழை பொழிய வளமுடையதாயிற்று.

### 16. வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்தது

பேரூழி ஒன்று ஏற்பட்டது. அப்பொழுது உலகமெல்லாமும் அழிந்தன. இறைவன் அருளாற்றலால் கதிரோன் முதலாகிய அண்டங்கள் அனைத்தையும் முன்போல் திரும்பப் படைத்தனன். படைப்பு, காப்புக்கடவுளரும் தேவரும் முனிவரும் பிறரும் தோன்றினர். இந்நிலையில் வேதத்தின் பொருளை அறிதற்குக் கண்ணுவர் முதலிய முனிவர்கள் விரும்பினர். அவர்கள் முன்னர் அரபத்தர் என்னும் முனிவர் வந்து, "வேதத்தின் மூலமாக விளங்கும் இறைவனே வேதத்தின் பொருளுரைக்க வல்லான். ஆதலின் சோமசுந்தரக் கடவுளிடம் செல்க" என்றார். அவ்வுரை கேட்ட முனிவர்கள் மதுரைக்கு வந்து வழிபட்டுத் தம் விருப்பை எடுத்துரைத்தனர்.

இறைவன் இளமையான குருவடிவில் தோன்றி கண்ணுவர் முதலிய முனிவர்களுக்கு வேதத்தின் பொருளை எடுத்துரைத்து "இப்பொருளெல்லாம் உங்களுக்கு மயக்க மில்லாமல் விளங்கு வதாக" என அருள் செய்து மறைந்தான்.

### 17. மாணிக்கம் விற்றது

வீரபாண்டியன் என்பான் ஒரு வேந்தன். அவனுக்குப் பட்டதரசி வழியாக மக்கட்பேறு வாய்க்கவில்லை. மற்றவர்கள் வழியாக மக்கள் பலர் பிறந்தனர். இறைவனை வேண்டி நோன்பு கொண்டான் வீரபாண்டியன். அரசி கருக்கொண்டு மகனொரு வனைப் பெற்றாள். அவன் இளையனாக இருக்கும் போதே பாண்டியன் வேட்டைக்குச் சென்று புலியால் கொல்லப்பட்டு இறந்தான். மற்றை மக்களும் பெற்றவர்களும் அரண்மனைப் பொருள்களையெல்லாம் கவர்ந்து கொண்டனர். அவற்றுடன் மணிமுடியையும் கவர்ந்து கொண்டனர். அரசன் மகனுக்கு முடிசூட்டுதற்குரிய நிலையில் முடியைக் காணாமல் அமைச்சர்கள் வருந்தினர். இறைவனிடம் வேண்டினர். இறைவன் ஒரு வணிகன் வடிவுகொண்டு மாணிக்கத்துடன் அமைச்சர்கள் முன் தோன்றினான்.

"வலன் என்னும் அரக்கன் தவம் செய்து சாவாவரமும் ஒரு வேளை அவன் கொல்லப்பட்டால் அவன் உறுப்புகள் மாணிக்கமாக மாறும் வரமும் பெற்றிருந்தான். அவனைக் கொல்லக் கருதிய இந்திரன் நீ வேள்விப்பசுவாக வேண்டும் என்று அவனை வேண்டிக் கொண்டு கொன்றான். உடனே அவன் உறுப்புகள் மாணிக்கமாக மாறின. அவை இவை

இவற்றை முடியாக்கி அணிந்தால் சிறக்கும்" என்று கூறி அவற்றை விற்றுவிட்டு மறைந்தான். வந்தவர் கடவுளே என்றறிந்து அம்மாணிக்கங்களைக் கொண்டு முடிசெய்து முடிசூட்டு விழா நடத்தினர்.

### 18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது

பாண்டியருள் ஒருவன் அபிசேகபாண்டியன் என்பவன். அவன் சித்திரை மாதத்துச் சித்திரை நாளில் கோயிலில் முதற்பூசை செய்வான். அதன் பின்னரே இந்திரன் பூசை செய்வது வழக்கம். அவ்வழக்கப்படி, பாண்டியன் செய்த பூசைக்கு நெடும் பொழுதாயிற்று. இந்திரன் காத்துக் கொண்டிருந்து தன்பூசையை முடித்துக்கொண்டு சென்றான். அவன் காலந்தாழ்ந்து வருவதைக் கண்ட வருணன், காரணம் கேட்க நிகழ்ந்ததைக் கூறி மதுரைப் பெருமான் பெருமையையும் எடுத்துரைத்தான்.

சொக்கர் பெருமான் சிறப்பை அறிய எண்ணிய வருணன் கடலை ஏவி மதுரையை அழிக்குமாறு கட்டளையிட்டான். கடற்பெருக்கைக் கண்ட பாண்டியன் அச்சமுற்று இறைவனை வேண்டினான். இறைவன் அருள் பாலித்துத் தன் சடையில் உள்ள நான்கு மேகங்களைக் கடல் நீரைவற்றச் செய்யுமாறு ஏவினான். உடனே அம் மேகங்கள் கடல்நீரை முற்றாகப் பருகின. மதுரை கடல் அழிவில் இருந்து தப்பியது.

### 19. நான்மாடக் கூடலானது

மதுரையைக் கடல் நீரால் அழிக்க முடியாமல் தோற்ற வருணன் மேகங்களையெல்லாம் அழைத்து எல்லாக் கடல் நீரையும் குடித்து மதுரையின்மேல் பொழியுமாறு கட்டளை யிட்டான். இதனைக் கண்ட அபிசேக பாண்டியனும் மக்களும் சொல்லொணாத் துன்பமும் அச்சமும் கொண்டனர். சொக்கலிங்கப் பெருமானை அணுகி முறையிட்டனர். இறைவன் தன் சடையில் இருந்த நான்கு மேகங்களையும் மாடங்களாய் அமைந்து மழையைத் தடுத்துக் காக்குமாறு கட்டளையிட்டான். அதனால் தோற்றுப்போன வருணன் வெட்கமுற்றுத் தன் குற்றமுணர்ந்து வருந்தினான். பொற்றாமரைக் குளத்தில் நீராடி, இறைவன் தன்னைப் பொறுக்குமாறு மன்றாடினான். இறைவன் அருளால் வருணனுக்கு முன்பு இருந்த வயிற்று வலியும் நீங்கியது. மதுரைக்கு நான்மாடக்கூடல் என்னும் பெயரும் உண்டாகியது.

## 20. எல்லாம் வல்ல சித்தரானது

மக்களுக்கு அருள்செய்ய விரும்பிய இறைவன் ஒரு சித்தர் வடிவில் தோன்றினான். சந்தி சதுக்கம் வீதி எங்கும் அனைவரும் வியக்கும் உருவில் திரிந்தான். கிழக்கில் இருப்பவன்போல் மேற்கேயும், மேற்கே இருப்பவன்போல் கிழக்கேயும் இருந்தான். எட்டத்தில் இருந்த மலையைக் கிட்டத்தில் வரவும், கிட்டத்தில் இருந்த மலையை எட்டத்தில் போகவும் செய்தான். பகலில் தோன்றுவனவற்றை இரவிலும், இரவில் தோன்றுவனவற்றைப் பகலிலும் தோன்றச் செய்தான். முதியனை இளையனாகவும் இளையனை முதியனாகவும், ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் செய்தான். இவற்றைக் கண்ட ஊரவர் அரசன் அபிசேக பாண்டியனுக்கு உரைத்தனர். அவன் சித்தரை அழைத்து வருமாறு ஏவலரை விடுத்தான். ஏவலர்கள் வந்து சித்தரை அழைக்கவும் மறந்து போய் அவர் செயல்களைக் கண்டு கொண்டிருந்தனர். பின்னர்ப் பாண்டியன் அமைச்சர்களை விடுத்தான். அவர்கள் வந்து சித்தரை அழைக்க 'அரசனைக் கண்டு நமக்கு ஆவதென்ன?' என்று கூறி வரமறுத்துவிட்டார். அமைச்சர்கள் அரசனுக்குத் தெரிவிக்கச் சென்றனர்.

## 21. கல்லானைக்குக் கரும்பு அருத்தியது

சித்தரைக் கண்டு அழைக்க அவர் வரமறுத்ததை அமைச்சர்கள் கூறக்கேட்ட அளவில் அரசன் அஞ்சினான். "நானே செல்லத் தவறினேன்" என்னும் எண்ணமுடைய வனாகச் சித்திரை அணுகினான். "நீவிர் யாவர்? நும் ஊரும் நாடும் யாவை?" எனச் சித்தரை வினவினான். சித்தராக இருந்த இறைவன், "எமக்கு எவ்வூரும் எம் ஊரே; எந்நாடும் எம் நாடே; யாம் எல்லாம் வல்ல சித்தர்; காசியினின்று இவண் வந்தோம்; உன்னால் எனக்கு ஆகவேண்டுவதொன்றும் இல்லை" என்றான்.

அப்பொழுது ஓர் உழவன் ஒரு பெரிய கரும்பைக் கொணர்ந்து அரசனுக்கு வழங்கினான். அரசன் "நீர் இக் கல்யானை இக் கரும்பைத் தின்னுமாறு செய்தால் எல்லாம் வல்ல சித்தர் என்பதை ஏற்போம்" என்றான். சித்தர் அக்கல்யானையை நோக்க, அது மெய்யானையாய் நடையிட்டு வந்து கரும்பைத் தின்றதுடன் பாண்டியன் கழுத்தில் கிடந்த மாலையையும் பறித்தது. ஏவலர் சினந்து யானையை அடிக்கக் கையைத் தூக்கினர். சித்தர் 'நிற்க' என்ற அளவில் அவர்களின் கைகள் அசையாமல் நின்றுவிட்டன. பாண்டியன் சித்தர்

பெருமையுணர்ந்து பொறுத்தருள வேண்டினான். அவர்கள் கைகள் இயக்கம் அடைந்தன. யானை தான் பறித்த மாலையை அரசனிடம் நீட்டியது. மீண்டும் சித்தர் கடைக்கண் நோக்கினார். யானை கல்யானையாகியது.

### 22. யானை எய்தது

பாண்டிய நாட்டை விக்கிரமன் என்பவன் ஆட்சி செய்த போது காஞ்சியில் இருந்து ஆட்சி செய்த சோழன் பகை கொண்டான். பாண்டியனை அழிக்குமாறு ஒரு பெரிய வேள்வி செய்து அதில் இருந்து ஒரு கொடிய யானையை வருவித்தான். மதுரையை அழித்து வருமாறு அவ் யானையை ஏவினான். யானை மதுரை நோக்கி வந்தது. வேள்வி செய்த முனிவர்களும் படைவீரர்களும் யானையைத் தொடர்ந்து வந்தனர்.

யானையின் வருகையை அறிந்த பாண்டியன், இறைவனை அடைந்து முறையிட்டான். “பாண்டியனே அஞ்சாதே! நாமே அவ் யானையை அழிப்போம்; உடனே ஓர் அட்டாலை உண்டாக்கு” என்றான் இறைவன். பாண்டியன் பதினாறு கால் அட்டாலை மண்டபம் ஒன்றை உண்டாக்கினான். இறைவன் வேடவடிவில் வில்லும் கையுமாய் அட்டாலைமேல் தோன்றி, யானை மேல் அம்பேவினான். மலை போல் வந்த யானை தலைகீழே சாய, அதனைத் தொடர்ந்து வந்தவர்கள் அஞ்சி ஓடினர். பாண்டியன் இறைவனிடம் “என்றும் இங்கே இருந்து நீவிர் காக்க வேண்டும்” என வேண்டிக் கொண்டான்.

### 23. விருத்த குமார பாலரானது

மதுரையில் விருபாக்கன் என்னும் மறையோன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி சுபவிரதை என்பவள். அவர்களுக்குக் ‘கௌரி’ என்னும் பெயருடைய மகள் ஒருத்தி இருந்தாள். அவள் இளவயதிலேயே ‘சக்தி’ வழிபாட்டில் ஈடுபட்டு விளங்கினாள். இந் நிலையில், அவர்கள் வீட்டிற்கு வைணவ சமயம் சார்ந்த வாலிபன் ஒருவன் பிச்சையேற்று வந்தான். அவனுக்குக் கௌரியை நீர்வார்த்து மனையாளாகப் பெற்றோர் கொடுத்தனர்.

கௌரி புகுந்த வீட்டினர் வைணவ சமயத்தவர்கள் ஆதலால் அவர்கள் வெறுப்புக்கு ஆட்பட்டாள். ஒருநாள் அவர்கள் வெளியூர்க்குச் செல்லுங்கால் கௌரியை வீட்டில் வைத்துப் பூட்டிச் சென்றனர். சிவவழிபாடு செய்தற்கு வாய்ப்பில்லாமல் வீட்டுள் ஏங்கிக் கிடந்தாள். அப்போது இறைவன் ஒரு முதியவர் வேடத்துடன் கௌரி வீட்டுக்குச் சென்று உணவு கேட்டார்.

வீடு பூட்டியிருப்பதைக் கூறினாள். பூட்டைத் தொட்ட அளவில் திறக்குமென முதியவர் கூற அவ்வாறே திறந்து, சமையலை முடித்து அவருக்கு விருந்தளித்தாள். விருந்துண்ட முதியவர், காளை உருவில் காட்சி வழங்கினார். கௌரி நடுக்கமுற்றாள். அப்பொழுது வெளியூர்க்குப் போனவர்கள் திரும்பினர். காளையாக இருந்த முதியவர் குழந்தையானார். 'இக் குழந்தை யார்?' என்று மாமன் மாமியார் கேட்கத் 'தேவதத்தன் குழந்தை' என்றாள் கௌரி. "அவன் சைவன்; அவன் குழந்தையை இங்கே வைத்திருக்கக் கூடாது" எனக் கௌரியுடன் வெளியே தள்ளினர். இறைவனை நினைந்து வணங்கினாள். கையில் இருந்த குழந்தை மறைந்தது. இறைவன் இறைவியுடன் காட்சி வழங்கினான். இறைவியோடு, இணைந்தாள் கௌரி.

**24. கால் மாறியாடியது**

இராசசேகர பாண்டியன் ஆடற்கலையில் தேர்ச்சி மிக்கவன். அவன் கால அளவு கருதாமல் நெடிய பொழுது ஆடுதல் உண்டு. அப்பொழுது அவன் கால்களில் வலி காணும்; சோர்வு ஏற்படும் அவற்றை உணர்ந்த அவன் "இடைவிடாமல் ஆடிக் கொண் டிருக்கும் இறைவனின் கால்களிலும் வலியுண்டாகுமே" என்று எண்ணி வருந்தினான். இறைவன் கால் மாறியாடியனால் சோர்வு நீங்கும் எனத் தீர்மானித்தான்.

சிவனிரவு அன்று கோயிலுக்குச் சென்ற இராசசேகரன் நெடும் பொழுதிருந்து வழிபாடு செய்தான். நான்காம் யாமத்தில் நிகழும் பூசையும் முடிந்தது. அப்பொழுது பாண்டியன் இறைவனிடம் "இறைவா! ஊன்றியுள்ள காலைத் தூக்கியும் தூக்கியுள்ள காலை ஊன்றியும் நீ மாறியாட வேண்டும். அவ்வாறு செய்யவில்லையானால் யான் இவ்விடத்திலேயே என் உயிரை விடுவேன்" என்று மன்றாடினான். அவன் வேண்டுதலுக்கு இரங்கி இறைவன் கால்மாறியாடினான். வெள்ளியம்பலத்தில் இறைவன் கால்மாறியாடும் திருக் காட்சியை இன்றும் காணலாம்.

**25. பழியஞ்சியது**

திருப்புத்தூரில் இருந்து ஒரு மறையோன் தன் மனைவியை யும் கைக்குழந்தையையும் கூட்டிக் கொண்டு மதுரையில் இருந்த தன் மாமனார் வீட்டுக்குப் புறப்பட்டு வந்தான். வரும் வழியில் ஓர் ஆலமரத்தின் அடியில் மனைவியையும், குழந்தையையும் இருக்க வைத்துவிட்டு நீர் தேடிச் சென்றான். சென்று மீண்ட போது, மனைவி அம்புபட்டு இறந்து கிடந்தாள். அருகில் ஒரு

வேடுவன் இருக்கக் கண்டான். அவனே தன் மனைவியைக் கொன்றான் என்று தீர்மானித்து அவனை அரசன் ஆணையிட்டு அழைத்துக் கொண்டு மதுரைக்கு வந்தான். அந்நாள் அரசனாகிய குலோத்துங்க பாண்டியனிடம் நிகழ்ந்ததைக் கூறினான். வேடனோ தனக்கு எதுவும் தெரியாது என்று சாதித்தான். அவனைக் காவலில் வைத்துவிட்டு அரசன் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டு நல்வழி காட்ட வேண்டுமென்று வேண்டினான். இறைவன் "வணிகர் தெருவில் நிகழும் திருமணத்திற்கு அவ் வந்தணனுடன் சென்றால் உண்மை விளங்கும்" என்று உருவிலி ஒலியாய்க் கூறினான்.

பாண்டியன் அந்தணனை அழைத்துக் கொண்டு மண வீட்டைச் சேர்ந்தான். இவர்களுக்குக் கேட்குமாறு எமதூதருள் ஒருவன் "இம் மணமகனுக்கு ஏதொரு நோயும் இல்லையாகவும் எப்படி உயிரைப் பறிப்பது?" என்று வினாவ, மற்றொருவன்" ஆலமரத்தில் தங்கியிருந்த அம்பைக் காற்றால் வீழ்த்தி மறையாட்டியைக் கொன்றது போல் ஒருவழியால் கொல்வோம்" என்று மறுமொழி கூறினான்.

திருமண நிகழ்ச்சி தொடங்கியது. மங்கல ஒலி கேட்ட பசு ஒன்று கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிவந்து மணமகனை முட்டிக் கொன்றது. இதனைக் கண்ட பாண்டியன் உண்மை உணர்ந்து அந்தணனுக்கு வேண்டும் பொருள் தந்து சிறையில் இருந்த வேடனை விடுவித்துப் பொறுத்துதவுமாறு வேண்டிக் கொண்டான். நல்வழி காட்டிய இறைவனை வணங்கினான்.

### 26. மாபாதகம் தீர்த்தது

அவந்தி நகரில் ஒரு மறையோன் இருந்தான். அவன் மனைவி பேரழகி. அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெரும்பாவி. தன்னைப் பெற்றவளையும் இச்சித்தான். அத் தீயவளும் அதற்கு இசைந்தாள். இதனைத் தந்தையும் அறிந்து கொண்டான். அதனால் அப் பாவிமகன் தந்தையை மண் வெட்டியால் வெட்டிக் கொன்றான். பின்னர்ப் பெற்றவளை அழைத்துக் கொண்டு இருந்த பொருள்களையும் எடுத்துக் கொண்டு ஒரு காட்டு வழியே புறப்பட்டான்.

செல்லும் வழியில் வேடர்கள் தடுத்துப் பொருளைப் பறித்துக் கொண்டு அத்தாயையும் கவர்ந்து கொண்டு சென்றனர். அந்நிலையில் அப் பாவிமகனை, இறந்த தந்தையின் ஆவி பற்றிக் கொண்டு அலைக்க, அலைந்து திரிந்து மதுரைக்கு வந்தான்.

அப்பொழுது இறைவன் வேடனாகவும், இறைவி வேட்டுவச்சி யாகவும் உருக் கொண்டுவந்து அவன்முன் நின்றனர். அம்மைக்கு இறைவன் அப் பாவியின் வரலாற்றை எடுத்துரைத் தான். "எவ்வகையாலும் கழுவாயில்லாத இப்பாவிக்கு உய்தியும் உண்டோ" என்று அம்மை வினவ, "காப்பார் எவருமின்றி அழிவடைபவனைக் காப்பதே காப்பாகும்" என்று கூறினான் இறைவன். அவனுக்கும் அருள் செய்தான். மாபாவி தன் பாவம் தீர்ந்து இறைவனை வழிபட்டு அவன் திருவடியடைந்தான்.

### 27. அங்கம் வெட்டியது

குலோத்துங்க பாண்டியன் ஆட்சி செய்துவந்த நாளில் வேற்று நாட்டில் இருந்த முதியவனாகிய ஒரு வாளாசிரியன் மதுரைக்கு வந்து வாட்பயிற்சியளித்துக் கொண்டிருந்தான். அவனிடம் இளைஞர் பலர் வாட்பயிற்சி பெற்றனர். அவனிடம் பயிற்சி பெற்ற சித்தன் என்னும் மாணவன் அவ்வாசிரியனைப் பகைத்துத் தனியே ஒரு வாட்பயிற்சிக் களரி நடாத்தி வந்தான். அன்றியும் தன் ஆசிரியனின் இளமையான மனைவியைக் கவரவும் விரும்பினான். அவ்வம்மையார் இறைவனைத் தொழுது வேண்டினார்.

இறைவன் வாளாசிரியன் வடிவு கொண்டு வந்து சித்தனை வாட்போருக்கு அழைத்தான். முதிய வாளாசிரியன் அழைப்ப தாகக் கருதிய சித்தன் அதனை ஏற்றுக் கொண்டு வாட்போர்க் கோலம் தாங்கி ஊர்க்குப் புறத்தே வந்தான். இருவருக்கும் வாட்போர் கடுமையாக நடந்தது. கடைசியில் குருவடிவில் வந்த இறைவன் சித்தனின் மார்பையும் நாவையும் கையையும் கண்ணையும் தனித்தனியே தோண்டி எடுத்துத் தலையையும் கொய்து விட்டு மறைந்தான்.

வாளாசிரியனை வீட்டில் காணாத மாணவர் குருவின் மனைவியிடம் வந்து 'அவரை எங்கே' என்று கேட்க, அவள் கோயிலுக்கு வழிபடச் சென்ற செய்தியை உரைத்தாள். பின்னர் நிகழ்ந்ததை அறிந்த குருவும் அவன் மனைவியும் பிறரும், இறைவன் திருவிளையாடலென அறிந்து வாழ்த்தினர்.

### 28. நாகம் எய்தது

அனந்தகுணபாண்டியன் என்பவன் ஆட்சியில் சிவனெறி மிகச்சிறந்து விளங்கியது. அதனால் சமணசமயத்தர் அவ்வேந்தன் மேல் வெறுப்புக் கொண்டனர். அவனை அழிப்பதற்காக ஒரு வேள்வி செய்தனர். அவ்வேள்வியில் ஒரு கொடிய அரக்கன்

தோன்றினான். அவனிடம், மன்னனையும், மதுரையையும் அழிக்குமாறு கட்டளையிட்டனர்.

அரக்கன் ஒரு பெரும் பாம்பின் வடிவு கொண்டு, உலகமெல்லாம் அஞ்சும்படி புறப்பட்டான். மதுரையின் மேற்குத் திக்கில் இருந்து மதுரையை முழுவதுமாக விழுங்கி விடுவது போல் வந்தான். அதனைக் கண்ட மக்கள் அஞ்சி அலறிக் கொண்டு ஓடிப்போய் மன்னனிடம் உரைத்தனர். அரசன் இறைவனை வணங்கி, அவன் அருளுடன் வில்லும் அம்பும் ஏந்திச் சென்றான். அம்பு விட்டுக் கொன்றான். கொன்ற அளவில் அப்பாம்பு கொடிய நஞ்சைக் கக்கியது. அந்நஞ்சே ஊரை அழித்து விடும் போல் கொடியதாய் இருந்தது. அதனைக் கண்ட அரசன் இறைவனிடம் வேண்டினான். இறைவன், தன் முடியிலுள்ள நிலவின் அமுதத்துளியொன்றை நகர்மீது தெளிக்க நஞ்சின் கொடுமை முற்றாக ஒழிந்தது.

## 29. மாயப்பசுவை வதைத்தது

நாக வடிவில் வந்த அசுரன் மாய்ந்துபோன அளவில் 'என் செய்வது?' என அமணர் எண்ணி வேறுமோர் வேள்விசெய்து பசு ஒன்றை வருவித்தனர். பசுவை வணங்கும் சிவனெறியர் அதனைக் கொல்லார் என்னும் துணிவு அவர்களுக்கு இருந்தது. பசு அஞ்சத்தக்க வடிவுடன் மதுரையை அலைக்கழித்தது. இதனை நகரவர் வழியாக அறிந்த பாண்டியன் அனந்த குணண் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வேண்டி நின்றான். இறைவன் நந்தியை நோக்க நந்தி வலியதும் பொலிவு மிக்கதுமாம் காளை வடிவத்தில் பசு நிற்கும் இடத்தை அடுத்தது. பசுவுக்கும் காளைக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. எனினும் பசுவைக் கொல்ல விரும்பாத காளை தன் வடிவழகால் பசுவை மயக்கியது. மயங்கிய பசு தன் மோகப் பெருக்கால் வீரியத்தை விட்டு வீழ்ந்து இறந்தது. காளை தன்னுரு மறைந்து நந்தியாய் இறைவனை அடுத்தது. இதனைக் காட்டும் கதைச் சான்றாய்ச் சொல்பவை மதுரையை அடுத்துள்ள பசுமலை, காளைமலை என்பவை.

## 30. மெய்க்காட்டிட்டது

பாண்டியன் குலபூடணன் என்பவன் ஆண்டுவரும் நாளில் சேதிராயன் என்னும் வேடர் தலைவன் தன் படையைப் பெருக்கிப் பாண்டியனை மோதி அழிக்கக் கருதினான். அச்செய்தியறிந்த பாண்டியன், தன் படைகளைப் பெருக்குமாறு

தன் படைத்தலைவன் சுந்தரசாமந்தன் என்பானுக்குக் கட்டளையிட்டான். தன் கருவூலத்தில் இருந்த பணத்தை வேண்டுமட்டும் எடுத்துக் கொள்ளவும் ஆணை தந்தான்.

சாமந்தன் மிகுந்த கடவுட் பற்றாளன். கருவூலப் பணத்தையெல்லாம் எடுத்துப் படையைப் பெருக்குவதற்கு மாறாகக் கோயில் திருப்பணிகளிலேயே செலவிட்டான். படைகள் வாராமையையும் கோயிற்பணியில் பணம் செலவழிக் கப்படுவதையும் அறிந்த பாண்டியன், மறுநாள் காலைப் பொழுதுக்குள் படையைக் காட்டியாக வேண்டும் என்று கட்டளையிட்டான். சாமந்தன் செய்வதறியாது இறைவனிடம் வேண்டினான். "நீ வேந்தனுடன் போய் இரு! நாம் படையுடன் வருவோம்" என்று இறைவன் கூறினான். தன் கணங்களைப் படையாக்கித் தான் படைத்தலைவனாகிப் பாண்டியன்முன் சென்றான் இறைவன். படைகளைக் கண்டு மகிழ்ந்தான் பாண்டியன். அப்பொழுதில் சேதிராயனைப் புலியொன்று கொன்றதாகச் செய்தி வந்தது. "இனிப் படைகள் வேண்டா! அவரவர் இடங்களக்குப் போக விடுக்க" என்றான் பாண்டியன். படைகள் மறைந்து சிவகணங்களாயின.

### 31. உலவாக்கிழி அருளியது

குலபூடண பாண்டியன் சிவநெறி வழுவாமல் காத்தான். எனினும், வேத வேள்வி செய்வாரைப் போற்றாதிருந்தான். அதனால் மழை பெய்யாமல் வளம் குறைந்தது. வேதம் வல்லார் வேற்று நாடுகளுக்குச் சென்று வேறு தொழில் செய்து பிழைக்கலாயினர். இவற்றை அறிந்த பாண்டியன் வருந்தினான். இறைவனை வேண்டி அருள்செய்யுமாறு வழிபட்டான்.

இறைவன் பாண்டியன் கனவில் தோன்றி, மறையின் சிறப்பையும், மறையோர் சிறப்பையும், அவற்றை அறியாமல் செய்த பிழையால் நேர்ந்த கேடுகளையும் தெரிவித்தான். மறையோரை அழைத்துப் போற்றுவதற்காக, என்றும் தீர்ந்து போகாத பணமுடிப்பையும் அருளினான்.

கனவு நீங்கி விழித்த பாண்டியன் மெய்யாகவே தன்கையில் பணமுடிப்பு இருக்கக் கண்டு வியப்புற்றான். வேற்று நாடுகளுக்குச் சென்ற வேதியர்களையெல்லாம் அழைத்துவரச் செய்து வேள்விகள் புரிந்தான். மீண்டும் முன்னைப் போலவே நாட்டில் மழை பெய்து வளம் சிறந்தது.

### 32. வளையல் விற்றது

*பிச்சைப் பெருமான் (பிச்சாடனர்) கோலத்தில் வந்த இறைவனைக் கண்ட தாருகவனத்து முனிவர் மனைவியர் காமுற்று மெலிந்து வளை கழன்று வருந்தி நின்றனர். அவர்கள் நிலையைக் கண்டு சினந்த முனிவர்கள், "நீங்கள் மதுரையில் வணிகர் மகளிராகப் பிறப்பீர்களாக" எனச் சாபம் இட்டனர். முனிவர்களின் மனைவியர் வருந்தி அச் சாபம் நீங்கும் வகையை அருளுமாறு வேண்டினர். அம் முனிவர்கள் "மதுரைச் சொக்கர் பெருமான் வளையல் விற்பவராக வந்து உங்களுக்கு வளையல் தொடும்போது இச்சாபம் நீங்குவீர்" என்றனர். அவ்வாறே அவர்கள் வணிகர் மகளிராய்ப் பிறந்து வளர்ந்தனர்.*

*முனிவர் மனைவியர்க்கு அருள் செய்து சாப நீக்கம் புரியக் கருதிய இறைவன் வளையல் விற்கும் வணிகனாக வணிகத் தெருவில் வந்தான். அவன் அழகைக் கண்ட மகளிர் போட்டி போட்டுக் கொண்டு அவன் கையால் வளையலிட்டுக் கொள்ள வந்தனர். அவன் வளையல் தொடும்போது கைபட்ட அளவில் சாபம் நீங்கப் பெற்றனர். இறைவன் மின்னென மறைந்து பலருங் காணுமாறு விண்ணில் காட்சி வழங்கினான்.*

### 33. அட்டமாசித்தி உபதேசித்தது

*(அட்டமா சித்தி என்பது எட்டுவகைச் சித்திகள். அவை அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன.)*

*திருமுருகனை வளர்த்த கார்த்திகைப் பெண்கள் அறுவரும் கூடிவந்து இறைவனிடம் அட்டமாசித்தியை அருளுமாறு வேண்டினர். இறைவன், உமையம்மையைச் சுட்டிக்காட்டி இவளை நினைந்து வழிபட்டால் சித்தி எட்டும் உண்டாம் என்று அட்டமாசித்திகளைக் கூறினான். அப் பெண்கள் உமாதேவியை வழிபடுதலையும் மறந்து அட்டமா சித்தியையும் மறந்து போயினர். அதனை அறிந்த இறைவன் பட்டமங்கை என்னும் ஊரில் நீங்கள் பாறையாகக் கிடக்கக் கடவீர் எனச்சபித்தான். அவ்வாறே அவர்கள் பாறையாய் ஆயிரம் ஆண்டுகள் கிடந்தபின்னர் அச் சபிப்பை நீக்கி யருளுவதாகவும் கூறினான்.*

*கார்த்திகை மகளிர் பாறையாய் ஆயிரம் ஆண்டுகள் பட்ட மங்கையில் கிடந்தனர். அவர்களுக்கு அருள விரும்பிய இறைவன் அப்பாறைகளின் மேல் அருள் நோக்கு நோக்கினான். மீண்டும் மகளிர் உருப்பெற்று எழுந்து இறைவன் திருவடியை வணங்கினர்.*

அவர்களுக்குத் திரும்பவும் அட்டமா சித்தியை உரைத்து, மறவாமல் உமையம்மையை வழிபட்டு வருமாறு அறிவுறுத்தினார். மகளிர் விண்வழியே கயிலையை அடைந்தனர்.

### 34. விடையிலச்சினையிட்டது

காஞ்சியில் காடு வெட்டிய சோழன் என்பான் இருந்து ஆட்சி நடத்தி வந்தான். அவன் பெருஞ் சிவனடியான். மதுரை நாயகனை வணங்க வேண்டுமென்னும் மாறாக் காதலுடையவனாக இருந்தான். அவன் விருப்பை அறிந்த இறைவன் மாறுவேடத்தில் அவன் ஒருவனே மதுரைக்கு வருமாறு கட்டளையிட்டார். அவ்வண்ணமே மதுரை நோக்கி நள்ளிரவில் வந்த காடுவெட்டிய சோழன், வையையில் வெள்ளப்பெருக்கு இருந்தமையால் வருவதற்கு இயலாது இருந்தான். இறைவன் ஒரு சித்தர் வேடத்தில் சென்று வையையை வற்றச் செய்து சோழனை அழைத்துக் கொண்டு வடக்குவாயில் வழியே கோயிலுக்குள் புகுந்தான். இறைவனையும் இறைவியையும் நெஞ்சார்ந்த அன்பால் வழிபட்டு வணங்கினான் சோழன். சித்தர் வடிவில் வந்த இறைவன் சோழனை வடக்கு வாயில் வழியே அழைத்துக் கொண்டு கோயிலைவிட்டு வெளியே அனுப்பிவைத்தான். வடக்கு வாயிலில் விடை இலச்சினை (காளை முத்திரை) இட்டு வைத்தான்.

மற்றை வாயில்களிலெல்லாம் மீன் இலச்சினை இருக்க வடக்கு வாயிலில் மட்டும் விடை இலச்சினை இருப்பதைக் கண்ட காவலர் பாண்டியனுக்கு உரைக்க அவன் காரணம் அறியாமல் திகைப்படைந்தான். அன்றிரவு இறைவன் பாண்டியன் கனவில் தோன்றி நிகழ்ந்ததை உரைத்து மறைந்தான். பாண்டியன் இறைவன் பேரருளை எண்ணி வியந்து வழிபட்டான்.

### 35. தண்ணீர்ப்பந்தல் வைத்தது

இராசேந்திரபாண்டியன் என்பவன் பாண்டியநாட்டை ஆட்சி புரிந்து வந்தான். அவன் தம்பி இராசசிங்கன் என்பவன். காடு வெட்டிய சோழன் தன் மகளை இராசேந்திர பாண்டியனுக்கு மணமுடித்துத்தர இசைந்திருந்தான். ஆனால், இராசசிங்கன் நேரே காஞ்சிமாநகர் சென்று காடு வெட்டிய சோழனைக்கண்டு அவன் மகளை மண முடித்துக்கொண்டான். நிகழ்ச்சி இவ்வளவில் நில்லாமல் காடுவெட்டிய சோழன் தன் மருமகனைப் பாண்டிய நாட்டின் அரசனாக்கத் திட்டமிட்டுத் தன்படையுடன் போருக்கு வந்தான். பாண்டியன் திகைப்படைந்து இறைவன் திருக்கோயிலை

அடைந்து வேண்டி நின்றான். "நீ போருக்குச் செல்! உனக்கே வெற்றியுண்டாகும்" என்று இறைவன் அருளால் உருவிலியுரை உண்டாயிற்று.

போர் இருபக்கப்படைகளுக்கும் கடுமையாக நடந்தது. வெயிலும் மிகக் கடுமையாக இருந்தது. இறைவன் ஒரு முனிவர் வடிவில் பாண்டியன் படைக்கு நடுவே புகுந்து தண்ணீர்ப்பந்தல் வைத்து நீர்வேட்கையைத் தீர்த்தான். இறைவன் வழங்கிய நீரைப்பருகிய வீரர்கள் மிகவலுவுடன் போரிட்டனர். காடு வெட்டிய சோழனும் இராசசிங்க பாண்டியனும் சிறைபிடிக்கப் பட்டனர். சோழன்படை தோற்று ஓடியது. பாண்டியன் சிறை பிடித்தவர்களைப் பொறுத்துக் கொண்டு விடுதலை செய்தான்.

## 36. இரசவாதம் செய்தது

திருப்பூவணத்தில் பொன்னையாள் என்னும் கணிகை ஒருத்தி இருந்தாள். அவள் கடவுட்பற்றில் சிறந்தவர். திருக்கோயில் தொண்டு சிறப்பாகச் செய்து வந்தாள். சிவனடியார்களுக்கு வேண்டுவன தந்து உதவினாள்.

ஒரு நாள் சிவனடியார் சிலர் பொன்னனையாள் வீட்டுக்கு விருந்தினராக வந்தனர். அவருள் இறைவனும் ஒரு சித்தர் வடிவில் வந்தான். அனைவரையும் பணிப்பெண் அழைத்து விருந்து செய்தாள். சித்தர்வடிவ இறைவன் மட்டும் விருந்து உண்ணாமல் "உன் தலைவியை வரச்சொல்" என்றான். பொன்னனையாள் சித்தர் முன்வர, அவள் மெலிவைக் கண்டு" ஏன் மெலிந்துள்ளாய்? என வினாவினார் சித்தர். "சொக்கர் பெருமான் திருவுருவைப் பொன்னால் செய்யவேண்டும் என்று விரும்பினேன், எவ்வளவு முயன்றும் அதற்குரிய பொன் இன்னும் சேராமையால் அக்கவலை வாட்ட மெலிவுற்றேன்" என்றாள். "உன் வீட்டில் இருக்கும் வெள்ளி, பித்தளை, வெண்கலம் முதலிய பொருள்களையெல்லாம் கொண்டுவா; நாம் பொன்னாக்கித் தருவோம்" என்றார் சித்தர். பொன்னனை யாள் மகிழ்ந்து அவ்வாறே செய்யவும் சித்தர் எல்லாவற்றையும் பொன்னாக்கித் தந்துவிட்டு மறைந்தார். அவர் இறைவனே என மகிழ்ந்த பொன்னனையாள் மதுரைக்கு வந்து இறைவன் வடிவைப் பொன்னால் செய்து வைத்துப் பூரித்தாள். இறைவன் திருவிளையாடலால் பொன்னனையாள் புகழ் எங்கும் பரவுவதாயிற்று.

### 37. சோழனை மடுவில் வீட்டியது

சுந்தரேச பாதசேகரன் என்பவன் பாண்டிய நாட்டை ஆட்சி செய்து வந்தான். அக்காலத்தில் சோழநாட்டை ஆட்சி செய்த வேந்தன் படைவலிமை மிக்கவனாகப் பாண்டிய நாட்டைக் கவர்வதற்கு வந்தான். பாண்டியன் தன் படையின் சிற்றளவையும் சோழன் படையின் பேரளவையும் எண்ணி என் செய்வதெனத் திகைத்துச் சொக்கர் பெருமானை வழிபட்டு அருள் புரியுமாறு வேண்டினான். "நீ வெற்றி பெறுவாய்; நாமும் போருக்கு வருவோம்" என்று உருவிலி உரையாய் உரைத்தான் இறைவன்.

பாண்டியன் படையும் சோழன் படையும் களத்தில் மோதின. அந்நிலையில் பாண்டியன் படையுள் இறைவன் ஒரு வேடன் வடிவில் புகுந்து சோழன்படை புறமுதுகிடுமாறு போரிட்டான். சோழன் படை அஞ்சி ஓடும் வேளையில் திரும்பிப் பார்க்க வேடனாகப் போரிட்டவனைக் காணவில்லை. அதனால் துணிவு கொண்டு பாண்டியன் படையை எதிரிட்டுத் தாக்கியது. பாண்டியன் படை அஞ்சிப் பின் வாங்கி ஓடியது. சோழன் படை விரைந்து துரத்திக் கொண்டு வர ஊடே ஒரு பெரிய மடுக் கிடந்தது. அதில் பாண்டியன் படை புகுந்து இறைவன் அருளால் தப்பியது. சோழனும் அவன் படையும் அம்மடுவில் சிக்கிக் கொண்டு வெளியேற முடியாமல் இறந்தனர்.

### 38. உலவாக் கோட்டை அருளியது

அடியார்க்கு நல்லான் என்பவன் சிறந்த சிவனெறிச் செல்வன். தன் நிலத்தின் வருவாய் எல்லாவற்றையும் அடியார்களின் விருந்தோம்புதலுக்கே செலவிட்டு வந்தான். இந்நிலையில் அவன் நிலத்தின் விளைவும் குறைந்து இல்லாமலும் போய் விட்டது. வாங்கும் இடத்தெல்லாம் கடன் வாங்கி அடியார்க்கு விருந்தோம்புதல் கடனைத் தவறாமல் செய்து வந்தான். எவ்வளவு நாள்களுக்குத்தான் கடன் கிடைக்கும்? கடனும் கிடையாமல் போகவே இறைவன் கோயிலையடைந்து" எம்பெருமானே! அடியார்க்கு விருந்து செய்யக் கடன் தருவாரையும் காணேன்; கடன் தருவாரை யாவது காட்டும்; இல்லாவிடின் இங்கேயே என் உயிரை விடுவேன்" என்றான். அவன் இறையன்பையும் அடியார் அன்பையும் அறிந்து மகிழ்ந்த இறைவன் "அன்பனே, உன்வீடு செல்க; அள்ள அள்ளக் குறையாத தவசக் கோட்டையைப் படைத்துள்ளோம்; அதனைக் கொண்டு வழக்கம் போல் அடியார்க்கு விருந்து செய்க" என்று விண்ணொலி எழுந்தது. அடியார்க்கு நல்லான் அகமகிழ்ந்து

வணங்கி வீட்டுக்கு வந்தான். உலவாக் கோட்டையைக் கண்டு இறையருளைப் போற்றினான்.

### 39. மாமனாக வந்து வழக்குரைத்தது

தனபதி என்பவன் ஒரு வணிகன்; பெருஞ்செல்வன்; எனினும் அவனுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. அதனால் தன் தங்கையின் மகனைத் தத்தாகக் கொண்டு வளர்த்து வந்தான். ஒரு நாள் தங்கை தன் அண்ணன் மேல் சினங் கொண்டு தடிப்பாகச் சில சொற்கள் சொல்லும் போது "பிள்ளைப் பேறற்ற பாவி" என்றாள். அதனை எண்ணி நொந்துபோன தனபதி 'வரும் பிறப் பிலாவது மகப்பேறு வாய்க்க வேண்டு'மெனத் தவம் செய்யச் சென்றான்.

தனபதியின் பங்காளிகள் இச்சிறுவனால் என்ன செய்ய முடியுமென நினைத்துச் சொத்தையெல்லாம் தம்முரிமை யாக்கிக் கொண்டனர். தனபதியனின் தங்கை புகலொன்றும் இல்லாதவளாய், இறைவன் திருக்கோவில் சென்று முறை யிட்டாள். தாமே வந்து வழக்குரைத்து உதவுவதாக இறைவன் விண்ணொலியால் அறிவித்தான். அறவோர் அவையைக் கூட்டு மாறும் கட்டளையிட்டான் இறைவன்.

தனபதியின் தங்கை அறவோர் அவையைக் கூட்டினாள். அங்குத் தனபதி வடிவிலே இறைவன் வந்து ஆங்கியிருப்பவர் களையெல்லாம் அடையாளம் சொல்லி, சொத்து விளக்கங் களையும் எடுத்துரைத்துச் சொத்தை எழுத்து வடிவில் எழுதச் செய்தான். பின்னர்த் திருவுருமறைந்தான். இறைவனே மாமனாக வந்து வழக்குரைத்தான் என அவையோர் மகிழ்ந்து போற்றினர்.

### 40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டியது

பாண்டிய நாட்டை வரகுணன் என்பவன் ஆட்சி செய்து வந்தான். அவன் ஒருநாள் வேட்டைக்குச் சென்று திரும்பும் போது அவன் கதிரையின் காலில் மிதிபட்டு வழியில் உறங்கிக் கிடந்த ஒரு மறையோன் இறந்தான். இறந்த அவன் உறவினர்க்கும் மறையோர்க்கும் வேண்டுவனவெல்லாம் தந்தான். அப்பாவம் நீங்குதற்காக நாள்தொறும் 1008 முறை கோயிலை வலம் வந்தான். எனினும் அவனைப் பற்றிய பாவம் நீங்காமல் அலைத்தது. அந்நிலையில் பாண்டியன் இறைவனை அடுத்து மன்றாடினான்.

"அரசே அஞ்சாதே! உன்னோடு சோழன் போருக்கு வருவான். வருங்கால் நீ அவனைத் துரத்திச் செல்ல அவன் பின்

வாங்குவான். திருவிடை மருதூர் வரை துரத்திச் செல்ல அங்கு உன் பாவத்தை நீக்குவோம்'' என்ற விண்ணொலியால் இறைவன் விளம்பினான். பாண்டியன் மகிழ்ந்து வழிபட்டுத் தன் இருக்கை சேர்ந்தான்.

இறைவன் கூறியவாறே சோழன் படை கொண்டுவர, பாண்டியன் அவனைத் துரத்திச் சென்று திருவிடைமருதூர் அடைந்தான். அந்நிலையில் மருதூர் இறைவனை வணங்க எண்ணிய பாண்டியன் கிழக்கு வாயில் வழியே புகுந்தான். அது காறும் அவனைத் தொடர்ந்த கொலைப் பாவம் (பிரமகத்தி) கோயிலுக்குள் செல்ல முடியாமல் புறத்தே நின்றது. இறைவன் பாண்டியனிடம், 'நீ மேற்கு வாயில் வழியாகச் சென்றால் பாவந்தொடராது' என விண்ணொலியால் அறிவுறுத்தான். அவ்வாறே வெளிவந்த பாண்டியன் மேற்கு வாயிலுக்குத் திருப்பணிகள் பலசெய்து மதுரை சேர்ந்தான்.

பின்னர்ப் பாண்டியன் வரகுணனுக்குப் பெருமான் சிவலோகத்தில் அமர்ந்திருக்கும் காட்சியை அறியும் விருப்பம் பெருகியது. அதனை நிறைவு செய்தற்காக மதுரையிலேயே சிவலோகக் காட்சியைப் படைத்து, நந்தி தேவரைக் கொண்டு காட்டச் செய்தான் இறைவன்.

**41. விறகு விற்றது**

வரகுண பாண்டியனின் ஆட்சிக் காலத்தில் வடநாட்டில் இருந்து ஏமநாதன் என்னும் இசைவல்லான் ஒருவன் வந்தான். அவன் இசைத்த இசையின் சிறப்பறிந்த பாண்டியன் அவனுக்குச் சிறப்புப்பல செய்து தங்கியிருக்க வளமனையும் தனியே வழங்கினான். அதனால் செருக்கடைந்த ஏமநாதன் "எம்மை வெல்வார் இங்கு எவரும் உளரோ?" என்றான். இதனை அறிந்த மன்னன் பாணபத்திரனை அழைத்து வருமாறு ஏவினான். வந்த பாணபத்திரனிடம் "ஏமநாதனை இசையில் வெல்வையோ?" என வினவினான். "ஏவலாலும் இறைவன் அருளாலும் வெல்வேன்" என்றான் பாணபத்திரன். "நாளை வா" என விடுத்தான் வேந்தன்.

இல்லம் சென்ற பாணபத்திரன் ஏமநாதனின் மாணவர் தெருத்தோறும் இசைக்கும் இசையைக் கேட்டு அவனை நான் இசையால் எப்படி வெற்றிபெறக் கூடும் என அஞ்சி இறைவன் திருமுன் சென்று தன் நிலையை எடுத்துரைத்தான். இறைவன் அடியவற்கு அருளவெண்ணி விறகு விற்பான் போலக் கிழவடி வந்தாங்கி வீதி வீதியாக விலைகூறிக் கொண்டுவந்து ஏமநாதன்

*தங்கியிருக்கும் வளமனையின் திண்ணையில் அமர்ந்து இசை மீட்டினான். அவ்விசையின் சிறப்பை அறிந்த ஏமநாதன் வெளியே வந்த இசைபாடும் விறகுசுமையனிடம் நீயார்? என்றான். "யான் இவ்வூரில் இசைவல்ல பாண பத்திரனிடம் இசைகற்க விரும்பினேன். அவன் உனக்கு இசைவாராது என்று தள்ளிவிட விறகெடுத்துப் பிழைக்கின்றேன்" என்றான் இறைவன். "இவனிசையே இத்தகைத்து ஆனால், பாணபத்திரன் இசை எத்தகைத்தோ? அவனை வெல்லல் அரிதென" அன்றை இரவே ஓடிப்போயினான். அவன் ஓடிய செய்தியை இறைவன் பாணற்கு உரைக்க அவன் வியப்புற்று அரசனுக்கும் அறிவித்து இறைவனை வாழ்த்தினான்.*

### 42. திருமுகங்கொடுத்தது

*பாணபத்திரன் இறைவனை இசைத்துப் பாடுவதையே தன் கடமையாகக் கொண்டிருந்தான். வேறு தொழில் இல்லாமையால் வருமானம் இல்லாமல் வறுமையடைந்தான். இறைவன் அரசன் களஞ்சியத்தில் இருந்த காசு, மணி, பொன் முதலியவற்றை எடுத்துப் பிறர் அறியாவாறு நாள்தோறும் கொடுத்து வந்தான். அப்பொருளைப் பாணன், வேண்டுவார் பிறர்க்கும் வழங்கினான். இந்நிலையில் இறைவன் உதவியை நிறுத்திவிடப் பாணன் வறுமை மிகக் கொண்டான். அவன் கனவில் தோன்றி "இதுகாறும் பாண்டியன் கருவூலத்தில் இருந்து வாங்கினோம். அதுமிகக் குறைந்தால் ஐயங்கொள்வான். காவலற்குத் தண்டனை வழங்குவான். ஆதலால் உன்னைப் போல் என்மேல் அன்புடைய சேரமான் பெருமாளுக்கு இவ்வோலையைக் கொண்டுபோய்த் தருக; அவன் பொருள் தருவன்" என இறைவன் அருளினான். அவ்வாறே சேரன் கனவிலும் செய்தியுரைத்தான் இறைவன். விழித்த பாணன் ஓலையைக் கண்டு வியந்தான். அதனை எடுத்துக் கொண்டு சேரநாடு சென்றான். சேரனைக் கண்டு இறைவன் வழங்கிய ஓலைப் பாடலைத் தந்தான். அவன் பெரிதும் போற்றி இக்கருவூலத்துள்ள பொருளெல்லாம் நும்பொருளே என்று கூறி எடுத்துக் கொள்ளுமாறு வேண்டினான். பாணன் தனக்கு வேண்டும் அளவாற் பொருளை எடுத்துக் கொண்டு குபேரனைப் போல மதுரைக்கு மீண்டான். இறைவன் அருளை வியந்துபோற்றிப் பெற்ற பொருளைப் பிறர்க்கும் வழங்கி இனிது வாழ்ந்தான்."*

### 43. பலகையிட்டது

ஒருநாள் இறைவன் திருப்பள்ளிக்கு எழுந்தருளும் நேரத்தில் இடைவிடாப் பெருமழை பெய்தது. அடைமழை பெய்தாலும் விடாது கடமை புரிபவன் பாணபத்திரன். ஆதலால் மழையைப் பொருட்டாக எண்ணாமல் வழக்கம் போல் வந்து இசைபாடினான்.

மழையால் நனைந்தான்; நடுங்கினான்; நரம்புகள் வலித்தன; மயிர்கள் சில்லிட்டன; காலலெல்லாம் சேறுபட்டன; எனினும் விடாது இசைத்தான். இறைவன் இந்நிலையைக் கண்டு "இதன்மேல் நின்று பாடுவாய்; உனக்கே இந்தப் பலகை" என்று கட்டளையிட்டுப் பலகையிட்டான். இச்செய்தியைப் பாண்டியன் வரகுணன் கேள்விப்பட்டு இறையருளை வியந்தான். பாணன் மேல் கொண்ட அன்பு பெருகியவனாய் எண்ணற்ற பரிசில்கள் வழங்கிச் சிறப்பித்தான். பாணன் வழக்கம்போல் இறைவற்கு இசைக்கடனாற்றி வந்தான்.

### 44. இசைவாது வென்றது

இராசராச பாண்டியன் என்பவன் பாண்டியநாட்டை ஆண்டு வந்தான். அவன் காதற்கிழத்தியர் பலருள் ஒருத்தி பாணபத்திரன் மனைவிமேல் பொறாமையுடையவளாய் இருந்தாள். அவள் வழியிலே அரசனும் நின்றான். பாணன் மனைவியின் பெருமையை அழிக்குமாறு அவள் விரும்பி ஈழத்தில் இருந்து இசைப் பாடல் வல்ல ஒருத்தியை அழைத்தாள். அவளுக்கும் பாணன் மனைவிக்கும் இசைப்போட்டி நிகழ்ந்தது. அதில் 'ஈழத்துப் பாடினியே வென்றாள்' என்று அரசன் அறிவித்தான். மறுநாளும் போட்டி தொடரும் என்றும் கூறினான். முறைமாறாக அரசனால் தோற்றுப் போனதாகக் கூறப்பட்ட பாணபத்திரன் மனைவி, கூடற்பெருமானை அடைந்து வணங்கி வருந்தி நின்றாள். 'நீயே வெல்வாய்! செல்க' என்றான் பெருமான். மறுநாள் நிகழ்ந்த போட்டியிலும் பாண்டியன், ஈழத்துப் பாடினியே வென்றதாக உரைத்தான். சினங்கொண்ட பாணபத்திரன் மனைவி "நாளைக்குத் திருக் கோயிலில் இசைப் போட்டி நிகழட்டும். எவர் வெல்வார் எனக் காணலாம்" என்றாள். அரசனும் இசைந்தான். மறுநாள் கோயிலில் இசைப் போட்டி நிகழ்ந்தது. இறைவன் முன் முறைமாறாகச் சொல்லமுடியாத பாண்டியன் பாணபத்திரன் மனைவியே வென்றாள் என்று கூறினான். அன்றியும் ஈழத்துப் பாடினி தோளில் பாணன் மனைவியை இருத்தவும் கட்டளை

இட்டான். இது வியப்பெனக் கூறிப் புலவர் உருவில் இருந்த இறைவன் மறைந்தான்.

### 45. பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது

வையைக்குத் தென்கரையில் குருவிருந்ததுறை என்பதோர் ஊர். அவ்வூரில் சுகலன் சுகலை என்பார் கணவனும் மனைவியு மாய்ப் பன்னிரு புதல்வரைப் பெற்றனர். அவர்கள் வேட்டைத் தொழிலராகி, காட்டில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர் ஒருவரைக் கல்லும் சேறும் அள்ளி வீசித் துன்புறுத்தினர். அவர் "நீங்கள் பன்றியின் மக்களாகித் தாய்தந்தையை இழந்து அல்லல் படுவீராக" எனச் சாவித்தார். அதனைக் கேட்டு வருந்திய அப்புதல்வர்கள் இச்சாவம் எப்போது நீங்குமெனக் கேட்க, "இறைவனே உங்கட்குத் தாயாய் வந்து பாலூட்டுவான். அதுகால் சாவம் நீங்கும்" என்றார் முனிவர்.

முனிவர் சாவப்படி அவ்வேட்டையர் காட்டரசாக விளங்கிய ஒரு பன்றியின் குட்டிகளாகப் பிறந்தனர். ஒருநாள் பாண்டி வேந்தன் மதுரையை நீங்கி மேற்கு நோக்கிப் பல்வகை விலங்குகளையும் கொன்றான். அஞ்சிய விலங்குகள் தங்கள் அரசாக விளங்கிய பன்றியிடம் முறையிட "யான் பாண்டியனொடு போர் புரிவேன்; வெல்வேன்" என்று புறப்பட்டது. தன் பெட்டைப் பன்றியிடம் பாண்டியனொடு போரிட்டு வெல்வேன்; ஒருகால் உயிர் இழக்க நேரின் குட்டிகளைக் காத்துக் கொள்க" என்று கூறியது. "நீ இறந்தால் யானும் இறப்பேன்" என்று கூறியது பெட்டைப் பன்றி.

ஆண்பன்றி பாண்டியனை அணுகி வல்லாண்மையுடன் போரிட்டது. பின் அவன் தண்டால் அடிபட்டு இறந்தது. பெட்டைப் பன்றியும் வீரனொருவனுடன் போரிட்டு இறந்தது. குட்டிகள் தாயும் தந்தையும் இல்லாமல் பசித்துத் துடித்தன. இறைவன் தாய்ப்பன்றியின் உருக்கொண்டுவந்து பாலூட்டித் துயர்தீர்த்தான். அக்குட்டிகளை முகமொன்றுமே பன்றியாய் உடலம் மனித உடலமாய் ஆக்கி அருள் புரிந்தான். தான் எவ்வுயிர்க்கும் அம்மை அப்பன் என்பதை நிலை நாட்டினான்.

### 46. பன்றிகுட்டிகளை மந்திரிகளாக்கியது

மனித வடிவும் பன்றித் தலையும் உடைய பன்றிக் குட்டி களுக்கு மேலும் நல்வாழ்வளிக்க இறைவன் கருதினான். எல்லாக் கலைகளிலும் அவர்கள் வல்லவர்களாக விளங்கச் செய்தான். பின்னர் பாண்டியன் கனவில் இறைவன் தோன்றி "அரசே கேள்!

பன்றி மலையில் பன்றிமுகத்தையுடையராகப் பன்னிருவர் உளர். அவரை அழைத்து நின் அமைச்சராக ஆக்கிக் கொள்க'' என்று கூறி மறைந்தான். பாண்டியன் வியப்புற்று அமைச்சர்களைப் பன்றி மலைக்கு அனுப்பி அப்பன்றி முகத்தரை அழைத்துவரச் செய்தான். வந்த அவர்களை மகிழ்வுடன் வரவேற்றுப் பல்வகைச் சிறப்புகள் செய்து அமைச்சராக்கினான். பழைய அமைச்சர் களின் புதல்வியர்களுள் தக்கவர்களைத் தெரிந்து அவர்களுக்கு மணமுடித்து வைத்தான்.

அமைச்சுப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பன்றிமுகத்தர் அரசனுக்கும் நாட்டுக்கும் அறநெறிக்கும் தக்கவற்றையெல்லாம் நாளும் செய்து பேரும் புகழும் பெற்று விளங்கினர். தம் நற் செயல்களால் இறைவன் திருவடிக்கும் ஆளாகிச் சிவ கணங் களுள் கலந்தனர்.

### 47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்தது

சுகுண பாண்டியன் என்பவன் ஆட்சி நடத்திவந்த நாளில், ஒருவன் பெரிதும் அறமே செய்து ஒரு சிறிது பாவமும் செய்ததால் கரிக்குருவியாகப் பிறந்திருந்தான். அக்கரிக்குருவி, காகம் முதலிய பறவைகளால் தாக்கப்பட்டு அல்லல் தாங்காமல் ஒரு காட்டுக்கு ஓடி ஒரு மரத்தின்மேல் தங்கியிருந்தது. அம் மரத்தின் நிழலில் ஒருநாள் சிவனடியார் ஒருவர் வந்து தங்கினார். அவரைக்கண்டு அணுகி வந்தவர்களுக்கு அவர் மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறந்தது மதுரையே என்றும் ''மதுரை நாயகனை வழிபட்டார் இப்பிறப்பிலேயே எல்லாப்பேறும் பெறுவர்'' என்றும் கூறினார். அதனைக் கரிக்குருவியும் கேட்டது. அதன்படி நடத்தலே முறை எனத் தெளிந்து மதுரைக் கோயிலை வலம்வந்து வழிபட்டது. மூன்று நாள்கள் தொடர்ந்து இறைவனையே வழிபட்டிருக்க அவன், அக்கரிக்குருவியின் அன்புக்கு மகிழ்ந்து 'மிருந்திஞ்சயம்' எனப்படும் மூன்றெழுத்து மந்திரத்தை அருளினான். கரிக்குருவியின் சிற்றறிவொழிந்து பேரறிவாம் மெய்யறிவு உண்டாயிற்று. அதனால் இறைவனைப் பெரிதும் வாழ்த்தியது. இறைவன் பறவைகளுக்குத் தலைமையாம் தன்மை தந்தான். அதனால் வலியான் என்னும் பெயரைத் தானும் தன்னினமும் பெற்று விளங்கும் பேறு பெற்றது கரிக்குருவி.

### 48. நாரைக்கு முத்தி கொடுத்தது

வையைக்குத் தெற்கேயுள்ள ஒரு நகரத்தை அடுத்து ஒரு பொய்கை இருந்தது. அங்கே ஒரு நாரை வாழ்ந்து வந்தது.

அந்நாளில் மழை பெய்யாது ஒழிய நாரை அப் பொய்கையை விடுத்து வேறோரிடஞ் சேர்ந்தது. அங்கே ஒரு முனிவர் அடியார் கூட்டத்துடன் தங்கி இருந்தார். அவர்கள் தங்கியிருந்த இடத்தை அடுத்திருந்த நீர்நிலையில் மீன்கள் நிரம்ப இருந்தன. முனிவர்கள் நீராடும்போது அவர்கள் சடைமேல் துள்ளி மீன்கள் விளையாடும் பேற்றை நினைந்து அம்மீன்களைத் தின்னலாகாது என நோன்பு கொண்டிருந்தது. முனிவர் கூட்டத்தவர் நாளும் வழிபாடு செய்து நல்லுரை கூறியிருந்தனர். கூடற்புராணம் எனப்படும் திருவாலவாய் மான்மியம் படித்தனர். அதனைக் கேட்ட நாரை மதுரையின் சிறப்பை அறிந்து மதுரை நாயகனை வழிபட நினைந்து வந்தது. மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் நீராடி, பதினைந்து நாள்கள் அங்கேயே தங்கி வழிபாடு செய்து வந்தது. முடிவில் பசிக்கு ஆற்றாமல் பொற்றாமரைக் குளத்தின் மீனைத் தின்னலாம் என எண்ணம் உண்டாகி, "ஐயோ! இப்படி எண்ணம் வந்ததே" என்று வருந்தி நின்றது. இறைவன் அதன் அன்புக்கு இரங்கி "உனக்கு யாது வேண்டும்?" என, "இப்பிறவி நீங்கி சிலவுலகு செல்லவேண்டும்" என்றது. மேலும் "நாரையும் பிற பறவைகளும் இத் தாமரைக்குளத்து மீனைத் தின்று பாவமுறாவண்ணம் இங்கு மீனே இல்லாதவாறு செய்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டது. இறைவன் அவற்றை அருளினான்.

**49. திருவாலவாயனாது**

கீர்த்திபுடணன் என்பான் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த காலத்தில் பேரூழி ஒன்று உண்டாகியது. அப்பேரூழியால் கோயிலும் காளமலை, ஆனைமலை, நாகமலை, பசுமலை, பன்றிமலை ஆகியனவுமே அழிவின்றி இருந்தன. வெள்ளநீர் வற்றிய பின்னர் இறைவன் உலகை முன்போல் படைத்தான். உயிர்களும் தோன்றின. பாண்டிய வேந்தனாக வங்கிய சேகரன் என்பான் தோன்றினான். அரசியல் தவறாமல் ஆட்சி நடத்தினான். மதுரையில் மக்கட் பெருக்கம் மிக்கது. பண்டை நகர எல்லை எதுவென அவன் அறியானாய், அதனை அறிவிக்குமாறு இறைவனை வேண்டினான்.

பாண்டியன் வேண்டுதலை நிறைவேற்ற விரும்பிய இறைவன் தான் ஒரு சித்தர் வடிவு கொண்டு வந்தான். தன் கையில் கட்டியிருந்த பாம்பிற்கு. "இந்நகரெல்லை அளந்து காட்டு" என ஆணையிட்டான். அப்பாம்பு இறைவனே இந்நகர் என்பெயரால் விளங்க வேண்டும் என வேண்டிக் கொள்ள இறைவன் அவ்வாறே அருளினான்.

பாம்பு கிழக்குத் திசை சென்று தன் வாலை நீட்டி வலம்பட வளைந்து வாலை வாயில் பற்றி விரிந்தது. பின்னர்ப் பெருமான் கையில் ஆழியாகியது. இறைவன் தன் வடிவு மறைந்தான். பாண்டியன் பழையபடி மதுரை நகரை அமைத்தான். பாம்பின் விருப்பப்படி மதுரை ஆலவாய் எனப்பட்டது.

### 50. சுந்தரப்பேர் அம்பெய்தது

வாங்கிய சேகரபாண்டியன் ஆட்சி செய்த நாளில் அவனொடு விக்கிரமச்சோழன் என்பான் போரிட விரும்பினான். அதனால் பாண்டிய நாட்டுப் பசுக்கூட்டத்தைத் திரட்டிச் சென்று போர்க்கு அடியிட்டான். சோழன் படைப் பெருக்கங்கண்டு அஞ்சிய பாண்டியன் கூடல் நாயகனைக் குறையிரந்து நின்றான். "நீ போர்க்குச் செல்க; யாம் உனக்குத் துணைப் படையாய் வந்து உதவுவோம்" என்றான் இறைவன் பாண்டியன் கவலை ஒழிந்து போருக்குச் சென்றான்.

போர் கிளர்ந்தது; நாற்படைகளும் மோதின; இரண்டும் சளைக்காத அளவில் ஒத்த நிலையில் போரிட்டுக் கொண்டிருக்கும் போது, வடதேச மன்னர் படை சோழனுக்குத் துணையாக வந்து பாண்டியன் படையை முட்டியது. பாண்டியன் படை உடைந்தது; சோழன் வெற்றிச் சங்கு ஊதினான். அப்பொழுதில் வேடனொருவன் பாண்டியன் படைப்பகுதியில் இருந்து அம்பு ஏவ, அவ்வம்பு ஒன்று பத்து நூறு ஆயிரமாய்ச் சோழன் படையை அழித்தது, படையழிவு கண்ட சோழன் தன் படை மேல் பட்ட அம்பினை எடுத்துப் பார்க்க அதில் 'சுந்தரன்' பேர் பொறித் திருத்தல் கண்டு இறைவன் ஆடலென்று அஞ்சிச் சென்றான். பாண்டியன் வெற்றியோடு திரும்பி இறைவனுக்கு விழா வெடுத்து மகிழ்ந்தான்.

### 51. சங்கப் பலகை தந்தது

நான்முகன், வாணி சாவித்திரி காயத்திரி என்னும் மகளிருடன் காசியில் இருந்து கங்கையில் நீராடச் சென்றான். செல்லும் வழியில் ஒரு விஞ்சை மகள் இசைத்த இசையைக் கேட்டு வாணி பொழுது தாழ்ந்து வந்தாள். முன்னே சென்ற மூவரும் நீராடினர். "யான் வருமுன் நீவீர் நீராடியது என்ன?" என்று வாணி சினந்தாள். நான்முகன், "நீ காலம் தாழ்ந்து வந்துவிட்டு எங்கள்மேல் குற்றம் சொல்கிறாய்; நீ மக்கட் பிறப்பு அடைந்து இப்பாவத்தை ஒழிப்பாயாக" எனச் சாவமிட்டான். வாணியாகிய கலைமகள் அஞ்சி நடுங்கி "பிறவித் துன்பம்

அறியா நின் மனைவியாகிய யான் அத்துயரடையவோ?” என்றாள். நான்முகன் “நீ நாற்பத்தெட்டுப் புலவர்களாகப் பிறப்பாய்! இறைவன் அகர எழுத்துப்போல் தலைவனாக அமர்வான். நீங்கள் சங்கப் புலவர்களாக விளங்கிப் புலமை நடத்துவீர்” என்றான்.

கலைமகளின் கலைகள் 51இல், அகரமும் கூட்டெழுத்து களும் நீங்கிய 48 எழுத்துகளும், 48 புலவர்களாய் விளங்கி மதுரை நோக்கி வந்தனர். இறைவனும் புலவனாக அவர்முன் சென்றான். அவர்களை அழைத்து வந்து கோயில் வழிபாடு செய்வித்துப் பாண்டியனிடம் அழைத்துச் சென்றான். அவன் கோயிலின் வட மேற்குப் பகுதியில் சங்கமண்டபம் ஒன்று அமைத்துத் தங்கியிருக்கச் செய்தான். முன்னரே புலவராக இருந்தவர்கள் புதிய புலவர் களோடு வாது செய்தனர். வேற்று நாட்டுப் புலவர்களும் வந்து வாதஞ் செய்தனர். அதனால் புலவர்கள் இறைவனையடைந்து எங்களோடு பலரும் வாதிட வருகின்றனர். புலமையை அளவிடத் தக்க சங்கப்பலகையொன்று அருளுக என வேண்டினர். இறைவன் அவ்வாறே சங்கப்பலகை அருளினான். அது இரண்டு சாண் நீளமுள்ளது. தக்க புலவர் வரின் இரண்டு சாண் நீண்டு இடந் தருவது. அப்பலகையில் இருந்து புலவர்கள் பாடிய பாடல்களுள் இவை சிறந்தன என்பதைக் காணுதலில் மாறுபாடு உண்டாகியது. அந்நிலையில் இறைவனே புலவனாக வந்து அவர்கள் மாறுபாடு நீக்கினான். நீவிரும் எம்மோடு வீற்றிருந்து வழி காட்டியருள வேண்டுமென அவர்கள் வேண்டிக் கொள்ள இறைவன் புலவர் தலைவனாக அமர்ந்து புலமை நடத்தினான்.

### 52. தருமிக்குப் பொற்கிழியளித்தது

செண்பகமாற பாண்டியன் என்பவன் தன் மனைவியுடன் தனித்திருந்தான். அப்பொழுது நறுமணம் ஒன்று வருதல் அறிந்தான். அந்த மணம் ஒருவகைப் புதுமணமாக இருக்கக் கண்டான். “இது பூவின் மணமுமன்று; காற்றிற்கும் மணமில்லை. எதன் மணம் இது,” என்று திகைக்கும்போது, தேவியின் கூந்தல் மணமெனக் கண்டான். அது இயற்கையோ? செயற்கையோ? என ஐயுற்றான். அதனால் “என் ஐயம் இன்னதென அறிந்து பாடலியற்றுவார்க்கு ஆயிரம் பொன்” என்று சொல்லிச் சங்க மண்டபத்தில் ஒரு பொற்கிழியைத் தூக்கிவைத்தான். புலவர் எவரும் பாட அறியாராய் வருந்தியிருந்தனர்.

அவ்வூரில் தாய்தந்தையர் எவருமில்லாத ஒருவன், ‘தருமி’ என்பவன் இருந்தான். அவன் இறைவனை வணங்கி “உன்

தொண்டுக்கு ஆளான யான் செல்வம் இல்லாமையால் இது வரை மணம் செய்திலேன். பாண்டியன் கருத்துணர்ந்து பாட்டொன்று தரின் யான் வாழ்வேன்" என்றான். இறைவன் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாடலைப் பாடித் தந்தான்.

தருமி, அப்பாடலுடன் சங்கத்தை அடைந்து அதனைச் சொல்ல, பாண்டியன் மகிழ்ந்து பொற்கிழி தந்தான். "இப் பாடலில் சொற்குற்றம் இல்லை; பொருட்குற்றம் உண்டு" என்று நக்கீரன் தடுத்தான். பரிசில் பெறுதலை இழந்த தருமி மீண்டும் இறைவனை வணங்கி நிகழ்ந்ததை உரைத்தான். இறைவனே புலவனுருவுடன் அவைக்கு வந்தான். "எம் கவிக்குக் குறை சொன்னார் எவர்?" என்றான். "நானே சொன்னேன்" என்றான் கீரன். "என்ன குற்றம்?" என்றான் இறைவனாக வந்த புலவன். கூந்தலுக்கு மணம் செயற்கையால் வருவது; இயற்கையால் வருவதன்று; ஆதலால் இயற்கையால் வருமென்னும் பாடலில் பொருட்குற்றம் உள்ளது" என்றான் கீரன். "நீ வணங்கும் இறைவி கூந்தலுக்கும் இயற்கை மணமில்லையோ" என்றான் இறைவன். "இல்லை" என்றான் கீரன். நெற்றிக் கண்ணைக் காட்டினான் இறைவன். "உடல் முழுதும் கண்ணே ஆயினும் குற்றம் குற்றமே" என்றான் கீரன். நெற்றிக்கண் வெம்மை தாங்காத கீரன் பொற்றா மரைக் குளத்துள் வீழ்ந்தான். இறைவன் திருவுருக்கரந்தான்.

### 53. கீரனைக் கரை யேற்றியது

நெற்றிக் கண்ணின் வெப்பம் தாங்காமல் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்த நக்கீரன் ஆங்கும் நீங்கக் கண்டிலன். சங்கப் புலவர்கள் அதனைப் பொறுக்கமாட்டாமல் வருந்தினர். கீரனில்லாத சங்கம் நாயகமணி இல்லா மாலை போல் ஆனது. வெற்றிமலையை எடுத்து இராவணனுக்கும் அருளிய இறைவன் கீரனுக்கும் அருள்வான் என்று உருகி நின்று, இறைவனை வேண்டினர். இறைவன் உமையோடு பொற்றாமரைத் தடத்தருகே புலவர் கூட்டத்தில் எழுந்தருளினான். அருட்கண் சார்த்தினான். கீரன் தன் தவற்றை உணர்ந்து, 'கயிலை பாதி காளத்தி பாதி' என்னும் அந்தாதி பாடினான். அதனைக் கேட்டு மகிழ்ந்த இறைவன் தன் கையால் கீரனைத் தூக்கிக் கரையேற்றினான். கரைக்க வந்த கீரன் இறைவன் இன்னருளை நினைந்து 'கோபப் பிரசாதம்' என்னும் நூலை இயற்றினான். பின்னர்ப் பெருந் தேவ பாணி, எழு கூற்றிருக்கை, ஆகியனவும் பாடினான். 'முன்போல் புலவரோடு சங்கத்திருக்க' என அருளித் தம்முரு மறைந்தான் இறைவன். கீரன் முதலியோர் சங்கமண்டபத்திருந்த பொற் கிழியைத் தருமிக்கு வழங்கினர்.

## 54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது

"நெற்றிக்கண் நெருப்புக்கு ஆற்றாத காமன் எரிந்து பட்டான். என்னை எரிந்துபடாமல் இத் தாமரைக்குளமே காத்தது" என்னும் எண்ணத்தால் முப்பொழுதும் அதிலே நீராடி முழுமுதலைத் தொழுது வந்தான் நக்கீரன். அதற்கு மகிழ்ந்த இறைவன், "இவன் இலக்கணம் இன்னும் தெளிவாய் அறிந்திலன்; இவனுக்கு எவரால் இலக்கணம் அறிவிப்பேன்" என்று நினைக்கும் அளவில், "அகத்தியனே இலக்கணம் உணர்த்தத் தக்கான்" என உமையம்மை எடுத்துக் கூற, அதனைக் கேட்டு மகிழ்ந்த இறைவன், அகத்தியனை நினைத்தான். அவன் எய்தினான். வழக்கம்போல் வழிபாட்டுக்குக் கீரனும் வந்தான். அப்பொழுது இறைவன் அகத்தியனிடம், "எம்மிடம் நீ தெரிந்து கொண்ட இலக்கணத்தை இவற்குக் கூறுக" எனப் பணித்தான். அவ்வாறே அகத்தியன் கீரனுக்கு இலக்கணக் கூறுகளையெல்லாம் அருளி விடை பெற்றுக் கொண்டு சென்றான். உமையம்மை இறைவனிடம், "நீவிர் உணர்த்தாது அகத்தியனைக் கொண்டு இலக்கணம் உணர்த்தியது என்னை?" என வினவ, "பொறாமையாளனுக்கு நூல் உணர்த்தக் கூடாதெனல் நூல்முறை, ஆதலால் அவ்வியல் புடைய கீரனுக்கு நாம் உணர்த்தாது அகத்தியரைக் கொண்டு உணர்த்தினோம் என்றான் இறைவன். மகவின் நோய்க்குத் தாய் மருந்து தந்து ஆற்றுவது போல் இறைவன் அருளினான் என கீரன் மகிழ்ந்து இறைவனால் செய்யப்பட்ட நூலை எவரும் அறிய விளக்கிக் கூறி இருந்தான்.

## 55. சங்கத்தார் கலகம் தீர்த்தது

சங்கப்புலவர்கள் நாற்பத்து எண்மரும் தனித்தனியே நூலியற்றித் தத்தம் நூலின் பெருமை கூறித் தம்முள் மாறு கொண்டு இருந்தனர். பின்னர்த் திருக்கோயில் சென்று, "எம் பாடல்களின் தரத்தை நடுவுநிலையாய் ஆய்ந்து கூறவல்ல அறிஞன் ஒருவனை அருள்க" என வேண்டினர். இறைவன் ஒரு புலவன் வடிவில் தோன்றி, "இந் நகருள் தனபதி என்னும் வணிகன் உள்ளான். அவன் மகன் ஊமன்; நுங்கள் பாடல் கேட்டுத் தலையசைத்தல் மயிர்சிலிர்த்தல் முதலியவற்றால் பாடற் சிறப்பினை உணர்த்துவான்" என்றருளினான். அவ்வாறே அவனை அழைத்து அவன்முன்னே தம் பாடல்களைக் கூறினர். அவன் நக்கீரன், கபிலன், பரணன் ஆகியோர் தமிழைக் கேட்டுச் சொற்றோறும் தலையசைத்தான். மெய்மயிர் பொடித்தான். களிப்பின் எல்லை காட்டினான். பொன்னும் பவழமும் முத்தும்

நிறுத்தளந்து கூறும் வணிகரியல் போலச் சொல்லாழம் பொருளாழம் கண்டு துலைக்கோலின் நாவுபோல் நடுவு நிலையில் கூறினான். அதனால் புலவர்கள் பகைவிட்டனர்; நட்புற்று வாழ்ந்தனர்.

## 56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது

குலேச பாண்டியன் என்பவன் சங்கப்புலவருள் ஒருவனாம் சிறப்புக் கொண்டவன். அவன் புலமைநலம் அறிந்த இடைக்காடன் என்னும் புலவன் அவனைக் காணவந்தான். தான் இயற்றிய பாடலைப் பாடினான். வழுவிலாப் பாடலாக இருந்தும் பொறாமைக் குணத்தால் குலேச பாண்டியன் தலையசைத்துக் கேட்டானல்லன். அஃறிணையெனச் செவிக் கொடாது இருந்தான். இதனால் வருந்திய இடைக்காடன் திருக்கோயிலுக்குச் சென்று, "என்னை இகழ்ந்தானல்லன் சொல் வடிவாம் அம்மையையும், சொற்பொருள் வடிவாம் உன்னையுமே இகழ்ந்தான். எனக்கென்ன?" என்று கூறி விட்டுப் புறப்பட்டான்.

இடைக்காடனைத் தொடர்ந்து இறைவன் இறைவியோடு வேற்றுருக் கொண்டு தன்கோயிற்கு நேர் வடக்கே வையைக்குத் தெற்கே கோயில் கொண்டான். சங்கப் புலவர்களும் அவர்களைத் தொடர்ந்தனர்.

காலையில் வழிபாடு செய்யச் சென்றவர் இலிங்கத்தைக் காணாராய் அரசனுக்கு அறிவித்தனர். அவன் அடியற்ற மரம் போல வீழ்ந்து புலம்பினான். அப்பொழுதில் சிலர் ஓடிவந்து வையைக்குத் தென்பால் புதியதோர் கோயில் கண்டமையை உரைத்தனர். ஆங்குச் சென்று இறைவனைக் கண்டான். பலவகையாகப் போற்றினான். இறைவன் விண்ணொலியால் "மன்னவ நீ வேறு தீங்குடையவன் அல்லை. இடைக்காடனை இகழ்ந்தாய்; அவனிடத்து வைத்த அன்பாலயாம் வந்தோம்" என்றான். "சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை" என்று பணிந்து இறைவனோடு புலவர்களையும் அழைத்து வந்தான். இடைக்காடனுக்கு வரிசை பல செய்தான். புலவர்கள் பொறுத்தருளுமாறு வேண்டினான். புலவர்கள் வாழ்த்தினர்.

## 57. வலை வீசியது

இறைவன் இறைவியைத் தனியிடத்தில் வைத்து நான்மறைப் பொருள்களை ஒருபோது உரைத்தான். அவள் எக்காரணத்தாலோ அப்பொருளை ஆர்வமின்றிக் கேட்க, "நீ பரதவர் மகளாக" எனச் சாவமிட்டான் இறைவன் "நின்னைப் பிரிந்து

எவ்வாறு வாழ்வேன்" என்று இறைவி வருந்த நீ அங்கு வளரும் நாளில் நாமே வந்து மணமுடித்து வருவோம் என்றான். இறைவன் செயலை அறிந்த மூத்த பிள்ளை இதனால் அன்றோ நேர்ந்ததென்று மறைநூல்களை அள்ளிக் கடலுள் எறிந்தான். இளையபிள்ளை, இறைவன் கையில் இருந்த நூலைப்பறித்து எறிந்தான். "நீயேன் இவர்களை உள்ளே விட்டாய்" என்ற சினந்து நந்தியைச் சுறாமீனாகச் சாவமிட்டான் இறைவன்.

இறைவி கடற்கரைப் பக்கத்தில் ஒரு புன்னை மரத்தின்கீழ்க் குழந்தையாகக் கிடந்தாள். இறைவன்பால் அன்புடையவனும் மகப்பேறு வேண்டி நின்றவனுமாகிய வலையர்கோன் அக்குழந்தையைக் கண்டு களிப்படைந்து வளர்த்து வந்தான். நந்தி சுறாமீன் வடிவாகி வலைஞர்களுக்கு அகப்படாமல் அவர்களைப் பெரிதும் அலைக்கழித்தது. அதனைப் பற்றுதற்கு எவராலும் முடியாது போகவே பற்றித் தருவாற்கு என்மகளை மணமகளாகத் தருவேன் என வலைஞர்கோன் எண்ணினான். இறைவன் வலைஞன் உருக்கொண்டு ஆங்கு வந்தான். கடலிற் சென்று வலை வீசினான். பாம்பின் வாய்ப்படு மீன் போல் வலையில் அகப்பட்டது சுறாமீன். அதனைக் கண்டு மகிழ்ந்த வலைஞர் ஆரவாரித்தனர். வலையர் மகளாக வளர்ந்த இறைவியை மணங் கொண்டு விண்ணிற் காட்சி வழங்கினான் இறைவன். சுறாவும் நந்தியாகத் தோற்றந் தந்தது. வலையர் இறைவன் திருவிளையாடலை அறிந்து பின்னர், இறைவன் இறைவி மகிழ்ந்து கேட்ப மறையை ஓதி மகிழ்வித்தான்.

### 58.வாதவூரடிகளுக்கு உபதேசித்தது

வையைக் கரையில் உள்ள திருவாதவூரில் வாதவூரர் என்பவர் கல்வி கேள்விகளால் சிறந்து விளங்கினார்,. அவர் சிறப்புகளைக் கேள்விப்பட்ட பாண்டியன் அரிமர்த்தனன் தக்கவரை விடுத்து அழைத்துவரச் செய்து அமைச்சராக்கிக் கொண்டான். வாதவூரர் அரசனுக்குக் கண்ணும் கவசமுமாய் விளங்கினார். இத்தகு நாளில் குதிரைகாப்பவர் அரசனை அணுகிக் குதிரைகளுள் இறந்தவைபோக இருப்பவை குறைவு எனக்கூறினர். அரசன் வாதவூரரைக் கருவூலத்தில் இருந்து வேண்டும் தொகை எடுத்துக் கொண்டு குதிரைவாங்கி வருமாறு கட்டளையிட்டான். அரசன் ஆணையை ஏற்றுக்கொண்ட வாதவூரர் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டுக் குதிரை வாங்கப் புறப்பட்டார்.

இறைவன் வாதவூரரின் பக்குவ நிலையை அறிந்து அவரை ஆட்கொள்ள விரும்பினான். அதனால் பெருந்துறை என்னும் இடத்தில் தான் ஒரு குருவாக அமர்ந்து, தன் கணங்களை மாணவராக்கி ஒரு குருந்தமரத்தின் அடியில் இருந்து அருளுரை வழங்கினான். அவ்வழியே வந்த வாதவூரர் அக்காட்சியைக் கண்டு காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்பெனச் சென்றார். தீயிடைப்பட்ட மெழுகென உருகினார். குருவின் அருளுரை கேட்டுத் தம்மை மறந்த பேரின்பத்தில் ஆழ்ந்தார். தொழுத கையொடும் அழுதகண்ணொடும் பாமாலை தொடுத்து இறைவனுக்குச் சாத்தினார். அவர் வாக்கு வளமறிந்த இறைவன் 'மாணிக்க வாசகன்' என்று கூறி மறைந்தான். பின்னர் வந்த பணியை மறந்து கோயில் திருப்பணிக்கே பொருளெல்லாம் செலவிட்டார் மாணிக்க வாசகர். ஆடித்திங்களில் குதிரைவரு மென்று அரசற்குக் கூறுமாறு உடன்வந்தவரை விடுத்தார். அந்நாளில் குதிரை வாராமை கண்டவேந்தன் உடனே ஒலை விடுத்தான். என் செய்வதென ஏங்கினார் வாதவூரர். அன்று கனவில் தோன்றிய இறைவன், "நீ முன்னே செல்க! யாம் குதிரையுடன் வருவோம்" என்றான். மாணிக்கவாசகர் மதுரை சேர்ந்தார்.

**59. நரிபரியாக்கியது**

வாதவூரர் குறித்த நாளில் வராமையால் பாண்டியன் அவரை அழைத்து வினாவினான். மூன்று நாளில் குதிரை வருமென்றார். அவ்வாறும் வாராமையால், ஏவலரை அழைத்துத் தண்டியுங்கள் என்றனுப்பினான். ஏவலர் வாதவூரரைக் கல்லேற்றியும், கிட்டியிட்டும் துன்புறுத்தினர். இரவுப் பொழுதாகச் சிறையில் அடைத்தனர். இறைவனை இறைஞ்சி நின்றார் வாதவூரர். இறைவன் அடியார்க்கு உதவுதலை விரும்பிக், காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கிக் கொண்டுவருமாறு நந்திதேவர்க்கும் பூதகணத்தவர்க்கும் கட்டளையிட்டான். அவர்கள் அனைவரும் பாகராகிக் குதிரைகளுடன் வந்தனர். கடற்பெருக்கெனவந்த பரிகளைக் கண்டவர் அரசர்க்கு உரைக்க அவன் வாதவூரரை விடுவித்துச் சிறப்புகள் பல செய்தான். ஆயினும் பரிகள் சிறிதுபோது வரத் தாழ்த்தமையால், பொய்யென்றெண்ணி வாதவூரரை மீண்டும் வருத்தினான். அப்பொழுதில் வானம் மறைக்கப் புழுதியெழுப்பிக் கொண்டு குதிரைகள் வந்தன. குதிரைத்தலைவனாக வந்த இறைவன் பாண்டியனிடம், "இன்று நாம் கயிறு மாற்றிக்

கொண்டோம். நாளைக்குக் குதிரை என்னவாயினும் எமக்குப் பொறுப்பில்லை" என்றதுடன் குதிரையின் இலக்கணங்களை யெல்லாம் விரிவாகக் கூறினான். மகிழ்வுற்ற பாண்டியன் குதிரைத் தலைவனுக்கும், பாகர்க்கும் சிறந்த பட்டாடைகள் வழங்கிச் சிறப்பித்தான். அவர்கள் மறைந்தனர்.

### 60. பரி நரியாக்கியது

"இறைவன், அரசன் ஒப்பும்படியாகப் பரிகளை அருளினான்; இனி நமக்குக் கவலையில்லை" எனவாதவூரர் மகிழ்ந்திருந்தார். ஆனால் இறைவன் திருவருளால் அப்பரிசுளெல்லாம் நள்ளி ருளிலே நரிகளாகி ஊரை அலைத்தன. எஞ்சியிருந்த குதிரை களையும் கடித்துக் குதறின. குதிரைக் கூடக் காவலர் ஓடிப்போய் அரசனிடம் நேற்றுக் காற்றினும் விரைந்து வந்த பரிகள், கூற்றெனும் நரிகளாகிக் காட்டுக் கோடின என்றனர். அரசன் பழைய அமைச்சர்களை அழைத்து "வாதவூரன் சூழ்ச்சி செய்தான்; நன்றி மறந்தான்; அவனை என்ன செய்யலாம்?" என்று எண்ணியிருந்தபோது, நிகழ்ந்தது அறியாத வாதவூரர் மகிழ்வுடன் அரசனை அணுகினார். அவரைக் கண்டு வெகுண்ட வேந்தன் நிகழ்ந்ததை உரைத்து ஏவலரை அழைத்து வாதவூரரை வாட்டி வதைத்து இழந்த பொருளை வாங்குமாறு ஏவினான். அவர்கள் வாதவூரரைப் படாப்பாடு படுத்தினர். வாதவூரர் இறைவனை இறைஞ்சினார். இறைவன் வையையில் நீர் பெருகி வருமாறு நினைந்தான். வையையில் வெள்ளப் பெருக்குக் கண்ட ஏவலர், தம் பொருள்களைப் பாதுகாக்குமாறு ஓடினர். வாதவூரர் கோயிலுக்குச் சென்று இறைவனைப் பணிந்திருந்தார்.

### 61. மண் சுமந்தது

வையை பெருகிக் கரைகளை உடைத்தது. நகரோர் கலங்கினர். அரசன் அமைச்சர்களை அழைத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் எல்லையிட்டுக் கரையடைக்குமாறு கட்டளை யிட்டான். அவ்வாறே பணி செய்தனர். ஆனால், வந்தி என்னும் பிட்டு வாணிச்சிக்குக் கூலியாள் கிடையாமல் அரசன் தண்டிப் பானே என்று வருந்தி இறைவனை எண்ணினாள். இறைவன் அவள் வேண்டுகைக்கு இரங்கிக் கூலியாளாய் வந்து உதிர்ந்த பிட்டைக் கூலியாகக் கொண்டு அவள் பங்கை அடைப்பதாகச் சென்றான். ஆனால் அங்கே தன் பங்கை அடைக்காததுடன், பிறரும் தம் கடமை செய்யாவண்ணம் வேடிக்கை செய்தான். கரையைக் கண்காணிக்க வந்தவர் வந்தி பங்கு அடையாமல் இருப்பதறிந்து, அவள் கூலியாளை அழைத்துக் கண்டித்தனர்.

அவன், கல்லில் அடிக்கப்பட்ட முளைபோல் காதில் வாங்கிக்கொண்டானல்லன். அதனால் அரசற்குச் சொல்லினர். அரசன் அமைச்சருடன் வந்தான். "இவனே வந்தியின் ஆள்" என்று ஏவலர் கூற, அரசன் இறைவனாம் கூலியாள் முதுகில் பிரம்பால் அடித்தான். கூடைமண்ணை உடைப்பில் போட்டு விட்டுக் கூலியாள் மறைந்தான். அரசன் அடித்த அடி அவனுக்கும் பட்டது. உலகோர் அனைவருக்கும் பட்டது. இறைவன் விண்ணொலி யாய் "இவ் வாதவூரன் விரும்பிய வண்ணம் செல்லவிடுக; இவனுக்காகவே நாம் திருவிளையாடல் செய்தோம். நீ வாழ்க" என உரைத்தான். அதனைக் கேட்ட பாண்டியன் அச்சமும் வியப்பும் எய்தி இறைவனைப் போற்றினான். வாதவூரரைக் கண்டு பணிந்து போற்றினான். அவர் விரும்பிய வண்ணம் போகவிடுத்துச் செங்கோல் நடாத்தி யிருந்தான். தன்பொருட்டு இறைவன் கூலியாளாக வந்த பெருமையை நினைந்து உருகிய வந்தி வீடுபேறடைந்தாள்.

### 62. பாண்டியன் சுரம் தீர்த்தது

பாண்டிய நாட்டைக் கூன் பாண்டியன் என்பவன் ஆட்சி செய்தான். அவன் மனைவி மங்கையர்க்கரசியார். அமைச்சர் குலச்சிறையார். அரசன் சமண சமயம் சார்ந்திருந்தான். அதனால் பாண்டிய நாட்டில் சைவநெறி குறைவதாயிற்று. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சிவநெறியில் தவறா வாழ்வில் விளங்கினர். இறைவனிடம், "சைவநெறி தழைக்க அருளவேண்டும்" என்று அவர்கள் வேண்டினர்.

தில்லையில் இருந்து மதுரைக்கு வந்த ஓரந்தணன் சீர்காழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தர் பெருமையையும் அவர் இறையருள் பெற்றதையும் தேவாரம் பாடிச் சிற்படை வதையும் கூறினான். அதனைக் கேட்டு மகிழ்ந்த அரசியாரும் அமைச்சரும் ஞானசம்பந்தருக்கு ஓலை விடுத்தனர். சம்பந்தர் மதுரைக்கு வந்தார். இறைவனை வழிபட்டு ஒரு மடத்துத் தங்கினார். அவரை அழிக்கக் கருதிய சமணர் அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ மூட்டினர். அதனை அறிந்த சம்பந்தர், "இத் தீ பையச் சென்று பாண்டியனைப் பற்றுக" என்றார். பாண்டியனுக்கு அத் தீ சுரமாகி வாட்டியது. பல்வேறு மருத்துவர் வந்துபார்த்தும் சுரம் தீரவில்லை. சம்பந்தர் வந்தால் தீரும் என்று அரசியாரும் அமைச்சரும் கூறினர். அரசனும் இசைந்தான். ஞானசம்பந்தர் அரசனை அணுகினார். சமணர்களும் ஆங்கிருந்தனர். அவர்கள், "அரசே இவர் நின் வலப்பக்க நோயையும், யாம் இடப்பக்க

நோயையும் தீர்க்க ஆணையிடுக என்றனர். "அவ்வாறே செய்" என்றான் அரசன். சமணர் எவ்வளவு முயன்றும் நோய் தீர்த்திலர். சம்பந்தர் மந்திரமாவது நீறென்னும் பதிகம் பாடி வலப்பக்க வெம்மையை ஒழித்தார். "ஐய யானுய்யுமாறு நீரே இடப்பக்க வெம்மையையும் அகற்ற வேண்டும்" என்று அரசன் வேண்ட அவ்வாறே செய்தார். அரசன் கூனுடன் வெப்பமும் ஒழிந்து சவுந்தரபாண்டியன் என்றானான். சைவசமயமும் சேர்ந்தான்.

### 63. சமணரைக் கழுவேற்றியது

மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும், ஞான சம்பந்தர் பாண்டியன் சுரந்தீர்த்த நலத்தைப் பாராட்டினர். "சமண சமயத்தை அழித்துச் சைவத்தை நீரே காக்கவேண்டும்" என்று வேண்டினர். "இறைவன் அருளால் அவ்வாறே ஆகு" மென்றார் ஞானசம்பந்தர். அவரை அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்று தம் கருத்தை உரைத்தனர். அவனும் ஏற்றுக்கொண்டான். இந்நிலையில் சமணர் சம்பந்தரை வாதுக்கு அழைத்தனர். அவர் மகளிர் பலப்பல தீக்குறிகண்டு தடுத்தனர். அதனைப் பொருட்டாக எண்ணாமல் வாதுக்குச் சென்றனர்.

இருவரும் தங்கள் மந்திரத்தை ஏட்டில் எழுதி எரிநெருப்பில் போடுவது என்றும் எரியாத ஏட்டுக்குரியவர் வென்றவர் என்றும் பேசி முடித்தனர். அவ்வாதில் சமணர் ஏடுகள் எரியவும், சம்பந்தர் ஏடு பசுமையாக இருக்கவும் கண்டனர். எனினும், அதனை ஒப்பாமல், சமணர் இருவரும் மந்திரம் எழுதிய ஏடுகளை ஆற்றில் விடவேண்டும் என்றும், நீரை எதிரிட்டுச் செல்வதே வென்றது என்றும் உறுதி கூறினர். அதில் தோல்வி கண்டவர் கழுவில் ஏறவேண்டும் என்றார் சம்பந்தர். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர். அவ்வாதிலும் சமணரே தோற்றனர். அப்பொழுதில் சம்பந்தர், "நீவிர் வீணாக இறக்க வேண்டியதில்லை; சிவஞ்சார்ந்து உய்க" என்றார். அதனை ஏற்காமல் தம் உறுதியிலே அழுந்திய சமணர் கழுவில் ஏறினர்; அஞ்சியவரைப் பற்றி ஏற்றவும் செய்தனர். சம்பந்தர் விடுத்த ஏடு வையை வழியே எதிரிட்டுச் சென்றது. அவ் ஏடு சேர்ந்த இடம் ஏடகம் எனப்பட்டது. அது திருவேடகம் எனப்படுகிறது.

### 64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது

கடற்கரைப் பட்டினம் ஒன்றில் ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு நெடுநாள் கழித்து ஒரே ஒரு மகள் பிறந்தாள். அவளை மதுரையில் இருக்கும் தன் மருகனுக்கு மணந்து தர

உறுதிப்படுத்தி யிருந்தான். அந்நிலையில் சிலகாலம் செல்ல வணிகன் இறந்தான். அவன் மனைவியும் அவனைத் தொடுத்து இறந்தாள். மதுரையில் இருந்த மருகன் அறிந்து வருந்தி மாமன் இருந்த பட்டினம் அடைந்து அவன் பொருளை எடுத்துக் கொண்டும் அவன் மகளை அழைத்துக் கொண்டும் நடந்து வந்தான். திருப்புறம்பியம் என்னும் ஊர்க்கு அவர்கள் வரப் பொழுது போயிற்று. அங்கே கோயிலில் தங்கினர். அங்கே படுத்திருந்த வணிகன் மருகனைப் பாம்பு தீண்டிற்று. அவன் உடனே இறந்தான். வணிகனின் மகள் ஆறாத் துயருற்று அழுதாள்; புலம்பினாள்; பலப்பல கோயில்களுக்குஞ் சென்று பதிகம் பாடிவந்த சம்பந்தர் அங்குவந்து நிகழ்ந்ததறிந்தார். அருட்கண்சாத்தினார்; நஞ்சம் தீர்ந்து எழுந்தான். சம்பந்தரை வணிகன் மருகனும் மகளும் வணங்கினர். அவர்களை மணமுடித்துக் கொள்ளுமாறு சம்பந்தர் கூற வணிகன் மருகன், "எங்கள் இனவரும் இல்லாமல் சான்றும் இல்லாமல் மணமுடித்தால் பின்னர் என்னாமோ?" என்றான். "இவ்வன்னியும் கிணறும் இலிங்கமும் சான்றாம்" என்றார் சம்பந்தர். அவ்வுரை யேற்று மணமுடித்துக்கொண்டு மதுரைக்கு வந்தனர். அவனுக்கு, முன்னரே மனைவியும் மக்களும் இருந்தனர். இளையவள் வந்து சில்லாண்டுகளில் ஒருமகன் பெற்று மகிழ்ந்திருந்தனர். ஒருநாள் மூத்தாளின் மக்கள் இளையாள் மகனை அடித்தனர். இளையாள் அவர்களை வைதாள். "நீ எவளோ? நீங்கள் திருமணம் செய்ததற்கு என்ன சாட்சி?" என்று மூத்தவள் பழித்தாள். இளையவள் கோயிலையடைந்து இறைவனை வேண்டினாள். கோயிலின் தென்கிழக்கில் வன்னியும் கிணறும் இலிங்கமும் தோன்றிச் சான்று காட்டின. கணவன் மூத்தவளை விலக்கிவிட எண்ணினான். "எனக்குத் தாயன்னவள் அவள்; நாங்கள் இருவரும் ஒருவராய் வாழ்வோம்" என்று கணவனிடம் வேண்டினாள் இளையவள். கணவன் ஏற்றுக்கொண்டு இறைவனை வாழ்த்தி வாழ்ந்தான்.

**கா. காளிமுத்து**
வேளாண்மைத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

செந்தமிழ்க் கன்னியைச் செவிலிபோல் வளர்த்துப் பெருமை சேர்த்தது - மதுரையின் நான்காம் தமிழ்ச் சங்கமாகும். அந்தச் சங்கம் நிறுவிய அருந்தமிழண்ணல் பாண்டித்துரையார் பற்றியும், தமிழ் வளர்க்கும் பணியில் முன்னின்று பாடுபட்ட சேதுபதியினர் பற்றியும் - இவ்வரலாறு வரையப்பட்டுள்ளது.

தகுதி மிகுதியுள்ள தமிழ் வித்தகர் இளங்குமரனார் அவர்கள் - படிக்கத் தெவிட்டாத பாகுமொழித் தமிழில் “தமிழ்ச் சங்க வரலாற்றை” எழுதியுள்ளார். இதற்காக அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் ஏற்புடைத்தே!

தமிழர்கள், தாங்கள் வாழ்ந்த வகையை வரலாற்று நோக்கில் குறித்து வைக்காதது பெருங்குறை என்பார்கள். அந்தக் குறையினால்தான் வந்தேறிகளெல்லாம் சொந்தம் கொண்டாடும் சந்தைச் சதுக்கமாகத் தமிழ்நிலம் ஆகிவிட்டது.

பழந்தமிழ்ச் சுவடிகள் கறையான்களின் தீனியாகி விட்டிருந்த காலத்தில்தான் - சேதுபதியினர் கைம்மாறு கருதாது செந்தமிழுக்குத் தொண்டாற்றத் தலைப்பட்டனர். அரண்மனைத் தமிழை அரங்கிற்கு அழைத்து வந்தனர். அவர்தம் தூய தொண்டு வரலாறு இளங்குமரானாரின் இந்த நூலில் துலங்குகிறது.

தமிழ் உலகம் உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க உயர் பனுவல் இது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**– கா. காளிமுத்து**

# முன்னுரை

**'தோன்**றிற் புகழொடு தோன்றுக' என்னும் பொன் மொழியை மெய்ப்பிக்கத் தோன்றியவர் **பொன். பாண்டித் துரையார்.** அவர் தோற்றத்தால், தமிழ் மொழி பெற்ற ஆக்கம் மிகப்பெரியது.

பாண்டித்துரை, புரவலர் குடியில் பிறந்தார்; எனினும் புலவருள் புலவராகவும் திகழ்ந்தார். அதனால் புலமைச் சிறப்பும் புரவாண்மைச் சிறப்பும் அவர்க்கு இயல்பாய் அமைந்தன. அச் சிறப்புகளே, அவரைத் தமிழ்த் தொண்டருள் தலையாயவர் ஆக்கின.

நாடோட நடுவோடுவதும், ஊரோட ஊடோடுவதும்' எளிமையானவை, ஆனால் நாடும், ஊரும் தம் வழிப்பட்டு வர வழிகாட்டிச் செல்லும் திறம் வாய்ப்பது அரிதேயாம். அவ்வரிய நிலை பாண்டித்துரைக்கு இளமையிலேயே இயல்பாய் வாய்த்து இருந்தமையால், நடுவயது நண்ணு முன்னரே நயத்தக்க பணிகளையெல்லாம் செய்து முடிக்க இயன்றது.

தமிழ், தமிழர்தம் பொதுப் பொருள். பொதுப் பொருளைப் போற்றுதல் பொதுமக்களின் பொதுக் கடன். ஆனால், பொதுப்பொருளைப் பொதுமக்களுள் பலரும் போற்றாமையுடன், அழிவு சூழ்தற்கும் முந்துகின்றதைக் கண்ணாரக்கண்டும் பொதுப் பணியைத் தம் தலைமேல் தாமே அள்ளிப் போட்டுக் கொண்ட பெருந்தகை பாண்டித்துரை. தம் வழிவழிப் பொருளையும், வளமான உழைப்பையும், வரிசைமிக்க வாழ்வையும் முழுமையாகப் பொதுப்பணிக்கே ஒப்படைத்தமை, எளிதில் பிறரெவர்க்கும் வாராத பெருமைகளாம்.

பாண்டித்துரையார் சங்கம் கண்ட காலையில் ஆட்சி புரிந்தது அயலரசு. அதன் முழுதரவணைப்பும் ஆங்கிலத்திற்கே இருந்தது. பல்கலைக் கழக ஆட்சியும் ஆங்கிலத்தைத் தழுவியே நின்றது. தமிழைப் பற்றிக் கருதிப்பார்ப்பார் இல்லாத காலையில், அரசின் உதவியையோ, பல்கலைக் கழகத்தின் நல்குகையையோ கருதாமல் தொடங்கப்பெற்ற பேரமைப்பு தமிழ்ச் சங்கம்!

தமிழுக்கெனப் புலமைத் தேர்வுத் திட்டம் ஒன்றனை அமைத்து. அதனை நடைமுறைப்படுத்திப் புலமைப் பட்டமும், பரிசம் பாராட்டும் வழங்கிப் பல்கலைக் கழகத்திற்கு வழிகாட்டிய பெருமைக்குரியது பாண்டித்துரையார் கண்ட பைந்தமிழ்ச் சங்கம். இற்றைக் காலத் தமிழ்ப் பட்டங்களுக்கும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச்சங்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம் இன்ன பல அமைப்புகளுக்கும் கால்கோளாக அமைந்தது மதுரை நான்காம் தமிழ்ச்சங்கமேயாம்.

தனி மாந்தர்க்கு வரலாறு உண்டு; நாட்டு வரலாறும் பிற பிற வரலாறுகளும் உண்டு. அவ்வாறே சில பல பொது அமைப்புகளுக்கும் வரலாறு உண்டு. பொது அமைப்புகளின் வரலாறோ, தனி மனிதர் வரலாற்றையும் நாட்டு வரலாற்றையும் இணைக்கும் பாலமாய் இயல்வதாம். அதிலும், இவ்வரலாறோ அவற்றுடன் புலவர் வரலாறும், மொழி வரலாறும், இதழ் வரலாறும் இன்னபிறவும் இணைந்ததாம்.

இவ்வரலாறு, விரிவுக்குரியது இணைக்க வேண்டிய செய்திகளும் குறிப்புகளும் பலவுள. எனினும் தமிழ்ச்சங்க வரலாற்றை அறிந்து கொள்ள விழைவார்க்கு வேண்டுமளவு செய்திகளைக் கொண்டுள்ள அடக்கப் பதிப்பாக இது வெளிப்படுகிறது. வேண்டுமேல் வரும் பதிப்புகளில் விரித்துக் கொள்ள வாய்ப்புளது.

நெடிய பல ஆண்டுகளின் முன்னரே, சங்க வரலாற்றை எழுதும் ஆர்வம் என்னுள் எழுந்தது. அவ்வார்வத்தால், பல்வேறு நூலாய்வுகளின் இடை இடையே தமிழ்ச்சங்க வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து வந்தேன். ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது, தமிழ்ச்சங்க வரலாறு கட்டாயம் எழுத வேண்டும் என்னும் உணர்வு என்னுள் கிளர்ந்தது. அக்கிளர்ச்சியை வரவேற்று நூலாக்கத்திற்கு ஊக்கிய பெருமக்கள் இந்நாள் தமிழ்ச் சங்கச் செயலாளர் திருவாளர் டி.பி.எம். பெரியசுவாமி அவர்களும், தமிழ்ச்சங்க ஆட்சிக் குழுவினரும் ஆவர் குறிப்பாகச் செயலாளர் அவர்கள் இந்நூல் வெளியீடு தொடர்பாக நல்கிய ஆர்வமும் அக்கறையும் நெஞ்சை நெகிழ்விப்பனவாம்.

இவ்வரலாறு சிறப்புற வெளிப்படச் செயலாளரும் ஆட்சிக் குழுவினரும் செய்துள்ள உதவிகள் பல. அவை: 1) வேண்டும் குறிப்புகளைத் தட்டின்றிப் பெற்றுக்கொள்ள எப்பொழுதும் உதவியாய் இருந்தமை. 2) வேண்டும் படங்கள்

*உதவியமை. 3) இணைப்பில் சேர்க்கத்தக்க செய்திகள் நல்கியமை 4) நூற் சீர்மைக்கு வேண்டும் கருத்துகள் உதவியமை 5) நூல் வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டமை என்பன ஆகலின், நூலாசிரியன் என்னும் நிலையில் சங்கத் தலைவர், செயலர் முதலாக ஆட்சிக் குழுவினர் அனைவருக்கும் நன்றி பெரிதுடையேன்.*


*மிகக் குறுகிய காலத்தில் செவ்விதில் அச்சிட்டு உதவிய 'விசயா' அச்சகத்தினர்க்கும், அச்சக ஊழியர்களுக்கும் நன்றி யுடையேன்.*

*திருநகர், மதுரை-6* — *தமிழ்த் தொண்டன்*

*29-3-82* — **இரா. இளங்குமரன்**




அமைச்சர் பொன்னுச்சாமித் தேவர்



தமிழ்ச்சங்க நிறுவனர் பாண்டித்துரைத் தேவர்




மன்னர் முத்துராமலிங்க சேதுபதி




மன்னர் பாஸ்கர சேதுபதி



மன்னர் சண்முகராசேசுவர சேதுபதி



**********



மாட்சிமை தங்கிய சேதுபதி மகாராணி த.இந்திராதேவி, பி.ஏ.,



மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901

# 1. தமிழ்

தமிழின் சுவையில் தோய்ந்து தோய்ந்து, ஆய்ந்த பெருமக்கள் 'தமிழ்' என்னும் சொல்லுக்கு, 'இனிமை' என்னும் பொருள் கண்டனர். 'தமிழ் தழீஇய சாயலவர்' என்றார்திருத் தக்க தேவர்.

இன்பத்தின் உயரெல்லைப் பொருளாக 'அமிழ்து' என்பதை முந்தையோர் குறித்தனர். "அமிழ்தினும் ஆற்ற இனிதே" என்பது திருக்குறள். இவ்வமிழ்தத்தைத் தமிழாகக் கண்டார் பாவேந்தர். அதனால், "தமிழுக்கு அமுதென்று பேர்" என்றார் அவர்.

இன்பத்துள் இன்பம் என்பது 'வீடு' என்று மெய்ப் பொருள் உணர்வாளர் சுட்டுவர். வீடுபேற் றின்பத்திற்கும் விழுமி தாம் இன்பமாகத் தமிழ் இருத்தலைக் கண்டவர்கள்,

"தமிழென்ப தினிமை முத்தி"

என்றனர்.

தமிழின்பத்துள் ஆழ்ந்தவர்கள், அதன் தன்மையாம் நீர்மையிலும், உள்ளொளி விரிக்கும் நீர்மையிலும் ஒன்றினர். அதனால் 'நீர்மை' யையும் தமிழாக்கினர்.

"இனிமையும் நீர்மையும் தமிழென லாகும்"

என்பது பிங்கல நிகண்டு.

"தமிழென்ப தினிமை நீர்மை"

என்பது சூடாமணி நிகண்டு.

இத்தகைய இனிய தமிழுக்கும் மாநகர் மதுரைக்கும் உள்ள நெருக்கமிக்க தொடர்பு எவரும் அறிந்ததே. தமிழால் மதுரையும், மதுரையால் தமிழும் சிறப்புற்றன. தமிழோ, வீரத் தமிழாகியது; மதுரையோ, தமிழ் மதுரையாகியது, ** ஒன்று பெற்ற உயர்வற உயர்ந்த உயர்நலங்கள்.

தமிழ்நாடு, ‘தண்டமிழ் வேலித் தமிழ்நாட்டகம்’ என்றும், தமிழ் வேந்தர், ‘தமிழ் கெழு மூவர்’ என்றும் குறிக்கப் பெறுவர். எனினும், மூவேந்தருள் ஒருவனாம் பாண்டியன், தமிழ்மாறன் எனவும், ‘தமிழ்நர் பெருமான்’ என்றும் சிறப்பிக்கப் பெறுவான். பாண்டி நாட்டு வையை, தமிழ் வையை யாகவும், பொதியம், தமிழ்ப் பொதியமாகவும் விளக்கமுறும்.

தமிழுக்கும் பாண்டியர்க்கும் உள்ள தொடர்பு, பிரிவு அறியாப் பெருமையுடையது. அதனை முழுதுணர்ந்த பாண்டிய நாட்டுப் புலவர் குமரகுருபரர் ‘தென்னன்தமிழ்’ என்று அழகொழுகக் கூறினார்.

தமிழை ஊனாகவும் உயிராகவும் உணர்வாகவும் கொண்ட தமிழ்ப் புலவர்கள், பெற்றெடுத்த பெருவாழ்வுடைய பேரன்னை, தன் குழந்தையைக் கொஞ்சிக் கொஞ்சிக் குலாவுவது போலத் தமிழைக் கொஞ்சிக் குலாவினர். அருந்தமிழ், இன்றமிழ், ஒண்டமிழ், கலைத்தமிழ், கவின்தமிழ், கன்னித்தமிழ், செந்தமிழ், செழுந்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், திருத்தமிழ், தீந்தமிழ், தேன் தமிழ், நற்றமிழ், நறுந்தமிழ், பழந்தமிழ், பைந்தமிழ், முத்தமிழ் என்று இன்னவாறு நூற்றுக் கணக்கான அடைமொழிகள் தந்து பூரித்தனர்.

‘தமிழ்’ என்பது இலக்கிய நூல்களில் ‘தமிழ்மொழி’ என்னும் பொருள் குறிக்கும் அளவில் நின்றுவிடவில்லை, அது தமிழ்நாடு, தமிழ் இனம், தமிழ்க்கலை, தமிழ்ப்பண்பாடு, தமிழர்வீரம், தமிழர் வாழ்வு முதலியவற்றை யெல்லாம் குறிக்கும் வளமிகு சொல்லாக வழங்கப் பெற்றுள்ளது. இதனால் **தமிழ் வாழ்வே தமிழர் வாழ்வென** முந்தையோர் கண்டனர் என்பது வெளிப்பட விளங்கும். இவ்விளக்கமே, தமிழ்ப்பாண்டியரைத் தமிழ்ச் சங்கம் வைக்கத் தூண்டித் துலங்கச் செய்தது என்பதும் விளங்கும்.

## 2. பழந்தமிழ்ச் சங்கங்கள்

சங்கத் தமிழ்ப் புலவர்களின் பெயர்களை மேலோட்டமாகப் பார்த்தாலும், அவர்கள் அனைவரும் தமிழ்நலம் முழுவதும் தழுவி வாழ்ந்தவர்கள் என்பது தெளிவாகும். அவ்வாறே, அவர்களால் பாடப் பெற்ற பேறமைந்த பெரு மக்களும் தமிழ் நிலப்பரப்பெல்லாம் தழுவி வாழ்ந்தவர்கள் என்பதும் தெளிவாகும். தெளிவாகவே, நாம் இந்நாளில் கொண்டுள்ள சங்கத் தமிழ் வளம், தமிழகம் தழுவிய புலமைச் செல்வர்களின் பொதுக் கொடை என்பது புலப்படும். புலப்படவே, இக்கொடையை நாம் இன்று கூட்டுண்டு மகிழச் சங்கம் கண்ட பெருமையர் பாண்டியரே என்பதை உணர்ந்து, அவர்களை ஓங்கி உயர்ந்த நிலையில் வைத்துப் பாராட்டும் உள்ளம் உந்தியெழும்!

சேரர் இலக்கியமாகத் திகழ்வது **பதிற்றுப் பத்து**. சேரவேந்தர் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறையாரால் தொகுப்பிக்கப் பெற்றது ஐங்குறுநூறு.

சோழன் கரிகாற் பெருவளத்தான்மேல் கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப் பெற்றது பட்டினப்பாலை; முடத்தாமக் கண்ணியாரால் பாடப் பெற்றது பொருநராற்றுப் படை.

சேரசோழவேந்தர்களில் கவித்திறம் வல்லவர்களாகத் திகழ்ந்தவர்கள் இயற்றிய பாடல்கள் பல, சங்கத் தொகை நூல்களில் உண்டு. இவ்வாறாயினும் அவையெல்லாம், "மதுரைப் பாண்டியர்" கண்ட தண்டமிழ்ச் சங்கத்தே ஆராயவும் அரங் கேற்றவும் பெற்றவை என்னும் போதுதான், பாண்டியர் தம் பைந்தமிழ்த் தொண்டு வெள்ளிடை மலையென விளங்கும்.

முச்சங்க வரலாறு தனியொரு அகவற் பாவாலும், சிலப்பதிகாரத்தாலும், இறையனார் களவியல் உரையாலும் அறிய வருகின்றது. பிற்காலத் திருவிளையாடலிலும் சில செய்திகள் உள. முன்னை மூன்று நூற் செய்திகளும் சுருங்கிய அளவில் பெரும்பாலும் ஒத்துச் செல்கின்றன.

**இறையனார் அகப்பொருள்** கூறுமாறு :

"தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்,

"அவருள் **தலைச்சங்கம்** இருந்தார் அகத்தியனாரும், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்து ஒன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்து ஒன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு. சங்கம் இருந்தார் என்பது. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட **மதுரை** என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப.

"இனி, **இடைச்சங்கம்** இருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர் கருங்கோழி மோசியும், வெள்ளூர் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோமானும், கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும் இசைநுணுக்கமும், பூதபுராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. இரீஇயினார் வெண்தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக. ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது **கபாடபுரத்து** என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.

இனிக், **கடைச்சங்கமிருந்து** தமிழாராய்ந்தார் சிறு மேதாவியாரும், சேந்தம் பூதனாரும், பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருதனிள நாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார்

என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும் கூத்தும், வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல் காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது **உத்தர மதுரை** என்ப"

- இக்குறிப்புகளை யெல்லாம் அப்படி அப்படியே ஏற்றுக் கொள்ளத் தடைகள் உள. எனினும், சில அடிப்படை உண்மைகள் வெளிப்படுகின்றன. அவற்றைத் திரட்டிக் காண்போம்.

1) பாண்டிய வேந்தர்கள் தம் தலைநகரில் தமிழ்ச்சங்கம் நிறுவினர்.

2) அவ்வேந்தர்கள், அச் சங்கத்தின் புரவலர்களாகத் திகழ்ந்தனர்.

3) வழிவழியாகப் பாண்டிய வேந்தர்களால் தமிழ்ச்சங்கம் போற்றிக் காக்கப் பெற்றது.

4) புரவலர்களாக விளங்கிய வேந்தர்களுள் பலர், புலவர்களாகவும் விளங்கினர்; புலவர்களோடு கூடித் தமிழாய்ந்தனர்.

5) புலவர்களாக விளங்கிய, வேந்தர்களுள் சிலர், கவியரங்கேறும் சிறப்பும் பெற்றனர்.

6) பாவன்மை மிக்க புலவர்களுள்ளும் தேர்ந்தெடுக்கப் பெற்ற சிலரே ஆய்வு அரங்கத்தில் இடம் பெற்று விளங்கினர்.

7) புலவர்கள் தம்ஆய்வுக்கு வரம்பு நூலாக ஒன்றையோ பலவற்றையோ தேர்ந்து கொண்டனர். அவற்றை உரைகல்லாக் கொண்டே புதுநூல்களை ஆராய்ந்தனர்; அந்நெறி மாறாமல் புதுநூல்கள் இயற்றினர்.

8) *புலத்துறை முற்றிய புலவர்கள், இயல் இசை நாடகம் என்னும் தமிழின் முக்கூறுகளும் முறையாய் ஒருங்கே வளர்வதற்கு ஏற்ற பெற்றியில் நூல்கள் இயற்றினர்.*

9) *சங்கம் இருந்த இடத்தையும் காலத்தையும் கருதித் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனப் பின்னவர்களால் பெயரிடப் பெற்றும், முச்சங்கம் என எண்ணுக் குறிக்கப்பெற்றும் வழங்கின.*

*இனித் தொல்காப்பியப் பாயிரம், சங்க இலக்கியம், கல்வெட்டு ஆகியவற்றின் துணையால் தமிழ்ச்சங்கம், தமிழ்நூல் அரங்கேற்றம், தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் வேந்தர்கள் போற்றிய வகை முதலியவற்றைப் பற்றியும் சில செய்திகளை அறியலாம். அவற்றை அறிதலும் நம் ஆய்வுக்குப் பயன் செய்வ தேயாம். அவை வருமாறு:*

1) *புலவர்கள் கூடி ஆராய்ந்த அவை,* ***அவையம், கூடல், புணரி, புணர்கூட்டு, அரங்கு,*** *என்னும் பெயர் களாலும் பின்னாளில்* ***சங்கம், களம், களரி, கழகம்*** *என்னும் பெயர்களாலும் வழங்கப்பெற்றது.*

2) *அவையம் அவ்வக்கால வேந்தர் பெயருடன் இணைந்து நிலந்தருதிருவிற்பாண்டியன் அவையம்' என்பது போல வழங்கப்பெற்றது.*

3) *அவையத்தின் தலைவராக ஒரொருகால் ஒவ்வொரு புலவர் இருந்தனர்.*

4) *எந்நூலாயினும், முந்து நூல்களுடனும் தமிழின் இருவகை வழக்குகளுடனும் ஒப்பிட்டு ஆராயப் பெற்றது.*

5) *ஒருநூல் அரங்கேற்றத்தின் நோக்கு* ***"அரில் தபத் தெரிதல்"*** *(குற்றமற ஆராய்தல்) என்பதாகவே இருந்தது. ஆதலால் புலவர் அவையில் அரங்கேற்றப் பெற்ற நூல் 'மாசு நீங்கிய மணி' யெனப் பொலிவுடன் விளங்கியது.*

6) *புலவர் அவையில், அரங்கேற்றப் பெறாத நூல் நாட்டவர்களால் மதிக்கப் பெறாது என்னும் உறுதி இருந்தது.*

7) *நூல் அரங்கேற்றம், புரவலர்களால் பெரு விழாவாக எடுக்கப் பெற்றது. அரங்கேறிய புலவர்க்குச் சீரும் சிறப்பும் பரிசும் பாராட்டும் வழங்கப் பெற்றன.*

8) புலவர்களுடன் கூடி ஆராய்ந்து பெறும் இன்பம், விண்ணுலக இன்பத்தினும் விழுமியது என்றும், 'புலவர்களால் பாடும் புகழடைந்தோர் விசும்பின் வல்லவன் ஏவா வானவூர்தியும் பெறுவர் என்றும் மேதக்கோர் கருதினர். புலவர்களால் பாடப் பெறாமை யைப் பேரிழிவாகப் பெருவேந்தரும் கருதினர்.

9) புலவர்கள் பிறந்தகுடி, செய்யும் தொழில் ஆகியவற்றைப் பற்றிக் கருதாமல் புலமைத் திறத்தைக் கொண்டே மதிப்பிடப்பட்டனர்.

10) புலவர்மாட்டுப் பொது நோக்கு ஒழிதல் வேண்டும் என்றும், புலவர்களை வரிசையறிந்து சிறப்பித்தல் வேண்டும் என்றும் புலவர்களும் அறுதியிட்டு உறுதி யுரைத்துள்ளனர்.

11) புலவர்களும் புரவலர்களும் எச்சமயம் சார்ந்திருந் தாலும் தமிழை வளர்த்தலில் ஒன்றுபட்டே நின்றனர்.

12) புலவர்கள் எக்குடியினராயினும், எத்தொழிலினர் ஆயினும் தமிழ்ப்பணியில் தம் கடமையை ஆற்று தலைத் தவமாகக் கொண்டு தக்கபணி புரிந்துள்ளனர்.

13) அரசருள் சிறந்தோரும் அறிவறிந்த புலவர்களை அமைச்சராகக் கொண்டு அவர் வகுத்துத் தந்தவழியில் அரசோச்சுதல் பேறு எனக் கருதி வாழ்ந்தனர்.

14) மாறுபட்டவரின் நாடு நகரங்களை அழிக்க நேர்ந்த போதும், தமிழ்ச் சுவடிகளையோ, தமிழ்நூலை அரங் கேற்றிய மண்டபங்களையோ, தமிழ்க்கலைச் செல்வங் களையோ அழித்தலைத் தமிழ் வேந்தர் செய்திலர். அவ்வாறு செய்ய எவரேனும் சூழ்வார் எனினும், தடுத்து நிறுத்தும் தகவுடையவராகவும், அவர்கள் திகழ்ந்தனர்.

15) புலவர்கள் தம் புலமைப்பணியை முட்டின்றிச் செய்தற்காகப் பொருள் முட்டுப்பாடு ஏற்படா திருத் தலை எண்ணிய வேந்தர்கள் புலவர்களுக்கு 'முற்றூட்டு:' என்னும் பெயரிய புலமைநிலக் கொடை வழங்கினர்.

16) சங்கப்புலவர்கள் புலமைக்காழ்ப்பு இன்றிச் சிறந்த சால்பொடும் விளங்கினர். அன்றியும் புலவரை மதித்துப்

போற்றுதலும், அவர்க்கு உற்றுழி உதவுதலும் தம் கடப்பாடாகக் கொண்டு சிறந்தனர்.

17) வாழ்தல் வேண்டிப் பொய் கூறுதலும், செய்யாதவற்றை யெல்லாம் செய்ததாகப் புனைந்துரைத்தலும் சங்கச் சான்றோர் அறியாதவை.

18) அரசியல்பணி, அமைதிப்பணி முதலியவற்றிலும் பெருமைமிக்க புலவர்கள் பங்கு கொண்டுள்ளனர்.

19) இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலும் இலக்கணம் கண்டதற்கு இலக்கியம் படைத்தலுமாகிய மரபு நெறியை நன்கனம் போற்றினர்; 'மரபு நிலை திரியின் மானமில்லை' என்றும், 'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்' என்றும் தெளிந்து இலக்கிய இலக்கணங்களை யாத்தனர்.

20) 'வையகத்தில் வானகத்தைப் படைத்தல்' அவர்கள் அடிப்படை நோக்காகலின், அதற்கேற்பவே வாழ்வு நெறிகளைப் படைத்துக் காட்டி அந்நெறியில் நிறுத் துமாறு கலைகளையும் படைத்து நெறிப்படுத்தினர்.

இவையெல்லாம் சங்க இலக்கியச் சால்புக்கு நிலைக்களங் களாக இருந்தன. ஆனால் இந்நிலையும் கட்டுக் கோப்பும் வரவர வீழ்ந்தன: வேந்தர்களின் அக்கறை வீழ்ந்தது. ஓரிருவர் கொண்ட வீறும் பேருக்கே பயன் பட்டது; அரச வழி முறைகளும் நெறிகெட்டுப் பிரிந்தன; உரிமையைக் காப்பதற்கும் பகைகளை யொழிப்பதற்கும் பொழுதெல்லாம் போயது; வாய்த்தபோது, பேரார்வம் கொண்ட வேந்தர்கள் ஒருசிலர் ஓரிரு புலவர்களைப் போற்றினர்; புலவர் அவை அழிந்தது; புலவர்கள் ஒற்றுமை குலைந்தது; வடமொழி வந்து வலுத்தது; ஆள்வோர் அரவணைப்பு வடமொழிக்கு மிகுந்தது; அரசியல், சமயம், கலை முதலாய பல்வேறு துறைகளையும் வடமொழி வரித்துக் கொண்டது; தமிழை அத்துறைகளில் அகற்றி வடமொழி கொடிகட்டிப் பறப்பதற்கே வேந்தர்கள், குறுநிலமன்னர்கள் துணைவாய்த்தது. இந்நிலை தொடர்ந்து வருங்கால், அயலார் படையெடுப்பும், ஆங்கிலவர் ஆட்சியும் தமிழையும் தமிழரையும் தலைக்கழித்தன. **தமிழ் வளர்த்த மதுரையிலேயே தமிழின் நிலை இரங்கத்தக்கதாகப் போயிற்று** எனின், மற்றை இடங்களைச் சொல்வானேன்?

*விசயநகர மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட மதுரையாட்சி, பின்னர் நாயக்க மன்னர்களால் ஆளப்பெற்றது. அப்பொழுது, தெலுங்கு மொழிக்கும் வடமொழிக்கும் பெருத்த செல்வாக்கு உண்டாயிற்று. கலைப்பணி செய்தலில் தலைநின்ற திருமலை மன்னரும் தமிழ்மொழிக்குப் பணி செய்தது 'குமரகுருபர அடிகள் வந்து மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடிய காலையில் அதனை அரங்கேற்றம் செய்ததும், நீதிநெறி விளக்கம் பாட ஏவியதுமே' எனின் பிறர் செய்த தமிழ்ப் பணியைச் சொல்லவும் வேண்டுமோ? தென்பாண்டிப் பாஞ்சைப் பதியிலே ஆட்சி நடாத்திய 49 வழிமுறைக் 'கெட்டி பொம்மு' ஆட்சியில் கேட்கப்படும் ஒரே ஒரு தமிழ்ப்புலவர் வீரபாண்டியப் புலவர் என்பவரே! ஆனால் அளவிலாப் பழியை வாரிக் கட்டிக் கொண்டுள்ள எட்டையபுரம் குறுநில அரசு, தமிழுக்குச் செய்துள்ள பணிகள் வரலாற்றுப் படைப்பாளிகளால் - தீரவெறுத்து ஒதுக்க முனைந்தாலும் - ஒதுக்கிவிட முடியாத அவ்வளவு விரிவு மிக்கது! இத்தகைய சூழலில் சேதுவேந்தர்கள் செய்த செந்தமிழ்ப் பணி [1]தனி நூலாகித் தழைத்துள்ளதை நாடே நன்கு அறியும். அதனை விரித்தல் வேண்டுவது இல்லையாம்!*

1. சேது நாடும் தமிழும்.

# 3. செந்தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும்

சேதுபதிகளுள் குறிப்பிடத்தக்க ஒருவர் **முத்துராமலிங்க சேதுபதி**; அவர் தமையனார் **பொன்னுச்சாமித் தேவர் தம்பி** அரசராகவும், தமையனார் அமைச்சராகவும் இருந்து சேதுநாட்டு ஆட்சியும் செந்தமிழ் ஆட்சியும் சிறப்புறச் செய்தனர்.

"பொன்னுச்சாமித் தேவரும் அவர் இளவலும் கல்வி அறிவுகளிலும் அரசியல் துறைகளிலும் தக்க பயிற்சியை இளமை முதலே பெற்று வந்தவர். ஆதலால் அவ்விருவருமே பிற்காலத்தில் அத்துறைகளில் மேம்பட்டு விளங்கலாயினர். தமிழ்ப் புலமையானது பரம்பரைச் செல்வமாக இவர்கட்கு வாய்த் திருந்தது. திருக்குறள், இராமாயண பாரதங்கள், சில்லறைப் பிரபந்தங்கள் முதலியவற்றில் வேண்டிய பயிற்சி இவர்கட்கு இளமை முதலே உண்டு. கவிபாடுந் திறமையும் புலவர்களின் கூட்டுறவால் தக்கபடி இவர்கள்பால் அமைந்திருந்தது. கம்பராமாயணத்தில் அபிமானமும் ஆராய்ச்சியும் தேவர்க்கு மிகுதியாம். அப்பெருங் காவியம் பற்றிய பிரசங்கங்கள் அவர் திருமுன்பு அடிக்கடி நடந்து வந்தன. தமிழ்நாட்டின் பலதிசை களில் இருந்தும் வந்து பரிசுகளும் வரிசைகளும் பெற்றுப் புலவர்கள் செல்வதை இராமநாதபுரம் நாளும் கண்டு கொண்டிருந்தது. அவருள் சொல்லணி பொருளணிகள் அமைந்த கவிகள் பாடி கௌரவம் பெறுபவர் பலர். அட்டாவதானி, சதாவதானி என்ற சிறப்புப் பெயர் தாங்கித் தங்கள் அவதானத் திறமைகளைக் காட்டிச் சிறப்படைபவர் சிலர். பிரபந்தங்கள் பாடிப் பெருமை பெறுவோர் பலர். அரிய உபந்நியாசங்கள் புரிந்து மதிக்கப் பெற்றவர் சிலர்.

"தேவரது அவையானது, ஆத்தானப்புலவர் குழுவால் எப்போதும் பொலிந்து விளங்கும். அப்புலவரெல்லாம் மேற்கூறிய துறைகளில் சிறந்திருந்ததோடு வாதங்கள் புரிவதிலும் வல்லவராயிருந்தனர். வடமொழிவாணர் சிலரும் அச்சபையை

அலங்கரித்து வந்தனர். இவர்கள் யாவரும் தேவரவர்களின் குறிப்பறிந்து சமயோசிதமாக நடந்து கொள்ளவல்லவர்''

(செந்தமிழ் வளர்த்த தேவர்கள் 19-20)

சேதுபதி அமைச்சர் பொன்னுச்சாமித் தேவரின் அவைச் சிறப்பு இஃது என்றால், அவர்தம் அரண்மனை கவிமணங் கமழ்ந்தது; பாவலருள் பாவலராக அவர் விளங்கினார். அவர் பாடிய தனிப்பாடல்கள் சுவைமிக்கன; வினா விடைப் பாடல் களும் பல பாடினார். அவருக்குக் கையேடு படிக்க இருந்த ஒருவர் இராமலிங்கம் என்பார். அவர் ஒரு நாள் இரவு எட்டுமணிக்கே தம் வீட்டுக்குப் போய்விட்டார். தேவருக்குப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து இராமலிங்கத்தைத் தேடினார். அவர் வீட்டுக்குப் போய் விட்ட செய்தியை அறிந்தார்.

''எட்டு மணியோ இலைநீ எனையதற்குள்
விட்டுப் பிரிந்த விதமென்னோ - இட்டமனை
மாலா மயலா மடியா மமதையா
சீலா இராமலிங்கம் செப்பு''

என்று ஒரு சீட்டுக்கவி எழுதி விடுத்தார்! சுவைமிக்க அவர்தம் கவித்திறத்திற்கு இஃதொரு சான்று.

தமிழ்நூல் வெளியீட்டுக்குத் தேவர் செய்த உதவிகள் பலவாகும். தில்லையம்பூர் சந்திர சேகர கவிராயரைக் கொண்டு தனிப்பாடல் திரட்டு வெளியிட்டார். திருக்குறள் பரிமேலழ கருரை, திருக்கோவையாருரை, சேதுபுராணம் முதலிய இலக்கியங்களும், இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தருக்க சங்கிரகம் முதலிய இலக்கண நூல்களும் ஆறுமுக நாவலரைக் கொண்டு வெளிப்படுத்தினார். இவர்தம் இசைத்தமிழ்ப்புலமை ''பொன்னுச்சாமித் தேவரவர்கள் பாடிய ஸ்வரகீர்த்தனை'' என்று 'ரசிகரஞ்சனம்' என்னும் இசை நூலில் வரும் பகுதியால் விளங்குகிறது. இவர் தம் மருத்துவத்திறமும் அதனைப் பரப்பும் நோக்கமும், தன் அரண்மனை எழுத்தர் **முத்துக்கருப்பபிள்ளையைக்** கொண்டு வெளியிட்ட வைத்திய சார சங்கிரகம் என்னும் நூலால் விளங்கும். பொன்னுச்சாமித் தேவர் தமிழ் வளர்க்கும் திறனை ஆறுமுக நாவலர், தம் திருக்கோவையார்ப் பதிப்பின் நிறைவின்கண், முற்காலத்திலே பாண்டியர்களைப் போல இக்காலத்திலே இப்பிரபு அவர்கள் தமிழை வளர்ப்பார்கள் என்று உறுதியாகக் கருதியிருக்கின்றேன்

என்று எழுதியதைத் தம் வாழ்விலே மெய்ப்பித்தவர் பொன்னுச்சாமித் தேவர். ‘தந்தையினும் பதின்மடங்கு தனயர்’ என்பதுபோல் அப்பாண்டியர் கண்ட மூன்று சங்கங்களின் மேல் நான்காம் சங்கத்தைக் கண்ட நன்மகனார் பாண்டித் துரையைத் தந்த பெருமகனார் இப்பொன்னுச்சாமித் தேவரே என்பது நாவலர் வாக்கை மேலும் மெய்ப்பிப்பதாம்.

பாண்டித்துரை 1867 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21ஆம் நாள் பிறந்தார். அவருக்கு மூன்றாம் அகவை நடக்கும் போதே தந்தையை இழந்தார். முத்துராமலிங்க சேதுபதிக்குப் பாற்கரன் (பாஸ்கரன்) என்னும் நன்மகனார் 1868 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 3 ஆம் நாள் பிறந்தார். அவருக்கு ஐந்தாம் அகவை நடக்கும் போதே தந்தையை இழந்தார்! தமிழைக் காக்கப் பிறந்த தவ மக்கள், தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள இயற்கைத் திருவிளையாடல் நடாத்தியது! பொன்னுச்சாமித்தேவர், முத்துராமலிங்க சேதுபதி என்னும் உடன்பிறந்து இணைபிரியாப் பேராளர்கள் போலவே, பாண்டித்துரை, பாற்கரர் ஆகிய இரு வரும் இணைபிரியா உடன் பிறப்பாய் இலங்கினர்.

பாண்டித்துரை, அழகர்ராசு என்னும் புலவரிடம் இளமை தொட்டுத் தமிழ் பயின்றார். வழக்கறிஞர் வேங்கடேசுவரசாத்திரி என்பாரிடம் ஆங்கிலம் பயின்றார். இராமநாத புரத்தில் உள்ள சுவார்ட்சு உயர்பள்ளியில் சேர்ந்து திறமாகப் பயின்றார். பின்னர்ச் சதாவதானம் முத்துசாமி ஐயங்காரிடமும் மதுரை இராமசாமிப் பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையிடமும் தமிழிலக்கிய இலக்கண நூல்களைப் பயின்றார். திருவாவடு துறைத் திருமடம் சார்ந்த பழனிக்குமாரத் தம்பிரானிடம் சைவ சித்தாந்தப் புலமை பெற்றார்.

பாற்கரர் சென்னைப் பெருநகரில் ஆங்கிலக் கல்வியில் தேர்ந்ததுடன், தமிழிலும் தனித் தேர்ச்சி பெற்று இலங்கினார். இப்பெருமக்கள் பேரவை, முந்தையோர் அவையேபோல் சிறப்புற விளங்கிற்று. “குலவித்தை கல்லாமல் பாகம் படும்” என்பது மெய்யாயிற்று.

பாண்டித்துரையின் அவைப் புலவர்களாக விளங்கியவர் களுள் **திரு. நாராயண ஐயங்கார், சாமி ஐயங்கார், சுந்தரரேசுவர ஐயர், அரங்கசாமி ஐயங்கார், சிவகாமி யாண்டார், மு. இராகவ ஐயங்கார், பூச்சி சீனிவாச ஐயங்கார்** என்பார் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

*'திருக்குறள் பரிமேலழகர் உரையுடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வோரதிகாரமாக இவர்களால் (பாண்டித்துரையால்) உபந்நியாசம் செய்யப்பட்டு வந்தது, தொடர்ந்து நடந்து வந்த இவ்வரிய பொருளுரை கேட்பவர்க் கெல்லாம் நல்விருந்தா யிருந்தது. இவ்வாறே கம்பராமாயணம் பெரிய புராணம் போன்ற பேரிலக்கியங்களில் ஒன்றேனும், கந்த புராணம், காஞ்சிப் புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற புராணங்களில் ஒன்றேனும் வேறு சில்லறைப் பிரபந்தமேனும் படிக்கப் பெற்றும் பொருள் ஆராயப் பெற்றும் நாளும் தவறாது தேவரவர்களின் திருமுன்பு நடந்தேறுவது வழக்கம். இஃதன்றி ஈற்றெழுத்துக் கவிகள் கூறுவதும், தம்பாலுள்ள புலவருள் ஒருவரைக் கொண்டு பிரசங்கம் புரிவிப்பதும், பாடற்பொருள் கூறச் செய்வதும் தேவரவையில் அடிக்கடி நடைபெற்று வந்தன. இவையாவும் பாடமான கவிகள் மறவாதிருத்தற்கும் புலமை பெறுதற்கும் முன்னோர் கையாண்ட முறைகளே'*

*(செந்தமிழ் வளர்த்த தேவர்கள் 76 - 77)*

பொன்னுச்சாமித் தேவர் தமிழ் நூற்பதிப்புக்கு உதவியது போலவே பாண்டித்துரையும் உதவினார். பெரும் பேராசிரியர் தென்மொழிக் கலைஞர் முனைவர் உ.வே. சாமிநாதையர், புறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை ஆகியவற்றைப் பதிப்பிப்பதற்குப் பொருளுதவி செய்தார். அப்பொருளுதவியும் கேட்டுத் தந்ததோ எனின் அன்று; கொள்ளெனத்தாமே விரும்பித் தந்த கொடை:

*"இனிமேல் எந்த நூலை அச்சிடப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.*

*"பலநூல்கள் இருக்கின்றன, மணிமேகலையை அச்சிடலா மென்று நினைத்தேன். ஆனால், இன்னும் அதிலுள்ள சில விசயங்கள் தெளிவுபடவில்லை. புறத்திரட்டென்ற தொகை நூல் ஒன்று இருக்கிறது. அதில் இப்போது வழக்கில் இல்லாத பலநூற் செய்யுட்கள் உள்ளன, புறநானூற்றைப் பதிப்பித்த போது புறத்துறைகளின் இலக்கணங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள எண்ணினேன். அந்நூலிற்கண்ட துறைகளுக்கு விளக்கம் தேடுகையில் புறப்பொருள் வெண்பாமாலை மிகவும் உபயோக மாயிற்று. அதனை நன்கு ஆராய்ந்தேன். அதற்குப் பழைய உரையொன்று என்பால் இருக்கிறது. மூலம் மாத்திரம் சரவணப் பெருமாளையரால் முன்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இப்போது*

உரையுடன் வெளியிடலாமென்று எண்ணுகிறேன் என்றேன் நான். அவர் இராம நாதபுரம் சென்றவுடன் எனக்கு ஒரு செய்யுட் கடிதமும் ஐந்நூறு ரூபாய்க்கு ஓர் உண்டியலும் 17-12-1894 அன்று அனுப்பினார்''

(என்சரித்திரம் 1000 1001)

மணிமேகலைப் பதிப்புக்குப் பாண்டித்துரையார் செய்த உதவியை அதன் முன்னுரையிலே குறிப்பிடுகிறார் உ.வே. சா.

''மணிமேகலையைக் கவலையின்றிப் பதிப்பித்து வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த பாலவனத்தம் சமீன்தாரவர்களாகிய இராமநாதபுரம் ஸ்ரீ பொ. பாண்டித்துரைத் தேவரவர்களின் தண்ணளியும் பெருந்தகைமையும் ஒருபொழுதும் மறக்கற் பாலனவல்ல, மிகவும் பாராட்டற் பாலன. இதைப் போன்ற பெரிய காரியங்களைத் திருத்தமாகச் செய்து நிறைவேற்றியவர்களின் வழித் தோன்றலாய் மிக்க பாண்டித்திய மடைந்து, நூலாராய்ச்சியே இன்பத்துள் இன்பம் எனக் கொண்டொழுகும் அப்பிரபு அவர்களுக்குப் பழைய நூல்களையும் அவற்றின் உரைகளையும் பதிப்பித்து வெளிப்படச் செய்து அமிழ்தினுமினிய தமிழைப் பரிபாலித்தல் இயல்பாயினும் படிப்பாரும் கேட்பாரும் இன்றி மூலையிலே மறைந்து கிடக்கும் அரிய பெரிய நூல்களைத் தேடித் தொகுத்துப் படித்துக் கொண்டு அநாதரவுற் றிருப்போர்க்கு அஃது அரிதாகத் தோன்றும் என்பது திண்ணம்''

இன்னும், மதுரை இராமசாமிப் பிள்ளையைக் கொண்டு **தேவாரத்தலமுறைப் பதிப்பை** முதன் முதல் வெளியிடத் தூண்டி உதவி புரிந்தார் பாண்டித்துறை. **சிவஞானசுவாமிகள் பிரபந்தத் திரட்டு** வெளிவருவதற்கும் அவர்க்குப் பொருளுதவி புரிந்தார். சபாபதிநாவலரைக் கொண்டு சிவசமயவாதவுரை மறுப்பு முதலிய தருக்க நூல்கள் வெளிவரச் செய்தார். சுன்னாகம் **அ. குமாரசாமிப்புலவர்** பதிப்பித்த நூல்கள் சிலவற்றுக்கும் உதவினார்.

கற்பாரும் கற்பிப்பாரும் இன்றி, அதன் வளர்ச்சியும் வாழ்வும் பற்றிக் கருதாரும், புறக்கணிப்பாரும் மல்கித் தமிழ், தன் உயிர்க்குப் போராடிக் கொண்டிருந்த நாளிலே, 'வெம்பாலை யிடைப் பட்ட தண் சோலை' போல முகவை பெரிதும் போற்றிப் பேணிக் காத்து வந்தது.

"மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே"

*என்னும் தனிப்பாடல் சேதுபதிகள் பணியைச் செவ்விதில் தெரிவிக்கும்.*

*சேதுபதிகள் வழிவழியாகச் செய்து வரும் வண்டமிழ்த் தொண்டின் முதிர்வே, மதுரையில்* **நான்காம் தமிழ்ச்சங்கமாக** *முகிழ்த்தது; அம் முகிழ்ப்புப்பேறு, பொன் பாண்டித் துரையார் வழியே நிகழ்ந்தது. முகவையில் நிகழ்ந்து வந்த தமிழ்த் தொண்டை, மதுரைக்குக் கொணர்ந்தவரும், அரண்மனைக்குள் நிகழ்ந்த ஆய்வை அரங்கத்துக்குக் கொணர்ந்தவரும், அதனைத் தமிழ் கூறும் நல்லுலகம் அளாவிய பொருளாக விரித்தவரும், கால நிலைகளுக்கு ஏற்பப் புது நெறியில் புகழுற வளர்த்தவரும் பாண்டித் துரையே!*

# 4. நான்காம் தமிழ்ச் சங்கத் தோற்றம்

*பாண்டித்துரை மதுரைக்கு வந்து சிலகாலம் தங்கினார்; தங்கிய அவரைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய மதுரை மக்கள் சிலர் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தனர். அது தொடர்பாகப் பார்த்தற்குத்* ***திருக்குறளும், கம்ப ராமாயணமும்*** *விரும்பினார் தேவர். பார்த்துத் திருப்பித் தருமளவில் எவரிடமும் அந்நூல்களை வாங்கிப் பயன்படுத்த நேர்ந்தது பாண்டித்துரையார்க்கு அந்நூல்களைப் பணந்தந்து வாங்குவது ஒருபொருட்டில்லை! ஆனால் 'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை'யில் தமிழ் இருக்கும் நிலை வெட்ட வெளியாயிற்று. அந்நிலை பாண்டித்துரையார் உள்ளத்தை வெதுப்பிற்று! "தமிழுக்குப் பெருமை சேர்க்கும் சீர்மையதும், தமிழ்மறையாய் அமைந்ததுமாகிய திருக்குறள் கிடைக்க வில்லை! தென்னுண்தேனின் செஞ்சொற் கவியாம் கம்பராமாயணமும் கிடைக்கவில்லை! மற்றைய நூல்கள் தாமோ கிடைக்கும்? மதுரையார் நிலை என்னே! என்னே!" என ஏங்கினார். அவ்வேக்கம் ஆக்கப் பணிக்கு ஏவியது. எந்தத் துலங்குதலுக்கும் ஒரு தூண்டுதல் வேண்டுமே!*

*1901 ஆம் ஆண்டு மேமாதம் 21, 22, 23 ஆம் நாள்களில் சென்னை மாநில அரசியல் மாநாடு மதுரை மாநகரில் கூடியது. அதன் வரவேற்புக்குழுத் தலைவராகப் பாண்டித்துரை இருந்தார். மூன்றுநாள் நிகழ்ச்சிகளும் முறையே நிறைவேறிய பின்னர், அப்பேரவையில் பாண்டித்துரையார் மதுரையின் பழஞ்சிறப்பையும், அதன் வளர்ச்சி குன்றிய அக்கால நிலை யையும் எடுத்துரைத்தார். மதுரையில் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கத் தாம் கருதியிருக்கும் கருத்தை வெளியிட்டார். மாநாடு நிறைவுற்ற மறுநாள் சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் நிகழப் போகும் தமிழ்ச்சங்க ஆய்வுப் பேரவைக்கு அரசியல் பெருமக்களும், நகரப் பெருமக்களும் வந்திருந்து சிறப்புச் செய்யவும் கருத்துரை வழங்கவும் வேண்டிக் கொண்டார். அதன் படியே பேரவை கூடியது. அவைத் தலைமையேற்ற பாண்டித் துரையார் தாம் கொண்டிருக்கும் கருத்துகளையும் ஆக்கச்*

*செயல் திட்டங்களையும் அவையோர்க்கு விரித்துரைத்தார். ஆர்வத்தால் வந்திருந்த புலவர்களும் பெருமக்களும் அக்கருத்துகளை ஏற்றுக் கொண்டு மகிழ்ந்தனர். தமிழ்ச்சங்கம் தொடங்கப் போகும் நன்னாளை எதிர்பார்த்திருந்தனர்; தாங்கள், தங்களால் இயன்ற துணைபுரியவும் உறுதி மொழிந்தனர்.*

*எண்ணியதை எண்ணியவாறு திண்ணிதாக நிறைவேற்ற வல்ல பாண்டித்துரை, திட்டமிட்டுச் செயலாற்றினார். தமிழகத்துச் சிறந்த புலவர்களுக்கும் தமிழார்வமிக்க குறுநில மன்னர்களுக்கும் அழைப்பு விடுத்தார். தம் அருமை இளவலும் சேதுவேந்தருமாகிய பாற்கரரைக் கொண்டு குறுநில மன்னர்களுக்கும் பெருநிலக்கிழார்களுக்கும் அழைப்பு அனுப்பினார். தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்க வேண்டும் என்று முடிவெடுத்த நாளில் இருந்து சரியாக நூற்றுப்பன்னிரண்டாவது நாளில் நான்காம் தமிழ்ச் சங்கம் கூட்டப் பெற்றது.*

*தமிழ்ச் சங்கம் தொடங்குவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே அதாவது 1893இல் பாற்கரர் தம் வாழ்வுக் குறிக்கோளாகத் திட்டமிட்டுத் தம் நாட்குறிப்பில் வரைந்த வற்றுள் ஒன்று 'தமிழ்ச் சங்கம் அமைக்க வேண்டும்'. என்பது அது நிறைவேறும் நற்பொழுது வரும்போது அவர் தம் உவகைக்கு அளவும் உண்டோ? அதனால், நான்காம் தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெறும் நல்விழாவுக்குத் தம் பரிவாரங்கள் புடைசூழ வந்திருந்தார். சேதுநாட்டு அவைப் புலவர்களும் பாண்டித்துரைத் தேவர்தம் அவைப் புலவர்களும் குழுமினர். பெரும் புலவர்களாகிய* ***உ.வே. சாமிநாதையர், வை. மு. சடகோபராமாநுசாச்சாரியார், இரா. இராகவ ஐயங்கார், திருமயிலை சண்முகம்பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்*** *முதலியவர்கள் பெருவிருப்புடன் விழாவுக்கு வந்திருந்தனர். பிலவ ஆண்டு ஆவணித் திங்கள் 13-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை சித்திரை மீன் கூடிய நன்னாளில் (14-9-1901) பகல் 1-30 மணிக்கு மேல் 2-45 மணிக்குள் தனுர் ஓரையில் சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் தமிழ்ச் சங்கம் நிறுவப் பெற்றது. அதே நாளில் அப்பள்ளியை அடுத்திருந்த தனிக் கட்டிடங்களில் சேதுபதிசெந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச்சாலை என்பனவும் தொடங்கப் பெற்றன. விழா, மூன்று நாள்கள் தொடர்ந்து நிகழ்ந்தது.புலவர்களும் புரவலர்களும் பேருரையாற்றினர். தமிழ் உணர்வு மதுரையில் கிளருமாறு நிகழ்ச்சிகள் சிறப்பொடு நிகழ்ந்தன.*

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைக்கு இலக்கிய இலக்கணப் புலமையில் சிறந்தோங்கிய பெரும்புலவர் திரு. நாராயண ஐயங்கார் தலைமையாசிரியராக அமர்த்தப் பெற்றார். நூலா ராய்ச்சிப் பகுதியின் தலைவராகச் சேதுபதிகளின் அவைப் புலவர் இரா. இராகவஐயங்கார் அமர்த்தப் பெற்றார். பாண்டியன் புத்தகசாலைக்குச் சேதுபதி வேந்தர்கள் தொகுத்து வைத்திருந்த நூல்களும், பொன்னுசாமித்தேவரும் பாண்டித் துரைத் தேவரும் தொகுத்து வைத்திருந்த நூல்களும் வழங்கப் பெற்றன. அன்றியும், நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அரிய பல ஏட்டுச் சுவடி களைத் தொகுக்கும் பணியும் தொடங்கியது.

தமிழ்ச்சங்கம், பொழுது போக்குக்காகவோ, பொருள் ஈட்டுதற்காகவோ, அரசியல் செல்வாக்குப் பெறுதற்காகவோ அமைக்கப் பெற்ற அமைப்பு அன்று; அரசின் பொருட் கொடையையோ, பல்கலைக் கழகங்களின் நல்குதலையோ எண்ணித் தொடங்கப் பட்டதும் அன்று. தங்கள் ஆளுகைக்கு உட்பட்டதும் தலைநகராக விளங்குவதும் ஆகிய முகவையம் பதியில் தோற்றுவிக்கப் பெற்றதும் அன்று. பண்டைநாளில் தமிழுக்கு இருந்த ஏற்றத்தையும் பின்னை நாளில் தமிழுக்கு ஏற்பட்ட தாழ்வையும் எண்ணி வருந்தி, அதனைப் பல்லாற்றானும் பண்டைநிலைக்கு உயர்த்துதல் வேண்டு மென்னும் பேரார்வப் பெருக்கால் மாநகர் மதுரையில் அமைக்கப் பெற்ற அமைப்பேயாகும். இத்தகைய சீர்மையில் அமைக்கப் பெற்ற சங்கத்திற்குச் செவ்விய நோக்கங்கள் வகுக்கப்பெற்றிருக்கும் என்பது வெளிப்படை. தொடக்க நாளிலேயே வகுக்கப் பெற்ற நோக்கங்கள் இவை:

1. தமிழ்க் கல்லூரி உண்டாக்குதல்
2. இறவாதுள்ள தமிழ் ஏடுகளையும் அச்சிட்ட நூல் களையும் தேடிப் பெற்றுப் பலருக்கும் பயன்படுமாறு தொகுத்து வைத்தல்.
3. வெளிவராத அரியநூல்களை ஆராய்ந்து அச்சிட்டுப் பரப்புதல்
4. வடமொழி ஆங்கிலம் முதலாய மொழிகளில் உள்ள அரியநூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தல்
5. தமிழ்க் கல்வி பற்றிய இதழ் வெளியிடுதல்

6. *தமிழில் தேர்வு நடத்தி அத்தேர்வில் உயர்நிலையில் தேறினவர்க்குப் பட்டமும் பரிசுகளும் வழங்குதல்.*

7. *தமிழ் அறிஞர்களைக் கொண்டு பேருரை யாற்றச் செய்தல்.*

8. *தமிழ்த் திறமிக்க புலவர் பெருமக்களை ஒருங்கு கூட்டித் தமிழாராய்தல்.*

9. *வேண்டத் தக்க புது நூல்களும் புத்துரைகளும் படைத்து அவற்றை அரங்கேற்றுதல்.*

*இவ்வொன்பான் நோக்கங்களையும் நிறைவேற்றத் தக்க அமைப்புகள் ஏழாக இலங்கின. அவற்றுள் 1) சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை 2) பாண்டியன் புத்தகசாலை 3) நூலா ராய்ச்சிச்சாலை என்னும் மூன்றனையும் முன்னர்க் கண்டோம். மற்றவை 4) கல்விக் கழகம் 5) தமிழ்ச்சங்க முத்திராசாலை என்னும் அச்சகம் 6) செந்தமிழ் என்னும் திங்களிதழ் 7) தமிழ்த் தேர்வு என்பனவாகும்,*

*மாணவர்க்கு உண்டி உடை உறையுள் முதலியன வழங்கிச் செந்தமிழ்க் கல்வி பயிற்றும் கல்லூரியாகச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை விளங்கியது.*

*பல்லோர்க்கும் பயன்படும் பெரு நூல்நிலையமாகப் பாண்டியன் புத்தக சாலை அமைந்தது.*

*நூல்களும் இதழ்களும் வெளியிடுதற்கு வாய்ப்பாகத் தமிழ்ச்சங்க முத்திராசாலை திகழ்ந்தது.*

*தமிழ் நாட்டுத் தகவுடைய அறிஞர்களை யெல்லாம் வேண்டிச் சங்கத்திற்குக் கல்வியான் உதவுமாறு 'வித்துவக் கழக' மெனும் கல்விக்கழகம் பொலிந்தது. தமிழ் வளர்ச்சிக்கு வேண்டு பவற்றை ஆராயும் பொருட்டு இக்கழகத்தார் ஆண்டுதோறும் கூடுவர். அவருள் பெரும்பாலார் ஆய்ந்து முடிவு செய்தவற்றைச் சங்கம் முனைந்து செயற்படுத்தியது.*

*ஆங்கிலக் கல்லூரி மாணவர் தமிழில் தேர்ச்சியுறுதற் பொருட்டு, அவர்கள் கற்கும் தமிழ்ப் பாடங்களிலே ஆண்டு தோறும் தேர்வு நடாத்திப் பரிசும் பாராட்டும் வழங்குவதைத் தமிழ்த் தேர்வுக் குழு செய்தது.*

*அச்சிடப் பெறாத செந்தமிழ்ச் சுவடிகளைத் தேடித் தொகுத்தலும், அவற்றைச் செவ்வையாகப் படியெடுத்தலும்*

ஒப்பிட்டு ஆராய்ந்து பதிப்பித்தலும் ஆகிய பணிகள் தொன்னூலாராய்ச்சிப் பிரிவினரால் மேற்கொள்ளப் பெற்றன. இப்பணிக்காகத் தமிழறிஞர் பலர் இந்நாட்டுச் சிற்றூர் பேரூர்களுக்கெல்லாம் சுற்றியலைந்து சுவடி தொகுத்தலில் ஊன்றினர். **சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர், சே. ரா. அருணாசலக்கவிராயர், சே. ரா. கந்தசாமிக் கவிராயர்** என்பார் நூலாய்விலும் நூற்பதிப்பிலும் பெரும் பணி செய்தவர்கள் ஆவர்.

செந்தமிழ் என்னும் திங்களிதழ் சங்கம் தொடங்கிய போழ்தே தொடங்கிற்றில்லை. சங்கம் தனக்கென ஓர் அச்சகத்தைத் தோற்றுவித்த பின்னரே தொடங்க வாய்ப்பாக இருந்தது.

"தமிழின் செம்மையினையே உலகிற்கு நன்கு அறிவுறுத் தலானும், செந்தமிழ் வளர்ச்சியே செய்தலானும், செவ்விதாய தமிழானே நடத்தலானும், செந்தமிழ் நாட்டுத் தலைநகர்க் கண்ணே தோற்றமுடைத் தாகலானும் செந்தமிழ் எனப் பெயர் பெற்று விளங்கியது" என்பதைச் செந்தமிழ் முதலிதழ் முகவுரை குறிக்கின்றது. அது வெளிவந்தது சுபகிருது ஆண்டு கார்த்திகைத் திங்கள் ஆகும். இது, கி.பி. 1903 ஆம் ஆண்டு.

செந்தமிழில் வெளிப்படும் செய்திகள் இவை என்பதும் முதல் இதழிலேயே வரையறுக்கப் பெற்றுள:

"இது காறும் அச்சிடப்படாத செந்தமிழ் நூல்களும் தமிழ் நாட்டுப் புராதன சரிதங்களும், சாசனங்களும், வட மொழியினும் ஆங்கிலத்தினும் தமிழிற்கு வேண்டுவனவாகக் கருதப்படும் நூல் மொழிபெயர்ப்புகளும், தமிழின் அருமை பெருமை அடங்கிய விசயங்களும், தமிழாராய்ச்சியைப் பற்றியனவும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் இதன் வாயிலாக வெளிவரும்.

கல்விக்கழகம், கலாசாலைத் தமிழ்த் தேர்வுகள், நூல் வெளியீடு, செந்தமிழ் ஆகியவற்றைப் பற்றிய விரிவான செய்திகள் மேலே தனித்தனி விளக்கப்பெறும். இவண், தமிழ்ச் சங்கம் தோன்றிய நாண்ளில் மதுரை மக்கள் நிலை எவ்வாறு இருந்தது என்பதைக் காணபோம்.

மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றியதைக் கண்டு மகிழ்ந்து பேரார்வத்துடன் பணிசெய்ய முன்வந்த புலவர்கள் பலர். அவர்கள் **சோழவந்தான் அரசஞ் சண்முகனார், விளாச்சேரி சூரியநாராயண சாத்திரியார் என்னும் பரிதிமாற்கலைஞர், சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்,** சே.

*ரா. அருணாசலக் கவிராயர், சே. ரா. கந்தசாமிக்கவிராயர் முதலியோர். இன்னும் சில புலவர்கள் இச்சங்கம் தொடங்கு வதைப் பற்றி ஆர்வம் கொண்டிலர்; சிலர் பொறாமைவயப் பட்டும் இருந்தனர்; பொதுமக்கள், 'நல்ல பணியில் நம்பங்கும் வேண்டும்' என்னும் அக்கறை காட்டாமல் ஒதுங்கினர். இந்நிலையைத் தமிழ்ப் பற்றுடைய புலவர்கள் விரும்பவில்லை. அக்கறை காட்டாத அவர்களுக்கு நல்லறிவு கொளுத்தித் திருத்த விழைந்தனர். அவர்களுள் குறிப்பிடத் தக்க பெரு மகனார் தனித்தமிழ்க்கு வித்தூன்றிய சான்றோர் ஆகிய பரிதிமாற் கலைஞர் ஆவர்.*

*"தாய்மொழியாகிய தமிழினை மறந்து செல்வப் பொருளீட்டலிலேயே காலம் போக்கியுழலும் மதுரையாகிய தாம் பிறந்த நகர்க்கு இரங்கி ஆற்றாது பாடியது" என்னும் முன்னுரையுடன் 'மதுரைமாநகர்' என்னும் பாடல் அவர் இயற்றிய 'பாவலர் விருந்தில்' உள்ளது. அப்பாடல் இயற்ற நேர்ந்த நிலையையும் இயற்றிய நிலையையும் அவர்தம் இயற்றமிழ் மாணவர்* **நா. பலராமையர்** *குறிப்பிடுகிறார்:*

*'ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கம் ஸ்தாபிக்கப் பெருமுயற்சி செய்த காலத்தில் அவ்விசயத்தில் ஊக்கமின்றியிருந்த மதுரை மாநகரினரை ஊக்குதற் பொருட்டு வரைந்தது மதுரை மாநகராகும். ஆசிரியர் சித்தூரில் இருந்து ரெயில் பிரயாணஞ் செய்த சிரமத்தையும் பொருட்படுத்தாது தமது விடுதியிற் குழாயின்* (Water - Pipe) *கீழ் ஸ்நாநம் செய்து கொண்டே இம்மதுரைமாநகர் அகவலினை அடியேன் எழுதிவரச் சிறிதும் தங்கு தடையின்றிக் கூறிமுடித்தனர்.'*

*நூற்றுஎட்டு அடிகளைக் கொண்டது மதுரைமாநகர் அகவல்.*

மறையெலாம் புகழும் இறையனார் என்னும்
நறுந்தமிழ்ப் புலவர் சிறந்துவீற் றிருந்த
வளநக ராகிய மதுரையு நீகொலோ?
ஆல வாயில் அவிர்சடைக் கடவுளை
யேலவா தித்த இன்றமிழ்க் கீரன்
வந்தவ தரித்த மதுரையு நீகொலோ?
தமிழ்மண மிகுந்து கமழு நாடெலாம்

உள்ள பாவலர் உள்ளிநின் பெருமையைத்
தந்தம நூல்களை விந்தை அரங்கினில்
ஏற்றி நூற்பொருள் சாற்றல் வேண்டியும்
அரசர்பாற் பற்பல பரிசு கருதியும்
காடெலாம் கடந்து நாடொறும் போந்து
முதுதமிழ் கொழித்த மதுரையு நீகொலோ?"

*என்ன இன்னவாறு இடித்து வினவி,*

"புலத்தமிழ் தோற்ற போலி மதுராய்!
நலத்தெரி வில்லாய்! நாணிலை போலும்!
அன்னோ என்றன் மெய்ந்நடுங் குறுமால்!
அஞ்ஞான்றை உயர்வென்! இஞ்ஞான்றை இழிவென்!
மனைவிசொற் கேட்டுத் தனையீன் றெடுத்த
தாயினைப் பசியிற் றீய விடுக்கும்
பதகனை யொத்த மதுரைமா நகரே"

*எனப் பழித்துரைத்து,*

"நன்றி யறிவிலாய்! குன்றிய சிந்தையாய்!
குறையே நயமெனக் கொண்டு பிதற்றுவோய்!
உன்வயிற் பிறந்தேன் யானென உரைக்கவும்
வெள்கினேன் அந்தோ! வெள்கினேன் அந்தோ!
இன்னணம் வெள்குவோர் இன்னும் எத்துணைப்
பெயரோ? அறியேன் மயலூர் மதுராய்!"

*என நொந்துரைத்து,*

"அழிநிலை யடையா தெழுதி; துயிலுதல்
ஒழிதி; தமிழ்நிலை விழிகொடு காண்டி;
அவளிசைத் தேறல் செவிவாய்ப் பருகுதி;
நந்தலில் இன்பம் சிந்தையிற் பெறுதி"

*என்று வேண்டுகிறார்.*

*இதே பெருமகனார் எழுதிய தமிழ்க் கட்டுரைகளுள் ஒன்று* **'தமிழ்ப் புலவர் பொறாமை'** *என்பது, அதனை விரித்து எழுதி விளக்கமுறுத்தும் அவர், கட்டுரை இறுதியில், "பெரும் பான்மையாகத் தமிழ்ப் புலவர் பலர் மாட்டும் இப்பொறாமைத் தீக்குணம் நிகழ்தல் கண்டு மனம் புழுங்குவேம் இங்ஙனம்*

*எழுதினேம். செந்தமிழ்ப் புலவராவார் தமக்குட் பொறாமைப் படுதலின்றி மனமொத்த நட்பாளராய் வாழ்ந்து நந் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் புகழ்மிகத் தக்கவாறு ஒழுகுவாராக. நமது மதுரைப் புதுத்தமிழ்ச் சங்கங் கருதுவதும் இஃதேயாம் என்பது தேற்றம்'', என்று எழுதுவது கருதத் தக்கது.*

''அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்''

*என்றும்,*

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்''

*என்றும் வரும் குறள் நெறிகளை அறிந்த புலவர்களிடமுமா பொறாமை எழுந்தது எனத் திகைக்கிறோம்; புண்படுகிறோம்; இந் நற்பணியிலே தலைப்பட்டு நின்ற பாண்டித்துரையார்க்கு இத்தகைய புன்புலவர்கள் பொறாமையும் புறக்கணிப்பும் எத்தகைய துயரை ஊட்டியிருக்கும்? ஆனால், உலகியலும் உண்மையறிவும் மீக்கூர்ந்தவர் அவராகலின், போலிகளைப் பொருட்டாக எண்ணாமல் தம்பணியில் ஒன்றினார்.*

''பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுள்
பயனின் மூப்பின் பலசான் றீரே''

*என்று விளித்து,*

''நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே''

*என்று அறிவுரைத்த நரிவெரூஉத் தலையார் வாக்குப் பிறந்தது இந்தத் **தமிழ்மண்** என்பதை அறியாதவரோ **பாண்டித் துரையார்.***

# 5. சங்கப் பணித்திறம்

***பால்*** *நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து தமிழைக் காக்கப் பாண்டித்துரையார், சங்கம் தோற்றுவித்த காலையில், அவரைப் பாராட்டிச் சீராட்டினோர் பலர்; பாமாலை சூட்டினோர் பலர்; வாழ்த்துரைத்து வரிசை செய்தோர் பலர்; உவந்து பொருள் வழங்க முன் வந்தவர்களும் உளர்.*

*சேதுபதி வேந்தர் பாற்கரர், சங்கத் தொடக்க நாளில் பத்தாயிரம் வெண்பொன் வழங்கினார். சங்கம் என்றும் நன்னிலையில் நடைபெறுதற்குத் தக்கவகையில் நிலைத்த அறக்கட்டளையும் அளித்தார். பல்வேறு குறுநில வேந்தர்களும் நன்கொடையும், மாதத்தொகையும் வழங்கினர். இவ்வாறு புதிதாகத் தொடங்கிய நான்காம் தமிழ்ச் சங்கம் என்னும் குழந்தை, பொருள் என்னும் செல்வச் செவிலியால் குறைவிலாது வளர்தற்கு வேண்டும் வாய்ப்புகளை யெல்லாம் பாண்டித் துரையார் செய்தார். ஆதலால் அவர் விரும்பிய வண்ணம் நற்பயன் விரைவிலே நண்ணுவதாயிற்று.*

*சங்கம் தோன்றிய மூன்றாண்டுகளிலேயே முத்திராசாலை என்னும் அச்சகமும், செந்தமிழ்த் திங்களிதழும் தோன்றிப் பணிசெய்யத் தொடங்கிவிட்டன. ஆண்டுதோறும் அறிஞர்கள் குழுக் கூடி விழாவெடுத்தும் வேண்டும் முடிவுகள் செய்தும் ஆய்வு நடாத்தியும் நலம் செய்தது; தேர்வு நடாத்தும் திட்டமும் நடைமுறைக்கு வந்தது. உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய வேந்தன் காலத்தில் அழிந்த அத்தமிழ்ச் சங்கம், உக்கிர பாண்டியன் என்னும் இயற்பெயருடைய பாண்டித்துரையால் மீண்டும் உயிர்ப்பிக்கப் பெற்றது என்று சங்கத் தொடக்க நாளில் புகழ்ந்த புலவர் பெருமக்கள், தம் புகழுரை மெய்ம்மையாகி யதறிந்து மேலும் புகழ்ந்து போற்றினர். பிறந்த சங்கத்தை எடுத்து உயிர் கொடுத்துச் சிறிது ஒலித்திடச் செய்வர்; ஆனால் இறந்த சங்கத்தை எடுத்துத் திக்கெலாம் முழங்கச் செய்த பாண்டித்துரை" என்று பாராட்டுக் கூறியவர் தம்மைத் தாமே வியந்து பூரித்தார்! அத்தகைய புகழ்நிலையில் சங்கப் பணி*

சிறந்து நடந்தது. "சங்கம் செய்வதைத் தங்கம் செய்யாது" என்பதைத் தமிழ்ச் சங்கம் எவருக்கும் விளக்கிக் காட்டியது. சங்கச் செயன்முறைச் சீர்மையை அறிய விரும்புவார்க்கு ஒரே ஒரு சான்றாக **மூன்றாம் ஆண்டு நிகழ்ந்த வித்துவக் கூட்டம் என்னும் கல்விக் குழுக் கூட்டச் செய்தி** செந்தமிழில் உள்ளது உள்ளவாறே இந்நூலில் பின்னிணைப்பாகச் சேர்க்கப் பட்டுள்ளது. அதனைக்கண்டு சங்கப்பணிச் சிறப்பைக் கண்டுகொள்க.

மூன்றாம் ஆண்டு நிகழ்ந்த **வித்துவக்** கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும் புலவர்கள் பத்தொன்பதின்மர். கூட்டத்திற்கு வர இயலாமை தெரிவித்துச் சங்கப்பணிக்குத் தம் ஆர்வமுடைமையையும், ஒத்துழைப்பையும் கடித வழியாகவும் தொலைவரிச் செய்தி வழியாகவும் தெரிவித்த பெரும் புலவர்கள் பதினால்வர். இவர்கள் சென்னைமுதல் கன்னியீறான தமிழ்கூறு நல்லுலகப் பரப்பெல்லாம் தழுவியவர்கள் என்பதும், ஈழத்துப் புலவர்களும் இடம் பெற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடற் குரியன.

இக்கூட்டத்தில் ஆய்ந்து நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்கள் இருபத்திரண்டாகும். அவை, சங்க உறுப்பினர் சேர்க்கை விதி, உறுப்பினர் கட்டணம், ஆண்டு விழாவுக்கு வரும் புலவர்கள் போக்குவரவு செலவு, ஏடு படியெடுத்துத் தருதல், இதழ் வெளியீட்டுக்குக் கட்டுரை தேர்ந்து கொள்ளல், கட்டுரை வரைவார்க்குக் கைம்மாறு தருதல், தனித் தமிழ்த் தேர்வுத் திட்டம், அத்தேர்வுக்குரிய பாட நூல்கள், தேர்வு மையங்கள், தேர்வாளர்கள் இன்னவை பற்றியவாம்.

தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பும் சங்கங்களை இணைத்துக் கொள்ளும் விதிமுறைகளும் இக்கூட்டத்தில் அமைக்கப் பெற்றன. கொழும்பு அரசினர் கல்லூரித் தலைவர் திரு. **லீ** என்பார், 'தமிழை இலண்டன் பல்கலைக் கழகத் தேர்வுக்கு ஒரு மொழியாக எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்துள்ளதைப் பாராட்டி ஒரு நன்றியறிதல் தீர்மானமும் நிறைவேற்றினர்.

ஓர் அமைப்பு தேக்கமாகாமல் இயக்கமாவது எப்படி என்பதை இத்தீர்மானங்கள் இருபத்திரண்டும் தெள்ளிதில் விளக்குகின்றன. ஆனால் தீர்மானம் போடும் அளவில் கடமை தீர்ந்து விட்டதாக அமையும் அமைப்புகளும் உள்ளனவே! இவ்வமைப்பும் அத்தகைத்தோ? இதன் தீர்மானங்கள்

*எழுத்தளவில் அமைந்தனவா? செயலாக்கம் பெற்றுச் செந்தமிழ் நலம்பேணினவா? சங்கத்தின் அமைப்புநாள் தொடங்கி அதன் செயல் முறைகளை யெல்லாம் ஆர்வ மீதூர உன்னிப்பாக நோக்கி வந்த ஒரு பெருமகனார் உரைக்கிறார் :*

*“சென்ற மைதல்மஸ் விடுமுறை நாட்களில் மதுரை சென்று தமிழ்ச்சங்கத்தின் அங்கங்களாகவுள்ள சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, செந்தமிழ் முத்திராசாலை முதலியவற்றைப் பார்த்தேன். அவைகள் சென்ற ஆண்டுகளிலிருந்த நிலைமையைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு வளர்ச்சியுற்று விளங்குகின்றன.*

*“சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் கற்கும் மாணாக் கர்கள் நன்கு பாதுகாக்கப்பெற்றுத் தத்தமக்குரிய பாடங்களை மிகச் செவ்வையாகக் கற்றுச் சிந்தித்துத் தேர்ந்து, கேட்ட வினாக்களுக்கு யாதொரு தடையுமின்றி இனிமையாக விடை பகர்தலும், செய்யுட்களைச் சந்தத்தோடு ஒப்பித்தலும், சங்கீதப் பயிற்சி, வடமொழிப் பயிற்சி, ஆங்கிலப் பயிற்சி, சொல்வன்மை, ஊக்கம், தெய்வபக்தி, வணக்கம் முதலிய நல்லொழுக்கங்கள் உடைமையும் மிகுந்த மகிழ்ச்சியை விளைவித்தன. இவர்கள் படிக்கத் தொடங்கியபொழுது இவர்களுடைய நிலைமையைப் பார்த்திருந்த எனக்கு, இவர்கள் அதிசீக்கிரத்தில் இவ்வளவு மேம்பாடடைந்து விளங்குவது பெரியதோர் வியப்பைத் தந்து உபாத்தியாயர்களுடைய உழைப்பை நன்கு புலப்படுத்தியது.*

*“பாண்டியன் புத்தக சாலையில் பெரும்பாலும் அகப்படா தனவாகிய அரிய பெரிய கையெழுத்துத் தமிழ்ப் புத்தகங்கள் பல சேகரஞ்செய்து மிகச் செவ்வையாக வைக்கப் பெற்றிருத்தலும், அவை நன்றாகப் பாதுகாக்கப் பெற்று வருதலும், சிறந்த வித்துவான்களால் முறையே பரிசோதித்துப் பதிப்பிக்கப்பெற்று வருதலும் மிகுந்த ஆனந்தத்தை விளைவிக்கின்றன.*

*“இதுவரையில் ஆராய்ந்து பதிப்பிக்கப் பெறாத சில புத்தகங்கள் தக்க குறிப்புரைகளோடு பதிப்பிக்கப் பெற்று வெளிவந்திருத்தலும், இதுவரையில் வெளிப்படாத அரிய பெரிய விசயங்கள் பல வெளிவந்திருத்தலும், செந்தமிழ் என்னும் பத்திரிகையைப் பெற்றுவரும் அன்பர்களுக்கு நன்கு புலப்படும்.”*

*“எத்தனையோ பலர் சேர்ந்து செய்ய வேண்டிய இப்பெருங்காரியத்தை ஏகதேசத்தில் வகித்துச் செலவு செய்து பரிபாலித்து வருபவர்களும் பாலவனத்தம் சமீந்தாரும்* **தமிழ்ச்சங்கத்து** *அக்கிராசனாதிபதியுமாகிய இராமநாதபுரம்*

*மகா-ள-ள-ஸ்ரீ பாண்டித்துரை ஸாமித் தேவரவர்களுடைய பெருந்தகைமை பாராட்டற் பாலது; தம்முடைய சமீன் சம்பந்தமாகவுள்ள காரியங்கள் எவ்வளவோ இருந்தும் அவற்றைச் சிறிதும் மதியாமல் தமிழ்ச்சங்கத்தின் சம்பந்தமான காரியங்களையே அவர்கள் எப்பொழுதும் கவனித்து வருவதாகவும் தெரிகிறது.*

*"கவர்ண்மெண்டாரும், இத்தமிழ் நாட்டைச் சார்ந்த அரசர்களும், பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும், மற்றவர்களும் கவனித்துச் சங்கத்தின் சம்பந்தமான பொருட்செலவு முதலியவற்றில் மகா-ள-ள-ஸ்ரீ பாண்டித்துரைஸாமித் தேவரவர்களுக்கு அதிகக் கவலை வையாமற் சங்கத்தின் அபிவிருத்தியைக் கருதிப் பொருளுதவி செய்வார்களாயின், இக்காலத்தில் நிரம்ப உபகாரமாக இருக்கும்."*

*"இவ்வரிய காரியத்தை மேற்கொண்டு இடைவிடாமல் உழைத்தவரும் அக்கிராசனாதிபதி அவர்களுடைய மனத்திற்கு யாதொரு கவலையும் உண்டாககாவண்ணம் பாதுகாத் தருளும்படி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரரேசுவரருடைய திருவடிகளைச் சிந்திக்கின்றேன்."*

*சென்னை* *இங்ஙனம்,*

*10-10-1905* **வே. சாமிநாதையன்**

Tamil Pandit,
Presidency College,
Madras.

*எழுதியவர் தகுதியும், எழுதப் பெற்ற செய்திகளின் தகுதியும், அந்நாளைத் தமிழ்ச்சங்கச் செயல் மாண்பினையும், வளர்ச்சித் திறங்களையும் செவ்வையின் விளக்குகின்றன. ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட செய்தியை இத்தகைய அகச் சான்றுகள் தாமே நிறுவிக் காட்ட வல்லனவாம்.*

# 6. ஆய்வும் அரங்கேற்றமும்

*தமிழ்ச்சங்கச் சீர்த்தி, மாணவர்களுக்குக் கற்பித்தல் புலமையாளராக்கல் என்னும் அளவில் கட்டுண்டோ நின்றது? சங்கத்தின் துவக்க நாளில் வகுத்துக் கொண்ட நோக்கங்களையும் நிறைவேற்றுதல் அன்றோ கடப்பாடு? சங்கம், நூல்களை ஆய்ந்ததா? ஆய்ந்த நூல்களை அரங்கேற்றியதா? அருந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து உதவியதா? இவ்வாறாய எண்ணங் களெல்லாம் எழுதல் இயற்கை. இவற்றையும் தக்க சான்றொடு காண்போம்.*

*தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா 24-5-1906 முதல் 27-5-1906 வரை நான்கு நாள்கள் நிகழ்ந்தன. தென்மொழிக் கலைஞர் பெரும்பேராசிரியர் முனைவர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் விழாத்தலைமையேற்றார்கள். சங்கத்தின் தலைவர் திரு. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் அவைத்தலைவர் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். சங்கத்தேர்வுகளில் சிறந்த தேர்ச்சி காட்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. அவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன: நூல்கள் பல அரங்கேற்றப் பெற்றன; கட்டுரைகள் படிக்கப் பெற்றன.*

*இராவ்பகதூர் நாகோசிராயர் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய* **'இருபத்திரண்டு சுருதிகள்'** *என்னும் நூலைத் திரு. சந்தரமையர் தமிழாக்கம் செய்து இருபத்திரண்டு சுருதிகளும் இவை இவை எனவிளக்கிக் கூறினார். தமிழிசை குறித்து நெடுங்காலமாகத் தாம் ஆய்ந்த செய்திகளைத் 'தமிழிசை' என்னும் தலைப்பில் திரு. இராதாகிருட்டிணையர் சொற்பொழி வாற்றினார். முன்னவர் உரைத்த இருபத்திரண்டு சுருதிகளும் தமிழில் உண்மையை விளக்கிக்காட்டி அவையோரை வியப்பில் ஆழ்த்தினார்.*

*திரு,* **P.S. சுப்பிரமணிய ஐயரவர்கள்** *'ஊக்கமுடைமை' என்னும் பொருள் பற்றி ஆய்ந்து எழுதிய அரிய கட்டுரையைப் படித்து மகிழ்வித்தார்*

சங்கத் தலைவர் பாண்டித்துரைத் தேவர் அவர்களைப் பற்றிப் பின்னத்தூர் திரு. **அ. நாராயணசாமி ஐயரவர்கள்** இயற்றிக் கொணர்ந்த 'மருதப்பாட்டு' என்னும் நூல் அரங்கேற்ற மாயது. அதற்கு, **வேம்பத்தூர் திரு. பிச்சுவையர்** அவர்களும் **திரு. மு. ரா. அருணாசலக் கவிராயர்** அவர்களும் சிறப்புப் பாயிரக் கவிகள் இயற்றிப் பாடினர்.

சித்தாந்த சாத்திரங்கள் பலவற்றையும் ஆய்ந்து எழுதிய **'சித்தாந்த ஞானரத்தினாவளி'** என்னும் நூல் அதன் ஆசிரியர் **திரு. பால்வண்ண முதலியார்** அவர்களால் அரங்கேற்றப் பெற்றது. அதற்கத் **திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயர்** சிறப்புப் பாயிரம் பாடினார்.

**தவத்திரு மறைமலையடிகள் (வேதாசலம் பிள்ளை)** தாம் அரிதின் ஆய்ந்து எழுதிக் கொணர்ந்த பட்டினப் பாலை ஆராய்ச்சியுரையை இனிதுறப் படித்தார். அதன் நடையழகும் பொருளழகும் அவையோரைக்கவர்ந்து பாராட்டச் செய்தன.

**திரு. ஐ. சாமிநாத முதலியார் 'முன்னாள் - இந்நாள்'** என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையைப் படித்தார்.

**திரு. வை. மு. சடகோபராமாநுசாசாரியார்** இயற்றிய 'ஸ்ரீ பட்டர் வைபவம்' படிக்கப் பெற்றது.

பெங்களூர் மையக் கல்லூரிப் பேராசிரியர் திரு. **S. கிருட்டிணசாமி ஐயங்கார்** எம். ஏ. எழுதியனுப்பிய 'கடை வள்ளலார் காலம்' என்னும் கட்டுரை ஆராயப்பெற்றது.

திருவனந்தபுரம் **திரு. இலக்குமணப்பிள்ளை** அவர்கள் எழுதிய 'இரவிவர்மன்' என்னும் நாடகமும், **திரு. அப்துல் காதிறு அராவுத்தர்** அவர்கள் இயற்றிய 'தமிழ்ச்சங்க மான்மியம்' என்னும் நூலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் **இராசகோபாலாச்சாரியார்** அவர்கள் எழுதிய 'சுதேசகலாசாலை ஸ்தாபனம்' என்னும் கட்டுரையும், **திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயர்** அவர்கள் இயற்றிய 'குமண சரிதம்' என்னும் நூலும் அவையில் படிக்கப் பெற்றன. **மாம்பழக் கவிச்சிங்க காவலர் வழியினரும்**, அவர் தம் பாடற் றொகுதியை வெளியிட்டவருமாகிய **திரு. பழனிச்சாமியாசாரி** அவர்கள், நாவலர் அவ்வக் காலத்தில் இயற்றிய தனிப் பாடல்கள் சிலவற்றைக் கூறி மகிழ்வித்தனர்.

ஓர் ஆண்டு விழாவின் போது ஆராயவும், படிக்கவும், அரங்கேற்றவுமாக நடந்த நிகழ்ச்சிகள் இவை. பாண்டித் துரையார் சங்கம் செய்ததைத் தங்கமோ செய்ய வல்லது?

சங்கத்தின் அறிஞர் அரங்கில் ஆராயப் பெற்ற செய்திகள், அரங்கேற்றப் பெற்ற நூல்கள் ஆகியவற்றைத் தமிழ்கூறு நல்லுலகச் செல்வமாக்க வேண்டுமே! எட்டத்தில் இருக்கும் அறிஞர்களும் ஆர்வலர்களும் தமிழ் வளம் துய்க்க வேண்டுமே! அதற்கொரு வழி நன்கனம் செய்யப் பெற்றது.

சங்கத்தின் தொண்டினைப் பரப்பும் சால்பு முரசமாக அமைந்த செந்தமிழ் இதழ், இத்திருப்பணிக்கு உதவியது. அறிஞர்களின் பொழிவுகளும் ஆய்வுக் கருத்துகளும் அதில் கட்டுரை வடிவுற்றன. அக்கட்டுரைகளே மேலும் விரிவுற்றன; தனிநூல் ஆகித் தமிழ் வளர்ச்சிக்கு உதவின. படைத்த படைப் பாளிகளுக்கும் தமிழகத்தில் தனிப்பெரும் புகழை ஈட்டித் தந்தன. அவ்வகையில் வெளிப்பட்ட அருந்தமிழ் ஆராய்ச்சி நூல்கள் ஒன்றோ, இரண்டோ?

**தவத்திரு மறைமலையடிகளாரால்** இயற்றப் பெற்ற 'பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை' நூலாக்கம் பெற்று ஆராய்ச்சி மாணவர்களுக்கும், அறிஞர்களுக்கும் விருந்தாகிச் சங்க நூல்களை ஆராயும் முறையைத் தமிழுலகுக்கு நன்கு காட்டியது.

"பட்டினப் பாலைக்கும் ஒருவிரிந்த ஆராய்ச்சியுரை எழுதி அதன் முதலிரு பகுதிகளையும் அவ்வாண்டிற் கூடிய (1906) மதுரைப் புதுத் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் அதன் தலைவரது வேண்டு கோட்கிசைந்து படித்துக் காட்டினேம். அப்போது அவ் அவையில் இருந்த தலைவரும் தமிழ்ப் புலவர்களும் நமது ஆராய்ச்சியுரையினைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினர். இதற்காக அவர்கட்கு நன்றி செலுத்துங் கடப்பாடுடையேம்" என்கிறார் அடிகளார். (பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை; முகவுரை)

"இத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியும் இருபெருஞ் செல்வமும் வாய்ந்த பிரபு சிகாமணியுமாகிய ஸ்ரீ மான் பாண்டித்துரை ஸாமித் தேவரவர்களுடைய விருப்பத்தைத் தழுவி வெகுவிரைவாக ஒருவாறு எழுதி முடிக்கப்பட்டது இவ்வசனநூல்" ("ஸ்ரீ பட்டர்வைபவம்") என்று குறிப்பிடுகிறார் **உ.வே. வை.மு. சடகோபராமானுசாசாரியர்**. இவ்வுரைநடை நூல், செந்தமிழ் - நான்காம், ஐந்தாம் தொகுதிகளில் தொடர்ந்து வெளிவருகின்றது.

**திரு. கிருட்டிணசாமி ஐயங்காரால்** படிக்கப் பெற்ற கடைவள்ளலார் காலம் என்னும் கட்டுரை ஐந்தாம் தொகுதியில் வெளிப்பட்டுச் செந்தமிழ்ப் பிரசுரம் 49 ஆவதாக நூலுருப் பெறுகின்றது.

இனி வேளிர் வரலாறு என்பது **திரு. மு. இராகவ ஐயங்காரால்** செய்யப் பெற்று 1905 ஆம் ஆண்டு நிகழ்ந்த மதுரைத் தமிழ்ச் சங்க நான்காம் ஆண்டு விழாவின் போது அறிஞர் **வி. கனகசபைப்பிள்ளை** அவர்கள் தலைமையில் படிக்கப் பெற்றது ஆகும். அவ்வாய்வுக் கட்டுரை செந்தமிழில் வந்தது; அதற்கு எழுந்த மறுப்பும் செந்தமிழில் வந்தது. பின்னே வேளிர் வரலாறு 1913 ஆம் ஆண்டு நூலுருக் கொண்டது. அதனைக் கொழும்பு **திரு. வி. ஜெ. தம்பிப்பிள்ளை** அவர்கள் ஆங்கிலத்தில் பெயர்த்து 'இலங்கைப்பகுதி இராயல் ஏசியாடிக் சொசைட்டி' என்னும் நிறுவனத்திற்கு அனுப்பி வெளியிட்டார். 1914 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகம் இடைநிலை வகுப்புக்கு (Inter mediate)ப் பாடமாக வைத்தது. இவர்தம் **சாசனத் தமிழ்க் கவிசரிதம்** என்னும் நூல் தமிழ்ச்சங்கப் பதினான்காம் ஆண்டு விழாவில் படிக்கப் பெற்று வெளி வந்ததேயாகும். இருபத்து மூன்றாம் ஆண்டு விழாவில் படிக்கப் பெற்ற 'தமிழரும் ஆந்திரரும்' என்பதும் செந்தமிழ் 50ஆம் வெளியீடாகியது.

பேரறிஞர் **இரா. இராகவஐயங்காரால்** இயற்றப்பெற்ற 'சேது நாடும் தமிழும்' என்னும் அரியவரலாற்று நூல் தமிழ்ச் சங்கப் பதின்மூன்றாம் ஆண்டு விழாவில் படிக்கப் பெற்று முதற்கண் செந்தமிழில் வெளிவந்து, பின்னர்ச் செந்தமிழ் வெளியீடு எண் 48 ஆகத் தனிநூலுருக்கொண்டு விளங்கியது.

**நாவலர் சோமசுந்தர பாரதியார்**, முதுகலை மாணவர்க்காக எழுதிய ஆங்கிலக் கட்டுரை யொன்று, 'இலக்கண விளக்க' பரம்பரை திருவாரூர் **சோம சுந்தர தேசிகரால்** 'தமிழ் நூல்களும் தமிழகமும்' என்னும் பெயரால், மொழி பெயர்க்கப் பெற்றுச் செந்தமிழ் பன்னிரண்டாம் தொகுதியில் வெளிவந்துளது. அந்நாவலர், 1926 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 25ஆம் நாள் மதுரைத் தமிழ்ச்சங்கம் வாலிப கிறித்தவ சங்கம் இவற்றின் சார்பில் 'திருவள்ளுவர்' வரலாறு பற்றி ஒருரையாற்றினார். அவ்வுரை அறிஞர்களால் விரும்பப் பெற்றுச் சென்னைப் பல்கலைக்கழகச் சார்பிலும் நிகழ்வதாயிற்று. அவ்வாய்வுப் பொழிவு மதுரைத் தமிழ்ச்சங்கச் செந்தமிழ் வெளியீடு 53ஆக

*ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்தது. 1929 இல் பாரதியாரால் தமது பதிப்பாகவும் வெளியிடப்பட்டு அவர்தம் ஆராய்ச்சி வன்மையைத் தமிழுலகில் பரப்புவதாயிற்று. இவ்வாறே சேரர் பேரூர், என்னும் அவர்தம் ஆய்வு, சேதுபதி வேந்தர் தலைமையில் கரந்தையில் பொழிந்த பொழிவாகும். அதுவும் செந்தமிழில் வந்து நூலாயிற்றாம்.*

*இவ்வாறு தமிழ்ச்சங்க ஆண்டு விழாக்களில் சொற் பொழிவு செய்யப் பெற்றுச் செந்தமிழ் வெளியீடாகவும், தனிவெளியீடாகவும் வெளிப்பட்ட நூல்களையும், வெளியிட்ட அறிஞர்களையும் திட்டப்படுத்தி எழுதினால் மிக விரிவுறும் என்பது வெளிப்படை.*

# 7. கல்விக்குழுவின் பணிநலம்

தமிழ்ச்சங்க வித்துவக்குழுவென்னும் ‘கல்விக் குழுவால்’ ஏற்பட்ட நலங்கள் தமிழாய்தல், ஆய்ந்து படைத்த பொருளை இதழில் வெளியிடல் நூலாக்கல் என்னும் அளவுடன் நின்று விடவில்லை. இவை யெல்லாம் சங்கத்தின் வழியே நிகழ்ந்த பணிகளின் ஒரு பகுதியேயாம். மற்றொரு பகுதி பொது அமைப்புகள், அறிஞர் குழுக்கள், அரசு ஆகியவற்றுக்கு அவ்வப் போது வேண்டும் கருத்துரைத்தலும். மொழிநலம் கருதிப் பாடுபடுதலும் வற்புறுத்தி வழிப்படுத்துதலுமாம். அவ்வழி களிலும் சங்கம் தன் கடனைச் செவ்வையாகச் செய்தது.

1902 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் நாள் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா நிகழ்ந்தது. தமிழ்நாட்டுப் பெரும் புலவர்களும் ஈழநாட்டுப் பெரும் புலவர்களும் புரவலர்களும் கலந்து கொண்டனர். அவ்விழாவில் பங்கு கொண்ட பரிதிமாற் கலைஞர் தமிழுக்குள்ள இடர்களையும், அவற்றைக் களைய வேண்டிய இன்றியமையாமையையும், தமிழ் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய ஆக்கப் பணிகளையும் விரித்துரைத்தார்.

“பொது மக்கள் தமிழுக்கும் புலவர்கள் தமிழுக்கும் பெரிய வேறுபாடு உள்ளது என்றும், அவ்வேறுபாடு நாளடைவில் மிகுகின்றது என்றும், அது மிகாதிருக்கும் பொருட்டு நேரிய வழிகளை நாடவேண்டும் என்றும், அஃது உடன்பாடாயின், புலவர்கள் தம் உயர் நடையினின்றும் இறங்கிப் பொது மக்களை மொழியுணர்ச்சியில் உடன் கொண்டு செல்ல வேண்டும் என்றும்” வலியுறுத்தினார். இது, தமிழை வளர்த்தற்குத் தமிழறிஞர் மேற்கொள்ள வேண்டிய தலையாய கடமை என்பதைத் தமிழ்ச்சங்க முதலாண்டு விழாவிலேயே உரைத்தது குறிப்பிடத்தக்கதாம்.

அந்நாளில் திருவர் (Lord) கர்சான், அரசுப் பேராளராக இருந்தார். வடநாட்டிலும் தென்னாட்டிலும் இருந்த வடமொழி ஆர்வலர்கள் ஒன்றுபட்டு நின்று, ‘நாட்டு மொழிகளுக்கு ஏற்றந்தருதல் வடாது’ என்றும், ‘அதனைக் கல்லூரிகளில் கற்றுத்

தருதல் வேண்டுவது இல்லை' என்றும், 'அவ்வாறு கற்றுத் தருவது வடமொழி போன்ற உயர்மொழிகளுக்கு இழிவு செய்தலாம்' என்றும் ஆங்காங்கு வலியுறுத்தி, அரசப்பேராளர் வரை கொண்டு சென்றனர். மையச் சட்டப் பேரவையிலும் கல்லூரிகளில் தாய்மொழி நீக்கம் பற்றியும் தீர்மானம் கொணர்ந்தனர். அரசுப் பேராளர் இக்கோரிக்கையைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி அதன் கருத்தைத் தெரிவிக்குமாறு குறித்தார். பல்கலைக் கழகம், அதனைச் சென்னை ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பியது. இஃதிவ்வாறு இருக்கத் தாய்மொழிக் கல்வி நீக்கம் குறித்து **திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளை**யவர்கள் S. Padfield என்னும் புனைபெயரில் மெட்ராசுமெயில் (MADRAS MAIL) என்னும் ஆங்கில நாளிதழில் கண்டித்துப் பலகட்டுரைகள் எழுதினார். இதனால் கோரிக்கை தடைப்பட்டு விடக் கூடாதே எனத் தவித்த வடமொழி ஆர்வலர். அக்கட்டுரையாளரைக் கண்டு வயப் படுத்தவும் முயன்றனர்; குறுக்கு வழியாக விரைவில் சட்டமாக்கி விடும் முயற்சியிலும் ஊன்றினர், அந்நிலையில்தான் சென்னை ஆசிரியர் சங்கம் தன்கூட்டத்தைக் கூட்டி இரண்டு நாள்களில் கருத்துரைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டது.

திரு. மு. சி. பூரணலிங்கனார், ஆசிரியர் சங்கத்திற்குச் செய்திவந்ததை அறியார். அவர் தம்பணியாகச் சென்னையில் இருந்து கோவைக்குச் சென்றிருந்தார். செய்தியை அறிந்து கொண்ட பரிதிமாற் கலைஞர், பூரணலிங்கனார்க்குத் தொலைவரிச் செய்திதந்து, சென்னைக்கு அவரை வருவித்து நிகழ்ச்சியை எடுத்துரைத்தார். உடனே இருவரும் ஆசிரியர் சங்க உறுப்பினர்களையும் பொறுப்பாளர்களையும் வீடுவீடாகச் சென்று பார்த்துத் தாய்மொழியைக் கல்லூரியில் இருந்து நீக்கக் கூடாது என்பதனை வற்புறுத்தினர். அவ்வழைப்பு வீணாகி விடவில்லை. ஆசிரியர் சங்கத்தார் 'தாய்மொழிப் பாடம் கல்லூரியில் கற்பிக்கப் பெறவேண்டியது கட்டாயமே' எனத் தீர்மானித்துப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பினர். அவ்வளவில் விட்டுவிடின், 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது' என்னும் நிலைமை ஏற்பட்டுவிடக்கூடும் என அஞ்சிய பரிதிமாற் கலைஞரும், பூரணலிங்கனாரும் மதுரைக்கு விரைந்தனர்; தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரையைச் சந்தித்து உரையாடினர். அவர்தம் செல்வாக்கைக் கொண்டு 'கல்லூரிகளில் தாய்மொழி, கட்டாயம் கற்பிக்கப் பெறுதல் வேண்டும்; நீக்கப் பெறக்கூடாது' என்பதை வலியுறுத்த வேண்டினர்.

*பாண்டித்துரை தமிழ்ச் சங்கச் செயற்குழுவைக் கூட்டித் தாய்மொழி காக்கத் தாம் செய்ய வேண்டிய பணியை வற்புறுத்தினார். செயற்குழுவினர் ஒருமனத்துடன் அதனைத் தீர்மானம் செய்தனர். நேரில் சென்று எப்படியும் தாய்மொழிக் கல்வியை ஒழிக்கும் தீர்மானத்தை ஒழித்தே ஆகவேண்டும் என்றும், அதற்குப் பாண்டித்துரையார் சென்னைக்குச் செல்ல வேண்டும் என்றும் செயற்குழுவினர் வலியுறுத்தினர். அதன்படியே தண்ணார் தமிழ்காக்கச் சங்கங்கண்ட ஏந்தல் பாண்டித்துரை, சென்னைக்குச் சென்று அரசியல் வட்டாரத் திலும், அறிஞர் வட்டாரத்திலும் தம் கருத்தை வலியுறுத்தித் தமிழ்ச் சங்கத் தீர்மானத்தை நிலைபெறுத்தினார். அந்நாளில் பரிதிமாற் கலைஞரும், பூரணலிங்கனாரும், பாண்டித் துரையாரும், தமிழ்ச் சங்கமும் காலத்தால் செய்த பணியே கன்னித்தமிழ், கல்லூரியில் இருந்தும் ஓட்டப் பெறாமல் நிலைப்புற வாய்ப்பாயிற்றாம். சங்கப் பணிகளுள் குறிப்பிடத் தக்கது ஈதாம்,*

*தமிழ் வளர்த்த சங்கம்; தமிழ்ப் புலவர்களை உருவாக்கிய சங்கம்; அது, தமிழ்ப் புலவர்கள் சம்பளம் வேலைவாய்ப்பு ஆகியன பற்றியும் அக்கறை கொண்டது. தமிழ்ச்சங்கத்தின் இருபத்திரண்டு இருபத்து மூன்றாம் ஆண்டு விழா இரத்தாட்சி ஆனி 12, 13ஆம் நாள்களில் நிகழ்ந்தது. சென்னைக் கல்வியமைச்சரும், சென்னைப் பல்கலைக்கழக இணை வேந்தருமாகிய திரு.* ***பரசுராமதாசு பாத்ரோ*** *தலைமை தாங்கினார் ஆங்கு உரையாற்றிய பெரும் புலவர்* ***இரா. இராகவ ஐயங்கார்*** *ஆங்கிலக் கல்வி நிலையங்களிலும், பிற இடங்களிலும் தமிழ்ப் புலவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே கிடைப்பதை எடுத்துரைத்து ஆங்கில ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் தமிழாசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும், தமிழ் வளர்ச்சிக்குரிய வழிகளில் இதனைச் செய்வதும் ஒன்றாகும் என்றும் வலியுறுத்தினார். அதே கூட்டத்தில் பேசிய* ***விபுலானந்த அடிகள், "பெருமை (கௌரவம்) என்னும் ஒன்றைக் கருதியேனும் தமிழ்ப் புலவர்களின் சம்பளத்தை மிகுதிப்படுத்த வேண்டும்"*** *என்று வலியுறுத்தினார். மேலும், ஆங்கிலங் கற்றுப் பிற துறைகளில் அலுவல் செய்பவர்களும் தமிழ் நூல்களைக் கற்கவேண்டும் என்றும், தமிழ் நூல்கள் பலவற்றையும் படித்தற்கு இயலாதாயின் திருக்குறள் ஒன்றையாவது முற்றக்கற்றல் வேண்டும் என்றும், 'பிற நாட்டவர்களைப் போல நாமும் ஒருவரோடு ஒருவர்*

*எக்காலத்தும் எவ்விடத்தும் தமிழையே பேசிவர வேண்டும் என்றும் உணர்வுமீக்கூர எடுத்துரைத்தார்.*

*இத்தகைய தீர்மானத்தின் பயனாலும், பின்னாளில் பெரியவர்* ***அவினாசிலிங்கனார்*** *போன்ற பெருமக்களின் உன்னிப்பான செயலாலும் தமிழாசிரியர்கள் ஆங்கில ஆசிரியர்களைப்போல் சம்பள ஒப்புநிலை பெற்றிருத்தல் கருதத் தக்கது. அதே பொழுதில் எஞ்சிய தீர்மானங்கள் இன்னும் தீர்மானங்களாகவே இருத்தல், தமிழர் தம் உணர்வின்மையை உலகுக்கு உரைப்பதேயாம்.*

*இருபத்தைந்தாம் ஆண்டுவிழா அட்சய ஆண்டு (1927) மாசித்திங்கள் 10, 11 ஆம் நாள்களில்நிகழ்ந்தது. சென்னைக் கல்வித்துறைத் தலைமையமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் விழாத்தலைமை ஏற்றிருந்தனர். 'பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களையே ஆங்கிலக் கல்லூரிகளில் ஆசிரியராக அமர்த்தம் செய்ய வேண்டும்' என அரசு ஆணை பிறப்பித்திருந்தபொழுது அது. ஆதலால் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தம் உரையில், "பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்களைக் கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமிப்பதுடன், தனித்தமிழ்ச்சங்கத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றோரையும் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். 1980-81 ஆம் ஆண்டில் ஒலித்துவரும் இவ்வுரிமைக்குரல், 1927-இலேயே ஒலித்த இடம் மதுரைத் தமிழ்ச்சங்கமாகும். அதே விழாவில் பேசிய அமைச்சர், தமிழ் மொழிப்பயிற்சியில் தமக்குள்ள ஆர்வத்தை எடுத்துரைத்த துடன், இனிநிறுவப் பெறும் தமிழ்ப் பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக்கழகம் போலாது தமிழ் வளர்ச்சியையே முதன்மையான நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று, "அருமையாகவும் இனிமையாகவும் கேட்பார் மனத்தில் கிளர்ச்சி யுண்டாகக் கூறி, யாவரிடத்தும் தமிழ்ப்பற்று தலையெடுத்து நிற்குமாறு செய்தார்"*

*'இதுதான் தமிழ்ப்பல்கலைக்கழகம்' 'இதுதான்தமிழ்ப் பல்கலைக் கழகம்' என இரண்டு பல்கலைக் கழகங்களை எதிர் நோக்கித் தமிழர் இலவு காத்த கிளியாகினர்! ஆனால், கல்வியமைச்சர் குறித்த தமிழ்ப்பல்கலைக் கழகம் தோன்றவே இல்லை! அவருக்குப் பின்னரும் எத்துணையோ கல்வி யமைச்சர்கள் அணிசெய்து அமர்ந்திருந்தும் வீற்றிருந்தும் சென்றுள்ளனர். தமிழ்ப் பல்கலைக் கழகத் தீர்மானமோ தீர்மான*

அளவிலேயே நின்றது! 1981 இல் தான் தமிழக அரசால் தஞ்சையில் உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப் பெற்றுளது.

இப்பொழுது, தமிழ்வளர்ச்சிக் கழக வழியாகக் **'கலைக் களஞ்சியம்'** உருவாகியுள்ளது. அவ்வுருவாக்கம், நிலைபெற்ற பணியாகும். அத்துறை வளரவேண்டிய - வளர்ந்து கொண்டே இருக்க வேண்டிய - துறை! முற்றுப் பெறுதல் அறிவுக்கு இல்லாமை போல, அறிவு விளக்க நூலாம் கலைக் களஞ்சியத் திற்கும் இல்லை. அறிவு வளர வளர, அதுவும் வளரும். இத்தகைய வளமான கலைக்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் என்பதைத் தமிழச்சங்கத்திற்கு வலியுறுத்துகிறார் தேவகோட்டை வைசிய மித்திரன் இதழாசிரியர் **திரு. இராமநாதன். தமிழ்ச் சங்கத்தார்** செய்யத் தகுவது என்னும் தலைப்பிட்டு அவர் எழுதிய கட்டுரை செந்தமிழ் 13:182 இல் உள்ளது. அதில் அவர் வலியுறுத்துவது இரண்டு குறிப்புகள்: 1) 'பரிபாஷை' 2) ஸகல வித்தியா கோசம். திகைப்பே ஏற்படுகிறது! இவை என்ன என்று!

'பரிபாஷை' என்று அவர் குறிப்பது 'கலைச்சொல்'. 'ஸகல வித்தியா கோசம்' என்பது 'கலைக்களஞ்சியம்' (Encyclopaedia) ஏறத்தாழ 65 ஆண்டுகளின் இடைவெளி இப்படிப் புரியாமல் ஆக்குகிறது! ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியச்சொற்கள், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியச்சொற்கள், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்கப்பாட்டு, தொகை நூல் சொற்கள், திருவள்ளுவர் குறள் எல்லாம் இப்படிப் புரியாமல் போவது இல்லை! அவர்கள் வழங்கியுள்ளவை யெல்லாம் வழக்கொடும் - வாழ்வொடும் பொருந்தியவை. ஆதலால் என்க. இனிக்கலைச்சொல், கலைக்களஞ்சியம் பற்றிக் கருத்தைச் செலுத்தலாம்.

இவ்விரு சிறந்த பணிகளுக்கும் முன்னோடி 'அகரமுதலி' எனப்பெறும் 'அகராதி' ஆகும். அடிப்படையாகிய அகராதியைக் கொண்டே மற்றை மொழியாக்கப் பணிகள் இயல முடியும். ஆதலால் தமிழ்ச்சங்கம் அகராதிப்பணியில் ஊன்றியது.

25.5.1904இல் சங்க வளர்ச்சி ஆய்வுக்குழுவின் கூட்டம் பாண்டித்துரைத்தேவர் தலைமையில் நடந்தது. அக் கூட்டத்தில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களுள் 7, 8 ஆகிய இரண்டும் 'அகராதி'தொகுப்பது பற்றியனவாம்.

*7) தமிழிற்குச் சிறந்த அகராதி ஒன்றில்லாததால், அவ்வகராதி வேலையைச் சங்கத்தார் தொடரவேண்டும் என்பதும், அவ்வாறு தொடங்குவதற்கு முன்பு பலதமிழ் நூல் களையும் ஆராய்ந்து அரும்பதங்களை இடங்காட்டித் தொகுத்துக் கொள்ள வேண்டும் என்பதும்.*

*8) அடியிற் குறித்தவாறு, வித்துவான்கள் தாம் தாம் குறித்துக் கொண்ட நூல்களில் அரும்பத முதலியவற்றைத் திரட்டிச் சங்கத்துக்கு அனுப்புவதாக வாக்களித்தார்கள்.*

| **நூல்கள்** | **சொற்றொகுப்பாளர்** |
|---|---|
| *திருவாசகம்* | *திருக்கோவையார்* |
| | *ஸ்ரீமத் நா. வேதாசலம் பிள்ளையவர்கள்* |
| *கலித்தொகை* | *ஸ்ரீமத்பி. குருராயரவர்கள்* |
| *இராமாயணம்* | *ஸ்ரீமத் கா.கோபாலசாரியாரவர்கள்* |
| | *ஸ்ரீமத் தி. சண்முகம் பிள்ளையவர்கள்* |
| *பெரியபுராணம்* | *ஸ்ரீமத் பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்* |
| *சிந்தாமணி* | *ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள்* |
| *திருவிளையாடல்* | *ஸ்ரீமத் ஐ. சாமிநாத முதலியாரவர்கள்* |
| *மெய்கண்ட சாத்திரங்கள்* | *ஸ்ரீமத் பூ. கலியாண சுந்தர முதலியாரவர்கள்* |
| *அகநானூறு தொல்காப்பியம்* | *ஸ்ரீமத் இரா. இராகவையங்காரவர்கள்* |
| *காஞ்சிப்புராணம்* | *ஸ்ரீமத் மேலகரம் சுப்பிரமணியக் கவிராயரவர்கள்* |
| *அப்பர்மூர்த்தி சுவாமிகள் தேவாரம்* | *ஸ்ரீமத் வி. சதாசிவஞ் செட்டியாரவர்கள்* |
| *சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்* | *ஸ்ரீமத் திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள்* |
| *சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்* | *ஸ்ரீமத் சுப்பிரமணிய முதலியாரவர்கள்* |
| *தர்க்க சோதிட* | |

| | |
|---|---|
| பரிசாசைகள் | ஸ்ரீமத் திரு. நாராயணையங்காரவர்கள் |
| தணிகைப்புராணம் | ஸ்ரீமத் சேற்றூர் சுப்பிரமணியக் கவிராயரவர்கள் |
| புறப்பொருள் வெண்பாமாலை | ஸ்ரீமத் டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள் |
| கலிங்கத்துப்பரணி | ஸ்ரீமத் டி. ஸி. நிவாசையங்காரவர்கள் |
| வில்லிபாரதம் | ஸ்ரீமத் ஏ. சுந்தரராஜ ஐயங்காரவர்கள் |
| சேதுபுராணம் | ஸ்ரீமத். வி. முத்துக் குமாரசாமி முதலியாரவர்கள் |

'நாடிய பொருள் கைகூடும்' நல்லபொழுது உண்டாகி விடுமானால், 'ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்!' அவ்வாறே திட்டமிட்டுச் செய்யத் தீர்மானித்த அகராதி வேலை தானே கைம்மேல் கனியாகக் கனிந்து நின்றது. அது 'கதிரவேல் பிள்ளை தமிழகராதி (Kadiravel Pillais Tamil Dictionary) என்னும் பெயருடன் தமிழ்ச் சங்கச் சொல்லகராதியாக வெளிவந்தது. ஈழத்துக் கதிரவேல் பிள்ளை அவர்களால் தொகுத்து வைக்கப் பெற்ற அவ்வகராதியை வெளியிடும் பொறுப்பைத் தமிழ்ச் சங்கம் ஏற்றுக் கொண்டது. திருவாவடுதுறை ஆதீன வித்துவானும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகருமான **சே. ரா. சுப்பிரமணியக் கவிராயராற்** பரிசோதிக்கப் பெற்றுத் தமிழ்ச் சங்க முத்திராசாலையில் பதிப்பிக்கப் பெற்றுத் தமிழ்ச் சங்கத்தின் 8 ஆம் வெளியீடாக வெளிவந்தது. அதன் மூன்று பாகங்களும் தனித் தனியே வெளிவந்தன.

முதலிரு பாகங்களும் 1913 ஆம் ஆண்டுக்கு வெளிவந்தன. ஆனால் மூன்றாம் பாகம் பத்தாண்டுகள் கழித்து 1923 ஆம் ஆண்டு (துந்துபி மாசி 18) வெளியாயது. இவ் விடைவெளி யேற்பட்ட காரணத்தைப் பதிப்பாசிரியர், மூன்றாம் பாக முகவுரையில் சுருக்கமாக வரைந்துளார்.

"இவ்வகராதியின் முதல் இரண்டு பாகமும் வெளியிட்ட பின் யான் திருவாவடுதுறை யாதீனத்திற் பல ஆண்டு தங்கியிருக்க நேர்ந்தமையாலும், மறுபடி யான் இங்கு வந்து இம்மூன்றாம் பாகத்தை விரைவில் வெளியிடக்கருதி அச்சிட்டு வருங்கால் 1920ம் ஆண்டு ஜுன் மாதம் 20ஆம் நாள் சங்கத்தில்

*நேர்ந்த தீவிபத்தில் இம்மூன்றாம் பாகத்தில் தா - முதல் நகரம் வரையுள்ள அச்சிட்ட பாகம் தவிர அச்சிடுதற்குப் பரிசோதித்து வைத்திருந்த அசலும் நகலும் ஆகிய காகிதக் கையெழுத்துப் பிரதிகள் முழுவதையும் இழந்துவிட்டமையாலும் ப, ம, ய, வ, என்ற அக்கர வர்க்கச் சொற்களடங்கிய அவ்விழந்த பாகத்தைப் புதிதாய்த் தேடிச் சேர்த்துப் பரிசோதித்து வெளியிடத் தொடங்கிய பொழுது நம், சங்க அச்சியந்திர சாலையில் வேண்டிய எழுத்துக்கள் போதுமான அளவு வாராதிருந்த மையாலும், பின் இப்புத்தகம் அச்சிடுவதில் எனக்கு உதவியா யிருந்தவர் விலகிக்கொண்டமையால் யான் ஒருவனே சொற் களைத் தேடிப் பொருள் கண்டெழுதுதல், ஒப்பு நோக்குதல், திருத்துதல், எழுதுதல் முதலிய எல்லா வேலைகளையும் கவனிக்க வேண்டியிருந்தமையாலும் இதனை வெளியிட இத்தனை யாண்டு தாமதமேற்பட்ட தென்பதை மிக்க விசனத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்"*

இனிக் கலைக்களஞ்சியம் போல்வதொரு வெளியீட்டு வாய்ப்பும் பைந்தமிழ்ப் பாண்டித்துரையார்க்கு வாய்த்தது. **'அபிதான சிந்தாமணி'** என்பதொரு நூல். அது சென்னை, பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியராக இருந்த **ஆ. சிங்காரவேலு முதலியார்** அவர்களால் இயற்றப் பெற்றது. அந்நூல் 1910 ஆம் ஆண்டில் தமிழ்ச்சங்கத்தின் 9 ஆம் வெளியீடாக வெளிவந்தது. அதன் வெளியீடு பற்றி அறிதல் சங்கப் பணிச்சிறப்பையும், பாண்டித்துரையார் பண்பு நலத்தையும் ஒருங்கே பாரித்துரைக்க வல்லதாம்.

அபிதான சிந்தாமணியை எழுதி முடித்த ஆசிரியர் சென்னையில் வாழ்ந்த செல்வர் சிலரிடம் காட்டி உதவி வேண்டினார்; அறிஞர்கள் துணையையும் வேண்டினார்; வேண்டிப் 'பெற்ற பேற்றை' அவரே உரைக்கிறார்.

*"அவர்கள் இத்தகைய நூல் தமிழிற்கு இன்றியமை யாததே; அதனை வெளியிடுக என்றனரே அன்றி அதனை அச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்."*

*"பின்பு யாழ்ப்பாணம் மகா-ள-ள- ஸ்ரீ* ***கனகசபைப் பிள்ளை*** *பி.ஏ., பி.எல், அவர்களிடம் இதன் ஒரு பாகத்தைக் காட்டினேன். அவர், இஃது அரிய தமிழ்க் கதை அகராதி; இதனைச் சென்னையிலுள்ளார் ஆதரிக்க வேண்டும் என ஒரு பத்திரம் எழுதித் தந்தனர். புரொபஸராயிருந்த* ***சேஷகிரி சாஸ்திரியார்*** *அவர்களிடம் காட்டினேன். அவர், 'இதனை*

யொப்ப நானும் ஒரு நூல் எழுதிக் கொண்டு வருகிறேன்' என்று கூறினரேயன்றி வெறொன்றுங் கூறவில்லை. அவர் கருத்தென்னோ அறியேன். அதற்குப் பின்னிதனைச் சென்னை கியூரேடரும் பச்சையப்பன் கலாசாலைத் தரும விசாரணையின் எடிகேஷனல் டிரஸ்டியுமாகிய பிரம்ம **ஸ்ரீ வா. கிருஷ்ண மாசாரியாரிடம்** காட்டினேன். அவர் பல அச்சாபிசுக் காரர்களிடம் காட்டி, செலவு அதிகம் பிடிக்கும் எனக் கூறி விடுத்தனர். நான் கூடிய அளவில் உயர்தரக் கல்வி போதிக்க வல்லேன் ஆயினும் ஊழ்வலியால் சென்னை, பச்சையப்பன் விசாரணைக்குட்பட்ட **பி.டி. செங்கல்வராய நாயகர் கோவிந்தநாயகர் கலாசாலை களில்** அமர்ந்து செல்வாக்கில்லாததால் வருவாய் மட்டமாக அச்சிடப் பொருளிலாது, இதனைச் சஞ்சிகை வாயிலாக வெளியிட ஓர் அறிக்கைப் பத்திரம் வெளியிட்டேன். அதன் பொருட்டுப் பலரிடம் கையொப்பம் கேட்டேன். அவர்கள் 'இது தொடர்ந்த கதையாயின் வாங்கலாம்' எனவும், சிலர் 'முற்றுறப் பலநாள் பிடிக்கும்' எனவும், சிலர் கையொப்பமிட்டுஞ் சென்றனர்.

"இச்சோர்வால் எனக்கு அக்கார்யத்தில் ஊக்கஞ் செல்லாது 'நூலைப் புற்றிடுவோமா' என எண்ணினேன். இதற்குள் சிலர் இதனையொத்த சிறு நூல்கள் இயற்றினர். அதனைக் கண்டும் திருவுளப் பாங்கென்றிருந்தேன். இது நிற்க.

"நான் வழிபடு கடவுளாகிய மலைமகள் நாயகர் உள்ளக் குறிப்போ, நான் முதன் முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ, இரண்டா முறை வெளிப்படுத்திய அறிக்கையோ மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரஸிடெண்டும் பாலவனத்தம் ஜமீந்தார்அவர்களும், தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்களின் திருக்குமாரரும் என் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல் போல்வாரும் ஆகிய ஸ்ரீமான் பொ. பாண்டித் துரைச்சாமித் தேவரவர்களின் கைப்பட்டுத் தாமே சென்னைக்கு வந்து **நான் எழுதிய நூலைக் கண்டு களித்து அதனை மதுரைத் தமிழ்ச் சங்க அச்சியந்திர சாலையில் அச்சிடுவான் எண்ணி எடுத்துச் சென்று, அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரைக் கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சியந்திர சாலையில் என் முன்னிலையில் அச்சிட உத்தரவளித்து அப்போதைக் கப்போது பொருளுதவி செய்து வந்தனர்.** அவர்கள் அருஞ்செயலை இப்புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்"

அபிதான சிந்தாமணியே யன்றித் தொடக்க நாள் முதல் வெளிவந்த செந்தமிழ்த் தொகுதிகளே தமிழ்க் கலைக் களஞ்சியத் தொகுதிகளாம். இதனைச் 'செந்தமிழ்' என்னும் பகுதியில் காண்போம்.

புலவர்களைப் போற்றும் புரவலராகவும், புலவர் போற்றும் புரவலராகவும் பாண்டித்துரை திகழ்ந்தமையால், அவருக்குப் புலவர்களைப் புரத்தல் இயல்பாக இருந்தது. அவர்தம் இயல்பில் தோய்ந்திருந்த சங்கப் பொறுப்பாளர்களும் அவர் வழியிலே சங்கத்தை நடத்திச் சென்றனர். சங்கம் தோன்றிய நாள் தொட்டுச் சங்கத்தொடு தொடர்பு கொண்டவரும், கல்விக் குழுவில் இருந்தவரும், தேர்வுக் குழுவில் திகழ்ந்தவரும், ஆண்டு விழாக்கள்தோறும் தலைமை தாங்கி அரிய பொழிவுகள் செய்தவருமாகிய உ. வே. சாமிநாதையர் அவர்களின் தமிழ்த் தொண்டினைக் கருதித் தமிழ்ச் சங்கத்தின் 24-ஆம் ஆண்டுவிழா குரோதன வைகாசி 26, 27 - ஆம் நாள்களில் நிகழ்ந்த போது அவருக்கு ஐயாயிரரூபா அடங்கிய பொற்கிழி வழங்கினர். விழாத் தலைமையைச் சர். சி. பி. **இராமசாமி ஐயர்** ஏற்றிருந்தார். சேது அரசர் அவைப் புலவர் **இரா. இராகவ ஐயங்கார்,** சங்கத்து ஆன்றோர்களாற் செய்யப்பட்ட பலபழந்தமிழ் நூல்கள் செல்வாய்ப்பட்டு இறந்தொழியாது ஆராய்ந்து அச்சிட்டளித்துப் பேருதவி புரிந்து வரும் நன்றியை நினைந்து, ஐயரவர்களுக்குத் தமிழ்ச் சங்கச் சிறப்புச் செயலாளரும் தமிழ் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் உடையவருமாகிய **திரு டி. சி. சீனிவாச ஐயங்கார்** அவர்கள் நன்முயற்சியால் தமிழ் நேயச் செல்வர்களால் இப்பொருள் வழங்கப்பெற்ற பெற்றியைச் சிறப்பித்துரைத்தார். **பண்டிதமணி கதிரேசச் செட்டியார்** அவர்கள் 'பழந்தமிழ் நூல்கள் சிலவற்றை வேறுசிலரும் அச்சிட்டார்கள் எனினும் அவை, இவர்கள் அச்சிட்ட பின்பே திருத்த மடைந்தன' என்றும், 'தமிழ்ப் புலவர்ககுக் கொடுத்தல் தமிழ்த் தெய்வத்தை வழிபடுதலாகும்' என்றும் பாராட்டுரைத்தார்.

இதே விழாவின் போழ்திலேயே காஞ்சி காம கோடி பீடாதிபதிகளாக கும்பகோணம் சகத்குரு சங்கராசார்ய சுவாமிகள், ஐயரவர்களுக்குத் **'தக்ஷிணகலாநிதி'** என்னும் பட்டத்துடன் அளிக்கும்படி இரண்டு சால்வைகள், தங்கத் தோடா, பொற்பேனா முதலியனவும் அனுப்பியிருந்தார்.

பாண்டித்துரை, தம் காலத்திற்குப் பின்னரும் தமிழ்ச் சங்கத்தைக் கண்ணெனக் காக்க வேண்டும் என்று வேண்டிக்

*கொள்ளப் பெற்ற ஒருவர் திரு. நாராயண ஐயங்கார். பேரறிஞராய அவர், முகவையிலேயே பாண்டித்துரையின் அவைப்புலவராக விளங்கினார். சங்கந் தொடங்கிய நாளில் சங்கக் கலாசாலையின் தலைமையாசிரியராக அமர்த்தப் பெற்று அரும்பணி செய்தார். அதன் பின்னர்ச் செந்தமிழ் ஆசிரியராகவும் பல்லாண்டுகள் கடனாற்றினார். அத்தகையவர் பணித் தகவைப் பாராட்ட வேண்டுமெனச் சங்கப் பொறுப்பாளர்கள் கருதினர்.*

*மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 33ஆம் ஆண்டு விழா பவ ஆண்டு ஆடித்திங்கள் 31ஆம் நாள் (15-8-1934) நிகழ்ந்தது. சண்முக ராசேசுவர* **நாகநாத சேதுபதி** *அவர்கள் வரவேற்புரைக்க, சென்னை, ஆளுநர்* **கான்பகதூர் சர். முகம்மது உசுமான்சாகிப் பகதூர்***அவர்கள் தலைமை ஏற்றனர். சென்னை, வளர்ச்சித்துறை அமைச்சர்* **பி.டி. இராசன்** *அவர்கள் முத்துராமலிங்க சேது பதியவர்களின் பணி நலம் பாராட்டி அவர் படத்தைத் திறந்து வைத்தனர்.*

*பின்னர்த் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் ஆற்றிய அரும் பணியைக் கருதிய பெருமக்கள் வழங்கிய ரூ.1500-க்கு மேற்பட்ட பொற்கிழியையும் பொன்னாடையையும்* **நாவலர் சோமசுந்தரபாரதியார்** *சங்கத் தலைவர் சேதுபதி அவர் களிடம் வழங்கினார். சேது வேந்தரவர்கள், அவைத்தலைவர் அவர்கள் வழியே பேராசிரியர்க்கு வழங்கச் செய்தார். அரும்பணியை ஈடுசெய்யும் பொருட்கொடை ஒன்றில்லை எனினும், அவ்வுதவி அவர்க்குக் காலத்தால் செய்யத்தக்கதாக இருந்தது என்பது பாராட்டத் தக்கதாம்.*

*மேலும் அத்தலைமையாசிரியர் அகவை முதிர்வால் தம் கடமையை ஒல்லும் வகையால் செய்ய இயலாத் தளர்வுற்ற காலையில் தமிழ்ச்சங்கம் இரங்கியது. அதனால் 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12 ஆம் நாள் (விசு. பங்குனி 30) இராமநாத புரத்தில் சேதுபதி அவர்கள் தலைமையில் கூடிய செயற்குழுவில் திரு, நாராயண ஐயங்கார்க்கு உதவும் முடிவொன்று எடுக்கப் பெற்றது:*

*தீர்மானம் X. சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்களின் மெமோ படிக்கப் பெற்றது. ஸ்ரீ திரு. நாராயணையங்கார வர்களுக்கு 1940 ஆம் வருஷத்திற் பாக்கி மாதங்களுக்குச் சம்பளமாக ரூ. 200 கொடுப்பதுடன் 1941 ஆம் வருஷம் முதல் ஒவ்வொரு வருஷமும் ரூ. 350* Honorarium *(கௌரவச் சம்பளம்) கொடுத்து வரவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று. அவர்கள்*

சங்கக் கலாசாலையின் கௌரவ தலைமையாசிரியராக இருப்பதுடன் செந்தமிழ்ப் பத்திரிகைக்குப் பத்திராதிபராகத் தொடர்ந்து இருந்து வரவேண்டுமென்றும் தீர்மானிக்க லாயிற்று”

இனிச், சங்கத்துடன் நெருங்கிய தொடர்புடைய பெரு மக்களைப் பெருமைப்படுத்தும் வகையில் எடுக்கப் பெற்ற விழாக்கள் பலவுண்டு. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுவோம். 1) டாக்டர் உ.வே. சாமிநாதையர்க்கு எடுக்கப் பெற்ற எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா. 2) டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்க்கு எடுக்கப் பெற்ற எண்பதாம் ஆண்டு நிறைவு விழா என்பவை அவை.

சாமிநாதையரின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா பவமாசி, 23 ஆம் நாள் (6-3-35) மதுரைத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாராலும், மதுரை இராமநாதபுர மாவட்டப் பண்டிதர் சங்கத்தாராலும் ஒருங்கு சேர்ந்து பெருஞ்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

விழாவுக்குத் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திரு. டி. சி. சீனிவாசையங்கார் தலைமை தாங்கியிருந்தார். செந்தமிழ் இதழின் துணையாசிரியர் **இராமானுச ஐயங்கார்,** சங்கக் கலாசாலை ஆசிரியர் **அரிகர ஐயர்,** யாழ்ப்பாணத்துப் பரமேசுவரக் கல்லூரித் தமிழாசிரியர் **நவநித கிருட்டிண பாரதியார்,** கும்பகோணம் **ஊ. சா. வேங்கடராமையர்,** மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழாசிரியர் **ஆ. கார்மேகக் கோனார்,** யாழ்ப்பாணத்துத் தமிழ்த் தொண்டன் இதழாசிரியர் **வி.எம். கனகசுந்தரம்** இன்னபலர் உரையாலும் பாட்டாலும் வாழ்த்துரைத்தனர்.

ஐயர்தம் அரும்பணியை விரித்துரைத்துச் செந்தமிழ் ஆசிரியர் திரு. நாராயணையங்கார் வாழ்த்தினார். அவ்வாழ்த்தின் இடையே ஐயரவர்கள் வரலாறு தமிழுலகுக்குப் பலவகையாலும் பயனளிக்கக்கூடியது என்றும் அதனை ஒரு சிறிதும் எஞ்சாமல் எழுதுதல் அவர்களுக்கே இயல்வது என்றும், மேனாட்டறிஞர் தம்வரலாற்றைத் தாமே எழுதுதல் போல இவர்களும் தம் வரலாற்றை எழுதுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இதே கருத்தை **இ. மா. கோபால கிருட்டிணக் கோனார்** அவர்களும் வலியுறுத்திப் பேசினார். ஐயரவர்கள் தம் வரலாற்றை எழுதுவார்களானால் அதனை வெளியிடத் தக்கவர்கள் இ. மா. கோபாலகிருட்டிணக் கோனார் அவர்களே

எனத் தலைவர் அவர்கள் வலியுறுத்தி நிறைவித்தார். இறுதியில் என். ஆர். கிருட்டிணசாமி ஐயங்கார் நன்றியுரைத்தார்,

27 - 7 - 57 ஆம் நாள் டாக்டர் கணக்காயர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

பாராட்டுக் குழுவின் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் வரவேற்க, இராமநாதபுர மாவட்டத் துணைநடுவர் திரு. மகாராசன் அவர்கள் தலைமை ஏற்றார்கள். திருவாளர்கள் **அ. முத்துசாமிப்புலவர், அன்பு, கருணையானந்தா, இரவி, வீ. அ. பரிமேலழகர், கி. பழனியப்பன், வி. சண்முகசுந்தரம்** ஆகியோர் வாழ்த்துரைத்தனர்,

**திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரும் திரு. சி. இலக்குவனாரும்** பாராட்டுரை வழங்கினர். திரு. ந. **இராமையாபிள்ளை** நன்றியுரைத்தார்.

தமிழ்ச் சங்கச் சார்பில் அறிவறிந்த பெருமக்கள் பலருக்கு வரவேற்பு வழங்கப்பெற்றுள்ளது. அவற்றுள் இரண்டை மட்டும் குறிப்போம். ஒன்று சர். சகதீச சந்திரபோசு அவர்களுக்கு அளித்த வரவேற்பு. மற்றொன்று: சுமில் சுவலபெல் அவர்களுக்கு அளித்த வரவேற்பு.

தமிழ்ச் சங்கத்தின் பதினான்காம் ஆண்டுவிழா திவான் பகதூர் **சாமிக்கண்ணுப்பிள்ளை** அவர்கள் தலைமையில் நடந்தது. அவர் ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு, கிரீக் ஆகியவற்றிலும் தமிழ் வடமொழி ஆகியவற்றிலும் புலமை பெற்றவர்; கணக்கில் தேர்ந்தவர். அவர் தலைமை தாங்கிய அவையில் சர். சகதீச சந்திரபோசுக்குச் சங்கச் சார்பில் வரவேற்பு அளிக்கப் பெற்றது,

"எண்ணாத பல்பொருட்கும் ஏயுமுயிர் என்றெவர்க்கும்
கண்ணாரக் காட்டிக் களிப்பித்தோய் பண்ணார்நின்
தேயமொழி யைப்பரிவிற் செல்வச் செழுஞ்செவிலித்
தாயெனநன் றோம்புந் தகவுடையோய் - தூயவென்றி
மேவுந் திறல்படைத்த மேனாடும் நல்லமெரிக்
காவும் வியந்து களிப்பெய்தப் - பூ வுலகில்
தங்குஞ் **ஜகதீச சந்திரபா** சென்றறிஞர்
எங்கும் புகழ இனிதிருப்போய் - துங்கமிகு

*பாண்டியர்முன் காத்த பயன்மிகுகூ டற்பதிக்கண்*
*ஈண்டுபுகழ்* ***ராஜரா ஜேஸ்வரப்பேர்*** *- ஆண்டகையாம்*
*சேதுபதி காப்பத் திகழும் தமிழ்ச்சங்கம்*
*ஈது* ***பதினாலாண் டினிதெய்தித்*** *- தீதின்றி*
*மன்னியது மற்றிதற்கு மாதகையோய் நின்வரவும்*
*உன்னியதி லாமே யுறுதலால் - துன்னு*
*வளமருவி யாண்டு மகிதலத்திச் சங்கம்*
*தளர்வகன்று வாழும் தகைத்து"*

*என்று மங்கல வாழ்த்துக் கூறி வரவேற்றுச் சிறப்பித்தனர்.*

*செக்கோசுலோவேகியா நாட்டுத் தமிழறிஞர்* **டாக்டர் திரு. கமில் சுவலபெல்** *அவர்களுக்குத் தமிழ்ச் சங்கச் சார்பில் 10-3-58 ஆம் நாள், ஒண்வுபெற்ற மாவட்ட நடுவர் திரு.பி.* **ரெங்கசாமி நாயுடு** *அவர்கள் தலைமையில் வரவேற்பும் பாராட்டும் வழங்கப்பெற்றன. தலைவர் சிறந்த பாராட்டுரை வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். திரு.* **வி. பி. ஆர். கங்காராம் துரைராசு** *அவர்கள் பாராட்டுரை வழங்கினர். கமில் சுவலபெல் தமக்கு அளிக்கப் பெற்ற வரவேற்புக்கும் பாராட்டுக்கும் நன்றியுரைத்துப் பேசினார். அப்பொழுது "எமது நாட்டுப் பல்கலைக் கழகங்களில் செக் மொழியே பயிற்சி மொழியாக உள்ளது. அதுபோல் இங்குத்* **தமிழ் மொழி பயிற்சி மொழியாக இல்லாதது இருப்பது வியப்பாக இருக்கிறது"** *என்றும், "நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கும் பொழுது பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது. எடுத்துக் காட்டாக வானொலி என்ற அழகான தமிழ்ச் சொல் இருக்கும் பொழுது ஆகாசவாணி என்ற சொல்லைப் பயன் படுத்துவது அறிவின்மையாம்" என்றும் இன்னபல செய்திகளையுரைத்தார். செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்* **திரு. இரா. வே. நாராயணன்** *நன்றியுரைத்தார்.*

*இவ்வாறு தமிழ்ச் சங்கம் தான் மேற் கொண்ட தமிழ்ப் பணியுடன், தமிழ் தொடர்பாகச் செய்த பொதுப் பணிகளும் பல. அவற்றுள் ஒரு சிலவற்றையே இவண் குறித்தோம். இன்னபிறவும் உள.*

# 8. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை

தமிழ்ச் சங்கச் சார்பில் தோன்றிய கல்லூரிக்குப், பாற்கர சேதுபதியின் பெருங்கொடையையும், அவர்தம் அரவணைப் பையும் கருதிச், சேதுவேந்தர்களின் செந்தமிழ்ப் பணிக்குச் சான்றாகத் திகழுமுகத்தான், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை என்னும் பெயர் வைக்கப் பெற்றது. இப்பெயரில், தனி யொருவர் பெயரைச் சுட்டிச் சொல்லப் பெறாமை நோக்கத் தக்கதாம். இவ்வாறே, பாண்டித்துரைத்தேவர் தம் அரண்மனையிலும், சேதுவேந்தர்கள் தம் அரண்மனையிலும் தொகுத்து வைத்திருந்த நூல்களையும் ஏட்டுச்சுவடிகளையும் ஒருங்கே வழங்கி நிலை பெறுத்திய நூல் நிலையத்திற்கும், 'பாண்டியன் புத்தக சாலை' என்னும் பொதுப் பெயர் சூட்டியமையும் சிறப்பாக நோக்கத் தக்கதாம். 'நல்லறச் செயல் செய்வார் நாட்டம் எத்தகைய விழுமியதாய் விளங்கவேண்டும்' என்பதற்கு இவையும், **'மதுரைத் தமிழ்ச் சங்கம்'** என்னும் பெயரும் இன்ன பிறவும் சான்றுகளாம்.

சேதுபதி உயர்பள்ளியின் ஒரு பகுதியில் தொடங்கிய தமிழ்க்கல்லூரி, பின்னே தனக்கென ஓரிடத்தைப் பெற்று நற்பணியாற்றியது. தமிழ்ச்சங்கத்தின் உறுப்புகள் எல்லாமும் ஓரிடத்தே இருந்து உயர்பணி செய்தலை விரும்பிய பாண்டித்துரைப் பெருமகனார், தம் மாளிகையையே தமிழ்ச் சங்கத்துக்கென வழங்கினார். "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே" என்பதற்குக் கண்கண்ட சான்றாகத் தமிழ்ச் சங்க மாளிகை இன்றும் விளங்குகின்றதாம்.

சங்கத்திற்கெனத் தாம் வாழ்ந்த வளமனையையே வழங்கிய பெருமகனார், தம் அவைப் புலவராம் திரு. நாராயண ஐயங்காரைச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைத் தலைமை யாசிரியராகவும் அமர்த்தம் செய்தார்.

திரு. நாராயணர் மேல் தேவர் கொண்ட பற்று மிகப் பெரிது; அவர் புலமைத் திறத்தை மதித்த பான்மை அதனினும்

பெரிது; ஒரு நாள் வெயிலில் நடந்து வந்த களைப்பால் தம் கட்டிலிலே நாராயணர் அயர்ந்து உறங்கினாராக, அவரை எழுப்புதற்குச் சென்ற ஏவலனைத் தடுத்துக், கட்டிலன் பக்கல் ஒரு நாற்காலியிட்டு அமர்ந்து, தாமே விசிறிக் கொண்டு விசிறிக் 'கவரி வீசிய இரண்டாம் காவலராக' விளங்கியவர் பாண்டித்துரை. இவ்வுருக்கமான நினைவுகளையெல்லாம் ஒருங்கே கொண்டு, இருக்கும் வரையும் பெருக்கமான பணி செய்தார் நாராயணர்.

நாராயணர் பணியை உடனிருந்து கண்ட மு. இராகவ ஐயங்கார், "நூற்றுக்கணக்கான மாணவருக்குத் தமிழறிவூட்டி அக் கல்வித்துறையைப் பரவச் செய்து தமிழ்க் குலபதியாக விளங்கியவர் அதன் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியராய் இருந்த திரு. நாராயண ஐயங்கார் அவர்களே என்பதை நாம் இங்கே குறிப்பிடத் தகும்" என்கிறார்.

தமிழ், வடமொழி, மந்திரம், மருத்துவம், சோதிடம், தருக்கம் இன்னபலவற்றில் நாராயணர் சிறந்து விளங்கினார்; போதிக்கும் திறம், எழுத்தாற்றல், ஆராய்ச்சி ஆகியனவும் கொண்டிருந்தார். இவையெல்லாம் அவர் மேற்கொண்ட பணிக்குப் பெருமை சேர்த்தன. நாற்பது ஆண்டுகளுக்குமேல் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைத் தலைமையாசிரியராக விளங்கி அவர் செய்தபணியால், தமிழ்நாடு தமிழறிஞர்கள் பலரைப் பெற்றுச் சிறப்புற்றது. தமிழ் மொழிக்கு ஆக்கங்கள் செய்யவல்ல அறிஞர்களும் சங்கத்தின் வழியே உருவாகி அரிய தொண்டுகள் செய்தனர்.

சங்கக் கல்லூரி ஆசிரியர்களாக விளங்கியவர்களுள் குறிப்பிடத்தக்க பேரறிஞர் **அரசஞ் சண்முகனார் ஆவர். மேலும் சுந்தரரேசுவரஐயர், கோபாலையர், நல்லசிவன் பிள்ளை கே. சிவஞானம்பிள்ளை, அப்பனையங்கார், இராமானுச ஐயங்கார்** என்பாரும் ஆசிரியர்களாக இருந்தனர். இவர்களும் அவரவர் திறங்காட்டிக் கற்பித்ததுடன், செந்தமிழ் இதழில் கட்டுரையும், கவிதையும் வரைந்துளர். சங்கத்து விழாக்களில் பங்கு கொண்டுளர்; தேர்வுப் பொறுப்பாளராகக் கடமை புரிந்துளர், இவர்களுள் பின்னவர் இருவரும் நாராயணருக்குப் பின்னே தலைமையாசிரியராகவும் இருந்தனர். சங்கம், எண்பது ஆண்டுகளின் முன்னே தோன்றியது. அதனைத் தோற்றுவித்த பெருமக்கள் கொண்ட நல்லதிட்டங்கள் இன்றைக் குடியரசாலும் செய்யப் பெறாவாய் அமைகின்றன.

தமிழ்கற்க விரும்புவாரைத் தேடித் தேடிக் கல்லூரியில் சேர்த்தனர். அவர்களுக்கு உண்டியும் உடையும் வழங்கினர்; உறைவிடமும் தந்தனர்; வேண்டும் பயன் பொருள்களும், பாடநூல்களும் பரிந்து உதவினர். "ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம் சான்றோ ரும்உண்டு கொல்" என ஈராயிரம் ஆண்டுகளின் முன்னே மதுரை நகர்த் தெருக்களில் வினாவிய வினாவுக்கு உண்டு என இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தே மெய்ப்பித்துக் காட்டிய செய்தி இது! இதன் அருமையை எண்ணுந்தோறும், எண்ணத்தால் சிறந்த அப்பெருமக்களின் சிறப்பு விண்ணேறிப் பறக்கவே செய்கின்றது!

மாணவர்கள் போற்றப் பெற்ற வகைதான் இப்படி என்றால் ஆசிரியர்கள் எப்படிப் போற்றப் பெற்றனர்? திரு. நாராயண ஐயங்கார் 'தம் இல்'லில் இருந்து தமிழ்ப்பணி செய்ய வேண்டும் எனத் தமிழ்ப்பாண்டித்துரை எண்ணினார். அதனால் 5000 ரூபாவழங்கி, வீடுகட்டிக் கொள்ள வேண்டினார். நாராயணரோ, ஈராயிரத்து ஐந்நூறு ரூபாயில் குடியிருப்பு அமைத்துக் கொண்டார். 'இவ்வளவு போதும்' என்னும் காலநிலை அது! எஞ்சியதைப் பாண்டித்துரையாரிடம் தந்தார் அப்பெரியவர்! இப்பெரியவர், என்ன செய்தார்? 'தம்இல்' இருக்கும் அப்பெரியவர். தமதுபாத் துண்ணச் செய்ய விழைந்தார். அதனால் விளைநிலம் வாங்கிக் கொள்ள ஏவினார்! புலவளத்தால் சிறந்த நாராயணர், நிலவளத்தாலும் சிறந்தார். இவர்க்கு மட்டும்தானோ இவ்வுதவி செய்தார் தேவர்?

'நோய்முற்றி வயிற்றினுள் நாபியின் கீழ்க் கழலையொப்பத் திரண்டு இருமலமும் வெளிப்படாவண்ணம் தடுத்து ஆவிபோக்க முயன்றது. அக்காலைப் பல சுதேச மருத்து வரிடத்தும் பல ஆங்கில மருத்துவரிடத்தும் சென்று பிணிதீர்த்துக் காத்தல் வேண்டுமெனப் பெரிதும் வேண்டினேன். அவரெல்லாரும் அந்நோய் கருவிகொண்டு சோதிக்கற் பாற்று என்றும், அதுவும் முற்றியபடியான் இனிச் செய்யின் உயிர்க்கேடு செய்யும் என்றும் சொல்லினர். பின்னர்ப் பிறநாடு சென்றாயினும் பிணிதீர்ப்பான் கருதி, யான் அக்காலைச் சேதுபதி கலாசாலையிற் கற்பிக்கும் தொழில் பெற்றிருந் தமையால், மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியும் பாலவனத்தம் ஜமீந்தாரும் உத்தம குணமேருவும் வறியார்க் கொன்றீவதே ஈகையெனக் கொண்ட பெருவள்ளலுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்களைக் கண்டு

*நடந்தன வுரைத்தேன். உடனே அவர்கள் கலாசாலையில் யான் பெற்று வந்த ஊதியத்தை ஓராண்டுவரை, வேலையின்றிப் பெறுமாறு ஆணை செய்தளித்ததூஉம்அன்றி இருநூறு வெண்பொற் காசும் பரிசிலாக அளித்தார்கள். அவர்கள் செய்த பேருதவியை யான் என்றும் மறவேன்'. கூறுபவர் பெரும் புலவர் **அரசஞ்சண்முகனார்.** அவர் இயற்றிய தொல்காப்பியச் சண்முகவிருத்தியின் முதலாவது பகுதியாகிய பாயிர விருத்தியில் 'நன்றிகூறல்' பகுதியில் நவில்கின்றார்.*

*இருபத்தைந்து ஆண்டுகள் பணிமூப்புடையவராக இருந்தாலும் - ஒன்றரையாண்டுக்காலம் மருத்துவ விடுப்புக்கு உரிமையாணை பெற்றவராக இருந்தாலும் - இரண்டு திங்களுக்கு மேல் மருத்துவ விடுப்புப் பெறுதற்கு 'மருத்துவக் கழகக் குழுவின்' ஆணைபெறவேண்டும் என்னும் இன்றை நிலைமை எங்கே? 1905 ஆம் ஆண்டில், பாண்டித்துரையார் செய்த தமிழ்ச் சங்க ஆட்சி நிலைமை எங்கே? எண்ணிப்பார்க்க வேண்டிய செய்தி இது.*

*கலாசாலையில் நடத்தப் பெற்ற பிரவேசபண்டிதம், பாலபண்டிதம், பண்டிதம் என்னும் மூன்று வகுப்புகளையும், அவ்வகுப்புகளுக்கு நடாத்தப் பெற்ற தேர்வுகளையும், அத் தேர்வுப்பாடத் திட்டங்களையும், அவற்றுக்கு வழங்கப் பெற்ற பரிசுகளையும் பின்னிணைப்புப் பகுதியில் உள்ள தீர்மானங் களில் கண்டு கொள்க.*

*தமிழ்ச்சங்கத்தின் மூன்றாம் ஆண்டு விழாவின் போது தேர்வுக்குழு 26.5.04 காலையில் கூடியது. அதில் மெட்ரிக், எப். ஏ. பீ. ஏ. வகுப்புகளுக்குச் சங்கத்தாரால் நடாத்தப் பெறும் தேர்வுகளுக்கு உ.வே. சாமிநாதையர் முதலாக ஒன்பதின்மர் தேர்வாள ராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். அவர்கள் ஒன்பதின்மர்க்கும் இன்ன வகுப்பு இன்னதேர்வுத் தாள் என்றும் தெரிவு செய்யப் பெற்றன. விடைத்தாள் திருத்துதற்கு உதவித் தேர்வாளராக மூவர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தேர்வு நிகழும் இடங்களுடன், தேர்வுமேற்பார்வையாளர்களும் அக் கூட்டத்தி லேயே முடிவு செய்யப் பெற்றனர். மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரம், திருச்சி, கும்பகோணம், கூடலூர், சேலம், கோயம்புத்தூர், சென்னை என்பவை தேர்வு மையங்களாகக் கொள்ளப் பெற்றன.*

*தனித்தமிழ்த் தேர்வுக்குத் தேர்வு அலுவலர்களாகப் பதினைவர் தனியே தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இப் புலவர்களை*

யெல்லாம் பட்டியலிட்டுக் காட்டுவதாயின் மிக விரிவுறும் என்பதால் அவ்வாறு செய்யப் பெறவில்லை. ஆனால், இதனை மேலோட்டமாக நோக்குவாரும் தமிழ்ச்சங்கம் அந்நாளில் தமிழகமும் ஈழமும் தண்ணிழல் பரப்பித் தமிழ்ப்பணி செய்த சிறப்பினை உணரலாம். தமிழுக்கு நிலைத்த தொண்டு செய்த பெரும்பெரும் புலவர்கள் அனைவரும் சங்க எல்லைக்குள் தங்கித் தனிப்பெரும் தொண்டு செய்த பெருமை பூரிப்பை ஏற்படுத்துதல் உண்மையாம்.

தனித்தமிழ்த் தேர்வுகளுக்கு வகுக்கப் பெற்ற பாடத் திட்டம் மாற்றப்பெற்று 1922 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் முதல் நடைபெறும் தேர்வுக்குப் புதுத்திட்டம் ஒன்றை டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் வகுத்துத் தர, அதனைப் பேரவை ஏற்றுக் கொண்டது. அதே பேரவையில் தமிழ்ச் சங்கக் கலாசாலை வகுப்புகள் இரண்டு புதிதாகத் தோற்றுவிக்கப் பெற்றன. அவை பாலர் கீழ் வகுப்பு, பாலர் மேல் வகுப்பு என்பன. ஒவ்வொன்றும் ஒன்றரை ஆண்டாக மூன்றாண்டுப் படிப்பாக அவை அமைக்கப் பெற்றன.

பாலர் கீழ் வகுப்பு, மேல் வகுப்பு எனினும் பாடத்திட்டம் எப்படி? தமிழ்ச் சங்கப் பாடத்திட்டத்தின் சிறப்புத்தான் கற்றோர்களால் நன்கு அறியப் பெற்ற தாயிற்றே! அச்சங்கத் தேர்வில் வைக்கப் பெற்ற 'செய்யுள் இயற்றுதல்' என்னும் ஒரு தாள் - பாவும் பாவினமும் இயற்றும் புலமைத்தாள் - இப்பொழுது எந்த மேனிலைத் தேர்வுக்குக் கூட வைக்கப் பெற்றது இல்லையே! அந்நாளிலும் பல்கலைக்கழகப் புலமைத் தேர்வுக்கும் தழுவிக் கொள்ளப் பெற்றதில்லையே!

சகலகலா வல்லிமாலை, சரசுவதி யந்தாதி, கருவை வெண்பாவந்தாதி, மணவாளநாராயணசதகம், இரத்தின சபாபதிமாலை, நாவலர் இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம், சூடாமணி நிகண்டு 11, 12 ஆம் தொகுதிகள், நாவலர் இலக்கண வினாவிடை, கணக்கு கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், எண் சுவடி என்பவை பாலர் கீழ் வகுப்புப் பாடத்திட்டம்.

நான்மணிக்கடிகை, ஆசாரக்கோவை, மறைசையந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருவருணைக் கலம்பகம், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், வருசாதி நூலில் முக்கியமானவை, நன்னூல் மூலம், காரிகை மூலம் நாவலர் இலக்கணச் சுருக்கம் என்பவை பாலர் மேல் வகுப்புப் பாடத்திட்டம்.

*தமிழ்ச் சங்கத் தேர்வுபற்றி ச. பூபாலபிள்ளை என்பார் பருக்ஷை என்னும் தலைப்பிட்டுப் பொது, சங்கம், பரீக்ஷகர், மாணவர் என்னும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரை ஒன்றெழுதிச் செந்தமிழில் வெளியாகியுள்ளது (18:343-349) அதில் தமிழ்ச் சங்கத் தேர்வு வினாக்களைக் குறித்து வெளிப் படுத்தியுள்ள ஒரு குறிப்பு நோக்கத்தக்கது.*

*"வெண்பா இயற்றுமுறை ஒருவன் கற்றுளனோ என்று அறிய வேண்டின், யாதானும் ஒரு விஷயத்தின் பேரில் ஒரு வெண்பாவை இயற்றும்படி கேட்கலாம். மேலும், அவனது திறமையை ஊன்றி ஆராய வேண்டுமாயின், அரிய விஷய மொன்றைத் தாமாக நியமித்து அதன் பேரில் இன்னபொருள் அமைய ஒரு வெண்பாச் சொல்லென்று கேட்பின் போதுமாய் இருக்கும். அங்ஙனஞ் செய்யாமல், திருப்பாற் கடலையும் சேடனையும் சிறப்பித்து ஒரு நேரிசை வெண்பா 'வெண்டிரை' எனத் தொடங்கி 'விழைந்து' எனமுடிய, ஆடு, மாடு என்னுஞ் சொற்கள் மிருகங்களைக் குறிக்காமல் வேறு பொருளில் விரவிவர, ஐந்து சீர் ஈரசைச் சீராகவும் பத்துச் சீர் மூவசைச் சீராகவும் அமைய, ஒற்றுவிரவாமல் பாடுக எனப்பணிப்பின் ஐயகோ! இளம் மாணவர் என்னதான் செய்குவர்!" எனக்கூறி இரங்குகிறார். இவ்விரங்குதல் அக்காலத்தில் தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்த் தேர்வுக்குக் கேட்கப் பெற்ற வினாவின் கடுமையைக் காட்டும் ஒரு சான்றாகும். இத்தகைய கடுந்தேர்விலும் வெற்றி கொண்டு முதன்மையுற்றும், தங்கத்தோடாவுற்றும் சிறந்தோர் எத்தகைய உழைப்பாளர்கள் என்பதைக் கூறவேண்டிய தில்லை, 'நுனிப்புல் மேய்வார்' நெருங்கவும் ஒண்ணாதது பண்டிதத் தேர்வு என்க.*

*பண்டிதத் தேர்வு எழுதும் மாணவர்க்குப் பயன்படும் என்னும் கருத்தால் முத்தேர்வுகளின் வினாக்களும் முழுமையாகச் செந்தமிழில் வெளியிடும் வழக்கமுண்மை வெளிப்படுகின்றது. செந்தமிழில் பதினெட்டாம் தொகுதியில் (1920)ஐந்தாம் பகுதியில் பண்டிதர்தேர்வு வினாத்தாள்களும், ஆறாம் பகுதியில் பாலபண்டிதர் தேர்வு வினாத்தாள்களும், ஏழாம் பகுதியில் பிரவேசபண்டிதர் தேர்வு வினாத்தாள்களும் அச்சிடப் பெற்றுள.*

***பண்டிதர் இலக்கணம் 1, இலக்கணம் 2, இலக்கியம்1, இலக்கியம் 2, வசனமும் தருக்கமும், செய்யுளியற்றல், வியாசம் என்பவற்றை முறையே, உ.வே. சாமிநாதையர்,***

***இரா. இராகவஐயங்கார், இரா. சுப்பிரமணியக்கவிராயர், தி. த. கனகசுந்தரம்பிள்ளை, அ. குமாரசாமிப் பிள்ளை, வெ.ப. சுப்பிரமணிய முதலியார், மு. இராகவையங்கார்*** *என்பார் குறித்துளர். பாலபண்டிதர் வினாத்தாள்களை முறையே இ.வை* ***அனந்தராமையர், ந. மு. வேங்கடசாமி நாட்டார், ரெ. அப்புவையங்கார், முகதிரேசச் செட்டியார். அ. கந்தசாமிப் பிள்ளை, ச. அரிகர ஐயர்,*** *வி. முத்துசாமி ஐயர் என்பார் குறித்துளர். பிரவேசபண்டிதர் தேர்வு வினாத்தாள்களை முறையே* ***அ. கோபாலையர், மு. கோபாலகிருட்டிண மாசாரியார் ஆ. கார்மேகக்கோனார் ரெ. இராமையங்கார், மு. ரா. அருணாசலக்கவிராயர், திருஞானசம்பந்தக்கவிராயர் ச. பூபாலப்பிள்ளை*** *என்பார் குறித்துளர். இவ்வாறு பி. ஏ. முதலிய தேர்வு வினாத்தாள்களும் முழுதுற அச்சிடப் பெற்றுள. படித்த பாடத்தை மாணவர்கள் தாம் தாமே ஆராய்ந்து கொள்வதற்கும், தேர்வுக்குத் தம்மை அணியப்படுத்திக் கொள்வதற்கும் இம்முறை வாய்ப்பாம். தேர்வு வினாவிடைகளை அச்சிட்டு விற்பனையைப் பெருக்கிக் கொள்ள முந்தும் செய்தித்தாள்கள் மலிந்துள்ள இக்கால நிலையில், அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ச்சங்கம் மேற்கொண்ட அரிய கடைப்பிடி தெளிவாகாமற் போகாது.*

*1935 ஆம்ஆண்டில் பண்டிதர் முத்தேர்வுப் பாடத் திட்டங்களும் மாற்றியமைக்கப் பெற்றன. 1953 இல் தேர்வு அமைப்பாளர் என்னும் பதவியமைப்பு ஏற்படுத்தப் பெற்றுளது. தேர்வு அமைப்பாளராகத் திரு.* ***கி. பழனியப்பன்*** *அவர்கள் திகழ்ந்தனர். பின்னர்ப் பேராசிரியர்* ***சி. இலக்குவனார்*** *அவர் களும் தேர்வுக் குழுத்தலைவராக இருந்து அணி செய்துள்ளனர்.*

*1934 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாள் (பவ ஆடி 31) தமிழ்ச் சங்கப் பேரவை கூடியது. அதில் நாவலர்* ***ச. சோமசந்தர பாரதியார்,*** *தேர்வு தொடர்பான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதனைத்* ***திரு. வெ.ப. சுப்பிரமணிய முதலியார்*** *வழிமொழிந்தார். அத் தீர்மானம்: "இச்சங்கத் தனித்தமிழ்ப் பரீக்ஷைகளில் இப்போதுள்ள படியே ஏழுபாட வினாப் பத்திரங்கள் இருக்க வேண்டும் என்றும், ஆனால், அவைகளை இலக்கண வினாப்பத்திரம் 2, செய்யுளி யற்றல் வினாப்பத்திரம் 1 ஆக மூன்று வினாப் பத்திரங்களும் முதல் வகுப்பும், செய்யுட்பாட இலக்கிய வினாப்பத்திரம் 2, வசனபாட வினாப்பத்திரம் 1, வசனக்கட்டுரை வினாப் பத்திரம் 1*

ஆக நான்கு வினாப்பத்திரங்களும் இரண்டாவது வகுப்புமாக இருவகுப்பாக வைத்து, தனித் தனி ஏழு வினாப் பத்திர விடைகள் சம்பந்தமாயும் 25% அம்சமும், ஒவ்வொரு வகுப்புக்குள்ள பத்திரங்களின் மொத்தத்தில் $33^{1}/_{3}$% அம்சமும், இருபெரு வகுப்புக்கும் சேர்ந்து மொத்தத்தில் 40% அம்சமும் வாங்குபவர்களே தேர்ந்தவர்களாகக் கருதப் படுவார்கள் என்று தீர்மானிக்க லாயிற்று"

தனித் தமிழ்த் தேர்வுத் திட்டத்தை வகுத்துச் செவ்வையாகத் தமிழ்த் தொண்டில் தலைப்பட்ட சங்கத்தார், அத்தேர்வின் தகுதியைப் பெருக்குதற்கும், பயில்வார் ஊக்கத்தை உந்துதற்கும் திட்டமிட்டுப் பரிசும் பாராட்டும் வழங்குதலைத் தொடக்கமுதலே கைக் கொண்டனர். அப் பரிசுத் திட்டமும் சங்கத்தையே முற்றும் சார்ந்து இராவண்ணம் வளமிக்க உளத்தோரால் தத்தம் பொறுப்பில் எடுத்துக் கொள்ளப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாம்.

25.5.1904 இல் நிகழ்ந்த சங்க ஆய்வுக் குழுவில் தவத்திரு மறைமலையடிகள் முதலிய பத்தொன்பது பேரறிஞர்களும் சங்கத்து உறுப்பினர்களும் கூடியிருந்தனர். பாண்டித்துரை தலைமை ஏற்றிருந்தார். அப்பொழுது மதுரை மாவட்டம் இளையான்குடி எம். கே. எம். அப்துல் காதிறு ராவுத்தர் சங்கத் தேர்வுகளில் ஒன்றாகிய பிரவேசபண்டிதத் தேர்வுக்குரிய இரண்டாம் பரிசாகிய ரூபா முப்பதையும் அளிக்க ஏற்றுக் கொண்டார். இராமநாதபுரம் பிரிவு சமீந்தார் முத்துத் துரைசாமித் தேவர் பிரவேசபண்டிதத் தேர்வின் மூன்றாம் பரிசாகிய ரூபா இருபதையும் வழங்க ஏற்றுக் கொண்டார். ஆங்கிலக் கல்லூரித் தேர்வுகளுள் ஒன்றாகிய மெட்ரிக்குலேசன் தேர்வின் நான்காம் பரிசாகிய ரூபா பதினைந்தைத்தர, டி. சி. சீநிவாசையங்கார் முன்வந்தார். ஆங்கிலக் கல்லூரி பீ. ஏ வகுப்பின் முதற் பரசாகிய ரூபா ஐம்பது பெறத்தக்க தங்கப் பதக்கத்தையும், தனித்தமிழ்த் தேர்வுகளுள் பிரவேச பண்டிதத்தேர்வின் முதற்பரிசாகிய ரூபா ஐம்பது பெறத்தக்க தங்கப்பதக்கத்தையும் பாண்டித்துரைத் தேவர் ஏற்றுக் கொண்டார். இம்மரபு பின் வருவோராலும் போற்றப் பெற்றது. கோவை வழக்கறிஞர் திரு.ப. வெங்கடாசல முதலியார் 28. 5. 1923 இல் எழுதிவைத்த அறக்கட்டளையில். மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் சிறந்த மாணவர்க்குப் பரிசு அளிப்பதற்காக ஆண்டுதோறும் ரூபா இருபத்தைந்து உதவிவர வேண்டுமெனத் திட்டப் படுத்தியுள்ளார். இதனை 1923 டிசம்பர் 25இல்

கூடியசெயற்குழுத் தீர்மானத்தால் அறிந்து கொள்கிறோம் (செந்தமிழ் 22:79). தேவகோட்டை வழக்கறிஞர் **டி.வி. கிருட்டிணையங்கார்** ரூ. 1001 வைப்பு நிதியாக வழங்கி, சங்க ஆங்கிலத் தமிழ்த் தேர்வில் பி.ஏ. வகுப்பு இரண்டாம் பரிசைத் **திரு. டி.சி. சீனிவாசையங்கார்** பெயரால் தங்கப்பதக்கமாக வழங்க உதவினார். இதனை 17.9.36இல் **நாகநாத சேதுபதி** தலைமையில் இராமநாத புரத்தில் கூடிய தமிழ்ச்சங்கச் செயற்குழுக் கூட்டத் தீர்மானத்தால் அறிகிறோம். (செந்தமிழ் 33:3:340). இவ்வாறு, 'பிறர்க்கென முயலும்' பெருந்தகையர் சீரால் சங்கப்பணி தளர்வின்றி நடந்தது என்பது விளங்குகின்றது.

தமிழ் வளர்ச்சியில் கருத்துடைய சங்கம், பிற இடங்களில் நடாத்தப் பெற்ற தமிழ்க்கல்லூரி மாணவர்களின் தேர்ச்சியை மதிப்பிடுதலிலும், அக்கல்லூரி நடாத்துவார்க்குக் கருத்துரை வழங்கி ஏற்றம் பெறுவித்தலிலும் ஈடுபட்டு இருந்தது என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டையைச் சார்ந்த **கோனாப்பட்டு** நகரத்தில் தமிழ்கற்கும் மாணவர்களுக்கெல்லாம் இலவசமாய்க் கற்பிக்குமாறு **அந்நகரத்தாரால் கற்பக விநாயகர் கலாசாலை** என்னும் ஒரு தமிழ்க்கல்லூரி தோற்றுவிக்கப் பெற்று நன்றாக நடைபெற்று வந்தது. அக்கல்லூரிக் கட்டிடத்தில் ஞானசம்பந்த நற்சபை என்னும் பெயரிய தமிழ்ச்சங்கமும் அமைக்கப் பெற்றுச் சிறப்பாக நடைபெற்று வந்தது. அத்தமிழ்ச்சங்க மாணவர் திறனை மதிப்பிட்டு அறிதற்காக மதுரைத் தமிழ்ச் சங்கச் செயற்குழு தமிழ்ச்சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியரை அனுப்பி வைத்தது. அவர் அங்குச் சென்று ஆய்வு நடாத்தி அருங்கருத்துகள் வழங்கி யுள்ளார்.(செந்தமிழ் 13:126) கோனாப்பட்டு **சு.மு. முருகப்பச் செட்டியார்,** "தமிழ்ச்சங்கம் மூன்று திங்களுக்கு ஒருமுறை ஆய்வு நடாத்தி உதவ வேண்டு மென்று 6-10-1914 இல் வேண்டிக் கொண்டபடி சங்க ஆட்சிக்குழு தீர்மானித்து இந் நடவடிக்கை எடுத்தது.

இனி, 'ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல்' என்பதற்கு ஏற்பச் சங்கம் செயலாற்றியது. சென்னைப் பல்கலைக்கழகத்தார், தேர்வுக்கு என ஏற்படுத்திய பாடநூலில் பிழைகள் பல இருந்தன. அவற்றை அவ்வப் போது சங்கப் புலவர்கள், அரசுக்கும், பல்கலைக் கழகப் பாடநூல் குழுவுக்கும் நினைவூட்டித் திருத்தம் செய்வித்துள்ளனர்.

அப்பணியைச் செய்தற்குச் சங்கத் தலைவர் எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சி பற்றியும் தீர்மானித்துள்ளனர். (செந்: 13:428) இவற்றையெல்லாம் நோக்க அந்நாளில் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டிருந்த மொழிப் பாதுகாப்பு நன்கு புலப்படும்.

சங்கத் தனித் தமிழ்த் தேர்வு, ஆங்கிலத் தமிழ்த் தேர்வு என்னும் இருவகைத் தேர்வாலும் சிறந்து, நிலைத்த தமிழ்த் தொண்டு செய்தோர் பட்டியல் நெடிதாகும். தமிழுக்கெனக் கல்லூரியும், பாடத்திட்டமும், தேர்வும் தொடங்கிய முதல் அமைப்பே இச்சங்கம் ஆகலின், இந்நாளைத் தமிழ்ப் புலமையர் எந்நிலையர், எத்தகுதியர் எனினும் அவர்க்கெல்லாம் மூலவராக விளங்கியவர்த தமிழ்ச் சங்கப் பண்டிதர் ஒருவரே என்பதைத் திட்டமாகக் கூறிவிடமுடியும்! ஆகலின் அவரை யெல்லாம் சுட்டுதல் வேண்டா. எனினும், சிலரையேனும் சுட்டுதல் கடமையெனக் கொள்வோம்.

சு. அரிகர ஐயர். சு. அருளம்பலனார். அன்புகருணை யானந்தா, இரா. இராசகோபாலையங்கார், இராசாக் கண்ணனார், வ.சு. இராசையனார், இராமசுப்பிரமணிய நாவலர், லெ.ப. கரு, இராமநாதன் செட்டியார், மீ. பொன். இராமநாதன்செட்டியார், தி. இராமானுசன், இராமையங்கார், இலட்சுமி நரசிம்மன், ஐயன்பெருமாள் கோனார், அ. கந்தசாமிப்பிள்ளை, மீ, கந்தசாமிப்புலவர், கந்தசாமியார், கனகராசையர், வர்மாவதாரக் கோனார், டி.வி. கோபாலன், சங்குப்புலவர், இல. சண்முகசுந்தரம், சிவசுப்பிரமணிய ஐயர், தேவநேயப்பாவாணர், நடேசகவுண்டர், நயினார் முகமது, நாராயணசாமி, முத்துசாமிப் புலவர், முத்துவேங்கடாசலம், நா. பார்த்தசாரதி, புருசோத்தம நாயுடு, பூவராகம் பிள்ளை, வீரராகவ ஐயங்கார், வேங்கடசாமி நாட்டார் என்பார். தனித்தமிழ்த் தேர்வில் தேறிச் சிறப்புற்றோர். இத்தகையர் பன்னூற்றுவர் என்பது அறிந்ததே. இவர்களுள் இத்தமிழ்ச் சங்கத் தேர்வுப் பயனை ஒருவர் உரைப்பது கேட்போம்:

“அன்று ஆங்கிலப் பற்றாளனாகவும் பேச்சாளனாகவும் மாணவர் (ஆங்கில) இலக்கியமன்றச் செயலாளனாகவும் இருந்ததனால், ஆங்கில இலக்கியத்தைக் கரைகாணவும், ஆக்கசுப்போர்டு (oxford) என்னும் எருதந்துறையிற் பணி கொள்ளவும் விரும்பினேன். ஆயினும், இறுதியில் தமிழ் கற்றதினாலும். இசைப்பாட்டும் செய்யுளும் இயற்றி வந்ததனாலும், இசைத்தமிழ்ப் பித்தனானதனாலும், நான்

அறியாவாறு இறைவன் என் மனப்பாங்கை மாற்றியதனாலும்" நான் கற்ற ஆம்பூர்ப் பள்ளியிலேயே, அஃது உயர்நிலைப் பள்ளியாக வளர்ச்சியுற்றிருந்த போது உதவித்தமிழாசிரியனாக 1921 ஆம் ஆண்டில் அமரநேர்ந்தது. அதன்பின் அப்பதவிக்கும் தலைமைத் தமிழாசிரியப் பதவிக்கும் முழுத் தகுதி பெறுமாறு 1924 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வெழுதித் தேறினேன். அதனால் எழுந்த செருக்கினாலும் தமிழ் வெறியினாலும், ஆங்கிலத்தை அறவே புறக்கணித்து நான் ஆங்கிலம் பேசக் கூடாது என்றும் பிறர் பேசின் செவிமடுக்கக் கூடாது என்றும் சூளிட்டுக் கொண்டேன். அம்மயக்குப் பத்தாண்டு தொடர்ந்தது. அதனால் தமிழாராய்ச்சியில் ஆழ முழுகித் தமிழின் அடிமட்டத்தைக் கண்டேன். ஆயினும், ஆங்கிலப் பேச்சாற்றலை இழந்து விட்டதனால் ஆங்கிலப் பட்டம் பெறும்வரை கல்லூரியுள் கால்வைக்க முடியாது போயிற்று. அதனால் பதவியுயர்வும் பொருளியல் முன்னேற்றமும் இல்லாது போயின. (தாமரைச் செல்வர் வ.சு. பவளவிழாமலர். 21)

பண்டிதத் தேர்வு தமிழ்ச்செருக்கு, தமிழ்வெறி, தமிழ் ஆராய்ச்சியில் ஆழமுழுகி அடிமட்டம் காணும் கூர்ப்பு ஆகியவற்றை உண்டாக்கியது வீணாகிப் போகிவிடவில்லை. "தமிழே உலக முதன்மொழி" என்பதை நிலை நாட்டிய மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் உரை இதுவாம்! அவரை உருவாக்கிய பெருமை சங்கத்திற்கு உண்டு என்றால், அவர் உருவாக்கிய படைப்புகளுக்கெல்லாம் மூல பண்டாரமாக (கருவூலமாக) இருந்தது சங்கந்தானே! இப்படியே சங்கப் புலமையாளர்கள் படைப்பெல்லாம் பட்டியலிட்டால், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய உறையுளாக இலங்கிய இடம் சங்கமே' என்ற முடிவுக்கு வரநேரும்.

சங்கம் தொடங்கிய முதல் ஆங்கிலத் தமிழ்த் தேர்வில் பி.ஏ., வகுப்பில் முதல் நிலையில் முதல்வராகத் தேறி 50ரூபா பரிசும் சான்றிதழும் பெற்றவர், தணிகைமணி வ.சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள் ஆவர். ஒரு பல்கலைக்கழகம் செய்யும் பணியைத் தனியே நின்று தேவார திருவாசக திருக்கோவை நூல்களுக்கு ஒளிநெறியும் ஒளிநெறிக் கட்டுரை களும் வகுத்து, அப்பணிச் சிறப்புக்காக மதுரைப் பல்கலைக் கழகத்தால் டாக்டர் பட்டம் வழங்கப் பெற்றவர் அவர். இன்னும் திரு வையாபுரிப்பிள்ளை, இரா. பி. சேதுப்பிள்ளை முதலியவர்களும் இச்சங்கத் தேர்வில் சிறந்து தேறிப், பரிசும்

பாராட்டும் சான்றிதழும் பெற்றவர்களே. ஆதலின் இவற்றை எல்லாம் எண்ணியே சங்கஞ் செய்த பணியை மதிப்பிடுதல் வேண்டும் என்பதாம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் தனித்தமிழ்ச் தேர்வு தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் கடந்த பின்னரே, சென்னைப் பல்கலைக் கழகம் தனித்தமிழ் வித்துவான் தேர்வைக் கொணர்ந்தது. அதன் பின்னர்ப் புலவர் கல்லூரிகள் பல தோன்றின; அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சார்ந்த 'மீனாட்சி கல்லூரி'யும் தமிழ்ப் புலவர்களை உருவாக்கியது, கல்லூரிகளிலும் தமிழ் இளங்கலை முதுகலைப் படிப்புகள் வந்தன; புலவர்களும் முதுகலைப் பட்டம்பெற்றவர்களும் முனைவர்களும் பெருகினர்; இந்நிலையில் தமிழ்ச் சங்கம், தான் தோற்றுவித்த பண்டிதத் தேர்வை நடாத்துவதுடன், பல்கலைக்கழக உதவியுடன் கூடிய புலவர் கல்லூரியையும் தோற்றுவித்து நடாத்தியது. ஆதலால், தமிழ்ச் சங்கச் சார்பில் அமைந்த கிளை நிறுவனங்களுள் ஒன்றாகச் செந்தமிழ்க் கல்லூரி விளங்கலாயிற்று. பின்னர்க் காலச் சூழலாலும், வேலையின்மை இக்கட்டாலும், பண்டிதத் தேர்வு பெற்றோர்க்கு வேலைவாய்ப்பு இன்மையை அரசு வெளியிட்டது. பண்டிதத் தேர்வும் நிறுத்தப் பெறலாயிற்று.

செந்தமிழ்க் கல்லூரி தொடங்கிய வரலாற்றை, அந்நாள் தமிழ்ச் சங்கத்தலைவர் திரு. பி.டி. இராசன் அவர்கள் 14-8-58-இல் நிகழ்ந்த செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் பேசும் போது, 'திரு. பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்ட இத்தமிழ்ச் சங்கத்திலே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்க் கல்லூரி இருக்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கு உண்டாயிற்று. அதனால் டாக்டர் திரு. இலக்குமணசாமி முதலியார் அவர்களை நெருங்கிக் கேட்டோம். அவர்களுடைய நல்லெண்ணத்தாலும் ஆர்வத்தாலும் எமது குறிக்கோள் நிறைவேறிற்று' என்று கூறியுள்ளார்கள், தமிழ்ச் சங்கம் தளர்வுற்ற காலையில் அதனை நிலைபெறுத்தியவர்கள் இருவர் என்பதைக் குறிப்பிட வேண்டும். அவர்களுள், தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்துக் காவல் குழவி கொள்பவரின் ஓம்பிய பாண்டித்துரைத் தேவர் 1911 இல் மறைந்ததும், தளர்ச்சிப் பொழுதில் ஊன்றி நின்று உயரிய உழைப்பால் நிலைபெறுத்திய டி.சி. சீனிவாசையங்கார் ஒருவர்; அச் சீனிவாசர், 1951 இறுதியில் மறைந்ததும் ஆட்டங் கண்ட சங்கத்தை நிலைப்படுத்திய பி.டி.

இராசன் மற்றொருவர்! மற்றும், செந்தமிழ்க் கல்லூரியின் பணியை நினைக்கும் போது இவர்களுடன் திருவாளர்கள் கி. பழனியப்பன் வி. சண்முக சுந்தரம் ஆகியோர் பணிகளும் நினைவு கூரத்தக்கனவாம்.

செந்தமிழ்க் கல்லூரியைச் சீருற நடாத்துதற்கு 10-6-73 இல் தனியொரு குழு அமைக்கப் பெற்றது. அதன் தலைவர் திரு.எம். சங்கரபாண்டியனும், தாளாளர், திரு. எம். தனுக் கோடி பாண்டியனும் ஆவர். திருவாளர்கள் டி. பி.எம். பெரிய சுவாமி, டி.ஏ. தெய்வசிகாமணி, கே. கந்தசாமி, என்.எஸ்.முத்து மலைச்சாமி, வே. இ. பரசுராம், இரா. வே. நாராயணன், வி.சி. சீனிவாசன் ஆகியோர் உறுப்பினர்களாக உளர். பல்கலைக் கழக நியமன உறுப்பினராகத் திரு. முத்தரசு உள்ளார்.

## 9. செந்தமிழும் நூல்வெளியீடுகளும்

*சுபகிருது ஆண்டு கார்த்திகைத் திங்களில் செந்தமிழ் தொகுதி - 1, பகுதி - 1 வெளியிடப் பெற்றது (1903) ஆனால் பிலவ ஆண்டு ஆவணித்திங்களில் (1901) சங்கம் தோன்றிய போதே, நூல்களும் இதழ்களும் வெளியிடுதற்கு வாய்ப்பாகத் 'தமிழ்ச் சங்கமுத்திராசாலை' என்னும் பெயரில் அச்சகம் நிறுவுதல் திட்டம் சங்கத்திற்கு இருந்தது. அவ்வச்சகம் நிறுவப் பெற்றதும் திட்டமிட்டவாறு, இதழ் தொடங்கியது. தொடங்கிய இதழுக்குச் சூட்டப் பெற்ற பெயர் 'செந்தமிழ்' என்பது. தோற்றுவித்தோர் நோக்கு, எத்தகைய செவ்விது என்பது இப்பெயர் சூட்டானே நன்குவிளங்கும், இதனை மேலும் விளங்கிக் கொள்ள அந் நாளிலும், அதற்கு முன்னரும் நடைபெற்ற இதழ்களின் பெயர் களை அறிதல் துணையாம்.*

*உதயதாரகை (1841) தற்போதகம் (1848) தேசோப காரி (1860) தத்துவபோதினி (1893) ஜனபோதினி (1870) சத்தியவர்த்தமானி (1870) நற்போதகம் (1870) உபாத்தியாயர் (1887) சத்திய தூதன் (1887) மாதர் மித்திரி (1887) ஸ்ரீலோகரஞ்சனி (1887) பெண்மதி போதினி (1891) விவேக சிந்தாமணி (1892) ஞானபானு (1894) மாணவர் போதகம் (1895) மாதர்மனோரஞ்சனி (1899) விவேக பானு (1900)- இவற்றுள் எந்த ஓர் இதழின் பெயராவது செந்தமிழாக உள்ளதா? செந்தமிழில் பெயர் கொண்டு வெளிவந்த முதல் இதழ்* ***செந்தமிழே!*** *அதன் பின்னரே 1923 இல் 'செந்தமிழ்ச் செல்வியும்', 1925 இல் 'தமிழ்ப் பொழிலும்' வெளிவந்து இன்றுவரை தமிழ்த் தொண்டு செய்து வருகின்றன.* ***தென்மொழி*** *இதழ் தனித்தமிழை முன்வைத்தே தோன்றி அதற்கெனவே பணி செய்து வரும் இதழாகும். இத்தகைய தமிழ்ப்பணி கருதிய இதழ்களுக்கு வழிகாட்டிய முழுப் பெருமையும் செந்தமிழுக்கு உரியதேயாம்.*

*செந்தமிழின் உள்ளுறை யாது? இது காறும் அச்சிடப் பெறாத செந்தமிழ் நூல்களும் (1) தமிழ் நாட்டுப் புராதன சரிதங் களும் சாஸனங்களும் (2) வடமொழியினும் ஆங்கிலத்தினும்*

*தமிழிற்கு வேண்டுவனவாகக் கருதப்படும் நூன்மொழி பெயர்ப் புக்களும் (3) தமிழின அருமைபெருமை அடங்கிய விஷயங்களும் தமிழாராய்ச்சியைப் பற்றியனவும் தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் (4) இதன் வாயிலாக வெளிவரும். செந்தமிழின் உள்ளுறை இவ்வாறு முதல் இதழிலேயே இதழாசிரியரால் வகுத்துரைக்கப் பெற்றது. இவ்வுள்ளுறையை உண்மையுரையாகச் செந்தமிழ் நிலை நாட்டியது*

*1938 ஆம் ஆண்டில், செந்தமிழ் இதழைப்பற்றி ஆராய்ச்சித் துறைத்தலைவர் ஒருவர் கூறுகிறார்: "தமிழ்க் கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ் மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையாம். ஒவ்வொரு மாதத்துப் பத்திரிகையினும் அது வரை அறியாத அரிய விஷயங்களைக் குறித்துச் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்து கொண்டே இருந்தன. பத்திராதிபர் எழுதியன வெல்லாம் தமிழ் மணமும் ஆராய்ச்சி நலமும் செறிந்து விளங்கின; கற்பார்க்குப் பெருவிருந்தாய் அமைந்தன; ஒவ்வொரு மாதமும் செந்தமிழ் எப்போது வெளிவருமென்று பேராவலோடு தமிழன்பர்கள் எதிர்பார்த்த வண்ணமாய் இருந்தார்கள். தமிழ் நாட்டுப் பெரும் பேராசிரியனாய் அமைந்து தமிழ் மக்கள் வீடுதோறுஞ்சென்று தமிழ்க்கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்துவந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாய் இருந்தது" (ஆராய்ச்சித் தொகுதி* **பேரா. வையாபுரிப்பிள்ளை,** *முகவுரை)*

*இச் செந்தமிழ், இப்பொழுது எழுபத்தைந்தாம் தொகுதி யாய் இயல்கின்றது. இவ்வெழுபத்தைந்து தொகுதிகளை முற்ற முடிய ஒருவர் கற்பார் எனின், புலத்துறையில் அவர்க்கு இணை யொருவர் வாய்த்தல் அரிது. எத்துணை எத்துணைத் துறைகளில் எல்லாம் எழில்பெறத் தன் ஆற்றலைப் பரப்பியுள்ளது செந்தமிழ்! செந்தமிழைத் தொகுதிவாரியாகவும், பொருள் வாரியாகவும், துறைவாரியாகவும் பிரித்துத் தனியொரு தொகுதி வெளிப்படுமாயின் அத் தொகுதியை மூலப்பொருள் திறவு கோலாய்க் கொண்டு எத்துணையோ முனைவர்கள் தம் ஆய்வுக்குப் பயன்படுத்தக்கூடும். இத்தகைய செந்தமிழ்ச் சீர்மையை முதல் தொகுதி ஒன்றை மட்டில் எடுத்துக் கொண்டு நாம் ஆய்வோம்.*

*செந்தமிழ் தொடங்கிய நாளில் அதன் ஆசிரியராக இருந்தவர்* ***இரா. இராகவ ஐயங்கார்;*** *துணையாசிரியர்* ***மு. இராகவ ஐயங்கார்.***

*ஒவ்வோர் இதழும் 64 பக்கங்களுக்குக் குறையாமல் 80 பக்ங்களுக்கு மிகாமல் வந்துள்ளது.*

*இதழாசிரியர்கள் இருவருடன், திருவாளர்கள் சி. இலக்குமணப்போற்றி, சி. கணேசையர், நா. கதிரைவேற்பிள்ளை, வி. கனகசபைப்பிள்ளை, குப்புசாமி முதலியார் கல்குளம், அ. குமாரசாமிப்பிள்ளை, குலாம் காதிறு நாவலர், து. அ. கோபிநாத ராவ், அ. சண்முகம்பிள்ளை, எஸ். சாமிநாதையர், டி.சி. சீனிவாசையங்கார். தி.ஈ.சீனிவாசா சாரியார், சே. சுப்பிரமணியக் கவிராயர், வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார், காசிவாசி செந்திநாதையர், தேவ நாதாச்சாரி, ச.ம. நடேச சாத்திரி, சே.ப. நரசிம்மலு நாயுடு, அ.நாராயணசாமி ஐயர், எஸ். நாராயணசாமி ஐயர், திரு. நாராயண ஐயங்கார், பி. பாண்டித்துரை, பால்வண்ண முதலியார், மலை நாட்டுவாசி, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, வெள்ளியந் திருமலைகிழார் ஆகியோர் தம் ஆராய்ச்சிப் படைப்புகள் இத் தொகுதியில் இடம் பெற்றுள.*

*இப்படைப்புகள் இதழ் தொடங்குங்கால் வகுத்துக் கொள்ளப் பெற்ற நோக்கங்களை நிறைவேற்றுமாறு அமைந் தனவோ எனின், முற்றாக அவ்வாறே அமைந்தன என்பதே மறுமொழியாம். அவற்றைமுறையே அறிவோம்.*

**1) அச்சிடப் பெறாத நூல்கள் வெளியிடுதல் :**

*மாறன் பொறையனார் அருளிச் செய்த ஐந்திணை ஐம்பது மூலமும் உரையும், குணவீர பண்டிதர் இயற்றிய நேமிநாதம் மூலமும் உரையும், மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் அருளிச்செய்த இனியது நாற்பது மூலமும் உரையும், பொன்னவன் இயற்றிய கனாநூல் மூலம், திருக்குருகூர் சிறிய இரத்தின கவிராயர் இயற்றிய புலவராற்றுப் படை மூலம் ஆகிய நூல்கள் முதல் தொகுதியில் அச்சிட்டு முடிக்கப் பெற்றுள.* ***குண்டலகேசி, வளையாபதி*** *என்னும் காவியங்கள் இரண்ட னுள்ளும் கிடைக்கும் பாடல்கள் தொகுக்கப்பட்டு ஆய்வுக் குறிப்புடன் வெளியிடப்பெற்றுள. அவிரோதி ஆழ்வார் இயற்றிய* ***திருநூற்றந்தாதி*** *மூலமும் உரையும் இத் தொகுதி எட்டாம் பகுதியில் தொடங்கப் பெற்று இரண்டாம் தொகுதி முதல் பகுதியில் நிறைவுறுகின்றது. இவை சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் தொகுத்து வைக்கப் பெற்ற ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து அருங் குறிப்பும் எழுதி வெளியிடப் பெற்றவையாம்.*

செந்தமிழ், திங்கள் இதழாக இருப்பினும் நூல்களைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வரும் மரபினைமேற் கொண்டது. அப்பணியை இதழ் அளவுக்கு நிறுத்தாமல் நூலாக்கத்திற்குத் தக்கவாறு. அதற்குத் தனித் தொடர் பக்கம் தந்தது. அத்தொடர் களைத் தனியே பிரித்து அட்டைகட்டி விடின் தலைப்புப்பக்கம், முன்னுரை, நூல், பாடல் முதனிணைப்பு இன்னவெல்லாம் முறையே அமைந்து அத்தொகுதி உள்ளுறையை ஒழுங்குறக் காட்டவும் வாய்த்தது. நெடிய தனிக்கட்டுரைகளுக்குத் தொடரும் என்னும் குறிப்பும், இத்தனாம் பக்கத்தொடர்ச்சி என்னும் குறிப்பும் உண்மை போல நூல் பகுதிக்கு இன்மையும் சிறப்பாகக் குறிக்கத் தக்கதாம். ஆக, இதழ்வாங்குவோர் நாளடைவில் சில நூல் தொகுத்துக் கொள்வதற்கும் இத்திட்டம் வாய்ப்பாயிற்று.

இனிச் சங்கப் புலவர்களைக் கொண்டு சங்கச் சுவடிகளை ஆய்ந்து வெளியிடுவது ஒரு பாலாக ஒருபால் ஏனைப் பெரும் புலவர் பெருமக்களையும் இத்துறையில் ஈடுபட்டு உதவுமாறு சங்கத்தலைவர் வேண்டிக் கொண்டார் என்றும், அதன் பயனாகச் சில நூல்கள் வெளிவந்தன என்றும் அறிகிறோம்.

“மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்ராஸனாதிபதியும், பாலவனத்தம் ஜமீந்தாருமாகிய இராமநாதபுரம் மகா.ள.ள.ஸ்ரீ பொ. பாண்டித்துரைஸாமித் தேவரவர்கள் செந்தமிழ்ப் பத்திரி கையில் மாதந்தோறும் வெளிப்படுத்தும்படி ஏதாவது தமிழ் நூலொன்றை அனுப்பி வரவேண்டு மென்று வற்புறுத்திக் கூறினமையால் அவ்வண்ணம் செய்யத் துணிந்து இம்முறை இதனை வெளிப்படுத்தலானேன்” என்று **உ.வே.சாமிநாதையர் தேவையுலா முகவுரையில் எழுதியுள்ள செய்தியால் தெளிவாகும். திருவாரூர் உலா. சங்கரநயினார் கோயில் அந்தாதி, சிராமலைக்கோவை, கலைசைக்கோவை** முதலிய நூல்கள் இவ்வகையில் வெளி வந்தன.

ஈழநாட்டு **வைத்தியலிங்க உபாத்தியாயர்** அவர்கள் தணிகைப் புராணம் முழுமைக்கும் உரைவரைந்து. அதனைச் செந்தமிழ் வழியே வெளியிட விரும்பினார். அவ்வாறு வெளிவரின் பல்லாண்டுகள் செல்லும் என்று குறிப்பிடும் இதழாசிரியர் பெரும் புத்தக ரூபமாக வெளியிடற்குரியதைப் பத்திரிகைக்கு உபயோகிப்பதினும், உபாத்தியாயரவர்கள் சங்கத்தின் உதவிபெற்றோ அல்லது வேறு வழியாகவோ தனியாக வெளியிடக் கூடுமானால் அது சிறந்ததென்றே நம்புகிறேன்” என்று கருத்துரைத்து மூன்று பாடல்களுக்கு மட்டும்

அவ்வுரைத்திறன் அறிந்து கொள்ளுமாறு செந்தமிழில் வெளியிட்டுள்ளார் (செந்தமிழ் 5:345) இது, சங்க வெளியீட்டுக்கு அமைந்த 'ஆற்றுப்படை' போல அமைந்துளது. சங்கத் தலைவர் பேருள்ளப்பெரும் பாங்கை அறிந்துகொண்டு உதவும் உழுவலன்பை இவ்வுரை வெளிப்படுத்தும். இவ்வாறெல்லாம் சங்கம் நூல் வெளியீட்டுக்கு உதவியுள்ளது என்க.

**2. வரலாறு, சாசனங்கள் (கல்வெட்டு):** தமிழகத்துத் திருக்கோயிலில் கல்வெட்டுகள் பல்லாயிரக் கணக்கில் உள. அவற்றுள் சில ஆயிரங்களே அச்சிடப் பெற்றுள. இன்னும் படியெடுக்கப் பெறாத கல்வெட்டுகளும் உள. படியெடுக்கப் பெற்றவற்றுள்ளும் வெளிப்படாதவையே மிகப் பல. ஆதலால், செந்தமிழ் 'கல்வெட்டு', 'செப்பேடு' முதலிய சாசனங்களை வெளியிடுதலைத் தன் நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டது.

"நாம் இது முதலாகச் செந்தமிழ்ப் பத்திரிகையில் சாஸனங்களை மட்டும் எழுதுவோம். அவைகளைப் படிப்பதே ஓர் ஆச்சரியம். சாஸனங்களை உள்ளபடி நாம் எழுதுவதால் எவ்விடத்தில் கல் சிதிலப்பட்டு எழுத்து அழிந்து இருக்கின்றதோ அவ்விடத்தில் சிதிலம் என்பதைக்காட்ட ஒரு புள்ளி அமைப்போம். இரண்டு மூன்று எழுத்துக்கள் போயிருக்குமானால் இரண்டு மூன்று புள்ளிகள் போடுவோம். பழைய சாஸனங்கள் பெரும்பாலும் செந்தமிழ் நடையில் இருப்பதால், அவைகள் வெளிப்பட இப்பத்திரிகையே 'ஸர்வஸ்வாதந்தர்யம்' பெற்றுள்ளது. முன்னரே கவர்ண் மெண்டார் இவ்விஷயமாய் முயற்சி செய்து பல சாஸனங்களை வெளிப்படுத்தியிருக்கின்றபடியால் அவைகளையே நாமும் இப்பத்திரிகை மூலம் வெளிப்படுத்துவோமாயிற் கூறியது கூறல் என்னும் குற்றம் நமக்கு ஏற்படுமாதலாலும், அவ்வாறு நாம் செய்வது நமக்குக் கௌரவம் இல்லாமற் போவதுடன் நாட்டுக்கு ஒருவித லாபமும் இல்லாமற் போகும் ஆகையாலும் கூடியவரை புதிய சாஸனங்களையே வெளிப்படுத்துவோம்" என்று வரும் சாசனம் பற்றிய முன்னுரைப் பகுதி அச்சில் வராத நூல் வெளியீடுபோல், பதிப்பில் வராத - படியெடுக்கப்படாத - சாசனங்களைப் படியெடுத்துப் பதிப்பித்தலை மேற்கொண்டவை செந்தமிழ் வெளியீட்டில் வந்த சாசனங்கள் என்பது விளக்கமாகும். இவ்வகையில் முதல் தொகுதியில் வெளிப்பட்ட சாசனங்களைக் குறிப்போம்.

1. ஆர்க்காட்டை ஒட்டிய வன்னிவேட்டு திருமால் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு. அது 'பரகேசரிவர்மன்' என்பவன் காலத்தது.
2. ஆர்க்காட்டுக்கு 3கல் தொலைவில் பாலாற்றின் வடகரையில் குடிமல்லூர் என்னும் ஊரில் இருக்கும் பூமீசுவரர் கோயில் கல்வெட்டு. அது இராஜநாராயண சம்புவராயனது ஆகும்.
3. ஆர்க்காட்டுக்கு வடமேற்கில் 5 கல் தொலைவில் உள்ள பாண்டவமலைக் கல்வெட்டு. அது நந்திபோதவர்மன் காலத்தது.
4. ஷை இடத்திலுள்ள ராஜராஜ தேவர் கல்வெட்டு.
5. ஆர்க்காட்டுக்கு எட்டுக்கல் கிழக்கில் உள்ள சக்கரமல்லூர்ச் சிவன்கோயிலில் உள்ள விக்கிரமசோழ தேவர் கல்வெட்டு.
6. ஷை இடத்திலுள்ள கோ இராஜகேஸரிவர்மர் கல்வெட்டு.
7. ஷை இடத்திலுள்ள குலோத்துங்க சோழதேவர் கல்வெட்டு.
8. ஷை இடத்திலுள்ள கண்டகோபால தேவர் கல்வெட்டு.
9. ஷை இடத்திலுள்ள குலோத்துங்க சோழ தேவர் கல்வெட்டு.
10. ஷை சக்காமூனுதர் பூசுந்தர ராசப் பெருமாள் கோயிலில் உள்ள சுந்தரபாண்டிய தேவர் கல்வெட்டு.

11-14 கும்பகோணம் வாணபுரீசுவரர் கோயில் கல்வெட்டுகள் 4.

15-16 கும்பகோணம் நாகேசுவரர் கோயில் கல்வெட்டுகள் 2.

இப்பதினாறு கல்வெட்டுகளும் முதல் தொகுதியில் இடம் பெற்றுள. இவற்றை எழுதியவர் ச.ம. நடேச சாத்திரி, அ. நாராயணையர் என்பார். இன்னும், சோழ சக்கரவர்த்திகள் என்னும் தொடர்கட்டுரை வி. கனகசபை அவர்களால் எழுதப் பெற்றது. ஆழ்வாராதியர் கால நிர்ணயம், மங்கம்மாள் சரித்திரம், ஜப்பான் சரித்திரச் சுருக்கம் என்பனவும் முதல் தொகுதியில் வெளிவந்தன. இவை வரலாறும், கல்வெட்டும் தழுவிச் செய்யப்பெற்றவை. ஆழ்வாராதியர் கால நிர்ணயம் வரைந்தவர் து.அ. கோபிநாதராவ். இவர், கல்வெட்டுகள் மிகப்பல ஆய்ந்து செந்தமிழில் தொடர்ந்து எழுதிய அறிஞராவர்.

**3. மொழிபெயர்ப்பு :** ஆங்கிலம், வடமொழி ஆகிய இருமொழிகளில் இருந்தும் மொழிபெயர்க்கும் பணி முதல் தொகுதியிலேயே தொடங்கி விட்டது. 'சுமைல்சு' என்பார் இயற்றிய கேரக்டர் என்னும் ஆங்கில நூலை நல்லொழுக்கம்

என்னும் பெயரால் **சி. இலக்குமணப் போற்றி** மொழி பெயர்த்துள்ளார். 'செர்பட்டு பென்சர்' இயற்றிய ஆங்கில நூல் "கல்வி விளக்கம்" என்னும் பெயரால் **கள்ளபிரான்பிள்ளை, அப்பாவுப் பிள்ளை, வெ.ப. சுப்பிரமணிய முதலியார்** ஆகியோரால் மொழிபெயர்க்கப் பெற்றது. சிட்னி சிமித் என்பார் இயற்றிய ஆங்கில நூல் 'பெண்கல்வி' என்னும் பெயரால் மொழிபெயர்க்கப் பெற்று வெளிவந்தது. தருக்க சூத்திரம், தத்திதாந்தபதம், அனுமான விளக்கம், பிரதாபருத் திருயம் என்பவை வடமொழி தழுவிய ஆய்வுக் கட்டுரை களாகும். இம்மொழி பெயர்ப்புப் பணி பின்னே விரிவாக நிகழ்ந்தமை செந்தமிழ்த் தொகுதிகளால் தெரிய வருகின்றன. மொழிபெயர்ப்புகளுள் நூல்களாக வெளி வந்தனவும் சில உள. அவற்றைச் செந்தமிழ் வெளியீட்டு நூற்பட்டி கொண்டு அறியலாம்.

4. **தமிழாராய்ச்சி பற்றிய செய்திகள்** : தமிழ்ச் சங்கம் தோன்றிய நாளில் தனித் தமிழ்க் கொள்கை தோன்ற வில்லை. மாறாகத் தென் சொல்லும் வட சொல்லும் இணைக்கு இணை கலந்து எழுதுவது இன்பம் என்று அந்நாளில் மொழிவல்ல புலவர்களும் புகுந்து விளையாடினர், வடசொற்கலப்பு மிகுதிக்கு மணிப்பிரவாளம் என அவர்கள் கொண்ட நடையேபோதும். இன்னும் ஒருபடி "மேலே சென்றும் ஈசான தேசிகர் போன்றோர் எழுதினர். ஐந்து எழுத்தால் ஒருமொழி என்பதே நாணத்தக்கது" என நாணமின்றி வெளியிட்டனர் (இலக்கணக் கொத்து பாயிரம் 7.) தமிழுக்குச் சிறப்பான எழுத்துகள் ற, ன, ழ, எ, ஒ, என ஐந்தாம் எஞ்சிய எழுத்துகள் எல்லாம் வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவாம். ஆதலால், இச்சிறப் பெழுத்துகளைக் கொண்டது ஒரு மொழி என்று கூறுவரோ? என்னே கண்டுபிடிப்பு!

அறிஞர் கால்டுவெல் இவண்வந்தார். தமிழ், பிறமொழிக் கலப்பு இன்றி இயங்கவல்லது என்றும், உயர்தனிச் செம்மொழி என்றும் ஆய்ந்து நிலைப்படுத்தினார். அதன்பின் **பரிதிமாற் கலைஞர்** தனித் தமிழ் வித்தினை ஊன்றினார்; **மறைமலை யடிகள்** அதனைக் கொள்கை யாக்கி வளப்படுத்தினார்; மொழிஞாயிறு பாவாணர் 'தமிழே உலகின் முதல் தாய்மொழி' என்பதை நிலைப்படுத்தினார். அதனைப் பிறமொழி அறிஞர்கள் தம் ஆய்வால் உறுதிப் படுத்திக் கொண்டு வருகின்றனர். இந்நாளையிலும் தமிழ்ப் பேரறிஞர் என்பாருள் பலர் குழப்பிக்

கொண்டு கிடக்கும் போது, இருபதாம் நூற்றாண்டுத் தொடக் கத்தில் எப்படி இருந்திருக்கும்? இருப்பினும், அந்நாளிலும் செந்தமிழ்த் தொகுதிகளை உன்னிப்பாக நோக்கினால் தொண்ணூறு விழுக்காடு செந்தமிழாகவே இருந்தது என்பது உண்மை.

"இனிச்சேரரும் சோழரும் சங்கம் நிறுவாவிடினும் இப்பாண்டியரைப் போன்றே செந்தமிழ் அருமை போற்றி இப்புலவரைப் பெரிதும் ஆதரித்தனர் என்பது அப்புலவர் பலரும் அவ்வரசரைப் பாடிய பாடல்கள் நிறைந்த எட்டுத் தொகை முதலிய நூல்களான் நன்கு விளங்கும். இவ்வேந்த ரெல்லாம் திருவுடையரேயன்றித் தெள்ளியருமாய்ப் பெருஞ் சுவை பயப்பச் செய்யுள் செய்தலினும் வல்லவராயினார் என்பதும், அந்நூலான் உணரப்படும். இம்மூவேந்தரும் நாவீறுடைய புலவர்களையே யாரினும் மீப்பட நன்கு மதித்துத் தமக்குள்ளும் பிறர்பாலும் பகைமை விளைந்த போது இவர் உரைத்தவற்றிற்கு இணங்கிப் பகைமை தீர்ந்தும், தீயன ஒழிந்தும் நல்லன புரிந்தும் போந்தார்கள். பொய்கையார் என்னும் புலவர், சோழன் செங்கணான் என்பான் சேரமான் கணைக்கால் இரும்பொறை யோடு பொருது அவனைப் பற்றிக் கொண்டு சிறைவைத்துழிக் களவழி நாற்பது பாடி வீடு கொண்டார். **கோவூர் கிழார்** என்னும் அறிஞர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளி வளவன், மலையமான் மக்களை யானைக் கிடுவுழிப் பாடி உய்யக்கொண்டார். இவற்றால் இவ்வேந்தர்க்கும் புலவர்க்கும் உள்ள நட்பும், அரசர் பக்கத்துப்புலவர் செல்வாக்கும் தெளியப் படும். புலவர் அவ்வவ் வமயங்களில் பாடிய பாடல்களை யெல்லாம் பெருநூல்களாகத் தொகுப்பித்து இவ்வுலகிற் குதவியோரும் இத்திருவுடை மன்னரே யாதலால் இவர், தமிழ்வளர்ச்சிக் கண் எத்துணையாக முயன்றனர் என்பது அறியத்தக்கது"

இது, செந்தமிழ் முதல் இதழின் முகவுரைப் பகுதியில் இருந்து எடுக்கப் பெற்ற ஒருபத்தி. இதனை எழுதியவர் இதழாசிரியர் இரா. இராகவ ஐயங்கார்! இது, செந்தமிழாம் தனித்தமிழ் நடையேயன்றோ! ஆதரித்தல் என்னும் ஒரோ ஒரு வடசொல்லன்றி, வேற்றுச் சொல் ஒன்றும் வரவில்லையே! இதற்கு முழுப் பொறுப்பாக இருந்தவர் இதழாசிரியர் மட்டும் அல்லர்! பாண்டித்துரையாருமே பொறுப்பாக இருந்தார்! ஆதலால், செந்தமிழ் பெரும்பாலும் செந்தமிழிலேயே வெளி

*வந்தது. அவர்காலத்திற்குப் பின்னர் வரவரத் தமிழ் நடையும் பெருங்கலப்புக்கு உரியதாயிற்று. தனித் தமிழ் இயக்கம் தோற்ற முறாக் காலத்தில் தனித்தமிழ் வழியில் இயங்கிய இதழ், தனித்தமிழ்க் கிளர்ச்சி உருவாகி வளரும் நிலையில் எப்படி இருந்திருக்க வேண்டும்! ஆனால், அதன் தளர்நிலை, அவ்விதழ் ஆசிரியராகவும், அதன் பொறுப்பாளர்களாகவும் இருந்தவர்கள் எண்ணத்தின் வண்ணமாகவே ஆயிற்று என்பது விளங்கும்.*

*தமிழ் தொடர்பாக, உயர்தனிச் செம்மொழி, செந்தமிழ்த் தெய்வச்சிறப்பு, செந்தமிழ்நாடு, தமிழ்ச் சங்கம், தமிழ் எழுத்துக்களின் பண்டைவடிவு, தமிழர் வீரம், தென்மொழி வல்லார்க்குச் செய்வதோர் விண்ணப்பம், செந்தமிழ்ச் சான்றோர் திருப்பெயர்கள், தமிழ் நாட்டின் பூர்வநிலை முதலிய கட்டுரைகள் முதல் தொகுதியில் வெளிவந்துள்ளன. முதல் இதழிலேயே, 'உயர்தனிச் செம்மொழி' என்னும் கட்டுரை பரிதிமாற் கலைஞரால் எழுதப் பெற்றதும், பின்னை அவரால், தமிழ்மொழி வரலாறு எழுதப் பெற்று அதில், உயர்தனிச் செம்மொழி தமிழ் என நிறுவப் பெற்றதும் தமிழறிஞர்களால் அறியப் பெற்ற செய்திகளே.*

*இதழாசிரியர் ஆராய்ச்சித் திறம் இதழுக்குத் தனிப் பெருமை சேர்க்கின்றது.*

*“அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியல் உரை பேராசிரியரது என்பதூஉம்,* ***நச்சினார்க்கினியரது*** *அன்று என்பதூஉம்” ஓர் ஆராய்ச்சி தெளிவிக்கின்றது.*

***டாக்டர் உ.வே. சாமிநாதையர்*** *அவர்களால் பாண்டித் துரைத் தேவர் உதவி கொண்டு புறப்பொருள் வெண்பாமாலை 1895இல் வெளியாயிற்று. அதில் அந்நூலின் உரையாசிரியர் பெயர் அறியப் பெறாமல் இருந்தது. ஆனால், தமிழ்ச் சங்கத்திற்குச் சீவைகுண்டத்துக்* ***கள்ளபிரான் கவிராயரவர்கள்*** *வீட்டிலும், வண்ணார் பேட்டைத்* ***திருப்பாற் கடனாத கவிராயர்*** *அவர்கள் வீட்டிலும் வழங்கிய ஏட்டுப்படிகளால் செயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர் கிழான் சாமுண்டி தேவநாயகன் உரைத்த வெண்பாமாலை யுரை என்பது தெளிவானதை மற்றோர் ஆராய்ச்சி புலப்படுத்து கின்றது. இன்னும் பரிபாடல் உரையாசிரியர் 'பரிமேலழகர்' என்பதையும், சயங்கொண்டார் ஊர் 'தீபங்குடி' என்பதையும்” இராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் 'இராமாவதாரம்'*

என்பதையும் ஆராய்ச்சிக் குறிப்புகள் தெளிவிக்கின்றன. இன்னும் திருவள்ளுவர் வரலாறு திருக்குறள் உரை பரிமேலழகர் உரைப்பாட வேறுபாடு எனப் பல ஆய்வுக் குறிப்புகள் முதல் தொகுதியிலே இடம் பெற்றுள. பின்னுள தொகுதிகளில் அச்சிட்ட நூல்களொடு சுவடிகளை ஒப்பிட்டு இராமாயணம், பாரதம் முதலிய நூல்களுக்குப் பாட வேறுபாடுகள் காட்டப் பெற்றுள. இவற்றுள் பல இன்னும் பதிப்பாசிரியர்களால் ஏற்றுச் செப்பஞ் செய்யத் தக்கவையாம்.

தொல்காப்பியமும் திருவள்ளுவமும் திருக்கோவையாரும் நன்னூலும் முதலிய நூல்களின்கண் தாம் ஆராய்ச்சியாற் கண்டவைகளைத் தொகுத்து 'நுண்பொருட் கோவை' எனப் பெயர் தந்து சோழவந்தான் அரசஞ் சண்முகனார் எழுதியுள்ளார். அஃதொரு தொடர் கட்டுரையாகும். அன்மொழித் தொகை, அன்மொழித் தொகைப் பொருள்மேல் வரும் ஆகுபெயர், இருவர் மாறு கோள் ஒருதலைத்துணிவு இன்னபல முதல் தொகுதியில் வெளிவந்த இலக்கணக் கட்டுரைகள். சொற்பொருள் ஆய்வாக அகராதி, நிருத்தம், உள்ளது என்பவை வெளிவந்தன. இரட்டையர் மருட்சி, என்பது நாடகம்; 'விவசாய ரசாயன சரித்திரச் சுருக்கம்' என்னும் தொடர்கட்டுரை வேளாண்தொழில் பற்றிய அறிவியல் ஆய்வு நூலாகும். பின்வந்த தொகுதிகளில் இயற்கைப் பொருட்பாடம், சுகசந்தர்சன தீபிகை (உடல் நலத்துறை) என்பனவும் எழுதி நூலாக்கம் பெற்றன. விவசாய நூல் எனவும் ஒருநூல் வெளிவந்தது. வேர்ச்சொற்கட்டுரைகள் செந்தமிழில் அவ்வப்போது வெளிவந்துள. அவற்றை அ. குமாரசாமிப்புலவர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, தவத்திரு ஞானப்பிரகாச அடிகளார், மாகறல் கார்த்திகேய முதலியார் என்பார் எழுதியுளர்.

தமிழ்ச் சங்கத்து ஆண்டு விழாக்கள், பிறநிகழ்ச்சிகள், தனித்தமிழ்த் தேர்வு, ஆங்கிலத் தமிழ்த் தேர்வு, செயற்குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள். தீர்மானங்கள், சங்க வரவு செலவு கணக்கு இன்னவற்றை யெல்லாம் தமிழ் கூறும் நல்லுலகப் பொதுப் பொருளாக்கி வைத்த செவ்விய முரசு செந்தமிழ் இதழேயாம்.

செந்தமிழ் இதழுக்குக் கட்டுரை வழங்குவோர்க்குப் படிவம் ஒன்றுக்கு (8பக்கங்களுக்கு) 4ரூ விகிதம் தருதல் வேண்டும் எனச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத்தேவர் 22-12-03 ஆம் நாள்

*கல்விக் குழுவில் தீர்மானம் செய்தார். பின்னர் 1915 ஆம் ஆண்டில் சங்கத்தலைவராக இருந்த இராசராசேசுவர சேதுபதியால் பக்கம் ஒன்றுக்கு, கட்டுரைக்குத் - தக்கவாறு - எட்டணாமுதல் 2ரூபா வரை அன்பளிப்புத்தரும் திட்டம் கொண்டு வரப்பெற்றது. பொருள் இழப்புக்கே ஆட்பட்ட இலக்கிய இதழ்ச்செய்திக்கு அன்பளிப்பும் தரப்பெற்றது வள்ளன்மையால் நிகழ்ந்ததேயன்றி, வருவாய்ப் பெருக்கால் நிகழ்ந்தது அன்று என்பது எவரும் உணரத்தக்கதே.*

*25-5-04 ஆம் நாள் நிகழ்ந்த ஆய்வுக்குழுவில் கல்லூரி மாணவர்களுக்குச் செந்தமிழ் இதழ் அரைக்கட்டணத்தில் தரவேண்டும் என்று தீர்மானம் செய்யப் பெற்றுள்ளது. அதனைப் பெறவிரும்பும் மாணவர் தாம் பயிலும் கல்லூரித் தலைவர் வழியாகவோ, தமிழாசிரியர் வழியாகவோ தாம் கல்லூரி மாணவர் என்பதைச் சான்றுக் கடிதத்துடன் அனுப்ப வேண்டும் என்றும் திட்டப்படுத்தப் பெற்றுள்ளது.*

*சங்கத்தில் ஒருநூல் வெளியிடப்பெற்றால் அந்நூலில் அச்சிட்ட படிகளில் மூன்றில் ஒரு பங்கு நூலாசிரியர்க்கு அன்பளிப்பாக வழங்கப் பெற்றது என்று 3-8-1915 இல் நிகழ்ந்த செயற்குழுக் கூட்டத் தீர்மானம் ஒன்றால் அறியப்பெறுகின்றது. அவ்வாறே, ஒரு கட்டுரை ஆசிரியர், தம் கட்டுரையில் படிகள் பெறவிரும்புவராயின், அச்சுக்கூலி இன்றித் தாள்விலை மட்டும் பெற்றுக்கொண்டு 500 படிகள் வரை தரலாம் என்னும் வழக்கம் இருந்தது என்பதும் அச்செயற்குழுக் கூட்டத்தின் மற்றொரு தீர்மானத்தால் அறியப் பெறுகின்றது. (செந்தமிழ் 13) செந்தமிழ் 30 தொகுதிகள் நிறைந்து, முப்பத்தோராம் தொகுதி வெளிவரும் போது, உரிய நாளில் இதழ் வாராமல் தாழ்த்து வந்ததைச் சுட்டிக் காட்டி இலக்கண விளக்க வழிமுறைத் திரு. சோமசுந்தர தேசிகர் எழுதினார். 'தமிழ்ச்சங்கம் செய்யவேண்டிய வேலை' எனத் தலைப்பிட்ட அவர்தம் கட்டுரையை வெளியிட்டுத் தன் நேர்மையை நிலைநாட்டியது செந்தமிழ்.*

*"சங்கத்திலிருந்து வெளிவரும் செந்தமிழ் என்ற பத்திரி கையின் பிரயோஜனம் அதனை வாசிப்போரால் ஒரு நாளும் மறக்க இயலாது. எனினும், அது காலத்திலே வராதது மிகவும் வருந்தத் தக்கது. (ஆயினும், இரண்டு மூன்று திங்களாகக் காலந் தாழ்க்காது வருகின்றது). இனியும் அவ்வாறே வெளிவர ஏற்பாடு நடைபெறும் என்பது நம்பிக்கை"*

"செந்தமிழ் வாயிலாக இதுவரை கேட்டுமறியாத பல பழந்தமிழ்ச் சிறுநூல்கள் வெளியாயின. இனியும்பல வெளி வருதல் கூடும் என்பது நாம் எதிர்பார்க்கக் கூடியதொரு நிலையேயாம். தமிழிலக்கியத்தைக் குறித்து ஆராய்ச்சி சிறிது நடக்கின்றதாயினும் இந்தக்காலத்துக்கு வேண்டியதாகக் கருதப்படும் பலவிஷயங்கள் வெளியாவதற்குரிய முயற்சி கைக் கொள்ளல் வேண்டும் என்பது எனது விண்ணப்பம்."

இவ்வாறு கூறும் தேசிகர் நாட்டு வரலாறு, அறிவியல் நூல்கள் வெளியிட வேண்டியதை வலியுறுத்தியுள்ளார். செந்தமிழ் இன்னும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்றும் இந்த அளவு நடப்பதும் வாங்குவோர் ஊக்கத்தால் அன்றி நடாத்துவோர் ஊக்கத்தால் ஏற்பட்டதே என்றும், "ஆண்டுச் சந்தாவோ மிகக்குறைந்த தொகையான ரூபா நான்கு; மாத மொன்றுக்கு ஐம்பத்தாறு பக்கங் கொண்டு வெளிவருகின்றது. பலநூல்கள் வெளியாகின்றன. இவ்வளவு அருமைவாய்ந்த மாசிகையைத் தமிழர்கள் ஏற்றுப் போற்ற வேண்டியது கடமை" என்றும் வலியுறுத்தியுள்ளார்.

செந்தமிழ் 31ஆம் தொகுதி பக்கங் குறைந்து வெளிப் படுகின்றது. "அரசாங்கத்தார் வெளியிட்ட காகிதக் கட்டுப் பாட்டு உத்தரவால் செந்தமிழ் பழைய பக்க அளவில் குறைந்து நூற்றுக்கு முப்பதாக வெளிவருகிறது. அதிக அளவில் வெளியிட முயற்சி நடக்கிறது. அநுமதி கிடைத்தபின் செந்தமிழ் அதிகமான பக்கங்களுடன் வெளிவரும். சந்தாநேயர்கள் பக்கக் குறைவைப் பொருட்படுத்தாது வழக்கப்படி செந்தமிழை ஆதரித்துவர வேண்டுகிறோம்" என ஒரு வேண்டுகோள் தமிழ்ச் சங்க மேலாளரால் விடப்பெற்றுள்ளது.

48 ஆம் தொகுதி இரண்டு திங்களுக்கு ஓரிதழாக ஆறுபகுதியளவில் 276 பக்கமாக அமைந்தது. அப்பொழுது கட்டுரை ஆசிரியர்பெயர் கட்டுரைத் தலைப்பின் கீழே அமைக்கப்பெற்றது. அதற்கு முன்னர்த் தொடக்க நாள்முதல் கட்டுரையின் இறுதியிலேயே கட்டுரை யாசிரியர் பெயர் குறிப்பிடப் பெற்றிருந்தது.

56 ஆம் இதழில் ஈற்றடி தந்து பாட்டியற்றும் பயிற்சி தரப் பெற்றுள்ளதை அறிகிறோம்.

*இனிச் செந்தமிழின் தொடக்கம் முதல் மூன்றாண்டுகள் இரா. இராகவஐயங்காரும், அதற்குப்பின் 7 ஆண்டுகள் மு. இராகவஐயங்காரும், ஆசிரியராக இருந்தனர். அதற்குப் பின்னர், ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் திரு. நாராயண ஐயங்காரும் பின்னர், இராமானுச ஐயங்கார். நா. அப்பனையங்கார். பி.டி. இராசன் ஆகியவர்களும் இதழாசிரியர்களாக இருந்தனர். இப்பொழுது மேனாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. டி. பி. எம். பெரியசுவாமி அவர்கள் இதழாசிரியராக இருக்கின்றார். முத்திங்களுக்கு ஒன்றாக வெளிவரும் இதழைத் திங்களுக்கு ஒன்றாகப் பழைய நிலையில் கொண்டு வருவதற்கு வேண்டும் முயற்சிகளில் ஊன்றியுள்ளார்.*

# 10. சங்கத்து ஆட்சிமுறை

தமிழ் வளர்ப்பதற்காக அமைக்கப் பெற்ற பொது அமைப்பு சங்கம். அதில் ஆர்வமுடையோர் அனைவரும் பங்கு பெற்றனர்; குறித்த தொகை செலுத்துவோர் உறுப்பினராயினர்; வாணாள் உறுப்பினர் ஆவதற்கும் விதிமுறை இருந்தது; சங்கத்து ஆட்சியை நடாத்துதற்கு ‘ஆட்சிக்குழு’ இருந்தது; ‘தேர்வு நடாத்துதல்’ முதலிய பணிகளுக்குத் துணைக் குழுக்கள் இருந்தன. எக்குழுவுக்கும் சங்கத் தலைவரே தலைமை தாங்கினார். முதல் தலைவராகத் திகழ்ந்தவர் சங்க நிறுவனராகிய பாண்டித்துரைத் தேவரேயாவர். அப்பொழுது, பி.எசு. சுப்பிரமணிய ஐயர் துணைத் தலைவராகவும், டி.சி. சீனிவாச ஐயங்காரும், எசு. சுவாமிநாதையரும் செயலாளர்களாகவும் பொறுப்பேற்றனர். உ.வே. சாமிநாதையர், தட்சிணாமூர்த்தி துரைராசு, செ. எம். நல்லுசாமி பிள்ளை, எசு. பால்வண்ண முதலியார், எல்.கே. துளசிராம், சுந்தரலிங்கயசாமி, கான்பகதூர் அப்துல்சாகிப் என்போர் ஆட்சிக்குழு உறுப்பினர். இவ்வாட்சிக் குழுப் பொறுப்பாளர்களையும், உறுப்பினர்களையும் பேரவையே தேர்ந்தெடுத்தது. ஆனால் தலைவரைத் தேர்ந் தெடுப்பது என்பது - ஓர் ஒழுங்கு நிலையில் - சேதுபதி வேந்தராக இருப்பாரைத் தேர்ந்தெடுப்பது என்பதாகவே நிகழ்ந்தது. ஏனையோர், சங்கப்பணியில் ஈடுபாடு கொண்டு உரைப்பவர்க் குள்ளாகவே தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

பாண்டித்துரைத் தேவர் தலைமையில் சங்கம் இருந்த காலம், சங்கத்தின் பொற்காலம். சங்க நிகழ்ச்சிகள், நடை முறைகள் ஒவ்வொன்றிலும் அவர் பங்கு இருந்தது. அவர் கண்காணிப்பிலேயே எதுவும் நடந்தது. ‘வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காத்து’ என்று கம்பர் கூறுமாப்போல் பாண்டித்துரையார் ஆட்சி இருந்தது.

“பாண்டித்துரைத்தேவர் பாலவனத்தம் ஜமீன்தார்; மதுரைத் தமிழ்ச்சங்கம் கண்டவர்; தமிழ்ப்புலவர்; பெரும் புலவர்; அவர்தம் அரியவாழ்க்கை தமிழுக்கே அர்ப்பணமாகியது”

*என்று தமிழ்த் தென்றல் திரு. வி.க. தம் வாழ்க்கைக் குறிப்பில் (199) பொறித்துளார். அத்தகைய வாழ்வில் கண்ட ஆட்சியை - தமிழுக்கே ஒப்படைத்தவாழ்வில் கண்ட ஆட்சியை - ஏனையோர் ஆட்சியில் காண்டல்இயலுமோ?*

*பாண்டித்துரையார் சங்கத்தலைவராய் வீற்றிருந்தார். பக்கத்துணையாய்ப் பாற்கரர் இருந்தார்; குறுநில மன்னர்களும் பெருநிலக்கிழார்களும், வணிகச் செல்வர்களும் முந்து நின்று உதவினர். பாண்டியர் தொட்டதெல்லாம் துலங்கியது! அப்படித் துலங்கிய துலக்கம், வீழ்ச்சியுற்ற தமிழை வீறுபெற்றோங்கச் செய்தது.*

*ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாவதும் உண்டு அன்றோ! அவ்வாறே, பைந்தமிழ்க் காவலர் பாற்கரர் தம் முப்பத்தாறாம் அகவையில் - சங்கம் தோன்றிய மூன்றாம் ஆண்டில் - இயற்கை எய்தினார்.*

*சனவரி 13இல் இராமேசுவரத்தில் தங்கியிருந்த பாற்கரர் தம் நாட்குறிப்பில் என் வாழ்வுக் குறிக்கோள் என்னும் தலைப்பில் 32ஆவதாக, "என் உடன் பிறந்தார் பாண்டித்துரைக்கு முன்னே யான் துன்பம் இல்லாமல் இருக்க வேண்டும்" என்று எழுதிய ஏந்தல் தம் வாக்கை முழுமையாகவே நிறைவேற்றிக் கொண்டார். நினைந்தோர் நெஞ்சம் உருக்கும் செய்தி இது. சங்கப் பயிர்க்கு ஊட்டமும் நீருமாக விளங்கிய வள்ளல் மறைவு, பாண்டித்துரையைப் படாத்துயருக்கு ஆளாக்கிற்று. பாவன்மை மிக்க அவர், பாற்கரரின் உரிமை உறவை உன்னி உருகினார்; சங்கத்திற்கு அவர் செய்த உதவிகளை யெண்ணி யெண்ணி உருகினார்; அவ்வுருக்கம் பாட்டாகப் பெருகியது.*

என்னாவி உளங்குளிர அண்ணாவென்(று)
  அன்பொடினி எனையார் சொல்வார்?
மன்னாமன் னாமன்னா எனயாரை
  யானினிமேல் மதித்துச் சொல்வேன்?
பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு
  புரந்தளிக்கப் போந்த தேவே!
எந்நாடு சென்றனையோ எங்கள்குல
    மணிவிளக்கே இசைத்தி டாயே

பண்புலவு தமிழ்ச்சங்கம் நிறுவல்கரு
தியஞான்று பரிவு கூர்ந்து
நண்புலவு திருவாக்கால் தளர்வொழிகென்(று)
எனக்கிசைத்த நலம்பொய் யாதே
மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமை
யாதெனவே மதித்து வான்போய்
விண்புலவ ரோடுதம னியங் கொணர
நினைந்தனையோ வேந்த ரேறே

*இவை பாண்டித்துரை அக்காலையில் பாடிய பாடல்களுள் இரண்டு, தமிழ்ச் சங்கப் பாதுகாவலராகிய சேதுகாவலர் மறைவு, பாண்டித்துரையை அலைக்கழித்தாலும்சங்கத்தை அலைக்கழிக்க வில்லை. ஏனெனில், சங்கத்தைத் தாயாய்த் தந்தையாய்த் தாதாவாய் வளர்க்கவல்ல பாண்டித்துரை இருந்தார். அவர் சங்கத்தைக் காத்தார்; சங்கப்பணி அவரைக் காத்தது. அவர் காலத்தில் ஈடும் எடுப்பும் இல்லா நிலையில், சங்கப் பணிகள் நடைபெற்றன.*

வாய்ந்த நுண் நூல்பல ஆய்ந்து மகிழ்ந்தே
நாவலர் பல்லோர் பாவலர் பல்லோர்
சூழும் படிதழீஇ வாழும் பெருமையன்
அன்னமும் ஆவும் அன்னமா ணவர்பலர்க்(கு)
அனமும் தனமும் ஆடையும் ஏடையும்
கொடுத்தே மிடியைக் கெடுத்தே மகிழ்வித்(து)

*அருந்தமிழ் பயிற்றிப் புரந்திடும் மேன்மையர் ஆகத் திகழ்ந்தார் பாண்டித்துரை; பாற்கரர் மறைவின் பின் இரு நான்காண்டுகள் சென்றன!*

*இந்த இருநான்கு ஆண்டுகளிலே, இருநான்கு ஆண்டு விழாக்கள்! எத்துணையோ ஆய்வு அரங்கங்கள்! எத்துணையோ செயற்குழுக் கூட்டங்கள்! எத்துணையோ தேர்வுக் குழுக் கூட்டங்கள் எத்துணையோ நூல்வெளியீடுகள்! எத்துணையோ இடங்களில் சொற்பொழிவுகள்! இலக்கியச் சொற்பொழிவுகள்! சமயச் சொற்பொழிவுகள்!*

*தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவைத் தமிழகப் பரப் பெலாம் கண்டும் கேட்டும் பயன் பெறவேண்டும் என்னும் பெருங்காதல் பாண்டித்துரைக்கு எழுந்தது. அதனால் தஞ்சைப் பெருநகரில், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு*

*விழாவை நடாத்தினார். ஆங்குத் தஞ்சைத் தமிழ்ச் சங்கம் தோன்றியது; 'தமிழகம்' என்னும் இதழும் தொடங்கியது. பின்னர்க் கரந்தையில் வித்தியாநிகேதன் என்னும் பெயரால் ஒரு தமிழ்ச்சங்கம் உண்டாயது; அதுவும் இயங்கா தமைந்து, கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றியது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் போலவே தண்டமிழ்த் தொண்டாற்றுதலைத் தலையாய பணியாகக் கொண்டு இந் நாள் வரை இயன்று வருகின்றது கரந்தைத்தமிழ்ச்சங்கம்.*

*சங்கங் கண்ட பாண்டியர் பாண்டித்துரை தமிழைத் தமிழ்ச்சங்கத்தின் அகத்தும் வளர்த்தார். புறத்தும் வளர்த்தார். சென்னையிலும் தூத்துக்குடியிலும் பாளையங்கோட்டையிலும் அவர்தம் மணி நா ஒலித்தது. தேனெனப் பாகெனத் தித்திக்கத் தீந்தமிழ்ப் பொழிவு செய்தார். ஆங்காங் கிருந்த புலமையரைக் கண்டு அளவளாவினார். அவர்களை அரவணைத்துத் தமிழன்னைக்குப் பொலிவூட்டும் அருங்கலன்கள் படைக்கத் தூண்டினார். இத்தகைய இனிய பணிகளின் இடையே, பாண்டியர் தொண்டுக்கு வரம்பு கட்டி நிறுத்த இயற்கை கருதிற்றுப் போலும்!*

[1] "ஐயோவித் தமிழுலகம் என்படுமோ என்செயுமோ அந்தோ அந்தோ
துய்யாரும் புகழ்ப்பாண்டித் துரையரசைத் தமிழ்மகட்குத்
தொகைசால் நன்மை
செய்தானைச் செல்வர்தமிற் சீமானை வானேயும் சிவணா நல்லீ
கையானைக் கவிஞர்கள்தம் கண்மணியைக் காலமெனும் கடற்போ
கட்டே"

*என்றும்,*

[2] மண்ணிரங்க மலையிரங்கப் புனலிரங்கத் தீயிரங்க வளியினோடு
விண்ணிரங்க மரம்புள்வி லங்கிவை யிரங்க மேதகுகோள் இரங்க
நாளோ
டெண்ணிரங்க எழுத்திரங்க இசையிரங்கப் பிறகலையும் இரங்க
யார்க்கும்
கண்ணிரங்கக் கருத்திரங்கச் சென்றனையால் மன்னாநின் கருணை
யீதோ

*1. கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை.*

*2. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்.*

*என்றும்,*

[3]தாயில்லாச் சங்கடஞ்சூழ் இளங்குழவி போற்றமிழ்தத் தளிக்கக்
காத்தாய்
நீயில்லாச் சங்கமினி எவ்வாறு நகருறுமோ நெடுஞா லந்தான்
வாயில்லாச் சங்கமென மதித்தொருகால் ஒதுக்கிடுமோ
வளர்ப்பார் யாரோ
நோயில்லாச் சங்கரன்தா ளேபோற்றும் பாண்டிமன்னா நுவல்வாய்
அந்தோ

*என்றும் இன்னவாறு புலவர்கள் இரங்கி அரற்றப் பாண்டித்துரை 1911 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் விண்ணுல கடைந்தார்.*

*தனியொரு குடும்பத்திற்குரிய தலைவன் இல்லாமல் அக்குடும்பம் எப்படித் தத்தளித்துப் போகின்றது! தமிழ்ச்சங்கம் என்னும் பொதுவமைப்புத் தன் தலைவனை இல்லாமல் என்ன நிலையை எய்தும்?*

*பொருளினான் எல்லாம் ஆகும் என்பதை நுனித் துணர்ந்த பாண்டித்துரை, சங்கத்திற்குப் புரவலர் பலரை உருவாக்கி யிருந்தார். திங்கள் தோறும் திட்டமாக உதவுதற்கும் புரவலர் பலரைத் தேடி வைத்திருந்தார், சேதுபதி வேந்தர்களும் நிரந்தரத் தலைவராகவும் புரவலராகவும் விளங்கவும் ஒருப்படுத்தி யிருந்தார். இவ்வளவுக்கும் மேலாக, ஒரு பெரு வருவாயை நிலையாய்ச் சங்கம் பெற்று வழிவழித் தொண்டாற்றுதற்கும் பொறுப்பெடுத்துக் கொண்டார். தமிழ்ச் சங்கத்தின் பொருள் வளம் என்றும் வற்றாமல் இருக்கவேண்டும் என்பதற்காகச் சங்கத்தின் பெயரால், அந்நாளில்* ***வ.உ. சிதம்பரனாரால்*** *தோற்று விக்கப் பெற்ற கப்பல் கழகத்தில் ஓரிலக்க ரூபா முதலீடு செய்தார்! மொழியால் நாடும், நாட்டால் மொழியும் நலம் பெறப் பாண்டியர் கண்ட வழியீது! ஆனால் 'கப்பல் கழகம்' கவிழ்ந்தது! சங்கத்திற்குதவும் எதிர் காலத்து வருவாயும் அழிந்தது; இவ்விக்கட்டான சூழலில், பாண்டித் துரையின் மேல், அளவிலாப் பற்றாளரும், அவர் உதவியால் வளர்ந்தவரும் சங்கத்தின் அடிநாள் தொட்டுச் சங்கப் பொறுப்பில் ஈடுபட்டவரும், நன்றிமறவா நயன் மிக்கவரும் ஆகிய* ***டி.சி. சீனிவாசஐயங்கார்*** *என்பார் 'பாண்டியரில்லாச் சங்கத்தை*

*3. பாலகவி வயினாகரம் செட்டியார்.*

*நான் பாதுகாப்பேன்; அஃது அப்பாண்டியர்க்கு யான் பட்டுள்ள நன்றிக் கடனுக்கு அடையாளம்' என முந்துநின்றார்; முனைந்து செயலாற்றினார்.*

*சங்கத் துணைத் தலைவராக இருந்த* **பி. எசு. சுப்பிரமணிய ஐயர்** *சிறப்புத் தலைவரானார்;* **டி.சி. சீனிவாச ஐயங்கார்** *செயலாளர் ஆனார்.*

*சுப்பிரமணிய ஐயர் தமிழ் வடமொழி ஆங்கிலப் புலமையும் நாடகத் திறமும் வாய்ந்தவர்; எழுத்தாற்றலும் உடையவர்; பொதுப்பணிகள் பலவற்றில் ஆர்வமுறப் பங்கு கொண்டவர் தமிழ்ச் சங்கத்திற்குத் தம்மால் இயன்ற தொண்டுகளைத் தட்டின்றிச் செய்துவந்தவர். அவர் 24. 11. 1913 இல் இயற்கை எய்தினார். அதன் பின் இராமநாதபுரம் அரசர் பாற்கர சேதுபதியின் மைந்தர் முத்துராமலிங்க சேதுபதி என்னும் இராசராசேசுவரி சேதுபதி சங்கத் தலைவரானார். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புரவலருள் ஒருவருமாகிய* **கானாடுகாத்தான் பெத்தாச்சி செட்டியார்** *துணைத் தலைவரானார்.*

"பாவலர் புகழுறும் பாற்கர மன்னன்
ஆற்றிய தவமே போற்றுருக் கொண்டென
உதித்த செம்மால்! உருகெழு குமர!
ஒழியாப் புகழின் ஓங்குபாண் டித்துரை
நிறுவிய சங்கம் நிலைதளராது
கரந்தையர் கோனதைப் புறந்தரல் கொண்டான்;
கரந்தைவாழ் சங்கக் காவலன் அளியன்
இலங்குபெத் தாச்சி யெனும் பெயர் வள்ளல்
தன்னொடு பொருந்தித் தாயவட் குறுபணி
இயற்றும் பெற்றியில் இனிது சிறந்தனன்
என்று காவல! நின்றிருச் சீரினைக்
கேட்டனம் வியந்தனம் கிளர்மகிழ் வெய்தினம்"

*என்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர்* **த. வே. உமாமகேசுவரம் பிள்ளை** *வாழ்த்துரைத்தார்.*

*சங்கக் கட்டடத்திற்காகப் பாலையம்பட்டிக் குறுநில மன்னருக்குத் தொகை தரவேண்டியிருந்தது. சங்கத்தை அடுத்திருந்த வெறுமனையிடமும் சங்கத்திற்கே வாங்க*

முடிவாகியிருந்தது. அதற்கெனக் கட்டடக் குழுவொன்று 1919-இல் அமைக்கப் பெற்றது. அதன் பொருளாளராகப் பெத்தாச்சி செட்டியார் இருந்தார். சங்கத்தலைவர்சேதுபதி தம் கைப்பொருள் கொண்டு கட்டிடத்தையும் மனையிடத்தையும் விலைக்கு வாங்கித்தந்தார். பின்னர் அதனை நன்கொடை தண்டுதலாலும் தம் கொடையாலும் பெத்தாச்சி செட்டியார் பொருளாளர் என்னும் பொறுப்பில் தலைவருக்குத் தந்தார். இச்செய்தி 19119 டிசம்பர் 19 இல் கூடிய செயற் குழுக்கூட்ட நடவடிக்கையால் புலப்படுகின்றது.

சேதுபதி உயர்பள்ளிக்கு மேற்குப் பக்கமுள்ள இடம் சங்கத்தைச் சேர்ந்ததாக இருந்தது. அவ்விடம் வெற்றிடமாக அப்பொழுது இருந்தது. அதனை அஞ்சலகம் கட்டுதற்காக அரசு நிலக் கைப்பற்றல் சட்டப்படி எடுத்துக் கொள்ள முனைந்தது. அவ்விடம் சங்கத்திற்கு இன்றியமையாதது என்று சங்கம் கருதியது. அரசு முனைப்பைத் தடுக்க முடியாது போயின், என்ன செய்யக் கூடும்! ஆதலால் செயற்குழு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் IV**

"மதுரை சேதுபதி ஹைஸ்கூலுக்கு மேற்பக்கமுள்ள சங்கத்துக்குப் பாத்தியமான காலியிடத்தை போஸ்டாபீசு உபயோகத் திற்காக Land Acquisition Act படி கவர்ன் மெண்டார் கைப்பற்றிக் கொள்ளுதல் சம்பந்தமாக, காலியிடம் சங்கத்தின் உபயோகத்திற்கு அத்தியாவசியம் என்றும், ஆகையால் அதை விட்டு விடுவதற்குச் சம்மதிக்கக் கூடவில்லை என்றும், இடத்தைக் கைப்பற்றிக் கொள்ளுதல் சங்கத்தாரால் தடுக்கக் கூடாததாய் இருப்பின் போதுமான கிரையத் தொகை கொடுக்கும்படி கேட்க அக்ராசனாதிபதி யவர்கட்கு அதிகாரம் கொடுக்கலாயிற்று. சங்கநிர்வாக சபையாரின் அபிப்ராயத்திற்கு, சதுரடி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று இப்பொழுது கொடுப்பதாகச் சொல்கிற விலையானது மிசுவும் குறைவாயிருக்கிறது."

1920 பிப்ரவரி 18 ஆம் நாள் செயற்குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம், சங்கத்தலைவர் இராசராசேசுவர சேதுபதி தலைமையில் நிறைவேற்றப் பெற்றது.

சங்கத்தின் இடத்தை அஞ்சலகத்திற்காக அரசு கைப்பற்றிக் கொள்ளும் நடவடிக்கையில் முனைந்தது. ஈட்டுத் தொகையேனும் செவ்விதாகக் கிடைக்கத் திரு. சீனிவாசராவ் சாகிப் என்பார்

*முயன்று உதவினார். அதனால் ஐம்பதாயிரம் ரூபா ஈட்டுத் தொகையாகத் தர அரசு இசைந்தது. அத்தொகையை, ஏற்றுக் கொள்ளப்பெற்ற வங்கி ஒன்றில் வட்டி வைப்பாக்கி வைக்க 1920 ஏப்ரல் 18 இல் நிகழ்ந்த செயற்குழுக் கூட்டம் தீர்மானித்தது. அத்தொகை மதுரை இராமநாதபுரம் மையக் கூட்டுறவு வங்கியில் போடப் பெற்றது.*

*இவ்வாறு சங்கப்பணி செவ்வையாக நடைபெற்று வரும் போது 20-6-1920 இல் சங்கத்தில் தீப்பற்றி எரிந்துள்ளது. அரிய சுவடிகள், நூல்கள், சான்றேடுகள் எரிந்தன; ஈடுசெய்ய இயலாத இப்பேரிழப்பு, சங்க வரலாற்றிற்குக் களங்கமாக அமைந்து விட்டது. எப்பாடுபட்டு எங்கெங்கெல்லாம் முயன்று அரிதில் தொகுத்த அருந்தமிழ்ச் சுவடிகள் எரிந்துபோன கொடுமை, ஆடிப்பெருக்கிலோ, ஆகம முறையில் தீயிலோ, கறையான் வாயிலோ போனது போல்வது அன்று! வெளிப்படாமல் உள்ளே கசிந்த தீயே புறத்தே வெளிப்பட்டுப் பேரழிவு செய்துள்ளது போலும்! அதனால், தமிழ்ச்சங்கத் தலைவர் சேதுபதி தம் பதவியை விலக்கிக் கொள்ள விண்ணப்பம் விடுத்தார். அவ்விண்ணப்பம் 1-8-20 இல் பெத்தாச்சி செட்டியார் தலைமையில் கூடிய செயற்குழுவின் ஆய்வுக்கு வந்தது. அதனை அடுத்த கூட்டத்தில் ஆய்ந்து கொள்வதாகத் தள்ளிவைக்கப் பெற்றது.*

*சங்கக் கட்டடம் பழுதுபார்த்தால், சீர்திருத்தல் ஆகிய வகைக்குப் பல்வேறு செலவினங்கள் உண்டாயின. அச்சுப் பணியாளர், அலுவலகப் பணியாளர் - சம்பள உயர்த்தம் செய்தாக வேண்டிய சூழ்நிலையும் உண்டாயிற்று. எல்லா வற்றையும் செயற்குழு நிறைவேற்றவும் சங்கத்தை முன்னை நிலைக்குக்கொண்டு வரவும் நன்கொடை தண்ட வேண்டிய இன்றியமையாமை சங்கத்திற்கு உண்டாயிற்று.*

*வானமாமலை இராமாநுசசீயர் ரூ.500 வழங்கினார். எசு. சீனிவாசையங்கார் ரூ 500 வழங்கினார். **செட்டிநாட்டுப் பெருமக்கள்** தனிப்பட்ட நிலையிலும், பொதுநிலையிலுமாக ரூ 8469 வழங்கினர். **சேதுபதி** பதினாயிர ரூபாவழங்கினார். பின்னரும், **செட்டிநாட்டுச் செல்வர்கள்**. ரூ5176 வழங்கினர். நூல்களும் சிலர் அளித்தனர். மேலும் நன்கொடை வழங்க உறுதி தந்தாரும் இருந்தனர்.*

*சங்கம் தீப்பற்றிக் கொண்டபோது சங்கத்துப் பொருள் களை இயன்ற அளவும் காத்த பெருமக்கள் மதுரை நகர்க்*

காவல்துறை ஆய்வாளர் **அரங்கசாமி ஐயங்கார்,** துணை ஆய்வாளர் **சாயேர்சு, அச்சக மேலாளர் சீனிவாசையங்கார்,** மதுரை ஆலைத் துணைக்காசாளர் **வெங்கடகிருட்டிணராசு** என்பவர்கள் ஆவர். இவர்களுக்குச் சங்கச் செயற்குழு தன் நன்றியைத் தீர்மான வடிவில் வழங்கியது. காவல்துறைக் காவலர்களுக்குப் பரிசும் வழங்கியது.

சங்கத்தலைவர் விலகுதல் விண்ணப்பம் சிலரை வருத்தியது போலும்! அவர்கள் சேதுபதியைக் கண்டு இரங்கினர். நிலைமையை எடுத்துரைத்தனர். சங்கத்தைக் கட்டிக்காக்க வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்தினர். தாம் பதவியில் இருந்து விலகிக்கொள்ள விண்ணப்பம் தந்தும், சங்கத்தைச் சீர்செய்தற்குப் பேரருட் பெருக்கால் பத்தாயிரம் வழங்கியவர் அல்லரோ அவர்! அவர் உள்ளம் உருகியது! இறுகியது! விலகுதல் விண்ணப்பத்தை விலக்கிக் கொள்ள இசைந்தார். 18-8-20-இல் எழுதிய அக்கடிதம் 24-8-20 இல் நிகழ்ந்த செயற்குழுவில் உறுதிப்படுத்திச் சான்றேட்டில் வைக்கப் பெற்றது.

சேதுபதி வேந்தர்க்குப் பொதுவாகிய செந்தமிழ் காக்கும் இயல்பில் சிறிதும் குறையாச்சீர்மையில் இலங்கியவர் இவ் விராச ராசேசுவர சேதுபதியார். இவரால் நலம் பெற்ற அமைப்புகள் பல; வளம்பெற்ற கலைஞர்கள் பலர்; வளர்புகழ் எய்திய புலமையாளரும் பலர்.

“உடனிருந்து உதவி செய்பவர்கள் முதலியோர் விஷயத்தில் எனக்குச் சிறிதும் பொருட்கவலையுண்டாகாதபடி பேரன்புடன் பொருளுதவி செய்து சில வருஷங்களாக ஆதரித்து வரும் ஸ்ரீஸேதுஸமஸ் தானாதிபதிகளும், மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர்களும் சென்னைச்சட்ட நிரூபணசபை அங்கத்தினர் களுமான கௌரவம் பொருந்திய மகா-ள-ள-ஸ்ரீ பா. இராஜ ராஜேசுவர ஸேதுபதியவர்களைப் பாதுகாத்தருளும் வண்ணம் தமிழ்த் தெய்வத்தை இறைஞ்சுகிறேன்”[1] என்றும் “தமிழாராய்ச்சி” விஷயத்தில் வெகுகாலமாகச் சகாயம் செய்துவரும் சேது மன்னர்களாகிய மாட்சிமை பொருந்திய மஹா ராஜ ராஜ ஸ்ரீ பா. இராஜராஜேசுவர சேதுபதி அவர்களுக்கும் என் மனப் பூர்வமான நன்றியைச் செலுத்து கின்றேன்”[2] என்றும் டாக்டர் உ.வே.சா. குறிக்கிறார்.

1. ஐங்குறுநூறு முகவுரை

2. சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும் பக். 184

*இச்சேதுபதி, கருத்துமாறுபாடு உடையரேனும் கன்னித்தமிழ் வல்லாராய்த் திகழ்வாரைக் கண்ணெனக் கருதிப் போற்றும் பெருந்தகையர். இதனை நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் குறிப்பிடும் ஒரு நிகழ்ச்சியாலும், தசரதன் குறையும் கைகேயி நிறையும் என்னும் தம் நூற்படையலாலும் அறியலாம்.*

*"நான் போந்த நீராவித் தொடர்ப்பண்டி நள்ளிருளில் நான்மாடக் கூடலை நணுகிற்று. ஆண்டு நான் இறங்கி மறுதொடரில் இடமின்றி மறுகுகையில், மதுரைத் தமிழ்ச்சங்கப் பெருநாவலரும் செந்தமிழ் முதற்பத்திராசிரியரும் சேது சமத்தானத் தலைமைப் புலவருமான உயர்திரு. ரா. இராகவையங்காரவர்கள் கண்டு அருமையுடன் அழைத்துச் சென்று தம் அரசர் பக்கல் உய்த்து உதவினார்கள். இறைமையைப் போல் நிறை புலமை நிருபரெனத் தமிழகத்தே தலைநின்ற திருமன்னர் முகமலர்ந்து பெருந்தகையால் முகமனுடன் வரவேற்றுத் தங்குழுவிலெனைச் சேர்த்துத் தலையளியுஞ் செய்தசெயல் என்றும் மறக்ககில்லேன். அவலம் நீக்கி அன்றிரவு வழிகழியப் புலர்பொழுதில் தஞ்சையுற்றேன். வழியிடையே, நாவலரால் எனையழைத்த சங்கக் கூட்டம் சேதுகாவலர் பாதுகாவலில் நடைபெறும் நற்செய்தியும் தமிழரசர் தம்சபைத்தலைமை முன்னுரையில் என்பால் அன்புரைகள் ஏதோசில கூறப்போகும் குறிப்பும் உணர்த்தப் பெற்றேன். கூடல் நான்காஞ் சங்க விழாக் கூட்டமொன்றில் நம்முள் வேற்றுமை யுணர்ச்சி வித்தவந்த சில வித்தகருக்கு மாறுகூறி ஒற்றுமை நலத்தை வற்புறுத்த முயன்ற என் ஒரு சிற்றுரை கேட்டதன்றிப் பிறிதெனை நன்கறியாப் பெருந் தமிழ் வேந்தர் பேரன்பால் என்னை ஒரு பொருட்படுத்தித்தம். முன்னுரையிற் சுட்ட நினைத்த பெருங்கருணை என் தகவின்மையை நினைப்பூட்டி என்னைப்பெரிதும் வருத்தியதுடன் அவ்வரசர் பிரான் குணப்பெருமையை விளக்கி என்னை ஆட்கொண்டது"*

சங்க மருவித் தழையத் தமிழ்தழுவி
எங்கும் புலவர் இனிதிசைக்கத் - தங்கும்
இரவி மருமான் இராசரா சேசற்
குரிமையிது செய்தேன் உவந்து',

*என்பது அவர் குறிப்பும், படையலுமாம்.*

*நாவலர் பாரதியார்க்கு இவ்வாறு ஏற்பட்ட பற்றுதல் தான், தமிழ்ச் சங்க உறுப்பினராகவும், புலமை வித்தகராகவும்,*

ஆட்சிக்குழு உறுப்பினராகவும், கட்டடக்குழு உறுப்பின ராகவும், ஆக்கிச் சங்கத்திற்கு அரும்பணி செய்ய வைத்தது. கரந்தைத் தமிழ்ச்சங்க ஒன்பதாம் ஆண்டுவிழாத் தலைமை யேற்று அவர் உரை நிகழ்த்திய போது அவர் கொண்டுவந்த தீர்மானங்களுள் ஒன்று தமிழ்ச் சங்கம் பற்றிய தாகும்.

"உண்மையான தமிழ்த் தொண்டுகள் பல செய்து வரும் தமிழ்ச் சங்கத்திற்குத் தீயினால் விளைந்த இடையூற்றுக்காகப் பெரிதும் உளங்கவல்வதோடு அச்சங்கத்தை நன்னிலையில் உய்ப்பதற்காகத் தம்மாலியன்ற உதவி செய்யும்படி தமிழர், தமிழன்பர் எல்லாரையும் இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக் கொள்கின்றார்கள்" என்பது தீர்மானம்.

இதனையடுத்த தீர்மானமும் இதனொடு இணைக்கத் தக்கதாகத் தலைவரே கொணர்ந்தார். அத் தீர்மானம் வருமாறு:

"தமிழகத்திலுள்ள பெருமடங்களின் தலைவர்கள் தங்கள் பொருட்பெருக்கின் ஒரு சிறு பகுதியையேனும் தங்கள் கடமையாகிய தமிழ் மொழி வளர்ச்சியில் செலவிடுவார் களாயின் பெரும்பயன் விளையுமென்று அன்னோர்களைப் பன்முறை கேட்டும் அவர்கள் வாளா விருத்தல் மிகவும் கவலத்தக்கதாய் இருக்கிறது. இனியாவது அவர்கள் தங்கள் கடமையை யோர்ந்து தமிழ்மொழி மேம்பாட்டுக்கு ஆவன செய்யும்படி அவர்களை இப்பெருங் கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறார்கள்."

தமிழகத்துப் பெருமடங்களின் செவியில் இது தைத்ததா? தைத்திருந்தால் தமிழ் மொழியை எத்தகு மேனிலையில் அது வைத்திருக்கக் கூடும்! ஒருவானமாமலை சீயர்மடம் வழங்கிய உதவியைத் தானும், ஒரு தமிழ் மடமும் வழங்கிற்று இல்லையே! திருவாவடுதுறையா தீனத்துத் தவத்திரு சிவஞானமுனிவரிடம் பாண்டித்துரையார் கொண்டிருந்த பற்று இணையற்றது. அம்மடத்தின் பெரும்புலவர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் என்பதையும், அவர்கள் புகழ்விளக்கிய மாணாக்கர் உ.வே. சாமிநாதையர் என்பதையும் நாடறியும். தமிழ்ச்சங்க நூலாய்வாளர் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் திருவாவடு துறை ஆதீனப் புலவர். இத்தகு தொடர்பிருந்தும், அத் திருமடமும், எவ்வுதவி செய்யவும் ஏறிட்டுப் பார்க்கவுமில்லையே தமிழ்ச் சங்கத்திற்கு? இடர் வந்த போது உதவாத உறவு உண்மையென உலகம் கொள்ளுமோ? ஆனால் சங்கத்தின் பொருள் நிலை ஒன்றும் முட்டுப்பாடாகிவிடவில்லை.

*சேது வேந்தர்கள், வேண்டும் உதவிகளை வேண்டும் போதெல்லாம் செய்தனர், பெத்தாச்சி செட்டியார் ஒரே பொழுதில் ரூ 5000 வழங்கினார். திங்களுக்கு ரூபா ஐம்பது எனத் திட்டமிட்டும் உதவினார். புதுக்கோட்டை அரசு 1903 ஆம் ஆண்டில் பாக்ர சேதுபதி வேண்டுகோட்படி ரூ 5000 வழங்கியது. பின்னர்த் திங்களுக்கு 50 ரூபா எனத் திட்டமிட்டு 1948 வரை வழங்கி வந்தது. எட்டையபுரம் அரசு, சிவகங்கை அரசு, சேற்றூர் அரசு ஆகிய சில அரசுகளும் இயன்ற வகையில் உதவின. வாணான் உறுப்பினர்களாகச் சேர்தல் பெருமையெனக் கருதிப் பெருஞ்செல்வர்களும் அறிஞர்களும் முன்வந்தனர். ஆயினும் புரவலர்களை எதிர் பார்த்தேசங்கம் நடந்தது; அவர்கள் தளர்ச்சி சங்கத் தளர்ச்சியாயிற்று.*

*சங்கத்தைப் பேருள்ளத்தோடு புரந்த ஆண்டிப்பட்டிக் குறுநில மன்னர்* ***கானாடு காத்தான் பெத்தாச்சி செட்டியார்****31-3-1924 இல் காலமானார். நான்கே ஆண்டுகள் நடந்தன. சங்கத் தேர்வு முதற்பரிசைத் தம் கொடைத்திறத்தால் புதுக்கோட்டை அரசர் பரிசாகச் செய்த* **வேந்தர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர்** *28-5-28 இல் காலமானார்; அடுத்து நான்கு திங்களும் கடக்கவில்லை. சங்கத் தலைவர்* **இராசராசேசுவர சேதுபதி** *விபவ ஆண்டு ஆடித்திங்கள் 19 ஆம் நாள் (1924 ஆகஸ்டு) இயற்கை எய்தினார். சங்கத்திற்கு எத்தனை எத்தனை 'தத்துகள்'.*

*17-9-28 இல் கூடிய செயற்குழு,* ***அரசர் எம். தினகர்பகதூர்*** *அவர்களைத் தமிழ்ச்சங்கத் தற்காலிகத் தலைவராகத் தேர்ந்தது. இந்நிலையில், 1929 சனவரிமுதல் திங்கள்தோறும் ரூபா நூறு, சங்கத்துக்கு வழங்கச் சேதுபதி அரசர் இசைந்து ஆணை பிறப்பித்தார்.* ***காரைக்குடி இராம. நாராயணன் செட்டியார்*** *1200 ரூபாவை வைப்பு நிதியாக வைத்து அதன் வட்டியைச் சங்கத்துக்கு அனுப்புதலை ஏற்றுக் கொண்டார்.*

*8-12-1929 ஆம் நாள் சங்கத்தின் இருபத்தெட்டாம் ஆண்டு விழா நிகழ்ந்தது. அவ்விழா சென்னை அரசின் செயற்குழு (எக்சிகியூட்டிவ் கௌன்சில்) உறுப்பினர்* ***நார்மன்எட்வர்டு மார்ச் பாங்சு*** *தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் அவ்வாங்கிலவர், தமிழ் வளர்ச்சிக் குரியவற்றை மிக அடக்கத்தோடு உரைத்துள்ளார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே அவர் கூறிய உரையை இக்காலத் தமிழ் வல்லார்களும் கைக்கொள்ளவில்லையே என்னும் வருத்தமே எழுகின்றது.*

"பல நாடுகளிலுமுள்ள சான்றோர்கள் தம் நுண்ணறிவால் வெளிப்படுத்தும் புதுமைகள் பலவற்றையும் காலதேச இயல்புக்கு ஏற்பத் தமிழ் மக்களும் தமிழ்மொழி மூலம் அறிந்து முன்னேற்றமடையத் தக்கதாய்த் தமிழ்மொழியை வளப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அவ்விதம் புதிய கருத்துக்கள் புதிய பொருள்கள் இவற்றை வெளியிடுவதில் கண்மூடித் தனமாகப் பிறமொழிச் சொற்களைக் கண்டவாறு பயன்படுத்தாமல் அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களையும், தமிழ் மொழியின் அமைப்பு இயல்புகளுக்குத் தக்கவாறு படைத்த சொற்களையும் வழங்குதலே சிறந்ததாகும். அவ்விதம் பயன் படுத்துவது தான் தமிழ்மொழியின் தன்மையையும் தூய்மையையும் போற்றுவதாகும். தமிழ்ச்சொற்களாலே நன்கு விளக்கிக் காட்டவேண்டியிருக்க அதைவிட்டு 'Hydro Electric Power'என்று ஏன் ஆங்கிலத்தொடர் மொழியைப் பயன்படுத்த வேண்டும். இதுபோன்று பல எடுத்துக்காட்டுகளைக் காட்டக் கூடுமெனினும், அது மிகையாகையாற் கூறாமல் விடுகிறேன்."

"மேலும் தமிழில் உரையாடும் போது பிறமொழிச் சொற்களை இடையிடையே கலந்து பேசுவதை நோக்கி என் மனம் வருந்துகின்றது. அவ்வழக்கத்தை முற்றும் விட்டு விட வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். **அவ்வழக்கம் பேச்சில்மட்டும் நில்லாது எழுத்திலும் அச்சிலும் கூட வழங்கக் காணுகிறோம்** 'கேஸ் டிஸ்மிஸ்' ஆயிற்று என்று சொல்வதைக் கேட்பது இயல்பாயுள்ளது. 'வழக்குத் தள்ளுபடி ஆயிற்று' என்று எளிதாயும் தெளிவாயும் தமிழிற் கூறுலாமே"

இம் மணிமொழிகளைச் செந்தமிழ் கடைப்பிடித்திருந்தால் கூட எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்?

23-12-1913 இல் தினகர் தலைமையில் நிகழ்ந்த செயற்குழுக் கூட்டத்தில், சங்க அலுவலகக் கட்டிடத்தை அடுத்துள்ள 'மொசானிக் விடுதியை' விலைக்கு வாங்கவும், அதற்குரிய தொகையை வங்கியிருப்பில் இருந்து எடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப் பெற்றது.

சங்கக் கட்டிடத்திற்கும், தொட்டப்பநாயக்கனூர் குறுநில மன்னர்மனைக்கும் இடையேயுள்ள சங்கச் சுற்றுச் சுவரை இடித்துவிட்டு, இடத்தில் புதுச்சுவர் எழுப்பி அதில் தமக்கு எவ்வித உரிமையும் பாராட்டப் பெறாமல் முழுஉரிமையும் சங்கத்துக்கு ஆக்க இசைவாரானால், அக்குறுநில மன்னர்

கேட்டுக் கொண்டவாறு சுற்றுச் சுவர் கட்ட அனுமதிக்கலாம் என்னும் தீர்மானம் 28-10-32 இல் செயற்குழுவில் நிறைவேற்றப் பெற்றது.

20-12-32 இல் பேரவைக் கூட்டம் உ.வே. சாமிநாதையர் தலைமையில் கூடியது. அப்பொழுது திரு. சண்முகராசேசுவர நாகநாத சேதுபதி, சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். டி.சி. சீனிவாச ஐயங்கார் துணைத்தலைவராகவும், ச. சோமசுந்தரபாரதியாரும், என். ஆர். கிருட்டிணசாமி ஐயங்காரும் சிறப்புச் செயலாளர்களாகவும், தேர்ந்தெடுக்கப் பெற்றனர். கல்வி ஆய்வுக் குழுவில் முன்னைய உறுப்பினர்களுடன் ஆ. கார்மேகக்கோனார், விபுலானந்த அடிகள் ஆகிய இருவரும் இணைக்கப் பெற்றனர். முன்னைய உறுப்பினர்கள் உ.வே. சாமிநாதையர், இரா. இராகவஐயங்கார், மு. கதிரேசச் செட்டியார், செ.மு. சையத் மகமத்ஆலி, கே. இராமையங்கார். வி.எசு. இராமசாமிசாத்திரி என்போர். இவ்வாட்சிக் குழு முப்பத்தோராம் ஆண்டு விழா நிறைவின்போது தேர்ந்தெடுக்கப் பெற்றதாகும். அவ்வாண்டு விழாவின் போது தவத்திரு விபுலானந்த அடிகளார் தமிழ்ச்சங்கப் பணிநலம் பாராட்டிப் பேசினார்:

"மற்றைச் சங்கங்களினும் பல்கலைக் கழகங்களினும் மதுரைத் தமிழ்ச் சங்கமே சிறந்தது என்றும், பண்டும் பிற தேயங்களில் தமிழ்ச்சங்கங்கள் இருந்தன எனினும் அவற்று ளெல்லாம் மதுரைச் சங்கமே சிறந்தது என்றும், பல்கலைக் கழகங்களுக்கும் தமிழ்ச்சங்கத்திற்கும் தமிழ் வளர்க்கும் பொருளால் வேறுபாடு உண்டு என்றும், தமிழுக்கு இடையூறு வந்த காலத்துப் பண்டும் இன்றும் மதுரையே முன்னின்று அதனை நீக்கியது என்றும், தமிழ் வளர்ச்சிக்கேயன்றிச் சைவசமய வளர்ச்சிக்கும் தலைவரின் முன்னோர்கள் பேருதவி செய்தனர் என்றும், அவர்களுள் பாற்கர சேதுபதி அவர்கள் விவேகானந்த அடிகளாராற் பாராட்டப் பெற்ற பெருமை யுடையவர் என்றும், இச்சங்கம் சேதுவேந்தர் அரவணைப்பில் வளர்ந்து வடமொழியிலும் பிறமொழிகளிலும் உள்ள பலவகை அரியநூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுத் தமிழ், மேன் மேலும் நூல்வளம் பெறச் செய்ய வேண்டும்" என்றும் விரித்துரைத்தார்.

சங்கத்தின் முப்பத்து மூன்றாம் ஆண்டுவிழா பவ ஆண்டு ஆடி 31 ஆம் நாள் சென்னைமாநில ஆளுநர் **கான்பதூர் சர்**

**முகம்மது உசுமான் சாகிப் பகதூர்** தலைமையில் நிகழ்ந்தது. அப்பொழுது சென்னை அரசின் வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்தவர் பி.டி. இராசன். அவர் இராசராசேசுவர முத்துராமலிங்க சேதுபதியின் சிறப்புகளையும், தமிழ்ச்சங்க வளர்ச்சிக்கு அவர் செய்துள்ள உதவிகளையும் விரித்துரைத்து அவர்தம் திருவுருவப்படத்தை ஆளுநர் திறந்து வைக்குமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே ஆளுநரால் அப்படம் திறந்து வைக்கப்பெற்றது. திரு. பி. டி. இராசன் அவர்கள் 1921 செப்டம்பர் முதலே தமிழ்ச்சங்கத்தின் வாணாள் உறுப்பினர் என்பது குறிப்பிடத் தக்கது.

1933 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் நாள் நடைபெற்ற செயற்குழுவில் சங்கத்தின் அச்சகம் சங்கத்தின் மேலான நோக்கத்திற்கும் நன்மைக்கும் ஏற்பச் செயல்படஇயலாத நிலையில் இருப்பதைக் கருதி அதனை மூடிவிடுவதென்றும், அச்சகந் தொடர்பான வேலைக்காரர்களுக்கு அது வரை சேர வேண்டிய பாக்கித் தொகையுடன், ஒரு மாதச் சம்பளம் உதவித் தொகையாகத் தந்து உடனே வேலையில் இருந்து நீக்கி விடுவ தென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

1934 மே 5ஆம் நாள் கூடிய செயற்குழுவில் சங்கஞ் சார்ந்த பாண்டியன் நூல் நிலையத்திற்கு வேண்டும் நிலைப்பேழைகள் செய்து தமிழ்நூல்கள் வாங்கிவைத்து ஒழுங்குபடுத்தத் தீர்மானிக்கப் பெற்றது. இராமநாதபுரம் அரசி முத்தாத்தாள் நாச்சியார், சங்கநூல் நிலையத்திற்கு அச்சிட்ட நூல்கள் அன்பளிப்பு வழங்கினார். மதுரை இ. மா. கோபால கிருட்டிணகோன் ஈராயிரரூபா பெறுமானமுள்ள தமிழ், ஆங்கில, வடமொழி நூல்கள் வழங்கினார்.

உ. வே. சாமிநாதையர் தாம் செந்தமிழில் ஆய்ந்து வெளியிட்ட நூல்களைத் தனியே வெளியிட்டுக் கொள்ளச் சங்கத்தின் இசைவு கோரினார். அதனைச் செயற்குழு ஏற்றுக் கொண்டு 14.6.35 இல் கூடிய கூட்டத்தில் முடிவு செய்தது. கூடியவரை இப்பொழுதுள்ள பதிப்புகளின் படிகள் செலவான பின் வெளியிடுமாறு வேண்டிக் கொண்டது. இதனால் எவ்வாறும் மொழிவளம் பெருக்குதலே சங்கத்தின் நோக்கம் என்பதும், வணிக நோக்கம் சங்கத்திற்கு இருந்தது இல்லை என்பதும் வெளிப்படும்.

**தவத்திரு. குன்றக்குடி அடிகளாரை** மடத்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்குதற்கு முயற்சி நடந்தபோது அம் முயற்சியை

*முறியடித்து வெற்றி கண்ட பெருமை தமிழ்ச்சங்கத் திற்கும், அதன் துணைத்தலைவர் டி.சி. சீனிவாசையங்கார்க்கும் உண்டு. இதனால் சங்கத்தின் பொதுப்பணிச் சால்பு புலப்படும். இத்தகு சங்கத்திற்குப் பேரிழப்பான நாள்களுள் ஒன்றாக 9-12-51 அமைந்தது. அந்நாளில் சங்கத் துணைத்தலைவர் டி.சி. சீனிவாச ஐயங்கார் இயற்கை எய்தினார்.*

*1901 இல் சங்கம் தொடங்கியது முதல் 1935 ஆம் ஆண்டு வரை சங்கத்தின் சிறப்புச் செயலாளராகவும், அதற்குப்பின் தம் வாழ்நாள் முழுவதும் துணைத் தலைவராகவும் பல்வேறு குழுக்களில் பொறுப்பாளராகவும் இருந்து பணி செய்தவர் அவர்.*

*சங்கத்துக்கு இடருற்ற பொழுதுகளில் எல்லாம் இளைக்காமல் சளைக்காமல் பணியாற்றி அதன் தளர்ச்சியைப் போக்கியவர் அவர். குறிப்பாக இராசேசுவரமுத்துராமலிங்க சேதுபதியையும், சண்முக ராசேசுவர நாகநாத சேதுபதியையும் தமிழ்ச்சங்கத் தலைமைப் பொறுப்பில் முறைமைப்படி வைத்த முழுமுயற்சியாளர். தாம் இளங்கலைத் தேர்வில் தமிழில் தோற்ற காலையில் பாண்டித்துரையாரிடம் தனியே தமிழ் பயின்று, அத்தேர்வில் தேறிப் பின்னர் வழக்கறிஞர்க்குப் பயின்று பணி செய்யப்புகுந்த வேளையில், பழைமை மறவாமல் பாண்டித் துரைக்குப் பக்கம் நின்று சங்கத்திற்குத் தம்மை ஒப்படைத்துப் பணிசெய்தவர்.*

*தமிழ்ச் சங்கத்திற்கு வேண்டும்போது கடனாகவும். நன்கொடையாகவும் பொருள் வழங்கியுள்ளார். தமிழ்ச்சங்கக் கல்லூரி மாணவர்களுக்கு 1914 முதல் 1950 முடிய 36 ஆண்டுகள் தீபாவளிக்கு உடை வாங்கித்தர உதவியுள்ளார். சங்கக் கல்லூரி மாணவருள் ஒருவர்க்குத் தம் பொறுப்பில் உண்டி உடை உறையுளுக்கு வேண்டும் பொருளுதவி செய்தார். பாண்டியன் புத்தகசாலைக்கு 1123 புத்தகங்களையும், தாம் தொகுத்து வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளையும் வழங்கினார்.*

*சங்கத்தின் தொடக்க நாள் முதல் 50 ஆண்டுகளின் வரலாற்றில் பங்கு கொண்ட அப்பெருமகனார் மறைவு சங்கத்தை அசைத்தது; ஆட்டியது. அப்பொழுதில் சங்கத்தை நிலைபெறுத்த முன்னின்றவர் திரு.பி.டி. இராசன் ஆவர்.*

*இவர் காலத்தில் சங்கம்* ***பொன்விழாக்*** *கண்டது. அதனைச் சிறப்பாக நடாத்தியதும், சங்கச் சார்பில் செந்தமிழ்க்*

கல்லூரி தோற்றுவித்ததும் இவரையே சாரும். **தமிழிசைக் கழகம்** என்னும் ஒரு கழகத்தைத் தோற்றுவித்துத் தமிழ்ச்சங்க உறுப்புகளுள் ஒன்றாக்கிப் பணிசெய்தார். இவர் ஆட்சிக் காலத்தில், நாவலர் பாரதியார் தொகுத்து வைத்திருந்த நூல்கள் பாண்டியன் புத்தகசாலைக்கு நன்கொடையாக வழங்கப் பெற்றதும் குறிப்பிடத் தக்கதாகும்.

1956 ஆம் ஆண்டு மே 30 ஆம் நாள்முதல் சூன் 5 முடிய ஏழு நாள்கள் தொடர்ந்து பொன் விழா நிகழ்ந்தது. காலை 9 மணிக்கு இயலரங்கம், மாலை 6 மணிக்கு இசையரங்கும், இரவு 10 மணிக்கு நாடக அரங்கும் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்தன. இயலரங்கு மீனாட்சி சுந்தரர் திருக்கோயிலிலும், ஏனை அரங்குகள் இரண்டும் தமுக்கம் கலையரங்கிலும் நிகழ்ந்தன.

சங்கத் துணைத்தலைவர் பி.டி. இராசன் வரவேற்புரைத் தார். விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். திரு.சி. இராசகோபாலாச்சாரியார். திருப்பனந்தாள் காசிமடத் தலைவர் அருள்நந்தித் தம்பிரான் தலைமைப் பொழிவாற்றினார். பெரும்புலவர் ஆ. கார்மேகக் கோனார் முதலாக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஈறாக அறுவர் சிறப்புரையாற்றினர்.

இரண்டாம் நாள் வேளாண்மைத்துறை அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் புலவர்கள் எழுவர் உரையாற்றினர். மூன்றாம் நாள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி.எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் புலவர்கள் மூவர் உரையாற்றினர். ஆளுநர் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள் பாண்டித்துரைத் தேவர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

நான்காம் நாள் திருமதி புட்பம் நடராசன் அவர்கள் தலைமையில் மதுரை ஆதீன இளவரசு சோமசுந்தரதேசிக பரமாசாரியார், பாற்கர சேதுபதியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். புலவர்கள் ஆறுபேர் பொழிந்தனர்.

ஐந்தாம் நாள், நாவலர் ச. சோ. பாரதியார் தலைமையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், ஓவியக் காட்சியைத் திறந்து வைத்தார். புலவர்கள் ஐவர் பேருரை யாற்றினர்.

ஆறாம் நாள், ஈழம், இராமநாதன் கல்லூரி ச. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் நடுவணரசுத் துணையமைச்சர் ஓ.வி. அளகேசன் உரையாற்றினார், புலவர்கள் பலர் பேசினர்.

ஏழாம் நாள், இலங்கை காந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, பொதுப் பணித்துறை யமைச்சரும் தமிழ்ச் சங்கத் தலைவருமான சண்முகராசேசுவர சேதுபதி பரிசு வழங்கினார். புலவர்கள் எழுவர் உரையாற்றினர். இவ்வாறே இசை நாடக நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

பொன் விழாக்குழுத் தலைவராகப் பி.டி. இராசன் அவர்களும், துணைத் தலைவர்களாக அ. சிதம்பர முதலியார், என்.ஆர். கிருட்டிணசாமி ஐயங்கார், பி. ரெங்கசாமி நாயுடு, பேராசிரியர் ஆ. கார்மேகக்கோனார், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோரும், வி. சண்முகசுந்தரம் கி. பழனியப்பன் ஆகியோர் செயலாளர்களாகவும், மு. சுப்பிரமணிய முதலியார், ஏ.பி. முகமது சுல்தான் ஆகியோர் துணைச் செயலாளர்களாகவும், வி. அழகப்பன் பொருளாள ராகவும், ஏசு. பார்த்தசாரதி நாயுடு, பி. இராமசாமி ராசு, ஏ. ரெங்கசாமி ஐயங்கார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, எம். சிவசுப்பிரமணிய பிள்ளை நா. பாலுசாமி ஆகியோர் விழாக்குழு உறுப்பினர்களாகவும் இருந்தனர்.

பொன்விழாவை ஒட்டி ஓர் அரிய மலர் வெளியீடும் இருந்தது மிகச்சிறந்த அம்மலர் பொன்விழாவில் உரையாற்றிய பெருமக்கள், தாம் உரையாற்றப் போகும் பொருள் பற்றி முன்னரே எழுதித் தந்து அச்சிடப் பெற்ற அருமையுடையதாகும் முன்னுரையுடன் 56 கட்டுரைகளைத் தாங்கியுள்ளது அம்மலர்.

“இச்சங்கம் **நாலாவது சங்கமாகும்.** இதற்கு முன்பிருந்த மூன்று சங்கங்களில் முதல் இரண்டு சங்கங்கள் கடலில் மறைந்தன. மூன்றாவது சங்கம் கி.பி. இரண்டாவது நூற்றாண்டோடு மறைந்தது. வரலாற்றை ஒட்டிய பலகாரணங் களால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழ் வளர்ச்சிக்கான உணர்ச்சியும் முயற்சியும் மக்களிடையே தோன்றாமல் போய் விட்டன. உயர்திரு பாண்டித்துரைத் தேவர் அவர்களின் முயற்சியால் நாலாவது சங்கம்-நிலையான சங்கம்-1901 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ஆம் தேதி மதுரையில் தமிழ் நாட்டிலுள்ள புலவர் பெருமக்கள் திரளாகக் கூடியிருந்த ஒரு பொதுக்கூட்டத்தில் துவக்கப்பெற்றது. அவரது இறுதிக் காலமாகிய 1911 ஆம் ஆண்டுவரை இச்சங்கத்தை வளர்ப்பதற்காகப் பாண்டித்துரைத் தேவரவர்கள் உடல் பொருள் ஆவிமூன்றையும் காணிக்கையாக்கினார். அவர்

காலத்திற்குப் பின் பல அறிஞர்களுடைய சீரிய முயற்சியால் சிறப்பாகத் திருவாளர்கள் நாவலர் சோமசுந்தரபாரதி, டி.சி. சீனிவாசஐயங்கார் முதலியவர்களது ஈடில்லா உழைப்பினால் இச்சங்கம் இனிது நடைபெற்று வந்தது. திரு. சீனிவாச ஐயங்கார் முதலியவர்களது ஈடில்லா உழைப்பினால் இச்சங்கம் இனிது நடைபெற்று வந்தது. திரு. சீனிவாச ஐயங்கார் இறுதிக் காலத்தில் சங்கத்தை நடத்தும் பொறுப்பை என்மீது சுமத்தினார்" எனப் பொன் விழாமலரின் முன்னுரையில் தமிழ்ச் சங்க வரலாற்றைச் சுருங்க உரைத்துள்ளார் விழாக் குழுத்தலைவர் பி.டி. இராசன்.

தமிழ்ச் சங்கத்தின் துணையில் தமிழிசைக் கழகம் நடாத்துவது என்றும், திரு. பி.டி. இராசன் அவர்கள் தலைமையில் தமிழிசைக் கழகம் இயங்குவது என்றும் 15-12-58 இல் தீர்மானிக்கப் பெற்றது, அக்கூட்டத்திலேயே லெ. நாராயணன் செட்டியார் அவர்களைக் குழுத்தலைவராகக் கொண்டு உறுப்பினர் 16 பேர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். 19-1-59 இல் தமிழிசைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாராயணன் செட்டியார் தலைமையில் கூடி, ஆட்சிக் குழுவினரைத் தேர்ந்தெடுத்தது. நூற்றுக்கு எண்பதுக்குக் குறையாமல் தமிழிசைப் பாடல் பாடுபவர்களையே விழாவுக்கும் நிகழ்ச்சிக்கும் அழைப்பது என அக்குழுவில் முடிவு செய்யப் பெற்றது. ஆனால், தொடர்ந்து தமிழிசைச் சங்கம் நடைபெறாது அமைந்தது.

தமிழ்ச் சங்கத்தின் பெருமைதரு புரவலராக இந்திய நாட்டுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் இசைந்து பெருமை செய்தார். அவருக்குப் பின்னர் வந்த தலைவர்கள் டாக்டர் இராதாகிருட்டிணன், டாக்டர் சாகிர்உசேன், ஆளுநர் சர்தார் உச்சல்சிங் ஆகியோரும் அப்பெருமையைச் சங்கத்திற்கு நல்கினர் என்பதும் நினைக்கத் தக்கதாகும்.

சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் தொடங்கப் பெற்றது செந்தமிழ்க் கல்லூரி. அதன் தலைவர் இரா. வே. நாராயணன் ஆவர். பல்கலைக் கழக விதிமுறைப்படி பாடத் திட்டங்கள் நடைபெறலாயின: பேராசிரியர்களும் அமர்த்தப் பெற்றனர். அன்பு கருணையானந்தா, கு. மா. திருநாவுக்கரசு வி. சீனிவாசன், ச. சாம்பசிவம், மு. உலகநாதன் ஆகியோர் விரிவுரையாளராக அமர்ந்தனர். சங்கச் செயலாளராக இருந்த திரு. வி. சண்முகசுந்தரம் இயல்பாகவே பல்வேறு பொது நலப்பணிகளில் ஊன்றியவர். ஆதலின் தம்கடமையை விருப்போடும் முறையோடும் செய்துவந்தார்.

“மாமதுரைச் சங்கமது மன்னிவளர் காலமெலாம்
நீமதுர மயமாக நெஞ்சில் குடியிருப்பாய்”

என்று இரங்கி வாழ்த்த, அவர் 9-7-65இல் இயற்கை எய்தினார்.

நிரந்தரத் தலைவராகத் தமிழ்ச் சங்கத்திற்குச் சேதுபதி வேந்தரே இருந்து வந்தனர். அது வழி வழி மரபாகக் கொள்ளப் பெற்றது. ஆனால் சண்முக ராசேசுவர சேதுபதி காலத்தில் அவர் அமைச்சுப் பதவியில் இருந்தாலும், சங்கத் தொடர்பில் ஊன்றாததாலும் சங்கத்தொடர்பு அவர்க்கு இல்லாது போயிற்று. சங்கப் பொறுப்பு திரு. பி.டி. இராசன் அவர்களிடம் இருந்தது. இந்நிலையில் தமிழ்க் கல்லூரியைக் கலைக்கல்லூரி ஆக்கும் முயற்சியும் சங்கக்கட்டிடத்தை விடுத்து வேற்றிடத்திற்குக் கல்லூரியை மாற்றியமைக்கும் ஒரு முயற்சியும் மேற்கொள்ளப் பெற்றன இவற்றால் ஆசிரியர்களும் மாணவர்களும் வேலை நிறுத்தம். படிப்பு நிறுத்தம் எனக்கிளர்ந்தனர். சங்கத்தின் தொன்மரபைக் கட்டிக்காத்துச் செயலுறுத்த வேண்டிய கடப்பாடு சங்க உறுப்பினர்களுக்கும், சேதுபதி வேந்தர் தொடர்புடையவர்களுக்கும் உண்டாயிற்று. சங்கச் சிக்கலை எவ்வாறும் தீர்க்க வேண்டும் அன்றே!

சிக்கலைத் தீர்க்கும் செவ்விய மருந்து சங்க அமைப்பு விதிப்படி, பொதுக் குழுவைக் கூட்டி ஆராய்வதேயாகும். அவ்விதிப்படி 5-7-71 ஆம் நாள் பொதுக்குழு, கூட்டப் பெற்றது. அக்குழுவில் ஆட்சிக்குழு தேர்ந்தெடுக்கப்பெற்றது. இராம நாதபுரம் அரசர் **இராமநாத சேதுபதி** சங்கத்தின் நிலைத் தலைவரானார். ஆர். செல்லத்தேவர் துணைத் தலைவராகவும். வே. அ. வேலுச்சாமி பொதுச் செயலாளராகவும், டி.பி. எம். பெரியசுவாமி செயலாளராகவும், எம். சங்கரபாண்டியன், எம். தனுக்கோடிபாண்டியன், பி. மலைச்சாமி, வி. தங்கப்பாண்டியன், டி.ஏ. தெய்வசிகாமணி, கே. கந்தசாமி, ஆ. ஆண்டியப்பன், வ. நாகமணி ஆகியோர் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் தேர்ந் தெடுக்கப் பெற்றனர்.

புதுக்குழு தேர்ந்தெடுக்கப் பெற்றதும் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் நின்றது. மாணவர் படிப்பு நிறுத்தம் ஓய்ந்தது. புதுத் தெம்புடன் கல்லூரி கடனாற்றத் தொடங்கியது. இந் நிலையில், பழைய ஆட்சிக்குழுவினர், புதுக்குழுவினர் செயலாற்ற ஒண்ணாவண்ணம் தடுக்குமாறு மன்றத்தில் முறையீடு மேற் கொண்டனர். சங்கப் பணம்- வங்கியிருப்பு - பயன்படுத்த

வாய்ப்பின்றித் தடுக்கப்பெற்றது. கல்லூரிப் பேராசிரியன்மார்க்குச் சம்பளம் வழங்கமுட்டுப்பாடு உண்டாயிற்று. ஒருதிங்கள் இருதிங்கள் முட்டுப்பாடா? ஏழாண்டுகள் சங்கப் பணத்தில் இருந்து சம்பளம் வழங்க இயலாத முட்டுப்பாடு! ஆயினும் பாக்கியின்றித் திங்கள் தோறும் சங்கம் சம்பளம் அளித்தது. சங்கக் கல்லூரிக்கு அதுகாறும் வற்புறுத்தப் பெறாமல் இருந்த வைப்புத் தொகை கட்டாயம் வைத்தே ஆகவேண்டும் என்னும் நெருக்கடியும் பல்கலைக்கழக வழி வந்தது. ஓர் இலக்க ரூபா அதற்கெனத் திரட்டித்தரப் புதுச்சங்கச் செயற்குழு முனைந்தது. அம் முயற்சி முழுதளவில் பயன் பெற்றமையால் சிக்கல்கள் எல்லாம் தீர்ந்தன.

இப் புதுச்செயற்குழு ஒரு புதிய திட்டத்தைக் கொணர்ந்தது. இந்நாள், அஞ்சல் வழிப்பாடத்தைப் பல்கலைக் கழகம் தோற்று வித்து நடத்துதலுக்கு முன்னோடியாகத் த்மிழ்ச்சங்கம், தமிழ்ப் புலவர் தேர்வுக்கு அஞ்சல் வழிப்பாடத்தைத் தொடங்கியது, ஆங்காங்குள்ள புலவர் தனிப்பயிற்சிக் கல்லூரிகளையும் சங்கத் தொடு இணைத்துக் கொள்ளும் வழிமுறையையும் உண்டாக்கியது. தேர்வுக்குழுத் தலைவராக டாக்டர் சி.இலக்குவனார் அமர்ந்து சீரிய பணிசெய்தார்.

பாண்டித்துரைத்தேவர் **பைந்தமிழ்ப் பேரவை** என ஒரு பேரவை 26-8-73 சங்கச் சார்பில் தொடங்கப் பெற்றது, அதன் வழியே ஆய்வுக் கருத்தரங்குகள் நடாத்துதல் விழாவெடுத்தல். தகுதிவாய்ந்த சான்றோர்களின் பணிநலம் பாராட்டிப் பட்ட மளித்ததல் என்பவை நடைபெற்று வருகின்றன.

31-8-1969 இல் பைந்தமிழ்க் காவலர் பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டுவிழாக் கொண்டாடப் பெற்றது. அவ்விழாவின் சார்பில் சிறப்பான மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது. விழாக்குழுச் செயலாளராக ஆ. ஆண்டியப்பன் பணியாற்றினார். தலைவரும் துணைத்தலைவருமாக க. பெரியகருப்பன் அம்பலம் அவர்களும், மா. தனுக்கோடி பாண்டியன் அவர்களும் கடமை புரிந்தனர்.

பாண்டித்துரைத் தேவரின் 105 ஆம் ஆண்டு நிறைவு விழா 6-1-73, 7-1-73 ஆகிய இரண்டு நாள்களிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 6-1-73 ஆம் நாள் விழாத் தலைமையை ஆர். செல்லத்தேவர் ஏற்றார். மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் **டாக்டர் மெ. சுந்தரம்** விழாவைத் தொடங்கி வைத்தார். பண்டித **மு. கந்தசாமிப் புலவர்** சிறப்புரையாற்றினார்.

7-1-73 காலையில் கவியரங்கம் **கரந்தைப்புலவர்,** கல்லூரிப் பேராசிரியர் **ச. பாலசுந்தரம்** தலைமையில் நிகழ்ந்தது மாலையில் **டாக்டர் சி. இலக்குவனார்** தலைமையில் கருத்தரங்கு நிகழ்ந்தது.

தமிழ்ச் சங்கத்தின் 80 ஆம் ஆண்டு விழாவும் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் நினைவு நாள் விழாவும் 30-11-80 ஆம் நாள் நிகழ்ந்தன. செந்தமிழ்க் கல்லூரித் தாளாளர் மா. தனுக்கோடி பாண்டியன் வரவேற்க, கே. கந்தசாமி வாழ்த்துரைக்க, டாக்டர் மெ. சுந்தரம் தொடக்கவுரையாற்ற, **தவத்திரு குன்றக்குடி அடிகளார்** தலைமையில் கருத்துக் கோவை மிளிர்ந்தது. பேராசிரியர்கள் **ப. இராமன், வீ. முத்துசாமி, சீனி. சௌமிய நாராயணன், இரா. பிச்சைக்கண்ணன், டாக்டர் தமிழண்ணல் மலேசியத் தமிழறிஞர் மு பழ. இரத்தினஞ் செட்டியார்** ஆகியோர் பேருரை வழங்கினர். ஆட்சிக்குழு உறுப்பினர் ஆ. ஆண்டியப்பன் நன்றியுரை நவின்றார்.

மாலையில் **மா. சங்கரபாண்டியன் வரவேற்க, டி. ஏ. தெய்வசிகாமணி வாழ்த்துரை வழங்க, கவியோகி சுந்தானந்த பாரதியார் தலைமையில் பேராசிரியர் ச. தண்டபாணி தேசிகர், க. வெள்ளைவாரணர், பாலகவி வே. வயினாகரம் இராமநாதன் செட்டியார், மீ. கந்தசாமிப் புலவர்** ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சங்கச் செயலாளர் **டி.பி.எம். பெரியசுவாமி** நன்றியுரைத்தார்.

10-6-73 முதல் சங்கத் துணைத்தலைவராகத் **திரு. இராச குமார், ஆர். காசிநாத துரை** அவர்களும், செயலராகத் திரு டி.பி.எம் பெரியசுவாமி அவர்களும் உளர். ஆட்சிக்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் ஆர். செல்லத் தேவர், எம். சங்கரபாண்டியன், டி.ஏ. தெய்வசிகாமணி, கே. கந்தசாமி ஆ. ஆண்டியப்பன், பி. மலைச்சாமி, வி. தங்கபாண்டியன் ஆகியோர் உளர்.

1971 முதல் மேதகு இராமநாத சேதுபதி அவர்கள் தலைவராக இருந்தனர். அவர்களுக்குப் பின் 1981 முதல் சேதுபதி மாகராணியார் த. இந்திரா தேவி அவர்கள் தலைவராக உளர். இவர்கள் அனைவரும் சங்கத்தை எவ்வெவ்வகையான் உயர்த் தலாம் என்பதை ஆய்ந்து செயலாற்ற ஆர்வமீதூரப் பெற்றுளர்.

# 11. ஒருமாமணி

**"வே**ண்டத் தக்க தறிவோய்நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ" என்பது மணிமொழியார் திருமொழி. (திருவா. குழைத்த.6) "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்பது அப்பரடிகள் அருள்மொழி. (6:23.1) உலகியல் மேம்பாட்டுக்கு உரிய வாய்ப்புகளை இயற்கையும் சூழலும் உரிய பொழுதில் தந்து கொண்டே இருக்கின்றன.

"இன்னகேடுகள் மல்கியிருக்கின்றனவே; இன்ன இன்ன நலங்கள் உண்டாக வேண்டுமே,. என்று நல்லவர்கள் உள்ளம் நைந்து உருகும் போது, தக்க தலைவர்கள் தோன்றித் தகவுடைய பணிகள் செய்கின்றார்கள். வழிகாட்டுகிறார்கள்; தக்க அமைப்புகளும் அவர்களால் தோற்ற முற்றுப் பணி செய்கின்றன, காந்தத்தால் இழுக்கப்படும் இரும்பென உணர்வுடைய மக்களும் அவர்கள் குரலுக்குச் செவி சாய்த்துச் செல்கின்றனர்; கோழைகளும் வீரர்களாய், இளையரும் பேராற்றலராய்த் தொண்டில் ஈடுபட்டுத் துலங்குகின்றனர். மங்கியதோர் இருளில் தங்கிய மடியர்களாய்க் கிடந்தவர்களும், கிளர்ச்சி மீக்கூர்ந்து தக்க தலைமைக்குப் பின்னே மிக்க உரத்தோடு நடையிடுகின்றனர். இத்தகு நிலையில் இத்தகு சூழலில் தோன்றிய தோன்றலே **பொன் பாண்டித் துரையார்** ஆவர்.

உயர்தனிச் செம்மொழியாயும், உலக முதன் மொழியாயும் இலங்கும் தமிழ்மொழியின் சிறப்பைத் தமிழர் தாமும் அறியாராய் - ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் - வாழ்ந்து கொண்டிருந்த நிலையிலே தான் பாண்டித்துரையார் தோன்றினார். தமிழ்த் தொண்டில் தலைப்பட்டு நின்ற சேதுபதிகள் மரபிலே பிறந்தார்; பொன்னுச்சாமித் தேவர் புலமைத் திறமெல்லாம் ஓர் உருக் கொண்டு பாண்டித்துரையாய் வந்தாற் போல விளங்கினார். பிறந்த குடியும், வளர்ந்த சூழலும், வாய்த்த திறமும் அவர்க்குத் தமிழூற்றத்தைத் தந்தன. இயல்பிலேயே அவர்க்கு அமைந்திருந்த ஆளுமைவீறு, தலைமைச் சீர்மையைத் தக்காங்கு உதவியது. நாட்டுத் தொண்டில் பங்குகொண்ட

பாண்டித்துரையுள்ளம், தமிழர் செய்த தவப்பேற்றான் நாட்டு மொழியாம் தமிழ் மொழியைப் போற்றி வளர்க்கும் வழியில் திரும்பியது. அதன் விளைவு பாண்டியர் ஊன் தமிழாகியது; உடல் தமிழாகியது; உள்ளம் தமிழாகியது; உணர்வு தமிழாகியது; உயிரும் தமிழாகியது; எல்லாம் தமிழாகிய பின்னர் ஏந்தல் பாண்டித்துரையால் வாளா விருத்தல் கூடுமோ? அவர் தமிழ்த் தொண்டில் உறைப்பாக ஊன்றினார்.

தமிழ்த் தொண்டு புரிதற்கு உரியவழி பாண்டித்துரைக்கு வெளிப்படையாய்ப் புலப்பட்டது. நூலறிவிலும் நுண்ணறிவிலும் வல்ல புலவர்கள் சேதுபதி அரண்மனையிலும் விளங்கினர். தம் தவத் தந்தையார் அரண்மனையிலும் திகழ்ந்தனர். தமிழேயன்றி ஆங்கிலமும் ஆரியமும் வல்ல புலமையரும் ஆங்கு உடனிருந்தனர். ஈரிடங்களிலும் சீரிய நூலகங்கள் செந்தமிழ்க் கருவூலங்களாகத் திகழ்ந்தன.

ஒவ்வொரு நாளும் அரண்மனை தமிழ்த் திருவோலக்க மாளிகையாகத் திகழ்ந்தது. நாடறிந்த நல்ல பல புலவர்கள் நாளும் வந்திருந்து நாவீறு தோன்ற நல்லுரையாற்றினர். நற்பொருள் விரித்தனர்; நயத்தகு பாடல்கள் யாத்தனர், நறுந்தமிழ் நூல்கள் இயற்றினர்; அவர்கள் திறனைச் சேதுவேந்தரும் அமைச்சரும் மதிப்பிட்டுப் பாராட்டவும், மனங்கொளத் திறங்காட்டவும் வல்லவராய் இருந்தனர்; அரண்மனைப் புலவர்களும் அவர்களோடு போட்டியிட்டுப் புலமை நாட்டவல்லவராய் ஓங்கினர். பொழிவு நிகழ்த்துதல், பொருட்கொடை புரிதல். பரிசு தருதல், பாராட்டு எடுத்தல், நூல் வெளியிடுதல், விழா எடுத்தல் இன்னவெல்லாம் நாள்வழிக் கடன்கள் போல நடைபெற்றன. இவற்றை யெல்லாம் கண்ணாரக் கண்டும், காதாரக் கேட்டும், நெஞ்சார நினைத்தும், உரிய அளவில் பங்கு கொண்டும் உடனாய் ஒன்றாய் விளங்கும் வாய்ப்பு பாண்டித் துரைக்குக் குடிப்பொருளாய்க் குலவிற்று. அக்குலவுதல் பாண்டியர் உள்ளத்தில் ஓர் அரிய பதிவினை உண்டாக்கிற்று!

தாய்மொழித் தொண்டு, குறித்த ஒருசிலர் அளவில் அமைந்து விடத்தக்கதோ? நாட்டுமக்கள் அனைவருக்கும் கற்க விழைவார் எவருக்கும் பொதுப்பொருளாய் இருக்கத் தக்கது அன்றோ! அத்தகைய பொதுப்பொருள் அரண்மனையையும் அரசவையையும் கட்டித்தழுவிக் கொண்டே கால காலங் களுக்கும் இருக்குமானால் காணும் பயன் என்ன? தேடிவந்த

புலவர்களுக்கும், நாடிவந்த ஆர்வலருக்கும் நல மூட்டுவதாக மட்டும் தாய்த் தமிழ்ப் பணி அமைந்து விடுமானால் அது தக்க பயன்தருமோ? ஆதலால், புலவர் புரவலர் பொருளாக இருக்கும் தமிழைப், பொதுமக்கள் பொருளாய், புலமையை விரும்புவார் பொருளாய் ஆக்குதல் கட்டாயம் வேண்டும். அதற்கு வழியென்ன? புரவலரைத் தேடும் புலவரும், புலவரைத் தேடும் புரவலருமாக இருக்கும் நிலைமையை மாற்றிப், பொது மக்களைத் தேடும் புலவரும் புரவலருமாம் ஒருநிலையை உருவாக்க வேண்டும். அவ்வுருவாக்க இடமும் நாட்டின் ஓரஞ்சாரமான ஓரிடமாக இல்லாமல், இயல்பான வளர்ச்சிக்கு ஏற்ற இடமளிக்கும் இடமாகவும் இருத்தல் வேண்டும். இவற்றை எண்ணும்போது பண்டே பாண்டியர் இருந்து தமிழ் வளர்த்தற்குச் சங்கங் கண்டதும், பழம் பெருமையும் புதுப் பொலிவும் மல்கியதும் ஆகிய மாநகர் மதுரையே தக்க இடமெனப் பாண்டியர்க்குத் தோன்றியிருக்க வேண்டும்! அதற்கேற்ற தூண்டலாக அமைந்ததே அரசியல் மாநாட்டு வரவேற்பாளராகப் பாண்டித்துரையார் அமைந்ததும், அம்மாநாடு மதுரையில் நிகழ்ந்ததும், அம்மாநாட்டுக்கு வந்த பாண்டித்துரை திருக்குறளும் கம்பராமாயணமும் பார்க்கத் தேடிக்கிடையாததும் ஆகியவையாம். மின்னி இடித்து மழை பொழிவது போலவும், மண்ணிற் கிடந்த வித்து ஈரம்பட்டு முளைத்துச் செழித்து, விளைவு தருவது போலவும் இத்தூண்டல் பாண்டித்துரையார் வழியே துலங்கலாயிற்று. அதனால், பதுங்கிக் கிடந்த தாமரைக் கிழங்கு பருவமழை பெய்ததும் எழும்புவது போலப் பண்டிருந்த தமிழ்ச் சங்கம், புதுவதாம் நான்காம் தமிழ்ச் சங்கமாய்க் கிளர்ந்தது.

பாண்டித் துரையார்க்குக் கிளர்ந்த உணர்வு மற்றை யோர்க்குக் கிளர்ந்தெழ வில்லையே ஏன்? நிலத்துள் எல்லாம் நீரோட்டம் இருப்பினும் சிற்சில இடத்து மட்டும் மடையாய்ப் பீறிட்டுப் பீச்சக் காண்கிறோம்! அவ்வாறே, நல்லுணர்வு பலரிடத்தும் உண்டாகியிருப்பினும். உந்தும் உணர்வு உடையவரே உடனடிச் செயலில் ஊன்றமுடியும். அன்றியும் எனை மேம்பாடு உடையராயினும், வினைமேம்பாடு உடையவர்க்கு அன்றே வினைவாய்ப்புக் கைகூடும்? வினை வாய்ப்பு என்பதும் எண்மையானதோ? இடம் பொருள் ஏவல் என்னும் வழக்கு மொழியும், "பொருள் கருவி காலம் வினை இடன் என்று எண்ணிய வள்ளுவர் வாய்மொழியும் வினைவாய்ப்பை விளக்குவனவாம்!

***புத்தர் பெருமானைப்*** *போல எத்துணைப்பேர்களால் அரசுத் துறப்புச் செய்ய இயன்றது?* ***காந்தியடிகளைப்*** *போல எத்துணைப்பேர்களால் அறப்போர் நடத்த இயன்றது?* ***வ.உ.சி.*** *யைப் போல எத்துணைப் பேர்களால் கப்பல் கழகம் தொடங்க இயன்றது? அவ்வவற்றை ஆக்கமுறுத்தப் பிறந்தவர் அவராகலின் அவர்க்கே கூடிற்று என்க! இவ்வாறே, பாண்டித்துரையால் நிலைப்படுத்தத் தக்கதாக அமைந்தது புதுத்தமிழ்ச்சங்கம். அதனால் அவர்க்கு எளிமையாய் இயல்வதாயிற்று.*

*பழஞ்சங்கத்தின் பின், தமிழ்வளர்க்கப் பாண்டித்துரை புதுச்சங்கம் காணுமுன் தமிழ்வளர்க்கச் சங்கம் தோன்றிற்று இல்லையோ! இடையேயும் சில சங்கங்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று சமணசமயம் சார்ந்த சங்கம். சிந்தாமணி அதன் கண்ணேயே அரங்கேற்றப் பெற்றது என்பர். வேறு சில சங்கங்களும் சமயச் சங்கங்களாய் அறநெறிச் சங்கங்களாய், ஆர்வலர் சங்கங்களாய் எழுந்தன; இருந்தன; ஒரு சில கடன்கள் புரிந்தன; அமைந்தன. தமிழின் பெயரால் கோவையில் ஒரு சங்கம் கிளர்ந்தது, கோவைத் தமிழ்ச்சங்கம் என்பது பெயர்; அறிஞர் திருச்சிற்றம்பலனாரால் தோற்றுவிக்கப் பெற்றது. அதுவும் கோவை அளவில், இன்னும் சொன்னால், கோவையின் ஒருபகுதி அளவில் சிறிது காலம் இயங்கி அமைந்தது. பின்னர்ப் பாண்டித்துரையார் சங்கம் தோன்றிப் பணியாற்றத் தொடங்கிய பதினைந்தாண்டுகளுக்குப் பின் (1915) அறிஞர் இராமச் சந்திரனார், சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியனார் ஆகியோரால் கோவைத் தமிழ்ச் சங்கம் மறுமலர்ச்சி பெற்றுக் கடனாற்றியது. 1911 இல் நெல்லைத் தென்னிந்தியத் தமிழ்ச்சங்கமும் தோன்றின. மற்றை மற்றைச் சிற்றூர் பேரூர்களிலும், தமிழர் வாழும் இந்தியப் பெருநகரங்களிலும், பிறநாடுகளிலும் தமிழ்ச் சங்கங்கள் தோன்றின; ஆக்கப்பணி செய்து வருகின்றன.*

*பாண்டித்துரை சங்கம் எழும்பு முன் எழுந்த மற்றொரு தமிழமைப்பு, தென்னாட்டுத் தமிழ்ச்சங்கம் என்பது. அது பாண்டித்துரையார் சங்கத்திற்கு முன்னோடியாய் அமைந்து, தமிழ் அமைப்புக்கு வழிகாட்டி, அவ்வளவில் அமைந்தது எனக் கொள்ளலாம். அதன் செயற்பாடின்மையே பாண்டித் துரையை செயலூற்றத்தில் இறங்க ஏவிற்று எனவும் கொள்ளலாம். நாட்டு விடுதலை வேள்வியில் பங்கு கொண்ட தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆங்கிலம் தேர்ந்த பிற அறிஞர்களும் சென்னை, தொண்டை மண்டலம் பள்ளியில் கூடித் தென்னாட்டுச்*

*சங்கத்தைத் தோற்றுவித்தனர். அவர்கள் அதனைத் தோற்றுவித்த காலம் 1890 ஏப்பிரல் திங்கள் ஆகும். அக் கூட்டத்திலேயே அவ்வமைப்பின் ஆட்சிக் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

*தலைவர். திரு. சோமசுந்தரஞ் செட்டியார். செயலர் திரு.டி. பாலசுந்தர முதலியார். உறுப்பினர்கள்: இராவ்பகதூர் பூண்டி அரங்கநாத முதலியார், திரு. பி. வி, விசயரங்க முதலியார், திரு. சேசகிரி சாத்திரியார், திரு. சி.வை. தாமோதரம்பிள்ளை, இராவ்பகதூர் இராமசாமி முதலியார், திரு.எம். வீரராகவாச் சாரியார் என்போர்.*

*இச்சங்கத்தின் நோக்கங்கள் இவை யென்றும் அவ்வாட்சிக் குழு சென்னை 'காசுமா பொலிடன் கிளப்பில்' 1-5-1890 இல் கூடித் தீர்மானித்தது.*

*1. தமிழ்ப் புத்தக சாலையொன்று ஏற்படுத்தி அதற்கு இதுவரையில் தமிழில் அச்சாகியிருக்கும் கிரந்தங்களை யெல்லாம் சேகரித்தல்.*

*2. இதுவரையில் அச்சிடப்படாத கிரந்தங்களின் ஏட்டுப் பிரதிகளையும் அச்சிடப்பட்டுள்ள நல்ல கிரந்தங்களையும் இனிமேல் எப்போதாவது இன்னும் நன்றாய்ச் சீர்திருந்துவதற்கு உபயோகமாகும்படி அவைகளின் ஏட்டுப்பிரதிகளையும் சேகரித்து வைத்தல்.*

*3. தமிழில் சுயமாகவேனும் மொழிபெயர்ப்பிலேனும் எளிய செந்தமிழ் நன்னடையில் ஜனங்களுக்கு அனுபவத்தில் உபயோகப் படத்தக்கதாகவாவது, சாஸ்திர சம்பந்தமான தாகவாவது உள்ள நூல்களை வசனரூபமாகச் சித்தஞ்செய்து பிரசுரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யல்.*

*4. தமிழில் பிரபலமாயுள்ள எல்லாக் கிரந்தங்களினுடைய பேர்களும் கூடுமான வரையில் அவற்றிலடங்கிய விஷயங்களின் விவரமும் அவைகள் இன்னார் வசமிருக்கிற தென்கிற விவரமும் அடங்கிய சரியான ஜாபிதா ஒன்று தயார் செய்யல்.*

*5. தத்துவ ஞான சம்பந்தமாகவாவது, வித்தியா சம்பந்தமாகவாவது, அருமையாயுள்ள விஷயங்களைப் பற்றிச் சிறந்த பிரபந்தங்கள் எழுதி வாசிக்க அல்லது உபந்நியாசங்கள் செய்ய ஏற்பாடு செய்யல்.*

*6. இதுவரையிதும் அச்சிடப்படாது இப்போது கையேட்டுப் பிரதிகளாயிருக்கும் நூல்களில் பிரசுரிக்கத் தகுந்ததைப் பார்த்து*

*எடுத்து அவற்றைப் பிரசுரிக்க உதவி செயல். (நூலகம் அக் 1971. பக்கம் 35)*

*நூலகம் வைத்தல், ஏடுகள் தொகுத்தல், பல்துறை தழுவிய உரைநடை நூல்கள் இயற்றல், நூற்பட்டி தொகுத்தல், பயன்மிக்க அரும் பொருள்களைப் பற்றி ஆய்வு எழுதிப் பொழிவு செய்தல், அச்சிடத் தக்க நூல்களை அச்சிடல் என்னும் அறுகால் தூணங்களை மட்டும் நிறுத்தி அவற்றின் மேல் முகடு வேயப்படாமலே நின்று விட்டது. தென்னாட்டுத் தமிழ்ச் சங்கம். பின்னர் 5-3-1899 இல் திராவிட பாஷா சங்கம் என்னும் ஓர் அமைப்பும் தோன்றியது: ஆட்சிக் குழுவும் அமைக்கப் பெற்றது; நோக்கங்களும் வகுக்கப் பெற்றன; ஆனால் நோக்கை நோக்கி அடிதூக்கி வைக்காமலேயே அமைந்து விட்டது, இவை யெல்வாம் செயலூற்றமிக்க செந்தமிழ்ப் பாண்டித்துரை யாரைத் தட்டியெழுப்பின. விரைந்தெழும்பும் பந்தை வீச்சு மட்டையால் அறையவும் இமைமூடித்திறக்கு முன் விசைத்துச் செல்வது போல் பாண்டித்துரை செயலாற்றினார்.*

*பாண்டித்துரையார் சங்கத்தின் சீர்மைகளில் தலையாய மூன்றைக் குறிப்பிடலாம். ஒன்று: "மனிதர்காள் இங்கேவம்; கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ" என்று நாவுக்கரசர் பெருமான் நாட்டவரை அழைத்தது போல், தமிழ்பயிலுதற்கு விழைந்த மாணவர்களை விரும்பிச் சேர்த்ததும் அவர்களுக்கு ஊணும் உடையும் உறையுளும் உறுபொருளும் வழங்கியதும் ஆகும். உயிருக்கு ஆக்கமாம் உயர்கல்வி வழங்கும் திட்டத்திலேயே, உடலுக்கு ஆக்கமாம் உதவிகளையும் ஒருங்கே வழங்கியமை தனிச் சிறப்பே யன்றோ!*

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்

*என்று முரசு கொட்டிய 'பாரதியார்' அதே பாடலிலேயே,*

"பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

*என்றார். இது நிகழ்ந்த இடம் மதுரைத் தமிழ்ச்சங்கம்; நிகழ்த்திய பெருந்தகை பாண்டித்துரை. இச் செயன்மையே பாரதியார் வாக்கில் பளிச்சிடுகின்றது எனலாம். ஏனெனில் பாரதியார் உரையும் பாட்டும் வெளிப்பட்டு விளங்கிய காலம் 1904 முதலேயாம், அவர் தம் 'தனிமைஇரக்கம்' என்னும் பாடல் மதுரையில்இருந்து வெளிவந்த விவேகபாநு என்னும் மாத*

*இதழில் 1904 சூலையில் வெளிப்பட்டது. அதுவே பாரதியார் படைப்புகளில் தமிழுலகம் கண்ட முதற் பாடலாகும். ஆனால் சங்கம் 1901 - இலேயே தோன்றித் தமிழ்க் கல்லூரி நடாத்தத் தொடங்கிவிட்டதே!*

*இவ்விடத்தில் குறிப்பிடம் தக்க மற்றொரு செய்தியும் உண்டு. மடங்களும், சத்திரங்களும், செல்வர்களும் சமய அடிப்படையில்ஏழை எளியவர்க்கு உணவு வழங்கி வந்த வழக்காறு பண்டு தொட்டே உண்டு. ஆனால், அதனைக் கல்விக்கு மடைமாற்றம் செய்த பெருமை வள்ளலார் இராமலிங்க அடிகளுக்கு உண்டு என்று துணிய வாய்ப்பு இருக்கிறது.*

*"பிரபவ வைகாசி மாதம் 11 ஆம் நாள் குருவாரம் உதயகாலம் சிங்கலக்கினத்தில் (23-5-1867) சமரச வேத தருமச் சாலையின் செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலையெடுப்புகளுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன் மேய்ந்த மண் கட்டடச் சாலையில் ஒருசார் ஆகார தரும விருத்தியும் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கிறது" என்றும்,*

*"ஆபால விருத்தர்கள் வரையில் யாவர்க்கும் பயில்விக்கும் சன்மார்க்க போதினி என்கிற சாஸ்திர பாடசாலை ஒன்று நியமிக்கப்படும்" என்றும்,*

*"தமிழ், ஆரியம், இங்கிலீஷ், சன்மார்க்க போதினி... சாலையில்உபய கலாநிதிப் பெரும்புலவர் தொ. வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்களால்"... என்றும்,*

*"இதில் வாசிக்கிறவர்களுக்குச் சிலகாலம் வாசித்து ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி நேரிட்டால், அந்தப் பயிற்சிக்கும் அவரவர் குடும்பத்திற்கும் தக்கபடி மாதந்தோறும் பொருளுதவி செய்யப்படும். காலை மாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும்" என்றும் - சாலை விளம்பரங்களாக வரும் பகுதிகளால் சன்மார்க்க சமரச வேத தருமச் சாலையில் உணவு தந்து கல்வி புகட்ட ஏற்பாடு செய்யப் பெற்றது என்றும், மும்மொழிகள் கற்பிக்கவும் திட்டமிடப் பட்டிருந்தது என்றும், குழந்தையர் கற்பிக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது என்றும், குழந்தையர் கல்வி (ஆபாலர்) முதியர் கல்வி (விருத்தர்) ஆகிய இருவகைக் கல்வி முறைகளும் இயல, வகை காணப் பெற்றது என்றும், கற்றுத் தேர்ச்சி காட்டுவார்தம் வீட்டு நிலைமைக்கு ஏற்பப் பொருளுதவி செய்யும் கருத்தும் இருந்தது என்றும்*

அறிகிறோம். (திருவருட்பா. திருமுகப்பகுதி. 92-107); திரு. ஆ. பா பதிப்பு) ஆனால் 'இந்தச்சாலையால் எனக்கு மிகவும் சலிப்பு உண்டாகிறது' என்று வருந்தும் நிலை பிரசோற்பத்தி மாசி மாதம் 28ஆம் (12-4-1871) நாளிலேயே அடிகளாரர்க்கு ஏற்பட்டு விட்டது என்பதையும் அறிகிறோம். இடர்ப்பாடு மிக்க இத்திட்டத்தை நிறைவேற்றிக் காட்டுதற்குப் பாண்டித் துரையால் இயன்றமை அவர்தம் பொருள் வாய்ப்பும், ஆளுமைத் திறமும், சேதுபதிகளின் அரவணைப்பும், ஏனைக் குறுநில மன்னர்கள், பெருநிலக்கிழார்கள் ஆகியோர் நற்றுணையும் இருந்தமை யேயாம்.

இரண்டாவதாகக் குறிக்கத்தக்கது, தமிழ்ச்சங்க ஆண்டு நிறைவு விழாக்களின் சிறப்பாகும். தமிழ் நாட்டில் விளங்கிய பெரும் புலவர்கள் பலரும் கலந்து கொண்டு மகிழும் அளவில் சங்கவிழாக்கள் நடைபெற்றன. அவர்களுக்கு உறையுளும் சிறந்த விருந்தும் வழங்கப் பெற்றன; வழிச்செலவும் தரப் பெற்றது; பரிசுகளும் பாராட்டுகளும் அவரவர்க்குத் தக்க வகையில் வழங்கப் பெற்றன. "ஈதல் எளிது; வரிசையறிதலோ அரிது" என்பதும் (புறம்.121) "பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே" என்பதும் (புறம். 121) சங்கக் கபிலர் வாக்கு. ஆனால் இவையெல்லாம் பாண்டித்துரைப் பெருமானார்க்கு எளிதாகக் கைவந்திருந்தன. சங்கம் தோற்றுவிப்பதற்கு முன்னரே கைவந்த திறமாகவும் விளங்கின.

பாண்டித்துரைத் தேவர் இசைத்தமிழில் பெரிதும் ஈடுபாடு உடையவர். அவர்தம் இருபத்திரண்டாம் அகவையிலேயே - மதுரைச் சங்கம் தோற்றுவிப்பதற்குப் பன்னீராண்டுகளுக்கு முன்னரேயே (1888) இசைப்புலவர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஓரிசை விழா நிகழ்த்தினார். இதுவே தமிழகத்தில் முதல் முதல் கூட்டப்பெற்ற ஓர் இசையவையாம்! அவ்விசைவிழாவை ஏழு நாள்கள் நடத்தினாராம் பாண்டித்துரையார். ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இசைப்புலவரின் நிகழ்ச்சி நடாத்த ஏற்பாடு செய்யப் பெற்றிருந்ததாம். முதல் நாள், குன்னக்குடி கிருஷ்ணையரும், இரண்டாம் நாள், பட்டினம் சுப்பிரமணிய ஐயரும், மூன்றாம் நாள், நெய்க்காரப்பட்டி பல்லவி சேஷய்யரும் நான்காம்நாள், மகாவைத்தியநாத சிவனும் இசை நிகழ்ச்சி நடத்தினர். இந்நால்வருக்கும் கைகளில் வீர சங்கிலி அணிவித்தார். அச்சங்கிலி பொன்னால் செய்யப்பட்டது. அம்மட்டோ அச்சங்கிலியின் முகப்பில் 'கல்' பதிக்கப் பெற்றிருந்தது. அக்கல் 'வாளா' பதிக்கப்

பெற்றதன்று. அவரவர் கலைத்திறம் கணித்த மேதமையால் வரிசை அறிந்த சீர்மையால் பதிக்கப்பெற்றதாம். திரு.வி.சு. கோமதி சங்கரஐயர் என்பார் எழுதிய, இசைஉலகில் மகாவைத்திய நாத சிவன் என்னும் நூல் கூறுகின்றது (118-19)

"குன்னக்குடிக் கிருஷ்ணையருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே வைரக்கல் ஒளிவீசப் பதிக்கப் பெற்றிருந்தது. பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே இருட்டில் தூபச்சுடர் தோன்றுவது போன்றதொரு மாணிக்கக்கல் பதிக்கப்பெற்றிருந்தது. பல்லவி சேஷய்யருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே நல்ல ஒளிவீசும் நீலக்கல் பதிக்கப் பெற்றிருந்தது. மகாவைத்திய நாதசிவனுக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே தகதகாயமான ஒளிதரும் மரகதக்கல் பதிக்கப் பெற்றிருந்தது. அவ்வாறான வீரசங்கிலியின் முகப்பிலே வெவ்வேறான இரத்தினக்கல் பதித்திருந்ததை நோக்கும் போது அவ்வித்துவான்களுடைய இசைத்திறத்தின் தராதரத்தினைப் பாண்டித்துரைத்தேவர் நன்கறிந்து பாராட்டியது போல அவ்வீரசங்கிலிகள் அளிக்கப் பெற்றனவோ என்று எண்ணும் படி இருந்தது"

"ஐந்தாம் நாள் இசைவிழாவில் மாயூரம் வீணை வைத்திய நாதையருடைய வீணைக் கச்சேரியும், ஆறாம் நாள் இசை விழாவிலே சரபசாஸ்திரிகளுடைய புல்லாங்குழல் கச்சேரியும், ஏழாம்நாள் இசைவிழாவிலே நாதசுரக் கச்சேரியும் நடந்து சிறப்புற்றது. அவர்களும் தக்க பரிசில்களும் சன்மானங்களும் அடைந்தார்கள். இவ்விசை விழாப் போன்று அதுவரை எங்கும் எவராலும் நடத்தப் பெற்றதில்லை என்ற சிறப்புத் தோன்றப் பாண்டித்துரைத்தேவர்அவர்கள் நடத்திப் பெருமையடைந்தார்கள்"

சீரிளமைப் பருவத்திலேயே இவ்வாறு விழா எடுத்து வரிசையறிந்து சிறப்புச் செய்யும் நல்லாண்மை வாய்க்கப் பெற்ற பாண்டிவள்ளல், தம் முப்பத்து மூன்றாம் அகவைக்கு மேலே, பேரார்வத்தாலும் - பெருந்திறத்தாலும் நடாத்திய விழாக்களை எவ்வளவு சீரும்சிறப்பும் மல்க நடாத்தியிருப்பார்; நடாத்த இயலும் - என்பதை மேலோட்டமாக நினைவாரும் நன்கு அறிவர்.

மூன்றாவது, பாண்டித்துரையார்க்குப் பிறவியொடும் அமைந்திருந்த பெறலரும் பெற்றிமை, தக்கோர்க்குப் பணிதல், இனியவை கூறல், தாமே முற்பட்டு நின்று உதவுதல் இன்னவாகிய பிறர்க்கு அரிய நல்லியல்புகள் மல்கியிருந்தமை.

*சாது சேசய்யர் நினைவாக ஒரு நூல் நிலையம் அமைக்க, எ.சி. நாராயணசாமி ஐயரென்பார் தலைப்பட்டிருந்தார். பாண்டித்துரையை அணுகினார். பாண்டித்துரையார் ரூ.300 தருதற்கு வாக்களித்திருந்தார். அதனை நினைவுறுத்தி 13-12-1902 இல் ஒரு கடிதம் விடுத்தார் நாராயணசாமி. அது குறித்து உ.வே. சாமிநாதையர்க்கு 21-12-1902 இல் பாண்டித்துரையார் மறுமொழி எழுதுகின்றார். முற்றிய கதிர் தலைதாழும் என்பதை நினைவுறுத்தும் அவ்வஞ்சல் வருமாறு.*

## திருச்சிற்றம்பலம்

*மதுரை*

*21-12-02*

*கல்வியறிபொழுக்கங்களிற் சிறந்த ஐய,*

*அநேக நமஸ்காரம். க்ஷேமம். அதையே கேட்க ஆவலதிகம். தாங்கள் என்மாட் டன்புகூர்ந்து விடுத்த கடிதங்கள் வந்தன.*

*என்மீதும் 'செந்தமிழ்' மீதும் எக்காலத்தும் இடையறா அன்பு பூண்டொழுகும் தங்கட்கு யான் என்றும் பலவகையானுங் கடமைப் பட்டுள்ளேன்.*

*மகா-ள-ள-ஸ்ரீ எ.ஸி. நாராயணசாமி ஐயரவர்களிட மிருந்து காலஞ்சென்ற ஸாது சேஷ ஐயரவர்களின் ஞாபகார்த்த மாய் வைக்க உத்தேசித்திருக்கும் ஓரியண்டல் லைபரேரி விஷயமாக யான் முன்னரே வாக்களித்திருக்கும் ரூபாவை அனுப்புமாறு கேட்டு நாளது மீ 13உ ஓர் கடிதம், வந்திருக்கின்றது. எனக்கு நேர்ந்துள்ள பல வேலைகளால் இதுவரை அத்தொகை அனுப்பாதிருந்த எனது பெரும் பிழையைப் பொறுத்தருளும்படி எனக்காகத் தாங்கள் அவர்களைக் கேட்டுக் கொள்வதுடன் இன்னும் நாலைந்து தினங்களுக்குள் ரூ.300 (முந்நூறுரூபா) அவர்கட்கு அனுப்பி விடுவதாக அறிவிக்கவும் கேட்டுக் கொள்ளுகின்றேன். இது நிற்க.*

*நமது சங்கத்திலிருந்து பதிப்பிக்க உத்தேசித்திருக்கும் புத்தகங்களில் தாங்கள் பிழைதிருத்தி அச்சிடு நிலைமையில் அனுப்புவதாக வாக்களித்த பழைய திருவிளையாடலையே முதலில் அச்சிட அடியிற் காட்டிய ஞாயங்களாற்றங்கட்கே ஆவசியகம் எனத் தோன்றுமாதலால் கூடிய விரைவில் அதனை அனுப்பக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.*

*ஞாயங்களாவன - இம்மதுரைக்கும் தமிழுக்கும் சங்கத்திற்கும் உரிய முழுமுதற் கடவுளாகிய ஆலவாயடிகள் திருவிளையாடலாதலாலும், முதலில் அச்சிடும் புத்தகம் நமது சங்கத்திற்குத் தலைமை வித்வானாம் தங்களாற் பார்வையிடப்பட்டதாக வெளியாவது இன்றியமையாச் சிறப்புடைய தாதலாலுமேயாம்.*

*இது விஷயத்தில் யான்தங்கட்குக் கொடுக்கும் சிரமத்திற்கு என்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளும்,*

*தங்கள் நண்பன்,*

**பாண்டித்துரை**

*21-12-02*

*மதுரை.*

*நன்கொடையாகத் தர இசைந்த பணத்தை வேலை மிகுதியால் உடனே அனுப்ப இயலாமை குறித்து வருந்துவதும் அதனைத் தம்பெரும் பிழையாக நினைவதும், பொறுத்தருளும் படி வேண்டுவதும் செல்வர்களிடம் எளிமையாய்க் காணக் கிடக்கும் செய்திகளோ? தாம் புரவலராக இருந்தும் பணிந்து இரப்பார் போல நூல் வெளியிடுதற்குரிய தம்விருப்பை எழுதி வேண்டுதலை எவரே செய்வார்? பாண்டித்துரையின் பிறப்பொடும் வந்த பெருங்குணங்கள் இவை என்பதையன்றிக் கூற என்ன இருக்கிறது? பிறர்க்கு அரிதாம் செயல்கள் இவர்க்கு எளிதாய் இயன்றமை இத்தன்மைகளாலேயேயாம்.*

*பெருவள்ளலாகத் திகழ்ந்த பாண்டித்துரையார் தமிழ்க் காப்பில் அரிமாவாகத் திகழ்ந்தமைக்கு ஒரோ ஒரு சான்று போதும்.*

*கிறித்தவப் பாதிரியார் ஒருவர் திருக்குறளைப் பயின்றார். அவர் ஆங்கிலவர்; அவர் தமிழைப் பயின்று அதன் செய்யுள் இலக்கணமும் கற்ற அளவில், தாமே ஒருமுடிவுக்கு வந்தார். திருக்குறளில் பல இடங்களில் சிறப்பாக எதுகையும் மோனையும் அமையவில்லை என்பது அவர் முடிவாயிற்று. அவர் சொல்லளவில் நின்றால் போகிறார் எனவிட்டுவிடலாம். செயல் வீரராக இறங்கி விட்டார்.*

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

*என்னும் முதற் குறளிலேயே எதுகை சிறப்பாக அமைய வில்லை என்று கருதினார்.*

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
சிகர முதற்றே உலகு”

எனமாற்றினார். இவ்வாறே பல குறள்களைத் திருத்தினார். குறளைத் திருத்திய இத்தேர்ச்சியாளர், தம் திருத்தத்துடன் திருக்குறளை அச்சிட்டார். தமிழ்க் காவலர் பாண்டித்துரையைச் சந்தித்துத் தம் ‘செயற் கருஞ் செயலை’ விளக்கி நூலைக் காட்டினார். ஆங்கிலத் துரையின்செயல், தமிழ்த் துரையின் உள்ளத்தை வெதுப்பிற்று. என் செய்வது? நடந்து விட்டது. வினையை எப்படித் தடுப்பது?

பாண்டித்துரையார், பாதிரியார் அச்சிட்டுக் கைவயம் உள்ள படிகளை எல்லாம் மொத்தமாக வாங்கிக் கொள்வதாகவும், இனி எவருக்கும் அதனை விற்கக் கூடாது என்றும் கூறினார். உரிய தொகையைத் தந்து நூல்களையெல்லாம் வாங்கினார். அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்தினார்!

**ஒரு மாணவன் செய்யும் தவற்றிலும் ஓர் ஆசிரியர் செய்யும் தவறு பலரைக் கெடுக்கும். ஆனால், ஒரு நூலாசிரியன் செய்யும் தவறோ காலகாலங்களுக்கும் கெடுக்கும் என்னும் தெளிந்த பட்டறிவால் பாண்டித்துரை கடனாற்றினார் என்பது விளங்கும்.** செல்வம் இருப்பினும் இவ்வாறு செய்தற்கு எத்துணைப் பேர்களால் இயலும்?

அறிவுரை கூறித்திருத்தி மொழிக் காவல் புரிய முடியா நிலைமை உள்ள போதில், இம்முடிவையன்றி எம்முறையே சாலும்? பாண்டித் துரையார் வெறியாலோ இதனைச் செய்தார்? பெரும்பொருள் இழப்பையும் பொருட்டாக எண்ணாமல், மொழிக் கேட்டைத் தவிர்த்தலே கடப்பாடு எனக்கொண்ட ஏந்தலாகலின் இஃதெளிதாயிற்றாம்.[1]

பாண்டித்துரையார் வாழ்ந்த காலம் விடுதலைப்போர் தொடங்கிய காலம். அக்காலத்தில் நாட்டுப்பற்றில் ஈடுபாடு கொண்ட சிலர் மொழித் தொண்டிலும் ஆர்வம் காட்டினர். அவர்கள் மொழி வளர்ச்சியும் மொழிப்பற்றும் நாட்டு விடுதலைக்கு நல்ல துணையாக அமையும் எனக்கண்டனர். அவ்வாறு மொழியார்வத்துடன் நாட்டுப்பணியும் செய்தவர்

1. வித்துவான் தியாகராசச் செட்டியார் வரலாற்றில் காணப் பெறும் பாதிரியார் இவரேயாகலாம்.

களுள். குறிப்பிடத்தக்கவர்கள் **வ.உ. சிதம்பரனார். வ.வே.சு. ஐயர், திரு.வி.க.** முதலியோர். பாரதியார் மொழித்தொண்டின் வழியே நாட்டுத் தொண்டில் நிலைத்தவர் ஆவர். இவர்கள் வழி ஈதாக, நாட்டுப்பற்றையும் மொழிப் பற்றையும் சீரிய நிலையில் இணைத்துத் தனித்தனியே சிதறிப் போகாமல் ஓர் அமைப்பாக ஆக்கி வளர்த்துப் போற்றிக் காத்த புகழாளர் பாண்டித்துரையே ஆவர். ஆகலின், அவர்தம் விரிந்த எதிர்கால வளமிக்க பார்வை எவரினும் உயர்ந்து செல்வதாயிற்று. இன்ன பிறவற்றை யெல்லாம் எண்ணுங்கால் 'பொன்' தந்த பாண்டி மணிகளுள் மணியாய் **ஒருமா மணியாய் ஓங்கிய திருமாமணி** என்பது தகும்.

# 12 நான்காம் தமிழ்ச்சங்கம்

பாண்டித்துரைப் பெருமகனாரால் மதுரையில் தோற்று விக்கப்பெற்று ஆயிரம் பிறைகண்டு அதன் மேலும் இனிதின் இயங்கி இணையற்ற பணியாற்றிவரும் இத்தமிழ்ச்சங்கம், நான்காம் சங்கம் என்பதில் சிலர்க்கு இதுகால் ஐயம் உண்டாகி விட்டது. இரங்கத்தக்க செய்தி இது!ஆனால் இந்நாட்டில் இதற்கு ஐயங்களைக் கிளத்துதலும் அதனை வளர்த்தலும் பொழுது போக்குச் செய்திகள்!

தமிழர்களே வந்தேறிகள் என்றும், அவர்கள் பேசும் தமிழ்மொழி தானும் திராவிடம் என்பதன் திரிபே என்றும், தமிழ்ப்பாண்டியர் பாண்டவர் வழிவந்தவர் என்றும், நாடாமல் நாணாமல் கூறிச்செருக்குவார் வழிவழி வந்துள்ள நாட்டில் நான்காம் சங்கம் என்று ஒன்று தோன்றியதும் இல்லை என்பாரும் உளராகலாம்! முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதனார் கூட, மதுரைச்சங்கம் நான்காம் சங்கம் அன்று என்றும் 'திருச்சிச் சங்கம்' தஞ்சைச் சங்கம் போல ஒரு சங்கமே மதுரைச் சங்கம் என்றும் விரித்தும் நகைத்தும் விளம்பி வியக்கிறார் என்றால், தமிழகத்துத் தீயூழ் அவரையும் விட்டபாடில்லை என்பது வெளிப்படை. "நான்காம் சங்கம் பாண்டித்துரையார் தோற்றுவித்த மதுரைச் சங்கம் என எண்பதாண்டுகளாக விளங்கிய புலவர்கள், அறிஞர்கள். ஆட்சியாளர்கள் அனைவரும் ஒருங்கே தீர்மானித்த ஒன்றை ஐயுறவாக்கி ஆர்ப்பது அரசியலும் குறுகிய நோக்கும் ஒருங்கே கிளர்த்திய கிளர்ச்சிப் பாட்டின் விளைவேயாம்!

இராசராசன் ஒருவன் இருந்தான்; அவன் பின்னே இன்னோர் இராசராசன் ஆட்சிக்கு வந்த காலை அவனை இரண்டாம் இராசராசன் என்பது வழக்காறு. அதுபோல் சங்கம் தோன்றுங்காலையில் 'தமிழ்ச்சங்கம்' என்னும் பெயரொடு தோன்றுதலும் பின்னுள்ளோர் அதற்கு எண் தந்து முதற்சங்கம், இரண்டாம் சங்கம், மூன்றாம் சங்கம் எனப் பெயரிடுதலும் உலக வழக்கே. அவ் வழக்கின்படி மூன்று சங்கங்களும் வளர்த்த

தமிழை, அதே நோக்கிலும் அதே போக்கிலும் வளர்க்க வந்த தமிழ்ச்சங்கத்தை **நான்காம் தமிழ்ச்சங்கம்** என்று நாவாரப் பேசினர்; பாடினர்; எழுதினர்.

உக்கிர பாண்டியனார் கடைச்சங்கத்தின் இறுதியில் இருந்து சங்கம் புரந்த காவலர். அவர் பெயருடைய உக்கிர பாண்டியனார் என்னும் பாண்டித்துரையார் மறைந்த சங்கத்தைத் தோற்றுவிப்பார் போலத் தோற்றுவித்தார் என்று சங்கம் தோன்றிய நாளிலேயே புலவர்கள் புகழ்ந்து பாடினர்! போற்றி இசைத்தனர்.

"முன்னைய சங்கமிருந்த மதுரைமாநகரத்தின்கண் நாலாவதாக ஒரு சங்கம் நிறுவப்பட்டது கல்விமான்கள் பலர்க்கும் பெருமகிழ் தந்தது. இச்சங்கம் 'மதுரைத் தமிழ்ச் சங்கம்" எனப்படும்.

"இச்சங்கம் இரீஇயினார் பண்டைக்காலத் தண்டமிழ் வளர்த்த பாண்டியர் அனைவரும் ஓருருக் கொண்டு உதித்தாங்கு முகவையம் பதியில் அவதரித்த அரசவள்ளலும், பாலவனத்தத் தராதல மன்னருமாகிய ஸ்ரீமாந் பாண்டித்துரையவர்கள்.

"இச்சங்கம் இருந்து தமிழாராய்வார் சங்கம் இரீஇய பாண்டித்துரைத் தேவரவர்களும் தமிழாசிரியர் இராகவ ஐயங்காரும் வேறு பல நல்லிசைப் புலவர்களுமாம்.

"இச்சங்கப்புலவர் இக்காலத்திற்கேற்ப நான்கு வகைப் படுவர்: தமிழ் மாத்திரையே கற்று வல்லாரும். தமிழும் ஆங்கிலமும் ஒருசேரக் கற்று வல்லாரும், தமிழும் சமஸ்கிருதமும் ஒருசேரக்கற்று வல்லாரும் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் ஒரு சேரக் கற்று வல்லாரும் என."

"இச்சங்கத்திற்கு நூல் தொல்காப்பியமாதி இலக்கணங் களும், சிந்தாமணியாதி இலக்கியங்களுமாய்த் தற்காலத்து வழங்கும் அத்தனை நூல்களுமாம்."

"இனி இச்சங்கத்துப் புலவர்களானே பல நூல்களும் உரைகளும் செய்யப்படும். ஆங்காங்குள்ள புலவர்பலர் இனிச் செய்யும் நூல்களும் இச்சங்கத்தின் கண்ணே வந்து அரங்கேறும்.

"இனிப் புலவராவார் இச் சங்கத்திற் பரீக்கை கொடுத்துச் சிறப்புப் பெயர் பெறுவர். நூல் செய்வாரும் உரை செய்வோரு மாம் புலவர்கட்கு இச்சங்கம் பரிசிலும் பட்டமும் அளிக்கும்."

*“இச் சங்கம் தமிழ் கற்பார்க் கின்றியமையா உதவிகளைச் செய்யும். பண்டைய நூல்களாய் உள்ளவற்றைத் தேடி ஆராய்ந்து வெளிப்படுத்தும். இச்சங்கத்தைச் சார்ந்து வித்தியா சாலையும் புத்தகசாலையும் உள. கற்பார்க்கவசியம் வேண்டற் பாலதாம் இச்செந்தமிழ் என்னும் பத்திரமும் இச்சங்கத்தின் கண் உளது. இன்னுஞ் சொல்லாதனவாம் எல்லாக் கருமங்களையும் இச்சங்கஞ் செய்த தமிழைப் பரிபாலிக்கும்.*

‘புகழும் தருமநெறி நின்றோர்பொய் காமம்
இகழும் சினஞ்செற்றம் இல்லோர் - நிகழ்கலைகள்
எல்லாம் உணர்ந்தோர் இருந்த இடமன்றோ
நல்லாய் அவைக்கு நலம்?’

*என்ற நல்லவையும்,*

‘நலனடக்கம் செம்மை நடுவுநிலை ஞானம்
குலனென் றிவையுடையோர் கோதில் - புலனில்லோர்
சென்று மொழிந்தனவும் கேட்போர் செறிந்தவிடம்
அன்றோ நிறைந்த அவை?’

*என்ற நிறையவையும் இச்சங்கமேயாம்.*

*“இச்சங்கத்தை முன்னைய* ***சங்கங்கள் மூன்றனோடு ஒருங்கெண்ணி நாலாவது சங்கமெனல்*** *தகும். இக்காலத்து இச்சங்கம் உண்டானது தமிழுலகு செய்த புண்ணியப் பேறேயன்றிப் பிறிதன்று”*

*இவ்வாறு முன்னைச்சங்க அமைதிக்கேற்ப இச்சங்கச் சீர்களையெல்லாம் இயைத்துரைப்பவர் நாகூர் - தர்கா வித்துவானும் தமிழ்ச் சங்கப் புலவருள் ஒருவருமாகிய குலாம் காதிறு நாவலர் ஆவர்.*

*இப்புலவர் பெருமகனார் தம் உள்ளார்ந்த அன்பெல்லாம் அள்ளிச் சுரக்க மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப் படை என ஒரு நூலும் இயற்றி மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரிடையே அரங்கேற்றினார்.*

*மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரிடத்துச் சென்று சிறப்புப் பெயரும் பரிசிலும் பெற்றானொரு புலவன் அவை பெறாதான் ஒரு புலவனுக்குப் பெறுமாறு கூறி அவனை அவரிடத்து வழிப்படுத்தியது என்பது புலவராற்றுப் படை என்பதன் பொருள்.*

"கூடம் போன்ற கோபுர நிரையொடு
மாடஞ் சான்ற மதுரைமா நகர்க்கண்
முந்திய சங்கம் மூன்றென் றாகிப்
பிந்திய சங்கம் பிறந்த தாலெனத்
தண்டமிழ் விரிக்கும் பண்டைநூல் எழும்ப
வியனனி விழைகுநர் குழீஇனர் பயில
மால்செய் கல்வியர் மாண்பின் நூல்செய
உரைகாண் வல்லுநர் வரைகண் டெழுத
முறைபிறழ்ந் துற்ற குறைபல் காண்மார்
முதுநூல் தேண்டிப் பழுதாய்ந் தமைக்கக்
குற்றம் போகிய கற்றன கெடாஅப்
பேணூஉ வைகுமோர்ப் பரீக்கை காணூஉச்
சிறப்புப் பெயரொடு பரிசிலும் அளிப்பப்
பின்னும் வேண்டுவ என்னவும் புரிய
மங்கலில் அருந்தமிழ்ச் சங்கம் ஒன்றிரீஇனன் (71-85)"

*என்று முச்சங்கச் சீர்மையும் முழுதுறக் கொண்ட சங்கச் சால்பை விரித்துரைத்தார்.*

*தென்றமிழ்ப் பாண்டி நன்னாட்டு மதுரை மாநகரின் கண்ணே ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவனார் செந்தமிழ்ச் சங்கம் நான்காவதொன் றிரீஇயினார் என்பது சமாசாரம் தஞ்செவி மடுக்கப் பெற்ற ஞான்று திருநல்லூர் - வெள்ளியந் திருமலைக் கிழார் ஆராமைமிக்குச் சொல்லிய நிலைமண்டில ஆசிரியப்பா, என்னும் நெடும்பாட்டில்,*

"பால் லீரும், நாவல் லீரும்,
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!
தென்றிரு மதுரைச் செழும்பதி யகவயின்
நான்மைச் சங்கமும் நன்குநிலை யிடுமார்
மும்மைச் சங்கம் உம்மையின் இரீஇச்
செம்மைத் தமிழ்த்திறம் சீர்பெற வளர்த்த
பாண்டி மன்னர்மன் வேண்டுபு கொண்டனர்
பாண்டியந்துரைக் கோலமும் போலும்! என்
றியாண்டும் மேதையோர் செம்மாந் தனரால்!" (28-36)

*என வரும் பகுதியைக் காண்க.*

*இனி அப்துல் காதிறு இராவுத்தர் என்பார், இளையான் குடி நீதி மன்றத்தின் தனிநடுவர். சோதுகுடி சாத்தனிக்கிராம அஃதார்; தமிழ்ச் சங்கப் புலவர்களுள் ஒருவர். அவர் மதுரைத் தமிழ்ச் சங்க மான்மியம் என்றோர் பாநூல் யாத்தார். வாழ்த் தொடும் நூற்றொரு பாக்களையுடைய அந்நூல் முத்தமிழ்ச் சங்க வரலாறுகளையும் முறையே உரைத்து நான்காம் சங்க வரலாற்றை நன்கனம் விரித்துரைக்கும் செவ்வியில் இயல்கின்றது.*

*நான்காம் சங்கம் என்னும் பகுதியில்,*

“முன்னாளில் கடைச்சங்கம் முடிவடைந்த துலகாண்ட
மன்னாகும் உக்கிரபாண் டியனிடத்தும் மாண்பாலே
இந்நாளில் உக்கிரபாண் டியனென்னும் எழில்வேந்தன்
தன்னாற்பெற் றனமதுரைத் தமிழ்ச்சங்கம் எனப்புகன்றார்”

*என்றும் (92)*

“திருவனந்த புரங்கொச்சி மைசூ ராதி
தேசமன்னர் பலருதவி செய்யா நின்றார்
இருநிலமுள் ளளவுமிகு விளக்க மேவும்
எந்நாளும் ஒருகுறையும் எய்தாதென்றே
பெருமையுடன் புவிபுகழிந் நான்காஞ் சங்கம்
பெற்றபுகழ் அத்தனையும் பிறழா வாய்மை
மருவுமெங்கள் உக்கிரபாண்டி யற்கே யாக
வாய்ந்ததமிழ்த் தேவியருள் வாழி வாழி”

*என்றும் (101) பாடியுள்ள பகுதியை நோக்குக.*

*இந்நூற்குச் சாற்றுக் கவிபாடிய மு.ரா. அருணாசலக் கவிராயர்,*

“முத்தமிழ்க்கு மூன்றென்ன முடித்தசங்கம் நாற்கவிக்கு முந்து நான்காம்,
இத்தரையில் எனவிளம்ப”

*பாண்டித்துரை சங்கம் தோற்றுவித்தார் என்று உரைத்த மொழி உணர்க.*

“முத்தமிழ்ச் சங்கமாம் முச்சங் கப்பெயர்
இத்தமிழ் உலகில் இயல்பெற மாற்றி
நாற்சங் கப்பெயர் நிலவுற நாட்டி”

*என்று கொத்தமங்கலம் சி. அ. சி. காசிநாதன் செட்டியாரும்*

"முன்பாண்டிவ் வுலகளித்த தமிழ்வேந்தர் மூவருளு முதன்மை வாய்ந்த
தென்பாண்டி நாட்டரசர் நிறுவியமுச் சங்கமுமுன் சென்ற தாகப்
பின்பாண்டில் செய்தவத்தான் மதுரையினான் காஞ்சங்கம் பிறங்க வைத்த
என்பாண்டித் துரை"

*என்று சுந்தரேச ஐயரும்,*

"தென்னர்பலர் ஒருதமிழை மூன்றுமுறை வளர்த்துமது சிதைந்த தென்னா
முன்னருறும் அறிஞரெலாம் எழுதியகா தையிற்கேட்டே முகவை வாழ்ந்த
மன்னர்புகழ் தருபாண்டி மகிபாநீ யேயதனை வையத்தென்றும்
நன்னர்நிலைத் திடநட்டாய்"

*என்று அமராவதி புதூர் வயி. நாக. ராம. சு. இராமநாதச் செட்டியாரும் பாடினர்.*

*முச்சங்கத்தினும் இச்சங்கம் சிறந்த பான்மையை,*

"செந்தமிழ் ஓங்கிய காலத்தினிற் பாண்டிமன்னர் பலர் தெய்வச் சங்க
முந்திவளர்த் தாரென்ன லதுசிறப்போ தமிழ்மணமே முற்றுந்தீர்ந்த
இந்த நாளி னிற்சங்கம் நீவளர்த்தா யெனல்சிறப்போ எழில்நற் கல்வி
சுந்தரஞ்சேர் உயர்பாண்டித் துரைச்சாமி சீமானே தூய்மையோனே"

*என்று பூவைகலியாணசுந்தர முதலியாரும்,*

"முந்தைநாட் டமிழ்வளர்த்த பாண்டியர்கள் ஒருருவாய் முளைத்தாற் போல
வந்தருளிக் கூடலின் கட்டமிழ்ச்சங்க நிறுவிய நின்மகிமை"

*என்று நாவலர் ந. மு, வேங்கடசாமி நாட்டாரும் இசைத்தனர்.*

"தமிழுலகின் சிரமகுட மெனமிளிரும் மதுரைநகர் தன்னி லான்றோர்
அமிழ்தெனெ முன்தாபித்த நற்சங்க அமைதியைப்போல் அத்தலத்தே
இமிழ்தரவோர் நற்சங்கம் இயற்றியுல விடச்செய்த இனிமை"

*என்று மோசூர் முனிசாமி முதலியார் முச்சங்கத்தொடும் இச்சங்கத்தை ஒப்பிட்டு உரைத்தார்.*

*இன்னும் தமிழ் வரலாறுகளும், பல்வேறு பதிப்பு நூல்களும், கலைக்களஞ்சியமும், உலகத்தமிழ்மாநாட்டு மலரும் இன்னபிறவும் நான்காம் சங்கம் என்றே மதுரைச் சங்கத்தைக்*

*குறித்தன. ஆகலின் அறுதியாய் உறுதிப்படுத்தப் பெற்ற உண்மையை ஆராய்வேம் என்பது அறத்தொடும் முறையொடும் கூடிய ஒன்று அன்றாம்!*

*இன்னும் காண்போம்: சங்கம் தோன்றிய அந்நாளில், தமிழகமெல்லாம்தழுவித் தமிழ் வளர்த்தற்கென்றே ஓரமைப்பு எங்கேனும் உண்டாகி இருந்ததோ? அவ்வமைப்பில் நாடு தழுவிய புலவர்களெல்லாம் நணுகியிருந்து தமிழாய்ந்த முறையேதும் உண்டோ? பல்கலைக் கழகந்தானும் தமிழ் மொழியைத் தன்மொழியாகச் சற்றேனும் கருத்தில் இறுத்திக் கடனாற்றிய துண்டோ? தமிழ்ப் பயிற்சியைக் கல்லூரி வகுப்புகளில் கால் வைக்க இடமுந்தந்ததுண்டோ? சிறிதே இருந்த இடத்தையும் பறித்தெறிந்து நின்ற காலையில் தடுத்து நிறுத்தத்தொடுத்து முயன்ற அமைப்பும் யாதோ? தமிழ்ப் புலவர்க்கெனப் பாடம் வகுத்தும் பாடத்திட்டப்படி கற்பிக்கும் கல்லூரியை ஏற்படுத்திப் பயில்வார்க்கு உண்டி உடை உறையுள் எல்லாம் வழங்கிக் கற்பிக்கும் முறையை எவ்வமைப்பேனும் பல்கலைக் கழகமேனும் அக்காலத்துக் கொண்டிருந்தனவோ? சங்கத்துப் புலவர்களாய் இலங்கியோரும், சங்கத்துப் புலமைத்தேர்வில் வென்றோரும், சங்கத்துக் கல்விக் குழுவிலும் ஆய்வு அரங்கிலும் இடம் பெற்றோரும், சங்கத்து நூல் நிலையம், ஏட்டுச் சுவடி இவற்றைப் பெற்றுப் திப்புப் பணி செய்தோரும், சங்கப் பேரரங்கில் தம் நூலை அரங்கேற்றம் செய்தோரும், சங்கத்து உதவிபெற்று நூல் வெளியிட்டோரும் என்பாரை யெல்லாம் ஒரு பட்டியலிட்டுப் பார்த்தால் அப்பெருந்தகையர் தொடர்பில்லாமல் அவர் வழிவழித் தொடர்பு இல்லாமல் இந்நாளில் தமிழ்ப் புலவராவோர் - பேராசிரியராவோர் - முனைவராவோர் எவரேனும் இருப்பரோ? எல்லாம் தமிழ் எதிலும் தமிழ் என்பதற்கு வித்திட்ட அமைப்பு எது? விழிப்பு மிக்க இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே தமிழால் வாழத்தோன்றிய அமைப்போ தமிழ்ச் சங்கம்?*

*அரசின் அரவணைப்பு அறவே இல்லாத - அயலார் அரசில் - ஆங்கிலத்திற்கே முழுதரவணைப்பும் - வட மொழிக்குத் தழுவுதலும் அமைந்த அரசில் - தமிழுக்கு உதவியை எதிர் பார்க்க முடியுமோ? பல்கலைக் கழகத்து உதவியேனும் இருந்திருக்க வேண்டும் அது, தான் செய்ய வேண்டிய பணியைச் செய்யாமல் புறக்கணித் திருக்க, அதனைச் செய்தற்கு என்று எழுந்த அமைப்பைக் கட்டிக் காத்தல் கடமை என்று! அதுவும்*

இல்லை. விடுதலை பெற்ற பின்னராவது பல்வேறு பொது அமைப்புகளுக்கு அரசு நன்கொடையும் உதவியும் வழங்குவது போல் உதவியதா? தமிழ்ப் பல்கலைக் கழகமாகத் தமிழ்ச்சங்கம் இயங்குதற்கு, வழிகாட்டியாக வேனும் இயங்கியதா? எல்லாம் இல்லை! எதுவும் செய்யவில்லை! ஆனால் நான்காம் சங்கந்தானா? என்று ஆராய்வதற்கு முன்வந்து சூழ்கின்றது! சங்கத்தின் வளர்ச்சிக்காக - செயலாற்றுதற்காக அரசு என்ன செய்தது?

சங்கம் வெளியிட்ட நூல்கள் ஒன்றா? இரண்டா? சங்க ஏடுகளைப் பயன்படுத்தி ஆராய்ந்து நூல் வெளியிட்டவர் ஒருவரா? இருவரா? "நீ எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருவாய்? நான் உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருவாய்?" என்ற நிலையில் ஏடுகளைத் திரட்டி வைத்து எவருக்கும் உதவாமல் இருந்தவர்களும், இன்ன ஏடு தம்மிடம் இருக்கிறது என்பதையும் அறிவிக்கவும் விரும்பாமல் மறைத்தவர் களும் இருந்த நாட்டிலே, எந்த ஒரு சிறு பயனையும் எதிர்பாராமல் எவ்வாறேனும் பயன்பட்டால் மொழிக்கும் நாட்டுக்கும் நலமே என்ற பெருநோக்கில் எத்துணைப் பேர்களுக்கு ஏடுகள் படி யெடுத்து வழங்கப் பெற்றுள்ளன!

எட்டுத் தொகையுள் முதலாவதாகிய நற்றிணையை முதற்கண் உரையுடன் பதிப்பித்த அறிஞர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்க்குச் சங்க ஏடு உதவியது. பின்னே அந்நற்றிணைக்கு விளக்கவுரை வரைந்த பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளைக்குச் சங்க ஏடு உதவியது. நல்ல குறுந்தொகை எனப் பாராட்டப் பெறும் குறுந்தொகையை முதற்கண் பதிப்பித்த நற்றமிழ்த் தொண்டர் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கனார்க்குச் சங்க ஏடு பேருதவியாயது. அன்றியும் 316 ஆம் பாடலாகிய 'ஆய்வளை நெகிழவும்' என்பது மற்றைப் படிகளில் கிடையா தொழியச் சங்கப் படியே அதனைக் கிடைக்கச் செய்து நிறைவு தந்தது.

உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த புறநானூற்றுக்கும் பரிபாடலுக்கும் சங்கச்சுவடிகள் உதவின. இரா. இராகவ ஐயங்கார் பதிப்பித்த அகநானூற்றுப் பதிப்புக்கும் சங்கச் சுவடி பயன்பட்டது. வ.உ.சி. யின் தொல்காப்பியம் பொருள் இளம்பூரணர் பதிப்புக்கும், சி வை. தாமோதரம் பிள்ளையின் தொல்காப்பியம் பொருள் நச்சினார்க்கினியம் பதிப்புக்கும் சங்க ஏடுகள் துணையாயின. இவ்வாறே நற்றிணை குறுந்தொகை

பதிற்றுப் பத்து புறநானூறு ஆகிய சுவடிகள் சைவசித்தாந்த சமாசப் பதிப்புக்கு உதவியாகின. புறத்திரட்டுச் சுவடி வையாபுரிப் பிள்ளை பதிப்புக்குதவியது. கம்பராமாயணச் சுவடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்புக்கு நலம் சேர்த்தன. பிறர் பிறர்க்கும் சங்கத்தின் பிறசுவடிகள் பயன் பட்டுள்ளன.

இனிச் சங்கச் சுவடி ஒன்றாலேயே உலாக் கொண்ட நூல்களும் உள. அவற்றுள் இரண்டைக் குறிப்பிட்டு அமைவாம். அவை : கூடற் புராணம், திருநூற்றந்தாதி என்பனவாம். இன்னும் சங்கச் சுவடி கொண்டே தனிநூலுருக் கொள்ளாமல் செந்தமிழ் அளவில் அமைந்த நூல்களும் உள. அவற்றையெல்லாம் விரிப்பிற் பெருகுமாகலின் அமைவாம்.

ஐந்திணை ஐம்பது, இனியது நாற்பது, கனாநூல், புலவராற்றுப்படை, நேமிநாதம், திணைமாலை நூற்றைம்பது, பன்னிருபாட்டியல், நான்மணிக்கடிகை, பழமொழிநானூறு, மதுரைத்திருப்பணி மாலை, நரிவிருத்தம், மாறனலங்காரம், திருப்புல்லாணிமாலை, பொருட்டொகை நிகண்டு, அகராதி நிகண்டு இன்னபல நூல்களெல்லாம் சங்கச் சுவடிகளைக் கொண்டு ஆய்ந்து வெளிப்பட்டனவேயாம்.

தமிழ்மொழிக்கெனச் சாண்ட்லர் என்பார் அகரமுதலி தொகுக்க முற்பட்டார். அப்பொழுது அவ்வகராதி ஆக்கக் குழுவில் தமிழ்ச்சங்கத்திற்கு உறுப்பாண்மை வழங்கியிருந்தார். சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ் தொடர்பானவற்றை முடிவெடுக்குங்கால் மதுரைத் தமிழ்ச்சங்கக் கருத்தேற்றலைக் கடனாகக் கொண்டிருந்தது. அரசு, தமிழ்ச்சங்கம் நடாத்தும் தேர்வுக்கு உரிமையும் வென்றோர்க்கு வேலைவாய்ப்பும் வழங்கி வந்தது. அண்ணாமலைப்பல்கலைக்கழகம் தமிழ்ச்சங்கத்தாற் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒருவரைத் தன் ஆட்சிக் குழுவில் ஏற்றுச் சிறப்புச் செய்தலைத் தானே விரும்பித் தன்கடனாகக் கொண்டது. சங்க நிறுவனரும், அவர்க்குப்பின் வந்த தலைவர் துணைத் தலைவர்களும் தமிழ்சார்ந்த பல்வேறு குழுக்களில் உறுப் பாண்மை பெற்றுச் சிறந்தமை நாடறிந்த செய்தி.

ஒருவரை மதிப்பிடுங்கால் அவர் வாழ்ந்த கால அளவைப் பார்க்கிலும், அவர் செய்த செயல்களையே முதன்மையாகக் கொள்ளல மரபு இன்னார்க்குப் பின் இன்னார் என்னும் முறைப்படி முடிசூடிய உடனேய முடியிழந் தோடியவர்க்கும்

வரலாற்று வரிசையில் இடமுண்டாவது போன்றது அன்று செயலாண்மையால் மதிப்பிடும் சிறப்பு. ஆகலின் தண்டமிழ் மொழிக்குத் தன்னிகரில்லாத் தொண்டுகளைக் காலத்தால் செய்த - செய்வித்த - பெருமைகளைத் தன்னகத்தே கொண்டது பாண்டித்துரையார் கண்ட பைந்தமிழ்ச் சங்கம். ஆதலின் அதன் தொண்டினையும் ஆக்கச் செயல்களையும் குறைத்து மதிப் பிடுவார் நோக்கு பழியொடு பாவங்கருதுவார் போக்கேயாம்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

# 13. எதிர்காலப் பணிகள்

தமிழ்ச்சங்கம் தோன்றிய நாள் தொட்டே அது செயல் ஆற்ற வேண்டும் முறைகளைப் பற்றிக் கருத்துரைகள் அறிஞர் பெருமக்களால் அவ்வப்போது வழங்கப் பெற்றுள. அவற்றை யெல்லாம் தொகுப்பின் விரிவுறும் என்பதால் எதிர்காலத்தில் செய்யத்தக்க சில பணிகளைக் குறித்து அறிஞர்கள் கூறியுள்ள வற்றையும் பிறவற்றையும் காண்போம்.

கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் வி.ஐ சுப்பிரமணியம், "கி.ஆ.பெ விசுவநாதனாரின் கழகம் காரைக்குடிக் கழகம், உலகத் தமிழ்க் கழகம் என்றெல்லாம் பல நிறுவனங் களைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாகப் பழமையும் சிறப்பும் உடைய மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சீர்ப்படுத்திப் புகழடையச் செய்வது மிக இன்றியமையாதது" என்னும் கருத்தை 1964 இல் வெளியிட்டுள்ளார். அவர் மேலும், தமிழன்பர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் தமிழ்ச் சங்கம் வளர்வடைவதற்கு ஒரு திட்டம் தீட்டிப் பணம் கோருக. தமிழகத்தில் எழுத்தாளர் களாகவும் -ஆராய்ச்சியாளர் களாகவும் உள்ளவர்களிடம் கட்டுரை கோருக. பழைய பொருள்களில் மட்டும் கட்டுரை அமையாமல் மொழிப் பிரச்சனை, கலைச் சொற்கள், வெளியாகும் தமிழ் ஆங்கில நூல்களின் விமர்சனம், பிறமொழி இலக்கியச் சிறப்பு முதலியவை பற்றியும் கட்டுரை கோருக. நான் சிறுவனாக இருக்கும் போது செந்தமிழ் படியாத தமிழ்ப் புலவனைக் கண்டதில்லை. அந்த நிலையைக் குறைந்தது மூன்றாண்டு களுக்குள் நீங்கள் தோற்றுவிக்க வேண்டும் என்று வலியுறுத் துகிறார் (செந்தமிழ் தொகுதி.60 பகுதி 7,8,9)

சங்கத்தின் 56 ஆம் ஆண்டு விழா 28-12-1957 இல் நிகழ்ந்தது. விழாத்தலைவர் நடுவர் வி. சுப்பிரமணியம் ஓர் அரிய கருத்தைச் சங்கத்தார்க்கு வைத்தார்.

"சங்கத்தில் இப்பொழுது நூல்கள் பிரசுரிக்கப்படுகின்றன. அவை தவிரச் சங்க ஆதரவு பெற்ற நூல்களையும் சங்க நூல்களாகக் கொள்ளலாம். யாரேனும் ஓர் ஆசிரியர் அவர்

*இயற்றும் நூல் சங்கத்தின் கொள்கைகளுக்கு ஒத்ததாய், அதன் நோக்கஙகளை நிறைவேற்றுவதாய் இருப்பதாக எண்ணினால் அந்த நூலை அவர் சங்கத்தின் பரிசோதனைக்கு அனுப்பலாம். சங்கத்தின் அறிஞரால் அந்நூல் ஒப்புக் கொள்ளப்பட்டால் அதைச் சங்கநூல் என்று சொல்லும் உரிமை அவ்வாசிரியருக்கு வழங்கப்படும். சங்கநூல்களை முறையாக வாங்குபவர்கள் என்று சங்க அங்கத்தினரின் ஒரு பகுதியினர் இருத்தல் வேண்டும். சங்கநூல்களின் பதிப்பு ஒரே வடிவத்ததாக அழகாக அடுக்கி வைப்பதற்கு இயைந்ததாக இருத்தல் வேண்டும். சங்க ஆதரவு பெற்று நூல் வெளியிடும் ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட தொகைப் புத்தகங்களைச் சங்க வாயிலாகச் சங்கம் குறிப்பிடும் விலைக்குச் சங்கத்தின் புத்தக அங்கத்தினருக்கு விற்க வேண்டும். இவ்வாறு நாலாம் சங்க நூல் தொகை ஒன்று இந்நாளின் போக்குக் கேற்பச் சங்கப் பண்பாடுகளுடையதாய் இலங்குதல் கூடும்" (செந்தமிழ் 54 இணைப்பு)*

*பாண்டித்துரைத் தேவரின் 105ஆம் ஆண்டு விழாத் தொடக்கவுரையாற்றிய* **டாக்டர் மெ. சுந்தரம்** *தமிழ்ச் சங்கத்தை* Deemed University *ஆக்க வேண்டும் என்னும் கருத்தை வெளியிட்டு வலியுறுத்தினார்.*

*"மதுரைத் தமிழ்ச் சங்கத்தை* Deemed University *என்று சொல்ல வாய்ப்பிருக்கிறது. சென்னையில் தக்கண பாரத இந்திப்பிரச்சாரசபை இருக்கிறது. அது இரண்டு கோடி ரூபாயில்* Deemed University *ஆகப் பல்கலைக்கழகத்திற்கு இணையாக இருக்கிறது. அங்குக் கொடுக்கும் பட்டத்தைப் பதினான்கு பல்கலைக்கழகங்களும் ஏற்றுக்கொள்கின்றன.* Deemed University *என்றால் பட்டம் கொடுக்கலாம். ஆராய்ச்சிப் பட்டம் அளிக்கலாம். அதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கிறது. மேலும் இந்திய அரசு மானியம் கொடுக்கிறது அந்த* Deemed University *என்பதை இந்திக்கு மட்டுமல்லாது வடமொழிக்கும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தமிழுக்கு இன்னும் வரவில்லை. வருவதாக இருந்தால் தமிழ்ச் சங்கத்திற்குத் தான் முதலில் வரவேண்டும். ஏனென்றால் நூல் நிலையமும், இலக்கிய இலக்கண ஆராய்ச்சியும் படிக்க வைத்துப் பட்டங் கொடுக்கிற நிலையும் இவைபோன்ற எல்லாத் தகுதிகளும் தமிழ்ச் சங்கத்திற்கு இருக்கின்றன. தமிழக அரசு இதற்கு ஆவன செய்தல் வேண்டும். அத்தகைய திட்டம் நடுவணரசு செய்தால் அதற்குரிய தகுதி தமிழ்ச் சங்கத்திற்கு உண்டு"*

இதே விழாவில் கருத்தரங்கத் தலைமையேற்ற பேராசிரியர் சி. இலக்குவனார் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பல்கலைக் கழகமாதல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

'மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்துப், பட்டம் பெற்று வெளியே வந்தால் அங்கே நல்ல திறமையிருக்கும். நன்றாக இருப்பார்கள் என்று தெரிந்து அவர்களே வரவேற்பார்கள். எங்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்தவர்கள் தாம் வேண்டும் என்று கேட்பார்கள். அப்படியும் ஒரு சூழ்நிலை உருவாகாமல் போனால் நாம் வருந்த வேண்டும். சிறப்பாய் ஒரு தனிப்பல்கலைக் கழகமாக இருந்து தனிப்பட்டங்களை வழங்கலாம். அதற்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, மற்ற முயற்சிகளையெல்லாம் தவிர்த்து இந்தச் சங்கமானது தனிப்பல்கலைக் கழகமாக உருவாகி நல்ல தமிழ்ப் புலவர்களை உயர்ந்த தமிழ்ப் புலவர்களை உருவாக்கக் கூடிய சூழ்நிலையை உண்டாக்குதல் தமிழரின் கடமையாகும்.

பேராசிரியர் கிழக்காசிய நாடுகளுக்குத் தமிழ்த் தூது செல்லவிருந்தபோது 10.9.71 இல் சங்கச் சார்பில் வழியனுப்புப் பாராட்டுவிழா நிகழ்ந்தது. அப்பொழுது, "மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 49 தமிழறிஞர்களை மதிப்பியல் புலவர்களாகச் சேர்த்து ஒரு மன்றம் இச்சங்கத்தில் அமைக்க வேண்டும். அப்புலவர் மன்றம் தமிழ் நாட்டில் வெளியாகும் நல்ல நல்ல நூல்களை நாடி அறிந்து அவற்றிற்குப் பரிசளித்துச் சிறப்புச் செய்தல் வேண்டும். பயிற்சி மொழி தமிழே என்ற தமிழ்நாடு அரசின் கொள்கையினைத் தமிழ்ச் சங்கம் பல வகையாலும் முயன்று பரப்புதல் வேண்டும். தனித் தமிழ் இயக்கத்தை இச்சங்கமே முன்னின்று நடாத்துதல் வேண்டும் என்னும் கருத்துகளை வெளியிட்டார்.

பாண்டித்துரையார் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட குன்றக்குடி அடிகளார், "நாட்டு நிகழ்ச்சிகளின் விளைவுகளையும், எதிர்விளைவுகளையும் நன்றாக ஆராய்ந்து அதற்கு முடிவுகட்டும் பொறுப்பு இச்சங்கத்திற்கு உண்டு. அதனை நிறைவேற்றுதற்குத் தக்கவாறு மீண்டும் தமிழ்ப் புலவர் பேரவையைக் கூட்டி நடாத்துதல் வேண்டும்" என்றும், "தமிழ்ச் சங்கங்களையும் தமிழமைப்புகளையும் தன்னொடும் இணைத்துக் கொண்டு தமிழ்ச் சங்கம் தலைமை தாங்கி வழிகாட்டுதல் வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

குறிப்பாக இதழைச் சீர்மையுறுத்திப்பெரிது பரப்புதல், நாலாஞ் சங்கநூற்றொகை எனத் தொகை நூல் உருவாக்குவதல்ல, அரசு உதவிபெற்ற தனியாண்மைப் பல்கலைக் கழக மாக்குதல், புலவர் பேரவை அமைத்தல், தமிழமைப்புகளை ஒருங்கிணைத்தல் என்பனவாம். இவ்வனைத்தும் பட்டறிவுடைய பெருமக்களால் திட்டப்படுத்தி உரைக்கப் பெற்றவையே. இவற்றை நடைமுறைப் படுத்துதலில் சங்கம் தன் முழுமுயற்சியையும் செலுத்துதல் நாட்டுக்கும் நற்றமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் நலம் பயப்பதாம்.

இனி, இப்பொழுதுள்ள நிலையில் உடனே செய்விக்கத் தக்க சில கடப்பாடுகளும் உளவாதலைக் குறிக்கலாம்.

சங்கத்து நூல்நிலையம் மிக உயரியது; அரிய ஏடுகளையும் தன்னகத்துக் கொண்டது; ஏடுகளுள் இன்னும் நூலுருப் பெறாத ஏடுகளும் உள. நூலுருப் பெற்ற ஏடுகளிலும், மறு ஆய்வு செய்து அச்சிட்ட நூல்களில் திருத்தம் செயதற்குரியவையும் உள. ஆகலின், சுவடி ஆய்வுப்பணி செய்தலும், படியெடுத்தலும், பதிப்பித்தலும், செந்தமிழ் இதழைத் தம் பொறுப்பில் நடாத்துதலும் என்னும் செவ்விய பணிகளைச் சீர்மையுற நடாத்தத்தக்க வகையில், ஓரிரு புலவர்களையேனும் உடனடியாக அமர்த்துதல் வேண்டும். அவர்கள் மதுரைச் சங்கப்புலவர்களாகப் பணியாற்றுவர்.

தகுதிவாய்ந்த புலவர்கள் ஒரு பதின்மரையேனும் மதிப்பியற் புலவர்களாகச் சங்கம் கொள்ளுதல் வேண்டும். அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் சங்கத்தின் ஆண்டுவிழாவின் போதும் இன்றியமையாத வேளைகளிலும் தனியே கூடித் தமிழ்மொழிக்கு எய்தும் ஆக்கம் கேடுபற்றி ஆய்ந்து அரசுக்கும் பொதுமக்களுக்கும் தம் கருத்தை வலியுறுத்த வேண்டும். அவர்கள் எடுக்கும் முடிவுகள், எதிர்கால மன்பதைக்கு எடுத்துக் காட்டாக இலங்குமாறு துணிவான நடவடிக்கை எடுக்கும் நிலையில் இருத்தல் வேண்டும்.

நூலாராய்ச்சியாளருக்கும், மேல் நிலைப்பட்டம் பெறுவார்க்கும் சங்கத்து நூல் நிலையம் பயன்பட்டு வரும் அளவு பாராட்டத்தக்கதே. ஆயினும், மேலும் இவ்வளவைப் பெருக்குதல் வேண்டும். ஆய்வாளர்க்கு வேண்டும் வாய்ப்புகள் மிகுதியும் செய்தலும், அவர்களுக்குத் தனி இடம் ஒதுக்கித் தருதலும் வேண்டும். அடிக்கடி ஆராய்ச்சியாளர்கள் கருத் தரங்குகள் நடாத்துதற்கும் வாய்ப்புச் செய்யலாம். ஒலிபெருக்கி, விளம்பரம் எவையும் அற்று, ஆரவார மற்ற - விரல் விட்டு எண்ணத்தக்க - அறிஞர்கள் கலந்து கொண்டு நடாத்தும்

பயன்மிகு கருத்தரங்காக அது விளங்கிடவேண்டும். ஆய்வும், அதன் முடிவும் செந்தமிழ் இதழில் வெளியிடுதல் வேண்டும்.

செந்தமிழ் இதழைப் பழைய நிலையில் காணுமாறு செய்வித்தல் வேண்டும்: 1. திங்கள்தோறும் வெளிப்படுத்த வேண்டும். 2. எதைப் பற்றிய செய்தியாயினம் புதிய ஆய்வும் கண்டுபிடிப்புமுடையதாகவே அமைதல் வேண்டும். இவ்விரண்டு வகையும் செந்தமிழைப் பழைய நிலையில் பார்க்க வைக்கும் என்பது உறுதி.

நாட்டிலுள்ள தமிழமைப்புகள், சங்கங்கள் ஆகியவற்றை யெல்லாம் இணைத்தல் தமிழுக்கு ஆக்கம் செய்யும் வழிகளுள் தலையாயது. அதனைத் தமிழ்ச் சங்கமே தலைமை தாங்கி நடாத்துதல் வேண்டும். கரந்தைத் தமிழ்ச்சங்கம் கட்டாயம் கை கொடுக்கும்! பிற சங்கங்களையும் ஆர்வத்தால் இணைக்க வேண்டும். தில்லித் தமிழ்ச் சங்கம், கல்கத்தா தமிழ்ச்சங்கம், பெங்களூர் தமிழ்ச் சங்கம், இன்னவாறு வெளி மாநிலங்களில் உள்ள சங்கங்களொடும், வெளிநாட்டுத் தமிழ்ச் சங்க அமைப்புகளொடும் உணர்வு மிக்க தொடர்பைத் தமிழ்ச்சங்கம் உண்டாக்குதல் உடனடிச் செயலாகும். அச்சங்கங்களுக்குப் பேராளர் உரிமையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கொடுத்தலும் ஏற்கத் தக்கது.

தமிழ்ச்சங்க ஆண்டு விழாவை, இச்சங்கங்களின் ஒருங்கிணைந்த விழாவாக அமைக்கும் நல்ல காலச் சூழல் ஏற்பட்டு விடுமாயின், வெவ்வேறு இடங்களில் அவ்வமைப்பின் சார்பிலும் சங்க ஆண்டு விழா நடாத்த வாய்க்கும். அதனைச் சங்க நிறுவனர் பாண்டித்துரை அன்றே தொடங்கினார்: தஞ்சையில் தமிழ்ச் சங்க விழாவை நடாத்திக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தோற்றத்திற்குக் கால்கோள் செய்தார்! அம் மரபை வழுவாமல் கடைப்பிடித்தால் நாட்டில் ஒரு பெரிய விழிப்புணர்வுக்கு வித்திட்ட பெருமை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு உண்டாகும் என்பது உறுதி.

## இணைப்பு - 1

உ

திருச்சிற்றம்பலம்

# 1903-ம் டிசம்பர் மீ 21உ சோமவாரம் கூடிய மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவக் கூட்டத்தார் தீர்மானங்கள்

*1. மகா-ள-ள-ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர் அவர்கள் (அக்கிராசனாதிபதி)*

*2. " ப. நாராயணஐயர் அவர்கள் பி.ஏ.பீ.எல்*

*3. " எம்.ஆர். கந்தசாமிக் கவிராயர் அவர்கள்*

*4. " திருநெல்வேலி - சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள்*

*5. " திருநெல்வேலி - நெல்லையப்பக் கவிராயர் அவர்கள்*

*6. " S. பால் வண்ண முதலியார் அவர்கள்*

*7. " பூவை - கலியாணசுந்தர முதலியார் அவர்கள்*

*8. " பண்டித சவரிராய பிள்ளையவர்கள்*

*9. " சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள்*

*10. " டி.ஸி. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் பீ.ஏ. பீ.எல்*

*11. " சோழவந்தான் சண்முகம்பிள்ளை அவர்கள்*

*12. " நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்*

*13. " வி. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்கள்*

*14. " ரெ. அப்புவையங்கார் அவர்கள்*

*15. " எம். ஆர். ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள் (ஸ்ரீவில்லிபுத்தூர்)*

16. " திரு. நாராயண ஐயங்கார் அவர்கள்

17. " எஸ். சாமிநாதையர் அவர்கள்

18. " தஞ்சை - சாமிநாத முதலியார் அவர்கள்

19. " எஸ். அரங்கசாமி ஐயங்கார் அவர்கள்

வரமுடியாத வித்வான்கள் எழுதிவிடுத்த பின்வரும் கடிதங்களும் தந்தியும் வாசிக்கப்பட்டன.

மகா-ள-ள-ஸ்ரீ உ.வே. சாமிநாதையர் அவர்கள்

" வை.மு. சடகோபராமாநுஜாசாரியார் அவர்கள்

" தஞ்சை வே. குப்புசாமி ராஜா அவர்கள்

" திருமயிலை சண்முகம் பிள்ளை அவர்கள்

" பி. வேங்கடசாமி பிள்ளை அவர்கள் B.A.

கொழும்பு சிற்கைலாச பிள்ளை அவர்கள் (தந்தி)

" தி.கோ. நாராயணசாமி பிள்ளை அவர்கள்

" அ. குமாரசாமிப் பிள்ளை அவர்கள்

" ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை அவர்கள்

" வா. குலாம் காதிறு நாவலரவர்கள்

" வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

" வி. முத்துக் குமாரசாமி முதலியார் அவர்கள் B.A.

### தீர்மானம் - 1

i) சங்கத்தின் அங்கத்தினராய அனைவரும் தத்தமக்கு இயன்ற அளவு கல்வி செல்வங்களால் உதவிபுரியுங் கடப்பாடுடையவராகலின், அன்னோர் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 6-க்குக் குறையாது சங்கத்திற்கு அந்தந்த மார்ச்சுமீ 31உக்குள் தொகை செலுத்தி வரவேண்டுமென்றும், அவரவர்கட்குச் செந்தமிழ்ப் பத்திரிகையும் சங்கத்தினின்று வெளிப்படும் புத்தகங்களும் முறையே அனுப்பி வரல் வேண்டும் என்றும் மகா-ள-ள-ஸ்ரீ. எஸ். சாமிநாதையர் அவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, பண்டித வி. ஸ்ரீ நிவாஸாசாரியர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு மகா-ள-ள-ஸ்ரீ T.C. ஸ்ரீநிவாசையங்கார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

ii) பணம் அனுப்ப இயலாதவர்கள் கௌரவ அங்கத்தினராக இருப்பார்கள். அவர்களுக்குச் சங்கத்துத் தீர்மானங்கள் மட்டும் அனுப்பப்படல் வேண்டும்.

பிரேரேபித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ அக்கிராசனாதிபதி அவர்கள் ஆமோதித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள். எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

### தீர்மானம் - 2

இனிச் சங்கத்தின் அங்கத்தினராவோர் முதலிற் பிரவேச தனமாக ரூ.5 அனுப்பல் வேண்டும்.

பிரேரேபித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ எம். ஆர். கந்தசாமிக் கவிராயர் அவர்கள்

ஆமோதித்தவர் " எஸ். பால்வண்ண முதலியார் அவர்கள் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

### தீர்மானம் - 3

சங்க அங்கத்தினர்கள் வருஷோற்சவக் கூட்டத்திற்கு வருதலில் இயற்கையிலேயே விருப்பமும் கடமையும் உடையராதலின், வழிச் செலவுகளை அவர்களே சொந்தத்திற் செய்து கொண்டு வரவேண்டும் என்றும், கூட்டங்கூடும் நாட்களில் மதுரையில் அவர்கட்கு இருப்பிடம் உண்டி முதலிய சௌகரியஞ் செய்து உபகரித்தலோடு திரும்புதற்குரிய செலவை இச்சங்கப் பொருட்செலவில் நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்தல்.

பிரேரேபித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ திருநெல்வேலி சுப்பிரமணியக்கவிராயர் அவர்கள்

ஆமோதித்தவர் " நா. கதிரை வேற்பிள்ளை அவர்கள்

எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

### தீர்மானம் - 4

பத்திராதிபர் எழுதுவன நீங்கப் பத்திரிகைக்கு அனுப்பப் படும் ஏனைய விஷயங்கள் சங்கத்தவருள் இருவர் அபிப்பிராயங் கொடுத்த பின்னர்ப் பிரசுரிக்க வேண்டும். அபிப்பிராய பேதம் இருந்தால் அக்கிராசனாதிபதி அவர்கள் தீர்மானப்படி நடத்தல் வேண்டும்.

*பிரேரேபகர் மகா-ள-ள-ஸ்ரீ சவரிராயபிள்ளை அவர்கள்*

*ஆமோதித்தவர் "டி.ஸி. ஸ்ரீ நிவாசையங்கார் அவர்கள்"*

*எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.*

### *தீர்மானம் - 5*

*புத்தக அபிப்பிராயத்திற்கு (Review) அனுப்பப்படும் புஸ்தகங்களைச் சங்கத்து வித்வான்களில் அந்தந்த விஷயங்களிற் பாண்டித்தியமுள்ள ஒருவருக்கு அனுப்பி அவருடைய அபிப்பிராயத்தை அவர் பெயராலேயே பிரசுரித்தல் வேண்டும்.*

*பிரேரேபித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீ நிவாசையங்கார்*

*ஆமோதித்தவர் "தஞ்சை சாமிநாதமுதலியார் அவர்கள்"*

*ஆதரித்தவர் "சவரிராய பிள்ளையவர்கள்"*

*எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.*

*இன்று கூட்டம் நேரமானதால் இம்மட்டில் நிறுத்தப் பட்டு நாளைக்காலை 8 மணிக்கு மறுபடியும் கூட்டப்பட வேண்டியதென்று சபையோரால் தீர்மானிக்கப் பட்டது.*

*சேதுபதி ஹைஸ்கூல் ஹால்* — *இங்ஙனம்*
*மதுரைத் தமிழ்ச்சங்கம்* — **பொ. பாண்டித்துரை**
*21-12-03* — *அக்கிராசனாதிபதி.*

# 1903ம் ௵ டிசம்பர் ௴ 22௳ வித்துவக் கூட்டத்தார் தீர்மானங்கள்

*21-ந் தேதியில் வந்தவர்களில் மகா-ள-ள-ஸ்ரீ ப. நாராயணையரவர் கள் நீங்க, ஏனையரெல்லாம் வந்திருந்தார்கள்.*

### *தீர்மானம் - 6*

*சங்கப் பரீக்ஷைக்கு வரும் பீ.ஏ.எப். ஏ மாணாக்கர்கட்கு இப்பொழுதுள்ள பாடங்களோடு தமிழ்மொழி வரலாறு முதலிய தமிழ்ச் சரித்திர சம்பந்தமான பாடங்களும் ஏற்படுத்தப்பட வேண்டியதென்றும், அஃது இலக்கணப் பிரிவோடு சேர்ந்திருக்க வேண்டும் என்றும்,*

*பிரேரேபித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ சவரிராயபிள்ளை அவர்கள்*

*ஆமோதித்தவர் "டி.ஸி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள்"*

*எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.*

### தீர்மானம் - 7

*சங்கத்தின் அங்கத்தினராக விரும்புவோரைச் சங்கத்து வித்துவான்கள் எவரேனும் இருவர் பிரேரேபணை பண்ணி, அன்னோரது சம்மதம், பெயர், மேல்விலாசம், தொழில் முதலியவற்றையும் தெரிவித்தால் அவரைச் சங்கத்தின் அங்கத்தினராக நியமித்துக் கொள்ளல் வேண்டும்.*

*பிரேரேபகர் மகா-ள-ள-ஸ்ரீ அக்கிராசனாதிபதி அவர்கள்*

*ஆமோதித்தவர் - "மிஸ்டர் சவரிராய பிள்ளை அவர்கள்"*

*எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது*

### தீர்மானம் - 8

*தமிழை லண்டன் யூனிவர்ஸிடியின் பரீக்ஷைக்கு ஒரு பாஷையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கொழும்பு இராஜகல்லூரித் தலைவராகிய மிஸ்டர் லீ* (Mr. Lee) *துரையவர்கள் செய்து வரும் அரியபெரிய முயற்சியை இச் சங்கத்தார் மிக்க மகிழ்ச்சியுடன் அங்கீகரிப்பதோடு அவர்களுக்கு அகமகிழ்ந்து வந்தனமும் அளிக்கின்றார்கள்.*

*இஃது அக்கிராசனாதிபதியவர்களாற் பிரேரேபிக்கப் பட்டு எல்லோரானும் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பட்டது. (அக்கிராசனாதிபதி அவர்களே இது சம்பந்தமாய்க் கடிதப் போக்கு முதலியன செய்யும்படி அச்சங்கத்தார் பிரார்த்தித்துக் கொள்கிறார்கள்.)*

### தீர்மானம் - 9

*சங்கத்தின் ஏடுகளில் பிரதி செய்து கொடுக்கக் கூடியவற்றை, வேண்டுவோர்கசு அவ்வவர் செலவிற்பிரதி செய்தனுப்பல் வேண்டும். ஆனால், இது விஷயத்தில் ஏடுகள் கொடுப்பதும் மறுப்பதும் அக்கிராசனாதிபதியவர்கள் யுக்தப் படி நடத்திக் கொள்ளலாம்.*

*பிரேரேபகர் மகா-ள-ள-ஸ்ரீ சவரிராய பிள்ளையவர்கள்*

ஆமோதித்தவர் "டி.ஸி.ஸ்ரீ நிவாசையங்கார் அவர்கள்"

எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மானம் - 10**

அவ்வம் மாதத்திற் சங்கத்திற்குக் கிடைக்கும் ஏட்டுப் பிரதிகளைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் அவ்வம் மாதப் பகுதியில் வெளியிட்டு வரல்வேண்டும்.

மகா-ள-ள-ஸ்ரீ அக்கிராசனாதிபதியவர்களால் பிரேரே பணை செய்யப்பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மானம் - 11**

சங்கத்தார் தனித்தமிழ்ப் பரீக்ஷைகள் ஏற்படுத்த வேண்டும் அவை மூன்று விதமாக இருத்தல் வேண்டும்.

பிரேரேபகர் மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சாமிநாதையர் அவர்கள்

ஆமோதித்தவர் "ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள்"

எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மானம் - 12**

மூன்றுவிதப் பரீக்ஷைகளுக்கும் முறையே, பிரவேச பண்டிதர் பாலபண்டிதர், பண்டிதர் எனப் பெயர் தருதல் வேண்டும்.

பிரேரேபகர் மகா-ள-ள-ஸ்ரீ ஐ. சாமிநாத முதலியார் அவர்கள்

ஆமோதித்தவர் "ஸ்ரீவில்லிபுத்தூர்

ஸ்ரீ நிவாசையங்கார் அவர்கள்"

எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மானம் - 13**

1) பிரவேச பண்டித பரீக்ஷக்குரிய பாடங்கள்

அந்தாதிகள் 2- திருவரங்கத் தந்தாதி

மறைசையந்தாதி

*பிள்ளைத் தமிழ் 1 - மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்*

*கலம்பகங்கள் 2 - அழகர் கலம்பகம்*

*(மதுரைக் கலம்பகம்)*

*நீதிநூல்கள் 2 - நாலடியார், நான்மணிக் கடிகை*

*இலக்கியங்கள் 3 - வில்லிபாரதம் முதல் 1000 செய்யுள்கள்*

*(நைடதம் முதல் 500 செய்யுள்கள்)*

*(பிரபுலிங்க லீலை முதல் 500 ")*

*நன்னூற்காண்டிகை (ஆறுமுக நாவலர் பதிப்பு)*

*செய்யுளியல் (பூவை. கலியாணசுந்தர முதலியார் இயற்றியது)*

*அணியியல் (விசாகப் பெருமாளையர் பாலபோத இலக்கணம்)*

*பெரிய புராணவசனம் (நாவலர் பதிப்பு)*

*பூகோளச் சுருக்கம்*

*இந்து தேச சரித்திரச் சுருக்கம்*

*செய்யுளியற்றல் - வெண்பா, ஆசிரியப்பா*

*வியாச மெழுதுதல்.*

***(II) பாலபண்டித பரீக்ஷைக்குரிய பாடங்கள்***

*கோவை 1. (தஞ்சைவாணன் கோவை, சொக்கப்ப நாவலர் உரையுடன்)*

*புராணம் 3 (திருவிளையாடல் முதல் 500; காஞ்சிப்புராணம் முதல் 1000; ஆரியப்புலவர் பாகவதம் முதல் 500.*

*சங்கச் செய்யுள் 2. மணிமேகலை முதல் 10 காதைகள்*

*புறானூறு முதல் 50 செய்யுள்கள்*

*நீதி நூல் 2. திருக்குறள் முதல் 25 அதிகாரம்.*

*பன்னூற்றிரட்டு முதல் 100 செய்யுள்கள்*

*இலக்கணம்:*

*நன்னூல் விருத்தி*

*தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியர் உரையுடன்)*

*அகப்பொருள் - நம்பியகப் பொருள்*

*யாப்பு - யாப்பருங்கலக் காரிகை*

*அணி - தண்டியலங்காரம்*

*தர்க்கம் - தர்க்க சங்கிரகம்*

*செய்யுளியற்றல் - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா வஞ்சிப்பா.*

*வியாசமெழுதுதல்.*

**பண்டித பரீக்ஷைக்குரிய பாடங்கள்**

*கோவை - திருக்கோவையார் (உரையுடன்)*

*இலக்கியம் - இராமாயணம் முதல் 1000 செய்யுள்கள்*

*(பெரியபுராணம் 1000)*

*கந்தபுராணம் 1000*

*(சங்கச் செய்யுள் - பத்துப்பாட்டு - மதுரைக்காஞ்சி)*

*சிலப்பதிகாரம் - முதல் 10 காதைகள்*

*சிந்தாமணி - நாமகள் இலம்பகம்.*

*நீதிநூல் திருக்குறள் (அறத்துப் பால், பொருட்பால்)*

*பரணி கலிங்கத்துப்பரணி*

*இலக்கணம் தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்)*

*சொல்லதிகாரம் - சேனாவரையம் அகத்திணையியல்*

*புறப் பொருள் வெண்பாமாலை.*

*யாப்பு - இலக்கண விளக்கப்பாட்டியல்*

*அணி - தண்டியலங்காரம்*

*தர்க்கம் - அன்னம்பட்டீயம்*

*செய்யுளியற்றல் - பாவும், பாவினமும்*

*வியாசமெழுதுதல்*

## தீர்மானம் - 14

*நாள்*

**இலக்கணம்** *1 காலை 3 மணிநேரம் ஒருவினாப்பத்திரம்*

*மாலை 3 மணி நேரம் ஒரு வினாப்பத்திரம்*

**இலக்கியம்** *1 காலை 3 மணிநேரம் ஒருவினாப்பத்திரம்*

*மாலை 3 மணி நேரம் ஒரு வினாப் பத்திரம்.*

**தர்க்கம்**, *$^1/_2$ தனித்தனி $1^1/_2$ மணிகொண்ட 2 வினாப் பத்திரங்கள் செய்யுளியற்றல்*

*வியாசம் $^1/_2$ மணி கொண்ட ஒரு வினாப்பத்திரம்*

## தீர்மானம் - 15

*சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில் போஷணை பெற்று வரும் மாணாக்கர் நீங்கலாக ஏனையோருக்கு மூன்று பரீக்ஷை களுக்கும் முறையே 1,2,3 ரூபா கட்டணம் விதிக்க வேண்டும்.*

## தீர்மானம் - 16

*(1) பிரவேச பண்டித பரீக்ஷைக்கு;*

*முதல் பரிசு ரூ. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்*

*2-ம் பரிசு ரூ. 30*

*3-ம் பரிசு ரூ. 20*

*100*

*(2) பாலபண்டித பரிஜக்ஷக்கு:*

*1-ம் பரிசு ரூ 70 பெறத்தக்க தங்கப்பதக்கம்*

*2-ம் பரிசு ரூ 50*

*3-ம் பரிசு ரூ 30*

*150*

*(3) பண்டித பரீக்ஷைக்கு:*

*1-ம் பரிசு ரூ 100 பெறத்தக்க தங்கத்தோடா*

*2-ம் பரிசு ரூ 70 பெறத்தக்க தங்கப்பதக்கம்*

*3-ம் பரிசு ரூ. 50*

*220*

### தீர்மானம் - 17

*இப்பரிக்ஷைக்கு இச்சங்கத்தாரால் ஆங்கில மாணாக்கர்க்கு நடத்தப்படும் பரீக்ஷைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட இடங்களோடு கொழும்பும் யாழ்ப்பாணமும் பரீக்ஷை ஸ்தலங்களாகும்*

### தீர்மானம் - 18

*இப்பரீக்ஷை ஒவ்வோர் ஆண்டிலும் தை மீ 2-வது திங்கட்கிழமை தொடங்கி முதல் மூன்று நாள் நடத்தல் வேண்டும்.*

### தீர்மானம் - 19

*இப்பரீக்ஷைக்குப் பரீக்ஷகர்களை வருஷோத்சவ காலத்தில் தீர்மானம் செய்யவேண்டும்.*

*13, 14, 15, 16, 17, 18, 19 தீர்மானங்கள் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டன.*

### தீர்மானம் - 20

*தமிழ் அபிவிருத்தியின் பொருட்டு வேறு இடங்களிலுள்ள சங்கங்களையும் அடியிற் குறித்த நிபந்தனைகளுக்குட்பட்டு*

*இச்சங்கத்தின் கிளைச்சங்கங்களாக அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்.*

*நிபந்தனைகளாவன:*

*(1) அக்கிளைச் சங்கத்தார், தமிழ்ப் பாஷாபிவிருத்தியின் பொருட்டு அதற்கு வேண்டிய முறைகளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரின் நோக்கப்படி நிறைவேற்றுதல் வேண்டும்.*

*(2) தமிழ் அபிவிருத்தியின் பொருட்டு வேண்டும் பொருளுக்குப் பல்லோரிடமிருந்தும் தொகை சேகரித்தனுப்பல் வேண்டும்.*

*(3) அவ்வாறு சேகரமாகும் தொகையில் 100க்கு 75 மூலசங்கத்துக்கு அனுப்பல் வேண்டும். அச்சங்கங்களுக்கு வேண்டிய உதவிகளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் யுக்தப் படியும் சௌகரியப் படியும் செய்வார்கள்.*

*(4) அச்சங்கத்தார் பல இடங்களிலுஞ் சென்று ஏடுகள் தேடி மூலசங்கத்துக்கு அனுப்பல் வேண்டும்.*

*(5) கிளைப்புத்தக சாலைகள் ஏற்படுத்தல் வேண்டும்.*

*(6) மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் பிரசுரமாகும் பத்திரிகை புத்தகங்கள் முதலிய பிரசுரங்கள் எல்லாவற்றிலும் இரண்டு பிரதிகள் விலையின்றிக் கிளைச்சங்கத்துக்கு அனுப்பப் படல் வேண்டும்.*

*(7) அச்சங்கத்தின் வருவாய் முதலிய கணக்குகள் ரிப்போட்டுகள் முதலிய எல்லாவற்றையும் மதுரைத் தமிழ்ச் சங்க அக்ராசனாதிபதி அவர்களுக்கு முதலில் அனுப்பல் வேண்டும். அக்கிராசனாதிபதியவர்களும் காரியதரிசியவர்களும் ஏனை மூன்று அங்கத்தினரும் சேர்ந்து அக்கிளைச் சங்கங்களை அங்கீகாரம் செய்தல் வேண்டும்.*

*மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டுத் திருநெல்வேலி சரஸ்வதி விலாசசபையை இச்சங்கத்தின் கிளைச்சங்கமாக அங்கீகாரம் செய்யவேண்டும்.*

*பிரேரேபகர் - மகா-ள-ள-ஸ்ரீ எஸ். பால்வண்ண முதலியார் அவர்கள்*

*ஆமோதித்தவர் "சவரிராயபிள்ளை அவர்கள்"*

*ஆதரித்தவர் "சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள்"*

*எல்லோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.*

### ***தீர்மானம் - 20***

*செந்தமிழ்ப் பத்திரிகைக்கு விஷயதானம் செய்பவர்களுக்குப் பாரம்* (Form) *ஒன்றுக்கு ரூ 4 வீதம் கூடுந்தொகையைப் பத்திரத் தொகுதி முடிவிற் சங்கத்தினின்று கொடுக்க வேண்டும்.*

*பிரேரேபகர்- மகா-ள-ள-ஸ்ரீ அக்கிராசனாதிபதி அவர்கள்*

*ஆமோதித்தவர் "நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்"*

*எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.*

### ***தீர்மானம் - 22***

*புத்தக விற்பனைக்காக இச்சங்கத்துக்கு ஒரு புத்தகசாலை* (Depot) *ஏற்படுத்தப்படல் வேண்டும்.*

*பிரேரேபகர் - மகா-ள-ள-ஸ்ரீ பால் வண்ண முதலியாரவர்கள்*

*ஆமோதித்தவர் "சவரராய பிள்ளையவர்கள்"*

*ஆதரித்தவர் "எஸ். சாமிநாதையரவர்கள்"*

*எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.*

*மதுரைத் தமிழ்ச்சங்கம்* *இங்ஙனம்*

*மதுரை* **பொ. பாண்டித்துரை,**

*22-12-03* *அக்கிராசனாதிபதி*

## இணைப்பு - 2

# பாற்கர சேதுபதி அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோள்

*குறிப்பு : சேதுபதி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நாட் குறிப்பினின்றும் எடுக்கப் பெற்றது.*

*(தங்கல் :- இராமேசுவரம்)*

*1893 சனவரி 13:- வாழ்க்கையில் என் குறிக்கோள்கள்.*

1. *கீழ்க்கண்டவைகளைச் செய்து முடிக்க வேண்டும்:-*

   *தங்கக் கோபுரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். மணிக்கூண்டு, சுற்றியுள்ள மண்டபம்,, மூலத்தானத்தில் சந்தனப் பலகைகள் அமைத்தல், கருங்கல் பீடத்திற்கு வெள்ளிக் கவசம் செய்தல், படிக்கட்டுகளுக்கு வெள்ளிக் கவசம், சந்தனக் கட்டையினால் கதவுகள், வெள்ளிச் சரவிளக்கு மணிகள், இரத்தினக் கவசம், முத்துக்கிரீடம், நாள் திட்டத்திற்கும், நவராத்திரித் திட்டங்களுக்குமாகக் கிராமங்களை அறக்கட்டளை யாகத் தருதல், சிங்க வாகனமும், சிம்மாசன வாகனமும் செய்தல், இராசேசுவரி மண்டபத் திருப்பணி செய்தல் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டும்.*

2. *சக்தி தந்திரம் கற்றுப் பயிற்சி செய்ய வேண்டும்.*

3. *இராமேசுவரம் கோயிலைப் பொறுப்பேற்று நான்கு திருமதில்களையும் செப்பனிட்டு, மேலைக் கோபுரத்தைப் பழுதுபார்த்துப் பெரிய திருச்சுற்று வெளிக்குத் தளவரிசை போட வேண்டும். சுவாமிக்கும், அம்மனுக்கும் தங்க விமானங்கள் அமைக்க வேண்டும். எல்லா வாகனங்களையும் வெள்ளியினாற் செய்து, கும்பாபிடேகமும் செய்ய வேண்டும்.*

4. நயினார் கோயிலிலுள்ள இரண்டு கோயில்கள், உத்தர கோசமங்கை, திருச்சுழி, திருவாடானை, திருப் புல்லணை (திருப்புல்லாணி) பெருவயல், கோதண்ட இராமசாமி சொக்கநாத சுவாமி கோயில் ஆகியவற் றின் கும்பாபிடேகங்களைப் பார்க்க வேண்டும்.

5. மதுரைத் தேரைப் பூர்த்தி செய்ய வேண்டும். காஞ்சிபுரம் விமானம், கருவையம்பட்டிக் கும்பாபி டேகம் திருச்செந்தூர்ச் சண்முக விலாசம், கூடலழகர் கோயில் கும்பாபிடேகம் முதலியன செய்ய வேண்டும்.

6. அம்மன் கோயிலில் என் சிலையொன்றை அமைத்துக் கோயில் மரியாதைகள் செய்ய வழிவகுக்க வேண்டும். இராமேசுவரத்தில் புதிய கல்யாண மண்டபம் அமைப்பதுடன் சிதம்பரம், மதுரை, கூடலழகர் கோயில் திருச்செந்தூர் காஞ்சிபுரம் முதலிய இடங்களிலும் இவ்வாறே மண்டபம் அமைக்க வேண்டும்.

7. மதுரைக் கோயிலில் சித்தருக்கு அணிகலன்கள் செய்ய வேண்டும்.

8. இராமநாதபுரத்தில் பாற்கரேசுவரர் கோயிலைக் கட்டி முடிக்க வேண்டும்.

9. காசியில், சத்திரம் ஒன்று கட்ட வேண்டும்.

10. தனுசுக்கோடியில் சத்திரம் ஏற்படுத்தி, அதற்குக் கட்டளை அமைக்க வேண்டும்.

11. அக்கிரகாரம் ஒன்று அமைக்க வேண்டும்.

12. ஒரு குளமும், கிணறும் வெட்ட வேண்டும்.

13. தோப்பு ஒன்று அமைக்க வேண்டும்.

14. பசுக்கள் மேய்வதற்காகப் புல்வெளிகளை ஏற்படுத்த வேண்டும்.

15. மதுரையில் பிராமணர் அல்லாத மாணவர்க்கென ஒரு விடுதி அமைக்க வேண்டும்.

16. குறைந்த அளவு, பன்னிரண்டு பழமையான வடமொழி நூல்களையும், பன்னிரண்டு தமிழ் நூல்களையும் அச்சிட வேண்டும்.

17. சங்கராச்சாரியாரை அழைத்து இராமலிங்க விலாசத்தை ஆசீர்வதிக்கச் செய்ய வேண்டும்.

18. மகோதய காலத்தில் தனுசுக்கோடியில் குடும்பத்துடன் கடலில் நீராட வேண்டும்.

19. ஓர் அர்த்தோதயமும், மகாமகமும் பார்க்க வேண்டும்.

20. காசி, பிரயாகை, கங்கை, சேது முதலிய தலங்களுக்குப் பயணம் சென்று, ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் நீராட வேண்டும்.

21. இரணிய கர்ப்பம் செய்ய வேண்டும்.

22. அரண்மனைக் கடன்களைத் தீர்க்க வேண்டும்.

23. இராமேசுவரத்திலும், இராமநாதபுரத்திலும் அரண்மனைகளைப் பழுது பார்க்க வேண்டும்.

24. மகாராணியின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்திற்கு ஒருமுறை போகவேண்டும்.

25. அமெரிக்காவிற்குச் செல்ல வேண்டும்.

26. சென்னைப் பல்கலைக் கழக அவையில் உறுப்பினராக வேண்டும்.

27. தமிழ்ச் சங்கம் ஒன்று அமைக்க வேண்டும்.

28. ஏதாவதொரு சட்டசபையில் உறுப்பினராக வேண்டும்.

29. குறைந்தது எச்.சி.டி.ஈ. பட்டம் பெற வேண்டும்.

மகாராசா எனும் சிறப்புப் பட்டமும் பெற வேண்டும்.

30. அரச குடும்பத்தினருக்கு மதுரையில் வரவேற்புக் கொடுக்க வேண்டும்.

31. என் அன்னையாருக்கு இறுதிச்சடங்கு செய்யும் பேற்றினைப் பெற வேண்டும்.

32. என் சகோதரர் பாண்டித்துரைக்கு முன்பே நான் துன்ப மில்லாமல் இறக்க வேண்டும்.

33., இறக்கும்போது நான் ஆண்டவனை நினைத்துக் கொண்டிறக்க வேண்டும்.

## இணைப்பு - 3

# சேது வேந்தர்கள் வழிமுறை

| | |
|---|---|
| 1605 - 1621 | சடைக்கத்தேவர் என்ற உடையான் சேதுபதி |
| 1622 - 1635 | கூத்தன் சேதுபதி |
| 1635 - 1646 | சடைக்கத்தேவர் என்ற தளவாய் சேதுபதி |
| 1647 - 1672 | ரெகுநாததேவர் என்ற திருமலை சேதுபதி |
| - 1672 | இராஜசூரிய சேதுபதி |
| - 1673 | ஆதன ரெகுநாத சேதுபதி |
| 1674 - 1710 | கிழவன் சேதுபதி என்ற ரெகுநாத சேதுபதி |
| 1711 - 1725 | திருஉடையாத் தேவர் என்ற விஜய ரெகுநாத சேதுபதி |
| - 1726 | சுந்தரேஸ்வர ரெகுநாத சேதுபதி |
| 1726 - 1729 | பவானி சங்கர் சேதுபதி |
| 1730 - 1735 | கட்டயத் தேவர் என்ற முத்து விஜய ரெகுநாத சேதுபதி |
| 1736 - 1748 | சிவகுமார முத்து விஜய ரெகுநாத சேதுபதி |
| 1748 - 1749 | சேதுபதி ராக்கத் தேவர் |
| 1749 - 1762 | செல்லமுத்து விஜய ரெகுநாத சேதுபதி |
| 1763 - 1795 | முத்து ராமலிங்க சேதுபதி |
| 1803 - 1807 | இராணி சேதுபதி மங்களேஸ்வரி நாச்சியார் |
| 1807 - 1820 | முத்து விஜய ரெகுநாத சேதுபதி என்ற அண்ணாசாமி சேதுபதி |
| 1820 - 1829 | விஜய ரெகுநாத ராமஸ்வாமி சேதுபதி |

| | |
|---|---|
| *1829 - 1830* | *இராணி சேதுபதி முத்து வீராயி நாச்சியார்* |
| *1830 - 1845* | *இராணி மங்களேஸ்வரி நாச்சியார் - துரைராஜ நாச்சியார்* |
| *1846 - 1862* | *இராணி சேதுபதி பர்வதவர்த்தினி நாச்சியார்* |
| *1862 - 1873* | *முத்துராமலிங்க சேதுபதி* |
| *1873 - 1903* | *ராஜா பாஸ்கர சேதுபதி* |
| *1903 - 1928* | *ராஜ ராஜேஸ்வர நாகநாத சேதுபதி* |
| *1928 - 1967* | *ஷண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி* |
| *1967 - 1979* | *ராமநாத சேதுபதி* |
| *1979* | *இராணி சேதுபதி இந்திரா தேவி, பி.ஏ.,* |

## இணைப்பு - 4

# மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர்கள்

| | |
|---|---|
| *1901 - 1911* | *திருமிகு பொன். பாண்டித்துரைத்தேவர்* |
| *1911 - 1913* | *திருமிகு பி. சா. சுப்பிரமணிய அய்யர்* |
| *1913 - 1928* | *மாட்சிமை தாங்கிய பாஸ்கர இராச ராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி* |
| *1928 - 1933* | *மாட்சிமை தங்கிய அரசர் எம். தினகரபகதூர்* |
| *1933 - 1967* | *மாட்சிமை தங்கிய ஆர். சண்முகராச ராசேசுவர நாகநாத சேதுபதி* |
| *1967 - 1971* | *திருமிகு தமிழவேள் பி.டி. இராசன்* |
| *1971 - 1979* | *மாட்சிமை தங்கிய திரு ஆர். எஸ். இராமநாத சேதுபதி* |
| *1979* | *மாட்சிமை தங்கிய சேதுபதி மகாராணி த. இந்திராதேவி பி.ஏ.* |

## இணைப்பு - 5

# மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர்கள்

| | |
|---|---|
| *1901 - 1911* | *திருமிகு எஸ். சாமிநாதய்யர்* |
| *1911 - 1932* | *திருமிகு டி.சி. சீனிவாச அய்யங்கார்* |
| | *திருமிகு ராவ்சாகிப் மாணிக்க வாசகம் பிள்ளை* |
| *1932 - 1951* | *திருமிகு நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்* |
| | *திருமிகு எ ன். ஆர். கிருஸ்ணசாமி அய்யங்கார்* |
| *1951 - 1965* | *திருமிகு வி. சண்முக சுந்தரம்* |
| *1965 - 1971* | *திருமிகு கி. பழனியப்பன்* |
| *1971* | *திருமிகு அ. வேலுச்சாமி பி. இ* |
| *1971* | *திருமிகு டி.பி. எம். பெரியசுவாமி* |